# மார்க்ஸ்

## அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# கார்ல் மார்க்ஸ்

# அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பேராசிரியர் நா.தர்மராஜன்,எம்.ஏ.

© தமிழ் மொழிபெயர்ப்பு
"முன்னேற்றப் பதிப்பகம்", 1982

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

M $\frac{10101-010}{014(01)-83}$ 676—82 0101010000

– 5 MAR 1985

## பொருளடக்கம்

# கார்ல் மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை

முன்னுரை . . . . . . . . . . . . . . . . 7

## முதல் புத்தகம். மூலதனத்தைப் பற்றி

முதல் பகுதி. பொதுவாக மூலதனத்தைப் பற்றி 17

முதல் அத்தியாயம். பண்டம் . . . . . . . . . 17

அ. பண்டங்களின் பகுப்பாய்வு பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் . . . . . . . . . . . . . . . . 59

இரண்டாம் அத்தியாயம். பணம் அல்லது எளிமையான நாணயச் செலாவணி முறை . . . . . . . . . . . 78

1. மதிப்பின் அளவு . . . . . . . . . 79

ஆ. பணத்தின் ஆதார அளவு பற்றிய கோட்பாடுகள் . . . . . . . . . . . . . 98

2. பரிவர்த்தனை ஊடகம் . . . . . . . . . 116

அ. பண்டங்களின் உருமாற்றம் . . . . . 117

ஆ. பணச் செலாவணி முறை . . . . . 135

இ. நாணயங்களும் மதிப்பின் அடையாளச் சின்னங்களும் . . . . . . . . . . . 150

3. பணம் . . . . . . . . . . . . . 176

அ. பதுக்கலின் உருவாக்கம். . . . . . . 180

ஆ. பண வழங்கீட்டின் சாதனம். . . . . 201

இ. உலகப் பணம் . . . . . . . . . . 220

4. அரிய உலோகங்கள். . . . . . . . . . 227

இ. செலாவணி ஊடகம், பணம் பற்றிய கொள்கைகள் . . . . . . . . . . . . . . . . 235

## பிற்சேர்க்கைகள்

**கார்ல் மார்க்ஸ். அறிமுகம்** . . . . . . . . . 286

I. உற்பத்தி, நுகர்வு, பங்கீடு, பரிவர்த்தனை (செலாவணி) . . . . . . . . . . . . . . . . 286

1. உற்பத்தி . . . . . . . . . . . . . 286

2. உற்பத்திக்கும் வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வுக்கும் உள்ள பொதுவான உறவுகள் . . 295

அ. [உற்பத்தியும் நுகர்வும்] . . . . . . . 297

ஆ. [உற்பத்தியும் வினியோகமும்] . . . . 304

இ. கடைசியாக—பரிவர்த்தனையும் செலாவணியும். . . . . . . . . . . . . . . . 311

3. அரசியல் பொருளாதாரத்தின் முறை. . . . 313

4. உற்பத்தி. உற்பத்திச் சாதனங்களும் உற்பத்தி உறவுகளும். உற்பத்தி உறவுகளும் தகவல் தொடர்புகளும். உற்பத்தி உறவுகளுக்கும் தகவல் தொடர்புகளுக்கும் சம்பந்தமுள்ள அரசு வடிவங்களும் அறிதல் வடிவங்களும். சட்ட உறவுகள். குடும்ப உறவுகள் . . . . . . . . . 328

**பிரெடெரிக் எங்கெல்ஸ். கார்ல் மார்க்ஸ், "அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை"**

1 . . . . . . . . . . . . . . . . . 333

2 . . . . . . . . . . . . . . . . . 339

குறிப்புகள் . . . . . . . . . . . . . . . 350

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . . 364

கலைச்சொல் அகராதி . . . . . . . . . . . . 375

கார்ல் மார்க்ஸ்

# அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை

# முன்னுரை[1]

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைக் கீழ்க்கண்ட வரிசைமுறைப்படி நான் ஆராய்கிறேன்: மூலதனம், நிலச் சொத்துடைமை, கூலி உழைப்பு, அரசு, வெளிநாட்டு வர்த்தகம், உலகச் சந்தை. நவீன முதலாளித்துவச் சமூகம் மூன்று மாபெரும் வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வர்க்கங்களின் பொருளாதார வாழ்க்கையின் நிலைமைகளை முதல் மூன்று தலைப்புகளில் ஆராய்கிறேன்; அடுத்த மூன்று தலைப்புகளுக்கு இடையே இருக்கின்ற உள்ளிணைப்பு இயல்பாகவே புலப்படும். முதல் புத்தகத்தின் முதல் பகுதி மூலதனத்தைப் பற்றி ஆராய்கிறது. அதில் கீழ்க்கண்ட அத்தியாயங்கள் உள்ளன: 1) பண்டம்; 2) பணம் அல்லது சாதாரண நாணயச் செலாவணி முறை; 3) பொதுவாக மூலதனத்தைப் பற்றி. முதல் இரண்டு அத்தியாயங்களையும் கொண்டதே இந்தப் புத்தகம். இந்தக் கையெழுத்துப் பிரதிகள் எனக்கு முன்பாகக் கிடக்கின்றன. இவை அச்சிடப்படுவதற்காக எழுதப்பட்டவையல்ல; நீண்ட இடைவெளி கொண்ட வெவ்வேறு காலங்களில் என்னுடைய சுயவிளக்கத்துக்காக எழுதப்பட்டவையே. ஆரம்பத்தில் குறிப்பிட்ட திட்டப்படி இவற்றை ஒன்றுதிரட்டி ஒரே இணைப்பாகத் திருத்தியமைப்பதென்பது எனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாகும்.

நான் எழுதிய பொதுவான முன்னுரையை[2] இங்கே சேர்க்கவில்லை. ஏனென்றால் மேலும் சிந்தித்த பொழுது இன்னும் ஆதாரங்களைத் திரட்டி நிரூபிக்கப்பட வேண்டிய முடிவுகளை முன்கூட்டியே தெரிவிப்பது குழப்பத்தை ஏற்படுத்தும்

என்று எனக்குத் தோன்றுகிறது; உண்மையிலேயே என்னைப் புரிந்துகொள்ள விரும்பும் வாசகர் குறிப்பிட்டவற்றிலிருந்து பொதுப்படையானவற்றுக்கு முன்னேறுவதென்று முடிவு செய்து கொள்ள வேண்டும். எனினும் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய என்னுடைய ஆராய்ச்சியின் வளர்ச்சிப் போக்கைப் பற்றி சுருக்கமாகச் சில வார்த்தைகளைச் சொல்வது இங்கே பொருத்தமானதாகும்.

நான் நீதி இயலைப் படித்த போதிலும், தத்துவஞானத்துக்கும் வரலாற்றுக்கும் உட்பட்ட பாடமாகவே அதைப் படித்தேன். 1842-43ம் வருடங்களில், *Rheinische Zeitung*[3] என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில், பொருளாயத நலன்கள் என்று வர்ணிக்கப்படுகின்றவற்றை விவாதிக்க வேண்டிய இக்கட்டான நிலை முதல் தடவையாக எனக்கு ஏற்பட்டது. காட்டு விறகுகள் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதையும், நிலச் சொத்துடைமை துண்டு துண்டாகப் பிரிக்கப்படுவதையும் பற்றி ரைனிஷ் நாடாளு மன்றத்தில் (Landtag) நடைபெற்ற விவாதங்கள்; மோஸெல் பள்ளத்தாக்கிலுள்ள விவசாயிகளின் நிலையைப் பற்றி *Rheinische Zeitung* எழுதியவற்றுக்கு எதிராக ரைன் மாநிலத்தின் ஓபர்-பிரசிடெண்ட் ஹெர் வொன் ஷாப்பர் எழுப்பிய அதிகாரபூர்வமான வாதங்கள்; கடைசியாக வர்த்தக சுதந்திரம், வர்த்தகக் காப்பு வரி பற்றி நடைபெற்ற சொற்போர்கள் என்னை முதலில் பொருளாதாரப் பிரச்னைகளில் கவனத்தைச் செலுத்துமாறு செய்தன[4]. இதற்கு மாருக, ''முன்னுக்குப் போக'' ஆசைப் படுகிற நல்லெண்ணங்கள் விவரமான அறிவின் இடத்தைப் பிடித்திருந்த அந்தக் காலத்தில் லேசான தத்துவஞான முலாம் பூசப்பட்ட பிரெஞ்சு சோஷலிசம், கம்யூனிசத்தின் எதிரொலி, *Rheinische Zeitung* பத்திரிகையில் குறிப்பிடத்தக்க விதத்தில் தென்பட்டது. இந்த மேற்போக்கான அறிவுக்கு (dilettantism) என்னுடைய மறுப்பைத் தெரிவித்தேன் என்ருலும் *Allgemeine Zeitung*[5] என்ற அவுக்ஸ்பர்க் நகரப் பத்திரிகையோடு நடத்திய விவாதத்தில் பிரெஞ்சுக் கொள்கைகளின் உள்ளடக்கத்தைப் பற்றி ஏதாவது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு எனது கடந்த கால ஆராய்ச்சிகள் அனுமதிக்கவில்லை என்பதை அதே சமயத்தில் வெளிப்படையாக ஒத்துக்கொண்டேன்.

*Rheinische Zeitung* பத்திரிகையை வெளியிட்டவர்கள், தங்கள் பத்திரிகையில் மேலும் பணிவான கொள்கையைக் கடைப்பிடித்தால் அதன் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்துச் செய்யப்படலாம் என்ற நப்பாசைக்கு ஆளாகிய பொழுது, நான் அந்த வாய்ப்பை ஆர்வத்தோடு பற்றிக் கொண்டேன்; பொது அரங்கத்திலிருந்து விலகி என்னுடைய ஆராய்ச்சி, உலகத்தில் ஈடுபட்டேன்.

என்னை வாட்டிய சந்தேகங்களைப் போக்கிக் கொள்வதற்காக நான் செய்த முதல் ஆராய்ச்சி சட்டம் பற்றிய ஹெகலின் தத்துவத்தை விமர்சன ரீதியாக மறு பரிசீலனை செய்ததாகும்; இந்தப் புத்தகத்துக்கு நான் எழுதிய அறிமுகம் 1844ம் வருடத்தில் பாரிஸ் நகரத்தில் *Deutsch-Französische Jahrbücher*[6] என்ற இதழில் வெளியிடப்பட்டது. சட்ட உறவுகளையோ அல்லது அரசியல் வடிவங்களையோ, தனித்தனியாகவோ அல்லது மனித அறிவின் பொதுவான வளர்ச்சிப் போக்கு என்று சொல்லப்படுகிற அடிப்படையைக் கொண்டோ புரிந்துகொள்ள முடியாது; அதற்கு மாருக, அவை வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளில் பிறக்கின்றன; இவற்றின் முழுத்தொகுதியையே ஹெகல், பதினெட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த ஆங்கில, பிரெஞ்சுத் தத்துவஞானிகளின் உதாரணத்தைப் பின்பற்றி ''சிவில் சமூகம்'' (civil society) என்ற வார்த்தைகளில் அடைக்கிருர்; எனினும் இந்த சிவில் சமூகத்தின் உள்ளமைப்பை அரசியல் பொருளாதாரத்தில் தேட வேண்டும்—என்னுடைய ஆராய்ச்சியின் பலனுக மேற்கூறிய முடிவுகளுக்கு வந்தேன். பாரிசில் இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினேன். ஆனுல் திரு கிஸோ என்னை பிரான்சிலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டபடியால் இந்த ஆராய்ச்சியை பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் தொடர்ந்து செய்தேன். இதன் மூலம் நான் உருவாக்கிய பொதுவான முடிவை—இந்த முடிவுக்கு வந்தவுடன் அதுவே என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டும் கொள்கையாக மாறியது—பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிருர்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொரு

ளாயத சக்திகளின் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும். இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டடம் எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு—அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு—இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பவிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டடம் முழுவதையுமே சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, மாற்றியமைக்கின்றன. இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கிற பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற பொருள்வகை மாற்றங்களுக்கும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், மதம், கலைத் துறை அல்லது தத்துவ ஞானத் துறைகளில்—சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத் துறைகளில்—இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும். ஒரு தனிநபர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை. அது போலவே

இப்படி மாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. அதற்கு மாருக, இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, உற்பத்தியின் சமூக சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளக்க முடியும். எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை; புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே மனித குலம் தன்னுல் சாதிக்கக் கூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்ருல் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்த பட்சம் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகிறது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும். விரிவான உருவரையில் ஆசிய, பண்டைக்கால, நிலப்பிரபுத்துவ, நவீன முதலாளித்துவ உற்பத்தி முறைகளை சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்கும் சகாப்தங்கள் என்று குறிப்பிடலாம். முதலாளித்துவ உற்பத்தி முறைதான் உற்பத்தியின் சமூக நிகழ்வில் கடைசி முரணியல் வடிவம்—முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனிநபர்களின் ஜீவனோபாயத்தின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்றும் முரணியலே; ஆனுல் முதலாளித்துவ சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் இந்த முரணைத் தீர்ப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளையும் உருவாக்குகின்றன. எனவே இந்த சமூக அமைப்போடு மனித சமூகத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் முடிவடைகிறது.

பிரெடெரிக் எங்கெல்ஸ் பொருளாதார இனங்களைப் பற்றிய விமர்சனம் பற்றிய மிகச் சிறந்த கட்டுரையை[7] வெளியிட்டது முதல் (*Deutsch-Französische Jahrbücher* இதழில் அச்சிடப்பட்டது) நான் அவருடன் கடிதங்களின் மூலமாகத்

தொடர்ந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தேன். என்னைப் போலவே அவரும் இதே முடிவுக்கு வேறு வழியின் மூலமாக வந்தார் (''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை'' [*The Condition of the Working Class in England*] என்ற தலைப்பில் அவர் எழுதியிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கவும்). 1845ம் வருடத்தின் வசந்த காலத்தில் அவரும் பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் குடியேறிய பிறகு நாங்களிருவரும் ஜெர்மன் தத்துவஞானத்தின் சித்தாந்தத்துக்கு எதிராக எங்களுடைய கருதுகோளை விளக்கி எழுதுவதென்று, அதாவது எங்களுடைய கடந்த காலத் தத்துவஞான மனச் சாட்சியோடு கணக்குத் தீர்த்துக் கொள்வதென்று முடிவு செய்தோம். ஹெகலுக்குப் பிந்திய தத்துவஞானத்தின் விமர்சனம் என்ற வடிவத்தில் இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டோம். அச்சுக் காகிதத்தில் எட்டில் ஒரு பங்கின் அளவில் இரண்டு புத்தகங்களாக இருந்த இந்தக் கையெழுத்துப் பிரதியை[8] வெஸ்ட்ஃபாலியாவிலிருந்த பிரசுரகர்த்தர்களுக்கு அனுப்பி வெகு காலமான பிறகு, சூழ்நிலை மாறி விட்டபடியால் அதை அச்சிட அவர்களால் முடியாது என்று எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. அந்தக் கையெழுத்துப் பிரதியை எலிகளின் கொறிக்கும் விமரிசனத்துக்கு நாங்கள் மகிழ்ச்சியோடு கொடுத்து விட்டோம். ஏனென்றால் சுயவிளக்கம் என்ற எங்களுடைய முக்கியமான நோக்கம் நிறைவேறி விட்டது. அந்த நாட்களில் எங்களுடைய கருத்துக்களில் ஏதாவதொரு அம்சத்தைப் பொது மக்களுக்கு விளக்கி நாங்கள் வெவ்வேறு சமயங்களில் வெளியிட்ட புத்தகங்களில், நானும் எங்கெல்சும் கூட்டாக எழுதிய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை (*Manifesto of the Communist Party*), நான் வெளியிட்ட வர்த்தக சுதந்திரம் பற்றிய சொற்பொழிவு (*Discours sur le libre échange*) ஆகியவற்றை மட்டுமே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய கருத்துக்களின் முக்கியமான அம்சங்கள் கோட்பாட்டளவிலானாலும் வாதம் புரிவதற்காக எழுதப்பட்ட மெய்யறிவின் வறுமை (*The Poverty of Philosophy*) என்ற புத்தகத்தில் முதல் தடவையாகச் சொல்லப்பட்டன. புரூதோனுக்கு மறுப்பாக எழுதப்பட்ட இந்த நூல் 1847ம் வருடத்தில் வெளியிடப்பட்டது. நான் ஜெர்மன் மொழியில் எழுதிய கூலி உழைப்பு (*Wage-Labour*)

என்ற புத்தகத்தில்[9] பிரஸ்ஸல்சிலுள்ள ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தில்[10] இதே பொருளில் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப் பயன்படுத்திக் கொண்டேன். பிப்ரவரி புரட்சியினாலும் அதன் காரணமாக பெல்ஜியத்திலிருந்து என்னை பலாத்காரமாக வெளியேற்றி விட்டதனாலும் அதைப் பிரசுரமாக வெளியிடுவது தடைப்பட்டது.

1848, 1849ம் வருடங்களில் *Neue Rheinische Zeitung* இதழை[11] வெளியிடும் பணிகளும், அதன் பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் என்னுடைய பொருளாதார ஆராய்ச்சிகளை நிறுத்தி விட்டன. 1850ம் வருடத்தில் லண்டன் நகரத்தில் தான் என்னுடைய ஆராய்ச்சிகளை மறுபடியும் தொடர்ந்து செய்ய முடிந்தது. பிரிட்டிஷ் மியூசியத்தில் அரசியல் பொருளாதார வரலாறு பற்றிச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் ஏராளமான விவரத் தொகுப்புகளும், முதலாளித்துவ சமூகத்தை ஆராய்வதற்கு லண்டன் ஒரு வசதியான மையம் என்பதனாலும், கடைசியாக கலிபோர்னியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக இந்தச் சமூகம் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தை எட்டி விட்டது போலத் தோன்றியதும் என்னை மறுபடியும் ஆரம்பத்திலிருந்து தொடங்குமாறும், புதிதாகக் கிடைத்திருக்கும் விவரங்களைக் கவனத்தோடு ஆராயுமாறும் தூண்டியது. இந்த ஆராய்ச்சிகள் வெளித்தோற்றத்தில் சற்று அப்பாற்பட்ட விஷயங்களுக்கும் என்னைத் தாமாகவே இழுத்துச் சென்றபடியால் நான் அதற்கும் ஓரளவு நேரம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் குறிப்பாக, என்னுடைய வாழ்க்கைக்கு நான் சம்பாதித்துத் தீர வேண்டிய அத்தியாவசியமான நிலை இந்த ஆராய்ச்சிக்குச் செலவிடக் கூடிய நேரத்தைக் குறைத்தது. *New-York Daily Tribune* என்ற பிரபலமான ஆங்கிலோ-அமெரிக்கப் பத்திரிகையில்[12] நான் கடந்த எட்டு வருடங்களாக எழுதி வருகிறேன். ஆனால் செய்திக் கடிதம் என்ற அடிப்படையில் மட்டுமே நான் எழுதியபடியால் என்னுடைய ஆராய்ச்சிகளை மிகவும் அதிகமான அளவுக்குப் பிரித்துக் கொடுக்க நேர்ந்தது. பெரும்பாலான கட்டுரைகளில் பிரிட்டனிலும், ஐரோப்பக் கண்டத்திலும் நடைபெறும் முக்கியமான பொருளாதார சம்பவங்களைப் பற்றியே எழுத வேண்டியிருந்தது. எனவே நடை

முறையிலிருக்கும் சில்லரை விவரங்களையும் கூட (அறுதி யிட்டுச் சொல்வதென்றால் இவை அரசியல் பொருளாதாரத் தத்துவத்தின் உலகத்துக்கு அப்பாற்பட்டவை) நான் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாயிற்று.

அரசியல் பொருளாதாரம் என்ற துறையில் என்னுடைய ஆராய்ச்சிகளின் போக்கின் முக்கிய கூறுகளை எடுத்துக்காட்டு கின்ற இந்தக் கட்டுரையில் என்னுடைய கருத்துக்கள்— அவற்றை எப்படி மதிப்பிட்ட போதிலும் அந்தக் கருத்துக் கும் ஆளும் வர்க்கங்களின் காரணம் நிறைந்த வெறுப்புக் கும் சிறிதும் பொருத்தமில்லாத போதிலும்—கடந்த பல ஆண்டுகளாக நான் செய்து வந்திருக்கிற நேர்மையான ஆராய்ச்சியின் விளைவாகும். நரகத்தின் வாயிலில் பின்வரு மாறு எழுதப்பட்டிருப்பதைப் போல, விஞ்ஞானத்தின் வாயிலி லும் இந்தக் கோரிக்கை வற்புறுத்தப்பட வேண்டும்:

இங்கே அவநம்பிக்கைகளை அகற்றி விடுங்கள்;
எல்லாவிதமான கோழைத்தனத்தையும் ஒழித்து விடுங்கள்.*

**கார்ல் மார்க்ஸ்**

லண்டன், ஜனவரி 1859

* Dante *Divina Commedia.*—ப-ர்.

5 MAR 1985

முதல் புத்தகம்

# மூலதனத்தைப் பற்றி

முதல் பகுதி

# பொதுவாக மூலதனத்தைப் பற்றி

## முதல் அத்தியாயம்

## பண்டம்

முதலாளித்துவச் சமூகத்தின் செல்வம் என்பது முதல் பார்வையில் ஏராளமான பண்டங்களின் குவியலாகத் தோன்றுகிறது; ஒரு தனிப்பண்டம்—இந்தச் செல்வத்தின் அடிப்படை அளவாகத் தோன்றுகிறது. ஆனால் ஒவ்வொரு பண்டமும் **பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு** என்ற இரட்டை அம்சத்தைக் கொண்டிருக்கிறது.*

ஆங்கிலப் பொருளியலாளரின் கூற்றுப்படி, ''வாழ்க்கைக்குத் தேவையான, பயனுள்ள அல்லது மகிழ்ச்சியைத் தரக் கூடிய எந்தப் பொருளும்'' ஒரு பண்டம் எனப்படும்; அது மனிதனுடைய தேவைகளின் பொருள்; மிக விரிவான அர்த்தத்தில் வாழ்க்கைச் சாதனங்கள் என்றும் கூறலாம். இந்தப் பண்டத்தின் ஓர் அம்சம் என்ற முறையில் பயன் மதிப்பு அந்தப் பண்டத்தின் உணரக் கூடிய பௌதிகத்

---

* Aristoteles, *De Republica*, L. 1, C. 9 (edit. I. Bekkeri, Oxonii, 1837): ''நாம் வைத்திருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு உபயோகம் உண்டு... ஒன்று சரியானது, இரண்டாவது சரியற்றது அல்லது அதன் துணை உபயோகமாகும். உதாரணமாக, செருப்பைக் காலில் அணிந்து கொள்ளலாம்; பரிவர்த்தனைக்கும் பயன்படுத்தலாம். இரண்டும் செருப்பின் மூலம் கிடைக்கின்ற உபயோகங்களாகும். யாருக்காவது செருப்புத் தேவைப்படும் பொழுது அவரிடம் பணத்துக்கோ அல்லது உணவுப் பொருளுக்கோ செருப்பைக் கொடுத்தால் அவர் அதைச் செருப்பு என்ற முறையில்தான் பயன்படுத்துகிறார்; என்னும் இது செருப்பினுடைய சரியான அல்லது முதன்மையான உபயோகமலல; ஏனென்றால் பண்டமாற்றுக்குப் பயன்படும் நோக்கத்தில் செருப்பு தயாரிக்கப்படவில்லை. எல்லா உடைமைகளையும் பற்றி இப்படிச் சொல்லக் கூடும்....''

தன்மையான இருத்தலோடு பொருந்துகிறது. உதாரணமாக கோதுமை என்பது ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பாகும். இது பஞ்சு, கண்ணாடி, காகிதம் முதலியவற்றின் பயன் மதிப்புகளிலிருந்து வேறுபட்டிருக்கிறது. பயன்மதிப்பானது உபயோகத்தில் மட்டுமே மதிப்பைப் பெறுகிறது; நுகர்வு நடைபெறும் பொழுதுதான் அது நிறைவேறுகிறது. ஒரே பயன் மதிப்பு பல வழிகளில் உபயோகிக்கப்பட முடியும். ஆனால் குறிப்பிட்ட தன்மைகளை உடைய பொருளாக அது இருப்பதனால் அதை இவ்வாறு பயன்படுத்துவதற்குச் சாத்தியமான அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் பயன் மதிப்பு குண ரீதியாக மட்டுமல்லாமல் அளவு ரீதியாகவும் நிர்ணயிக்கப்படுகிறது. வெவ்வேறான பயன் மதிப்புகளுக்கு அவற்றின் இயற்கையான தன்மைகளுக்கேற்றவாறு வெவ் வேறான அளவுகள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு புஷல் கோதுமை, ஒரு குயர் காகிதம், ஒரு கஜம் துணி என்கிறோம்.

செல்வத்தின் சமூக வடிவம் எப்படியிருந்த போதிலும் அது எப்பொழுதுமே பயன் மதிப்புகளைக் கொண்டதாக இருக்கிறது. இவை ஆரம்பத்தில் இந்த வடிவத்தால் பாதிக்கப்படுவது இல்லை. கோதுமையின் ருசியிலிருந்து அதை உற்பத்தி செய்தவர் ருஷ்யப் பண்ணையடிமையா, பிரெஞ்சு விவசாயியா அல்லது ஆங்கில முதலாளியா என்று சொல் வது இயலாது. பயன் மதிப்புகள் சமூகத் தேவைகளுக்குப் பயன்பட்ட போதிலும், அதனுலேயே சமூகச் சுற்று வட்டத் துக்குள் இருந்த போதிலும் அவை உற்பத்தியின் சமூக உறவுகளை எடுத்துக் காட்டுவதில்லை. உதாரணமாக, வைரம் போன்ற ஒரு பண்டத்தின் பயன் மதிப்பை எடுத்துக் கொள்வோம். வைரத்தைப் பார்க்கும் பொழுது அதை ஒரு பண்டம் என்று நம்மால் சொல்ல முடியாது. ஓர் அந்தப் புரப் பெண்ணின் கழுத்தில் அல்லது கண்ணாடியை நறுக்கும் தொழிலாளியின் கையில், அழகுணர்ச்சி அல்லது தொழில் நுட்பப் பயன் மதிப்புக்கு வைரம் பயன்படும் பொழுது அது வைரமே; பண்டமல்ல. பயன் மதிப்பு ஏற்படுவது ஒரு பண்டத்துக்கு அவசியமான முன்தேவை என்பது தெளி வாக இருந்தாலும், அது பண்டமாக இருக்க வேண்டும் என்பது பயன்மதிப்புக்கு முக்கியமல்ல. பயன் மதிப்பு என் பது வரையறுக்கப்பட்ட பொருளாதார வடிவத்திலிருந்து

தனித்து நிற்பதால், அரசியல் பொருளாதாரத் துறையின் ஆராய்ச்சிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.* இதுவே ஒரு வரையறுக்கப்பட்ட வடிவமாகும் பொழுது மட்டுமே இந்தத் துறைக்குள் சேரும். பயன் மதிப்பு என்பது பரிவர்த்தனை மதிப்பு என்ற திட்டவட்டமான பொருளாதார உறவை எடுத்துக்காட்டுகின்ற உடனடியான பௌதிகப் பொருளே.

பரிவர்த்தனை மதிப்பு பயன் மதிப்புகள் ஒன்றோடொன்று பரிவர்த்தனை செய்யப்படும் அளவு விகிதமாக, அளவு ரீதியான உறவாக முதலில் தோன்றுகிறது. இந்த உறவில் அவை சமமான பரிவர்த்தனை அளவுகளைக் கொண்டிருக் கின்றன. பொடிக்கும் இரங்கற்பாக்களுக்கும் பயன் மதிப்பு கள் வெவ்வேறானவை என்றாலும் பிராபெர்டியஸ் எழுதிய கவிதை நூலும் எட்டு அவுன்ஸ் பொடியும் ஒரே பரிவர்த் தனை மதிப்பைக் கொண்டிருக்கலாம். பரிவர்த்தனை மதிப்பு என்று பார்க்கும் பொழுது, ஒரு பயன் மதிப்பு மற்றொரு பயன் மதிப்புக்குச் சமமானதே; ஆனால் இரண்டும் பொருத்த மான அளவு வீதத்தில் கிடைக்க வேண்டும். ஓர் அரண் மனையின் பரிவர்த்தனை மதிப்பு பூட் பாலிஷ் டப்பிகளின் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்டு தெரிவிக்கப்பட லாம். மறு பக்கத்தில், பூட்பாலிஷ் தயாரிக்கிற லண்டன் நகர உற்பத்தியாளர்கள் தங்களுடைய எண்ணற்ற பாலிஷ் டப்பிகளின் பரிவர்த்தனை மதிப்பை அரண்மனைகளை அடிப் படை அளவாகக் கொண்டு தெரிவித்தார்கள். எனவே பண் டங்கள்—அவற்றின் இயல்பான உயிரணு வடிவம் எப்படி யிருந்த போதிலும், பயன் மதிப்புகள் என்ற முறையில் அவை திருப்திப்படுத்துகின்ற தேவைகளின் பிரத்யேகமான தன்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பார்த்தால் குறிப்பிட்ட அளவுகளில் இருக்கின்ற பண்டங்கள் முழு ஒப்

---

* அதனால்தான் ஜெர்மன் தொகுப்பாசிரியர்கள் பயன் மதிப்புகளை ''வசதிப்பொருள்கள்'' என்று பெயர் வைத்து con amore (ஆர்வத்தோடு) அவைகளைப் பற்றி எழுதுகிறார்கள். உதாரணமாக, L. Stein எழுதிய *System der Staatswissenschaften*, Bd. I பார்க்கவும். ''வாணிபப் பொருள்களைப் பற்றிய விவரப் பட்டியல்களில்'' ''வசதிப்பொருள்களைப்'' பற்றிய பயனுள்ள செய்திகளைக் காணலாம்.

புமை உடையவை; பரிவர்த்தனை நிகழ்வில் அவை ஒன்றின் இடத்தை மற்றொன்று நிரப்பும், அவை சமமானவையாகக் கருதப்படுகின்றன; அவை கதம்பத்தைப் போல பலவித மாகத் தோற்றமளித்த போதிலும் அடிப்படையில் பொது உடன்பாடு கொண்டிருக்கும்.

பயன் மதிப்புகள் வாழ்க்கைக்குரிய சாதனங்களாக நேரடியாகப் பயன்படுகின்றன. ஆனால், மறு புறத்தில் இந்த வாழ்க்கைக்குரிய சாதனங்களே சமூக நடவடிக்கையின் உற்பத்திப் பொருள்கள், செலவழிக்கப்பட்ட மனித சக்தியின் விளைவு, பொருள வடிவததிலுள்ள உழைப்பு. சமூக உழைப்பின் பொருள வடிவம் என்ற முறையில, எல்லாப் பண்டங் களுமே ஒரே பொருளின் நிலையான உருவங்களாகும். இநதப் பொருளின், அதாவது பரிவர்த்தனை மதிப்பில் அடங்கி யிருககும் உழைப்பின தனியான தன்மையை இப்பொழுது ஆராய வேண்டும்.

ஓர் அவுன்ஸ தங்கம், ஒரு டன் இரும்பு, ஒரு குவார்ட்டர் கோதுமை, இருபது கஜம் பட்டுத துணி ஆகியவை சம அளவிலிருக்கும் பரிவாத்தன மதிப்புகள என்று வைத்துக் கொளவோம. பரிவர்ததனை மதிப்புகள் என்ற முறையில் அவற்றுக்கிடையே பயன மதிப்புகளில உளள குண ரீதி யான வேறுபாடுகளை நீக்கிவிடுவதால், அவை ஒரே மாதிரி யான உழைப்பின சமமான அளவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. அவற்றில் ஒரே மாதிரியாகப் பொருண் மைப்படுத்தப்பட்டிருககும் உழைப்பு ஒரே சீரான, ஒரே தன்மையான, சாதாரண உழைப்பாக இருக்க வேண்டும். இது தங்கம், இரும்பு, கோதுமை, பட்டுத் துணி ஆகிய பொருள்களில் எதில அடங்கியிருக்கிறதென்பது முக்கியமல்ல; பிராணவாயு துருப்பிடித்த இரும்பிலும் காற்று மண்டலத் திலும் திராட்சைச் சாறிலும் உடலில ஓடும் இரத்தத்திலும் இருப்பதைப் போன்றதே. ஆனால் தங்கத்தை வெட்டி எடுப் பதும் இரும்பைத் தோண்டி எடுப்பதும் கோதுமையைப் பயிரிடுவதும் பட்டுத் துணியை நெய்வதும் குண ரீதியாக வெவ்வேறு வகையான உழைப்பாகும். புறப்பார்வைக்கு வேறுபட்ட பயன் மதிப்புகளாகத் தோன்றுவதை செயல் திறத்தோடு பார்க்கும் பொழுது அவை உண்மையில் பயன் மதிப்புகளை உருவாக்குகிற வேலைகளின் வேற்றுமையாகத்

தோன்றும். பயன் மதிப்புகள் அடங்கியிருக்கும் குறிப்பிட்ட பொருள் பரிவர்த்தனை மதிப்பை உருவாக்கும் உழைப்புக்குச் சம்பந்தமற்றது என்பதால் இந்த உழைப்பின் குறிப்பிட்ட வடிவமும் அதைப் போலவே சம்பந்தமில்லாததாகும். மேலும் வெவ்வேறான பயன் மதிப்புகள் வெவ்வேறான நபர்களின் செயல்களினால் விளையும் பொருள்களாகும்; எனவே அவை தனித்தனியே வெவ்வேறு வகையான உழைப்புக்களின் விளைவாகும். ஆனால் பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் அவை அதே ஒரு சீரான உழைப்பை, அதாவது தொழிலாளர்களின் தனிப்பட்ட தன்மைகள் முற்றிலும் நீக்கப்பட்ட உழைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. எனவே பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குகிற உழைப்பு சூக்குமமான பொது உழைப்பாகும்.

ஓர் அவுன்ஸ் தங்கமும், ஒரு டன் இரும்பும், ஒரு குவார்ட்டர் கோதுமையும், இருபது கஜம் பட்டுத் துணியும் சம அளவுள்ள பரிவர்த்தனை மதிப்புகள் அல்லது சமமானவை என்றால் ஓர் அவுன்ஸ் தங்கமும் அரை டன் இரும்பும், மூன்று புஷல் கோதுமையும், ஐந்து கஜம் பட்டுத் துணியும் வெவ்வேறான அளவுள்ள பரிவர்த்தனை மதிப்புகளாகும். இந்த அளவு ரீதியான வேறுபாடுதான் பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் அவற்றிடம் ஏற்படக் கூடிய ஒரே வேறுபாடாகும். வெவ்வேறு அளவுள்ள பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில், பரிவர்த்தனை மதிப்பின் சாராம்சமான சாதாரண, ஒரே சீரான, சூக்குமமான பொது உழைப்பின் பெரிய அல்லது சிறிய பகுதிகளையும் பெரிய அல்லது சிறிய அளவுகளையும் அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்த அளவுகளைக் கணக்கிடுவது எப்படி என்ற கேள்வி இப்போது எழுகிறது. அல்லது வேறு விதமாகச் சொல்வதென்றால் இந்த உழைப்புப் போக்கின் அளவு ரீதியான வடிவம் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஏனென்றால் பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் பண்டங்களிடமுள்ள அளவு ரீதியான வேறுபாடுகள் அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பின் அளவு ரீதியான வேறுபாடுகள் மட்டுமே. வேகம் நேரத்தைக் கொண்டு கணக்கிடப்படுவதைப் போல உழைப்பும் உழைப்பு நேரத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. உழைப்பின் தன்மையை ஒரே மாதிரியானது

என்று வைத்துக் கொண்டால் உழைப்பின் கால அளவில் மட்டுமே மாறுபாடுகள் சாத்தியமான வேறுபாடாகும். உழைப்பு நேரம் நேரத்தின் இயல்பான அடிப்படை அளவுகள் மூலம், அதாவது மணிகள், நாட்கள், வாரங்கள் என்று கணக்கிடப்படுகிறது. உழைப்பு நேரம் என்பது அதன் வடிவம், உள்ளடக்கம், தனித்தன்மைகள் ஆகியவற்றுக்குச் சம்பந்தமில்லாமல் பார்த்தால் அது உழைப்பு இருக்கின்ற வாழும் நிலையாகும்; அதுவே உழைப்பின் அளவு ரீதியான அம்சம் என்பதோடு அதன் உள்ளார்ந்த அளவும் அதுவே. பண்டங்களின் பயன் மதிப்புகளில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கும் உழைப்பு நேரம் அவற்றைப் பயன் மதிப்புகளாக, அதன் மூலம் பண்டங்களாக மாற்றுகிற பொருள் என்பது மட்டுமல்லாமல் அவற்றின் மதிப்பை அளவிடுகிற துல்லியமான அளவாகும். ஒரே அளவிலுள்ள உழைப்பு நேரத்தைக் கொண்டிருக்கும் வெவ்வேறான பயன் மதிப்புகளின் பொருந்துகிற அளவுகள் சமமானவையாகும்; அதாவது ஒரே அளவில் செலவழிக்கப்பட்ட, பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பு நேரத்தைக் கொண்டிருக்கும் பயன் மதிப்புகளைப் பொருத்தமான அளவுகளில் எடுத்துக்கொண்டால் அவை எல்லாமே சம அளவிலிருப்பவையாகும். பரிவர்த்தனை மதிப்புகள் என்று பார்க்கும் பொழுது எல்லாப் பண்டங்களுமே கெட்டியாக்கப்பட்ட உழைப்பு நேரத்தின் குறிப்பிட்ட அளவுகள் மட்டும்தான்.

பரிவர்த்தனை மதிப்பை உழைப்பு நேரத்தின் மூலமாக நிர்ணயிப்பதைப் புரிந்து கொள்வதற்குக் கீழ்க்கண்ட அடிப்படையான கருதுகோள்கள் அவசியமாகும். உழைப்பு சாதாரண உழைப்பாக, அதாவது எத்தகைய குண ரீதியான தன்மைகளும் இல்லாத உழைப்பு என்று சொல்லக் கூடிய வகையில் வகைப்படுத்தப்படுகிறது; பரிவர்த்தனை மதிப்பை உருவாக்கும் உழைப்பு, எனவே பண்டங்களை உருவாக்கும் உழைப்பு பிரத்யேகமான சமூக உழைப்பாகும்; கடைசியாக, பயன் மதிப்புகளை உருவாக்கும் உழைப்பு என்பதை எடுத்துக் கொண்டால் பரிவர்த்தனை மதிப்புகளை உருவாக்கும் உழைப்பிலிருந்து அது தனித்திருக்கிறது.

பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளை அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் மூலமாக அளவிடு

வதற்கு வெவ்வேறு வகைகளாயிருக்கும் உழைப்பை ஒரே தன்மையான, ஒரே சீரான, சாதாரண உழைப்பாக வகைப் படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொல்வதென்றால் அளவில் மட்டுமே வேறுபடக் கூடிய ஒரே தன்மையும் தரமும் கொண்ட உழைப்பாக வகைப்படுத்த வேண்டும்.

இப்படி வகைப்படுத்துதல் சூக்குமப்படுத்துதலைப் போலத் தோன்றும். ஆனால் இது உற்பத்தியின் சமூக நிகழ்வில் நாள்தோறும் நடைபெறுகின்ற சூக்குமப்படுத்துதல்தான். எல்லாப் பண்டங்களையும் உழைப்பு நேரத்துக்கு மாற்றுவது எல்லா உயிர்ப் பொருள்களும் காற்றாக மாறுவதைக் காட்டிலும் அதிகமான சூக்குமம் பொருந்தியதல்ல; அதைக் காட்டிலும் குறைவான மெய்ம்மை கொண்டதுமல்ல. இவ் வாறாக நேரத்தால் அளவிடப்படுகிற உழைப்பு உண்மை யாகவே வெவ்வேறு மனிதர்களின் உழைப்பாகத் தோன்று வதில்லை; அதற்கு மாறாக உழைப்பில் ஈடுபட்டிருக்கும் வெவ் வேறான நபர்கள் இத்தகைய உழைப்பின் சாதாரண உறுப்புக் களாக மட்டுமே தோன்றுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பரிவர்த்தனை மதிப்புகளில் அடங்கி யிருக்கும் உழைப்பைப் பொதுவாக மனித உழைப்பு என்று குறிப்பிடலாம். பொதுவாக மனித உழைப்பு என்ற சூக்கும வடிவம் சராசரி உழைப்பு என்ற வடிவத்தில் இருந்து வருகிறது. அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஒரு சராசரி மனிதன் தன்னுடைய தசைகளையும் நரம்புகளையும் மூளையை யும் இதரவற்றையும் குறிப்பிட்ட அளவில் பலன் தரும் முறையில் செலவிடும் உழைப்பாகும். இந்த சாதாரண உழைப்பைச்* செய்வதற்கு எந்த சராசரி நபருக்கும் பயிற்சி கொடுக்க முடியும்; மேலும் அவர் ஏதாவதொரு வழியில் இதைச் செய்ய வேண்டியிருக்கும். இந்தச் சராசரி உழைப்பின் தன்மைகள் வெவ்வேறு சரித்திர ரீதியான சகாப் தங்களிலும் வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன; ஆனால் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் அவை ஒரே விதமாகவே இருக்கின்றன. முதலாளித்துவ சமூகத்தில் செய்யப்படும் உழைப்பில் பெரும் பகுதி சாதாரண உழைப்பே

---

* ஆங்கிலப் பொருளியலாளர் இதைத் ''தேர்ச்சியற்ற உழைப்பு'' (unskilled labour) என்று குறிப்பிடுகிறார்கள்.

என்பதைப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. A என்பவர் இரும்பு உற்பத்தியில் 6 மணி நேரமும் லினன் துணி உற்பத்தியில் 6 மணி நேரமும் உழைக்கிறார். அதைப் போல B என்பவரும் இரும்பு உற்பத்தியில் 6 மணி நேரமும் லினன் துணி உற்பத்தியில் 6 மணி நேரமும் உழைக்கிறார். அல்லது A இரும்பு உற்பத்தியில் 12 மணி நேரமும் B லினன் துணி உற்பத்தியில் 12 மணி நேரமும் உழைத்தாலும் இது அதே உழைப்பு நேரத்தை வெவ்வேறு வகையாகப் பயன்படுத்துவதே என்பது வெளிப்படையாகும். ஆனால் இன்னும் அதிகமான சிக்கல் நிரம்பிய உழைப்பைப் பற்றிய நிலை என்ன? அதாவது அதிகமான தீவிரமும், அதிகமான இன எடையும் கொண்டு, பொதுவான நிலையிலிருந்து உயர்வாக இருக்கும் உழைப்பு பற்றிய நிலை என்ன? இந்த வகையைச் சேர்ந்த உழைப்பும் சாதாரண உழைப்பாக வகைப்படுத்தப்படும். அது உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட சாதாரண உழைப்பாகும். உதாரணமாக, ஒரு நாளில் செய்யப்படும் திறமையான உழைப்பு என்பது மூன்று நாட்களில் செய்யப்படும் சாதாரண உழைப்புக்குச் சமமாகலாம். இந்த வகைப்படுத்தல் சம்பந்தமான விதிகள் இங்கே நமக்கு அவசியமல்ல. எனினும் இந்த வகைப்படுத்தலை ஏன் குறிப்பிடுகிறோமென்றால், பரிவர்த்தனை மதிப்பு என்ற முறையில், அதிகத் திறமையான உழைப்பின் விளைவு, குறிப்பிட்ட அளவுகளில், சாதாரண சராசரி உழைப்பின் விளைவுக்குச் சமமானது என்பதைக் காட்டுவதற்குத்தான். எனவே அதிகத் திறமையுள்ள உழைப்பு சாதாரண உழைப்பின் குறிப்பிட்ட அளவுக்குச் சமமானதாகும்.

மேலும், உழைப்பு நேரத்தைக் கொண்டு பரிவர்த்தனை மதிப்பைக் கணக்கிடும் பொழுது, ஒரு குறிப்பிட்ட பண்டத்தில், உதாரணமாக ஒரு டன் இரும்பில், அது A, B என்பவர்களில் யாருடைய உழைப்பாகவும் இருந்த போதிலும், அதில் ஒரே அளவு உழைப்பு பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை முன்னூகிக்கிறது. அதாவது குண ரீதியிலும், அளவு ரீதியிலும் சமமான பயன் மதிப்புகளை உருவாக்குவதற்கு வெவ்வேறு நபர்கள் சம அளவுள்ள உழைப்பு நேரத்தைச் செலவிடுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒரு பண்டத்தில் அடங்கியிருக்கும்

உழைப்பு நேரம் அதனை உற்பத்தி செய்வதற்குத் தேவை யான உழைப்பு நேரம் என்று அனுமானிக்கப்படுகிறது; அதாவது ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவை யான உழைப்பு நேரம் என்பது, பொதுவாக இருக்கக் கூடிய உற்பத்தி நிலைமைகளில், அதே பண்டத்தின் வகையில் இன்னொரு பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரமாகும்.

பரிவர்த்தனை மதிப்பு பற்றி மேலே கொடுக்கப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து பரிவர்த்தனை மதிப்பை உருவாக்கும் உழைப்பு நிலைமைகள், உழைப்பின் சமூக இனங்கள் அல்லது சமூக உழைப்பின் இனங்கள் என்பது காணப்பெறும். இங்கே சமூகம் என்பது அதற்குரிய பொதுவான அர்த்தத்தில் கை யாளப்படவில்லை; சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தைக் குறிக்கிற தனியான அர்த்தத்தில் கையாளப்படுகிறது. ஒரே விதமான சாதாரண உழைப்பு என்பது முதலில் வெவ் வேறான தனி நபர்களின் உழைப்பு சமமானது என்பதையும் ஒரே சீரான உழைப்பாக வகைப்படுத்தப்படுவதன் மூலம் அவர்களுடைய உழைப்பு சமமானதாகவே கருதப்படுகிறது என்பதையும் உள்ளடக்கியிருக்கிறது. ஒவ்வொரு தனி நபருடைய உழைப்பும், அது பரிவர்த்தனை மதிப்பில் வெளிப் படுகிறது என்ற அளவில், இந்த சம அளவு என்ற சமூகத் தன்மையைக் கொண்டிருக்கிறது; மற்ற எல்லாத் தனி நபர்களின் உழைப்புடன் சமமாக நடத்தப்படும் அளவில் மட்டுமே அது பரிவர்த்தனை மதிப்பில் வெளிப்படுகிறது.

மேலும், பரிவர்த்தனை மதிப்பில் ஒரு குறிப்பிட்ட தனி நபரின் உழைப்பு நேரம் பொதுவான உழைப்பு நேரம் என்று நேரடியாகவே பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. தனி நபருடைய உழைப்பின் இத்தகைய பொதுத் தன்மை இந்த உழைப்பின் சமூகத் தன்மையாகத் தோன்றுகிறது. பரி வர்த்தனை மதிப்பில் எடுத்துரைக்கப்படும் உழைப்பு நேரம் ஒரு தனி நபரின் உழைப்பு நேரமாகும். ஆனால் இந்தத் தனி நபர், அடுத்த தனி நபரிடமிருந்தும், மற்ற எல்லாத் தனி நபர்களிடமிருந்தும்—அவர்கள் சமமான உழைப்பைச் செய்கிறார்கள் என்ற அளவில்—எத்தகைய வேறுபாடும் இல்லாதவர். எனவே ஒரு குறிப்பிட்ட பண்டத்தை உற் பத்தி செய்வதற்கு ஒரு நபருக்குத் தேவையான உழைப்பு

நேரம் என்பது அதே பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு எந்த நபருக்கும் தேவையான அவசியமான உழைப்பு நேர மாகும். இது ஒரு தனி நபரின் உழைப்பு நேரம்; அவரு டைய உழைப்பு நேரம், ஆனல் எல்லோருக்கும் பொது வான உழைப்பு நேரம் என்ற அளவில் மட்டுமே. எனவே இது எந்தத் தனி நபருடைய உழைப்பு நேரம் என்பது அவசியமானதல்ல. எக்காலத்துக்கும் உரிய இந்த உழைப்பு நேரம், எல்லாக் காலத்துக்கும் உரிய பொருளில், எக்காலத் துக்கும் உரிய சமமதிப்பு என்ற பொருளில் வெளிப்படு கிறது. இது பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பு நேரத் தின் திட்டவட்டமான அளவாகும். ஒரு நபரின் நேரடியான உற்பத்தி என்ற முறையில் அதனுடைய பயன் மதிப்பு வெளிப்படுகின்ற திட்டவட்டமான வடிவம் அதற்கு முழு வதும் சம்பந்தமில்லாததாகும். பயன் மதிப்பின் வேறு எந்த வடிவமாகவும் அதை நினைத்த போது மாற்றிக்கொள்ள முடியும். அப்படி மாற்றப்படும் பொழுது யாராவது ஒரு நபரின் உற்பத்தியாகவும் அது தோன்றும். எக்காலத்துக்கும் உரிய அளவு என்ற நிலையில் மட்டுமே அது சமூக அளவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஒரு தனி நபரின் உழைப்பு எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பை உற்பத்தி செய்தால்தான், அதாவது தனி நபரின் உழைப்பு நேரம் எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினல் அல்லது எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரம் தனி நபரின் உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினலும் தான் அது பரிவர்த்தனை மதிப்பை உற்பத்தி செய்ய முடியும். இதன் விளைவு பல்வேறு தனி நபர்களும் தங்களுடைய உழைப்பு நேரத்தை ஒன்றுசேர்த்து, தங்களுடைய பொதுவான விநியோகத்துக்குத் தயாராகவுள்ள உழைப்பு நேரத்தைப் பல் வேறு பயன் மதிப்புகளுக்கும் ஒதுக்கீடு செய்வது போன்றதே. எனவே ஒரு தனி நபரின் உழைப்பு நேரம் என்பது உண் மையில் ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பை உற்பத்தி செய் வதற்கு, அதாவது ஒரு குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்வதற்கு சமூகத்துக்குத் தேவையான உழைப்பு நேரமே. ஆனல் உழைப்பின் சமூகத் தன்மை நிறுவப்படுகிற பிரத் யேகமான முறை மட்டுமே இங்கே முக்கியமானதாகும். உதாரணமாக, நூறு பவுண்ட் நூலில் ஒரு நூற்பவரின்

உழைப்பு நேரத்தின் குறிப்பிட்ட அளவு பொருண்மைப் படுத்தப்படுகிறது. ஒரு நெசவாளியின் உற்பத்தியான நூறு கஜம் லினன் துணி அதே உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித் துவப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. இந்த இரண்டு பொருள்களும் எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் சமமான அளவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாலும், எனவே அவை ஒரே அளவு உழைப்பு நேரத்தைக் கொண் டிருக்கிற எந்தப் பயன் மதிப்புக்கும் சமமதிப்புடையவை என்பதாலும், அவை ஒன்றுக்கொன்று சமமானவையாகும். ஒரு நூற்பவரின் உழைப்பு நேரமும் நெசவாளியின் உழைப்பு நேரமும் எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாலும் அதனால் அவர்கள் இரு வருடைய உற்பத்திப் பொருள்களும் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையவை என்பதால் மட்டுமே இரண்டு தனி நபர்களுடைய உழைப்பின் சமூகத்தன்மை ஒருவருக்கொரு வர் அடுத்தவருடைய உழைப்பால் பிரதிநிதித்துவப்படுத்தப் படுகிறது; அதாவது நெசவாளியின் உழைப்பு நூற்பவ ருக்கு அதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; நூற்பவரின் உழைப்பு நெசவாளிக்கு அதைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறது. இதற்கு மாறாக, அந்தக் காலத்தில் நிலவிய குடும்ப ரீதியான உற்பத்தி முறையில், நூற்பவரும் நெசவாளியும் ஒரே கூரையின் கீழ் வசித்த பொழுது—உதாரணமாக, குடும்பத் தேவைகளுக்காகக் குடும்பத்திலிருக்கும் பெண்கள் நூற்பதும் ஆண்கள் நெசவு செய்வதுமாக இருந்த பொழுது— நூலும் லினன் துணியும் சமூக உற்பத்திப் பொருள்கள்; நூற்பதும் நெசவு நெய்வதும் குடும்பம் என்ற சுற்றுவட்டத் துக்குள் நடைபெற்ற சமூக உழைப்பாகும். ஆனால் அவற்றின் சமூக குணம் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடைய நூல் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புள்ள லினன் துணிக்குப் பரிவர்த்தனை என்ற வடிவத்தில், அதாவது இரண்டு பொருள் களும் ஒன்றுக்கொன்று சமமானவை என்ற முறையிலும் எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் சமமாகச் செல்லுபடியாகக் கூடிய வெளியீடுகள் என்ற முறையிலும் பரிவர்த்தனை செய்யப்படுவது என்ற வடிவத்தில் வெளிப் படவில்லை. இதற்கு மாறாக, உழைப்பின் உற்பத்திப் பொருள் குடும்ப உறவு மற்றும் அதனுடைய இயற்கையான வளர்ச்சி

யிலேற்பட்ட வேலைப் பிரிவினை என்ற குறிப்பிட்ட சமூக முத்திரையைத் தாங்கியிருந்தது. அல்லது மத்திய காலத்தில் இருந்த கொத்தடிமைச் சேவையையும் பணியீட்டு வாரத்தையும் நாம் எடுத்துக் கொள்வோம். சுய வடிவத்திலிருந்த தனித்தன்மையான தனி நபருடைய உழைப்பு—அவருடைய உழைப்பின் குறிப்பிட்ட அம்சங்களே தவிர அதன் எக்காலத்துக்கும் உரிய அம்சமல்ல—அக்காலத்திய சமூகத் தொடர்புகளை உருவாக்கியது. அல்லது நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் அவற்றின் வரலாற்றின் தொடக்கத்தில் நாம் காண்கிற கூட்டு உழைப்பை, அதன் ஆதிகால வடிவத்தைக் கடைசியாக எடுத்துக் கொள்வோம்.* இந்த உதாரணத்தில் தனி நபரின் உழைப்பு எக்காலத்துக்கும் உரிய உழைப்பின் சூக்குமமான வடிவத்தை ஏற்றுக் கொள்வதாலோ அல்லது அவருடைய உற்பத்திப் பொருள் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பின் வடிவத்தை ஏற்றுக் கொள்வதாலோ உழைப்பின் சமூகத் தன்மை ஏற்படவில்லை என்பது தெளிவாகப் புலப்படும். சமுதாய உழைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்த உற்பத்தி முறை தனி நபரின் உழைப்பு என்பது தனிவகையான உழைப்பு என்று ஆகிவிடாமல் தடுக்கிறது; அவருடைய உற்பத்திப் பொருளும் ஒரு தனி நபரின் தனியான உற்பத்திப் பொருள் என்று ஆகிவிடாமல் தடுக்

* ஆதிகாலத்தில் நிலவிய சமுதாயச் சொத்து என்பது பிரத்யேகமான ஸ்லாவ் நிகழ்வு அல்லது ருஷ்யாவுக்கே மட்டும் உரித்தான நிகழ்வு என்று பொருளற்ற வகையில் தவறான கருத்து இப்பொழுது பரவலாக இருந்து வருகிறது. இது ஓர் ஆரம்ப வடிவம்; இதை ரோமானியர்கள், கெல்ட்டுகள் மற்றும் டியூட்டானியர்களிடம் காணலாம். இப்படிப்பட்ட வடிவத்தில் வெவ்வேறு விதமான தொகுதி (சில சமயங்களில் அதன் மிச்சங்கள் மட்டுமே எஞ்சிநின்ற போதிலும்) இன்னும் இந்தியாவில் இருந்து வருகிறது. ஆசியாவிலும், குறிப்பாக இந்தியாவிலும் இருந்த சமுதாயச் சொத்து வடிவங்களைக் கவனமாக ஆராய்ந்தால், ஆதிகாலத்திலிருந்த சமுதாய உடைமையின் வெவ்வேறு வடிவங்கள் சிதைவுறும் பொழுது சொத்துரிமையின் வெவ்வேறான வடிவங்களை ஏற்படுத்துகின்றன என்பது புலப்படும். உதாரணமாக, ரோமானிய மற்றும் ஜெர்மானிய தனிச் சொத்துரிமையின் பல்வேறு முன்மாதிரிகளை இந்தியாவிலிருந்த சமுதாயச் சொத்துடைமையின் சில வடிவங்களில் காணலாம்.

கிறது; ஒரு தனி நபரின் உழைப்பு என்பது சமூக ஸ்தாபனத்தின் உறுப்பினர் என்ற முறையில் அவருடைய நேரடியான வேலையாகத் தோன்றுமாறு செய்கிறது. பரிவர்த்தனை மதிப்பில் வெளிப்படுகின்ற உழைப்பு ஒதுங்கி நிற்கும் ஒரு தனி நபரின் உழைப்பாகத் தோன்றுகிறது. அதற்கு நேர் எதிரிடையான, எக்காலத்துக்கும் உரிய சூக்குமமான உழைப்பின் வடிவத்தைப் பெற்றுக் கொண்டு, சமூக உழைப்பாகி விடுகிறது.

கடைசியாக, பரிவர்த்தனை மதிப்பை நிலையில் அமைக்கும் உழைப்பின் குறிப்பிடத்தக்க அம்சம், அது தனி நபர்களுக்கிடையேயுள்ள சமூக உறவுகள் பொருள்களுக்கிடையே உள்ள சமூக உறவாகத் திரிந்துபோன வடிவத்தில் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதாகும். வெவ்வேறு நபர்களின் உழைப்பில், ஒரு பயன் மதிப்பைப் பரிவர்த்தனை மதிப்பு என்ற வகையில் மற்றொன்றோடு தொடர்பு படுத்துவது மூலமே, அது சமத் தன்மையுடையதாக்கப்பட்டு எக்காலத்துக்கும் உரிய உழைப்பாக ஆக்கப்படுகிறது. எனவே பரிவர்த்தனை மதிப்பு என்பது நபர்களுக்கிடையே உள்ள உறவு* என்று கூறுவது சரி என்றாலும், அது ஒரு பொருளாயதத் திரையினால் மறைக்கப்பட்ட உறவு என்று சேர்த்துச் சொல்லுவதும் அவசியமே. ஒரு பவுண்ட் இரும்பும் ஒரு பவுண்ட் தங்கமும் வெவ்வேறு பௌதிக, இரசாயனப் பொருள்களைக் கொண்டிருந்த போதிலும் ஒரே எடையைக் கொண்டிருப்பது போல, இரண்டு பொருள்கள் வெவ்வேறு பயன் மதிப்புகளைக் கொண்டிருந்து, ஆனால் ஒரே அளவு உழைப்பு நேரத்தைக் கொண்டவையாக இருந்தால், அவை ஒரே **பரிவர்த்தனை மதிப்பைக்** கொண்டிருக்கின்றன. எனவே பரிவர்த்தனை மதிப்பு என்பது பயன் மதிப்புகளைச் சமூக முறையில் நிர்ணயித்தல் போலத் தோன்றுகிறது; இந்த நிர்ணயித்தல் அவற்றுக்குப் பொருள்கள் என்ற முறையில் பொருத்தமானதே. இதன் விளைவாக அவை பரிவர்த்தனை நிகழ்வின்

---

* "La ricchezza e una ragione tra due persone" (செல்வம் என்பது இரண்டு நபர்களுக்கிடையே உள்ள உறவாகும்). Galiani, *Della Moneta*, p. 221, in Custodi, *Scrittori classici Italiani di Economia Politica. Parte Moderna*, Vol. 3, Milano, 1803.

போது, குறிப்பிட்ட அளவுகளில் ஒன்றின் இடத்தை மற்றொன்று எடுத்துக் கொள்வது சாத்தியமாகிறது. அதாவது, சாதாரணமான இரசாயன மூலப் பொருள்கள் குறிப்பிட்ட அளவுகளில் சேர்ந்து இரசாயன சரிசமப் பொருள்களை உருவாக்குவதைப் போல, அவையும் சமமதிப்புப் பொருள்களாகும். உற்பத்தியின் சமூக உறவுகள் பொருள்களின் உருவத்தை ஏற்றுக் கொண்டு அதனால் தங்களுடைய வேலையை ஒட்டி மக்கள் ஈடுபடுகின்ற உறவுகள், பொருள்கள் ஒன்றுக்கொன்று கொண்டிருக்கும் உறவு போலவும் பொருள்கள் மக்களோடு கொண்டிருக்கும் உறவு போலவும் தோற்றமளிக்கின்றன. நமது அன்றாட வாழ்க்கையின் சம்பிரதாயங்கள் தான் அவற்றைச் சாதாரணமானவையாக, பொருளற்றவையாகத் தோன்றுமாறு செய்கின்றன. பண்டத்தைப் பொறுத்தவரை இந்தத் திகைப்பூட்டுதல் மிகச் சாதாரணமானதே. பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் பண்டங்களுக்கிடையே உள்ள உறவுகள் உண்மையில் மக்கள் தங்களுடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் உறவுகள் என்பதை ஒவ்வொருவரும்—கூடுதலாகவோ குறைவாகவோ—தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இந்த எளிமையான வெளித்தோற்றம் இன்னும் வளர்ச்சியடைந்த உற்பத்தி உறவுகளில் மறைந்து விடுகிறது. பணம் என்பது குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்ட பௌதிகப் பொருளாக இருந்தாலும், உற்பத்தியின் சமூக உறவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறியதிலிருந்துதான் பணவியல் முறையின் எல்லாவிதமான மயக்கங்களும் தோன்றுகின்றன. பணவியல் முறையின் மயக்கங்களைப் பற்றி ஏளனம் செய்கிற நவீன பொருளியலாளர்களும், மூலதனம் போன்ற இன்னும் சிக்கலான பொருளாதார இனங்களை ஆராயத் தொடங்கிய உடனேயே இதே விதமான மயக்கங்களை வெளிப்படுத்துகிறார்கள். எந்த நிகழ்வை அவர்கள் பொருள் என்று இப்போதுதான் செறிவாகச் சொன்னார்களோ அது சமூக உறவாக மறுபடியும் தோன்றுகிறது; சமூக உறவு என்று வர்ணிக்கப்பட்ட பிறகு, ஒரு வினாடியில் மறுபடியும் பொருளாகத் தோன்றி அவர்களைத் திகைக்கச் செய்கிறது. அவர்கள் தங்களுடைய சிறு பிள்ளைத்தனமான வியப்பை ஒத்துக்

கொள்கிற பொழுது அவர்களிடமிருக்கும் மயக்கங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு என்பது, சமமாகவும் எக்காலத்துக்கும் உரிய உழைப்பாகவும் கருதப்படுகிற வெவ்வேறு விதமான தனி நபர்களின் உழைப்பிற்கிடையே உள்ள பரஸ்பர உறவு என்பதைத் தவிர வேறில்லை; அதாவது உழைப்பின் குறிப்பிட்ட சமூக வடிவத்தின் பொருளாயத வெளிப்பாடு என்பதைத் தவிர வேறில்லை. எனவே பரிவர்த்தனை மதிப்புக்கும் அதிலிருந்து பரிவர்த்தனை மதிப்பைக் கொண்டிருக்கிறது என்ற அளவில் செல்வத்துக்கும் ஒரே ஊற்றுக்கண் உழைப்பு என்று சொல்வது கூறியது கூறலாகும். அதைப் போலவே, இயற்கையான நிலையில் இருக்கும் பொருளுக்குப் பரிவர்த்தனை மதிப்பு இல்லை* என்று சொல்வதும் கூறியது கூறலே. ஏனென்றால் அதில் உழைப்பு இல்லை. பரிவர்த்தனை மதிப்பு என்ற வகையில், இயற்கையான நிலையில் இருக்கும் பொருள் சேர்க்கப்படுவதில்லை. வில்லியம் பேட்டி ''உழைப்பு செல்வத்தின் தந்தை; பூமி அதன் தாய்'' என்று சொல்வது[13] உண்மையே, பிஷப் பெர்க்லி பின்வருமாறு கேட்கிறார்:

''செல்வத்தின் உண்மையான ஊற்றுக்கண் நான்கு மூலப் பொருள்களும் அவற்றிடையே மனிதனின் உழைப்பும் அல்லவா?''**

தாமஸ் கூப்பர் என்ற அமெரிக்கர் பொது மக்கள் ரசிக்கும் விதத்தில் விளக்கமாகக் கூறுகிறார்:

''ஒரு ரொட்டித் துண்டிலிருந்து, அந்த மாவு மீது ரொட்டி தயாரிப்பவனின் உழைப்பையும், தானியத்தின் மீது

* ''பொருள், தன்னுடைய இயற்கையான நிலையில்... எப்போதும் மதிப்பு அற்றதாக இருக்கிறது.'' Mac Culloch, *Discours sur l'origine de l'économie politique etc.*, traduit par Prévost Genéve, 1825, p. 57. ''பொருள்'' மற்றும் அதைப் போன்ற இனங்கள் அரை டஜனும் மதிப்பின் மூலங்கள் என்று வற்புறுத்துகிற ஜெர்மன் ''சிந்தனையாளர்களின்'' மாய்மாலத்தோடு ஒப்பிடும் பொழுது ஒரு மாக் கூலோஹ் கூட எவ்வளவு உயர்ந்து நிற்கிறார். உதாரணமாக, L. Stein, *op. cit.*, Bd. 1, p. 170 பார்க்கவும்.

** Berkeley, *The Querist*, London, 1750.

அரவைத் தொழிலாளியின் உழைப்பையும், நிலத்தை உழுது கோதுமை பயிரிட்டுக் களை பிடுங்கி அறுவடை செய்து, பதா ரக்கி சுத்தம் செய்து அதைச் சந்தைக்குக் கொண்டுவரும் விவசாயியின் உழைப்பையும் நீக்கிப் பாருங்கள். பிறகு என்ன மிஞ்சும்? மனிதனின் உபயோகத்துக்குப் பயன்படாத, காட்டுச் செடியின சில இலைகள் மட்டும் மிஞ்சும்.''*

இந்தக் கருத்துக்கள் அனைத்துமே பரிவர்த்தனை மதிப் பின் பிறப்பிடமான சூக்குமமான உழைப்பைப் பற்றிக் கூற வில்லை; பொருட்செலவத்தின் பிறப்பிடம் என்ற முறையில் ஸ்தூல உழைப்பை, சுருக்கமாகச் சொல்வதென்றால் பயன் மதிப்புகளை உற்பத்தி செய்கிறது என்ற அளவில் உழைப் பைப் பற்றிக் கூறுகின்றன. இங்கே பண்டத்தின் பயன் மதிப்பை வற்புறுத்தியிருப்பதால் அதன் மீது செலவழிக்கப் பட்டிருக்கும் உழைப்பின் பிரத்யேகப் பயனும் திட்ட வட்டமான உபயோகமும் வற்புறுத்தப்படுகிறது. ஆனால் இது அவசியமான உழைப்பு என்ற முறையில் உழைப்பின் இந்த ஓரம்சம் மட்டுமே பண்டங்களைப் பற்றிய ஆராய்ச் சிக்குச் சம்பந்தமுடையதாகும். பயன் மதிப்பு என்ற அடிப் படையில் ரொட்டியைக் கருதுகிற பொழுது, ஓர் உணவுப் பொருள் என்ற முறையில் அதன் பண்புகளை நாம் ஆராய் கிறோமே தவிர, விவசாயி, அரவைத் தொழிலாளி, ரொட்டி தயாரிப்பவர் முதலியோரது உழைப்பையல்ல. ஏதாவதொரு புதிய கண்டுபிடிப்பு மூலம், ஒரு ரொட்டியைத் தயாரிப் பதற்கு அவசியமான உழைப்பு 95 சதவிகிதம் குறைக்கப் பட்டாலும் கூட, அந்த ரொட்டியின் உபயோகம் சிறிதும் பாதிக்கப்படாமலே இருக்கும். ரொட்டி அப்படியே ஆகாயத் திலிருந்து கீழே விழுந்தால் கூட அதன் பயன் மதிப்பில் ஒரு துணுக்கைக் கூட அது இழக்கப் போவதில்லை. உழைப்பு பரிவர்த்தனை மதிப்பை நிலைப்படுத்துவது என்ற வகையில் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையவை என்ற முறை யில் பண்டங்களின் சமத்தன்மையில் வெளிப்படுவதோடு, பயனுள்ள உற்பத்தித் தொழில் என்ற முறையில் பயன் மதிப்புகளின் வரம்பு கடந்த வேற்றுமையில் வெளிப்படு கிறது. உழைப்பு பரிவர்த்தனை மதிப்பை நிலைப்படுத்தும்

* Thomas Cooper, *Lectures on the Elements of Political Economy*, London, 1831 (Columbia, 1826), p. 99.

பொழுது அது சூக்குமமான, எக்காலத்துக்கும் உரிய ஒரே வகையான உழைப்பாகும்; உழைப்பு பயன் மதிப்பை நிலைப் படுத்தும் பொழுது அது ஸ்தூலமான, தனிவகையான உழைப்பு; தன்னுடைய வடிவத்தையும் உபயோகிக்கப்படும் பொருளையும் பொறுத்தவரை அது வரம்பு கடந்த அளவுக்கு உழைப்பின் வெவ்வேறு வகைகளைக் கொண்டதாக உள்ளது.

பயன் மதிப்புகளை உருவாக்கும் உழைப்பு, அதனால் உற்பத்தி செய்யப்படும் செல்வத்தின், அதாவது பொருட்செல்வத்தின் ஒரே ஊற்றுக்கண் என்று சொல்வது தவறானதாகும். உழைப்பு என்பது பொருளை ஏதாவதொரு நோக்கத்துக்கு வகைப்படுத்தும் நடவடிக்கை என்பதால், அதற்குப் பொருள் முன்தேவையாக அவசியமாகிறது. வெவ்வேறான பயன் மதிப்புகள் உழைப்பு மற்றும் இயற்கைப் பொருள்களின் இன்னும் வெவ்வேறான அளவுகளைக் கொண்டிருக்கின்றன; ஆனால் பயன் மதிப்பு எப்பொழுதும் ஓர் இயற்கை மூலகத்தைக் கொண்டிருக்கிறது. இயற்கைக் காரணிகளை ஏதாவதொரு வடிவத்தில் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கை என்ற வகையில் உழைப்பு மனித வாழ்க்கையின் இயல்பான நிலையாகும்; மனிதனுக்கும் இயற்கைக்கும்—சமூகத்தின் வடிவம் எப்படியிருந்த போதிலும்—பொருளாயத இடைப்பரிமாற்றத்தை ஏற்படுத்தும் நிலையாகும். இதற்கு மாறாக, பரிவர்த்தனை மதிப்பை நிலைப்படுத்தும் உழைப்பு, உழைப்பின் பிரத்யேகமான சமூக வடிவமாகும். உதாரணமாக, தையல் தொழில்—ஒரு தனியான பயனுற்பத்தி நடவடிக்கை என்ற வகையில் அதன் உடற்பொருள் சார்ந்த அம்சத்தை எடுத்துக் கொண்டால்—ஒரு கோட்டை உற்பத்தி செய்கிறது; ஆனால் அந்த கோட்டின் பரிவர்த்தனை மதிப்பை உற்பத்தி செய்யவியலாது. பரிவர்த்தனை மதிப்பை அது தையல் என்ற தொழில் மூலம் உற்பத்தி செய்வதில்லை; சூக்குமமான, எக்காலத்துக்கும் உரிய உழைப்பு என்பதன் மூலமாக உற்பத்தி செய்கிறது. இது தையற்காரனால் ஏற்படுத்தப்படாத சமூகச் சுற்றுவட்டத்துக்குள் சேர்ந்ததாகும். உதாரணமாக, பண்டைக் காலத்திலிருந்த வீட்டுத் தொழில்களில் பெண்கள் கோட்டுகளை உற்பத்தி செய்தனர்; ஆனால் கோட்டுகளின் பரிவர்த்தனை மதிப்பை உற்பத்தி செய்யவில்லை. உழைப்பே பொருட்செல்வத்தின்

பிறப்பிடம் என்பது சட்டங்களைக் கொடுத்த மோசசுக்கும் சுங்க இலாகா அதிகாரியான ஆடம் ஸ்மித்துக்கும் நன்ருகத் தெரிந்ததுதான்.*

பரிவர்த்தனை மதிப்பை உழைப்பு நேரத்துக்கு மாற்றுகிற பொழுது ஏற்படுகின்ற சில கருதுகோள்களை இங்கே ஆராய்வோம்.

பயன் மதிப்பு என்ற முறையில் ஒரு பண்டத்துக்கு உயர்வான பொருள் வகைச் செயல் இருக்கிறது. உதாரணமாக, கோதுமை உணவாகப் பயன்படுகிறது. ஓர் இயந்திரம் குறிப்பிட்ட அளவுள்ள உழைப்புக்குப் பதிலாகப் பயன்படுகிறது. இந்தச் செயலின் மூலமாகத்தான் ஒரு பண்டம் பயன் மதிப்பாக, நுகர்வுப் பொருளாகப் பயன்படுகிறது; இந்தச் செயலை, பயன் மதிப்பு என்ற முறையில் அது தருகிற சேவை, அதனுடைய சேவை என்று கூறலாம். ஆனல் பரிவர்த்தனை மதிப்பு என்ற வகையில் ஒரு பண்டம் விளைவு என்ற கருத்து நிலையில் மட்டுமே வைத்து எப்பொழுதும் ஆராயப்படுகிறது. அது செய்யும் சேவை முக்கியமல்ல; உற்பத்தி நடைபெறும் பொழுது அதற்குச் செய்யப்படும் சேவைதான் முக்கியம் நிறைந்ததாகும்.** உதாரணமாக, ஓர் இயந்திரத்தின் பரிவர்த்தனை மதிப்பு அது எந்த அளவு உழைப்பு நேரத்தை மாற்றீடு செய்ய முடியும் என்பதைக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதில்லை; அதன் உற்பத்தியில் செலவழிக்கப்பட்ட உழைப்பு

---

* பயனுள்ள ஏதாவதொரு பொருளை, பயன் மதிப்பை உற்பத்தி செய்யும் உழைப்புக்கும் செல்வத்தின் குறிப்பிட்ட சமூக வடிவமாகிய பரிவர்த்தனை மதிப்பை உற்பத்தி செய்யும் உழைப்புக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை பிரெடெரிக் லிஸ்ட் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியவில்லை (அவர் அறிவு பல செய்முறைக் காரியங்களில் ஈடுபட்டிருந்தபடியால் அதைப் புரிந்து கொள்வதில் அக்கறை காட்டவில்லை); எனவே அவர் நவீன ஆங்கிலப் பொருளாதார நிபுணர்களை எகிப்து நாட்டின் மோசசிடமிருந்து வெறுங்காப்பியடிப்பவர்கள் என்று கருதினுர்.

** ஸே, பாஸ்தியா போன்ற பொருளியலாளர்களுக்கு ''சேவை'' என்ற இனம் எத்தகைய ''சேவை'' செய்ய முடியும் என்பது நமக்கு எளிதாகப் புலப்படும். இவர்களுடைய அறிவுக் கூர்மை பொருளாதார நிலைமைகளின் குறிப்பிட்ட வடிவத்தை எப்போதும் மறைத்துவிடும் என்று மால்தஸ் பொருத்தமாகக் கூறுகிருர்.

நேரத்தைக் கொண்டு, அதே போன்ற இன்னொரு புதிய இயந்திரத்தைச் செய்வதற்குத் தேவைப்படுகிற உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

எனவே பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவு நிலையாக இருக்குமானால், அவற்றின் பரிவர்த்தனை மதிப்பும் மாறாமல் இருக்கும். ஆனால் உற்பத்தியின் சாதகபாதகங்கள் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கின்றன. உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்குமானால், அதே பயன் மதிப்பு அதைக் காட்டிலும் குறைவான நேரத்தில் உற்பத்தி செய்யப்படும். உழைப்பின் உற்பத்தித் திறன் குறையுமானால், அதே பயன் மதிப்பை உற்பத்தி செய்வதற்கு இன்னும் அதிகமான நேரம் தேவைப்படும். எனவே ஒரு பண்டத்தில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் அளவு, ஆகவே அதன் பரிவர்த்தனை மதிப்பு, மாறுகின்ற வகையாக இருக்கிறது; உழைப்பின் உற்பத்தித் திறனின் ஏற்ற இறக்கத்துக்கு எதிர்மறை விகிதத்தில் கூடும் அல்லது குறையும். உழைப்பின் உற்பத்தித் திறன் பொருளுற்பத்தி செய்யும் தொழில்களில் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது; விவசாயத்திலும், பூமியைத் தோண்டி எடுக்கப்படும் தொழில்களிலும், முன்கூட்டிச் சொல்ல முடியாத இயற்கை நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது. பூமியின் மேற்பரப்பில் உலோகங்கள் கிடைக்கக் கூடிய சார்புநிலையைப் பொறுத்து ஒரே அளவு உழைப்பின் மூலமாக உலோகங்கள் வெட்டி எடுக்கும் அளவு அதிகமாக அல்லது குறைவாக இருக்கலாம். சாதகமான பருவநிலைக் காலத்தின் போது ஒரே அளவு உழைப்பின் மூலமாக இரண்டு புஷல் கோதுமை கிடைக்கலாம்; பாதகமான பருவநிலை காலத்தின் போது ஒரே ஒரு புஷல் கோதுமை மட்டுமே கிடைக்கலாம். இந்த உதாரணத்தில் இயற்கை நிலைமைகளினால் ஏற்படுகின்ற செழிப்பும் பஞ்சமும் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பை நிர்ணயிப்பது போலத் தோன்றுகிறது. ஏனென்றால் இயற்கை நிலைமைகளோடு பிணைக்கப்பட்டிருக்கும் தனிவகையான, ஸ்தூலமான உழைப்பின் உற்பத்தித் திறனை அது நிர்ணயிக்கிறது.

உழைப்பு நேரத்தின் சம அளவுகள் அல்லது பரிவர்த்தனை மதிப்பின் சம அளவுகள் வெவ்வேறு வகையான பயன்

மதிப்புகளில் சமமற்ற அளவுகளில் அடங்கியிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பு நேரத்தைக் கொண்டிருக்கும் பயன் மதிப்பு மற்ற பண்டங்களின் பயன் மதிப்புகளோடு ஒப்பிடும் பொழுது அளவில் எவ்வளவு சிறியதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அந்தப் பண்டத்தின் தனிவகை பரிவர்த்தனை மதிப்பு அதிகமாக இருக்கும். உலக நாகரிகத்தில் நெடுங்காலப் பகுதிகளால் பிரிக்கப்பட்ட வெவ்வேறு சகாப்தங்களில் பல்வேறு பயன் மதிப்புகள்—உதாரணமாக தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு அல்லது கோதுமை, ரை, பார்லி, ஓட்ஸ் முதலியன—தனிவகை பரிவர்த்தனை மதிப்புகளின் தொடர் வரிசையை ஏற்படுத்துகின்றன. இவை ஒன்றோடொன்று கொண்டிருக்கும் உறவில் தங்களுடைய சரியான எண்ணிக்கை வீதங்களை நீடித்துக் கொள்ளாவிட்டாலும் மொத்தத்தில் ஒப்புநோக்கில் தங்களுடைய வரிசைக் கிரமத்தை நீடித்துக் கொண்டிருக்கின்றன என்பதிலிருந்து சமூக உற்பத்திச் சக்திகளின் முற்போக்கான வளர்ச்சியானது இந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரத்தின் மீது ஒரே தன்மையான அல்லது அநேகமாக ஒரே தன்மையான விளைவை ஏற்படுத்தியிருக்கிறது என அறியலாம்.

ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு அதனுடைய சொந்தப் பயன் மதிப்பின் மூலமாக எடுத்துரைக்கப்படுவதில்லை. ஆனால் எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு நேரத்தின் பொருண்மைப்படுத்தல் என்ற வகையில் ஒரு பண்டத்தின் பயன் மதிப்பு மற்ற பண்டங்களின் பயன் மதிப்புகளோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இவ்விதம் ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு மற்ற பண்டங்களின் பயன் மதிப்புகளில் வெளிப்படுகிறது. ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை மற்றொரு பண்டத்தின் பயன் மதிப்பின் மூலமாக எடுத்துரைக்கும் பொழுது அது சமமதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உதாரணமாக, ஒரு கஜம் லினன் துணி இரண்டு பவுண்டுகள் காப்பிக் கொட்டைக்குச் சமம் என்று ஒருவர் சொன்னால், லினன் துணியின் பரிவர்த்தனை மதிப்பு காப்பிக் கொட்டையின் பயன் மதிப்பின் மூலமாக எடுத்துரைக்கப்படுகிறது; மேலும் இந்தப் பயன் மதிப்பின் திட்டவட்டமான அளவில் அது எடுத்

துரைக்கப்படுகிறது. இந்த அளவு விகிதம் கொடுக்கப்பட்டு விட்டால் எந்த அளவு லினன் துணியின் மதிப்பையும் காப்பிக் கொட்டையின் மூலமாக எடுத்துக் கூறலாம். ஒரு பண்டத்தின், அதாவது லினன் துணியின் பரிவர்த்தனை மதிப்பு ஒரு குறிப்பிட்ட பண்டம், அதாவது காப்பிக் கொட்டை அதன் சமமதிப்புடையதாகும் பொழுது அந்த அளவு விகிதம் எதையும் விட்டுவிடாமல் எடுத்துக் கூறவில்லை என்பது தெளிவு. ஒரு கஜம் லினன் துணியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் அளவு அதே சமயத்தில் மற்ற எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளின் வரம்பு கடந்த வேறுபட்ட அளவுகளில் இருக்கிறது. எந்த ஒரு பண்டத்தின் பயன் மதிப்பும் உழைப்பு நேரத்தின் ஒரே அளவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற அளவு விகிதத்தில் எடுத்துக் கொண்டால் அது ஒரு கஜம் லினன் துணிக்குச் சமமதிப்புடையதாக இருக்கிறது. எனவே இந்தக் குறிப்பிட்ட பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை அதற்குச் சமமதிப்புடையதாக இருக்கிற மற்ற எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளின் சமன்பாடுகளின் முடிவில்லாத எண்ணிக்கையினால் மட்டுமே முழு நிறைவாகச் சொல்ல முடியும். இந்த சமன்பாடுகளின் கூட்டுத் தொகை அல்லது ஒரு பண்டம் வேறு எந்தப் பண்டத்துக்கும் பரிவர்த்தனை செய்யப்படக் கூடிய வெவ்வேறு அளவு விகிதங்களின் மொத்தத் தொகையே எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பை, முழு நிறைவாக எடுத்துச் சொல்லக் கூடிய ஒரே எண்ணாகும். கீழ்க்கண்ட தொடர் சமன்பாடுகளை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்:

1 கஜம் லினன் துணி $=\frac{1}{2}$ பவுண்ட் தேயிலை
1 கஜம் லினன் துணி $=2$ பவுண்ட் காப்பிக் கொட்டை
1 கஜம் லினன் துணி $=8$ பவுண்ட் ரொட்டி
1 கஜம் லினன் துணி $=6$ கஜம் காலிக்கோ துணி.

இவற்றைக் கீழ்க்கண்டபடி அமைத்துக் கொள்ளலாம்:

1 கஜம் லினன் துணி $=\frac{1}{8}$ பவுண்ட் தேயிலை $+\frac{1}{2}$ பவுண்ட் காப்பிக் கொட்டை $+2$ பவுண்ட் ரொட்டி $+1\frac{1}{2}$ கஜம் காலிக்கோ துணி.

ஒரு கஜம் லினன் துணியின் மதிப்பை முழு நிறைவாக எடுத்துக் காட்டக் கூடிய எல்லா சமன்பாடுகளும் நம்மிடம் இருந்தால், அதன் பரிவர்த்தனை மதிப்பை ஒரு தொடர் வரிசை வடிவத்தில் நாம் குறிப்பிடலாம். இது உண்மையில் முடிவே இல்லாத தொடர் வரிசையாகும். ஏனென்றால் பண்டங்களின் வரிசை அணி ஒரு முடிவுக்குக் கொண்டுவர இயலாத விதத்தில் தொடர்ந்து பெருகிக்கொண்டே செல்கிறது. ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு மற்ற எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளினால் கணக்கிடப்படுவதால், இதற்கு மாறாக மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளும் அவற்றைக் கொண்டு கணக்கிடப்பட்ட ஒரு பண்டத்தின் பயன் மதிப்பைக் கொண்டு கணக்கிடப்படுகின்றன.* ஒரு கஜம் லினன் துணியின் பரிவர்த்தனை மதிப்பை $^1/_2$ பவுண்ட் தேயிலை அல்லது 2 பவுண்ட் காப்பிக் கொட்டை அல்லது 6 கஜம் காலிக்கோ துணி அல்லது 8 பவுண்ட் ரொட்டி முதலியவற்றின் மூலமாக எடுத்துரைக்க முடியுமானால், காப்பிக் கொட்டை, தேயிலை, காலிக்கோ துணி, ரொட்டி முதலியவை லினன் துணிக்கு எந்த சதவிகிதத்தில் சமமாக இருக்கின்றனவோ அதே அளவில் அவை ஒன்றுக்கொன்று சமமாக இருக்க வேண்டும். எனவே லினன் துணி என்ற மூன்றாவது அளவு அவற்றின் பயன் மதிப்பின் பொது அளவாகப் பயன்படுகிறது. ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரமாக, அதாவது எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் திட்டவட்டமான அளவாகக் கருதப்படும் பொழுது மற்ற எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளின் திட்டவட்டமான அளவுகளின் மூலமாக ஒன்றுக்குப் பின் ஒன்றாக அளக்கப்படுகிறது; இதற்கு மறு பக்கத்தில் மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளும் இந்தத் தனியான பண்டத்தின் பயன் மதிப்பின் மூலமாக

---

* "அளவுகள் மூலமாக எதை அளக்கிறோமோ அவற்றோடு உறவு அமைத்துக் கொள்வது அளவுகளின் மற்றொரு விசேஷ அம்சமாகும். ஒரு குறிப்பிட்ட வகையில் அளவிடப்படும் பொருளானது அளவிடும் அலகின் அளவாக மாறுகிறது." Montanari, *Della Moneta*, p. 41, in Custodi, vol. 3, *Parte Antica*.

அளக்கப்படுகின்றன. ஆனால் பரிவர்த்தனை மதிப்புக்கு உரிய தாக கவனிக்கப்படும் பண்டம் ஒரு பக்கத்தில் மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளுக்கும் பொது அளவு கோலாகப் பயன்படுகிற தனியான பண்டமாக இருக்கிறது; மறு பக்கத்தில் ஏதாவதொரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை நேரடியாக எடுத்துரைக்கின்ற பல பண்டங்களின் தொடர் வரிசையில் அதுவும் ஒரு பண்டம் மட்டுமே என்பதாக இருக்கிறது.

வெவ்வேறு பண்டங்களின் வகையில் இன்றுள்ள எண்ணிக்கை ஒரு பண்டத்தின் மதிப்பை பாதிப்பது இல்லை. அதன் பரிவர்த்தனை மதிப்பைப் பெறுகின்ற சமன்பாடுகளின் தொடர்வரிசை நீளமானதா அல்லது குறைவானதா என்பது வெவ்வேறு பண்டங்களின் வகை அதிகமானதா அல்லது குறைவானதா என்பதைப் பொறுத்ததாகும். உதாரணமாக, காப்பிக் கொட்டையின் மதிப்பை எடுத்துரைக்கின்ற சமன்பாடுகளின் தொடர் வரிசை அதன் பரிவர்த்தனையின் அளவு எல்லையை, பரிவர்த்தனை மதிப்பு என்ற முறையில் எந்த எல்லைக்குள் இயங்குகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு நேரத்தின் புறநிலை வெளிப்பாடு என்ற முறையில் பயன் மதிப்புகளின் முடிவில்லாத வேற்றுமையில் தன்னுடைய சமமதிப்பின் பொருத்தமான வெளிப்பாட்டைப் பெறுகிறது.

ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு அதில் நேரடியாக அடங்கியிருக்கின்ற உழைப்பு நேரத்தின் அளவைப் பொறுத்து மாறுபடுகிறது என்பதை முந்திய பகுதியில் பார்த்தோம். அதன் பெறப்பட்ட பரிவர்த்தனை மதிப்பு, அதாவது மற்ற பண்டங்களின் பயன் மதிப்புகளில் எடுத்துரைக்கப்பட்ட அதன் பரிவர்த்தனை மதிப்பும் மற்ற எல்லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்யச் செலவழிக்கப்பட்ட உழைப்பு நேரம் எந்த அளவுக்கு வேறுபடுகிறது என்பதைப் பொறுத்ததாகும். உதாரணமாக, ஒரு புஷல் கோதுமையை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படுகிற உழைப்பு நேரம் மாறா நிலையில் இருக்கும் பொழுது, மற்ற எல்லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் இரண்டு மடங்காக அதிகரிக்குமானால், ஒரு புஷல் கோதுமை

யின் பரிவர்த்தனை மதிப்பு—அதன் சமமதிப்புகளின் மூல மாகப் பார்க்கும் பொழுது—பாதியாகக் குறைந்துவிடும். ஒரு புஷல் கோதுமையை உற்பத்தி செய்வதற்குத் தேவை யான உழைப்பு நேரம் பாதியாகக் குறைந்து, மற்ற எல்லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் மாறுதபடி இருந்தால் என்ன முடிவு வருமோ அது இப்பொழுது ஏற்படும். பண்டங்களின் மதிப்பு, ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பு நேரத்தில் அந்தப் பண்டம் எந்த அளவுக்கு உற்பத்தி செய்யப்பட முடியும் என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தப் பொருத்த அளவை எப்படிப்பட்ட மாற்றங்கள் பாதிக்கக் கூடும் என்பதை ஆராய்வதற்கு A, B என்ற இரண்டு பண்டங்களை எடுத்துக் கொள்வோம். முதலாவது, B என்ற பொருளை உற்பத்தி செய் வதற்குத் தேவையான உழைப்பு நேரம் மாறவில்லை என்று வைத்துக் கொள்வோம். இந்த உதாரணத்தில் B மூல மாகச் சொல்லப்படும் Aயின் பரிவர்த்தனை மதிப்பு A என்ற பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் குறைவதற்கும் அல்லது அதிகரிப்பதற்கும் நேரடிப் பொருத்தத்தில் குறைகிறது அல்லது அதிகரிக்கிறது. இரண் டாவது, A என்ற பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் மாறவில்லை என்று வைத்துக் கொள்வோம். Bயின் மூலமாகச் சொல்லப்படும் Aயின் பரிவர்த்தனை மதிப்பு Bயை உற்பத்தி செய்வதற்குத் தேவை யான உழைப்பு நேரம் குறைவதற்கும் அல்லது அதிகரிப்பதற் கும் எதிரிடையான பொருத்தத்தில் குறைகிறது அல்லது அதிகரிக்கிறது. மூன்றாவது, A மற்றும் Bயை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் ஒரே விகிதத் தில் குறையும் அல்லது அதிகரிக்கும் என்று வைத்துக் கொள் வோம். A என்ற பண்டத்தின் மதிப்பை Bயின் மூலமாக எடுத் துரைக்கின்ற சமன்பாடு இந்த உதாரணத்தில் மாறுதபடி இருக்கும். ஏதாவதொரு காரணத்தினால் எல்லா வகையான உழைப்பின் உற்பத்தித் திறனும் சம அளவுக்குக் குறையு மானால் எல்லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்கு ஒரே அளவு விகிதத்தில் கூடுதல் உழைப்பை அவசியமாக்கு கின்ற பொழுது, எல்லாப் பண்டங்களின் மதிப்பும் அதி கரிக்கும்; அவற்றின் பரிவர்த்தனை மதிப்பின் சரியான வெளி

யீடு மாறுதபடி இருக்கும்; ஒரே அளவிலிருக்கும் பயன் மதிப்புகளை உற்பத்தி செய்வதற்கு இன்னும் அதிக உழைப்பு நேரம் தேவைப்படுமாதலால் சமூகத்தின் உண்மையான செல்வம் குறைந்துவிடும். நான்காவது, A, B இரண்டையும் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பு நேரம் ஒன்றுக்கொன்று சமமாக இல்லாத அளவில் அதிகரிக்கும் அல்லது குறையும் என்று வைத்துக் கொள்வோம். அல்லது Aஐ உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் அதிகரிப்பதாகவும் Bயின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நேரம் குறைந்துவிடுவதாகவும் அல்லது இதற்கு எதிர்மாறாக நடைபெறுவதாகவும் வைத்துக் கொள்வோம். ஒரு பண்டத்தின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நேரம் மாறுதபடியும், அடுத்த பண்டத்தின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நேரம் அதிகரிப்பது அல்லது குறைவது என்ற நிலைக்கு இந்த உதாரணங்கள் எல்லாவற்றையும் சாதாரணமாக வகைப்படுத்த முடியும்.

ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை, ஏதாவதொரு பண்டத்தின் பயன் மதிப்பின் மூலமாக எடுத்துக் கூறும் பொழுது, அந்தப் பயன் மதிப்பின் மொத்த அளவுகளிலோ அல்லது பின்னங்களிலோ சொல்லலாம். ஒவ்வொரு பண்டத்திலும் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தைப் பிரிப்பதைப் போல அதன் பரிவர்த்தனை மதிப்பையும் சுலபமாகவே பிரிக்க முடியும். பண்டங்களின் சமமதிப்பு என்பது அவற்றின் பயன் மதிப்புகளை ஸ்தூலமாகப் பிரிப்பதிலிருந்து எப்படி சுயேச்சையானதாக இருக்கிறதோ அது போல பண்டங்களின் பயன் மதிப்புகள் தாங்கள் ஒரு புதிய பண்டமாக மாற்றமடைகிற பொழுது ஏற்படும் மாற்றங்களினால் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளின் கூட்டுத் தொகை பாதிக்கப்படாமலிருக்கின்றது.

இது வரை பண்டத்தின் இரண்டு அம்சங்களை—பயன் மதிப்பையும் பரிவர்த்தனை மதிப்பையும்—ஆராய்ந்தோம்; ஆனால் ஒவ்வொன்றையும் தனியாகவே ஆராய்ந்தோம். எனினும் ஒரு பண்டமானது பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு ஆகியவற்றின் நேரடியான கூட்டொருமையாகும்; அதே சமயத்தில் மற்ற பண்டங்களோடு ஒப்புமை நிலையில்தான் அது ஒரு பண்டமாகும். பண்டங்களின் பரிவர்த்தனை நிகழ்வுதான்

அவற்றுக்கு இடையே இருக்கின்ற உண்மையான உறவாகும். இது தனி நபர்கள் ஒருவரோடொருவர் சம்பந்தமில்லாமல் நடத்திச் செல்லும் சமூக நிகழ்வாகும்; ஆனால் பண்டங்களின் உடைமையாளர்கள் என்ற முறையில்தான் அவர்கள் அதில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்; அவர்களுடைய பண்டங்கள் வாழ்ந்திருக்கும் அளவுக்குத்தான் அவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்ந்திருக்கிறார்கள்; எனவே அவர்கள் உண்மையிலேயே பரிவர்த்தனை நிகழ்வின் உணர்வுபூர்வமான பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

பண்டம் என்பது ஒரு பயன் மதிப்பு ஆகும். உதாரணம் கோதுமை, லினன் துணி, வைரம், இயந்திரம் முதலியவை. ஆனால் அதே சமயத்தில் பண்டம் என்ற முறையில் அது ஒரு பயன் மதிப்பு அல்ல. அதன் உடைமையாளருக்கு அது ஒரு பயன் மதிப்பாக, அதாவது அவருடைய சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நேரடியான சாதனமாக இருக்குமானால், இது ஒரு பண்டமாக இருக்கவியலாது. அதன் உடைமையாளருக்கு, இதற்கு மாறான வகையில், அது ஒரு பயன் மதிப்பு அற்றதாக இருக்கிறது—அதாவது, பரிவர்த்தனை மதிப்பைச் சேமித்துக் கொண்டுள்ள சடப் பொருளாக மட்டுமே அல்லது பரிவர்த்தனைச் சாதனமாக மட்டுமே இருக்கிறது. பரிவர்த்தனை மதிப்பைச் சுறுசுறுப்பாகக் கொண்டு போகக் கூடியது என்ற முறையில் பயன் மதிப்பு பரிவர்த்தனைச் சாதனமாக இருக்கிறது. பண்டம் பரிவர்த்தனை மதிப்பைக் கொண்டிருக்கிற அளவில் மட்டுமே அதன் உடைமையாளருக்குப் பயன் மதிப்பாக இருக்கிறது.* எனவே பண்டம் இனிமேல்தான் பயன் மதிப்பாக மாற வேண்டும்; முதலாவதாக மற்றவர்களுக்குப் பயன் மதிப்பாக மாற வேண்டும். அதன் உடைமையாளருக்கு அது பயன் மதிப்பாக இல்லாதபடியால், மற்ற பண்டங்களின் உடைமையாளர்களுக்கு அது பயன் மதிப்பாக மாற வேண்டும். இப்படி நடக்காவிட்டால் அதற்குச் செலவழிக்கப்பட்ட உழைப்பு வீணான உழைப்பாகும்; அதனால் அது

* அரிஸ்டாட்டில் இந்த அர்த்தத்தில்தான் பரிவர்த்தனை மதிப்பைப் பற்றிப் பேசுகிறார் (இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் மேற்கோள் காட்டப்பட்ட பகுதியைப் பார்க்கவும்).

பண்டமல்ல என்பது முடிவாகிறது. இதற்கு மாருக, ஒரு பண்டம் அதன் உடைமையாளருக்குப் பயன் மதிப்பாக மாற வேண்டும். ஏனென்ருல் அவருடைய பிழைப்புச் சாதனங்கள் இப்பண்டத்திற்கு வெளியே இருக்கின்றன, அதாவது மற்றவர்களின் பண்டங்களின் பயன் மதிப்புகளில் இருக்கின்றன. பயன் மதிப்பாக மாறுவதற்கு அந்தப் பண்டம் தான் பூர்த்தி செய்யக் கூடிய குறிப்பிட்ட தேவையை சந்திக்க வேண்டும். எனவே பண்டங்களின் பயன் மதிப்புகள் பரஸ்பரம் தங்களுடைய இடங்களை மாற்றிக் கொண்டு பயன் மதிப்புகளாக மாறுகின்றன; அவற்றைப் பரிவர்த்தனைச் சாதனங்களாக வைத்திருப்பவர்களின் கைகளிலிருந்து தாங்கள் நுகர்வுப் பொருள்களாகப் பயன்படக் கூடியவர்களின் கைகளுக்கு அவை போய்ச் சேருகின்றன. எனவே பண்டங்களுடைய இப்படிப்பட்ட எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதலின் விளைவாக மட்டுமே அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பு பயனுள்ள உழைப்பாக மாறுகிறது. பண்டங்கள் பயன் மதிப்புகள் என்ற முறையில் ஏற்படுகிற பரஸ்பர உறவுகளின் போக்கில் ஒரு புதிய பொருளாதார வடிவத்தைப் பெறுவதில்லை. இதற்கு மாருக, அவற்றைப் பண்டங்கள் என்று பிரித்துக் காட்டிய பிரத்யேகமான வடிவம் மறைந்து விடுகிறது. உதாரணமாக, ரொட்டி தயாரிப்பவரிடமிருந்து நுகர்வோருக்கு வந்து சேரும் பொழுது ரொட்டி அதனுடைய தன்மையை மாற்றிக் கொள்வதில்லை. நுகர்வோர் அதை ஒரு பயன் மதிப்பாக, குறிப்பிட்ட உணவு வகையாகப் பார்க்கிருர் என்றே கூற வேண்டும். ஆனுல் ரொட்டி தயாரிப்பவருடைய கைகளில் இருந்த வரை அது ஒரு பொருளாதார உறவின் பிரதிநிதியாக, ஒரே சமயத்தில் ஸ்தூலமான பொருளாகவும் சூக்குமமான பொருளாகவும் இருந்தது. எனவே பண்டங்கள் பயன் மதிப்புகளாக மாற்றமடையும் நிகழ்வில் அவை, தங்களுடைய உடைமையாளருக்குப் பயன் மதிப்பு அற்றவையாகவும், உடைமை இல்லாதவர்களுக்குப் பயன் மதிப்புக் கொண்டவையாகவும் இருந்த சம்பிரதாயமான வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றன. இந்த ஒரு மாற்றத்துக்கு மட்டுமே அவை ஆளாகின்றன. பயன் மதிப்புகளாவதற்குப் பண்டங்கள் முற்றிலும் அந்நியமாகிவிட வேண்டும்; அவை பரிவர்த்தனை நிகழ்

வில் ஈடுபட வேண்டும்; எனினும் பரிவர்த்தனை அவற்றின் பரிவர்த்தனை மதிப்புகள் என்ற அம்சத்தோடு மட்டுமே சம்பந்தப்பட்டிருக்கிறது. எனவே அவற்றின் பரிவர்த்தனை மதிப்புகள் நிறைவேறுகிற பொழுது மட்டுமே பயன் மதிப்புகளைப் பெற முடியும்.

பயன் மதிப்பு என்ற அடிப்படையில் தனிப் பண்டம் ஏதோ சுயேச்சையான ஒன்றாக ஆரம்ப காலத்தில் கருதப் பட்டது; பரிவர்த்தனை மதிப்பு என்ற அடிப்படையில் மற்ற எல்லாப் பண்டங்களுக்கும் அதற்கும் உள்ள உறவே ஆரம் பத்திலிருந்து கவனிக்கப்பட்டது. ஆனால் இது கோட்பாட்டு ரீதியான, கற்பனையான உறவு மட்டுமே. பரிவர்த்தனை நடைபெறும் பொழுதுதான் இது மெய்யாகிறது. இதற்கு மாறாக, ஒரு பண்டத்தின் உற்பத்தியில் திட்டவட்டமான உழைப்பு நேரம் செலவழிக்கப்பட்டிருக்கும் அளவுக்கு அது ஒரு பரிவர்த்தனை மதிப்பாக விளங்குகிறது; அதன் மூலம் பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனினும் ஒரு பண்டம் உருப்பெறுகிற பொழுது ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த பொருண்மைப் படுத்தப்பட்ட தனி நபர் உழைப்பு நேரத்தைக் கொண்டிருக் கிறதே தவிர எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தை அல்ல. எனவே பண்டம் உடனே பரிவர்த்தனை மதிப்பை அடைவதில்லை; இனிமேல்தான் பரிவர்த்தனை மதிப்பாக மாற வேண்டும். ஆரம்பத்தில் அது உழைப்பு நேரம் உபயோகமுள்ள வகையில் பயன்படுத்தப்படுதலே, அதாவது பயன் மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொழுது மட்டுமே எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தைப் பொருண்மைப் படுத்துவதாகும். இத்தகைய பொருளாயத நிலைமையின் கீழ் மட்டுமே பண்டங்களில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரம் எக்காலத்துக்கும் உரிய, சமூக உழைப்பு நேரமாகக் கருதப் படும். எனவே ஒரு பண்டம் பரிவர்த்தனை மதிப்பைப் பெற்ற பிறகுதான் பயன் மதிப்பாக மாற முடியும். அது அந்நியமாகிய பிறகு பயன் மதிப்பாகச் செயலாற்றிய பிறகுதான் அது பரிவர்த்தனை மதிப்பைப் பெற முடியும். ஒரு பண்டம் பயன் மதிப்பு என்ற முறையில் அந்நியமாவது, எந்த நபருக்கு அதனால் பயன் மதிப்பு, அதாவது குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கிற பொருள் என்பதாக இருக்கிறதோ,

அவருக்கு மட்டுமே முடியும். இதற்கு மாறாக, மற்றொரு பண்டத்துக்குப் பரிவர்த்தனையாகத்தான் அது அந்நியமாக முடியும். அல்லது இந்த விஷயத்தை, அந்த மற்றொரு பண்டத்தின் உடைமையாளரின் கருத்து நிலையிலிருந்து சிந்தித்தால் அவர் தன்னுடைய பண்டம் எந்தக் குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமோ அதனோடு தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம் அவரும் தன்னுடைய பண்டத்தை அந்நியமாக்க முடியும், அதாவது கைவரப் பெறலாம். பண்டங்கள் **பயன் மதிப்புகள்** என்ற வகையில் எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதலுக்கு உட்படும் பொழுது அவை சடஅமைப்பில் வேறுபட்ட தனியான பண்டங்கள் என்ற வகையிலும் அவற்றின் பிரத்யேகமான பொருள்கள் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவை என்ற முறையிலும் அவை மற்றவற்றோடு உறவு நிலையில் கொண்டுவரப் படுகின்றன. ஆனால் வெறும் பயன் மதிப்புகள் என்ற முறையில் அவை ஒன்றுக்கொன்று சுயேச்சையானவையாக அல்லது எந்தத் தொடர்பும் இல்லாதவையாக இருக்கின்றன. குறிப்பிட்ட தேவைகளுக்கு மட்டுமே அவற்றைப் பயன் மதிப்புகள் என்ற வகையில் பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும். எனினும் சமமதிப்புடையவை என்ற முறையில்தான் அவற்றைப் பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும். பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பு நேரத்தின் சம அளவுகள் என்ற முறையில்தான் அவை சமமதிப்பாகின்றன. அப்பொழுது அவற்றின் பௌதிகப் பொருள்கள் பயன் மதிப்புகளாகின்றன. எனவே குறிப்பிட்ட தேவைகளுக்கும் இந்தப் பண்டங்களுக்கும் உள்ள உறவுகள் முழுமையாக ஒதுக்கப் படுகின்றன. ஒரு பண்டம் வேறு ஏதாவதொரு பண்டத்தின் குறிப்பிட்ட அளவின் இடத்தைச் சுலபமாகப் பெற முடியுமானால்—அந்த மற்றொரு பண்டத்தின் உடைமையாளருக்கு அது பயன் மதிப்பாக இருக்கிறதா இல்லையா என்பதற்குச் சம்பந்தமில்லாமல்—அது பரிவர்த்தனை மதிப்பாக இயங்க முடியும். ஆனால் மற்றொரு பண்டத்தின் உடைமையாளருக்கு அது பயன் மதிப்புக் கொண்டிருக்கும் அளவிலே தான் அது பண்டமாக மாற முடியும். அது தற்பொழுது இருக்கக் கூடிய உடைமையாளரின் கைகளில், அது பரிவர்த்தனை மதிப்பைப் பெறுவது இன்னொரு உடைமையாளருக்கு அது பண்டமாக இருக்கின்ற அளவைப் பொறுத்திருக்கிறது.

எனவே ஒரே விதமான உறவு அதே சமயத்தில் தனி அளவில் மட்டுமே வேறுபட்டு அடிப்படையில் சமமான பண்டங்களின் உறவாக வேண்டும். அதாவது, இந்த உறவு எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் பொருண்மையாக்கம் என்ற வகையில் அவற்றின் சமத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அதே சமயத்தில் அவை குண ரீதியில் வெவ்வேறு பொருள்கள் என்ற உறவு, குறிப்பிட்ட தேவைகளுக்கான குறிப்பிட்ட பயன் மதிப்புகள், சுருக்கமாகச் சொல்வதென்றால் உண்மையில் பயன் மதிப்புகள் என்ற வகையில் அவற்றை வேறுபடுத்துகின்ற உறவாகவும் இருக்க வேண்டும். ஆனால் இங்கே நிலைப்படுத்தும் சமத்துவமும் சமத்துவமின்மையும் பரஸ்பரம் விலகி நிற்பவையாகும். இதனுடைய விளைவு ஒரு பிரச்சினையின் முடிவுக்கு மற்றொரு பிரச்சினையின் முடிவு முற்கோளாகவிருப்பதனால் பிரச்சினைகளின் நச்சுச் சுழல் ஏற்படுவது மட்டுமல்லாமல், ஒரு நிபந்தனையை நிறைவேற்றுவது என்றால் அதற்கு எதிரிடையான நிபந்தனையும் நிறைவேற்றப்படுவதை நேரடியாகச் சார்ந்துள்ள மாறுபட்ட முதல் நிலைகளின் மொத்தத் திரளையும் ஏற்படுத்துகிறது.

பரிவர்த்தனை நிகழ்வு இந்த முரண்பாடுகளின் பரிணாமத்தையும் அவற்றின் தீர்வையும் கொண்டதாக இருக்க வேண்டும். எனினும் இந்தச் சாதாரண வடிவத்தில் அதைப் பரிவர்த்தனை நிகழ்வில் காட்ட முடியாது. பண்டங்கள் பயன் மதிப்புகள் என்ற வகையில் தங்களுக்குள் ஒன்றோடொன்று எப்படி உறவு கொண்டிருக்கின்றன, அதாவது பரிவர்த்தனை நிகழ்வின் உள்ளே பண்டங்கள் பயன் மதிப்புகளாக எப்படி இயங்குகின்றன என்பதை மட்டுமே நாம் எடுத்துக் கூறியிருந்தோம். இதற்கு மாறாக, பரிவர்த்தனை மதிப்பு என்பது இது வரை நாம் பார்த்த அளவில் நமது கருத்தாக்கம் என்பதாகத்தான் இருந்திருக்கிறது, அல்லது தனிப்பட்ட பண்ட உடைமையாளரின் கருத்தாக்கமாக இருந்திருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். அவர் பண்டத்தைத் தமது கடையில் பயன் மதிப்பாக வைத்திருக்கிறார்; தம் மனதில் அதைப் பரிவர்த்தனை மதிப்பாக நினைத்துக் கொள்கிறார். எனினும் பரிவர்த்தனை நிகழ்வில் பண்டங்கள் ஒன்றுக்கொன்று பயன் மதிப்புகளாக மட்டுமல்லாமல் பரிவர்த்தனை மதிப்புகளாகவும் இருக்க வேண்டும். அவற்றின்

வாழ்க்கையின் இந்த அம்சம் அவற்றின் சொந்தமான பரஸ்பர உறவு போலத் தோன்ற வேண்டும். முதலில் நமக்கு ஏற்பட்ட சிக்கல் என்னவென்றால், பண்டம் பரிவர்த்தனை மதிப்பாக, பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பாக இயங்குவதற்கு முன்பாக, பயன் மதிப்பு என்ற முறையில் அதை அந்நியப்படுத்தி முடித்துக் கொடுத்துவிட வேண்டும். இதற்கு மாறாக, பயன் மதிப்பாக அதை அந்நியப்படுத்துதல், அதற்கு ஒரு பரிவர்த்தனை மதிப்பு இருப்பதை முற்கருதுகோளாகக் கொள்கிறது. அந்தப் பண்டம் தன்னுடைய குறிப்பிட்ட பயன் மதிப்பை இழந்து விட்டது, அதன் மூலம் ஒரு தனி நபர் தனக்காகச் செய்த குறிப்பிட்ட உழைப்பு என்பது இல்லாமல் சமூகத்துக்குப் பயனுள்ள உழைப்பு என்ற பொருளாயத நிபந்தனையைப் பூர்த்தி செய்கிறது என்று வைத்துக் கொள்வதன் மூலம் இந்தச் சிக்கலைத் தீர்த்து விட்டதாக வைத்துக் கொள்வோம். பரிவர்த்தனை நிகழ்வின் போது, பரிவர்த்தனை மதிப்பு என்ற முறையில் பண்டம் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாக, மற்ற எல்லாப் பண்டங்களுக்கும் பொருண்மைப்படுத்தப்பட்ட பொது உழைப்பு நேரமாக மாற வேண்டும். எனவே ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பு என்ற குறுகிய பாத்திரத்தை அது இனிமேல் வகிப்பதில்லை; எல்லாப் பயன் மதிப்புகளோடும் அவற்றின் சம மதிப்புகளாக நேரடியாகப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு அது தகுதி உடையதாகிறது. எனினும் ஒவ்வொரு பண்டமும் அதன் குறிப்பிட்ட பயன் மதிப்பு அந்நியப்படுத்தப்படுதலின் விளைவாக, எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் நேரடியான பொருண்மையாகத் தோன்றினால் தான் பண்டமாக ஆகும். ஆனால் இதற்கு மாறாக, அந்தக் குறிப்பிட்ட பண்டங்கள், தனிவகையில் தனி நபர்களின் உழைப்பைக் கொண்டிருக்கிற குறிப்பிட்ட பயன் மதிப்புகள் மட்டுமே பரிவர்த்தனை நிகழ்வின் போது ஒன்றுக்கொன்று எதிர்நிலையில் இருக்கின்றன. எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரம் என்பது கருத்தாக்கமே. எனவே அந்த அளவில் பண்டங்களுக்கு அது கிடையாது.

உதாரணமாக, ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை ஸ்தூலமான முறையில் எடுத்துச் சொல்லக் கூடிய சமன்பாடுகளின் வரிசையை இங்கே கவனிப்போம்:

1 கஜம் லினன் துணி=2 பவுண்ட் காப்பிக் கொட்டை
1 கஜம் லினன் துணி=$^1/_2$ பவுண்ட் தேயிலை
1 கஜம் லினன் துணி=8 பவுண்ட் ரொட்டி, இதரவை.

ஒரு கஜம் லினன் துணி, இரண்டு பவுண்ட் காப்பிக் கொட்டை, $^1/_2$ பவுண்ட் தேயிலை ஆகியவற்றில் எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு நேரத்தின் சம அளவுகள் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மட்டுமே இந்த சமன்பாடுகள் குறிக்கின்றன என்பது தெளிவாகும். ஆனால் இங்கே குறிப்பிட்ட பயன் மதிப்புகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற வெவ்வேறு வகையான தனி நபர் உழைப்பு அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் ஏற்ற அளவுகளில் ஒன்றுக்கொன்று உண்மையாகவே பரிவர்த்தனை செய்யப்படும் பொழுதுதான், நடைமுறையில் பொதுவான உழைப்பாக மாறுகிறது; இந்த வழியின் மூலமாக சமூக உழைப்பாக மாறுகிறது. சமூக உழைப்பு நேரம் இந்தப் பண்டங்களில் மறைவான நிலையில் இருக்கிறது என்று கூறலாம்; அவை பரிவர்த்தனை செய்யப்படும் பொழுதுதான் அது வெளியே தென்படுகிறது. இங்கே வித்தியாசப்படுகிற இடம் சமூக உழைப்பாகக் கருதப்படுகிற தனி நபர்கள் உழைப்பு அல்ல. அதற்கு மாறாக, தனி வகையிலிருக்கும் தனி நபர்களின் உழைப்பின் குறிப்பிட்ட வகைகளாகும், அதாவது பரிவர்த்தனை நிகழ்வில் தன்னுடைய மூலத் தன்மையை அழித்துக் கொள்வதன் மூலமாகவே அது எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு என்று காட்டுகின்ற உழைப்பாகும். எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு என்பது முன்னரே தயாரித்து வைக்கப்பட்ட முன்தேவை அல்ல; அது தோன்ற வேண்டிய பலனாகும். இங்கே ஒரு புது வகையான சிக்கல் ஏற்படுகிறது: ஒரு பக்கத்தில், பண்டங்கள் பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரமாகவே பரிவர்த்தனை நிகழ்வுக்கு உட்பட வேண்டும்; மறு பக்கத்தில், தனி நபர்களின் உழைப்பு நேரம் பரிவர்த்தனை நிகழ்வின் விளைவாகத்தான் பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரமாக மாறும்.

ஒரு பண்டத்தின் பயன் மதிப்பு, அதாவது அதனுடைய

வாழ்க்கையின் மூல வடிவம் அந்நியமாதலின் மூலமாகவே ஒவ்வொரு பண்டமும் பரிவர்த்தனை மதிப்பு என்ற அதற்கிணையான வாழ்க்கையைப் பெறுகிறது. எனவே பரிவர்த்தனை நிகழ்வின் போது ஒரு பண்டம் இரட்டை வடிவ வாழ்க்கையைப் பெற வேண்டும். இதற்கு மாறாக, பரிவர்த்தனை மதிப்பு என்ற அதனுடைய வாழ்க்கையின் இரண்டாவது வடிவம் மற்றொரு பண்டத்தினால்தான் பிரதிநிதித்துவப் படுத்தப்பட முடியும். ஏனென்றால் பரிவர்த்தனை நிகழ்வின் போது பண்டங்கள் மட்டுமே ஒன்றுக்கொன்று எதிர்நிலையில் இருக்க முடியும். ஒரு குறிப்பிட்ட பண்டத்தை நேரடியாகவே பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரமாகக் காட்டுவது எப்படி? அல்லது—இதையே வேறு விதமாகவும் சொல்லலாம்—ஒரு குறிப்பிட்ட பண்டத்தில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கும் தனி நபர் உழைப்பு நேரம் நேரடியாகவே எக்காலத்துக்கும் உரிய தன்மையைப் பெறுவது எப்படி? ஒரு பண்டத்தின், அதாவது எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாகக் கருதப்படும் ஏதாவதொரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பிற்கு ஸ்தூலமான வகையில் பின்வரும் முடிவில்லாத சமன்பாடுகளின் தொடர் வரிசையைக் கொண்டு எடுத்துரைக்கலாம். உதாரணமாக,

1 கஜம் லினன் துணி=2 பவுண்ட் காப்பிக் கொட்டை
1 கஜம் லினன் துணி=$^1/_2$ பவுண்ட் தேயிலை
1 கஜம் லினன் துணி=8 பவுண்ட் ரொட்டி
1 கஜம் லினன் துணி=6 கஜம் காலிக்கோ துணி
1 கஜம் லினன் துணி=இதரவை.

இது கோட்பாட்டளவிலுள்ள கருத்துரையே, ஏனென்றால் பண்டம் என்பது பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் குறிப்பிட்ட அளவாக மட்டுமே கருதப்படுகிறது. மேலே தரப்பட்டிருக்கும் சமன்பாடுகளின் தொடர் வரிசையைச் சாதாரணமாகத் திருப்பிப் போட்டால் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையது என்ற நிலையிலுள்ள ஒரு குறிப்பிட்ட பண்டமானது பரிசுத்தமான கருத்தாக்கம் என்பதிலிருந்து பரிவர்த்தனை நிகழ்வின் போது ஏற்படும் சமூக விளைவாக மாற்றப்படுகிறது. உதாரணமாக,

2 பவுண்ட் காப்பிக் கொட்டை=1 கஜம் லினன் துணி
$^1/_2$ பவுண்ட் தேயிலை=1 கஜம் லினன் துணி
8 பவுண்ட் ரொட்டி=1 கஜம் லினன் துணி
6 கஜம் காலிக்கோ துணி=1 கஜம் லினன் துணி.

காப்பிக் கொட்டை, தேயிலை, ரொட்டி, காலிக்கோ துணி, சுருக்கமாகச் சொல்வதென்றால் எல்லாப் பண்டங்களிலும் அடங்கியிருக்கும் உழைப்பு நேரம் லினன் துணியின் மூலமாக எடுத்துக்கூறப்படுவது போல, இதன் எதிர் நிலையாக லினன் துணியின் பரிவர்த்தனை மதிப்பு அதற்கு சமமதிப்புடையதாக இருக்கின்ற மற்ற எல்லாப் பண்டங்களிலும் பிரதிபலிக்கிறது; லினன் துணியில் பொருண்மைப்படுத்தப் பட்ட உழைப்பு நேரம் நேரடியாக எல்லாக் காலத்துக்கும் உரிய உழைப்பு நேரமாக மாறுகிறது; அது மற்ற எல்லாப் பண்டங்களின் வெவ்வேறு அளவுகளில் சமமாக அடங்கியிருக்கிறது. எனவே மற்ற எல்லாப் பண்டங்களும் லினன் துணியோடு கொண்டிருக்கும் **எல்லாக் காலத்துக்கும் உரிய செயல்பாடு** காரணமாக, லினன் துணி **எல்லாக் காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாக** மாறுகிறது. பரிவர்த்தனை மதிப்பு என்று கவனிக்கப்படும் ஒவ்வொரு பண்டமும் மற்ற எல்லாப் பண்டங்களின் மதிப்பின் அளவாக மாறி விடுகிறது. இதற்கு மாறாக, இந்த உதாரணத்தில், மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் இந்த ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் மூலமாக அளக்கப்படுவதால் விலக்கப் பட்ட பண்டம் எல்லாக் காலத்துக்கும் உரிய சமமதிப்பு என்ற முறையில் பரிவர்த்தனை மதிப்புக்குப் போதுமான பிரதிநிதித்துவமுடையதாகிறது. இதற்கு மாறாக, ஒவ்வொரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பும் எடுத்துரைக்கப்பட்ட முடிவில்லாத தொடர் அல்லது சமன்பாடுகளின் முடிவில்லாத எண்ணிக்கை இப்பொழுது, இரண்டு இனங்களை மட்டுமே கொண்டிருக்கும் ஒரு சமன்பாடாகக் குறைக்கப் படுகிறது. இரண்டு பவுண்ட் காப்பிக் கொட்டை=1 கஜம் லினன் துணி என்ற சமன்பாடு காப்பிக் கொட்டையின் பரிவர்த்தனை மதிப்பை எடுத்துக்கூறுகின்ற முழுமையான சமன் பாடாகிறது. ஏனென்றால் இதன் மூலமாக அது மற்ற எந்தவொரு பண்டத்தின் குறிப்பிட்ட அளவுக்கும் நேரடியான

சமமதிப்புடையதாகத் தோன்றுகிறது. எனவே பரிவர்த்தனை நிகழ்வுக்குள்ளே இருக்கின்ற பண்டங்கள் ஒன்றுக்கொன்று லினன் துணியின் வடிவத்தில் உள்ள பரிவர்த்தனை மதிப்பு களாகத் தோன்றுகின்றன அல்லது ஜீவிக்கின்றன. எல்லாப் பண்டங்களுமே ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை மதிப்பு களாக, அதாவது பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக் கும் உரிய உழைப்பு நேரத்தின் வெவ்வேறு அளவுகள் என்ற முறையில் உறவு கொண்டிருப்பது என்பது எல்லாப் பரி வர்த்தனை மதிப்புகளுமே அதே பொருளின், அதாவது லினன் துணியின் வெவ்வேறு அளவுகளில் பிரதிநிதித்துவப்படுத்தப் படும் வடிவத்தில் இப்பொழுது தோன்றுகின்றன. எக்காலத் துக்கும் உரிய உழைப்பு நேரம் என்பது இப்பொழுது ஒரு தனியான பொருளாக, மற்ற பண்டங்களிலிருந்து வேருகவும் அவற்ருேடு சேர்ந்து கொள்ளும் பண்டமாகவும் தோற்ற மளிக்கிறது. அதே சமயத்தில் ஒரு பண்டம் மற்ருெரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற சமன்பாடு, அதாவது 2 பவுண்ட் காப்பிக் கொட் டை=1 கஜம் லினன் துணி என்பது, இனிமேல்தான் நிறை வேற வேண்டும். பயன் மதிப்பு என்ற வகையில் அது அந்நிய மாகும் பொழுதுதான்--பரிவர்த்தனை நிகழ்வில் அது தன்னை ஒரு தேவையான பொருள் என்று நிரூபிப்பதைப் பொறுத்தே அந்நியமாதல் இருக்கும்—அது காப்பிக் கொட்டை என்ற வடிவத்திலிருந்து லினன் துணியாக உண்மையிலேயே மாற்ற மடைகிறது; எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாக மாறி, மற்ற எல்லாப் பண்டங்களுக்கும் பரிவர்த்தனை மதிப்புகளுக்கு உண்மையிலேயே பிரதிநிதித்துவம் வகிக்கும். இதற்கு மாருக, எல்லாப் பண்டங்களும் பயன் மதிப்பு களாக அந்நியப்படுதலின் விளைவாக அவை லினன் துணியாக மாற்றமடைவதால், லினன் துணி மற்ற எல்லாப் பண்டங் களின் மாற்றப்பட்ட வடிவமாகிறது. இப்படி மற்ற எல்லாப் பண்டங்களும் லினன் துணியாக மாற்றமடைவதன் விளை வாக அது எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் பொருள் வடிவமாக நேரடியாக மாறுகிறது; அதாவது, எல்லாவித மான தனி நபர் உழைப்பையும் அகற்றிய எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதலின் பொருளாக மாறுகிறது. பண்டங் கள் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை மதிப்பைப் பிரதிநிதித்



-5 MAR 1985

துவப்படுத்துவதற்காக இவ்விதம் இரட்டை வடிவத்தைப் பெறும் பொழுது எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாகத் தனியே வைக்கப்பட்டிருக்கும் பண்டம் இரட்டைப் பயன் மதிப்பைப் பெறுகிறது. ஒரு தனிப் பண்டம் என்ற குறிப்பிட்ட பயன் மதிப்பைத் தவிர, அது எக்காலத்துக்கும் உரிய பயன் மதிப்பையும் பெறுகிறது. இரண்டாவதாகச் சொல்லப்படுகிற பயன் மதிப்பு என்பதே ஒரு வரையறுக்கப்பட்ட வடிவமாகும்; அதாவது, பரிவர்த்தனை நிகழ்வின் போது மற்ற பண்டங்கள் அந்தப் பண்டத்தின் மீது ஏற்படுத்துகிற எக்காலத்துக்கும் உரிய செயலின் விளைவாக அது வகிக்கும் தனியான பாத்திரத்திலிருந்து ஏற்படுகிறது. குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கிற பொருள் என்ற முறையில் ஒவ்வொரு பண்டத்தின் பயன் மதிப்பும் வெவ்வேறு நபர்களிடம் வெவ்வேறு மதிப்பைப் பெறுகிறது. உதாரணமாக, அதை விற்கின்ற நபருக்கு ஒரு மதிப்பும் அதை வாங்குகின்ற நபருக்கு வேறு வகையான மதிப்பும் கொண்டிருக்கிறது. எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாகத் தனியே வைக்கப்பட்டிருக்கும் பண்டம் இப்பொழுது பரிவர்த்தனை நிகழ்விலிருந்தே ஏற்படுகின்ற எக்காலத்துக்கும் உரிய தேவையைப் பூர்த்தி செய்கின்ற பொருளாகிறது; பரிவர்த்தனை மதிப்பைத் தாங்கிச் செல்லும் பொருளாக அல்லது எக்காலத்துக்கும் உரிய பரிவர்த்தனை ஊடகமாக ஒவ்வொருவருக்கும் ஒரே விதமான பயன் மதிப்பைக் கொண்டிருக்கிறது. இவ்விதமாக அந்தப் பண்டத்திலேயே இருக்கிற முரண்பாடு, அதாவது குறிப்பிட்ட பயன் மதிப்பாகவும், அதே சமயத்தில் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாகவும், அதன் மூலமாக ஒவ்வொருவருக்கும் பயன் மதிப்பாகவும், அல்லது எக்காலத்துக்கும் உரிய பயன் மதிப்பாகவும் இருக்கும் முரண்பாடு அந்த ஒரு பண்டத்தைப் பொறுத்த வரையில் தீர்க்கப்படுகிறது. இங்கே, முதலாவதாக, மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் தனியாக வைக்கப்பட்டிருக்கும் பண்டத்தோடு கருத்தியலான சமன்பாட்டின் வடிவத்தில் காட்டப்படும் பொழுது, அந்த சமன்பாடு இனிமேல்தான் நிறைவேற வேண்டும்; இந்தப் பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு உண்மையாக இருந்த போதிலும், பரிவர்த்தனை நிகழ்வின் போது வெறும் வடிவ

ரீதியாக மட்டுமே ஜீவிப்பதாகத் தோன்றுகிறது; அதை நடைமுறையில் பயன் மதிப்புகளாக மாற்றி அடைவது இனி மேல்தான் நடைபெற வேண்டும். பண்டம் ஆரம்ப காலத்தில் பொது முறையில் பண்டமாக, ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கிற எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரமாகத் தோன்றியது. பரிவர்த்தனை நிகழ்வின் போது எல்லாப் பண்டங்களுமே பொது முறையில் பண்டம் என்று விலக்கிவைக்கப்பட்டிருக்கும் பண்டத்தோடு, ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பில் அடங்கியிருக்கிற எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் சொரூபமான அந்தப் பண்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. எனவே அவை குறிப்பிட்ட பண்டங்கள் என்ற முறையில் எக்காலத்துக்கும் உரிய பண்டமாகக்* கருதப்படுகிற ஒரு குறிப்பிட்ட பண்டத்துக்கு எதிர்நிலையில் இருக்கின்றன. பண்டங்களின் உடைமையாளர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய உழைப்பை எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பாகக் கருதுகிறார்கள் என்பது தங்களுடைய சொந்தப் பண்டங்களைப் பரிவர்த்தனை மதிப்புகளாகக் கருதுவதிலிருந்து தோன்றுகிறது; பரிவர்த்தனை நிகழ்வின் போது பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் பண்டங்களின் இடையுறவு அவற்றின் பரிவர்த்தனை மதிப்பின் பொருத்தமான வெளியீடாகத் தோன்றும் குறிப்பிட்ட பண்டத்தோடு எக்காலத்துக்கும் உரிய உறவாகத் தோன்றுகிறது; இது அதன் வரிசையில் அந்தக் குறிப்பிட்ட பண்டம் மற்ற எல்லாப் பண்டங்களோடும் கொண்டிருக்கிற தனியான உறவாக, எனவே தனித் தன்மையான, இயற்கையாக உருவாகிய, பொருளின் சமூகத் தன்மையாகத் தோன்றுகிறது. இவ்விதத்தில் மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பையும், அதாவது குறிப்பிட்ட, தனிவகையான பண்டம் என்று கருதப்படுகிற பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற அந்தக் குறிப்பிட்ட பண்டம் பணம் என்பதாகும். அது பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பின் கெட்டிப்படுத்தப்பட்ட உருவம்; பரிவர்த்தனை நிகழ்வின் போது இது உருவாகிறது. பரிவர்த்தனை நிகழ்வின் போது,

* ஜெஹெவேஸி இதே சொல்லைக் கையாள்கிறார். (ஆசிரியர் கையெழுத்தில் எழுதப்பட்டிருக்கும் குறிப்பு.—ப-ர்.)

பண்டங்கள் தம்முடைய வரையறுக்கப்பட்ட வடிவங்கள் அனைத்தையும் கைவிட்டு தங்களுடைய நெருக்கமான பௌதிக அம்சத்தில் ஒன்றோடொன்று எதிரெதிராக நின்று பயன் மதிப்புகளாக மாறும் பொழுது, பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் ஒன்றுக்கொன்று எதிரெதிராக நிற்க முடிவதற்கு அவை ஒரு புதிய, வரையறுக்கப்பட்ட வடிவத்தைப் பெற வேண்டும்; அவை பணத்தை உருவாக்க வேண்டும். பயன் மதிப்பு பண்டத்தின் வடிவத்தில் இருப்பது ஒரு குறியீடு அல்ல என்பது போல பணமும் ஒரு குறியீடு அல்ல. ஒரு உற்பத்தியின் சமூக உறவு தனிப்பட்ட மனிதர்களிடமிருந்து தனித்தொதுங்கி ஜீவித்திருப்பது போலக் காட்சியளிக்கிறது; சமூகத்தில் உற்பத்தி நடைபெறும் பொழுது அவை ஈடுபடுகின்ற தனிவகையான உறவுகள் ஒரு பொருளின் தனிவகை குணும்சங்களாகத் தோன்றுகின்றன; இந்தத் தலைகீழான தோற்றம், கவர்ச்சியில்லாதபடி உண்மையான, சிறிதும் கற்பனை செய்யப்படாத புதிர், பரிவர்த்தனை மதிப்பை நிலைப்படுத்துகின்ற உழைப்பின் எல்லா சமூக வடிவங்களுக்கும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தலைகீழான தோற்றம் பண்டங்களில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாகக் குறிப்பிடத்தக்க வகையில் பணத்தில் வெளிப்படுகிறது.

அந்தக் குறிப்பிட்ட பண்டத்தின் அவசியமான பௌதிக குணும்சங்கள் (மற்ற எல்லாப் பண்டங்களின் பண வடிவம் என்பது இங்கே கெட்டிப்படுத்தப்பட்ட உருவம் பெறுகிறது) பரிவர்த்தனை மதிப்பின் இயல்பிலிருந்து நேரடியாகப் பிறக்கும் அளவில்—பின்வருபவையாகும்: எல்லையற்ற அளவுக்குப் பிரிக்கப்படக் கூடியது, அதன் பகுதிகள் ஒரே சீரானவை, அந்தப் பண்டத்தின் எல்லா அடிப்படை அளவுகளும் ஒரே விதமான தன்மை உடையவை என்பனவே. எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் பொருண்மை என்ற முறையில் அது ஒரே சீரானதாகவும் அளவு ரீதியான வேறுபாடுகளை மட்டுமே எடுத்துக்காட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதன் மற்றொரு அவசியமான குணும்சம் அதனுடைய பயன் மதிப்பின் நிலைத்து நிற்கும் தன்மையாகும். ஏனென்றால் பரிவர்த்தனை நிகழ்வுப் போக்கை அது தாங்கிக் கொள்ள வேண்டும். விலையுயர்ந்த உலோகங்கள் இந்தக் குணங்களை மிகவும் அதிகமான அளவில் கைக்கொண்டிருக்கின்றன. ஆலோசனையின் மூலமாகவோ

அல்லது உடன்பாட்டின் விளைவாகவோ பணம் என்பது ஏற் பட்டுவிடவில்லை என்பதாலும், பரிவர்த்தனை நிகழ்வின் போது தானாகவே பிறந்திருப்பதாலும் பலவிதமான பண் டங்கள்—இவை அநேகமாகப் பணமாக உபயோகிக்கப்படு வதற்கு ஏற்றவை அல்ல—வெவ்வேறு காலங்களில் பணமாக உபயோகப்படுத்தப்பட்டன. பரிவர்த்தனை ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை அடைகிற பொழுது, வெவ்வேறு பண்டங்களுக்கிடையே பரிவர்த்தனை மதிப்பு, பயன் மதிப்பு என்ற பணிகளை எதிர்துருவ நிலையில் அமைக்க வேண்டிய தேவை தோன்றுகிறது. அதன் மூலமாக உதாரணமாக, ஒரு பண்டம் பரிவர்த்தனை ஊடகமாகப் பயன்படுகிறது; மற்றொரு பண்டம் பயன் மதிப்பாகத் தள்ளிவிடப்படுகிறது. இதன் விளைவாக, மிகப் பரவலான பயன் மதிப்பைப் பிரதி நிதித்துவப்படுத்துகிற ஒரு பண்டமோ அல்லது சில சமயங் களில் பல பண்டங்களோ எப்பொழுதாவது பணமாகப் பயன்பட்டிருக்கின்றன. இந்தப் பயன் மதிப்புகளுக்கு உடனடி யான தேவை ஏற்படாத பொழுதும் கூட மற்ற பயன் மதிப்புகளைக் காட்டிலும் இவற்றுக்கு இன்னும் பொதுவான தேவை உறுதியாக ஏற்படும்; ஏனென்றால் அவை செல்வத் தின் அதிகக் கணிசமான பௌதிகக் கூறுகள் என்பதாக உள்ளன.

நேரடியான பண்டமாற்று என்பது பரிவர்த்தனையில் தானாகவே தோன்றிய வடிவமாகும். இது பண்டங்கள் பண மாக மாற்றமடைவதைக் காட்டிலும் பயன் மதிப்புகள் பண்டங்களாக மாற்றமடைவதன் தொடக்கத்தைக் குறிக் கிறது. பரிவர்த்தனை மதிப்பு சுயேச்சையான வடிவத்தைப் பெறவில்லை; அது இன்னும் பயன் மதிப்போடு நேரடியாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டு வழிகளில் வெளிப் படுகிறது. மொத்த உற்பத்தி முறையின் நோக்கமே பயன் மதிப்புதான்—பரிவர்த்தனை மதிப்பு அல்ல; நுகர்வுக்குத் தேவையான அளவுக்கும் அதிகமான அளவில் பயன் மதிப்பு கள் உற்பத்தி செய்யப்படும் பொழுது மட்டுமே அவை பயன் மதிப்புகள் என்ற நிலையிலிருந்து நீங்கி பரிவர்த்தனை ஊடகங்களாக அல்லது பண்டங்களாக மாறுகின்றன. இதற்கு மாறாக, அவற்றின் உடனடியான பயன்மதிப்பு விதிக்கின்ற எல்லைகளுக்கு உட்பட்டு மட்டுமே—இந்தச் செயல் துருவ

எதிர்நிலையாகி உடைமையாளர்களால் பரிவர்த்தனை செய்யப் படுகிற பண்டங்கள் அவர்களிருவருக்குமே பயன் மதிப்பு களாக இருக்க வேண்டும் என்ற போதிலும் கூட—அவை பண்டங்களாக மாறுகின்றன; ஆனால் ஒவ்வொரு பண்டமும் அதன் உடைமை இல்லாதவருக்குப் பயன் மதிப்பாக இருக்க வேண்டும். உண்மையில் பண்டங்களின் பரிவர்த்தனை ஆரம் பத்தில் பூர்வீக சமூகத்துக்குள் தோன்றி வளரவில்லை;* அவைகளின் ஓரங்களில், அவைகளுடைய எல்லைகளில், மற்ற சமூகங்களோடு தொடர்புகள் ஏற்பட்ட சில இடங்களில் தோன்றி வளர்ந்தது. பண்டமாற்று இங்கே ஆரம்பமாகி பிறகு சமூகத்தின் உட்பகுதிக்குள் முன்னேறுகிறது; அந்த சமூகத்தைச் சீர்குலைக்கக் கூடிய தாக்கத்தையும் ஏற் படுத்துகிறது. வெவ்வேறு சமூகங்களுக்கிடையே நடைபெற்ற பண்டமாற்றின் விளைவாக ஏற்பட்ட குறிப்பிட்ட பயன் மதிப்புகள் பண்டங்களாக மாறின. உதாரணமாக, அடிமை கள், கால்நடை, உலோகங்கள். மேற்குறிப்பிட்டவை இந்த சமூகங்களுக்கிடையே முதலாவது பணமாகவும் பெரும்பா லும் பயன்படுகின்றன. ஒரு பண்டத்தின் சமமதிப்புத் தொடர் வரிசை எவ்வளவு நீளமாக இருக்கிறதோ, அல்லது அந்தப் பண்டம் பரிவர்த்தனை செய்யப்படும் செயல் எல்லை எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு பரிவர்த்தனை மதிப் பாகச் செயல்படும் அளவும் அதிகமானதாக இருக்கும் என்பதைப் பார்த்தோம். பண்டமாற்று படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டதும், பரிவர்த்தனை நடவடிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்ததும், பண்டமாற்றுச் செய்யப்பட்ட பொருள்கள் அதிகரித்ததும் பரிவர்த்தனை மதிப்பு என்ற முறையில் பண்டத்தின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்று பணத்

---

* பூர்வீக சமூகம் என்று கருதப்படும் தனி நபர் குடும் பத்தைப் பொறுத்தவரை அரிஸ்டாட்டில் இம்மாதிரியான கருத்தைக் கூறியிருக்கிறார். ஆனால் இனக்குழுவின் குடும் பமே, குடும்பத்தின் பூர்வீக வடிவமாகும். அது சரித்திர ரீதியாகச் சிதைவுற்றதிலிருந்து தனிக்குடும்பம் வளர்ந்தது. ''குடும்பம் என்ற முதல் சமூகத்துக்கு இந்தக் கலை'' (அதா வது, வர்த்தகம்) ''எத்தகைய பயனும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு'' (Aristotle, *loc. cit.*).

தின் உருவாக்கத்தை ஊக்குவித்தது; அதன் மூலமாக நேரடியான பண்டமாற்று மீது சீர்குலைக்கின்ற விளைவை ஏற்படுத்தியது. பண்டமாற்று விஸ்தரிக்கப்படும் பொழுது அதற்கேற்படும் வெளி நெருக்கடிகளினுல் பணம் தோன்றியது என்று பொருளியலாளர்கள் வாதாடுவது வழக்கம். ஆனல் இந்த நெருக்கடிகள் பரிவர்த்தனை மதிப்பின் பரிணுமத்தால் ஏற்படுபவை, சமூக உழைப்பு எக்காலத்துக்கும் உரிய உழைப்பு ஆவதால் ஏற்படுபவை என்பதை அவர்கள் மறந்து விடுகிருர்கள். உதாரணமாக, பயன் மதிப்புகள் என்ற முறையில் பண்டங்களை நினைத்தபடிப் பிரிக்க முடியாது. ஆனல் பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் அவற்றிடம் இந்த குணும்சம் இருக்க வேண்டும். அல்லது ஒரு சமயத்தில் Aக்குச் சொந்தமான பண்டத்தில் Bக்குத் தேவையான பயன் மதிப்பு இருக்கலாம்; அதே சமயத்தில் Bக்குச் சொந்தமான பண்டத்தில் Aக்கு எந்த விதமான பயன் மதிப்பும் இல்லாதிருக்கலாம். அல்லது பண்ட உடைமையாளர்களுடைய பண்டங்கள் ஒருவருக்கொருவர் தேவையுடையனவாக இருக்கலாம். ஆனல் இந்தப் பண்டங்களைப் பிரிக்க முடியாது; மற்றும் அவற்றின் பரஸ்பர பரிவர்த்தனை மதிப்புகளும் வெவ்வேருனவை. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், சாதாரண பண்டமாற்று முறையைஆராய்வதாகச் சொன்னுலும் இந்தப் பொருளாதார நிபுணர்கள், பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு ஆகியவற்றின் நேரடியான ஒருமை என்ற முறையில் பண்டத்தின் உள்ளீடாகவே இருக்கும் முரண்பாட்டின் சில அம்சங்களை வெளிக்காட்டுகிருர்கள். மறு புறத்தில், பண்டமாற்று என்பது பண்டங்களின் பரிவர்த்தனைக்கு மிகவும் ஏற்ற முறை என்று விடாப்பிடியாகக் கருதுகிருர்கள்; அதில் சில குறைகள் நடைமுறையில் இருக்கலாம் என்றும் அதை சமாளிப்பதற்கே பணம் வஞ்சகமாக உருவாக்கப்பட்டது என்று கருதுகிருர்கள். இந்த மேலெழுந்த வாரியான கருத்திலிருந்து ஆரம்பித்து ஒரு கெட்டிக்கார ஆங்கிலப் பொருளியலாளர் பணம் என்பது கப்பல் அல்லது நீராவி இயந்திரத்தைப் போல பொருளாயதக் கருவி மட்டுமே; உற்பத்தியின் சமூக உறவின் வெளியீடு அல்ல; அதனுல் பொருளாதார இனம் அல்ல என்று சரியாகச் சொல்கிருர். எனவே அரசியல் பொருளாதாரத்

தில் பணத்தைப் பற்றி ஆராய்வது தவறான செயல்; ஏனென்றால் அரசியல் பொருளாதாரத்துக்கும் தொழில் நுட்பத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்கிறார்.*

பண்டங்களின் உலகம் வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினையை முற்கருதுகோளாகக் கொள்கிறது. அல்லது உழைப்புப் பிரிவினை குறிப்பிட்ட பண்டங்கள் என்று ஒன்றுக்கொன்று எதிர்நிலையில் இருக்கும் பயன் மதிப்புகளின் வேற்றுமையில் (பல்வேறு உழைப்பு வகைகளும் அதே எண்ணிக்கையில் அவற்றில் அடங்கியிருக்கின்றன) நேரடியாக வெளிப்படுகிறது. உற்பத்திச் செயலின் வெவ்வேறான வகைகளின் மொத்தம் என்ற வகையில் உழைப்புப் பிரிவினை, பயன் மதிப்புகளை உற்பத்தி செய்யும் உழைப்பு என்ற வகையில் சமூக உழைப்பின் பௌதிக அம்சங்களின் கூட்டு மொத்தமாக இருக்கிறது. ஆனால் பண்டங்களையும் பரிவர்த்தனை நிகழ்வையும் பொறுத்தவரை—அது ஜீவிப்பது அதன் விளைவுகளில், பண்டங்களினுடைய வேற்றுமையில் மட்டுமே.

பண்டங்களின் பரிவர்த்தனை என்பது ஒரு நிகழ்வாகும். இதில் சமூக வளர்சிதைமாற்றம்—வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தனி நபர்களின் குறிப்பிட்ட உற்பத்திப் பொருள்களின் பரிவர்த்தனை—அதே சமயத்தில் உற்பத்தியின் திட்டவட்டமான சமூக உறவுகளை ஏற்படுத்துகிறது; இந்த வளர்சிதைமாற்றத்தின் போது தனி நபர்கள் இதில் ஈடுபடுகிறார்கள். இந்த சமூக உறவுகள் வளர்ச்சியடைகின்ற பொழுது, பண்டங்களின் இடையுறவு எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பின் தனி அம்சங்களாக நிலையான வடிவம் பெறுகிறது; இவ்விதமாகப் பரிவர்த்தனை நிகழ்வு அதே சமயத்தில் பணத்தின் உருவாக்கப் போக்காகவும் ஆகிறது.

---

* "பணம் என்பது உண்மையில், வாங்குவதையும் விற்பதையும் நடத்துவதற்கான கருவி மட்டுமே." (வாங்குவது, விற்பது என்று சொல்வதன் மூலம் நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பதை தயவு செய்து விளக்குவீர்களா?) "அரசியல் பொருளாதார விஞ்ஞானத்தில் கப்பல் அல்லது நீராவி இயந்திரம் அல்லது செல்வத்தின் உற்பத்தியையும் வினியோகத்தையும் சுலபமாக்கக் கூடிய எந்தவொரு கருவியையும் பற்றி எப்படி ஆராய்வதில்லையோ, அது போல பணமும் அதற்குச் சம்பந்தமில்லாததாகும்" (Thomas Hodgskin, *Popular Political Economy*, London, 1827, pp. 178-179).

பல போக்குகளைக் கொண்டிருக்கும் இந்தப் போக்கின் மொத்தமே செலாவணி முறை என்பதாகும்.

## அ. பண்டங்களின் பகுப்பாய்வு பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்

மூலச்சிறப்புடைய அரசியல் பொருளாதாரம், பிரிட்டனில் வில்லியம் பேட்டி மற்றும் பிரான்சில் புவகில்பெர்* ஆகியோருடன் ஆரம்பமாகி பிரிட்டனில் ரிக்கார்டோ மற்றும் பிரான்சில் ஸிஸ்மோண்டியுடன் முடிவடைகிறது. ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக நடைபெற்ற இந்த ஆராய்ச்சி பண்டத்தின் அம்சங்களான, இரண்டு வகை உழைப்பு வடிவங்களைப் பற்றித் தீர்மானமான முடிவுக்கு வந்தது. பயன் மதிப்பு என்பது ஸ்தூலமான உழைப்பு அல்லது குறிக்கோளோடு கூடிய உற்பத்திச் செயல் என்றும் பரிவர்த்தனை மதிப்பு என்பது உழைப்பு நேரம் அல்லது ஒரே சீரான சமூக உழைப்பு என்றும் வகைப்படுத்தப்படுகிறது.

படைப்புச் சக்தி இயற்கைக் கூறுகளைச் சார்ந்திருப்பது பற்றி தன்னை ஏமாற்றிக் கொள்ளாமல் பேட்டி பயன் மதிப்பை உழைப்பு என்று வகைப்படுத்துகிறார். அவர் உடனே ஸ்தூலமான உழைப்பை உழைப்புப் பிரிவினை என்ற அதன் முழுமையான சமூக அம்சத்தில் பார்க்கிறார்.** பொருட்

* பேட்டி, புவகில்பெர் ஆகியோரின் குணுதிசயங்களையும் எழுத்துக்களையும் ஒப்புநோக்கி ஆராய்வது பதினேழாம் நூற்றாண்டின் கடைசியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே நிலவிய சமூகத் திசைதிரும்பலை விளக்கிக் காட்டுவதோடு, அரசியல் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் மரபுக்கும் பிரெஞ்சு மரபுக்கும் இடையே இருக்கும் தேசிய வேறுபாடுகள் எங்கே பிறக்கின்றன என்பதையும் விளக்கும். இதே வேறுபாடு மறுபடியும் ரிக்கார்டோ, ஸிஸ்மோண்டியிடம் தோன்றுகிறது.

** பேட்டி உழைப்புப் பிரிவினையையும் ஒரு உற்பத்திச் சக்தியாகவே கருதுகிறார்; ஆடம் ஸ்மித்தைக் காட்டிலும் இன்னும் உயர்வான அளவில் இப்படிக் கருதுகிறார். *An Essay Concerning the Multiplication of Mankind*, Third Edition, 1686, pp. 35—36 பார்க்கவும். மேற்கூறிய கட்டுரையில் அவர் உழைப்புப் பிரிவினை மூலம் உற்பத்திக்கு ஏற்படும்

செல்வத்தின் தோற்றம் பற்றிய இந்தக் கருத்து, அவருடைய சமகாலத்தவரான ஹாப்சுக்கு ஏற்பட்டது போல அநேகமாக மலடாக இருக்கவில்லை; அரசியல் பொருளாதாரம் ஒரு

---

சாதகங்களை ஒரு கைக்கடிகாரம் தயாரிப்பதை உதாரணமாகக் கொண்டு—ஆடம் ஸ்மித் பிற்காலத்தில் குண்டூசி தயாரிப்பை உதாரணமாகக் காட்டியது போல—காட்டுவதோடு, ஒரு நகரத்தையும் ஒரு தேசத்தையுமே பெரிய அளவு தொழில் நிறுவனங்களாக எடுத்துக் கொண்டு விளக்கிக் கூறுகிறார். *Spectator*[14] 1711ம் வருடம் நவம்பர் மாதம் 26ந் தேதிய இதழில் "பாராட்டுக்குரிய சர் வில்லியம் பேட்டியின் விளக்கத்தைக்" ("illustration of the admirable Sir William Petty") குறிப்பிடுகிறது. எனவே *Spectator* பேட்டியைக் காட்டிலும் நாற்பது வயது குறைந்த ஒருவரை பேட்டி என்று நினைத்துக் குழப்பமடைந்து விட்டது என்று மாக் கூலோஹ் முடிவு செய்திருப்பது தவறாகும். (Mac Culloch, *The Literature of Political Economy, a Classified Catalogue*, London, 1845, p. 102 பார்க்கவும்.) பேட்டி தம்மை ஒரு புதிய விஞ்ஞானத்தின் ஸ்தாபகர் என்று கருதுகிறார். தம்முடைய முறை "இன்னும் அதிகமான புழக்கத்துக்கு வரவில்லை" என்று சொல்கிறார். "ஏனென்றால் ஒப்புநோக்கும் வார்த்தைகளையும் உயர்வான சொற்றொடர்களையும் அறிவுபூர்வமான வாதங்களையும் மட்டுமே பயன்படுத்தாமல்," அவர் "எண், எடை அல்லது அளவு மூலமாக" ("in terms of *number, weight* or *measure*") ஆராய உத்தேசிக்கிறார். "பார்க்கக் கூடியபடி இயற்கையில் அடிப்படை கொண்டிருக்கிற இலட்சியங்களை மட்டுமே (as have visible foundations in nature) ஆராய்வது; அறிவுக்குப் பொருத்தமான வாதங்களை மட்டுமே பயன்படுத்துவது; குறிப்பிட்ட மனிதர்களின் மாறக் கூடிய அறிவையும், கருத்துக்களையும், பசியையும், ஆசைகளையும் (mutable minds, opinions, appetites and passions of particular men) சார்ந்திருக்கிற மற்ற எல்லாவற்றையும் மற்றவர்களின் ஆராய்ச்சிக்கு விட்டுவிடுவது" என்று முன்வைக்கிறார் (*Political Arithmetick*, etc., London, 1699, Preface). உதாரணமாக, "அயர்லாந்திலும், ஸ்காட்லாந்தின் மலைகளிலுமுள்ள மக்களையும் எல்லா நகரும் பொருள்களையும் ... கிரேட் பிரிட்டனின் எஞ்சிய பகுதிக்குள் கொண்டுவருவது" என்று அவர் எழுதியிருக்கிற ஆலோசனையில் அவருடைய துணிச்சலான மேதாவிலாசத்தைப் பார்க்க முடியும். இதன் மூலமாக உழைப்பு நேரத்தை மிச்சப்படுத்தலாம்; உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்; அதனால் "அரசரும் அவருடைய பிரஜைகளும் அதிகமான செல்வமும் வலிமையும் பெறுவார்கள்" (*Political Arithmetick*, Chapter 4, [p. 225]). மேலும் ஹாலந்து அதிக

தனியான விஞ்ஞானமாக எழுதப்பட்ட முதல் வடிவமான **அரசியல் கணிதம்** என்ற முறைக்கு வழி வகுத்தது. ஆனால் அவர் பரிவர்த்தனை மதிப்பைப் பண்டங்களின் பரிவர்த்தனை

---

மான ஆதிக்கத்தைக் கொண்ட வர்த்தக தேசமாக இன்னும் இருந்த காலத்தில், பிரான்ஸ் முக்கியமான வர்த்தக நாடாகப் போகிறது என்று தோன்றிய காலத்தில், அவர் இதே அத்தியாயத்தில் உலகச் சந்தையைக் கைப்பற்றுவதில் இங்கிலாந்து வெற்றியடையும் என்று நிரூபிக்கிறார். ''மொத்த வர்த்தக உலகத்தின் வியாபாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தகுந்த சக்தியும் சந்தர்ப்பமும் இங்கிலாந்து மன்னரின் பிரஜைகளுக்கு உண்டு'' என்று எழுதுகிறார் (*op. cit.*, Chapter 10, [p. 272]). ''இங்கிலாந்து பெரும் புகழ் அடைவதற்கு எதிரான தடைகள் தற்செயலானவை—அகற்றப்படக் கூடியவை'' (p. 247 *et. seq.*). அவருடைய எல்லா எழுத்துக்களிலும் மிகவும் தனிவகையான நகைச்சுவை பரவிக் காணப்படுகிறது. ஹாலந்து உலகச் சந்தையைக் கைப்பற்றியதைப் பற்றி—இன்று ஐரோப்பியப் பொருளாதார நிபுணர்கள் இங்கிலாந்தை உதாரணமான நாடாகக் கருதுவது போல அன்று ஆங்கிலப் பொருளாதார நிபுணர்கள் ஹாலந்தை உதாரண நாடாகக் கருதினார்கள்—அது முற்றிலும் இயற்கையான காரணங்களால் ஏற்பட்டதே தவிர ''சிலர் சொல்லுவது போல ஹாலந்துக்காரர்களின் தெய்வாம்சம் பொருந்திய அறிவினாலும் பகுத்துணரும் கருத்தினாலும் ஏற்படவில்லை'' என்கிறார் (*op. cit.*, pp. 175-176). அவர் வர்த்தகத்துக்கு மனச்சாட்சி சுதந்திரம் அவசியமென்று ஆதரிக்கிறார்; ஏனென்றால் ''அறிவும் தெளிவும், குறிப்பாக ஆண்டவனின் ஆசிகள்—இவை முக்கியமாக ஏழைகளுக்கு உரியவை என்று அவர்கள் நினைக்கிறார்கள்—தங்களிடம் அதிகமாக இருப்பதாக'' அவர்கள் நினைத்துக் கொள்ள அனுமதித்தால் அவர்கள் கடுமையாக உழைப்பார்கள்; ''உழைப்பும் தொழிலும் கடவுளுக்குத் தாங்கள் செய்யும் கடமை என்று நம்புவார்கள்''. ''இதிலிருந்து வர்த்தகம் என்பது எந்தவொரு வகை மதத்தோடும் இணைக்கப்பட்டதல்ல என்பது பெறப்படும்; ...ஆனால் மொத்தத்திலிருந்து சீராக இல்லாத பகுதியோடு இணைக்கப்பட்டதே'' (*op. cit.*, pp. 183-186). அவர் போக்கிரிகளுக்கு விசேஷமான வகையில் பொது மக்கள் நிதியுதவி செய்ய வேண்டும்; ஏனென்றால் போக்கிரிகள் வசூல் செய்து தொந்தரவு செய்வதைக் காட்டிலும் பொது மக்கள் தாங்களாகவே வரி விதித்துக் கொள்வது இன்னும் நல்லது என்கிறார் (*op. cit.*, p. 199). இதற்கு மாறாக, சுறுசுறுப்பான மக்களிடமிருந்து செல்வத்தை எடுத்து ''சாப்பிடுவது, குடிப்பது, பாடுவது, விளையாடுவது, நடனமாடுவது ஆகியவற்றைத் தவிர வேறு

யில் அது தோன்றும் நிலையில், அதாவது பணமாக ஒத்துக் கொள்கிருர். தங்கத்தையும் வெள்ளியையும் போல பணத்தையும் முன்பே இருக்கின்ற பணமாக ஒத்துக் கொள்கிருர். அவர் பணவியல் முறையின் கருத்துக்களில் சிக்கிக் கொண்டு, பரிவர்த்தனை மதிப்பை நிர்ணயிக்கும் உழைப்பு தான் தங்கத்தையும் வெள்ளியையும் வெட்டி எடுக்கத் தேவைப்படும் ஸ்தூலமான உழைப்பின் குறிப்பிட்ட வகை என்று வலியுறுத்துகிருர். அவர் மனதில் உண்மையில் நினைப்பது என்னவென்ருல் முதலாளித்துவ பொருளாதாரத்தில் உழைப்பு நேரடியாகப் பயன் மதிப்புகளை உற்பத்தி செய்வதில்லை; ஆனல் பண்டங்களை, அதாவது பரிவர்த்தனையில் அந்நியமாகிவிடுதலின் விளைவாக தங்கம், வெள்ளியின் வடி

---

ஒன்றுமே செய்யாமல் இருப்பவர்களுக்கு—(இல்லை, அவர்கள் மெய்ஞ்ஞான நூல்களைப் படிப்பதுண்டு) மாற்றுகின்ற வரிகளை நிராகரிக்கிருர் (*op. cit.*, p. 199). பேட்டியின் நூல்கள் பழைய, தரக்குறைவான பதிப்புகளில் அபூர்வமாகவே கிடைக்கின்றன. வில்லியம் பேட்டி ஆங்கில அரசியல் பொருளாதாரத்தின் தந்தை என்பதோடு ஆங்கில விக்கட்சியினரின் (Whigs) நெஸ்டராக இருந்த ஹென்ரிஹ் பேட்டி என்ற லான்ஸ்டௌன் பிரபுவின் முன்ஞேர் என்பதையும் நினைக்கும் பொழுது இது ஆச்சரியமளிக்கிறது. ஆனல் லான்ஸ்டௌன் குடும்பத்தினர் அவருடைய வாழ்க்கை வரலாற்றை முன்னுரையாகச் சேர்க்காமல் அவருடைய நூல் திரட்டை வெளியிட முடியவில்லை. விக்கட்சியின் பிரபலமான தலைவர்களின் குடும்பங்களின் தோற்றம் பற்றிய உண்மைகள் இந்த உதாரணத்துக்கும் பொருந்துகின்றன. எனவே அதைப் பற்றி அதிகம் எழுதாமலிருப்பது நல்லது. இந்த ராணுவ மருத்துவர் துணிச்சல் நிரம்பிய சிந்தனையாளர்; ஆனல் சிறிதும் மனச்சாட்சியில்லாதவர். அவர் குரோம்வெல்லின் தலைமையின் கீழ் எப்படி அயர்லாந்தில் கொள்ளையடித்தாரோ அதே மாதிரி இரண்டாம் சார்லஸ் மன்னருக்கு இச்சகமாக நடந்து கொண்டு கோமான் (Baronet) என்ற பட்டம் பெற்ருர். அவரைப் பற்றி வெளியிலே பகட்டாக எடுத்துக் காட்டுவதற்கு இது பொருத்தமான படம் அல்லவே. மேலும், அவருடைய வாழ்நாளில் வெளியிடப்பட்ட நூல்களில் பேட்டி இரண்டாம் சார்லசின் ஆட்சிக் காலம்தான் இங்கிலாந்தின் பொற்காலம் என்று நிரூபிக்கப் பாடுபடுகிருர். ''புகழ்வாய்ந்த புரட்சியைப்'' ("glorious revolution") பரம்பரையாகச் சுரண்டிப் பயனடைந்த கூட்டத்துக்கு, இது வழக்கத்துக்கு மாருன கருத்தாகும்.

வத்தை—அதாவது, பணத்தின், அதாவது பரிவர்த்தனை மதிப்பின், அதாவது பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பின் வடிவத்தை—எடுத்துக் கொள்ளக் கூடிய பயன் மதிப்புகளை உற்பத்தி செய்கிறது. பொருட் செல்வத்தின் பிறப்பிடம் உழைப்பு என்பதை ஒருவர் அங்கீகரித்தாலும் கூட பரிவர்த்தனை மதிப்பின் பிறப்பிடமாக உழைப்பு இருக்கக் கூடிய தனிவகையான சமூக வடிவத்தைத் தவருகப் புரிந்து கொள்வதும் சாத்தியமே என்பதற்கு அவர் ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும்.

புவகில்பெர் தம் பங்குக்கு (இது அவருக்குத் தெரியாமல் ஏற்பட்ட போதிலும்) உண்மையில் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் உழைப்பு நேரத்தைத் தொழிலின் வெவ்வேறு பிரிவுகளுக்கு இடையே பிரித்து, அந்த சரியான அளவு வீதத்தின்படி ''உண்மையான மதிப்பை'' (la juste valeur) நிர்ணயித்து பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை உழைப்பு நேரத்துக்கு வகைப்படுத்துகிருர். இந்த சரியான அளவு விகிதத்தை ஏற்படுத்தக் கூடிய சமூக நிகழ்வு சுதந்திரமான போட்டியே என்று அறிவிக்கிருர். ஆனுல் அதே சமயத்தில்—பேட்டிக்கு மாறுபட்ட வகையில்—பணத்துக்கு எதிராக வெறிகொண்ட போராட்டத்தை நடத்துகிருர்; பண்டங்களின் பரிவர்த்தனையில் உள்ள இயல்பான சம நிலையில் அல்லது ஒத்திசைவில் குறுக்கிட்டுக் கெடுப்பது பணமே என்கிருர்; மொலோச் (Moloch) என்ற பயங்கரக் கடவுளைப் போல, பொருளாயத செல்வத்தைப் பணம் பலியாகக் கேட்கிறது. பணத்தை எதிர்த்து அவர் செய்யும் விவாதம், ஒரு பக்கத்தில் திட்டவட்டமான வரலாற்று நிலைமைகளோடு தொடர்புடையதாக இருந்தது—பதினுன்காம் லூயீயின் அரசவையிலும், பிரபுக்களிடமும், வரிச் சூதாட்டத்தில் ஈடுபடும் நபர்களிடமும் தங்கத்துக்கு ஏற்பட்ட குருட்டுத் தனமான பேராசையை புவகில்பெர் எதிர்க்கிருர்;* ஆனுல் பேட்டி

* ''நிதியியல் ஒரு கறுப்புக் கலை'' என்று சொல்லிவந்த காலத்தில் புவகில்பெர் பின்வருமாறு எழுதுகிருர்: ''விவசாயம், வர்த்தகத்தின் நலனுக்குத் தேவையான எல்லாவற்றையும் சரிவர அறிவதுதான் நிதியியல் என்ற விஞ்ஞானமே தவிர வேருென்றுமில்லை'' (*Le détail de la France*, 1697. In Eugène Daire, *Economistes financiers du XVIII siècle*, Paris, 1843, Vol. 1, p. 241).

தங்கத்துக்கான பேராசையை ஒரு தேசத்தைத் தொழிற் பெருக்கத்துக்கும் உலகச் சந்தையைப் பிடிப்பதற்கும் தூண்டுகின்ற வலுமிக்க சக்தி என்று போற்றுகிறார்; எனினும் அதே சமயத்தில் இது தனிவகையான ஆங்கில, பிரெஞ்சு அரசியல் பொருளாதாரங்களுக்கிடையே* நிரந்தரமான வேறுபாடாக அடிக்கடி தோன்றும் ஆழமான அடிப்படை மாறுபாடுகளைத் துலாம்பரமாகக் காட்டுகிறது. உண்மையில் புவகில்பெர் செல்வத்தின் பொருளாயத சாரத்தை, அதன் பயன் மதிப்பை, அதை அனுபவிப்பதை மட்டுமே** பார்க்கிறார்; முதலாளித்துவ உழைப்பு வடிவத்தை, பயன் மதிப்புகளைப் பண்டங்களாக உற்பத்தி செய்து, பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதை, தனி நபர் உழைப்பு இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான சமூக வடிவம் என்று கருதுகிறார். முதலாளித்துவ செல்வவளத்தின் தனியான அம்சங்களை எங்கு பார்த்தாலும் (உதாரணமாக, பணத்தில்) மற்றவர்களின் இடத்தைப் பிடுங்கும்

---

* இது ரோமானிய அரசியல் பொருளாதாரத்துக்குப் பொருந்தாது. ஆங்கில, பிரெஞ்சுப் பொருளியலாளர்களிடையே இருந்த வேறுபாடுகளை இத்தாலியர்கள் தங்களுடைய இரு பிரிவுகளில்—ஒன்று நேப்பில்சிலும் அடுத்தது மிலானிலும் இருந்தன—அப்படியே திருப்பிப் பின்பற்றினார்கள். இதற்கு முந்திய காலத்தில் ஸ்பெயினில் இருந்தவர்கள் வாணிப ஊக்கக் கொள்கையைப் பின்பற்றியவர்கள்; அல்லது உஸ்டாரிசைப் போல இந்தக் கொள்கையைச் சிற்சில மாற்றங்களோடு கடைப்பிடித்தார்கள்; அல்லது ஜோவெல்லானசைப் போல ஆடம் ஸ்மித்தின் ஆனந்தமான நடுப்பாதையைப் பின்பற்றியவர்கள் (அவர் எழுதிய *Obras*, Barcelona, *1839-40* என்ற நூலைப் பார்க்கவும்).

** "உண்மையான செல்வம்... வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை மட்டுமல்லாமல் எல்லாவிதமான மிகைப் பொருள்களையும் புலன்களுக்கு இன்பத்தைத் தருகிற ஒவ்வொரு பொருளையும் முழுமையாக அனுபவித்தலாகும்" (Boisguillebert, *Dissertation sur la nature de la richesse*, etc., p. 403). பேட்டி கொள்கையற்ற, சிறுதரமான, பேராசை மிக்க சாகசக்காரர் மட்டுமே. ஆனால் புவகில்பெர் பதினான்காம் லுயீ மன்னரின் ராணுவப் பண்டகசாலை அதிகாரியாக இருந்த போதிலும், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரின் நலன்களுக்காக அதிகமான அறிவுத்திறனோடும் துணிச்சலோடும் பாடுபட்டவர்.

அந்நியக் கூறுகளின் தலையீட்டைப் பற்றிப் பேசுகிறார்; முதலாளித்துவ சமூகத்திலுள்ள உழைப்பு வடிவங்களில் ஒன்றைக் கடுமையாகத் தாக்குகிறார்; அதே சமயத்தில் அதன் மீது கற்பனாவாத முறையில் பாராட்டுக்களை வேறொரு வடிவத்தில் அள்ளிக் கொட்டுகிறார்.* புவகில்பெரின் புத்தகம் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கும் உழைப்பை தனி நபர்களின் நேரடியான உடல் உழைப்பைக் கொண்டு நேரத்தில் அடிப்படை அளவுகளில் கணக்கிடுவதைக் குழப்பிக் கொண்டே, பண்டங்களின் மதிப்பின் அளவு உழைப்பு நேரம் என்ற முடிவுக்கு வருவது சாத்தியமே என்பதை நிரூபிக்கிறது.

புதிய உலகத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறைகள் அவைகளின் பிரதிநிதிகளோடு இறக்குமதி செய்யப்பட்டன. வரலாற்று மரபு இல்லாததை ஈடு செய்யும் அளவுக்கு மிகவும் அபரிமிதமான இயற்கை வளத்தைக் கொண்ட அந்தப் பூமியில் இவை வேகமாக வளர்ச்சியடைந்தன. அந்தப் புதிய உலகத்தைச் சேர்ந்த ஒருவர் பரிவர்த்தனை மதிப்பு என்பது உழைப்பு நேரமே என்று முதல் தடவையாக ஆழ்ந்து ஆராய்ந்து, தெளிவாக (அதைச் சாதாரணமாகக் கருதும் அளவுக்கு மிகத் தெளிவாக இருந்தது) வகைப்படுத்தினார். அவர் பென்ஜமென் பிராங்க்ளின். அவர் தம்முடைய ஆரம்பப் புத்தகத்தில்—1729ம் வருடத்தில் எழுதப்பட்டு 1731ம் வருடத்தில் வெளியிடப்பட்ட புத்தகத்தில்**—நவீன அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை விதியை வகுத்துரைத்தார். மதிப்பை அளவிடுவதற்கு விலையுயர்ந்த உலோகங்களைத் தவிர வேறொரு அளவுகோல் தேவை; அந்த அளவுகோல் உழைப்பு என்கிறார்.

''வெள்ளியின் மதிப்பை உழைப்பைக் கொண்டு அளவிட முடியும்; இது போல மற்ற பொருள்களுக்கும் செய்யலாம். ஒரு நபர் தானிய உற்பத்தியிலும் மற்றொரு நபர் வெள்ளியை வெட்டி எடுத்து சுத்தப்படுத்துவதிலும்

* புரூதோனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற பிரெஞ்சு சோஷலிசம் இதே தேசியக் கோளாறினால் பாதிக்கப்படுகிறது.

** Benjamin Franklin, *The Works of Benjamin Franklin*, ed. by J.Sparks, Vol. 2, Boston, 1836: *A Modest Inquiry into the Nature and Necessity of a Paper Currency.*

ஈடுபட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். வருடக் கடைசியில் அல்லது ஏதாவதொரு காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த தானியமும் வெள்ளியும் ஒன்றுக்கொன்று இயற்கையான விலையாகும்; ஒன்று இருபது புஷலும் மற்றது இருபது அவுன்சாகவும் இருக்குமானால் ஓர் அவுன்ஸ் வெள்ளி ஒரு புஷல் தானிய உற்பத்தியின் உழைப்புக்குச் சமமாகும். இதைக் காட்டிலும் பக்கத்தில், இன்னும் சுலபமான அல்லது அதிகமான அளவில் வெள்ளி கிடைக்கக் கூடிய சுரங்கம் கண்டுபிடிக்கப்படுமானால், ஒரு நபர் முன்பு இருபது அவுன்ஸ் வெள்ளியை உற்பத்தி செய்யச் செலவிட்ட அதே உழைப்பைக் கொண்டு சுலபமாகவே நாற்பது அவுன்ஸ் வெள்ளியைப் பெற முடியும். ஆனால் இருபது புஷல் தானியத்தை உற்பத்தி செய்வதற்கு அதே அளவு உழைப்பு இன்னும் தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் இரண்டு அவுன்ஸ் வெள்ளி ஒரு புஷல் தானியத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படுகின்ற அதே அளவு உழைப்புக்கு மேல் ஈடாகாது. முன்பு ஓர் அவுன்ஸ் வெள்ளிக்குக் கிடைத்த தானியம் இப்பொழுது இரண்டு அவுன்ஸ் வெள்ளிக்குக் கிடைத்தாலும் கூட, அது குறைந்த விலையே (caeteris paribus). இவ்விதத்தில் ஒரு நாட்டின் செல்வங்களை, அங்கே வாழ்பவர்களால் விலைக்குப் பெறக் கூடிய உழைப்பின் அளவைக் கொண்டு மதிப்பிட முடியும்'' (*op. cit.*, p. 265).

பிரான்க்ளின் முதலிலிருந்தே உழைப்பு நேரத்தை மதிப்பின் அளவு என்று குறுகலான பொருளாதாரக் கருத்தோட்டத்தில் பார்க்கிறார். செய்யப்பட்ட பொருள்கள் பரிவர்த்தனை மதிப்பாக மாற்றமடைவதை அவர் ஆராயாமலே மெய்யென ஏற்றுக் கொள்வதால் அவற்றின் மதிப்பின் அளவைக் கண்டுபிடிப்பது மட்டுமே பிரச்னையாகத் தோன்றுகிறது.

பிரான்க்ளின் பின்வருமாறு எழுதுகிறார்: ''பொதுவாக வர்த்தகம் என்பது உழைப்புக்கு உழைப்பைப் பரிவர்த்தனை செய்வது என்பதைத் தவிர வேறொன்றுமில்லையாதலால், நான் முன்னர் குறிப்பிட்டது போல, எல்லாப் பொருள்களின் மதிப்பையும் உழைப்பைக் கொண்டு மிக நியாயமாக அளவிட முடியும்'' (*op. cit.*, p. 267).

மேலே தரப்பட்ட வாக்கியத்தில் ''உழைப்பு'' என்ற வார்த்தைக்குப் பதிலாக ''ஸ்தூலமான உழைப்பு'' என்ற

வார்த்தையை உபயோகித்தால், ஒரு வடிவத்திலிருக்கும் உழைப்பு மற்றொரு வடிவத்திலிருக்கின்ற உழைப்போடு சேர்த்துக் குழப்பப்படுகிறது என்பது தெளிவாகத் தெரியும். ஏனென்றால் வர்த்தகம் என்பது, உதாரணமாக, செருப்புத் தைப்பவரின், சுரங்கத் தொழிலாளியின், நூற்புத் தொழிலாளியின், ஓவியரின் இன்னும் பலருடைய உழைப்பைப் பரிவர்த்தனை செய்வதாக இருக்கலாம். அப்படியானால் ஓவியரின் உழைப்பு செருப்பின் மதிப்பை மிகச் சரியான முறையில் அளக்குமா? இதற்கு மாறாக, செருப்புகள், கனிப் பொருள்கள், நூல், ஓவியங்கள் இன்னும் மற்ற பொருள்களின் மதிப்பை சூக்குமமான உழைப்பைக் கொண்டு நிர்ணயிக்க முடியும்; அதற்குக் குறிப்பிட்ட தன்மை இல்லாததனால் அளவு மூலமாகவே அதை அளக்க முடியும் என்கிறார் பிராங்க்ளின்.* ஆனால் பரிவர்த்தனை மதிப்பில் அடங்கியிருக்கிற உழைப்பு சூக்குமமான எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு; தனி நபர் உழைப்பு எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதலின் விளைவாக இது ஏற்படுகிறது என்பதை அவர் விளக்கிக் கூறாததினால் பணத்தை அந்நியமாகிய உழைப்பின் நேரடியான கருத்துருவம் என்று அவர் நிச்சயமாகத் தவறாகக் கருதுவார். எனவே அவர் பணத்துக்கும் பரிவர்த்தனை மதிப்பை நிலைப்படுத்தும் உழைப்புக்குமுள்ள உள்ளார்ந்த தொடர்பைப் பார்க்கத் தவறுகிறார். ஆனால் அதற்கு மாறாக பணம் என்பதை பரிவர்த்தனைப் பகுதிக்குள் வெளியிலிருந்து புகுத்தப்பட்ட வசதியான தொழில்நுட்பச் சாதனம் என்று கருதுகிறார்.** பரிவர்த்தனை மதிப்பு பற்றி பிராங்க்ளின் செய்த ஆராய்ச்சி விஞ்ஞானத்தின் பொது வளர்ச்சியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் அவர் திட்டவட்டமான செய்முறை நோக்கங்களுக்காகவே அரசியல் பொருளாதாரத்தின் விசேஷமான பிரச்சினைகளை மட்டுமே ஆராய்ச்சி செய்தார்.

---

* *Remarks and Facts Relative to the American Paper Money*, 1764 (*l.c.*).

** *Papers on American Politics*, and *Remarks and Facts Relative to the American Paper Money*, 1764 (*l.c.*) என்ற புத்தகங்களைப் பார்க்கவும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஸ்தூலமான பயனுள்ள உழைப்புக்கும் பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குகிற உழைப்புக்கும் உள்ள வேறுபாடு கீழ்க்கண்ட வடிவத்தில் அதிகமான அக்கறையை ஏற்படுத்தியது: ஸ்தூலமான உழைப்பின் எந்தக் குறிப்பிட்ட வடிவம் முதலாளித்துவ செல்வவளத்தின் பிறப்பிடமாகும்? எனவே பயன் மதிப்புகளில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது உற்பத்திப் பொருள்களைத் தருகின்ற எல்லா வகையான உழைப்பும் நேரடியாக செல்வவளத்தை ஏற்படுத்துவதில்லை என்று கருதப்பட்டது. ஆனால் பிஸியோக்கிராட்டுகளுக்கும் அவர்களுடைய எதிரிகளுக்கும் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது எந்த வகையான உழைப்பு மதிப்பை உருவாக்குகிறது என்பது அல்ல; உபரி மதிப்பை உருவாக்குவது எந்த வகையான உழைப்பு என்பதே. ஆகவே அவர்கள் ஒரு பிரச்சினையின் ஆரம்ப வடிவத்துக்குத் தீர்வு காணாமல் அதன் சிக்கலான வடிவத்தைப் பற்றி விவாதங்களில் ஈடுபட்டிருந்தார்கள்; இது போலவே எல்லா விஞ்ஞானங்களின் வரலாற்று ரீதியான முன்னேற்றம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட முயற்சிகளை மிகவும் அதிகமான அளவுக்குச் செய்த பிறகுதான் பிரச்சினையின் உண்மையான மையத்துக்கு வர முடிகிறது. விஞ்ஞானம் கட்டிட நிபுணர்களைப் போன்றதல்ல; அது ஆகாயத்தில் கோட்டை கட்டுவது மட்டுமல்லாமல் அஸ்திவாரம் போடுவதற்கு முன்பாகவே கட்டிடத்தின் தனித்தனிப் பகுதிகளைக் கட்டிவிடும். இப்பொழுது நாம் பிஸியோக்கிராட்டுகளையும் இத்தாலியப் பொருளியலாளர்கள் அத்தனை பேர்களையும்—அவர்களுடைய பெரும்பாலும் பொருத்தமான கருத்துக்கள் பண்டத்தைப் பற்றிய சரியான ஆய்வுக்கு மிகச் சமீபமாக வந்தன—விட்டுவிடுவோம்.* ஏனென்றால் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பொதுவான அமைப்பை விவரித்த முதல் ஆங்கிலேயராகிய சர்

---

* உதாரணமாக, Galiani, *Della Moneta*, Vol. 3, in Custody, *Scrittori classici Italiani di Economia Politica, Parte Moderna*, Milano, 1803 பார்க்கவும். ''உழைப்புதான் (fatica) பொருள்களுக்கு மதிப்பு தருவது'' என்று எழுதுகிறார் (பக்கம் 74). உழைப்புக்கு "fatica" என்ற சொல்லைக் கையாண்டிருப்பது தென் பகுதியினருக்கு உரித்தானதாகும்.

ஜேம்ஸ் ஸ்டூவர்ட்டைப்* பற்றி நாம் உடனே கவனிக்க வேண்டும். அவருடைய நூலில் பரிவர்த்தனை மதிப்பு என்ற கருத்து, அரசியல் பொருளாதாரத்தின் மற்ற சூக்கும இனங்களைப் போலவே அவற்றின் பொருளாயத உள்ளடக்கத்திலிருந்து பிரிக்கப்படுகின்ற நிலையில்தான் இன்னும் இருக்கிறது. எனவே அது தெளிவில்லாதபடியும் சந்தேகமான நிலையிலுமே இருக்கிறது. அவர் ஒரு பகுதியில் உண்மையான மதிப்பை உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கிறார் ("ஒரு தொழிலாளி ஒரு நாளில் செய்யக் கூடியது"); ஆனால் அடுத்தாற் போலவே கூலி, மூலப் பொருள் ஆகியவற்றைக் குழப்பமான முறையில் நுழைக்கிறார்.** பொருளாயத உள்ளடக்கத்தோடு அவர் நடத்துகின்ற போராட்டம் இன்னொரு பகுதியில் இன்னும் வெளிப்படையாகவே காணப்படுகிறது. ஒரு பண்டத்தில் அடங்கியிருக்கிற பௌதிக மூலப் பொருளை (உதாரணமாக, வெள்ளி ஆபரணத்திலுள்ள வெள்ளி) அதன் உள்ளார்ந்த பெறு மதிப்பு (*intrinsic worth*) என்கிறார்; அதிலடங்கியுள்ள உழைப்பு நேரத்தைப் பயனுள்ள மதிப்பு (*useful value*) என்கிறார்.

*முதல் அம்சத்தைப் பொறுத்தவரை "அது தன்னளவில் உண்மையானது" என்கிறார்; ஆனால் "இரண்டாவது அம்சத்தின் மதிப்பை, அதை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்பட்ட உழைப்பைக் கொண்டு மதிப்பிட வேண்டும்.... அதைச் செப்பம் செய்வதில் பயன்படுத்தப்படும் உழைப்பு ஒரு மனிதனின் நேரத்தின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது."****

அவர் பரிவர்த்தனை மதிப்பில் வெளிப்படுகின்ற தனி வகையான சமூக உழைப்பையும் பயன் மதிப்புகளைத் தருகிற

---

* ஆடம் ஸ்மித் எழுதிய *Wealth of Nations* என்ற புத்தகம் வெளியானதற்குப் பத்து வருடங்களுக்கு முன்பே 1767ம் வருடத்தில் லண்டனில் ஸ்டூவர்ட் தம்முடைய புத்தகத்தை (*An Inquiry into the Principles of Political Economy, Being an Essay on the Science of Domestic Policy in Free Nations*) இரண்டு குவார்ட்டோ பகுதிகளாக வெளியிட்டார். 1770ம் வருடத்தில் டப்ளின் நகரத்தில் வெளியிட்ட பதிப்பிலிருந்து நான் மேற்கோள் காட்டுகிறேன்.

** Steuart, *op. cit.*, Vol. 1, pp. 181—183.

*** *Ibid.*, pp. 361—362.

ஸ்தூலமான உழைப்பையும் தெளிவாக வேறுபடுத்துகிறார்; இது அவருக்கு முன்பிருந்தவர்களிடமிருந்தும் அவருக்குப் பிறகு வந்தவர்களிடமிருந்தும் ஸ்டூவர்ட்டைப் பிரித்துக் காட்டுகிறது.

''அந்நியமாதலின் மூலமாக எக்காலத்துக்கும் உரிய சம மதிப்பை உருவாக்குகிற உழைப்பை நான் தொழில் என்று குறிப்பிடுகிறேன்'' என்று அவர் எழுதுகிறார்.

அவர் தொழில் என்ற வகையில் உழைப்பை ஸ்தூலமான உழைப்போடு மட்டுமல்லாமல் உழைப்பின் மற்ற சமூக வடிவங்களோடும் வேறுபடுத்திக் காட்டுகிறார். உழைப்பின் பழங்காலத்திய, மத்தியகால வடிவங்களிலிருந்து வேறுபட்ட முதலாளித்துவ உழைப்பு வடிவத்தை அதில் பார்க்கிறார். முதலாளித்துவ உழைப்புக்கும் நிலப்பிரபுத்துவ உழைப்புக்கும் உள்ள வேறுபாட்டில் அவர் குறிப்பான அக்கறை காட்டுகிறார். ஏனென்றால் ஸ்காட்லாந்திலும் ஐரோப்பாக் கண்டத்தில் அவருடைய விரிவான சுற்றுப் பயணங்களிலும் நிலப்பிரபுத்துவ உழைப்பு நசித்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் அதைப் பார்த்திருக்கிறார். முதலாளித்துவத்துக்கு முந்திய சகாப்தங்களிலும் உற்பத்திப் பொருள்கள் பண்டங்களின் வடிவத்தையும் பண்டங்கள் பணத்தின் வடிவத்தையும் பெற்றதை ஸ்டூவர்ட் நன்கு அறிவார். செல்வவளத்தின் ஆரம்பமும் முதன்மையுமான அடிப்படை அளவு பண்டம் என்பதையும் அந்நியமாதல் உரிமைப்படுத்தலின் அதிகப் பெரும்பான்மையான வடிவமாக இருப்பதும், முதலாளித்துவ உற்பத்திக் கட்டத்தின் தனி அம்சம்; எனவே உழைப்பு பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குவது தனிவகையான முதலாளித்துவ அம்சம் என்பதை அதிகமான விளக்கத்தோடு காட்டியிருக்கிறார்.*

---

* நிலத்தின் உடைமையாளருக்குப் பயன் மதிப்புகளை உருவாக்குவதை நேரடியான நோக்கமாகக் கொண்டிருக்கும் தந்தை வழி விவசாய முறை தீங்கானது என்று ஸ்டூவர்ட் கூறுகிறார். ஸ்பார்த்தாவில் அல்லது ரோமில்—ஏத்தென்சில் கூட—இந்த முறை இருக்கலாம்; ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் இந்த முறை நிச்சயமாகத் தீங்கானது என்கிறார்.

விவசாயம், தொழில் உற்பத்தி, கப்பல் ஓட்டுதல், வர்த்தகம் முதலிய ஸ்தூலமான உழைப்பின் பல்வேறு வகைகளில் ஒவ்வொன்றும் செல்வத்தின் உண்மையான பிறப்பிடம் என்று ஆடம் ஸ்மித்துக்கு முன்பு சொல்லப்பட்டதுண்டு. ஆனால் அவர் பொருட்செல்வத்தின் அல்லது பயன் மதிப்புகளின் ஒரே பிறப்பிடம் பொதுவான உழைப்பு, அதாவது உழைப்புப் பிரிவினையில் தோன்றும் உழைப்பின் சமூக அம்சத்தின் மொத்தமே என்றார். இந்த இடத்தில் அவர் இயற்கைக் காரணிகளின் பங்கை முழுமையாகக் கவனிக்காது விட்டாலும் கூட பரிவர்த்தனை மதிப்பு என்ற கலப்பற்ற சமூக செல்வத்தின் உலகத்தை அவர் ஆராய்கிற பொழுது அது அவரைப் பின்தொடர்கிறது. ஆடம் ஸ்மித் பண்டங்களின் மதிப்பை அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயித்த போதிலும், அவர் பிறகு மதிப்பை உண்மையிலேயே நிர்ணயிப்பதைத் தமக்கு முந்திய காலத்திலிருந்த நிலைமைகளுக்கு மாற்றி விடுகிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் சாதாரணமான பண்டங்களை ஆராய்கிற பொழுது அவர் உண்மையானவை என்று கருதுகின்ற மூலதனம், கூலி உழைப்பு, வாரம் போன்ற மூலதனத்தின் உயர்வான, இன்னும் சிக்கலான வடிவங்களை ஆராயப் புகுந்தவுடனேயே உண்மை குழப்பமடைந்து விடுகிறது. அவர் இதைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்: முதலாளி வர்க்கத்தினர் இழந்துவிட்ட சொர்க்கத்தில் பண்டங்களின் மதிப்பு உழைப்பு நேரத்தைக் கொண்டு கணக்கிடப்பட்டது; அங்கே மக்கள் முதலாளிகள், கூலித் தொழிலாளர்கள், நிலவுடைமையாளர்கள், குத்தகை விவசாயிகள், வட்டிக்கடைக்காரர்கள் முதலிய பிரிவுகளாக ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கவில்லை; பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றைப் பரிவர்த்தனை செய்பவர்கள் என்ற முறையில் மட்டுமே தொடர்புகள் இருந்தன. ஆடம்

---

இந்தத் ''தீங்கான விவசாயம்'' ("abusive agriculture") ''வர்த்தகம்'' அல்ல; ஜீவனோபாயத்துக்கு ஒரு வழி மட்டுமே. முதலாளித்துவ விவசாயம் நிலத்தில் மிகையாக இருப்பவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுவதைப் போல், முதலாளித்துவ உற்பத்தி மிகையாக இருப்பவர்களைத் தொழிற்சாலையை விட்டு வெளியேற்றுகிறது.

ஸ்மித் பண்டங்களின் மதிப்பை அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிப்பதை உழைப்பின் மதிப்பைக் கொண்டு அவற்றின் மதிப்பை நிர்ணயிப்பதோடு எப்பொழுதும் குழப்பிக் கொள்கிறார். அவருடைய விளக்கத்தில் தரப்படுகின்ற விவரங்கள் அடிக்கடி ஒன்றோடொன்று மாறுபடுகின்றன. சமூக நிகழ்வின் நிர்ப்பந்தத்தினால் ஏற்படுகின்ற உழைப்பின் வெவ்வேறான அளவுகளின் புறநிலையில் சமமாதலை தனி நபர்களின் உழைப்புக்களின் அகநிலை சமத்துவம் என்று தவறாக முடிவு செய்கிறார்.* அவர் ஸ்தூலமான உழைப்பிலிருந்து பரிவர்த்தனை மதிப்பை உற்பத்தி செய்யும் உழைப்புக்கு, அதாவது முதலாளித்துவ உழைப்பின் அடிப்படையான வடிவத்துக்குப் போகும் மாற்றத்தை உழைப்புப் பிரிவினையின் மூலமாக நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறார். ஆனால் தனிப்பட்டவர்களுடைய பரிவர்த்தனை உழைப்புப் பிரிவினையை முற்கோளாகக் கொண்டிருக்கிறது என்று சொல்வது உண்மையாக இருந்தாலும், உழைப்புப் பிரிவினை தனிப்பட்டவர்களின் பரிவர்த்தனையை முற்கோளாகக் கொண்டிருக்கிறது என்று சொல்வது தவறானதாகும். உதாரணமாக, பெரு நாட்டு மக்களிடையே

---

* உதாரணமாக, ஆடம் ஸ்மித் பின்வருமாறு எழுதுகிறார்: ''உழைப்பின் சம அளவுகள்—எல்லாக் காலங்களிலும், இடங்களிலும்—தொழிலாளிக்குச் சமமதிப்புடையவை என்று கூறலாம். அவனுடைய வழக்கமான ஆரோக்கியம், பலம், உற்சாகம், வழக்கமான தேர்ச்சி, திறமை முதலியவற்றோடு அவர் எப்பொழுதும் தம்முடைய சுகம், சுதந்திரம், சந்தோஷத்தின் அதே அளவைச் செலவிட வேண்டும். அவர் கொடுக்கும் விலை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவருக்குக் கிடைக்கும் பொருள்களின் அளவு எப்படி இருந்த போதிலும் சில சமயங்களில் அந்த விலையினால் அதிகமான அளவையும் வேறு சமயங்களில் குறைவான அளவையும் வாங்கலாம். அவற்றின் மதிப்புத்தான் மாறுபடுகிறதே தவிர, அவற்றை வாங்குகின்ற உழைப்பின் மதிப்பு அல்ல.... எனவே, தன்னுடைய மதிப்பில் ஒருபோதும் மாறுபடாத உழைப்பு மட்டுமே எல்லாப் பண்டங்களின் மதிப்பையும்... மதிப்பிடுகின்ற கடைசி அளவுகோல், உண்மையான அளவுகோல்.... அதுதான் அவற்றின் உண்மையான விலை....'' [*Wealth of Nations*, Book 1, Chapter 5.]

உழைப்புப் பிரிவினை என்பது மிகவும் அசாதாரணமான அளவுக்கு வளர்ச்சி அடைந்திருந்த போதிலும் தனிப்பட்டவர்கள் பரிவர்த்தனை, பண்டங்கள் வடிவத்தில் உற்பத்திப் பொருள்களின் பரிவர்த்தனை அங்கே நடைபெறவில்லை.

டேவிட் ரிக்கார்டோ, ஆடம் ஸ்மித்துக்கு மாறுபட்ட வகையில், உழைப்பு நேரத்தின் மூலமாகப் பண்டங்களின் மதிப்பு நிர்ணயிக்கப்படுவதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்; முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் இந்த விதியைத் தீர்மானமாக மறுப்பது போல வெளிப்பார்வைக்குத் தோன்றிய போதிலும் இந்த விதி அவற்றுக்கும் பொருந்துவதை எடுத்துக் காட்டுகிறார். ரிக்கார்டோவின் ஆராய்ச்சிகள் மதிப்பின் தனி அளவோடு மட்டுமே சம்பந்தப்பட்டவை; இதைப் பொறுத்தவரை இந்த விதி இயங்குவது திட்டவட்டமான வரலாற்று ரீதியான முன்நிபந்தனைகளைப் பொறுத்தது என்பதை மட்டுமாவது அவர் அறிந்திருக்கிறார்.

''மனிதனுடைய தொழிலின் மூலமாக உற்பத்தியின் அளவைப் பெருக்கக் கூடிய பண்டங்களுக்கும் உற்பத்தியில் தங்குதடையில்லாத போட்டி இருக்கின்ற பண்டங்களுக்கும் மட்டுமே''

உழைப்பு நேரத்தின் மூலமாக மதிப்பை நிர்ணயிக்க முடியும் என்கிறார்.*

இதன் உண்மையான அர்த்தம் என்னவென்றால் மதிப்பு விதியின் முழு வளர்ச்சி பெரிய அளவு தொழில் உற்பத்தியும் சுதந்திரமான போட்டியும் நடைபெறுகிற சமுதாயத்தை, அதாவது நவீன முதலாளித்துவ சமுதாயத்தை முற்கோளாகக் கொள்கிறது என்பதாகும். மற்ற விஷயங்களைப் பொறுத்தவரை, ரிக்கார்டோ உழைப்பின் முதலாளித்துவ வடிவத்தை சமூக உழைப்பின் சாசுவதமான இயற்கை வடிவம் என்று கருதுகிறார். ரிக்கார்டோ வர்ணிக்கிற பூர்வீகச் செம்படவனும் பூர்வீக வேடனும், தொடக்கத்திலிருந்தே பண்டங்களின் உடைமையாளர்கள்; அவர்கள் தங்களுடைய மீனையும் வேட்டை விலங்கையும், இந்தப் பரிவர்த்தனை மதிப்புகளில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கும்

* David Ricardo, *On the Principles of Political Economy and Taxation*, Third Edition, London, 1821, p. 3.

உழைப்பு நேரத்தின் அளவு வீதப்படி பரிவர்த்தனை செய்து கொள்பவர்கள். அப்படிச் செய்யும் பொழுது, அந்தப் பூர்வீகச் செம்படவனும் வேடனும் தாங்கள் பயன்படுத்திய கருவிகளின் மதிப்பை 1817ம் வருடத்திய லண்டன் பங்கு மார்க்கெட்டின் வருடாந்தர அட்டவணையின்படிக் கணக்கிடுகின்ற கால முரண்பாட்டைச் செய்து விடுகிறார். முதலாளித்துவ சமூகத்தைத் தவிர ரிக்கார்டோவுக்குத் தெரிந்த ஒரே சமூக அமைப்பு ''திருவாளர் ஓவனின் இணைவகங்கள்''[15] மட்டுமே என்பது போலத் தோன்றுகிறது. இப்படி முதலாளித்துவ எல்லையால் சூழப்பட்டிருந்தாலும் ரிக்கார்டோ முதலாளித்துவப் பொருளாதாரத்தை—அதன் மேல் மட்டத்தின் தோற்றத்திலிருந்து கீழ் மட்ட அடுக்குகள் அடிப்படையாகவே மாறுபடுகின்றன—தத்துவக் கூர்மையோடு ஆராய்கிறார். அதனால்தான் புரோகாம் பிரபு ரிக்கார்டோவைப் பற்றிப் பின்வருமாறு சொல்ல முடிந்தது:

''திரு. ரிக்கார்டோ வேறு ஏதாவதொரு கோளத்திலிருந்து இங்கே வந்து விட்டவர் போலத் தோன்றுகிறது.''

ஸிஸ்மோண்டி ரிக்கார்டோவுடன் நேரடியாக வாதிடுகிற பொழுது, பரிவர்த்தனை மதிப்பை உருவாக்கும் உழைப்பின் தனிவகையான சமூகத் தன்மையை வலியுறுத்துவது* மட்டுமல்லாமல், மதிப்பை அவசியமான உழைப்பு நேரத்துக்கு,

''மொத்த சமூகத்தின் தேவைகளுக்கும், அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவுக்கும் உள்ள உறவுக்கு''

வகைப்படுத்துவது ''நமது பொருளாதார முன்னேற்றத்தின் சிறப்பான அம்சம்'' என்றும் எடுத்துக் காட்டுகிறார்.**

---

* Sismondi, *Etudes sur l'économie politique*, tome 2, Bruxelles, 1838. ''வர்த்தகம் இந்தப் பிரச்சினை முழுவதையும் பயன் மதிப்புக்கும் பரிவர்த்தனை மதிப்புக்கும் உள்ள எதிர்நிலையாகக் குறைத்து விட்டது'' (p. 162).

** *Ibid.*, pp. 163—166 *et seq.*

பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குகிற உழைப்பு பணத்தினால் சிதைக்கப்படுகிறது என்ற புவகில்பெரின் கருத்தைப் பற்றி ஸிஸ்மோண்டி கொண்டிருந்த அக்கறை முடிந்து விட்டது. புவகில்பெர் பணத்தைக் கண்டனம் செய்ததைப் போல ஸிஸ்மோண்டி பெரிய அளவிலிருக்கும் ஆலை மூலதனத்தைக் கண்டனம் செய்கிறார். ரிக்கார்டோவின் அரசியல் பொருளாதாரம் தன்னுடைய இறுதித் தீர்மானத்துக்கு ஈவிரக்கமின்றி வருகிறது; ஆனால் அங்கேயே முடிந்து விடுகிறது. ஸிஸ்மோண்டி அரசியல் பொருளாதாரத்தின் மீதே அவநம்பிக்கையைத் தெரிவிப்பதன் மூலமாக இந்த முடிவிலிருக்கும் குறையை நிரப்புகிறார்.

மூலச் சிறப்புடைய அரசியல் பொருளாதாரத்துக்கு இறுதியான வடிவம் கொடுத்த ரிக்கார்டோ பரிவர்த்தனை மதிப்பை உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிப்பதை மிகத் தெளிவான முறையில் உருவாக்கி விளக்கியிருப்பதால், பொருளியலாளர்கள் எழுப்பிய விவாதங்கள் பிரதானமாக அவருக்கு எதிராகவே இருப்பது இயற்கையாகும். இந்த விவாதத்தில் அடங்கியிருக்கும் பிரதானமான, அற்பமான* அம்சங்களை நீக்கிவிட்டால், அதைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

**ஒன்று.** உழைப்பு என்பதே பரிவர்த்தனை மதிப்பு உடையதாகும். வெவ்வேறு வகை உழைப்புக்கு வெவ்வேறு பரிவர்த்தனை மதிப்புகள் உண்டு. பரிவர்த்தனை மதிப்பின் அளவுகோலாக பரிவர்த்தனை மதிப்பையே ஒருவர் பயன்படுத்தினால் அவர் நச்சுச் சுழலில் சிக்கி விடுகிறார். ஏனென்றால் அளவுகோலாகப் பயன்படும் பரிவர்த்தனை மதிப்புக்கு மற்றொரு அளவுகோல் தேவைப்படுகிறது. இந்த ஆட்சேபத்தைக் கீழ்க்கண்ட பிரச்சினையில் காணலாம்: உழைப்பு நேரமே

* ரிக்கார்டோவின் புத்தகத்தின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு ஸே என்பவரின் குறிப்புகளோடு கான்ஸ்டன்ஸ் என்பவரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்புகளில் இந்த விவாதம் மிகவும் சாரமற்ற வடிவத்தில் அமைந்திருப்பதாகச் சொல்லலாம். சமீபத்தில் திருவாளர் மாக்ளியோட் வெளியிட்ட *Theory of Exchange*[16] (London, 1858) என்ற புத்தகத்தில் இந்த விவாதம் அதிகமான புலமைப் பகட்டோடு, தகாத துணிபுகளோடு அமைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

மதிப்பின் உள்ளார்ந்த அளவுகோல் என்ருல் இந்த அடிப்படையில் எவ்வாறு கூலிகளை நிர்ணயிப்பது? கூலி உழைப்புக் கோட்பாட்டின் மூலம் இதற்குப் பதிலளிக்கலாம்.

இரண்டு. ஓர் உற்பத்திப் பொருளின் பரிவர்த்தனை மதிப்பு அதில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்துக்குச் சமம் என்ருல், ஒருவர் உழைத்த ஒரு நாளின் பரிவர்த்தனை மதிப்பு அது தயாரிக்கும் உற்பத்திப் பொருளுக்குச் சமம். வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல் கூலி உழைப்பின் உற்பத்திக்குச் சமமாக இருக்க வேண்டும்.* ஆனுல் உண்மை அதற்கு எதிரிடையாக இருக்கிறது. *Ergo*, இந்த ஆட்சேபணையைப் பின்வரும் பிரச்சினையாகத் தரலாம்: பரிவர்த்தனை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் உற்பத்தி உழைப்பு நேரத்தினுல் மட்டுமே நிர்ணயிக்கப்படும் பொழுது, உழைப்பின் பரிவர்த்தனை மதிப்பு அதன் உற்பத்திப் பொருளின் பரிவர்த்தனை மதிப்பைக் காட்டி

---

* ரிக்கார்டோவுக்கு எதிராக முதலாளித்துவப் பொருளியலாளர்கள் எழுப்பிய இந்த ஆட்சேபத்தைப் பிற்காலத்தில் சோஷலிஸ்டுகள் எடுத்துக் கொண்டார்கள். இந்த சூத்திரம் தத்துவ ரீதியாகச் சரி என்று வைத்துக் கொண்டால், நடைமுறை இந்தக் கோட்பாட்டுக்கு விரோதமாக இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டு, முதலாளித்துவ சமூகம் தன்னுடைய கோட்பாடுகளிலிருந்து பெறுவதாகச் சொல்லப்படும் செய்முறை முடிவுகளுக்கு உடன்பட வேண்டும் என்று கோரினுர்கள். இவ்விதத்தில் ஆங்கில சோஷலிஸ்டுகள் மட்டுமாவது ரிக்கார்டோவின் பரிவர்த்தனை மதிப்பு பற்றிய சூத்திரத்தை அரசியல் பொருளாதாரத்துக்கு எதிராகத் திருப்பினுர்கள். பழைய சமூகத்தின் அடிப்படையான கோட்பாட்டையே புதிய சமூகத்தின் அடிப்படைக் கோட்பாடாக அறிவிக்கும் அரிய சாதனையைச் செய்தவர் புருதோன். அது மட்டுமின்றி மூலச் சிறப்புடைய ஆங்கில அரசியல் பொருளாதாரத்தின் இறுதி முடிவைச் சுருக்கி ரிக்கார்டோ உபயோகித்த சூத்திரத்தைத் தான் கண்டு பிடித்ததாகச் சொன்ன பெருமையும் அவருடையதாகும். ரிக்கார்டோவின் சூத்திரத்தின் கற்பனுவாத விளக்கத்தை இங்கிலாந்தில் அதற்குள் பூராவுமே மறந்து விட்டதனுல், ஆங்கிலக் கால்வாய்க்கு அக்கரையிலிருந்த புருதோன் அதைக் ''கண்டுபிடித்தார்'' என்பது முன்பே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. (என்னுடைய *Misère de la philosophie*, Paris, 1847, la valeur constituée பற்றிய பகுதியைப் பார்க்கவும்.)

லும் குறைவாக இருக்கும் நிலை எப்படி ஏற்படுகிறது? மூல தனத்தைப் பற்றிய நமது ஆராய்ச்சியில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது.

மூன்று. மாறிக் கொண்டிருக்கும் தேவை, அளிப்பு நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல பண்டங்களின் சந்தை விலை அவற்றின் பரிவர்த்தனை மதிப்புக்கு மேலே ஏறுகிறது, அல்லது கீழே இறங்குகிறது. எனவே பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு அவற்றிலடங்கியிருக்கிற உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படவில்லை; தேவைக்கும் அளிப்புக்கும் உள்ள உறவைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விசித்திரமான முடிவின் காரணமாக பரிவர்த்தனை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பரிவர்த்தனை மதிப்பிலிருந்து வேறுபட்ட ஒரு சந்தை விலை ஏற்படுவது எப்படி என்ற கேள்விக்கு இடம் கொடுக்கிறது. அல்லது பரிவர்த்தனை மதிப்பு விதி எப்படி தன்னுடைய எதிர்மறையை உறுதியாக்குகிறது? போட்டி பற்றிய தத்துவத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது.

நான்கு. இதுதான் கடைசியானதும் பார்வைக்கு மிகத் தீர்மானமானதுமான ஆட்சேபணையாகும். ஆனால் பெரும்பாலும் வேடிக்கையான உதாரணங்களின் மூலமாகவே இந்த ஆட்சேபணை எழுப்பப்படுகிறது. இது பின்வருமாறு: பரிவர்த்தனை மதிப்பு என்பது ஒரு பண்டத்தில் அடங்கியிருக்கிற உழைப்பு நேரத்தைத் தவிர வேறு எதுவுமில்லை என்றால் எவ்விதமான உழைப்பும் பெற்றிராத பண்டங்கள் பரிவர்த்தனை மதிப்பைக் கொண்டிருப்பது எப்படி? வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இயற்கைச் சக்திகளுக்குப் பரிவர்த்தனை மதிப்பு எப்படி ஏற்படுகிறது? வாரத்தைப் பற்றிய கோட்பாட்டில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது.

## இரண்டாம் அத்தியாயம்

# பணம் அல்லது எளிமையான நாணயச் செலாவணி முறை

சர் ராபர்ட் பீல் கொண்டுவந்த 1844 மற்றும் 1845ம் வருட வங்கிச் சட்டத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் நடை பெற்ற விவாதத்தில் பேசும் பொழுது,[17] காதலினுல் முட்டா ளான மனிதர்களைக் காட்டிலும், பணத்தின் இயல்புகளைப் பற்றிச் சிந்தித்து முட்டாளான மனிதர்களே அதிகம் என்று கிளாட்ஸ்தன் கூறினுர். அவர் பிரிட்டிஷ்காரர்களைப் பற்றி பிரிட்டிஷ்காரர்களிடம் பேசினுர். டச்சுக்காரர்கள் நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே பணத்தைப் பற்றிய சிந் தனைகளுக்குத் தேவையான தெய்வீக அறிவு கொண்டிருந்த வர்கள் (பேட்டி எழுப்பும் சந்தேகங்கள் ஒரு புறம் இருக் கட்டும்). எனவே பணத்தைப் பற்றிய சிந்தனைகளின் காரண மாக அவர்கள் தங்களுடைய நிதானத்தை ஒரு போதும் இழக்கவில்லை.

பணத்தின் பிறப்பிடம் பண்டம் என்பதைப் புரிந்து கொண்டவுடனேயே பணத்தை ஆராய்கின்ற பொழுது ஏற் படும் அடிப்படையான சிக்கல் தீர்ந்து விடும். அதன் பிறகு அதற்குரிய தனிவகையான வடிவத்தை நாம் சரியாகப் புரிந்து கொண்டால் மட்டும் போதும். இது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஏனென்ருல் எல்லா முதலாளித்துவ உறவுகளுமே முலாம் பூசப்பட்டவையாக இருக்கின்றன. அதாவது அவை பண உறவுகளாகத் தோன்றுகின்றன. எனவே பண வடிவம்—இந்த வடிவத்துக்கு முற்றிலும் வேறு பட்டிருக்கின்ற—வரம்பு கடந்த வேறுபாடுகளை உடைய உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது.

பின்வரும் ஆராய்ச்சியில் பண்டங்களின் பரிவர்த்தனை யிலிருந்து நேரடியாகப் பிறக்கும் பண வடிவங்களை மட்டுமே எடுத்துக் கொள்கிருேம்; கடன் பணம் போன்ற பண வடிவங்

களை (அவை உற்பத்தியின் உயர்ந்த கட்டத்துக்கு உரியவை) எடுத்துக் கொள்ளவில்லை என்பதை மனதிலிறுத்திக் கொள்வது முக்கியமானதாகும். இங்கே வசதிக்காக தங்கத்தைப் பணப் பண்டம் என்று வைத்துக் கொள்கிறோம்.

## 1. மதிப்பின் அளவு

செலாவணி முறையின் முதல் கட்டம் உண்மையான செலாவணிக்குத் தயாரிப்பான கோட்பாட்டு அளவில் மட்டுமே உள்ள கட்டமாகும். பயன் மதிப்புகளாக இருக்கின்ற பண்டங்கள் அவை ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை மதிப்புகளாக, பொருண்மைப்படுத்தப்பட்ட எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் திட்டவட்டமான அளவுகளாகத் தோன்றக் கூடிய வடிவத்தை முதலில் எடுக்க வேண்டும். இந்த நிகழ்வில் முதலாவது அவசியமான நடவடிக்கையாகப் பண்டங்கள் ஒரு தனிவகையான பண்டத்தை, உதாரணமாக, தங்கத்தை ஒதுக்கி வைக்கின்றன; அது எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் அல்லது எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பின் நேரடியான கருத்துருவமாகிறது என்பதை முன்பே பார்த்தோம். இப்பொழுது பண்டங்கள் தங்கத்தை எந்த வடிவத்தில் பணமாக மாற்றுகின்றன என்பதைச் சற்று நேரம் திரும்பிப் படிப்போம்.

1 டன் இரும்பு=2 அவுன்ஸ் தங்கம்
1 குவார்ட்டர் கோதுமை=1 அவுன்ஸ் தங்கம்
1 நூற்றெடை காப்பிக் கொட்டை=$^1/_4$ அவுன்ஸ் தங்கம்
1 நூற்றெடை பொட்டாஷ்=$^1/_2$ அவுன்ஸ் தங்கம்
1 டன் பிரேசில் மரம்=$1^1/_2$ அவுன்ஸ் தங்கம்
Y பண்டங்கள்=X அவுன்ஸ் தங்கம்

இந்த சமன்பாடுகளின் தொடர் வரிசையில்இரும்பு,கோதுமை, காப்பிக் கொட்டை, பொட்டாஷ் முதலியவை ஒன்றுக்கொன்று ஒரேவிதமான உழைப்பின் பொருண்மைப்படுதலாக, அதாவது தங்கத்தில் பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பாகத் தோன்றுகின்றன. அதில் பல்வேறு பயன்

மதிப்புகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற ஸ்தூலமான உழைப்பின் தனிவகையான அம்சங்கள் எல்லாம் பூரணமாக அழிக்கப்பட்டு விட்டன. மதிப்புகள் என்ற வகையில் அவை ஒரே மாதிரியானவை, அதாவது அதே உழைப்பின் பொருண்மையாக்கம் அல்லது அதே பொருண்மையாக்கப்பட்ட உழைப்பு—தங்கம். அவை அதே உழைப்பின் ஒரேவகையான பொருண்மையாக்கம் என்பதால், ஒரே ஒரு வழியில் மட்டுமே, அதாவது அளவு ரீதியாக வேறுபடுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவற்றின் பயன் மதிப்புகள் உழைப்பு நேரத்தின் சமமில்லாத அளவுகளைக் கொண்டிருப்பதால் அவை மதிப்பின் வெவ்வேறு அளவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்தத் தனியான பண்டங்களை எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் புறவுருவங்களாக ஒன்றுக்கொன்று ஒப்பிட முடியும். ஏனென்றால் அவை விலக்கப்பட்ட பண்டமாகிய, அதாவது தங்கத்தின் வடிவத்தில் எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தோடு ஒப்பிடப்பட்டு விட்டன. இதே விதமான சுறுசுறுப்பான உறவு—அதன் விளைவாகவே பண்டங்கள் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை மதிப்புகளாக மாறுகின்றன—தங்கத்தில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தை எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தச் செய்கிறது; அதில் கொடுக்கப்பட்ட ஓர் அளவுதான் இரும்பு, கோதுமை, காப்பிக் கொட்டை முதலானவற்றின் வெவ்வேறு அளவுகளில் சொல்லப்படுகிறது; சுருக்கமாகச் சொல்வதென்றால் எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளில் சொல்லப்படுகிறது அல்லது பண்டங்களின் சமமதிப்புகளின் முடிவில்லாத தொடர் வரிசையில் நேரடியாக எடுத்துக்காட்டப்படுகிறது. எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் தங்கத்தைக் கொண்டு எடுத்துரைக்கப்படுவதால், தங்கத்தின் பரிவர்த்தனை மதிப்பும் எல்லாப் பண்டங்களாலும் நேரடியாக எடுத்துரைக்கப்படுகிறது. பண்டங்கள் தாங்களாகவே ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை மதிப்பாக வடிவமெடுத்துக் கொள்வதால் அவை தங்கத்தை எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாக அல்லது பணமாக மாற்றுகின்றன.

எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் தங்கத்தின் மூலமாக அளக்கப்படுவதால் தங்கம் மதிப்பின் அளவு

என்று பயன்படுகிறது; ஒரு குறிப்பிட்ட அளவு தங்கத்துக்கு உழைப்பு நேரத்தின் சம அளவுகளைக் கொண்டிருக்கும் பண்டத்தின் குறிப்பிட்ட அளவில் தங்கம் எடுத்துரைக்கப்படுகிறது. தொடக்கத்தில், இவ்வாறு மதிப்பின் அளவாகச் செயல்படுவதால் அதனுல் பண்டங்களின் எல்லா சமமதிப்புகளையும் கொண்டு அதனுடைய சொந்த மதிப்பு நேரடியாக அளக்கப்படுவதால் தங்கம் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாக அல்லது பணம் என்ருகிறது. இதற்கு மாருக, எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் இப்பொழுது தங்கத்தின் மூலமாக எடுத்துரைக்கப்படுகிறது. இவ்வாறு எடுத்துக்காட்டப்படும் பொழுது குண ரீதியான அம்சத்தையும் அளவு ரீதியான அம்சத்தையும் ஒருவர் வேறுபடுத்திக் கொள்வது அவசியம். பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு என்பது ஒரே தன்மையான உழைப்பு நேரத்தின் சமத்துவத்தின் புற உருவமாக இருக்கிறது. பண்டங்கள் தங்கத்தோடு சமமாக்கப்படுகின்ற அளவுக்கு, அவை ஒன்றோடொன்றும் சமமாக்கப்படுவதால், பண்டத்தின் மதிப்பு இப்பொழுது முழுமையாக எடுத்துரைக்கப்பட்டு விட்டது. அவற்றுடைய தங்க சமமதிப்பு, ஒரு பக்கத்தில் அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் எக்காலத்துக்கும் உரிய தன்மையைப் பிரதிபலிக்கிறது; மறு பக்கத்தில் அதன் அளவைப் பிரதிபலிக்கிறது. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு இப்படி எக்காலத்துக்கும் உரிய சம மதிப்பின் வடிவத்திலும் அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் மூலமாக இந்த சமமதிப்பின் அளவையும் எடுத்துரைக்கும் பொழுது, அதாவது பண்டங்கள் தனியான பண்டத்தோடு ஒப்பிடப்படுகிற ஒரு தனி சமன்பாடு, விலையாக அமைகிறது. விலை எனப்படுவது, செலாவணி முறைக்குள் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு தோன்றுகிற மாற்றப்பட்ட வடிவமாகும்.

ஆகவே, பண்டங்களின் மதிப்புகள் தங்கத்தின் விலைகளில் எடுத்துரைக்கப்படும் அதே நிகழ்வின் விளைவாக தங்கம் மதிப்பின் அளவாகவும், பிறகு பணமாகவும் மாற்றப்படுகிறது. எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் வெள்ளி அல்லது கோதுமை அல்லது செம்பு ஆகியவற்றின் மூலமாக அளக்கப்பட்டு அதன்படியே வெள்ளி அல்லது கோதுமை

அல்லது செம்பு விலைகளின் மூலமாக எடுத்துரைக்கப்படு மானால், வெள்ளி அல்லது கோதுமை அல்லது செம்பு மதிப் பின் அளவு என்றாகும்; அதனால் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாகும். பரிவர்த்தனை மதிப்புகள் என்ற வகை யில் பண்டங்கள் செலாவணி முறையில் விலைகள் என்று தோன்றுவதற்கு, அந்த செலாவணிக்கு முற்பட்டிருக்க வேண்டும். எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் தங்கத்தின் மூலமாக மதிப்பிடப்படுவதால்தான் தங்கம் மதிப்பின் அளவுகோலாகிறது. எனினும் இந்தச் சுறுசுறுப் பான உறவின் எக்காலத்துக்கும் உரிய தன்மை—தங் கம் அளவுகோலாக இருப்பதற்குரிய தகுதி இதிலிருந்து மட்டுமே தோன்றுகிறது—ஒவ்வொரு பண்டமும் தங்கத் தின் மூலம் அவை இரண்டிலும் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின்படி மதிப்பிடப்படுவதை முற்கோளாகக் கொண் டிருக்கிறது. எனவே பண்டம், தங்கம் இரண்டுக்குமே உண் மையான அளவுகோல் உழைப்புதான்; அதாவது, பண்டமும் தங்கமும் நேரடியான பரிவர்த்தனையின் மூலம் சமமாக்கப் படுகிற பரிவர்த்தனை மதிப்புகளாகும். இந்த சமமாக்கப் படுதல் நடைமுறையில் எவ்வாறு செய்யப்படுகிறது என் பதை சாதாரணச் செலாவணி முறையின் கட்டுக்கோப்புக் குள் விவாதிக்க இயலாது. எனினும் தங்கமும் வெள்ளி யும் உற்பத்தி செய்யப்படும் நாடுகளில், குறிப்பிட்ட அளவு தங்கம், வெள்ளியில் குறிப்பிட்ட அளவு உழைப்பு நேரம் நேரடியாகவே சேர்க்கப்படுகிறது என்பது தெளிவு. தங்கம், வெள்ளியை உற்பத்தி செய்யாத நாடுகளும் இதே முடிவுக்கு சுற்றிவளைத்து வருகின்றன; உள்நாட்டு உற்பத்திகளை நேரடி யாகவோ, மறைமுகமாகவோ பரிவர்த்தனை செய்கின்றன; அதாவது, உலோகச் சுரங்கங்கள் உள்ள நாடுகளின் தங் கம், வெள்ளியில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் குறிப்பிட்ட அளவுக்கு தங்களுடைய சராசரி தேசிய உழைப் பின் குறிப்பிட்ட அளவுக்குப் பரிவர்த்தனை செய்கின்றன. கோட்பாட்டு ரீதியாக, தங்கம் மதிப்பின் அளவாக இருக்க வேண்டுமானால் அது மாறக் கூடிய மதிப்பாக இருக்க வேண் டும். ஏனென்றால் உழைப்பு நேரத்தின் நிலையுருவம் என்ற வகையில்தான் அது மற்ற பண்டங்களின் சமமதிப்பாக முடி யும். ஆனால் ஸ்தூலமான உழைப்பின் உற்பத்தித் திறனில்

ஏற்படும் மாற்றங்களின் விளைவாக ஒரே விதமான பயன் மதிப்புகளின் சமமில்லாத அளவுகளில் ஒரே அளவு உழைப்பு நேரம் அடங்கியிருக்கிறது. எல்லாப் பண்டங்களையும் தங்கத்தின் மூலமாக மதிப்பிடுவது—ஏதாவதொரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பை மற்றொரு பண்டத்தின் பயன் மதிப்பின் மூலமாக எடுத்துரைப்பது போல—ஒரு குறிப்பிட்ட தருணத்தில் தங்கம் திட்டவட்டமான அளவு உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை முற்கோளாகக் கொண்டிருக்கிறது என்பதே. முன்பு சொல்லப்பட்ட பரிவர்த்தனை மதிப்பின் விதி தங்கத்தின் மதிப்பில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் பொருந்துவதே. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு மாருதபடி இருக்குமானல் தங்கத்தின் அடிப்படையில் அவற்றின் விலைகள் பொதுவாக அதிகரிப்பது தங்கத்தின் பரிவர்த்தனை மதிப்பு இறங்கினல் மட்டுமே சாத்தியமாகும். தங்கத்தின் பரிவர்த்தனை மதிப்பு மாருதபடி இருக்குமானல் தங்கத்தின் அடிப்படையில் விலைகள் பொதுவாக அதிகரிப்பது எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளும் அதிகரித்தால் மட்டுமே சாத்தியமாகும். பண்டங்களின் விலைகள் பொதுவாக வீழ்ச்சியடைகிற பொழுது இதற்கு எதிராக நடைபெறும். தங்கத்தின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நேரத்தில் ஏற்படும் மாற்றத்தினல் ஓர் அவுன்ஸ் தங்கத்தின் மதிப்பு குறைந்தால் அல்லது கூடுதலடையுமானல் அப்பொழுது அது மற்ற எல்லாப் பண்டங்களுக்கும் உள்ள உறவில் சமமானபடி குறையும் அல்லது கூடுதலாகும்; எனவே அந்த எல்லாப் பண்டங்களுக்கும் அது ஒரு திட்டவட்டமான அளவு உழைப்பு நேரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதைத் தொடர்ந்து செய்யும். அதே பரிவர்த்தனை மதிப்புகள் இப்பொழுது முன்னைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கின்ற தங்கத்தின் அளவுகளில் மதிப்பிடப்படும்; ஆனல் அவை தங்களுடைய மதிப்புகளுக்குப் பொருத்தமான வகையில் மதிப்பிடப்படும். எனவே ஒன்றுக்கொன்று சார்பு நிலையில் அவற்றின் மதிப்பு அப்படியே நீடிக்கும். 2 : 4 : 8 என்ற விகிதம், 1 : 2 : 4 என்றே அல்லது 4 : 8 : 16 என்றே மாறினலும் அதே பழைய விகிதம்தான். தங்கத்தின் மதிப்பு மாறிக் கொண்டிருக்கிறபடியால் பரிவர்த்தனை மதிப்புகள்

தங்கத்தின் மாறிக் கொண்டிருக்கும் அளவுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன என்பது தங்கம் மதிப்பின் அளவுகோலாக இருப்பதைத் தடுப்பதில்லை. அது போல தங்கத்தின் மதிப்பில் பதினைந்தில் ஒரு பங்குதான் வெள்ளியின் மதிப்பாக இருப்பதனால் இந்தப் பொறுப்பை வெள்ளி நிறைவேற்றுவதும் தடுக்கப்படுவதில்லை. தங்கம், பண்டங்கள் இரண்டுக்குமே உழைப்பு நேரம்தான் அளவுகோல். எல்லாப் பண்டங்களையும் தங்கத்தின் மூலமாக அளத்தலினால்தான் தங்கம் மதிப்பின் அளவாக மாறுகிறது. எனவே பண்டங்களை ஒரே அளவால் அளக்கக் கூடியவையாக்குவது பணம் என்று நினைப்பது செலாவணி நிகழ்வினால் ஏற்படுகிற கற்பனை மட்டுமே.* இதற்கு மாறாக, பொருண்மைப்பட்ட

---

* பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு பண்டங்களின் விலைகளுக்கு முற்பட்டது என்பதை அரிஸ்டாட்டில் உணர்ந்திருக்கிறார்: ''பணம் தோன்றுவதற்கு முன்பே பரிவர்த்தனை நடைபெற்றிருக்க வேண்டும் என்பது தெளிவு; ஏனென்றால் ஒரு வீட்டுக்கு ஐந்து படுக்கைகள் பரிவர்த்தனையாகக் கொடுக்கப்படுகின்றனவா அல்லது ஐந்து படுக்கைகளின் பண மதிப்பு கொடுக்கப்படுகின்றதா என்பதில் எந்த வேறுபாடும் கிடையாது.'' இதற்கு மாறாக, பண்டங்கள் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை மதிப்பு வைத்திருக்கின்ற வடிவம் விலை மட்டுமே என்பதால் அவர் பண்டங்களைப் பணத்தினால் ஒரே அளவாக அளக்கப்படக் கூடியதாக்குகிறார். ''எல்லாப் பொருள்களுக்கும் விலை இருக்க வேண்டும் என்று இதனால் புலப்படும். விலை இருந்தால் பரிவர்த்தனை எப்போதும் நடைபெறும். அதிலிருந்து மனிதனுக்கு மனிதன் தொடர்பு ஏற்பட்டு ஒரு சமூகம் உருவாகும். பணம் அளவாகப் பயன்படுவதன் மூலம் பொருள்களை ஒரே அளவால் அளக்கப்படக் கூடியதாக்குகிறது; அவற்றை சமமாக்கி விடுகிறது. பரிவர்த்தனை இல்லையென்றால் மனித சமூகமும் இருக்காது; சமத்துவம் இல்லையென்றால் பரிவர்த்தனை இருக்காது; ஒரே அளவால் அளக்கப்படும் தன்மை இல்லையென்றால் சமத்துவம் இருக்காது.'' பணத்தால் அளக்கப்படுகிற பல்வேறு பொருள்களும் முற்றிலும் ஒரே அளவால் அளக்கப்பட முடியாத அளவுகள் என்ற உண்மை அரிஸ்டாட்டிலுக்குத் தெரியும். பரிவர்த்தனை மதிப்புகள் என்ற முறையில் பண்டங்களின் ஒருமையை அவர் தேடுகிறார். ஆனால் அவர் பண்டைக்கால கிரீசில் வாழ்ந்த காரணத்தால், அவரால் அதைக் கண்டு பிடிக்க முடியாது போய் விட்டது. சாராம்சத்தில் ஒரே அளவால் அளக்கப்பட

உழைப்பு நேரம் என்ற முறையில் பண்டங்கள் ஒரே அள வால் அளக்கப்படக் கூடும் என்பதுதான் தங்கத்தைப் பண மாக மாற்றுகிறது.

பண்டங்கள் பயன் மதிப்புகள் என்ற ஸ்தூல வடிவத்தில் பரிவர்த்தனை நிகழ்வில் ஈடுபடுகின்றன. பண்டங்கள் அந்நிய மாக்கப்படுதலின் விளைவாக மட்டுமே அவை எக்காலத்துக் கும் உரிய சமமதிப்புகளாகின்றன. அவற்றின் விலையை முடிவு செய்வது எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புக்கு அவற்றைப் பெயரளவில் மாற்றுவது மட்டுமே; தங்கத் தோடு உள்ள இந்த சமன்பாட்டை இனிமேல்தான் நடை முறைக்குக் கொண்டுவர வேண்டும். ஆனால் விலைகள் பண்டங் களைத் தங்கமாகவோ அல்லது கற்பனையான தங்கமாகவோ பெயரளவுக்கு மட்டுமே மாற்றம் செய்கின்றன என்பதால்— அதாவது, பண்டங்கள் பணமாக இருத்தல் அவற்றின் உண் மையான வாழ்க்கையிலிருந்து இன்னும் பிரிக்கப்படவில்லை என்பது உண்மையே—தங்கம் கற்பனையான பணமாக, மதிப் பின் அளவாக மட்டுமே மாற்றப்பட்டிருக்கிறது. தங்கத் தின் திட்டவட்டமான அளவுகள் உண்மையில் உழைப்பு நேரத்தின் திட்டவட்டமான அளவுகளுக்குப் பெயர்களாக இருக்கின்றன. எந்த வடிவத்தில் தங்கம் பணமாகக் கெட்டிப் படுத்தப்படுகிறது என்பது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகள் ஒன்றுக்கொன்று எப்படிப் பிரதிநிதித்துவப்படுகின்றன என்ற முறையைப் பொறுத்ததாகும்.

பண்டங்கள் இப்பொழுது ஒன்றுக்கொன்று இரட்டை வடிவத்தில் எதிர்நிற்கின்றன. அவை உண்மையில் பயன் மதிப்புகளாகவும் பெயரளவுக்குப் பரிவர்த்தனை மதிப்புகளாக வும் இருக்கின்றன. அவை இப்பொழுது ஒன்றுக்கொன்று

---

முடியாத பொருள்களைப் பணத்தின் மூலம் ஒரே அளவாக அளக்குமாறு செய்து—நடைமுறைத் தேவைகளுக்கு அவசிய மான அளவுக்கு மட்டும்—இந்த நெருக்கடியிலிருந்து அவர் தன்னை விடுவித்துக் கொள்கிறார். "இவ்வளவு அதிகமாக வேறுபட்டிருக்கிற பொருள்கள் ஒரே அளவால் அளக்கப் படுவதென்பது உண்மையில் முடியாது; ஆனால் தேவையின் காரணமாக அவை போதுமான அளவுக்கு அப்படி ஆக லாம்" (Aristoteles, *Ethica Nicomachea*, L. 5, C. 8, edit. Bekkeri, Oxonii, 1837).

அவற்றில் அடங்கியிருக்கும் உழைப்பின் இரட்டை வடிவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஏனென்றால் குறிப்பிட்ட ஸ்தூலமான உழைப்பு அவற்றின் பயன் மதிப்பு என்பதாக உண்மையிலேயே இருக்கிறது. எக்காலத்துக்கும் உரிய சூக்கும உழைப்பு நேரம் அவற்றின் விலையில் (விலையில் அவை அனைத்துமே ஒரே மதிப்புப் பொருளின் புற வடிவங்கள்; அளவு ரீதியாக மட்டுமே வேறுபடக் கூடியவை) கற்பனையான வாழ்க்கையை மேற்கொள்கிறது.

ஒரு பக்கத்தில் பரிவர்த்தனை மதிப்புக்கும் விலைக்கும் உள்ள வேறுபாடு பெயரளவில்தான் இருக்கிறது; ஆடம் ஸ்மித் சொல்வது போல பண்டங்களின் உண்மையான விலை உழைப்பு; பணம் அவற்றின் பெயரளவு விலை. ஒரு குவார்ட்டர் கோதுமை தானியம் முப்பது நாள் உழைப்புக்குச் சமம் என்று சொல்வதற்குப் பதிலாக ஓர் அவுன்ஸ் தங்கம் முப்பது உழைக்கும் நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொழுது அது ஓர் அவுன்ஸ் தங்கத்துக்குச் சமம் என்று ஒருவர் இப்போது சொல்கிறார். மறு பக்கத்தில், இந்த வேறுபாட்டை வெறும் பெயரளவு வேறுபாடு மட்டுமே என்று சொல்ல முடியாத அளவுக்கு இருப்பதால் நடைமுறையில் செலாவணி நடைபெறும் பொழுது பண்டத்தை அச்சுறுத்தும் அத்தனை புயல்களும் அதன் மீது மையம் கொண்டிருக்கின்றன. ஒரு குவார்ட்டர் கோதுமை முப்பது நாள் உழைப்பைக் கொண்டிருக்கிறது. எனவே அதை உழைப்பு நேரத்தின் மூலம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் தங்கம் கோதுமையிலிருந்து வேறுபட்ட பண்டமாகும். ஒரு குவார்ட்டர் கோதுமையின் விலையில் எதிர்பார்க்கப்பட்டது போல அது ஓர் அவுன்ஸ் தங்கமாக உண்மையில் மாறுகிறதா என்பதை செலாவணி முறைதான் காட்ட முடியும். அந்தக் கோதுமை பயன் மதிப்பு என்பதை நிரூபிக்கிறதா, அதிலடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் அளவு, ஒரு குவார்ட்டர் கோதுமையை உற்பத்தி செய்வதற்குச் சமூகத்துக்கு அவசியமாகத் தேவைப்படும் உழைப்பு நேரத்தின் அளவுதான் என்பதை நிரூபிக்கிறதா என்பதைப் பொறுத்திருக்கிறது. பண்டமே ஒரு பரிவர்த்தனை மதிப்பு ஆகும்; பண்டத்துக்கு ஒரு விலை உண்டு. பரிவர்த்தனை மதிப்புக்கும் விலைக்கும் இடையிலுள்ள இந்த வேறுபாடு, பண்டத்தில் அடங்கியிருக்கின்ற குறிப்பிட்ட தனி

நபர் உழைப்பானது அதன் எதிரிடையான, தனித்துவம் இல்லாத, சூக்குமமான, பொது நிலையான (இந்த வடிவத்தில் மட்டுமே தோன்றக் கூடிய சமூக) உழைப்பாக, அதாவது பணமாகப் பிரதிநிதித்துவப்படுவது அந்நியமாதலின் மூல மாகவே முடியும் என்ற உண்மையின் பிரதிபலிப்பாகும். இத்தகைய பிரதிநிதித்துவத்தை அது பெற முடியுமா முடியாதா என்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்தது போலத் தோன்றுகிறது. எனவே விலை பரிவர்த்தனை மதிப்புக்குப் பண்டத்திலிருந்து பெயரளவில் மட்டுமே வேறுபட்டிருக்கும் ஒரு வாழ்க்கை வடிவத்தைக் கொடுக்கிறது என்ற போதிலும், பண்டத்தில் அடங்கியிருக்கும் உழைப்பின் இரண்டு அம்சங்களும் வெளிப்பாட்டின் வெவ்வேறு முறைகளாகவே இது வரை தோன்றினாலும், மறு பக்கத்தில், எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் புற உருவமான தங்கம் ஸ்தூல மான பண்டங்களை மதிப்பின் கற்பனையான அளவாக மட்டுமே எதிர்நோக்கும் பொழுது, எப்படியிருந்தாலும் பரிவர்த்தனை மதிப்பின் வெளிப்பாடாக விலையின் வாழ்க்கையும் அல்லது மதிப்பின் அளவாக தங்கத்தின் வாழ்க்கையும், பளபளக்கும் தங்கத்துக்குப் பரிவர்த்தனையாகப் பண்டங்கள் அந்நியமாதலின் தேவையையும், இதன்படி அவை அந்நியமாதலடையாமலிருப்பதன் சாத்தியத்தையும் இன்றியமையாததாக்குகிறது. சுருக்கமாகச் சொல்வதென்றால், உற்பத்திப் பொருள் பண்டமாக இருப்பதனால் அல்லது ஒதுங்கியிருக்கும் தனி நபர் ஒருவரின் குறிப்பிட்ட உழைப்பானது அதற்கு நேரிடையான எதிர்ப்பான, அதாவது சூக்கும மான எக்காலத்துக்கும் உரிய உழைப்பின் மூலமாக எடுத்துரைக்கப்பட்டால்தான் சமூக செயல்திறத்தோடு இருக்கும் என்பதனால் ஏற்படுகின்ற மொத்த முரண்பாடும் இங்கே மறைவான வடிவத்தில் இருக்கிறது. பண்டங்களை வைத்துக் கொண்டு பணத்தை நிராகரிக்கவும், தனிப்பட்ட பரிவர்த்தனையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியை வைத்துக் கொண்டு இந்த வகையில் உற்பத்திக்கு அவசியமான நிபந்தனைகள் வேண்டாம் என்கிற கற்பனாவாதிகள், பணத்தை ''ஒழிப்பதற்கு'' முனைகிற பொழுது—தொடக் கூடிய நிலையில் இருக்கும் பணத்தை மட்டுமல்லாமல் மதிப்பின் அளவு என்ற நிலையில் அது பெறுகின்ற தெளிவில்லாத கற்பனையான

நிலையையும் கூட ஒழிக்க முனைகிற பொழுது—அவர்கள் முரண்பாடில்லாமல் இருக்கிறார்கள். ஏனென்றால் பார்க்க முடியாததான மதிப்பின் அளவுக்குப் பின்னே உறுதியான பணம் மறைந்திருக்கிறது.

தங்கம் மதிப்பின் அளவாகவும் பரிவர்த்தனை மதிப்பு விலையாகவும் மாற்றமடைந்திருக்கும் நிகழ்வின் பிரகாரம் எல்லாப் பண்டங்களும் அவற்றின் விலைகளில் எடுத்துரைக்கப்படும் பொழுது, அவை வெவ்வேறு அளவுகளில் தங்கத்தின் கற்பனை அளவாகும். அவை ஒரே பொருளின், அதாவது தங்கத்தின் வெவ்வேறு அளவுகள் என்பதால் அவை ஒரே மாதிரியாகவும் ஒப்பிடக் கூடியனவாகவும் ஒரே அளவால் சரியாக அளக்கத்தக்கதாகவும் இருக்கின்றன. எனவே **அளத்தலின் அடிப்படை அளவான** தங்கத்தின் திட்டவட்டமான அளவோடு அவற்றைச் சேர்க்கின்ற தொழில்நுட்பத் துறை சார்ந்த தேவை ஏற்படுகிறது. இந்த அடிப்படை அளவு அதன் சரிநேர் கூறான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவை மறுபடியும் சரிநேர் கூறான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அது அளவுகோலாக வளர்ச்சி அடைகிறது.* எனினும் தங்கத்தின் அளவுகளே எடையில்தான் கணக்கிடப்படுகின்றன. உலோகங்களை நிறுப்பதற்குப் பொதுவாகப் பயன்படும் ஆதார எடைகள் முன்னரே தயாரிக்கப்பட்ட ஆதார அளவுகளைக் கொண்டிருக்கின்றன. முன்காலத்தில் உலோக நாணயங்கள் எங்கெங்கு உபயோகத்தில் இருந்தனவோ அங்கு ஆரம்பத்தில் இவை விலையின் ஆதார அளவுகளாகப் பயன்

---

* இங்கிலாந்தில் பணத்தின் ஆதார அளவான ஓர் அவுன்ஸ் தங்கத்தை அதன் சரிநேர் கூறான பகுதிகளாகப் பிரிக்காதிருப்பது விசித்திரமான உண்மையாகும். அதற்குப் பின்வருமாறு விளக்கம் கொடுக்கப்படுகிறது: "நம்முடைய பணவியல் முறை தொடக்கத்தில் வெள்ளியை மட்டுமே ஆதார அளவாகப் பயன்படுத்தியது; எனவே ஓர் அவுன்ஸ் வெள்ளியை அதன் சரிநேர் கூறான சில்லறைக் காசுகளாக எப்பொழுதும் பிரிக்கலாம். ஆனால் பிறகு தங்கம் அதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது. வெள்ளிக்கு மட்டுமே ஏற்றதாக இருந்த பணவியல் முறையில் தங்கத்தை நுழைத்ததனால், ஓர் அவுன்ஸ் தங்கத்தை சரிநேர் கூறான பகுதிகளாகப் பிரிக்க முடியாமல் போய் விட்டது" (James Maclaren, *A Sketch of the History of the Currency*, London, 1858, p. 16).

பட்டன. இனிமேல் பண்டங்கள் உழைப்பு நேரத்தின் மூல மாக அளக்கப்படுகிற பரிவர்த்தனை மதிப்புகளாக ஒப்பிடப் படுவதில்லை; ஆனால் தங்கத்தின் மூலமாக அளவிடப்படுகிற ஒரே வகையின் அளவுகளாகவே ஒப்பிடப்படுவதால், மதிப் பின் அளவாகிய தங்கம் விலையின் ஆதார அளவாக மாறுகிறது. பண்டத்தின் விலைகளைத் தங்கத்தின் வெவ்வேறு அளவு கள் மூலமாக ஒப்பிட்டுச் சொல்வது தங்கத்தின் கற்பனை யான அளவுகளைக் குறிக்கின்ற எண்களில் கெட்டிப்படுத்தப் பட்டு தங்கத்தை ஆதார அளவாகவும் அது சரிநேர் கூறான பகுதிகளாகப் பிரிக்கப்படுவதாகவும் பிரதிநிதித்துவமளிக் கிறது. தங்கத்திற்கு மதிப்பின் அளவு என்ற முறையிலும் விலையின் ஆதார அளவு என்ற முறையிலும் மிகவும் வெவ் வேறான தனி வகைச் செயல்கள் இருக்கின்றன. இதில் ஒன்றை மற்றொன்றோடு குழப்பிக் கொள்வதனால் மிக மட்டமான கோட்பாடுகள் தோன்றியிருக்கின்றன. பொருண்மைப்படுத் தப்பட்ட உழைப்பு நேரம் என்ற முறையில் தங்கம் மதிப் பின் அளவாகிறது; அதுவே திட்டவட்டமான எடையுள்ள உலோகம் என்ற முறையில் விலையின் ஆதார அளவாகிறது. தங்கம் பரிவர்த்தனை மதிப்பு என்ற முறையில் மற்ற பண் டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளோடு ஒப்பிடப்படுவதால் அது மதிப்பின் அளவாகிறது; விலையின் ஆதார அளவு என்ற அம்சத்தில் தங்கத்தின் திட்டவட்டமான அளவு தங்கத்தின் மற்ற அளவுகளுக்கு அடிப்படை அளவாகப் பயன்படுகிறது. தங்கத்தின் மதிப்பு மாறக் கூடியது என்பதால் அது மதிப் பின் அளவாகிறது; அதை மாறவியலாத எடையளவுள்ள அடிப்படை அளவாக நிர்ணயித்திருப்பதால் அது விலையின் ஆதார அளவாகிறது. ஒரே வகையைச் சேர்ந்த வெவ்வேறு அளவுகளை அளக்கின்ற எல்லா உதாரணங்களையும் போல இங்கும் நிலையான தன்மையும், அளவுகள் துல்லியமாக இருப் பதும் அவசியமாகும். குறிப்பிட்ட அளவு தங்கத்தை அளப் பதற்குரிய அடிப்படை அளவாகவும் அதன் சரிநேர் கூறான பகுதிகளை இதன் உட்பிரிவுகளாகவும் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை, தங்கத்தின் திட்டவட்டமான அளவுக்கும் (இதன் மதிப்பு மாறக் கூடியது என்பது தெரிந்ததே) பண் டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளுக்கும் இடையே மதிப்பு களின் நிலையான விகிதம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக ஓர்

எண்ணம் தோன்றக் காரணமாயிற்று. ஆனால் தங்கம் விலையின் ஆதார அளவாக வருவதற்கு முன்பே பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகள் விலைகளாக, தங்கத்தின் அளவுகளாக மாறி விடுகின்றன என்ற உண்மையை இக்கருத்து புறக்கணிக்கிறது. தங்கத்தின் மதிப்பில் எத்தகைய மாற்றம் ஏற்பட்ட போதிலும், தங்கத்தின் வெவ்வேறு அளவுகள் தங்களுக்கிடையே அதே மதிப்புகளின் விகிதத்தை எப்பொழுதும் பிரதிநிதித்துவப்படுத்தும். தங்கத்தின் மதிப்பு 1,000 சதவிகிதம் வீழ்ச்சி அடையுமானால், 12 அவுன்ஸ் தங்கத்தின் மதிப்பு அப்பொழுதும் ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலையை விட பன்னிரெண்டு மடங்கு அதிகமாகத்தான் இருக்கும். விலைகளைப் பொறுத்தவரை, தங்கத்தின் வெவ்வேறு அளவுகள் தங்களுக்கிடையே கொண்டிருக்கும் அளவுப் பொருத்தமே முக்கியமாகும். மறு பக்கத்தில், ஓர் அவுன்ஸ் தங்கத்தின் மதிப்பு உயர்ந்தாலும் அல்லது குறைந்தாலும், அது எந்த விதத்திலும் அதன் எடையைப் பாதிக்காததைப் போல, அதன் சரிநேர் கூறுன பகுதிகளின் எடையும் பாதிக்கப்படுவதில்லை. எனவே தங்கத்தின் மதிப்பில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அது எப்பொழுதுமே நிலையான முறையில் விலையின் ஆதார அளவாகப் பயன்படக் கூடியது.*

---

* "பணத்தின் மதிப்பு தொடர்ச்சியாக மாற்றமடையலாம். எனினும் அது முற்றிலும் நிலையாக இருப்பது மாதிரியே மதிப்புக்கு நல்ல அளவுகோலாகும். அதன் மதிப்பு குறைந்து விடுவதாக வைத்துக் கொள்வோம்....குறைவதற்கு முன்பு ஒரு கினியா நாணயத்திற்கு மூன்று புஷல் கோதுமை அல்லது ஆறு நாள் உழைப்பை வாங்கலாம். குறைந்த பிறகு, இரண்டு புஷல் கோதுமை அல்லது நான்கு நாட்கள் உழைப்பை மட்டுமே வாங்க முடிகிறது. இரண்டு உதாரணங்களிலும் பணத்துக்கும் கோதுமைக்கும் உழைப்புக்கும் உள்ள உறவுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், அவற்றின் பரஸ்பர உறவுகளை நாம் ஊகிக்க முடியும்; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒரு புஷல் கோதுமை இரண்டு நாட்கள் உழைப்புக்குச் சமம் என்பதைக் காண முடியும். மதிப்பை அளவிடுவது என்பது இதை மட்டுமே குறிப்பதால், விலையின் இறக்கத்துக்கு முன்பும் பின்பும் இதை சுலபமாகச் செய்யலாம்; மதிப்பின் அளவுகோலாக எது சிறப்போடு இருந்தாலும் அதன் சொந்த மதிப்பில் ஏற்படுகிற மாற்றங்களிலிருந்து முற்றிலும் சுயேச்சையாக இருக்கும்" (Samuel Bailey, *Money and its Vicissitudes*, London, 1837, pp. 9-10).

உலோக நாணயத்தின் இயல்பினுல் நிர்ணயிக்கப்பட்ட சரித்திர ரீதியான நிகழ்வின் காரணமாக (இதைப் பின்னர் விளக்குவோம்) விலையின் ஆதார அளவாக இயங்கி வந்த விலையுயர்ந்த உலோகங்களின் எடைகள் தொடர்ந்து மாறிக் கொண்டும் குறைந்து கொண்டுமிருந்த போதிலும் அவற்றுக்குக் குறிப்பிட்ட எடைகளின் பெயர்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக, ஆங்கில பவுன் ஸ்டெர்லிங் (pound sterling) அதன் முந்திய எடையின் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவான எடையைக் குறிக்கிறது. இணைப்புக்கு முந்திய[18] ஸ்காட்லாந்துப் பவுண்ட் *1/36* பகுதியையும், பிரான்சின் லிவ்ரே (livre) *1/74* பகுதியையும், ஸ்பானிஷ் மரவேதி (maravedi) *1/1,000*க்கும் குறைவான பகுதியையும், போர்த்துகீசிய ரீய் (rei) இன்னும் குறைவான பகுதியையும் குறிக்கின்றன. சரித்திர வளர்ச்சி உலோகங்களின் குறிப்பிட்ட எடைகளின் பணப் பெயர்களை அந்த எடைகளின் சாதாரணப் பெயர்களிலிருந்து பிரிக்குமாறு செய்தது.* அளக்கின்ற அடிப்படை அளவின் பெயரும் அதன் சரிநேர் கூருன பகுதிகளும் அவற்றின் பெயர்களும் ஒரு பக்கத்தில், முற்றிலும் சம்பிரதாயமானவையே; மறு பக்கத்தில் நாணயச் செலாவணியின் எல்லைக்குள் அவற்றை எக்காலத்துக்கும் உரியவையாகவும் மிகவும் அவசியமானவையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இது சட்ட முறைகளினுல் செய்யப்பட வேண்டும். இதற்குரிய முறையான சட்டங்களைக் கொண்டுவரும் பொறுப்பு அரசாங்கத்தின் மீது விழுந்தது.** எந்த உலோகம் பணத்தின்

---

* ''இந்த நாணயங்களின் பெயர்கள் இப்பொழுது கற்பனையளவில் மட்டுமே இருக்கின்றன; ஆனுல் ஒவ்வொரு தேசத்திலும் இவையே மிகவும் பழமையான நாணயங்கள்; அவற்றின் எல்லாப் பெயர்களும் சில காலத்துக்கு உண்மையாகவிருந்தன'' (இவ்வளவு பொதுவான முறையில் சொல்லப்பட்டிருக்கும் பிந்திய கருத்து சரியானதல்ல); ''அவை உண்மையாக இருந்த காரணத்தாலேயே அவை கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன'' (Galiani, *Della Moneta*, *op. cit.*, p. 153).

** முல்லர் என்ற புத்தார்வவாதி பின்வருமாறு கூறுகிருர்: ''சுதந்திரமான ஒவ்வொரு அரசரும் உலோக நாணய முறையை ஏற்படுத்துவதற்கும் அதற்குப் பெயரளவில் ஒரு

பொருளாகப் பயன்பட்டது என்பது அன்றைய குறிப்பிட்ட சமூக நிலைமைகளைப் பொறுத்ததாகும். விலையின் ஆதார அளவுகோல் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாக

---

சமூக விலையையும் வரிசைமுறையும் நிலையையும் பட்டத்தையும் ஏற்படுத்துவதற்கு உரிமை கொண்டவர் என்பது நமது கருத்தாகும்'' (Adam H. Müller, *Die Elemente der Staatskunst*, Berlin, 1809, Band 2, p. 288). ஜெர்மன் அரசவையின் உறுப்பினரான முல்லர் பட்டத்தைப் பற்றிச் சொல்வது சரியாக இருக்கலாம்; ஆனால் அவர் உள்ளடக்கத்தை மறந்து விடுகிறார். அவருடைய ''கருத்துக்கள்'' எவ்வளவு குழப்பமானவை என்பது பின்வரும் பகுதியில் தெளிவாகக் காணப்படுகிறது: ''நாணயங்களின் விலையை சரியாக நிர்ணயிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எல்லோரும் உணர்கிறார்கள். அதிலும் இங்கிலாந்து போன்ற நாட்டில் அந்த நாட்டின் அரசாங்கம் உன்னதமான பரோபகார நோக்கத்தோடு கைம்மாறு கருதாமல் நாணயத்தை வெளியிடுவதால் இது மிக முக்கியமானதாகும்'' (பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தங்களுடைய சொந்தச் செலவில் நாணயங்களைத் தயாரிப்பதாக திரு. முல்லர் நினைக்கிறார் போலும்). ''அரசருக்குரிய பங்குக்கு வரி விதிக்கப்படுவதில்லை, இன்ன பிற. எனவே தங்கத்தின் நாணயச் சாலை விலையை சந்தை விலைக்கு மேல் அதிகமாக வைப்பதென்று அரசாங்கம் முடிவு செய்தால், இப்பொழுது ஒரு அவுன்ஸ் தங்கத்துக்கு 3 பவுன் 17 ஷில்லிங் $10^1/_2$ பென்ஸ் கொடுப்பதற்குப் பதிலாக, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலையை 3 பவுன் 19 ஷில்லிங் என்று நிர்ணயிக்க முடிவு செய்தால், எல்லாப் பணமும் நாணயச் சாலையை நோக்கி வந்துவிடும்; அங்கே வாங்கப்படும் வெள்ளி சந்தையில் குறைவான விலைக்குக் கிடைக்கும் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படும்; அந்தத் தங்கம் மறுபடியும் நாணயச் சாலைக்குக் கொண்டுபோகப்படும். இதனால் பணவியல் முறையே குழப்பத்தில் சிக்கிவிடும்'' (*op. cit.*, pp. 280, 281). இங்கிலாந்தின் நாணயச் சாலையில் ஒழுங்கை ஏற்படுத்துவதற்காக முல்லர் தன்னுடைய கருத்துக்களில் ''குழப்பத்தை'' ஏற்படுத்திக் கொள்கிறார். ஷில்லிங், பென்ஸ் என்பவை வெறும் பெயர்களே, அதாவது ஓர் அவுன்ஸ் தங்கத்தின் திட்டவட்டமான பின்னங்களின் பெயர்கள்; அவை வெள்ளி மற்றும் செப்புக் காசுகளால் குறிக்கப்படுகின்றன. ஆனால் அவர் ஒரு அவுன்ஸ் தங்கத்தை தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றின் மூலமாக மதிப்பிடுவதாகக் கற்பனை செய்து கொள்கிறார்; இங்கிலாந்துக்கு மூவகைப்பட்ட மதிப்பின் ஆதார அளவைத்

இருந்தது தெரிந்ததே. உதாரணமாக, இங்கிலாந்தில் உலோகத்தின் எடையான அவுன்சை பென்னிவெயிட்டுகள், கிரெயின்கள், காரட்ஸ் டிராய் (pennyweights, grains, carats troy) என்று பிரித்திருந்தார்கள்; ஆனால் பணத்தின் அடிப்படை அளவான ஓர் அவுன்ஸ் தங்கம் $3^7/_8$ சவரன்களாகவும், ஒரு சவரன் 20 ஷில்லிங்குகளாகவும், ஒரு ஷில்லிங்கு 12 பென்ஸ்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. இதன்படி 22 காரட் தங்கத்தின் 100 பவுண்டுகள் (1,200 அவுன்ஸ்கள்) 4,672 சவரன்கள், 10 ஷில்லிங்குகளுக்குச் சமமாகும். ஆனால் தேசங்களின் எல்லைகள் மறைந்து விடுகின்ற உலகச் சந்தையில், பணத்தின் இப்படிப்பட்ட ஆதார அளவுகளின் தேசிய அம்சங்களும் மறைந்து போய்விடுகின்றன. இவற்றுக்குப் பதிலாக பொதுவாக உலோகங்களை நிறுப்பதற்குப் பயன்படும் எடைகளின் ஆதார அளவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு பண்டத்தின் விலை அல்லது அது பெயரளவுக்கு மாற்றப்படுகிற தங்கத்தின் அளவு தங்கத்தின் ஆதார அளவின் பணப் பெயர்களில் இப்பொழுது சொல்லப்படுகிறது. அதாவது, ஒரு குவார்ட்டர் கோதுமை ஓர் அவுன்ஸ் தங்கத்துக்குச் சமம் என்று சொல்வதற்குப் பதிலாக, அது 3 பவுன் 17 ஷில்லிங் $10^1/_2$ பென்ஸ்களுக்குச் சமம் என்று ஒருவர் இங்கிலாந்தில் சொல்லுவார். இப்படி எல்லா விலைகளும் அதே இடுபெயரில் சொல்லப்படுகின்றன. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு அடைகின்ற தனிவகையான வடிவம் பணத்தின் இடுபெயர்களாக மாற்றப்பட்டு, அவற்றின் மூல

---

தருகிறார். வெள்ளி தங்கத்தோடு பணத்தின் ஆதார அளவாக இருந்ததை மூன்றாம் ஜார்ஜ் 1816ம் வருடத்தில் தன் 56வது வயதில் 68வது சட்டத்தின்படி ரத்துச் செய்தார். ஆனால் இரண்டாம் ஜார்ஜ் 1734ம் வருடத்திலேயே 14வது வயதில் 42வது சட்டத்தின்படி அதை சட்டபூர்வமாக ஒழித்து விட்டார். நடைமுறையில் இதற்கும் முன்பாகவே அது நின்று போய்விட்டது. அரசியல் பொருளாதாரத்தின் உயர்வான கருதுகோள் என்று சொல்லப்படுகிற நிலையை முல்லர் அடைவதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் குறிப்பாக உதவி செய்தன: ஒன்று, பொருளாதார விவரங்களைப் பற்றிய அவருடைய பரந்த அறியாமை; இரண்டு, அவர் தத்துவ ஞானத்திடம் கொண்டிருந்த முற்றிலும் மேம்போக்கான, கனவுத் தன்மையான மோகம்.

மாக அவைகளின் மதிப்பு த்எடுதுரைக்கப்படுகிறது. பணம் கணக்கிடப்படும் பணமாக மாறுகிறது.*

எப்பொழுது பரிவர்த்தனை மதிப்பு என்ற அம்சம் செல்வத்தின் குறிப்பிட்ட வகையில் நிலையாகி விடுகிறதோ அப்பொழுது பண்டங்களை மூளையில் அல்லது காகிதத்தில் அல்லது வார்த்தைகளில் கணக்கிடப்படும் பணமாக மாற்றுவது நடைபெறுகிறது.** இந்த மாற்றத்துக்குத் தங்கம் என்னும் பொருள் தேவைப்படுகிறது—ஆனால் கற்பனையில் மட்டும் தான். ஆயிரம் பேல்கள் பஞ்சின் மதிப்பைத் தங்கத்தின் குறிப்பிட்ட அவுன்ஸ்கள் எண்ணிக்கை மூலமாக மதிப்பிடுவதற்கும், பிறகு இந்த அவுன்ஸ்களின் எண்ணிக்கையை அவுன்ஸ் கணக்கின் பெயர்களான பவுன், ஷில்லிங், பென்ஸ்களில் சொல்வதற்கு உண்மையான தங்கத்தின் ஓர் அணு கூடத் தேவையில்லை. உதாரணமாக, சர் ராபர்ட் பீல் கொண்டுவந்த 1845ம் வருடத்திய பாங்குச் சட்டத்துக்கு முன்பு ஸ்காட்லாந்தில் ஓர் அவுன்ஸ் தங்கம் கூட செலாவணியில் இருக்கவில்லை. எனினும் பிரிட்டிஷ் கணக்கு முறைகளின் அடிப்படை அளவுகோலான 3 பவுன் 17 ஷில்லிங்குகள் $10^1/_2$ பென்ஸ்கள் என்று சொல்லப்படுகிற ஓர் அவுன்ஸ் தங்கம் அங்கே சட்டபூர்வமாக விலையின் ஆதார அளவாகப் பயன்பட்டது. இது போலவே சீனாவுக்கும் சைபீரியாவுக்கும் இடையே பண்டங்களின் பரிவர்த்தனையில் விலையின் ஆதார அளவாக வெள்ளி பயன்படுகிறது. எனினும் இந்த வர்த்தகம் உண்மையில் பண்டமாற்று மட்டுமே. எனவே கணக்

---

* ''ஹெல்லெனியர்கள் (Hellenes) பணத்தை எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்று அனாஹர்ஸிசைக் கேட்ட பொழுது அவர் 'கணக்குப் போடுவதற்கு' என்று பதிலளித்தார்'' (Athenaeus, *Deipnosophistae*, L. 4, 49, v. 2, [p. 120], ed. Schweighäuser, 1802).

** ஆடம் ஸ்மித்தின் புத்தகங்களை பிரெஞ்சு மொழியில் முதலில் மொழிபெயர்த்தவர்களில் ஒருவரான கர்னியேருக்குக் கணக்கிடப்படும் பணத்தின் உபயோகத்துக்கும் உண்மையான பணத்தின் உபயோகத்துக்குமுள்ள விகிதத்தை நிர்ணயிக்க வேண்டும் என்ற விசித்திரமான யோசனை ஏற்பட்டது. இது பத்துக்கு ஒன்று என்ற விகிதத்திலிருக்கிறது என்று அவர் கூறுகிறார் (G. Garnier, *Histoire de la monnaie depuis les temps de la plus haute antiquité*, t. 1, p. 78).

கிடப்படும் பணம் என்ற முறையில் தங்கத்துக்கு அதனுடைய ஆதார அடிப்படை அளவோ அதனுடைய உட்பிரிவுகளோ உண்மையிலே நாணய வடிவமாக இருக்கின்றனவா என்பதைப் பொறுத்து எந்த வேறுபாடும் இருப்பதில்லை. வெற்றியாளர் வில்ஹெல்மின் (William the Conqueror) ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் ஒரு பவுன் ஸ்டெர்லிங்—அப்பொழுது இது சுத்தமான ஒரு பவுன் வெள்ளியாக இருந்தது—மற்றும் ஷில்லிங் (ஒரு பவுனில் $^1/_{20}$ பகுதி) கணக்கிடப்படும் பணமாக மட்டுமே இருந்தன. ஒரு பவுன் வெள்ளியில் $^1/_{240}$ பகுதியான ஒரு பென்னிதான் புழக்கத்திலிருந்த மிகப் பெரிய வெள்ளி நாணயமாகும். மறு பக்கத்தில், இன்று இங்கிலாந்தில் ஷில்லிங்குகளும் பென்ஸ்களும் கிடையாது. எனினும் இவை ஓர் அவுன்ஸ் தங்கத்தின் திட்டவட்டமான பகுதிகளின் சட்டபூர்வமான கணக்குப் பெயர்களாகும். பணம் கணக்கிடப்படும் பணம் என்ற முறையில் பெயரளவுக்கு மட்டுமே இருக்க முடியும்; ஆனால் உண்மையிலேயே இருக்கின்ற பணம் முற்றிலும் வேறுவகையான ஆதார அளவின்படித் தயாரிக்கப்படக் கூடும். வட அமெரிக்காவிலுள்ள பல ஆங்கிலக் குடியேற்றங்களில் பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி வரை ஸ்பானிய, போர்த்துகீசிய நாணயங்களே புழக்கத்தில் இருந்து வந்தன; ஆனால் எல்லா இடங்களிலும் கணக்கிடப்படும் பணம் இங்கிலாந்தில் இருந்தது போலவே இருந்தது.*

விலையின் ஆதார அளவு என்ற முறையில் தங்கத்தை பண்டங்களின் விலைகளைப் போலவே அதே கணக்குப் பெயர்களில் குறிப்பிடுவதால் (உதாரணமாக, 3 பவுன் 17 ஷில்லிங்

---

* 1723ம் வருடத்திய மேரிலாந்துச் சட்டம் புகையிலையை சட்டபூர்வமான நாணயம் என்று அறிவித்தது. ஆனால் ஒரு பவுண்ட் புகையிலை ஒரு பென்னிக்குச் சமமாக்கி அதன் மதிப்பை ஆங்கில தங்கப் பணத்தில் மாற்றிக் கொண்டது. இது leges barbarorum[19] நினைவுபடுத்துகிறது. மேற்கூறியதற்கு மாறுபட்ட வகையில் அது திட்டவட்டமான பணத் தொகைகளை மாடுகள், பசுக்கள் இதரவைகளுக்குச் சமமாக்கியது. இந்த உதாரணத்தில் கணக்கிடப்படும் பணத்தின் உண்மையான பொருள் தங்கமோ வெள்ளியோ அல்ல; மாடும் பசுவும்தான்.

$10^1/_2$ பென்ஸ் என்பது ஓர் அவுன்ஸ் தங்கத்தைக் குறிப்பது போலவே ஒரு டன் இரும்பையும் குறிக்கலாம்) இந்தக் கணக்குப் பெயர்கள் தங்கத்தின் நாணயச் சாலை விலை என்று சொல்லப்படுகின்றன. இதனால் தங்கம் அதனுடைய சொந்தப் பொருள் மூலமாகவே மதிப்பிடப்படுகிறது என்றும் மற்ற பண்டங்களைப் போலன்றி அரசு அதன் விலையை நிர்ணயிக்கிறது என்ற வேடிக்கையான கருத்து ஏற்பட்டது. தங்கத்தின் திட்டவட்டமான எடைகளுக்குக் கணக்குப் பெயர்கள் வைத்ததை இந்த எடைகளுக்கு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தவறாகக் கருதப்பட்டது.* விலைகளை நிர்ணயிக்கும் பொழுது தங்கம் ஒரு காரணியாக இருப்பதால் கணக்கிடப்படும் பணமாக இயங்கும் பொழுது தங்கத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை இல்லை என்பதோடு அதற்கு எந்த விதமான விலையுமே கிடையாது. ஒரு விலையைக் கொண்டிருப்பதற்கு, வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புடையதாகச் செயற்படுகின்ற தனிவகையான பண்டத்தின் மூலமாக எடுத்துரைக்கப்படுவதற்குத் தங்கத்தின் செலாவணிப் போக்கில் மற்றவைகளை விலக்குகின்ற அதே பாத்திரத்தை அடுத்த பண்டம் எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும். ஆனால் மற்ற எல்லாப் பண்டங்களையும் விலக்குகிற இரண்டு பண்டங்கள் அது போலவே ஒன்றையொன்று விலக்கிக் கொள்ளும். எனவே தங்கமும் வெள்ளியும் சேர்ந்தாற்போல சட்டபூர்வமான பணமாக, அதாவது மதிப்பின் அளவாக எங்கே இருக்கிறதோ அங்கே அவற்றை ஒரே விதமான பொருளாகக் கருதி நடத்துகின்ற வீண் முயற்சி எப்பொழுதுமே செய்யப்

* உதாரணமாக, திரு. டேவிட் உர்கார்ட்டின் *Familiar Words* என்ற புத்தகத்தில் பின்வரும் பகுதி காணப்படுகிறது: "தங்கத்தின் மதிப்பைத் தங்கத்தின் மூலமாகத்தான் அளக்க வேண்டும்; எந்தப் பொருளுக்கும் மற்ற பொருள்களில் அதன் சொந்த மதிப்பை அளப்பது எப்படி சாத்தியமாகும்? தங்கத்தின் மதிப்பு அதன் சொந்த எடையால் நிர்ணயிக்கப்படும். அந்த எடைக்குப் போலியான இடுபெயர் கொடுத்து ஓர் அவுன்ஸ் தங்கம் இத்தனை 'பவுன்கள்' மற்றும் பவுன்களின் பகுதிகளுக்குச் சமமானது என்கிறோம். இது அளவைப் போலியாக்குவதே தவிர, ஆதார அளவை ஏற்படுத்துவதாகாது" [pp. 104—105].

படுவதுண்டு. குறிப்பிட்ட அளவு உழைப்பு நேரம் தங்கத்திலும் வெள்ளியிலும் எப்பொழுதுமே ஒரே விகிதத்தில் பொருண்மைப்படுத்தப்பட்டிருப்பதாக ஒருவர் கருதினுல் பிறகு அவர் தங்கமும் வெள்ளியும் ஒரே பொருள் என்று உண்மையிலேயே கருதுவார்; தங்கத்தைக் காட்டிலும் குறைவான மதிப்புடைய பொருளான வெள்ளி என்பது தங்கத்தின் நிரந்தரமான பின்னத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றும் கருதுவார். இங்கிலாந்தில் மூன்றும் எடுவார்டின் ஆட்சிக் காலத்திலிருந்து இரண்டாம் ஜார்ஜ் காலம் வரையில் நாட்டின் பணவியல் முறையின் வரலாறு தங்கம், வெள்ளி மதிப்புகளின் சட்டபூர்வமாக விதிக்கப்பட்ட விகிதத்துக்கும் அவற்றின் மதிப்பில் நடைமுறையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களுக்கும் ஏற்பட்ட மோதலினுல் தோன்றிய தொடர் நெருக்கடிகளைக் கொண்டதாக இருக்கிறது. சில சமயங்களில் தங்கத்தின் மதிப்பு அதிகமாக உயர்ந்தது; வேறு சமயங்களில் வெள்ளியின் மதிப்பு அதிகமாக உயர்ந்தது. எந்த உலோகத்தின் மதிப்பு மிகவும் கீழ் விகிதத்தில் மதிக்கப்பட்டதோ அந்த உலோகம் செலாவணியிலிருந்து வாபஸ் பெறப்படும்; அது உருக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இந்த இரண்டு உலோகங்களுக்குமிடையே மதிப்பின் விகிதம் மறுபடியும் சட்ட ரீதியாக மாற்றப்படும், ஆனுல் வெகு சீக்கிரத்தில் பெயரளவிலிருக்கிற இந்தப் புதிய மதிப்பும் கூட நடைமுறையில் இருக்கிற மதிப்பு விகிதத்தோடு மோதிக் கொள்ளும். நம் காலத்தில் வெள்ளியோடு ஒப்பிடும் பொழுது தங்கத்தின் மதிப்பு லேசான அளவுக்குச் சொற்ப காலத்துக்குக் குறைந்ததற்கு இந்தியா, சீனு ஆகிய நாடுகளில் வெள்ளிக்கு அதிகமான தேவை ஏற்பட்டதே காரணமாகும். இதனுல் மேலே சொல்லப்பட்ட அதே நிகழ்வு—வெள்ளியின் ஏற்றுமதியும் செலாவணியில் தங்கம் வெள்ளியை அகற்றியதும்—பிரான்சில் பெரிய அளவுக்கு ஏற்பட்டது. 1855, 1856, 1857 ஆகிய வருடங்களில் பிரான்சில் தங்க ஏற்றுமதி மீது இறக்குமதிக்கிருந்த மிகை அளவு 4,15,80,000 பவுனுகும்; ஆனுல் வெள்ளி இறக்குமதி மீது ஏற்றுமதிக்கு இருந்த மிகையளவு 3,47,04,000 பவுனுகும். பிரான்சைப் போன்ற நாடுகளில் இரண்டு உலோகங்களையும் மதிப்பின்

ஆதார அளவுகளாக சட்டபூர்வமாக அங்கீகரித்திருப்பதோடு இரண்டுமே சட்ட ஏற்புச் செலாவணியாகப் பயன்படுகின்றன. மேலும் பிரான்சில் ஒவ்வொருவரும் தன் விருப்பத்துக் கேற்ப எந்த உலோகத்தை வேண்டுமானாலும் கொடுக்கலாம். இப்படிப்பட்ட நாடுகளில் எந்த உலோகத்தின் மதிப்பு உயர்கிறதோ அது உண்மையிலேயே உயர்ந்த விலையைப் பெறுகிறது. மற்ற எல்லாப் பண்டங்களையும் போல அதனுடைய விலையும் விலை ஏறியிருக்கிற அந்த உலோகத்தின் மூலமாக அளக்கப்படுகிறது. அந்த உலோகம் மட்டுமே மதிப்பின் அளவாகப் பயன்படுகிறது. இரண்டு பண்டங்கள் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகிற மதிப்பின் அளவுகளாக இருந்தால், எப்பொழுதுமே அவற்றில் ஏதாவது ஒன்று மட்டுமே உண்மையில் இந்த நிலையைக் காப்பாற்றிக் கொள்ளும் என்பதை இந்தத் துறையின் வரலாற்று ரீதியான எல்லா அனுபவங்களும் சாதாரணமாக எடுத்துக் காட்டுகின்றன.*

## ஆ. பணத்தின் ஆதார அளவு பற்றிய கோட்பாடுகள்

பண்டங்கள் தங்கத்தின் விலைகளின் வடிவத்தில் கற்பனையாக மாற்றப்படுகின்றன; எனவே தங்கம் கற்பனையில் மட்டுமே பணமாக மாற்றப்படுகிறது என்ற உண்மை **பணத்தின் கற்பனையான ஆதார அளவு** என்ற கோட்பாட்டுக்கு வழிவகுத்தது. விலைகளை நிர்ணயிப்பதில் தங்கம் அல்லது வெள்ளி கற்பனையாக மட்டுமே, அதாவது தங்கம், வெள்ளி கணக்கிடப்படும் பணம் என்ற வகையில் மட்டுமே பயன்படுவதால், பவுன், ஷில்லிங்கு, பென்ஸ், தாலெர், பிராங்க் முதலிய சொற்கள் சிந்தனை ரீதியில் மதிப்பின் பகுதிகளைக்

---

* "பணம்தான் வர்த்தகத்தின் அளவுகோல்... எனவே (மற்ற எல்லா அளவுகோல்களையும் போல) இதை இயன்ற அளவுக்கு நிலையானதாக, மாற்றமில்லாததாக வைத்திருக்க வேண்டும். ஆனால் உங்களுடைய பணம் இரண்டு உலோகங்களினால் ஆகியிருக்குமானால், அவற்றின் விகிதமும்... ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்குமானால், இது நிறைவேறாது" (John Locke, *Some Considerations on the Lowering of Interest*, 1691; *Works*, 7th Edition, London, 1768, Vol. 2, p. 65).

குறிக்கின்றனவே தவிர தங்கம் அல்லது வெள்ளியின் எடை களேயோ அல்லது பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பின் எந்த வடிவத்தையுமோ குறிக்கவில்லை என்று சொல்லப் பட்டது. உதாரணமாக, ஓர் அவுன்ஸ் வெள்ளியின் மதிப்பு அதிகரிக்குமாளுல், அது இவ்விதமான பகுதிகளை இன்னும் அதிகமாகக் கொண்டிருக்கும்; எனவே அதைப் பிரிக்க வேண்டியிருக்கும் அல்லது ஷில்லிங்குகளின் அதிகமான எண் ணிக்கையைத் தயாரிக்க வேண்டியிருக்கும். பதினேழாம் நூற்றுண்டின் கடைசியில் தோன்றிய இந்தக் கோட்பாடு, இங்கிலாந்தில் சென்ற முறையில் ஏற்பட்ட வர்த்தக நெருக்கடியின் போது மறுபடியும் முன்வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் வங்கிச் சட்டங்களைப் பற்றிய பொறுக்குக் குழுவின் 1858ம் வருடத்திய அறிக்கையோடு இணைக்கப்பட்ட இரண்டு விசேஷ அறிக்கைகளிலும் இந்தக் கோட்பாட்டை வலியுறுத்திஞர்கள். இங்கிலாந்தில் மூன்ருவது வில்ஹெல்ம் பதவி ஏற்ற சமயத்தில் ஓர் அவுன்ஸ் வெள்ளியின் நாணயச் சாலை விலை 5 ஷில்லிங் 2 பென்ஸ்களாகும். அதா வது, ஓர் அவுன்ஸ் வெள்ளியில் 1/62 பங்கு பென்னி என்றும் 12 பென்ஸ்கள் ஒரு ஷில்லிங்கு என்பதாகும். இந்த ஆதார அளவுப்படி, 6 அவுன்ஸ் எடையுள்ள ஒரு வெள்ளிக் கட்டியை 31 நாணயங்களாக அச்சிடுவார்கள். இவை ஷில்லிங்குகள் எனப்படும். ஓர் அவுன்ஸ் வெள்ளியின் நாணயச் சாலை விலை 5 ஷில்லிங்கு 2 பென்ஸ்களாக இருந்த பொழுது அதன் சந்தை விலை 6 ஷில்லிங்கு 3 பென்ஸ்களாக உயர்ந்தது. அதா வது, அச்சிடப்படாத வெள்ளியில் ஓர் அவுன்ஸ் வாங்குவதற்கு 6 ஷில்லிங்கு 3 பென்ஸ்கள் கொடுக்க வேண்டியிருந்தது. நாணயச் சாலை விலை என்பது ஓர் அவுன்ஸ் வெள்ளியின் பின்னங்களுக்குக் கணக்கிடப்படும் பெயர் மட்டுமே என்று சொல்கிற பொழுது, ஓர் அவுன்ஸ் வெள்ளியின் சந்தை விலை அதன் நாணயச் சாலை விலையைக் காட்டிலும் அதிகரிக்க முடிந்தது எப்படி? இந்தப் புதிருக்குத் தீர்வு மிகவும் சுலபமானதுதான். அந்த நேரத்தில் செலாவணியிலிருந்த 56,00,000 பவுன் வெள்ளிப் பணத்தில் 40,00,000 நாண யங்கள் தேய்ந்து வெட்டப்பட்டு உருமாறிப் போயிருந் தன. மாதிரிச் சோதனையில் 57,200 பவுன் வெள்ளி நாண யங்களை நிறுத்துப் பார்த்த பொழுது அவற்றின் எடை

1,41,000 அவுன்ஸ்களாக இருந்தது; ஆனால் அவை 2,20,000 அவுன்ஸ்களாக இருந்திருக்க வேண்டும். நாணயச் சாலையில், அதே ஆதார அளவை அடிப்படையாகக் கொண்டு வெள்ளி நாணயங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் உண்மையில் செலாவணியிலிருந்த எடை குறைந்த ஷில்லிங்குகள் அவைகளுடைய பெயர்கள் குறித்துக் காட்டியதற்கும் குறைவான வகையில் அவுன்சின் சிறிய பின்னங்களையே பிரதிநிதித்துவப்படுத்தின. சந்தையில் அச்சிடப்படாத வெள்ளியை வாங்கும் பொழுது இந்தக் குறைந்த ஷில்லிங்குகளை அதிக அளவுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் ஏற்பட்ட கஷ்டங்களை முன்னிட்டு எல்லாப் பணத்தையும் புதிதாக அச்சடிப்பதென்று முடிவு செய்யப்பட்ட பொழுது, நிதித் துறைச் செயலாளரான லௌண்ட்ஸ் ஓர் அவுன்ஸ் வெள்ளியின் மதிப்பு அதிகரித்து விட்டதாகக் கூறினார். முன்பு ஓர் அவுன்ஸ் 5 ஷில்லிங்கு 2 பென்ஸ்கள் என்றிருந்ததற்குப் பதிலாக இனிமேல் 6 ஷில்லிங்கு 3 பென்ஸ்கள் ஆக்க வேண்டும் என்றார். ஓர் அவுன்ஸ் வெள்ளியின் மதிப்பு உயர்ந்துவிட்டபடியால் அதன் சரிநேர் கூறான பகுதிகளின் மதிப்பு வீழ்ச்சியடைந்து விட்டது என்று அவர் வற்புறுத்தினார். சரியான செய்முறை நடவடிக்கையை எல்லோரும் திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகத்தான் அவர் தவறான தத்துவத்தைப் பயன்படுத்தினார். அரசாங்கக் கடன்கள் விலை குறைந்த ஷில்லிங்குகளில் ஒப்பந்தமாகியிருக்கின்றன. இப்பொழுது கடன்களைத் தீர்ப்பதற்கு ஆதார அளவு எடையுள்ள நாணயங்களைப் பயன்படுத்துவதா? நீங்கள் பெயரளவில் பெற்ற ஒவ்வொரு 5 அவுன்ஸ் வெள்ளிக்கும் 4 அவுன்ஸ் வெள்ளியைத் திருப்பிக் கொடுங்கள், ஏனென்றால் அவற்றில் உண்மையில் 4 அவுன்ஸ் வெள்ளி மட்டுமே இருந்தது என்று சொல்வதற்குப் பதிலாக அவர் பெயரளவில் 5 அவுன்ஸ் வெள்ளியைத் திருப்பிக் கொடுங்கள்; ஆனால் அவற்றின் வெள்ளி எடையை 4 அவுன்சாகக் குறைத்து விடுங்கள்; இது வரை நீங்கள் 4/5 ஷில்லிங் என்று சொல்லி வந்ததை இனிமேல் 1 ஷில்லிங் என்று சொல்லுங்கள் என்கிறார். லௌண்ட்ஸ் கோட்பாட்டளவில் கணக்கிடப்படும் பெயரைப் பற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய நடவடிக்கை எதார்த்தத்தில் உலோக

உள்ளடக்கத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. மறு பக்கத்தில், அவருடைய எதிரிகள் கணக்கிடப்படும் பெயரை மட்டும் பிடித்துக் கொண்டு ஆதார அளவு எடையுள்ள ஒரு ஷில்லிங்கு அதைக் காட்டிலும் 25 அல்லது 50 சதவிகிதம் குறைந்த எடையுள்ள ஷில்லிங்குக்குச் சமம் என்று கூறி உலோக உள்ளடக்கத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டார்கள். ஜான் லோக் புதிய முதலாளித்துவத்தை எல்லா வழிகளிலும் ஆதரித்தவர்; அவர் உழைக்கும் வர்க்கத்தினருக்கும் ஏழைகளுக்கும் எதிராக தொழில் உற்பத்தியாளர்களேயும், பழைய கால வட்டிக் கடைக்காரர்களுக்கு எதிராக வியாபாரிகளேயும், கடன்களில் மூழ்கிப் போன அரசாங்கங்களுக்கு எதிராக நிதி மூலதன மேல் தட்டுக்காரர்களேயும் ஆதரித்தவர். முதலாளித்துவ சிந்தனே முறையே மனிதனுக்கு வழக்கமான சிந்தனே முறை என்று கூட ஒரு தனிப் புத்தகத்தில் அவர் விளக்கியிருக்கிறுர். அவர் லௌண்ட்ஸ் சவாலே ஏற்றுக் கொண்டார். இந்தப் போட்டியில் ஜான் லோக் வெற்றி பெற்றுர். 10 முதல் 14 ஷில்லிங்குகள் அடங்கிய ஒரு கினியா கடனுக்கு 20 ஷில்லிங்குகள் கொண்ட கினியாவாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டது.* சர் ஜேம்ஸ் ஸ்டுவேர்ட் இந்த நடவடிக்கை

* லோக் மற்ற விஷயங்களுக்குப் பிறகு பின்வருமாறு சொல்கிறுர்: ''...முன்பு கிரவுனின் பகுதியாக இருந்ததை... இப்பொழுது கிரவுன் என்று சொல்லுங்கள்... அதிலுள்ள வெள்ளியின் சம அளவு மற்றெருரு வெள்ளியின் சம அளவுக்கு அதே மதிப்பை எப்போதும் கொண்டிருக்கும்....ஏனென்ருல் ஏதாவதொரு நாணயத்தில் வெள்ளியின் அளவில் 1/20 பகுதி குறைவது அதன் மதிப்பைக் குறைக்கவில்லே யென்ருல், ஏதாவதொரு நாணயத்தில் வெள்ளியின் அளவில் 19/20 பகுதி குறைந்தால் கூட அதன் மதிப்பு குறையாது. ஒரு ஒற்றைப் பென்னியைக் கிரவுன் என்று சொன்னுலும் அதைக் காட்டிலும் [20 அல்லது] 60 மடங்கு அதிக வெள்ளியைக் கொண்டிருக்கும் கிரவுன் நாணயத்தினுல் எவ்வளவு வாசனேப் பொருள்கள் அல்லது பட்டுத் துணி அல்லது வேறு எந்தப் பண்டத்தை வாங்க முடியுமோ அதே அளவை இதைக் கொண்டு வாங்க முடியும்.'' நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பணத்தை உயர்த்த வேண்டியதுதான். ''குறைந்த அளவு வெள்ளிக்கு அதிக அளவு வெள்ளியின் முத்திரையையும் பெயரையும் கொடுப்பதுதான்.'' ஆனுல் ''கடன்களேத் தீர்ப்பதும் பண்டங்களே வாங்குவதும் வெள்

பற்றிப் பின்வரும் சுருக்கத்தைக் கிண்டலாக எழுதியிருக்கிருர்:

"...வரிகளை விதித்ததனுல் அரசுக்கும் கணிசமான பலன் கிடைத்தது; அதே போல கடன் கொடுத்தவர்களுக்கும் அசலும் வட்டியும் கிடைத்தது. இதனுல் மக்களுக்கு அதிகமான இழப்பு என்ற போதிலும் அவர்களுக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்ருல் அவர்களுடைய ஆதார அளவு"

---

ளியே தவிர பெயர்கள் அல்ல." "உயர்த்துவது என்பது எந்த நாணயத்தின் சரிநேர் கூருன பகுதிகளுக்கு விருப்பப்பட்ட பெயர்களைக் கொடுப்பதாகும். அதாவது, இப்பொழுது ஓர் அவுன்சில் அறுபதில் ஒரு பங்கை இன்னும் பென்னி என்று சொல்வதால், நீங்கள் விரும்புகிறபடி அதை உயர்த்திக் கொள்ளலாம்."[20] லௌண்ட்சின் வாதத்துக்குப் பதில் சொல்லுகிற பொழுது, நாணயச் சாலை விலையைக் காட்டிலும் சந்தை விலை அதிகரித்தது வெள்ளியின் மதிப்பு உயர்ந்ததனுலல்ல; நாணயங்களின் எடை குறைந்ததனுல்தான் என்று லோக் கூறினுர். தேய்ந்து போன 77 ஷில்லிங்குகள் ஆதார எடையுள்ள 62 ஷில்லிங்குகளின் எடையைக் காட்டிலும் அதிகம் காட்டவில்லை. கடைசியாக செலாவணியில் வெள்ளி நாணயங்களுக்கு ஏற்படுகிற தேய்மானம் எப்படியிருந்தாலும், இங்கிலாந்தில் வெள்ளியின் நாணயச் சாலை விலையைக் காட்டிலும் சந்தை விலை ஓரளவு அதிகரிக்கவே செய்யும், ஏனென்ருல் இங்கிலாந்தில் வெள்ளி நாணயங்களை ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தாலும் வெள்ளிக் கட்டிகளின் ஏற்றுமதி அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று லோக் சொல்லுவது சரியானதே (*op. cit.*, pp. 54—116 *passim* பார்க்கவும்). தேசியக் கடன் என்ற ஜீவாதாரமான பிரச்சினை பற்றி லோக் எதுவும் சொல்லாமல் கவனமாக ஒதுங்கி விடுகிருர். இது போலவே இன்னெரு சிக்கலான பொருளாதாரப் பிரச்சினையையும் விவாதிக்காமல் விவேகமாக இருந்து விடுகிருர். பரிவர்த்தனை வீதம், வெள்ளிக் கட்டிகளுக்கும் வெள்ளி நாணயங்களுக்கும் உள்ள விகிதம் ஆகிய ஆதாரங்களைக் கொண்டு பார்க்கும் பொழுது, செலாவணியிலிருக்கும் பணத்தின் தேய்மானம் அது இழந்த வெள்ளிக்கு விகிதாச்சாரப்படி ஒருபோதும் இல்லை என்பதே அந்தப் பிரச்சினையாகும். செலாவணி ஊடகத்தைப் பற்றிய பகுதியில் நாம் இந்தப் பிரச்சினைக்கு—அதன் பொதுவான வடிவத்தில்—திரும்புவோம். *A Discourse Concerning Coining the New Money Lighter, in Answer to Mr. Locke's Considerations*, London, 1696 என்ற புத்தகத்தில் நிக்கோலஸ் பார்பான் இந்த விவாதத்தில் லோக்கை ஈடுபடுத்த வீணை முயற்சிகளைச் செய்தார்.

(அவர்களுடைய சொந்த மதிப்பின் ஆதார அளவு) ''தரத்தில் குறைக்கப்படவில்லை.''*

எதிர்காலத்தில் வர்த்தகம் மேலும் வளர்ச்சி அடைகிறபொழுது மக்கள் அதிகமான அறிவுவளர்ச்சி பெறுவார்கள் என்று ஸ்டூவர்ட் நம்பினார். ஆனால் அவர் நினைத்தது நடக்கவில்லை. சுமார் நூற்றிருபது வருடங்களுக்குப் பிறகு, அதே quid pro quo (ஒன்றுக்கு ஒன்று மாற்றும் குற்றம்) மறுபடியும் செய்யப்பட்டது.

ஆங்கிலத் தத்துவஞானத்தில் மாயாவாதக் கருத்துமுதல் வாதத்தை ஆதரித்த பெர்க்லி பாதிரியார் பணத்தின் கற்பனையான ஆதார அளவுக்கு, செய்முறை அனுபவம் நிறைந்த நிதித் துறைச் செயலாளர் கொடுக்கத் தவறிய கோட்பாட்டு ரீதியான முறுக்கைக் கொடுத்தது மிகவும் பொருத்தமே. பெர்க்லி பின்வருமாறு கேட்கிறார்:

*''கிரவுன், லிவ்ரே, பவுன் ஸ்டெர்லிங் முதலியவற்றை* **அப்படிப்பட்ட விகிதங்களின் இடுபெயர்கள்** *அல்லது விளக்கங்கள் என்று கருதலாமா?'' (அதாவது, சூக்கும மதிப்பின் விகிதங்கள்). ''தங்கம், வெள்ளி, காகிதப் பணம் என்பவை அவற்றைக் கணக்கிடுவதற்கும் பதிவு செய்வதற்கும் மாற்றிக் கொடுப்பதற்கும் உரிய டிக்கெட்டுகள் அல்லது குறிவில்லைகளா?'' (மதிப்பின் அளவு விகிதத்துக்கு). ''மற்றவர்களின் செயல் திறனுக்கு'' (சமூக உழைப்பு) ''ஆணையிடுகின்ற* **அதிகாரமே** *உண்மையான செல்வம் அல்லவா? அப்படிப்பட்ட அதிகாரத்தை ஏற்றிச் செல்வதற்கும் பதிவு செய்வதற்கும் உரிய டிக்கெட்டுகளிலும் வில்லைகளிலும் உண்மையாகவே பணம் இருக்கவில்லையா? இந்த டிக்கெட்டுகள் எந்தப் பொருளில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பது அதிகமான முக்கியத்துவம் கொண்டதுதானா?''***

---

* Steuart, *op. cit.*, Vol. 2, p. 156.

** *The Querist, loc. cit.* இப்புத்தகத்தில் *Queries on Money* என்ற பகுதி நகைச்சுவை கொண்டதாக இருக்கிறது. அதில் ''எல்லா அணிகளிலும் இருக்கின்ற கீழ்த்தரமானவர்கள் ஒரு தேசத்தின் செல்வ வளத்துக்குத் தங்கமும் வெள்ளியும் அவசியமானதென்று நினைக்கிறார்கள்; ஆனால் அவை அவ்வளவு அவசியமானவையல்ல'' என்பதை வட அமெரிக்கக் குடியேற்றங்களின் வளர்ச்சி ''பகலொளி போலத் தெளிவாகக் காட்டுகிறது'' என்ற சரியான கருத்து, மற்ற பல விஷயங்களோடு காணப்படுகிறது.

மேலே கொடுக்கப்பட்ட பகுதியில் ஆசிரியர் ஒரு பக்கத்தில் மதிப்பின் அளவை விலையின் ஆதார அளவோடு குழப்பிக் கொள்கிறார்; மறு பக்கத்தில், தங்கத்தையும் வெள்ளியையும் மதிப்பின் அளவாகவும் செலாவணியில் ஊடகம் என்றும் குழப்பிக் கொள்கிறார். செலாவணி வட்டத்திற்குள் விலையுயர்ந்த உலோகங்களுக்குப் பதிலாக வில்லைகளை உபயோகிக்கக் கூடும் என்பதால், இந்த வில்லைகள் தங்கள் நிலையில் ஒன்றுமில்லாததை, அதாவது மதிப்பின் சூக்குமமான கருத்தளவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக பெர்க்லி முடிவு செய்கிறார்.

சர் ஜேம்ஸ் ஸ்டுவேர்ட் பணத்தின் கற்பனையான ஆதார அளவுக் கோட்பாட்டை மிக முழுமையாக விரித்துச் சொல்லியிருப்பதால் அவரைப் பின்பற்றுபவர்கள் (அவர்களுக்கு இவரைத் தெரியாது என்பதால் இவரைப் பின்பற்றுபவர்களே தாங்கள் என்பதை அறியாமல் இருக்கிறார்கள்) ஒரு புதிய வார்த்தையோ அல்லது ஒரு புதிய உதாரணத்தைக் கூடக் கண்டுபிடிக்க அவசியமில்லை. அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

''பணம் என்பது விற்பனை செய்யப்படும் பொருள்களின் தனித்தனியான மதிப்பை அளப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட தன்னிச்சையான, சம பகுதிகளைக் கொண்ட அளவுகோல். அதை நான் கணக்கிடப்படும் பணம் என்று குறிப்பிடுகிறேன். எனவே இந்தப் பணம் விலையாக* இருக்கிற, நாணயப் பணத்திலிருந்து அதிக வித்தியாசமான ஒன்றாகும். ஒவ்வொரு பண்டத்துக்கும் போதுமானபடியும் விகிதாச்சாரப்படியும் சமமதிப்பாக இருக்கக் கூடிய ஏதாவது ஒரு பொருள் உலகத்தில் இல்லையென்ற போதிலும் கூட கணக்கிடப்படும் பணம் என்பது இருக்கக் கூடும்.... டிகிரி, நிமிடம், விநாடி முதலியவை கோணங்களுக்குச் செய்யும் பணியை, அல்லது ஒப்புமை அளவுகள் பூகோளத்தில் தேசப்படங்களுக்கு அல்லது எல்லாவிதமான மாதிரிப் படங்களுக்கும் செய்வதை... கணக்கிடப்படும் பணம் என்பது பொருள்களின் மதிப்புகளுக்குச் செய்கிறது. இந்தக் கண்டுபிடிப்புகளில் எல்லாம், எப்பொழுதும் ஏதாவதொரு

* பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலப் பொருளியலாளர்களின் நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல இங்கும் **விலை** என்பது ஸ்தூலமான சமமதிப்புடையது என்ற அர்த்தத்தில் கையாளப்பட்டிருக்கிறது.

அளவை அடிப்படை அளவாக அனுமானமாக வைத்துக் கொள்கிறோம்... இந்தக் கண்டுபிடிப்புகள் எல்லாவற்றின் உபயோகமும், அவை விகிதத்தைக் குறித்துக் கொள்வதற்கு மட்டுமே பயன்படுவதுதான். எனவே பணத்தின் அடிப்படை அளவுக்கு மதிப்பின் எந்தப் பகுதியோடும் மாற முடியாத, நிர்ணயிக்கப்பட்ட விகிதம் கிடையாது. அதாவது, தங்கம், வெள்ளி அல்லது ஏதாவதொரு பண்டத்தின் திட்டவட்டமான அளவோடு அதைச் சேர்க்க முடியாது. அடிப்படை அளவை ஒரு தடவை நிர்ணயித்துவிட்டால் அதைப் பெருக்கிக் கொள்வதன் மூலம் நாம் மிகவும் உயர்ந்த மதிப்பு வரையிலும் போக முடியும்.... எனவே பண்டங்களின் மதிப்பு —அவற்றுக்குச் சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களும் மனிதர்களின் விருப்பங்களும் பொதுவில் இணைந்திருப்பதைப் பொறுத்து—அவைகளில் ஒன்றுக்கும் மற்றதற்கும் இடையே மட்டுமே மாறக் கூடியது என்று கருத வேண்டும். எனவே, ஒரு பொதுவான நிர்ணயிக்கப்பட்ட, மாற்றமில்லாத அளவுகோலின் மூலம் விகிதங்களின் மாற்றங்களைத் தெரிந்து கொள்வதற்கு எது சிரமம் கொடுத்தாலும் அல்லது சிக்கலேற்படுத்தினாலும் அது வர்த்தகத்துக்கு ஊறு விளைவிப்பதாகும்.... பணம்... சம அளவுகளுள்ள சிறப்பான அளவுகோலாகும். அதில் ஒரு பகுதியின் ஆதார அளவான மதிப்பு என்ன என்று கேட்கப்பட்டால் இதற்குப் பதிலளிக்கும் வகையில் நான் வேறொரு கேள்வியைக் கேட்கிறேன்: ஒரு டிகிரி, நிமிடம், வினாடியின் ஆதார அளவான நீளம் எவ்வளவு? ஒன்றுமில்லை... ஆனால் ஓர் அளவுகோலின் தன்மையால் ஒரு பகுதியை நிர்ணயித்த உடனேயே மற்றவை எல்லாம் அந்த விகிதத்தில் தொடர்ந்து வரும். இந்த வகையைச் சேர்ந்த பணத்துக்கு... இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடலாம். ஆம்ஸ்டர்டாம் வங்கி நமக்கு ஓர் உதாரணத்தை அளிக்கிறது. அங்கோலாவின் கடலோரப் பகுதிகள் மற்ற உதாரணத்தைத் தருகின்றன.''*

ஸ்டூவர்ட் செலாவணியின் செயல் எல்லைக்குள் தோன்றுகிற பணத்தை, அதாவது விலையின் ஆதார அளவாகவும் கணக்கிடப்படும் பணமாகவும் அப்படியே வைத்துக் கொள்கிறார். ஒரு விலைப் பட்டியலில் வெவ்வேறு பண்டங்களுக்கு முறையே 15, 20, 36 ஷில்லிங்குகள் என்று விலை போடப்பட்டிருந்தால், அவற்றின் மதிப்பை ஒப்பிடுகிற பொழுது ஷில்லிங்கில் அடங்கியிருக்கும் வெள்ளியும் அதன் பெயரும் உண்மையில் சிறிதும் சம்பந்தமற்றவையே. இப்பொழுது

* Steuart, *op. cit.*, Vol. 2, pp. 102—107.

எல்லாமே 15, 20, 36 என்ற எண்களின் ஒப்பீட்டு உறவு மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன; இப்பொழுது ஒன்று என்ற எண் மட்டுமே அடிப்படை அளவாக இருக்கிறது. விகிதத்தை முற்றிலும் சூக்குமமாக வெளியிடுவது என்பது சூக்குமமான எண் விகிதம்தானே. தன்னுடைய நிலை ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஸ்டூவர்ட் தங்கத்தையும் வெள்ளியையும் மட்டுமல்லாமல் அவற்ளோடு சேர்த்து அவைகளின் சட்டபூர்வமான பெயர்களையும் கைவிட வேண்டியதாகிறது. ஆனால் மதிப்பின் அளவு விலையின் ஆதார அளவாக எப்படி மாற்றமடைந்தது என்பது அவருக்குப் புரியாததால், அளக்கப்படுகிற அடிப்படை அளவாக இருக்கிற குறிப்பிட்ட அளவு தங்கம், அளவு என்ற முறையில் மதிப்புகளோடு தொடர்புடையதே தவிர, தங்கத்தின் மற்ற அளவுகளோடு அல்ல என்று இயற்கையாகவே நினைக்கிறார். பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகள் விலைகளாக மாற்றமடைவதன் விளைவாக அவை ஒரேவகையின் அளவுகளாகத் தோன்றுவதால், ஸ்டூவர்ட் பண்டங்களை ஒரேவகையாக வகைப்படுத்துகின்ற அளவுகோலின் தனிவகை அம்சத்தை இல்லையென்று சொல்கிறார்; இங்கே தங்கத்தின் வெவ்வேறு அளவுகளை ஒப்பிடும் பொழுது ஆதார அளவாக இருக்கின்ற தங்கத்தின் அளவு வழக்கத்தை ஒட்டி நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், அது நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதையே அவர் மறுக்கிறார். ஒரு வட்டத்தின் 360ல் ஒரு பங்கை டிகிரி என்று சொல்வதற்கு மாறாக அவர் 180ல் ஒரு பங்கை டிகிரி என்று சொல்லலாம்; அப்படியானல் நேர் கோணம் என்பது 90 டிகிரி அல்ல; 45 டிகிரி தான்; இதற்கேற்ப கூர்ங்கோணமும் விரி கோணமும் மாற்றமடையும். எனினும் முதலாவதாக, கோணத்தின் அளவு, வட்டம் என்ற குண ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட கணித எண்ணாக இருக்கும்; இரண்டாவதாக, அளவு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட வட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். ஸ்டூவர்ட்டின் பொருளாதார உதாரணங்களைப் பொறுத்தவரை, ஒன்று அவருடைய கருத்துக்களையே தவறானதென்று நிரூபிக்கிறது; மற்றது எதையும் நிரூபிக்கவில்லை. ஆம்ஸ்டர்டாம் வங்கியிலிருக்கும் பணம் என்பது உண்மையில் ஸ்பானிய டப்லூன்களின் (doubloons) கணக்குப் பெயராகும்; அவை வங்கியின் இரும்புப் பெட்டி

களில் புதைந்து கிடந்தபடியால் தங்களுடைய ஆதார எடை அளவைத் தக்கவைத்துக் கொண்டிருந்தன. ஆனால் வேகமாகச் செலாவணியாகிக் கொண்டிருந்த நாணயங்கள், சூழ்நிலையோடு ஏற்பட்ட தீவிரமான உராய்வினால் எடைகளில் குறைந்து போயின. ஆப்பிரிக்காவின் இலட்சிய புருஷர்களைப் பொறுத்த வரை, அவர்களைப் பற்றி மேலும் அதிகமான விவரங்களை நம்பக் கூடிய வகையில் பிரயாணிகள் நமக்குத் தெரிவிக்கும் வரை, நாம் அவர்களைத் தங்கள் விதிவழியே விட்டுவிட லாம்.* பிரான்சின் காகித நாணயமாகிய "தேசச் சொத்து, 100 பிராங்குகள் பத்திரம்" என்பது ஸ்டூவர்ட்டின் கருத்துப் படி அநேகமாக இலட்சியப் பணம் என்று கூடச் சொல்ல லாம். அந்தக் காகித நாணயம் பிரதிநிதித்துவப்படுத்துவ தாகக் கருதப்பட்ட பயன் மதிப்பு—அதாவது, பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள்—அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அளவுகோலின் அளவு ரீதியான வரையறை சொல்லப் படவில்லை. எனவே "பிராங்க்" என்ற சொல்லுக்கு அர்த்தம் இல்லை. இந்த "பிராங்க்" எந்த அளவுக்கு அதிகமான அல்லது குறைவான நிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது பொது ஏலத்தின் முடிவைப் பொறுத்திருந்தது. எனினும் நடைமுறையில் இந்தக் காகித நாணயம் வெள்ளிப் பணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வில்லையாகவே புழக்கத்தில் இருந்தது; எனவே அதன் வீழ்ச்சியும் இந்த வெள்ளி ஆதார அளவின் மூலமாகவே அளக்கப்படுகிறது.

இங்கிலாந்து வங்கி பண வழங்கீடுகளை நிறுத்திவைத்த காலகட்டத்தில் யுத்த அறிக்கைகளைக் காட்டிலும் பண

* சென்ற முறை ஏற்பட்ட வர்த்தக நெருக்கடியின் போது இங்கிலாந்தில் ஒரு கோஷ்டியினர் ஆப்பிரிக்கப் பணத்தை—இந்தச் சமயத்தில் அது இருக்குமிடத்தைக் கட லோரத்திலிருந்து பெர்பேரி நாட்டின் உட்பகுதிக்கு மாற்றி விட்டு—இலட்சிய வடிவம் என்று தீவிரமாகப் பாராட் டினார்கள். அந்த நாட்டின் "bars" ("இரும்புத் துண்டுகள்") மிகச் சிறப்பான அளவுகோலாக இருப்பதால் நாட்டு மக்க ளாகிய பெர்பேர்களுக்கு வர்த்தக நெருக்கடியோ, தொழில் நெருக்கடியோ ஏற்படவில்லை என்று சொல்லப்பட்டது. இதைக் காட்டிலும் வர்த்தக, தொழில் நெருக்கடிகளுக்கு இன்றியமையாத நிபந்தனை (conditio sine qua non) வர்த்தகமும் தொழிலுமே என்று சொல்லுவது இன்னும் சுலபமாகக்கூட இருக்குமே?

வியல் கோட்பாடுகள் அதிகமாகப் பேசப்பட்டன. வங்கிப் பத்திரங்களின் வீழ்ச்சியும் தங்கத்தின் சந்தை விலை நாணயச் சாலை விலையைக் காட்டிலும் அதிகரித்ததும் வங்கியின் பாதுகாப்பாளர்களில் சிலரை பணத்தின் இலட்சிய அளவு என்ற கோட்பாட்டுக்குப் புத்துயிர் கொடுக்குமாறு செய்தது. காசில்ரி பிரபு பணத்தின் ஆதார அளவு என்பது ''பண்டங்களோடு ஒப்பிடும் பொழுது நாணயத்தைப் பொறுத்தவரை மதிப்பின் உட்கருத்தாகும்'' ("a sense of value in reference to currency as compared with commodities") என்று சொன்ன பொழுது அவர் குழப்பமான கருத்தை மூலச் சிறப்புடைய குழப்பமான வகையில் எடுத்துரைத்தார். பாரிஸ் ஒப்பந்தம் நிறைவேறிய சில வருடங்களுக்குப் பிறகு, பண வழங்கீட்டை மறுபடியும் தொடங்குவதற்குச் சூழ்நிலை அனுமதித்த பொழுது, மூன்றுவது வில்ஹெல்ம் மன்னருடைய ஆட்சிக் காலத்தில் லெளன்ட்ஸ் எழுப்பிய பிரச்சினை அநேகமாக அதே வடிவத்தில் மறுபடியும் தோன்றியது. இருபது வருடங்களுக்குச் சற்று அதிகமான காலத்தில் மிகவும் அதிகமான தேசியக் கடன், ஏராளமான தனிப்பட்ட கடன், கடனுறுதிப் பத்திரங்கள் முதலியவை குவிந்து விட்டன. இவை மதிப்புக் குறைந்து விட்ட வங்கிப் பத்திரங்களில் வாங்கப்பட்டிருந்தன. இவற்றை 22 காரட் தங்கத்தின் 100 பவுன்களைக் கற்பனையில் அல்ல, உண்மையிலேயே, பிரதிநிதித்துவப்படுத்திய 4,672 பவுன் 10 ஷில்லிங்குகள் மதிப்புள்ள வங்கிப் பத்திரங்கள் மூலமாகத் திருப்பிக் கொடுப்பதா? பர்மிங்ஹாமைச் சேர்ந்த தாமஸ் ஆட்வுட் என்ற பாங்கர் புத்துயிர் பெற்ற லெளன்ட்ஸ் போல நடந்து கொண்டார். கடன் கொடுத்தவர்கள் எத்தனை ஷில்லிங்குகள் பெயரளவில் கொடுத்தார்களோ, அத்தனை ஷில்லிங்குகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்; ஆனால் பழைய பணவியல் ஆதார அளவுப்படி ஓர் அவுன்ஸ் தங்கத்தின் 1/78 பகுதி ஒரு ஷில்லிங்காக இருந்தது—இப்பொழுது ஓர் அவுன்சின் 1/90 பகுதியை ஒரு ஷில்லிங் என்று கூற வேண்டும் என்று அவர் வாதாடினார். ஆட்வுட்டின் ஆதரவாளர்கள் பர்மிங்ஹாமின் ''சிறிய ஷில்லிங் பிரிவினர்'' ("little Shillingmen") என்று கூறப்பட்டனர். 1819ம் வருடத்தில் பணத்தின் இலட்சிய ஆதார அளவு பற்றிய சச்சரவு ஆரம்பமாகி 1845ம் வருடத்திலும் சர் ராபர்ட்

பீல் மற்றும் ஆட்வுட் அதை இன்னும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள். அளவுகோல் என்ற முறையில் பணத்தின் செயலைப் பொறுத்தவரை பின்வரும் மேற்கோளில் ஆட்வுட்டினுடைய அறிவு முழுமையாகச் சுருக்கித் தரப்படுகிறது:

''சர் ராபர்ட் பீலுக்கும் பர்மிங்ஹாம் வர்த்தகக் கழகத்துக்குமிடையே சமீபத்தில் நடைபெற்ற விவாதத்தில்.... 'உங்களுடைய பவுன் நோட்டு எதைப் பிரதிநிதித்துவப்படுத்தும்?' என்ற கேள்வியைக் கேட்டதோடு அமைச்சர் முழுத் திருப்தியடைந்து விட்டார்.... இன்றுள்ள மதிப்பின் ஆதார அளவின் அர்த்தம் என்ன? 3 பவுன் 17 ஷில்லிங்கு $10\frac{1}{2}$ பென்ஸ் என்பது ஓர் **அவுன்ஸ்** தங்கமா அல்லது ஓர் அவுன்ஸ் தங்கத்தின் **மதிப்பு** மட்டுமா? 3ப. 17ஷி. $10\frac{1}{2}$பெ. என்பது ஓர் **அவுன்ஸ்** **தங்கம்** என்ருல் பொருள்களை அவற்றின் சரியான பெயர்களைச் சொல்லிக் கூப்பிடலாமே. பவுன், ஷில்லிங்கு, பென்ஸ் என்ற வார்த்தைகளைக் கைவிட்டு அவுன்ஸ், பென்னிவெயிட், கிரெயின் என்பனவற்றை உபயோகிக்கலாமே.... தங்கத்தின் அவுன்ஸ்கள், பென்னிவெயிட்டுகள், கிரெயின்கள் என்ற வார்த்தைகளை நமது பணவியல் முறையாக வைத்துக்கொண்டால், நாம் நேரடியான பண்டமாற்று முறையைப் பின்பற்ற வேண்டும்.... ஆனுல் தங்கம் ஓர் அவுன்சுக்கு 3ப. 17ஷி. $10\frac{1}{2}$ பெ. மதிப்புக் கொண்டிருப்பதாகக் கணக்கிடப்படுமாளுல்... இது எப்படி... வெவ்வேறு காலங்களில் தங்கத்தின் மதிப்பு அவுன்சுக்கு 5ப. 4ஷி. என்று உயர்ந்து விடாதபடி எவ்வளவோ சிரமங்களோடு பாடுபட வேண்டியிருந்ததே? மற்றும் இப்பொழுது தங்கம் ஓர் அவுன்ஸ் 3ப. 17ஷி. 9பெ. மதிப்பு என்று அறிவிக்கப்படுவதை எப்படிப் பார்க்கிருேம்?... **பவுன்** என்ற வார்த்தை மதிப்போடு சம்பந்தப்பட்டது; ஆனுல் அது மதிப்பின் நிலையான ஆதார அளவு அல்ல... பவுன் என்ற வார்த்தை **இலட்சிய** அடிப்படை **அளவு... உழைப்பு** விலையின் தந்தை, தாய்; தங்கத்துக்கும் இரும்புக்கும் சார்பு மதிப்பைக் கொடுப்பது அதுவே. **நாள்தோறும்** அல்லது **வாரந்தோறும் ஒரு மனிதனின் உழைப்பைக்** குறிக்க **எப்படிப்பட்ட இடுபெயர்களையும் வார்த்தைகளையும் பயன்படுத்திஞலும்,** அந்த வார்த்தைகள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தின் விலையைக் குறிக்கின்றன.''*

பணத்தின் இலட்சிய அளவு என்ற தெளிவில்லாத கருத்து கடைசி வார்த்தைகளில் தேய்ந்து போய்விடுகிறது; உண்

* *The Currency Question, the Gemini Letters*, London, 1844, pp. 266—272 *passim*.

மையாக மனதில் நினைக்கப்பட்டிருக்கும் எண்ணம் தெளிவாக வெளிப்படுகிறது. தங்கத்தின் கணக்கிடப்படும் பெயர்களான பவுன், ஷில்லிங்கு முதலியவை உழைப்பு நேரத்தின் திட்டவட்டமான அளவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற பெயர்கள் என்று சொல்லப்படுகின்றன. உழைப்பு நேரமே மதிப்பின் சாரம்; மதிப்பின் உள்ளார்ந்த அளவுகோல் என்பதால் இந்தப் பெயர்கள் மதிப்பின் உறவுகளையே எடுத்துரைக்கின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், உழைப்பு நேரமே பணத்தின் உண்மையான ஆதார அளவு என்று வலியுறுத்தப்படுகிறது. நாம் பர்மிங்ஹாம் மரபினரை இதோடு விட்டுவிடுகிறோம். வங்கிப் பத்திரங்கள் மாற்றக் கூடியவையா அல்லது மாற்றக் கூடாதவையா என்பதைப் பற்றி நடைபெற்ற விவாதத்தின் காரணமாக பணத்தின் இலட்சிய அளவுகோல் என்ற கோட்பாடு புதிய முக்கியத்துவத்தை அடைந்தது என்பதை மட்டும் போகிற போக்கில் குறித்துக் கொள்வோம். காகித இடுபெயர் தங்கம் அல்லது வெள்ளியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் பொழுது, பத்திரத்தின் மாற்றும் தகுதி, அதாவது தங்கம் அல்லது வெள்ளிக்கு அதைப் பரிவர்த்தனை செய்து கொள்வது, சட்டம் என்ன சொன்ன போதிலும், ஒரு பொருளாதார விதியாக இருக்கும். உதாரணமாக, பிரஷ்யாவின் தாலெர் என்ற காகித நாணயம் சட்டத்தின்படி மாற்றப்பட முடியாதது என்ருலும், அன்ருட வர்த்தகத்தில் அது ஒரு வெள்ளி தாலெர் நாணயத்தைக் காட்டிலும் குறைவான மதிப்புடையதாக இருக்குமாஞல், அதாவது நடைமுறையில் அது மாற்றப்பட முடியாவிட்டால் அதன் மதிப்பு உடனடியாக வீழ்ச்சியடையும். பிரிட்டனில் மாற்றப்பட முடியாத காகித நாணயத்துக்காக விடாப்பிடியாகப் பாடுபட்டவர்களுக்குப் பணத்தின் இலட்சிய அளவு துணையாகக் கிடைத்தது. பணத்தின் வகைகளான பவுன், ஷில்லிங் முதலியவை மதிப்பின் பகுதிகளின் திட்டவட்டமான அளவுகளுக்குப் பெயர்கள் என்ருல்—ஒரு பண்டத்தை வேறு பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்கிற பொழுது அந்தப் பண்டம் தன்னுடைய மதிப்பில் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ பெறுகிறது அல்லது இழக்கிறது—உதாரணமாக, இங்கிலாந்தின் 5 பவுன் நோட்டின் மதிப்பு இரும்பு, பருத்தியோடு கொண்டிருக்கும் உறவி

ஞல் சிறிதும் பாதிக்கப்படாததைப் போல தங்கத்தோடு கொண்டிருக்கிற உறவிஞலும் பாதிக்கப்படுவதில்லை. ஒரு வங்கிப் பத்திரம் பெயர் வைக்கப்பட்டதால் மட்டும் தங்கம் அல்லது வேறு ஏதாவது பண்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட அளவோடு இனிமேல் கோட்பாட்டளவில் சமமாக இருக்க முடியாதென்பதால் அந்தக் கருத்தே அது மாற்றப்படக் கூடியது, அதாவது ஒரு குறிப்பிட்ட பொருளின் நிர்ணயிக்கப்பட்ட அளவோடு நடைமுறையில் சமப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்குத் தடையாக இருக்கும்.

உழைப்பு நேரமே பணத்தின் நேரடியான அளவுகோல் என்ற கோட்பாட்டை முறைப்படியாக முதன் முதலாகச் சொன்னவர் ஜான் கிரே*. தேசிய மத்திய வங்கியை ஏற்படுத்தி அதனுடைய கிளைகளின் மூலம் பலவிதமான பண்டங்களையும் உற்பத்தி செய்வதில் செலவழிக்கப்படுகிற உழைப்பு நேரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆலோசனையை அவர் முன்வைக்கிருர். உற்பத்தியாளர் தன்னுடைய பண்டத்துக்குப் பரிவர்த்தனையாக அதன் அதிகாரபூர்வ மதிப்புச் சான்றிதழைப் பெறுவார்; அதாவது அந்தப் பண்டத்தில் அடங்கியிருக்கின்ற உழைப்பு நேரத்துக்கு ஒரு ரசீது கொடுக்கப்படும்.** ஒரு மணிநேர உழைப்புக்கு, ஒரு நாள் உழைப்

---

* John Gray, *The Social System. A Treatise on the Principle of Exchange*, Edinburgh, 1831, *Lectures on the Nature and Use of Money*, Edinburgh, 1848. பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு கிரே பிரெஞ்சுத் தற்காலிக அரசாங்கத்திடம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் பிரான்சுக்கு ''உழைப்பை நிர்வகிப்பது'' தேவையில்லை; ஆனல் ''பரிவர்த்தனைக்கு நிர்வாகம்'' தேவையானது என்று குறிப்பிட்டுவிட்டு, தாம் கண்டுபிடித்துள்ள பணவியல் முறையில் அதற்கான திட்டத்தை முழுமையாகத் தயாரித்திருப்பதாக கிரே கூறியிருந்தார். தம்முடைய *The Social System* வெளிவந்து பதினறு வருடங்களுக்குப் பிறகு கெட்டிக்காரத் தனமிக்க புருதோன் அதே கண்டுபிடிப்பைச் சொல்லிப் பதிவுரிமை பெறுவார் என்று கண்ணியமிக்கவரான ஜான் கிரே எதிர்பார்த்திருக்க முடியாது.

** Gray, *The Social System*, p. 63: ''பணம் என்பது ஒரு ரசீதாக, அதன் உடைமையாளர் தேசிய செல்வாதாரத்துக்குக் குறிப்பிட்ட மதிப்பைக் கொடுத்திருக்கிருர் என்ருே அல்லது அவ்வாறு கொடுத்த ஒருவரிடமிருந்து அந்த

புக்கு, ஒரு வார உழைப்புக்கு என்றவாறு தரப்படுகின்ற இந்த வங்கிச் சான்றிதழ், அந்த வங்கி தன்னுடைய கிடங்கு களில் வைத்திருக்கும் பண்டங்களில் ஏதாவதொன்றின் சமமதிப்பை அந்த நபரிடம் கொடுப்பதற்குரிய உத்தரவாக வும் அதே சமயத்தில் இருக்கும்.* அவர் இந்த அடிப்படைக் கொள்கையை அதிகமான கவனத்தோடும் எல்லா விவரங் களோடும் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். இங்கிலாந்தில் இருக்கின்ற ஸ்தாபனங்களையே எல்லாவற்றிலும் முன்மாதி ரியாக வைத்துத் தயாரித்திருக்கிறார். கிரே பின்வருமாறு கூறுகிறார்:

இந்த முறையின்படி "இப்பொழுது பணம் கொடுத்து வாங்குவது எவ்வளவு சுலபமானதாக இருக்கிறதோ அதைப் போலவே எல்லாக் காலங்களிலும் பணத்துக்கு விற்பனை செய்வதும் சுலபமானதாகிவிடும்; ...உற்பத்தி என்பது தேவையின் ஒரே சீரான, எக்காலத்துக்கும் மாறாத காரண மாகி விடும்."**

மேலும், மற்ற பண்டங்களோடு ஒப்பிடுகிற பொழுது விலையுயர்ந்த உலோகங்களுக்கு இருக்கிற "தனிச்சிறப் புடைய" நிலையை அந்த உலோகங்கள் இழந்துவிடும்; மற்றும் அவை

"சந்தையில் வெண்ணெய், முட்டைகள், துணி, காலிக்கோ ஆகியவற்றுக்குப் பக்கத்தில் தமக்கு உரித்தான இடத்தில் இருக்கும்; இந்த விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பைப் பற்றி நமக்குச் சிறிது கூட அக்கறை இருக்காது... வைரத் தின் மதிப்பைப் போல".***

---

உரிமையை இவர் பெற்றிருக்கிறார் என்றே காட்டக் கூடிய சான்றாகவே இருக்க வேண்டும்."

* "அந்த உற்பத்தியின் சுமாரான மதிப்பை முன்பே கணக்கிட்ட பிறகு அதை ஒரு வங்கியில் வைக்கட்டும்; தேவைப்படும் பொழுது மறுபடியும் எடுத்துக் கொள்ளலாம். இரு தரப்பும் பரஸ்பர ஒப்புதலின் பேரில் ஒரு நிபந்தனையை மட்டும் விதித்துக் கொள்ளட்டும். அதாவது, தேசிய வங்கி யில் ஏதாவது ஒருவகையான சொத்தைக் கொண்டுவந்து வைப்பவர், அதில் என்ன அடங்கியிருக்கிறதோ அதன் சம மதிப்பை வாங்கிக் கொள்ளலாம். எந்தப் பொருளைக் கொண்டுவந்து வைத்தாரோ அதையே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவது இல்லை." *Op. cit.*, pp. 67—68.

** *Op. cit.*, p. 16.

*** Gray, *Lectures on Money*, p. 182.

"தங்கம் என்ற நமது மதிப்பின் கற்பனையான ஆதார அளவை நீடித்துக் கொண்டு நம் நாட்டின் உற்பத்திச் செல்வாதாரங்களை நாம் அடிமைப்படுத்த வேண்டுமா? அல்லது மதிப்பின் இயல்பான ஆதார அளவாகிய உழைப்பை நாம் ஏற்றுக் கொண்டு அதன் மூலம் நமது உற்பத்திச் செல்வாதாரங்களுக்கு சுதந்திரமளிக்கலாமா?"*

உழைப்பு நேரமே மதிப்பின் உள்ளார்ந்த ஆதார அளவு என்னும் பொழுது இன்னொரு அந்நிய ஆதார அளவையும் பயன்படுத்த வேண்டியது அவசியமா? பரிவர்த்தனை மதிப்பு விலையாக மாற்றமடைவது ஏன்? ஒரு தனியான பண்டத்தைக் கொண்டு எல்லாப் பண்டங்களின் மதிப்பையும் கணக்கிடுவதும் அதனால் அந்தத் தனியான பண்டம் பரிவர்த்தனை மதிப்பின், அதாவது பணத்தின் பொருத்தமான வெளியீடாவதும் ஏன்? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நிலையில் கிரே இருந்தார். ஆனால் அதைத் தீர்ப்பதற்குப் பதிலாக, பண்டங்கள் சமூக உழைப்பின் உற்பத்திப் பொருள்கள் என்ற முறையில் ஒன்றுக்கொன்று நேரடியாக ஒப்பிடப்படக் கூடியவை என்று கிரே கற்பனை செய்தார். ஆனால் அந்தப் பொருள்களை இருக்கின்ற நிலையில் மட்டுமே ஒப்பிடக் கூடும். தனித்து நிற்கின்ற, சுதந்திரமான உழைப்பின் தனிவகைகளின் நேரடியான உற்பத்திப் பொருள்களே பண்டங்கள்; தனிப்பட்ட பரிவர்த்தனை நிகழ்வின் போது அந்நியப்படுதலின் மூலமாக அவை பொதுவான சமூக உழைப்பைக் கொண்டிருப்பதை நிருபிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பண்ட உற்பத்தியின் அடிப்படையில், உழைப்பின் தனிவகைகள் எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதலின் விளைவாகத்தான் உழைப்பு சமூக உழைப்பாக மாறும். ஆனால் பண்டங்களில் அடங்கியிருக்கிற உழைப்பு நேரம் நேரடியான சமூக உழைப்பு நேரம் என்று கிரே முற்கோளாகக் கொள்வதால் அது கூட்டு உழைப்பு நேரம், அல்லது நேரடியாகச் சம்பந்தப்படுகிற தனி நபர்களின் உழைப்பு நேரம் என்று முன் அனுமானம் செய்கிறார். அப்படிப்பட்ட நிலைமையில் தங்கம் அல்லது வெள்ளியைப் போன்ற தனியான பண்டம் எக்காலத்துக்கும் உரிய உழைப்பின் சொரூபமாக மற்ற பண்டங்களுக்கு எதிர்

* *Op. cit.*, p. 169.

நிற்க முடியாது; பரிவர்த்தனை மதிப்பு விலையாக மாற்ற மடையாது. மேலும், பயன் மதிப்பு பரிவர்த்தனை மதிப்பாக, உற்பத்திப் பொருள் பண்டமாக மாறப் போவதில்லை. எனவே முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையே ஒழிக்கப் பட்டுவிடும். ஆனால் கிரே இதைச் சிறிதும் நினைக்கவில்லை; **பொருள்கள் பண்டங்களாக உற்பத்தி செய்யப்பட வேண்டும்; ஆனால் பண்டங்களாகப் பரிவர்த்தனை செய்யப்படக் கூடாது** என்று அவர் நினைத்தார். இந்தப் புனிதமான விருப் பத்தை நிறைவேற்றித் தரும் பொறுப்பை, கிரே தேசிய வங்கியிடம் ஒப்படைக்கிறார். ஒரு பக்கத்தில் வங்கி என்ற வடிவத்தில் இருக்கின்ற சமூகம் தனி நபர்களைத் தனிப்பட்ட பரிவர்த்தனை நிலைமைகளிலிருந்து சுதந்திரமானவர்களாக மாற்றுகிறது; மறு பக்கத்தில் தனிப்பட்ட பரிவர்த்தனை அடிப்படையிலேயே அவர்கள் தொடர்ந்து உற்பத்தி செய் யுமாறு விதிக்கிறது. கிரே பண்டங்களின் பரிவர்த்தனை மூல மாக உருவாகியுள்ள பணத்தை "சீர்திருத்தம் செய்ய" மட்டுமே ஆசைப்படுகிறார். எனினும் பாடப் பொருளின் உள்ளார்ந்த தர்க்க வேகத்தினால், முதலாளித்துவ உற்பத்தி நிபந்தனைகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாகக் கைவிடுமாறு நிர்ப் பந்திக்கப்படுகிறார். ஆகவே அவர் மூலதனத்தைத் தேசிய மூலதனமாக மாற்றுகிறார்;* நிலத்தைத் தேசியச் சொத்தாக மாற்றுகிறார்.** அவர் குறிப்பிடுகின்ற வங்கியைக் கவனமாக ஆராய்ந்தால், அது ஒரு கையால் பண்டங்களை வாங்கிக் கொண்டு மறு கையால் உழைப்புக்குச் சான்றிதழ்களை வழங் குவதோடு மட்டுமல்லாமல், உற்பத்தியை இயக்குவதையும் செய்கிறது என்பதைக் காணலாம். *Lectures on Money* என்ற கடைசி நூலில் கிரே தன்னுடைய உழைப்புப் பணம் என்ற கருத்து ஒரு கலப்பில்லாத முதலாளித்துவ சீர்திருத்தமே என்று மருட்சியோடு எடுத்துக் காட்டும் பொழுது இதைக் காட்டிலும் இன்னும் படுமோசமான குளறுபடிகளில் சிக்கிக் கொள்கிறார்.

---

* "ஒவ்வொரு தேசத்தின் தொழிலும் தேசிய மூல தனத்தைக் கொண்டு நடத்தப்பட வேண்டும்" (John Gray *The Social System*, p. 171).

** "நிலம் தேசிய சொத்தாக மாற்றப்படும்" (*op. cit.*, p. 298).

ஒவ்வொரு பண்டமும் உடனடியாகவே பணமாகும் என்று கிரே கருதுகிறார். பண்டங்களைப் பற்றிய அவருடைய அரை குறையான, எனவே தவறான ஆராய்ச்சியிலிருந்து, இந்தக் கருத்தை அவர் உருவாக்கியிருக்கிறார். ''உழைப்புப் பணம்,'' ''தேசிய வங்கி,'' ''சேமிப்புக் கிடங்குகள்'' என்று சொல்லப் படும் ''அங்ககத்'' திட்டங்கள் அனைத்தும் ஒரு வறட்டுச் சூத்திரத்தை எக்காலத்துக்கும் உரிய வகையில் செல்லத் தக்க விதியாகக் காட்டுகிற கற்பனை உருவமே. ஒரு பண்டம் உடனடியாகவே பணம் என்பதும் அல்லது அதில் அடங்கி யிருக்கிற தனி நபரின் குறிப்பிட்ட வகை உழைப்பு உடன டியாக சமூக உழைப்பு ஆகி விடுகிறது என்பதும் இந்த வறட்டுச் சூத்திரத்தை ஒரு வங்கி ஒத்துக்கொள்வதால், அதற்குத் தகுந்தவாறு தன்னுடைய நடவடிக்கைகளை வைத் துக் கொள்வதால் மட்டும் அது உண்மையாகிவிடப் போவ தில்லை. இதற்கு மாறாக, அத்தகைய நிலைமையில் இந்த வங்கியின் முறிவு இந்தத் திட்டத்துக்குத் தகுந்த செய்முறை விமர்சனமாக இருக்கும். உழைப்புப் பணம் என்பது ஒரு போலிப் பொருளாதாரச் சொல். பணத்தை ஒழிக்க வேண் டும், பணத்தோடு பரிவர்த்தனை மதிப்பை ஒழிக்க வேண் டும், பரிவர்த்தனை மதிப்போடு பண்டங்களை ஒழிக்க வேண் டும், பண்டங்களோடு முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழிக்க வேண்டும் என்ற புனிதமான ஆசையை அது குறிக் கிறது. கிரே எழுதிய புத்தகங்களில் மறைந்து நிற்கும் உண்மை இது—ஆனால் கிரேக்கு இது தெரியாது. இதைப் பல பிரிட்டிஷ் சோஷலிஸ்டுகள் மூடி மறைக்காமல் வெளிப் படையாகவே எழுதியிருக்கிறார்கள். அவர்களில் சிலர் கிரேக்கு முன்பே இதை எழுதியிருக்கிறார்கள். வேறு சிலர் அவருக்குப் பிறகு இதை எழுதியிருக்கிறார்கள்.* ஆனால் **பணத்தைக்** கீழிறக்கி **பண்டங்களை** உயர்த்துவதுதான் சோஷலிசத்தின் சாரம் என்று தீவிரமாக வாதாடுவது **புரூதோனிடமும்** அவ ருடைய மரபைச் சேர்ந்தவர்களிடமும் விடப்பட்டது. அதன் மூலம் பண்டங்களுக்கும் பணத்துக்கும் இருக்கின்ற தவிர்க்க கூடியாத இடைத் தொடர்பை ஆரம்ப நிலையிலேயே

---

* உதாரணமாக, W. Thompson, *An Inquiry into the Distribution of Wealth*, London, 1824 மற்றும் Bray, *Labour's Wrongs and Labour's Remedy*, Leeds, 1839 என்ற புத்தகங்களைப் பார்க்கவும்.

தவறாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக சோஷலிசத்தைச் சிறுமைப்படுத்தினார்கள்.*

## 2. பரிவர்த்தனை ஊடகம்

விலைகள் நிர்ணயிக்கப்படுவதன் விளைவாக, செலாவணியில் நுழைவதற்குரிய வடிவத்தைப் பண்டங்கள் அடைகிற பொழுது, பணத்தின் செயலைத் தங்கம் அடைகிற பொழுது, பண்டங்களின் பரிவர்த்தனையின் போது மறைந்திருக்கிற முரண்பாடுகள் இரண்டும் செலாவணியின் போது வெளிப்படுத்தப்பட்டுத் தீர்க்கப்படுகின்றன. பண்டங்களின் பரிவர்த்தனையின் உண்மை நிகழ்வு, அதாவது சமூக வளர்சிதை மாற்ற நிகழ்வு, பண்டத்தின் இரட்டை இயல்பை—பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்ற முறையில் பண்டத்தின் இயல்பை—வெளிப்படுத்துகின்ற மாற்றமாக அமைகின்றது; ஆனால் அதே சமயத்தில் பண்டத்தின் மாற்றம் என்பது பணத்தின் சில வடிவங்களில் சுருக்கப்படுகின்றது. இந்த மாற்றத்தை வர்ணிப்பதென்பது செலாவணி முறையை வர்ணிப்பதாகும். பண்டங்களின் உலகமும் அதன் காரணமாக உண்மையிலேயே வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினை முறையையும் முன் அனுமானமாகக் கொள்கிற பொழுது தான் பண்டங்கள் முழுமையாக வளர்ச்சியடைந்த பரிவர்த்தனை மதிப்பைக் கொண்டவையாக இருக்கின்றன என்பதை முன்பே பார்த்தோம். அதே மாதிரி செலாவணி என்பது பரிவர்த்தனைச் செயல்கள் எல்லா இடங்களிலும் நடந்து கொண்டிருப்பதையும் அவை தொடர்ச்சியாக மீண்டும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் முற்கோளாகக் கொண்டிருக்கின்றது; பண்டங்கள் இந்தப் பரிவர்த்தனை நிகழ்வின் போது நிர்ணயிக்கப்பட்ட விலையோடு ஈடுபடுகின்றன என்பதை முன் அனுமானமாகக் கொண்டிருக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பரிவர்த்தனை நிகழ்வின் போது அவை ஒன்றுக்கொன்று இரட்டை வடிவத்தில்—

---

* Alfred Darimon, *De la réforme des banques*, Paris, 1856. இ[illegible] வகையில் பணவியல் பற்றிய உணர்ச்சி முனைப்பான நாடகக் கொள்கையின் சுருக்கமாக மேலே குறிப்பிட்ட புத்தகத்தைச் சொல்லலாம்.

உண்மையில் பயன் மதிப்புகளாகவும் கற்பனையில் (விலையில்) பரிவர்த்தனை மதிப்புகளாகவும்—எதிர்நிற்பதாகத் தோன்று கின்றன.

லண்டனில் சந்தடி நிறைந்த தெருக்களிலுள்ள கடைகளில் கண்ணாடிப் பெட்டிகளில் உலகத்துச் செல்வங்கள் அனைத்தும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலிருந்து சால்வைகள், அமெரிக்காவிலிருந்து கைத் துப்பாக்கிகள், சீனாவின் பீங்கான் பாத்திரங்கள், பாரிசிலிருந்து உள்ளாடைகள், ருஷ்யாவிலிருந்து பர் (fur) கோட்டுகள், வெப்ப மண்டலப் பிரதேசங்களின் வாசனைத் திரவியங்கள் முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த உலகியல் பொருள்கள் எல்லாவற்றிலும் அராபிய எண்களும் £, S., d. (பவுன் ஸ்டெர்லிங், ஷில்லிங், பென்ஸ்) என்ற சுருக்கமான குறிகளும் எழுதப்பட்ட அருவருப்பான காகித வில்லைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பண்டங்கள் இவ்விதமாகத்தான் பரிவர்த்தனைக்கு வைக்கப்படுகின்றன.

### அ. பண்டங்களின் உருமாற்றம்

செலாவணி நிகழ்வுப் போக்கைக் கவனமாக ஆராயும் பொழுது அதில் இரண்டு தனிவகையான சுற்று வளையங்கள் காணப்படுகின்றன. பண்டங்கள் C என்றும், பணம் M என்றும் குறிக்கப்பட்டால், இரண்டு சுற்று வளையங்களையும் பின்வருமாறு பிரதிநிதித்துவப்படுத்தலாம்:

$$C - M - C$$
$$M - C - M$$

இந்தப் பகுதியில், பண்டத்தின் செலாவணியை நேரடியாக வெளிப்படுத்துகிற முதல் சுற்று வளையத்தை மட்டுமே நாம் ஆராய்கிறோம்.

C — M — C என்ற சுற்று வளையத்தை C — M என்ற இயக்கமாக, பண்டங்கள் பணத்துக்காகப் பரிவர்த்தனை, அல்லது விற்பனை; இதற்கு எதிர் இயக்கமாக M — C, பணம் பண்டங்களுக்காகப் பரிவர்த்தனை, அல்லது கொள்வினை என்று பிரிக்கலாம்; இந்த இரண்டு இயக்கங்களின் ஒற்றுமை C—M—C, அதாவது பணம் பண்டங்களுக்காகப் பரிவர்த்தனை செய்

வதற்காக பண்டங்கள் பணத்துக்குப் பரிவர்த்தனை—வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் கொள்வினைக்காக விற்பனை செய்வது. இந்த நடவடிக்கை C—C என்பதில், அதாவது ஒரு பண்டத்தை மற்றொரு பண்டத்துக்காகப் பரிவர்த்தனை செய்வதில், பொருளின் உண்மையான பரிவர்த்தனையில் முடிவடைகிறது.

C—M—C என்பதை முதல் பண்டம் கொடுக்கப்படும் நிலையில் வைத்துப் பார்த்தால் இப்பண்டம் தங்கமாக மாற்றப் படுவதையும் பிறகு தங்கத்திலிருந்து பண்டமாக மறுபடியும் மாற்றப்படுவதையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த இயக்கத்தின் போது ஒரு பண்டம் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பாகத் தோன்றி பிறகு இந்த இருத்தல் வடிவத்தை இழந்துவிட்டு பரிவர்த்தனை மதிப்பு அல்லது எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பு என்ற வடிவத்தை (இந்த வடிவம் அதன் இயற்கை வடிவத்திலிருந்து முழுவதும் வேறாகும்) பெற்றுக் கொண்டு இதனையும் விட்டுவிட்டுக் கடைசியில் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய உண்மையான பயன் மதிப்பாக வெளித் தோன்றுகிறது. இந்தக் கடைசி வடிவத்தில் அது செலாவணி வட்டத்திலிருந்து வெளியேறி நுகர்வுக்குள் நுழைகிறது. இவ்விதத்தில் ஒவ்வொரு தனிப் பண்டமும் தன்னுடைய உடைமையாளருக்கு நேரடியாகப் பயன் மதிப்பாக மாற வேண்டியதற்காகப் போக வேண்டிய உருமாற்றத்தின் முழுத் தொடர்களையும் C—M—C என்ற முழுச் சுற்று வளையம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முதல் உருமாற்றம் C—M என்பதில் நடைபெறுகிறது—இது சுற்று வளையத்தின் முதல் கட்டம்; இரண்டாவது உருமாற்றம் M—C என்பதில் நடைபெறுகிறது—இது அடுத்த கட்டம். இந்த முழுச் சுற்று வளையமும் அந்தப் பண்டத்தின் அவசியமான பாடத்திட்டமாகிறது (curriculum vitae). ஆனால் C—M—C என்ற வளையம் ஒரு தனிப் பண்டத்தின் முழுமையான உருமாற்றத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது; அது அதே சமயத்தில் மற்ற பண்டங்களின் திட்டவட்டமான அரைகுறையான உருமாற்றங்களின் கூட்டுமொத்தம் என்பதாகவும் இருப்பது காரணமாகும். முதல் பண்டத்தின் ஒவ்வொரு உருமாற்றமும் அது மற்றொரு பண்டமாக மாற்றமடைவதே—எனவே இரண்

டாவது பண்டம் முதல் பண்டமாக மாற்றமடைவதே. எனவே இது அந்தச் சுற்று வளையத்தின் ஒரே கட்டத்தில் நடைபெற்று முடிகிற இரட்டை மாற்றமாகும். ஆரம்பமாக, C—M—C என்ற சுற்று வளையத்துக்குள் முடிவடைகிற பரிவர்த்தனையின் இரண்டு கட்டங்களையும் தனித்தனியாக ஆராய்வோம்.

C—M அல்லது **விற்பனை:** C என்ற பண்டம் ஒரு குறிப்பிட்ட பயன் மதிப்பாக மட்டும்—உதாரணமாக, ஒரு டன் இரும்பு என்று மட்டும்—செலாவணி வட்டத்துக்குள் நுழைவது கிடையாது. அது குறிப்பிட்ட விலையைக் கொண்ட பயன் மதிப்பாக, உதாரணமாக 3ப. 17 ஷி. $10^1/_2$ பெ., அதாவது ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலையைக் கொண்டதாக நுழைகிறது. இந்த விலை ஒரு பக்கத்தில் இரும்பில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தின் அளவை, அதாவது அதன் மதிப்பைக் குறிப்பிட்டாலும் அதே சமயத்தில் இரும்பைத் தங்கமாக மாற்ற விரும்பும் புனிதமான ஆசையை, அதாவது இரும்பில் அடங்கியிருக்கிற உழைப்பு நேரத்துக்கு எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு நேரத்தின் வடிவத்தைக் கொடுக்க விரும்பும் ஆசையைக் குறிக்கிறது. இந்த மாற்றம் நடைபெறவில்லையானல், அந்த ஒரு டன் இரும்பு பண்டமாக இருக்காது என்பதோடு உற்பத்திப் பொருளாகவும் இருக்காது. அதன் உடைமையாளருக்கு அது பயன் மதிப்பாக இருக்கவில்லை என்பதால் மட்டுமே அது பண்டமாக இருக்கிறது. ஏனென்றல் ஒரு நபருடைய உழைப்பு மற்றவர்களுக்குப் பயனுள்ள உழைப்பாக இருந்தால் மட்டுமே அது உண்மையில் உழைப்பாகும்; அது சூக்குமமான பொது உழைப்பாக இருந்தால் மட்டுமே அவருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறுவது போன்றதாகும். எனவே பண்டங்களின் உலகத்தில் இரும்பு தங்கத்தை ஈர்க்கக் கூடிய இடத்தைக் கண்டுபிடிப்பது இரும்பின் கடமை; அல்லது அதன் உடைமையாளரின் கடமையாகும். எளிமையான செலாவணி முறை பற்றிய இந்த ஆராய்ச்சியில் நாம் அனுமானிப்பது போல இந்த விற்பனை உண்மையில் நடைபெறுமானல், இந்த நெருக்கடி—பண்டத்தின் குட்டிக்கரணத்தினல் (salto mortale) சமாளிக்கப்படுகிறது. இந்த அந்நியமாதலின் விளைவாக—அதாவது, பயன் மதிப்பு அற்றதாக இருப்பவரிட

மிருந்து பயன் மதிப்பு உள்ள நபருக்கு அது மாறுகிற பொழுது —ஒரு டன் இரும்பு உண்மையில் பயன் மதிப்பு என்பதை நிரூபிக்கிறது; அதே சமயத்தில் அதன் விலை கிடைத்து விடுகிறது; கற்பனையில் நினைக்கப்பட்ட தங்கம் உண்மையான தங்கமாக மாறி விடுகிறது. ''ஓர் அவுன்ஸ் தங்கம்'' என்ற சொல் அல்லது 3ப. 17ஷி. $10^1/_2$ பெ. என்பது ஓர் அவுன்ஸ் உண்மையான தங்கத்தினால் இடம் நிரப்பப்படுகிறது; ஆனால் ஒரு டன் இரும்பு போய்விட்டது. C—M என்ற விற்பனை பண்டத்தை—அது விலையினால் பெயரளவுக்குத் தங்கமாக மாறியிருந்தது—உண்மையாகவே தங்கமாக மாற்றி விடுவதோடு மட்டுமல்லாமல்—மதிப்பின் அளவுகோல் என்ற முறையில் கற்பனையளவில் மட்டுமே தங்கமாக இருந்ததை, உண்மையில் பண்டங்களின் பணப் பெயராக மட்டும் செயலாற்றிய ஒன்றை, அதாவது தங்கத்தை அதே நிகழ்வின் மூலம் நடைமுறையில் பணமாக மாற்றி விடுகின்றது.* எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் தங்கத்தின் மூலமாக அளக்கப்பட்டதனால் அது கற்பனையில் எக்காலத்துக்கும் உரிய சம மதிப்புடையதாயிற்று. அது போல இப்பொழுது அதற்குப் பரிவர்த்தனையாகப் பண்டங்கள் எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதலின் விளைவாக—C—M என்ற விற்பனை எக்காலத்துக்கும் உரிய அந்நியமாதல் நிறைவேறுகின்ற முறையாகும்—அது முற்றிலும் அந்நியப்படுத்தப்பட்ட பண்டமாக, அதாவது உண்மையான பணமாக மாறுகிறது. ஆனால் விலைகளில் எடுத்துரைக்கப்பட்ட பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகள் முன்பே பெயர் மட்டிலான தங்கமாக மாற்றப்பட்டதனால்தான் தங்கம் விற்பனையின் மூலம் உண்மையான பணமாக மாறுகிறது.

* ''கற்பனைப் பணம், உண்மையான பணம் என்று பணம் இரண்டு வகைப்படும். அதை இரண்டு விதமான வழிகளில்—பொருள்களின் மதிப்பை அளவிடுவதற்கும் அவற்றை வாங்குவதற்கும்—பயன்படுத்த முடியும். பொருள்களை மதிப்பிடுவதற்குக் கற்பனையான பணம் உண்மையான பணத்தைப் போலவே பொருத்தமானது; அதிகச் சிறப்பானது என்று கூடச் சொல்லலாம். மதிப்பிடப்பட்ட பொருள்களை வாங்குவதற்கும் பணம் பயன்படுகிறது.... விலைகளும் ஒப்பந்தங்களும் கற்பனைப் பணத்தில் கணக்கிடப்பட்டு உண்மையான பணத்தில் நிறைவேற்றப்படுகின்றன'' (Galiani, *op. cit.*, p. 112 *et seq.*).

C—M என்ற விற்பனையின் போதும், அது போலவே M—C என்ற கொள்வினையின் போதும், இரண்டு பண்டங்களும், அதாவது பரிவர்த்தனை மதிப்பு, பயன் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படை அளவுகளும் ஒன்றுக்கொன்று எதிரெதிராக இருக்கின்றன; ஆனால் பண்டத்தைப் பொறுத்தவரை பரிவர்த்தனை மதிப்பு அதன் விலை என்ற பெயரளவில் மட்டுமே இருக்கிறது; ஆனால் தங்கத்தைப் பொறுத்தவரை, அதற்கு உண்மையான பயன் மதிப்பு இருந்த போதிலும், அதன் பயன் மதிப்பு பரிவர்த்தனை மதிப்பை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே அது எத்தகைய உண்மையான, தனிப்பட்ட தேவைக்கும் சம்பந்தமில்லாத வடிவ ரீதியான பயன் மதிப்பாகும். இவ்விதமாக, பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்ற முரண்பாடு C—M என்ற முனைக்கோடிகளில் எதிரெதிர் நிலையாக இருக்கின்றன. எனவே தங்கத்தைப் பொறுத்தவரை பண்டம் பயன் மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; விலை என்ற அதன் பெயர் மட்டிலான பரிவர்த்தனை மதிப்பு தங்கத்தில் இனி மேல்தான் விலையாக வேண்டும். இதற்கு மறு பக்கத்தில், பண்டத்தைப் பொறுத்தவரை, தங்கம் பரிவர்த்தனை மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது — அதன் வடிவ ரீதியான பயன் மதிப்பு தன்னுடைய பொருளாயத வடிவத்தைப் பண்டத்தில் இனிமேல்தான் அடைய வேண்டும். பண்டங்களின் பரிவர்த்தனையில் உள்ளுறையாக இருக்கின்ற முரண்பாடுகள் பண்டத்தின் இந்த இரட்டை வடிவத்தின் காரணமாக, அதாவது அது பண்டமாகவும் தங்கமாகவும் தோன்றும்—மறுபடியும் அதன் ஒரு முனைக்கோடி கற்பனையாகவும் அதன் எதிர்முனை உண்மையானதாகவும், எதிர் முனை கற்பனையென்றால் முனைக்கோடி உண்மையானதாகவும் இருக்கின்ற—இரட்டை உறவு, அதிலும் எதிர் உறவு மூலமாகவே தீர்க்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பண்டங்களை இரு பக்கமுள்ள துருவ எதிர் முனைகளாகக் காட்டுவதன் மூலம் இந்த முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன.

இது வரையிலும் நாம் C—M என்பதை விற்பனையாக, பண்டத்தைப் பணமாக மாற்றுவதாகக் கருதினோம். ஆனால் இதை மறு பக்கத்திலிருந்து பார்த்தோமானால், அதே

நடவடிக்கையானது இதற்கு மாறான வகையில் M—C என்பதாக, கொள்வினையாக, பணத்தைப் பண்டமாக மாற்றுவதாகத் தோன்றுகிறது. ஒரு விற்பனையானது ஒரே சமயத்தில் தவிர்க்க முடியாத வகையில் அதற்கு எதிரானதாக, ஒரு கொள்வினையாக இருக்கிறது. இந்த நடவடிக்கையை ஒரு பக்கத்திலிருந்து பார்த்தால் முன்னதாகவும் மறு பக்கத்திலிருந்து பார்த்தால் பின்னதாகவும் இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் இந்த நடவடிக்கைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு உண்மையில் என்னவென்றால் C—M என்பதில் முன்முயற்சியானது பண்டத்தின் பக்கத்திலிருந்து அல்லது அதன் விற்பனையாளரிடமிருந்து வருகிறது; M—C என்பதில் முன்முயற்சி பணத்தின் பக்கத்திலிருந்து அல்லது அதை வாங்குபவரிடமிருந்து வருகிறது. பண்டத்தின் முதல் உருமாற்றத்தை, சுற்று வளையத்தின் முதல் கட்டத்தின் விளைவாக அது பணமாக மாற்றமடைவதை நாம் வர்ணிக்கிற பொழுது, அதே சமயத்தில் மற்றொரு பண்டம் முன்பே பணமாக மாற்றப்பட்டு விட்டதென்றும் எனவே அது இப்பொழுது சுற்று வளையத்தின் இரண்டாம் கட்டத்தில், M—C என்பதில் இருப்பதாகவும் முன் அனுமானம் செய்கிறோம். இவ்விதமாக முன் அனுமானங்களின் நச்சுச் சுழலில் நாம் சிக்கி விடுகிறோம். இந்த நச்சுச் சுழல் என்பது செலாவணி முறையே. C—M என்பதிலுள்ள M என்பதை மற்றொரு பண்டத்தின் உருமாற்றத்துக்குச் சொந்தமானதென்று நாம் கருதவில்லையென்றால் நாம் செலாவணி நிகழ்வுப் போக்கிலிருந்து பரிவர்த்தனை நடவடிக்கையைத் தனிமைப்படுத்துவோம். ஆனால் இந்த நிகழ்வுப் போக்கிலிருந்து அது பிரிக்கப்படுமானால், C—M என்ற கட்டம் மறைந்து விடுகிறது. ஒன்றுக்கொன்று எதிர் நிலையிலிருக்கும் இரண்டு பண்டங்கள், உதாரணமாக இரும்பும் தங்கமும் மட்டுமே மிஞ்சுகின்றன. இவற்றைப் பரிவர்த்தனை செய்வது சுற்று வளையத்தின் தனியான பகுதியல்ல; அது நேரடியான பண்டமாற்று எனலாம். தங்கத்தை உற்பத்தி செய்யும் இடத்தில் மற்ற எந்தப் பண்டத்தையும் போலவே அதுவும் ஒரு பண்டம்தான். இரும்பு அல்லது வேறு ஏதாவதொரு பண்டத்தைப் போலவே அங்கே அதன் சார்பு மதிப்பு வேறு பண்டங்களோடு அது பரிவர்த்தனை செய்யப்படுகிற

அளவுகளில் பிரதிபலிக்கிறது. ஆனால் இந்த நடவடிக்கை செலாவணி நிகழ்வில் முன் அனுமானிக்கப்பட்டது; தங்கத்தின் மதிப்பு பண்டங்களின் விலைகளில் முன்பே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே **செலாவணியின் சுற்றுவட்டத்துக்கு உள்ளே** தங்கத்துக்கும் பண்டங்களுக்குமுள்ள உறவு நேரடியான பண்டமாற்று என்றும் எனவே அவற்றின் சார்பு மதிப்பு சாதாரண பண்டங்கள் என்ற முறையில் அவற்றின் பரிவர்த்தனையால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் அனுமானிப்பது முற்றிலும் தவறானதாகும். செலாவணி நிகழ்வுப் போக்கில் தங்கம் ஒரு பண்டமாக மட்டுமே மற்ற பண்டங்களோடு பரிவர்த்தனை செய்யப்படுவதாகத் தோன்றும். ஆனால் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் திட்டவட்டமான அளவு தங்கத்தின் திட்டவட்டமான அளவோடு விலைகளின் மூலமாக சமப்படுத்தப்படுகிறது என்பதால்தான் இந்தப் பிரமை ஏற்படுகிறது. அதாவது, அது எக்காலத்துக்கும் உரிய சம மதிப்போடு, பணம் என்ற முறையில் தங்கத்தோடு ஒப்பிடப்படுகிறது. **அதன் காரணமாக** அது தங்கத்தோடு நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும். ஒரு பண்டத்தின் விலையானது தங்கத்தில் **கைவரப்** பெறும் அளவுக்கு, அந்தப் பண்டம் தங்கத்துக்குப் பண்டமாகவே உழைப்பு நேரத்தின் குறிப்பிட்ட பொருண்மையாக்கம் என்ற முறையில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது; ஆனால் தங்கத்தில் கைவரப் பெற்றிருப்பது பண்டத்தின் **விலை** என்ற முறையில் பண்டம் தங்கத்துக்குப் பணம் என்ற முறையில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது; பண்டம் என்ற முறையில் அல்ல. அதாவது, பொதுவான உழைப்பு நேரத்தின் பொருண்மையாக்கம் என்ற முறையில் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. ஆனால் செலாவணி நிகழ்வுப் போக்கில் அந்தப் பண்டம் பரிவர்த்தனை செய்யப்படுகிற தங்கத்தின் அளவு இரண்டு உதாரணங்களிலுமே பரிவர்த்தனையின் மூலமாக நிர்ணயிக்கப்படவில்லை; ஆனால் பரிவர்த்தனையானது பண்டத்தின் விலையால், தங்கத்தின் மூலமாகக் கணக்கிடப்பட்ட அதன் பரிவர்த்தனை மதிப்பினால் நிர்ணயிக்கப்படுகிறது.*

---

* எனினும், பண்டங்களின் சந்தை விலை அவற்றின் மதிப்புக்கு மேலே அதிகரிப்பதையோ அல்லது கீழே குறைவதையோ இது தடுப்பதில்லை. ஆனால் இந்த அம்சம் எளிமை

செலாவணி நிகழ்வுப் போக்கினுள் தங்கம் C—M என்ற விற்பனையின் மூலமாகவே எப்பொழுதும் கிடைக்கப் பெறுவதாகத் தோன்றுகிறது. ஆனால் C—M என்ற விற்பனை அதே சமயத்தில் M—C என்ற கொள்வினையாகவும் இருப்பதால், இந்த நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் C என்ற பண்டம் தன்னுடைய முதல் உருமாற்றத்துக்கு ஆளாகும் பொழுது, எதிர் முனைக்கோடியிலிருந்து அதை M என்பதாக எதிர் நிற்கிற பண்டமானது அதன் இரண்டாவது உருமாற்றத்துக்கு ஆளாகி விடுகிறது. எனவே முதல் பண்டம் வட்டத்தின் முதல் கட்டத்தில் இன்னும் இருக்கும் பொழுதே, அது சுற்று வளையத்தின் இரண்டாவது கட்டத்தினுள் போய்க் கொண்டிருக்கிறது.

செலாவணியின் முதல் கட்டத்தின், அதாவது விற்பனையின் முடிவில் பணம் கிடைக்கிறது. இது இரண்டாவது கட்டத்தின் விலகல் நிலையாகும். பண்டத்தின் முதல் வடிவத்தை அதன் தங்கச் சமமதிப்பு அகற்றி இடத்தைப் பிடித்து விட்டது. இந்த முடிவு ஆரம்பத்தில் ஓர் இடைவெளியைக் கொண்டதாக இருக்கும். ஏனென்றால் இப்பொழுது பண்டம் தனிவகையான நிலையான உருவத்தைப் பெற்றிருக்கிறது. உடைமையாளரிடம் இருந்த பொழுது பயன் மதிப்பு இல்லாததாக இருந்த பண்டம் எப்போதுமே பயனுள்ளதாக இருக்கும் வடிவத்தில் இப்பொழுது இருக்கிறது. ஏனென்றால் அதை எப்போதும் பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும். அது மறுபடியும் பண்டங்களின் உலகத்தில் எப்பொழுது, எந்தக் கட்டத்தில் செலாவணிக்கு வரும் என்பது சந்தர்ப்பங்களைப் பொறுத்திருக்கிறது. பண்டத்தின் வாழ்க்கையில் தங்க முட்டைப் புழு ஒரு சுயேச்சையான கட்டமாக இருக்கிறது; இந்த நிலையில் அது குறைவான காலத்திற்கோ அல்லது அதிகமான காலத்திற்கோ இருக்கக் கூடும். கொள்வினை, விற்பனை என்ற நடவடிக்கைகளின் பிரிவினையும் சுதந்திரமும் பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குகிற உழைப்பின் பொதுவான அம்சமாகும்; ஆனால் பண்டமாற்றில் ஒரு தனி

யான செலாவணி வட்டத்துக்கு அப்பாற்பட்டதாகும். இது முற்றிலும் வேறான ஒரு துறையைச் சேர்ந்தது. அதைப் பிறகு ஆராய்வோம். அங்கே மதிப்புக்கும் சந்தை விலைக்கும் உள்ள உறவையும் நாம் விவாதிப்போம்.

யான பயன் மதிப்பைப் பரிவர்த்தனை செய்வது இன்னொரு தனியான பயன் மதிப்பைப் பரிவர்த்தனை செய்வதோடு நேரடியாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது.

M—C என்ற கொள்வினை C—M என்பதின் நேர்மாருன இயக்கமாகவும் அதே சமயத்தில் பண்டத்தின் இரண்டாவது அல்லது கடைசியான உருமாற்றமாகவும் இருக்கிறது. பண்டம் தங்கம் அல்லது பொதுவான சமமதிப்புடையதாகக் கருதப்படுவதால் அது மற்ற எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளின் மூலமாக நேரடியாக எடுத்துரைக்கப்படலாம். இந்தப் பண்டங்கள் அனைத்துமே தங்களின் விலைகளின் மூலம் தாங்கள் எதிர்காலத்தில் தங்கமாவதற்குப் பாடுபடுகின்றன. அதே சமயத்தில் பரிவர்த்தனை மதிப்பு என்ற தங்களுடைய ஆன்மா தங்கமாக மாறுகிற பொழுது பயன் மதிப்புகள் என்ற தங்களுடைய உடம்புகள் பணத்தின் அணிக்கு மாற வேண்டுமென்ருல் மீட்டப்பட வேண்டிய ஆதாரசுருதியை அவை சுட்டிக்காட்டுகின்றன. பண்டங்கள் அந்நியமாதலின் பொதுவான விளைவுதான் முற்றிலும் அந்நியமாகிய பண்டமாகும். தங்கம் பண்டங்களாக மாற்றப்படும் பொழுது அதற்குக் குண ரீதியான எல்லை கிடையாது. அளவு ரீதியான எல்லை மட்டுமே உண்டு. தங்கத்தின் அளவு அல்லது அது பிரதிநிதித்துவப்படுத்துகிற மதிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை இது குறிக்கிறது. உடனடிப் பணத்தைக் கொண்டு எல்லாவற்றையும் வாங்க முடியும். பண்டமானது C—M என்ற இயக்கத்தில் பயன் மதிப்பை அந்நியப்படுத்துதலின் விளைவாகத் தன்னுடைய விலையையும் யாரோ ஒருவருடைய பணத்தின் பயன் மதிப்பையும் கைவரப் பெறும் பொழுது, M—C என்ற இயக்கத்தில் பரிவர்த்தனை மதிப்பை அந்நியப்படுத்துதலின் விளைவாக அது தன்னுடைய பயன் மதிப்பையும் மற்ற பண்டத்தின் விலையையும் கைவரப் பெறுகிறது. பண்டம் தன்னுடைய விலை கிடைக்கப் பெறுவதன் மூலம் அதே சமயத்தில் தங்கத்தை உண்மையான பணமாக மாற்றுவதைப் போல தன்னுடைய மறு மாற்றத்தின் மூலமாக அது தங்கத்தைத் தன்னுடைய (பண்டத்தின்) தற்காலிகமாக மட்டுமே உள்ள பண வடிவத்துக்கு மாற்றி விடுகிறது. பண்டங்களின் செலாவணி என்பது வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினையையும் அதன் காரணமாகத்

தனி நபரின் தரப்பில் பன்முகமான தேவைகளேயும் முற்கோளாகக் கொண்டிருப்பதாலும் (அந்த நபரின் சொந்தமான உற்பத்தியின் குறுகிய செயல் எல்லேக்குப் பன்முகமான தேவை எதிர் மறையான விகிதம் கொண்டிருக்கும்), M—C என்ற கொள்விலே சமமதிப்பு என்ற முறையில் ஒரு பண்டத்தோடு சில சமயங்களில் சமன்பாடு கொண்டிருக்கும்; வேறு சமயங்களில், வாங்குபவரின் தேவைகளினுலும் அவரிடமுள்ள பணத்தின் அளவினுலும் நிர்ணயிக்கப்படுகிற தொடர் வரிசையான பண்டங்களின் சமமதிப்புகளோடு சமன்பாடு கொண்டிருக்கும். ஒரு விற்பனே என்பது அதே சமயத்தில் கொள்விலேயாகவும் இருக்க வேண்டும் என்பதைப் போல, கொள்விலேயும் அதே சமயத்தில் விற்பனேயாக இருக்க வேண்டும். M—C என்பது அதே சமயத்தில் C—M என ஆகிறது. ஆனுல் இந்த உதாரணத்தின் போது தங்கம் முன் முயற்சி எடுக்கிறது; அல்லது வாங்குபவர் முன்முயற்சி எடுக்கிருர்.

C—M—C என்ற முழுச் சுற்று வளேயத்துக்குத் திரும்புகிற பொழுது ஒரு பண்டம் உருமாற்றத்தின் முழுத் தொடரையும் அதில் பூர்த்தி செய்வதைப் பார்க்க முடியும். ஆனுல் அதே சமயத்தில் இந்தப் பண்டம் சுற்று வளேயத்தின் முதல் கட்டத்தை ஆரம்பித்து முதல் உருமாற்றத்துக்கு ஆளானவுடன், வேருெரு பண்டம் சுற்று வளேயத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பித்து இரண்டாவது உருமாற்றத்துக்கு ஆளாகி செலாவணியிலிருந்து வெளியேறி விடுகிறது. முதல் பண்டம் இதற்கு மாருன வகையில், சுற்று வளேயத்தின் இரண்டாவது கட்டத்தில் நுழைந்து இரண்டாவது உருமாற்றத்துக்கு ஆளாகிய பிறகு செலாவணியிலிருந்து வெளியேறி விடுகிறது; அதே பொழுதில் மூன்ருவது பண்டம் செலாவணி வட்டத்துக்குள் நுழைந்து சுற்று வளேயத்தின் முதல் கட்டத்தினுள் போய் முதல் உருமாற்றத்தைப் பூர்த்தி செய்கிறது. இப்படி ஒரு பண்டத்தின் முழுமையான உருமாற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற C—M—C என்ற முழுச் சுற்று வளேயமும் அதே சமயத்தில் இரண்டாவது பண்டத்தின் முழுமையான உருமாற்றத்தின் முடிவாகிறது; மூன்ருவது பண்டத்தின் முழுமையான உருமாற்றத்தின் ஆரம்பமாகவும் இருக்கிறது. எனவே அது ஆரம்பமோ

முடிவோ இல்லாத தொடராகும். இதை விளக்குவதற்கும் பண்டங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கும், இரண்டு முனைக்கோடிகளிலும் உள்ள Cயைக் குறிக்க வெவ்வேறு குறியீடுகளைப் பயன்படுத்துவோம்: உதாரணம் C′—M—C″. முதல் இனமாகிய C′—M என்பதில் M என்பது மற்றொரு C—M என்பதின் முடிவு என்பதை முன் அனுமானமாகக் கொண்டிருக்கிறது. எனவே அது C—M—C என்ற சுற்று வளையத்திலுள்ள கடைசி இனமாகும். இரண்டாவது இனமாகிய M—C″ என்பது அது C″—M என்பதில் முடிவடையும் என்பதை உள்ளடக்கியிருக்கிறது; C″—M—C‴ என்ற சுற்று வளையத்திலுள்ள முதல் இனமாக இருக்கிறது. இப்படியே தொடர்கிறது. மேலும் M என்பது ஒரு தனியான விற்பனையின் முடிவு என்ற போதிலும் கடைசி இனமாகிய M—C என்பது M — C′ + M — C″ + M — C‴ (இப்படியே தொடரும்) வடிவத்தைப் பெற முடியும் என்பது தெளிவாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அதை எண்ணற்ற கொள்வினைகளாகப் பிரிக்கலாம்; அதாவது, எண்ணற்ற விற்பனைகளாக அதன் வழியே பண்டங்களின் புது முழுமையான உருமாற்றங்களின் எண்ணற்ற முதல் இனங்களாகப் பிரிக்கலாம். இவ்விதத்தில் ஒரு பண்டத்தின் முழுமையான உருமாற்றம் ஆரம்பமும் முடிவுமில்லாத உருமாற்றங்களின் தொடரில் ஒரு வரிசையாக இருப்பது மட்டுமல்லாமல், அப்படிப்பட்ட பல தொடர்களில், பண்டங்களின் உலகத்திலுள்ள செலாவணியில் கண்ணியாக இருந்து (ஏனென்றால் ஒவ்வொரு தனியான பண்டமும் C—M—C என்ற சுற்று வளையத்துக்குள் போய்வர வேண்டும்) அப்படிப்பட்ட இயக்கங்களின் தொடரில் முடிவில்லாத நெருக்கமான வலைப்பின்னல்களை ஏற்படுத்துகிறது. அவை எண்ணற்ற அளவில் வெவ்வேறு முனைகளில் தொடர்ச்சியாக முடிவடைகின்றன; தொடர்ச்சியாக மறுபடியும் ஆரம்பமாகின்றன. ஆனால் ஒவ்வொரு தனியான விற்பனை அல்லது கொள்வினை சுயேச்சையான, தனிப்பட்ட நடவடிக்கையாகவே இருக்கிறது; அதன் தொடர்ச்சியாக இருக்கின்ற, அதை முழுமையாக்குகின்ற அடுத்த நடவடிக்கை உடனடியாகத் தொடர வேண்டும் என்பது அவசியமல்ல; காலமும் இடமும் சார்ந்த வகையில் அது பிரிக்கப்படலாம். C—M அல்லது M—C என்ற ஒவ்வொரு குறிப்பிட்ட வட்டமும்—ஒரு பண்டம்

பயன் மதிப்பாக மாறுவதையும் மற்ருெரு பண்டம் பணமாக மாறுவதையும், அதாவது சுற்று வளையத்தின் முதற் கட்டத்தையும், இரண்டாவது கட்டத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது—இரு தரப்புக்கும் தனியான இடைக்காலத்தைக் கொடுப்பதால், மறு பக்கத்தில் எல்லாப் பண்டங்களும் பொதுவான சமமதிப்புடைய தங்கத்தின் வடிவத்தில் (அவை எல்லாவற்றுக்கும் பொதுவான வடிவம்) தங்களுடைய இரண்டாவது உருமாற்றத்தை, அதாவது சுற்று வளையத்தின் இரண்டாவது கட்டத்தின் ஆரம்ப நிலையில் தோன்றுவதால் செலாவணியின் உண்மையான நிகழ்வில் எந்த M—Cயும் ஏதாவதொரு குறிப்பிட்ட C—Mஐத் தொடர்ந்து நடைபெறலாம். அதாவது, ஏதாவதொரு பண்டத்தின் வாழ்க்கை வட்டத்தின் இரண்டாவது பகுதி ஏதாவதொரு பண்டத்தின் வாழ்க்கை வட்டத்தின் முதல் பகுதியைப் பின் தொடரலாம். உதாரணமாக, A என்பவர் இரும்பை 2 பவுன் விலைக்கு விற்பனை செய்கிருர். இதனுல் C—M அல்லது இரும்பு என்ற பண்டத்தின் முதல் உருமாற்றம் நடைபெற்று விட்டது. ஆனுல் தற்சமயத்தில் A வேறு எந்தப் பொருளையும் வாங்கவில்லை. அதே சமயத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு இரண்டு குவார்ட்டர் கோதுமையை 6 பவுன் விலைக்கு விற்பனை செய்த B என்பவர் ''மோசஸ் அண்ட் சன்'' என்ற கடையிலிருந்து அதே 6 பவுன் பணத்தைக் கொண்டு ஒரு கோட்டும் டிரவுசரும் வாங்குகிருர். அதன் மூலம் M—C என்பதை அல்லது கோதுமை என்ற பண்டத்தின் இரண்டாவது உருமாற்றத்தைப் பூர்த்தி செய்கிருர். M—C, C—M என்ற இரண்டு நடவடிக்கைகளும் ஒரே தொடரின் பகுதிகளாக மட்டுமே தோன்றுகின்றன. ஏனென்ருல் M [பணம் அல்லது] தங்கம் என்ற முறையில் எல்லாப் பண்டங்களும் ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றன; தங்கம் மாற்றமடைந்த இரும்பு அல்லது மாற்றமடைந்த கோதுமை ஆகியவற்றில் எதைப் பிரதிநிதித்துவப்படுத்திலுைம் அது வேருனதாகத் தோன்றப் போவதில்லை. எனவே உண்மையான செலாவணி நிகழ்வில் C—M—C என்பது அதிகமான அளவுக்குத் தற்செயலான சம்பவங்களின் சேர்க்கையை, பல்வேறு முழுமையான உருமாற்றங்களின் கட்டங்களின் கதம்பம் ஒன்றுக்குப் பின் ஒன்ருக வருவதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே

நடைமுறையில் செலாவணி நிகழ்வு பண்டத்தின் முழுமையான உருமாற்றமாக இல்லாமல், அதாவது எதிரான கட்டங்களின் மூலமான இயக்கமாக இல்லாமல் எண்ணற்ற கொள்வினை, விற்பனை நடவடிக்கைகளின் திரட்சியாக மட்டுமே இருப்பதாகத் தோன்றுகிறது. இவை தற்செயலாக ஒரே சமயத்தில் அல்லது ஒன்றுக்குப் பின் ஒன்றாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு தனி நடவடிக்கையும், அதாவது விற்பனையும் அதே சமயத்தில் தனக்கு எதிரானதாக, வாங்குவதாகவும் இதற்கு எதிரெதிர் மாறானதாகவும் குறிப்பாக இருப்பதால் இந்த நிகழ்வு தனது தனியான வடிவத்தை இழக்கிறது. இதற்கு மாறாக, பண்டங்களின் உலகத்தில் உருமாற்றம் செலாவணி நிகழ்வாக அமைகிறது; எனவே செலாவணியின் பூரணமான இயக்கத்தில் முன்னது பிரதிபலிக்க வேண்டும். இந்தப் பிரதிபலிப்பு அடுத்த பகுதியில் ஆராயப்படும். C—M—C என்ற சுற்று வளையத்தின் இரண்டு முனைக்கோடிகளிலும் உள்ள C என்பது M என்பதனோடு வேறுபட்ட சம்பிரதாயமான உறவு கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். முதலில் காணப்படும் C என்பது குறிப்பிட்ட பண்டம்; இது எக்காலத்துக்கும் உரிய பண்டமான பணத்தோடு ஒப்பிடப்படுகிறது. ஆனால் இரண்டாவது கட்டத்தில் எக்காலத்துக்கும் உரிய பண்டமான பணம் ஒரு தனிப்பட்ட பண்டத்தோடு ஒப்பிடப்படுகிறது. எனவே C—M—C என்ற சூத்திரத்தை P—U—I என்ற சூக்குமமான தர்க்கவியல் முக்கூற்று முடிவாக வகைப்படுத்த முடியும். இதில் குறிப்பிட்ட தன்மை முதல் முனைக் கோடியையும், எக்காலத்துக்கும் உரிய தன்மை பொதுவான மத்திய இனத்தையும், தனித்தன்மை கடைசி முனைக் கோடியையும் குறிக்கிறது.

பண்ட உடைமையாளர்கள் பண்டங்களின் பாதுகாவலர்கள் என்று மட்டுமே செலாவணி வட்டத்துக்குள் நுழைந்தார்கள். இந்த வட்டத்துக்குள் அவர்கள் வாங்குபவர், விற்பனையாளர் என்ற எதிரிடையான பாத்திரங்களில் ஒருவருக்கொருவர் எதிர் நிற்கிறார்கள்; ஒருவர் சர்க்கரைக்கும் அடுத்தவர் தங்கத்துக்கும் சொரூபமாக இருக்கிறார்கள். சர்க்கரை தங்கமாக மாறுவதைப் போல விற்பனையாளரும் கொள்வினை செய்பவராக மாறுகிறார். எனவே இந்தத் தனி

வகையான சமூகப் பண்புகளெல்லாம் தனிப்பட்ட மனித இயல்பின் காரணமாக ஏற்படுபவை அல்ல; தங்களுடைய பொருள்களைக் குறிப்பிட்ட பண்டங்களின் வடிவத்தில் உற்பத்தி செய்கிற நபர்களின் பரிவர்த்தனை உறவுகளைப் பொறுத்திருப்பதாகும். கொள்வினையாளர், விற்பனையாளர் என்பது கலப்பற்ற தனிப்பட்ட உறவைச் சிறிதளவு கூடப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. அவர்களுடைய தனிப்பட்ட உழைப்பு நீக்கப்படுகிற அளவுக்குத்தான், அதாவது பணம் என்ற தனிப்பட்ட அல்லாத உழைப்பாக மாற்றப்படுகிற அளவுக்குத்தான் அவர்கள் ஈடுபடுகிறார்கள். எனவே முதலாளித்துவப் பொருளாதார மாதிரி இனங்களான கொள்வினையாளர், விற்பனையாளர் ஆகியவற்றை மனித இனத்தின் தனித்தன்மையின் அழிவில்லாத சமூக வடிவங்களாக நினைப்பது பொருளற்றதாகும். அது போலவே தனித்தன்மை அழிக்கப்படுவதைக் குறிப்பதாக அவற்றைப் பற்றி நினைத்து அழுது புலம்புவதும் பொருத்தமற்றதாகும்.* அவை உற்

* கொள்வினை, விற்பனையில் பிரதிநிதித்துவப்படுகிற பகைமை நிலையின் மேலெழுந்தவாரியான அம்சத்தைக் கண்டு சில மென்மையான இதயங்கள் அதிகமான அளவுக்குப் புண்பட்டு விடுகின்றன என்பதை இஸாக் பெரேய்ரா எழுதிய *Leçons sur l'industrie et les finances*, Paris, 1832 என்ற புத்தகத்திலுள்ள பின்வரும் பகுதி எடுத்துக் காட்டுகிறது. *Crédit mobilier* என்ற வங்கியைக்[21] கண்டுபிடித்தவரும் அதற்குச் சர்வாதிகாரியாக இருந்து பாரிஸ் பங்குச் சந்தையின் ஓநாயாக அவப்பெயரெடுத்தவரும் இதே இஸாக் பெரேய்ராதான் என்ற உண்மை பொருளாதாரத்தைப் பற்றிய இத்தகைய உணர்ச்சிக் கனிவான விமரிசனத்தின் உண்மையான முக்கியத்துவத்தை அம்பலப்படுத்துகிறது. சான்-சிமோனுக்கு அன்று முக்கியமான காத்தருள்பவராக இருந்த இஸாக் பெரேய்ரா பின்வருமாறு எழுதுகிறார்: ''தனி மனிதர்கள்—தங்களுடைய உழைப்பிலும் நுகர்விலும்—ஒருவருக்கொருவர் தனித்தும் பிரிந்துமிருப்பதால் தங்களுடைய வெவ்வேறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களைப் பரிவர்த்தனை செய்து கொள்கிறார்கள். பரிவர்த்தனை செய்வதன் அவசியம் அவற்றின் சார்புநிலை மதிப்பை நிர்ணயிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது. எனவே மதிப்பு, பரிவர்த்தனை என்ற கருத்துக்கள் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றன; இன்றைய வடிவத்தில் அவை இரண்டும் தனித்தன்மை, பகைமை நிலை ஆகியவற்றின் வெளியீடு

பத்தியின் சமூக நிகழ்வின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தோன்றுகின்ற தனித்தன்மையின் அடிப்படையான வெளியீடாகும். மேலும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் பகைமை நிலை இயல்பு கொள்வினையாளர், விற்பனையாளர் என்ற எதிரெதிர் நிலையில் மேலெழுந்தவாரியாகவும் வெறும் சம்பிரதாய ரீதியில் வெளிப்படுவதாலும் இந்த எதிரெதிர் நிலை முன்பே முதலாளித்துவக் காலத்துக்கு முந்திய சமூக அமைப்புகளில் காணப்படுகிறது. ஏனென்றால் தனி நபர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் உறவுகள் பண்ட உடைமையாளர்கள் என்ற முறையில் இருக்க வேண்டும் என்பதை மட்டும் இது வற்புறுத்துகிறது.

C—M—C என்ற சுற்று வளையத்தின் முடிவை ஆராய்ந்தால் அது C—C என்ற பரிவர்த்தனையில் கலந்து விடுவதைக் காட்டும். பண்டம் பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்பட்டு விட்டது; பயன் மதிப்பு பயன் மதிப்புக்குப் பரிவர்த்தனை செய்யப்பட்டு விட்டது; பண்டம் பணமாக மாற்றமடைவது அல்லது பண்டம் பணமாவது இந்த வளர்சிதை மாற்றம் நடைபெற உதவி செய்கிற இடைநிலைக் கட்டம் தான். பணம் என்பது பண்டங்களின் பரிவர்த்தனை ஊடகமாக மட்டுமே முன்வருகிறது—எனினும் இது பொதுவான பரிவர்த்தனை ஊடகம் அல்ல; செலாவணி நிகழ்வுக்கு ஏற்பத் திருத்தியமைக்கப்பட்ட பரிவர்த்தனை ஊடகம், அதாவது செலாவணி ஊடகம்.*

---

களாகும்.... உற்பத்திப் பொருள்களின் மதிப்பு நிர்ணயிக்கப்படுவது விற்பனையும் கொள்வினையும் இருப்பதனால்தான். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் சமூகத்தின் வெவ்வேறு மனிதர்களுக்கிடையே பகைமை நிலை நிலவுவதனால் தான். விற்பனையும் கொள்வினையும் நடக்கும் பொழுது மட்டுமே, அதாவது எங்கே ஒவ்வொரு தனி நபரும் தன்னுடைய வாழ்க்கையை நீடித்துக் கொள்வதற்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்குப் போராடுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறாரோ அங்கே விலை, மதிப்பு பற்றிய முன்னீடுபாடு ஏற்படுகிறது'' (*op. cit.*, pp. 2, 3 *passim*).

* ''பணம் என்பது ஊடகம் மட்டுமே, பிரதிநிதி மட்டுமே; ஆனால் வாழ்க்கைக்கு உதவி செய்யும் பண்டங்கள் தான் குறியும் நோக்கமும் ஆகும்''. Boisguillebert, *Le détail de la France*, 1697, in Eugène Daires's *Economistes financiers du XVIIIe siècle*, Vol. I, Paris, 1843, p. 210.

பண்டங்களின் செலாவணி நிகழ்வுப் போக்கு C—C என்பதில் முடிவடைவதால் அதனால் பணத்தால் மத்தியஸ்தம் செய்யப்படுகிற பண்டமாற்று மட்டுமே என்று தோன்றுவதால் அல்லது பொதுவாக C—M—C என்பது இரண்டு தனியான வட்டங்களாகப் பிரிவது மட்டுமல்லாமல் ஒரே சமயத்தில் அவற்றின் இயக்காற்றல் ஒருமையாக இருப்பதால் ஒருமை மட்டுமே இருக்கிறது—கொள்விளை, விற்பனை என்ற பிரிவு இல்லை என்று முடிவு செய்தால் அது குறிப்பிட்ட ஒரு வகையான சிந்தனை முறையைக் குறிக்கும். அதை விமர்சிப்பது தர்க்கவியல் துறையைச் சேர்ந்ததே தவிர பொருளாதாரத் துறையைச் சேர்ந்ததல்ல. பரிவர்த்தனையைக் கொள்வினை, விற்பனை என்று பிரிப்பது சமூக வளர்சிதை மாற்றத்துக்கு எதிராக நிற்கிற ஸ்தல மட்டத்தில் உருவான, பூர்வகால, மரபு ரீதியாகப் புனிதமான, உணர்ச்சிக் கனிவின்படி பொருளற்ற தடைகளை ஒழித்து விடுவதோடு, இந்த நிகழ்வோடு சம்பந்தப்பட்ட துணைக்காரணிகள் பொதுவாக சின்னாபின்னம் அடைவதையும் அவை தொடர்ச்சியாக எதிரெதிர் நிலையில் இருப்பதையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சுருக்கமாகச் சொல்வதென்றால் முக்கியமாக பண்டத்துக்கும் பணத்துக்கும் இடையே இருக்கின்ற முரண்பாடு முதலாளித்துவ உழைப்பு முறையில் உள்ளுறையாகவுள்ள எல்லா முரண்பாடுகளின் சூக்குமமான, பொதுவான வடிவம் என்பதால் அது வர்த்தக நெருக்கடிகள் ஏற்படக்கூடும் என்ற பொதுவான நிலையைக் கொண்டிருக்கிறது. எனவே நெருக்கடிகள் இல்லாவிட்டாலும் பணச் செலாவணி நடைபெறும் என்றபோதிலும் பணச் செலாவணி இல்லாமல் நெருக்கடிகள் ஏற்பட முடியாது. எங்கு தனிப்பட்ட பரிவர்த்தனையை அடிப்படையாகக் கொண்ட உழைப்பு ஒரு பணவியல் முறையை இன்னும் உருவாக்கிக் கொள்ளவில்லையோ அங்கு முதலாளித்துவ உற்பத்தி முறையின் முழு வளர்ச்சியை முற்கோளாகக் கொண்ட நிகழ்வுகளை அதனால் உற்பத்தி செய்ய முடியாது என்பது மட்டுமே இதன் பொருளாகும். விலையுயர்ந்த உலோகங்களின் ''தனி உரிமைகளை'' ஒழித்து பகுத்தறிவுக்குப் பொருத்தமானதென்று சொல்லப்படுகிற பணவியல் முறையைப் புகுத்தி, முதலாளித்துவ உற்பத்தி முறையிலுள்ள ''குறைபாடுகளை''

நிவர்த்தி செய்யப் போகிறோம் என்று பேசுகிற விமர்சனத்தின் மதிநுட்பத்தை இது எடுத்துக் காட்டுகிறது. மிகவும் கெட்டிக்காரத் தனமானது என்று பாராட்டப்படுகிற ஓர் ஆலோசனை அதற்கு மாறான வகையில் பொருளாதாரத்தில் தவறை வருத்தத்தோடு ஒப்புக் கொள்ளுவதற்கு உதாரணமாகவும் இருக்கலாம். பிரபலமான ஆங்கிலப் பொருளியலாளர் ஜான் ஸ்டூவர்ட் மில்லின் தகப்பனுரான **ஜேம்ஸ் மில்** பின்வருமாறு கூறுகிறார்:

''வருடாந்தர உற்பத்தியின் அளவு எப்படியிருந்தாலும்... அது வருடாந்தரத் தேவையின் அளவைக் காட்டிலும் கூடுதலாக ஒருபோதும் இருக்க முடியாது.... பரிவர்த்தனையில் இரண்டு நபர்கள் ஈடுபடும் பொழுது ஒருவர் அளிப்போடு மட்டுமே வருவதில்லை; அடுத்தவர் தேவையோடு மட்டுமே வருவதில்லை. ஒவ்வொருவரும் தேவை, அளிப்பு என்ற இரண்டோடும் வருகிறார்கள்.... அவர் கொண்டுவருகிற அளிப்பு அவருடைய தேவையின் கருவியாகும்; அவருடைய தேவையும் அளிப்பும் ஒன்றுக்கொன்று சரியான வகையில் சமம் என்பது திண்ணம். எனவே எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் தேவையைக் காட்டிலும் அதிகமான அளவில் பண்டமோ அல்லது பண்டங்களோ இருந்தால் அதே சம அளவுக்கு, தேவையைக் காட்டிலும் குறைந்த அளவில் மற்ற பண்டமோ அல்லது பண்டங்களோ இல்லாமல் இருப்பதென்பது அசாத்தியமாகும்.''*

---

* 1807ம் வருடத்தில் நவம்பர் மாதத்தில் லண்டனில் வில்லியம் ஸ்பென்ஸ் என்பவர் எழுதிய *Britain Independent of Commerce* என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. அதிலடங்கியிருந்த மூலக்கருத்தை வில்லியம் காபெட் தன்னுடைய *Political Register* என்ற வெளியீட்டில் *Perish Commerce* என்ற இன்னும் தீவிரமான தலைப்பின் கீழ் விரித்தெழுதினார். இதற்கு எதிர்ப்பாக ஜேம்ஸ் மில் எழுதிய *Defence of Commerce* என்ற புத்தகம் 1808ம் வருடத்தில் வெளிவந்தது.[22] அந்தப் புத்தகத்தில் அவர் அந்தக் காலத்திலேயே எழுதிய வாதம் அவருடைய *Elements of Political Economy* மற்றொரு புத்தகத்திலும் காணப்படுகிறது. அந்தக் கருத்துள்ள ஒரு பகுதியைத் தான் நாம் மேற்கோள் காட்டியிருக்கிறோம். இந்தக் கெட்டிக்காரத் தனமான கண்டுபிடிப்பை ஸே என்பவர் தம்முடையதாக அறிவித்ததோடு வர்த்தக நெருக்கடிகளைப் பற்றி ஸிஸ்மோண்டி, மால்த்யூஸ் ஆகியோருடன் நடத்திய வாதங்களில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். ''விஞ்ஞான இளவரசன்'' ("prince de la science") என்று சொல்லப்பட்ட

மில் செலாவணி நிகழ்வுப் போக்கை நேரடியான பண்டமாற்றுக்கு வகைப்படுத்துவதன் மூலம் சமநிலையை ஏற்படுத்துகிறார். ஆனால் அதற்கு மாறாக அவர் செலாவணி நிகழ்வுப் போக்கிலிருந்து கிடைத்த நபர்களான கொள்வினையாளர், விற்பனையாளர் என்பவர்களை நேரடியான பண்டமாற்றுக்குள் மெதுவாக நுழைக்கிறார். மில்லின் குழப்பமான வாக்கியங்களைப் பின்பற்றி எல்லாப் பண்டங்களையும் விற்பனை செய்ய முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு என்று ஒருவர் சொல்லலாம். உதாரணமாக, 1857-58ம் வருடங்களில் ஏற்பட்ட வர்த்தக நெருக்கடியின் சில கட்டங்களில் லண்டனிலும் ஹாம்பர்கிலும் ஒரு பண்டத்துக்கு, அதாவது பணத்துக்கு, விற்பவர்களைக் காட்டிலும் கொள்வினையாளர்கள் அதிகமாக இருந்தார்கள்; பணத்தின் மற்ற எல்லா வடிவங்களையும், அதாவது பண்டங்களைப் பொறுத்தவரை கொள்வினையாளர்களைக் காட்டிலும் விற்பவர்கள் அதிகமாக இருந்தார்கள். கொள்வினையையும் விற்பனையையும் பற்றிய இயக்க மறுப்பியல் சமநிலை ஒவ்வொரு கொள்வினையும் ஒரு விற்பனை, ஒவ்வொரு விற்பனையும் ஒரு கொள்வினை என்று சொல்வதோடு நின்று விடுகிறது. ஆனால் பண்டங்களை விற்பனை செய்ய முடியாமலும் எனவே எதையும் வாங்க முடியாமலும் இருக்கின்ற பண்டங்களின் உடைமையாளர்களுக்கு இது குறைபாடுடைய சமாதானமே.*

---

இந்தக் கேலிக்குரிய நபர்—அவருடைய சமகாலத்தவர்களான மால்த்யூஸ், ஸிஸ்மோண்டி, ரிக்கார்டோ ஆகியோரை அவர் எந்தப் பாரபட்சமுமின்றி தொடர்ச்சியாகத் தவறாகவே எடுத்துக் கூறினார் என்பதே அவருடைய பெருமையாகும்—அரசியல் பொருளாதாரத்துக்கு எந்தப் புதிய கருத்தை வழங்கினார் என்பது தெரியாததால், ஐரோப்பாவில் அவரைப் போற்றியவர்கள் அவர் கொள்வினை, விற்பனை பற்றிய இயக்க மறுப்பியல் சமநிலை என்ற அரிய கருத்தை வழங்கியிருப்பதாக அறிவித்தார்கள்.

* பண்டத்தின் வெவ்வேறு அம்சங்களைப் பொருளாதார நிபுணர்கள் எப்படி வர்ணிக்கிறார்கள் என்பதைக் கீழ்வரும் உதாரணங்களில் காணலாம்:

''கையில் பணத்தை வைத்திருக்கும் பொழுது நமது ஆசைக்குரிய பொருளை வாங்குவதற்கு நாம் செய்ய வேண்டிய பரிவர்த்தனை ஒன்றுதான்; மற்ற உபரிப் பொருள்கள் இருந்தால் நாம் செய்ய வேண்டிய பரிவர்த்தனை இரண்டா

விற்பனையையும் கொள்வினையையும் பிரித்திருப்பது முறையான வர்த்தகத்தைச் சாத்தியமாக்குவது மட்டுமல்லாமல், உற்பத்தியாளருக்கும் நுகர்பவருக்கும் இடையே பண்டங்கள் இறுதியாகப் பரிவர்த்தனையாவதற்கு முன்பு, எண்ணற்ற காகித நடவடிக்கைகளையும் (pro forma) சாத்தியமாக்குகிறது. இதன் மூலமாக எண்ணற்ற சுரண்டிவாழ்பவர்கள் உற்பத்தி நிகழ்வைச் சூழ்ந்து கொண்டு இந்தப் பிரிவினையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவுகிறது. இந்த உள்ளுறை முரண்பாடுகளின் வளர்ச்சியை முதலாளித்துவ சமூகத்தில் உழைப்பின் எக்காலத்துக்கும் உரிய வடிவமான பணம் **சாத்தியமாக்குகிறது** என்பதைத்தான் அது மறுபடியும் எடுத்துக் காட்டுகிறது.

### ஆ. பணச் செலாவணி முறை

முதலாவதாக, உண்மையான செலாவணி என்பது ஏராளமான தொடர்பில்லாத கொள்வினைகளும் விற்பனைகளும் ஒரே சமயத்தில் நடைபெறுவதில் அடங்கியிருக்கிறது. கொள்வினை, விற்பனை இரண்டிலுமே பண்டங்களும் பணமும் ஒன்றுக்கொன்று எதிர் நிலையில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன; விற்பனையாளர் பண்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்—கொள்வினையாளர் பணத்தைப் பிரதிநிதித்துவப்

---

கும்—அவற்றில் முதலாவது (பணத்தைப் பெறுவது) இரண்டாவதைக் காட்டிலும் மிகவும் கடினமானதாகும்'' (G. Opdyke, *A Treatise on Political Economy*, New York, [1851], pp. 287—288).

''*பணத்தின் உயர்ந்த விற்பனைத் தன்மை, பண்டங்களின் குறைந்த விற்பனைத் தன்மையின் துல்லியமான விளைவு அல்லது இயல்பான முடிவு*'' (Thomas Corbet, *An Inquiry into the Causes and Modes of the Wealth of Individuals*, etc., London, 1841, p. 117).

''*எதை அளக்கிறதோ அதற்குப் பரிவர்த்தனை செய்யப்படக் கூடிய தன்மை எப்போதுமே... பணத்துக்கு உண்டு*'' (Bosanquet, *Metallic, Paper and Credit Currency*, etc., London, 1842, p. 100).

''*பணத்தைக் கொண்டு மற்ற பண்டங்களை எப்பொழுதும் வாங்க முடியும்; ஆனால் மற்ற பண்டங்களைக் கொண்டு எப்பொழுதும் பணத்தை வாங்க முடியாது*'' (Thomas Tooke, *An Inquiry into the Currency Principle*, Second Ed., London, 1844, p. 10).

படுத்துகிறார். எனவே செலாவணிச் சாதனம் என்ற முறையில் பணம் கொள்வினைச் சாதனமாக எப்போதும் தோன்றுகிறது. பண்டங்களின் உருமாற்றத்தின் போது எதிரெதிர் நிலையான கட்டங்களில் அது வெவ்வேறான செயல்களைப் புரிகிறது என்ற உண்மையை இது மறைக்கிறது.

கொள்வினையாளர் கையில் பண்டம் போய்ச் சேருகின்ற அதே நடவடிக்கையில் விற்பனையாளரிடம் பணம் போய்ச் சேருகிறது. இவ்விதத்தில் பண்டமும் பணமும் எதிர்த் திசைகளில் முன்னேறுகின்றன. இப்படி இடங்களை மாற்றிக் கொள்வது—இந்த நிகழ்வின் போது பண்டம் ஒரு பக்கத்துக்கும் பணம் மறு பக்கத்துக்கும் போய்ச் சேர்கின்றன—முதலாளித்துவ சமூகத்தின் மேற்பரப்பு முழுவதிலும் எண்ணற்ற பல முனைகளில் ஒரே சமயத்தில் நடைபெறுகிறது. ஆனால் செலாவணி வட்டத்துக்குள் பண்டம் எடுத்து வைக்கும் முதல் காலடி அதனுடைய கடைசிக் காலடியாகவும் இருக்கிறது.* தங்கம் பண்டத்தினால் கவர்ச்சிக்கப்படுவதால் (C—M) பண்டம் இடம் மாறினாலும் அல்லது அது தங்கத்தினால் கவர்ச்சிக்கப்படுவதால் (M—C) இடம் மாறினாலும், ஒரு தடவை காலடி எடுத்து வைத்ததனால், ஒரு தடவை இடம் மாறியதன் விளைவாக அது செலாவணி வட்டத்திலிருந்து விழுந்து நுகர்வு வட்டத்துக்குள் வந்து விடுகிறது. செலாவணி என்பது பண்டங்களின்—ஆனால் எப்போதுமே வெவ்வேறு பண்டங்களின்—இடைவிடாத இயக்கமாகும்; ஒவ்வொரு பண்டமும் ஒரு காலடி மட்டுமே எடுத்து வைக்கிறது. ஒவ்வொரு பண்டமும் சுற்று வளையத்தின் இரண்டாவது கட்டத்தை அதே பண்டமாக ஆரம்பிப்பது இல்லை; வேறொரு பண்டமாக, அதாவது தங்கமாக ஆரம்பிக்கிறது. இப்படி உருமாற்றமடைந்த பண்டத்தின் இயக்கம்தான் தங்கத்தின் இயக்கமாகும். C—M என்ற நடவடிக்கையில் பண்டத்தோடு இடத்தை மாற்றிக் கொண்ட அதே நாணயம் அல்லது அதே தங்கத் துணுக்கு,

* ஒரு பண்டம் பல தடவைகள் வாங்கப்பட்டு விற்கப்படலாம். இந்த உதாரணத்தில் அது வெறும் பண்டம் என்ற முறையில் மட்டும் சுற்றி வரவில்லை; ஆனால் சாதாரணச் செலாவணி, பண்டம் மற்றும் பணத்தின் சாதாரண எதிரெதிர் நிலை என்ற கருத்தில் இதுவரை தோன்றியிராத ஒரு வேலையை அது நிறைவேற்றுகிறது.

தன்வகையில் M—C என்பதன் ஆரம்ப நிலையாக மாறி விடுகிறது. இப்படி இரண்டாவது தடவையாக மற்றொரு பண்டத்துடன் இடத்தை மாற்றிக் கொள்கிறது. B என்ற கொள்வினையாளரிடமிருந்து A என்ற விற்பனையாளரிடம் அது போய்ச் சேர்ந்த மாதிரி இப்பொழுது அது கொள்வினையாளராக மாறிவிட்ட A இடமிருந்து C என்பவரிடம் போய்ச் சேருகிறது. பண்டத்தின் வடிவத்தில் ஏற்படுகிற மாற்றங்கள், அது பணமாக மாற்றமடைவதும் பிறகு பணத்திலிருந்து மறு மாற்றமடைவதும்—வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் ஒரு பண்டத்தின் பூரணமான உருமாற்றத்தின் இயக்கம்—இரண்டு வெவ்வேறான பண்டங்களோடு இரண்டு தடவைகள் இடங்களை மாற்றிக் கொள்கிற ஒரு தனி நாணயத்தின் வெளிப்புற இயக்கமாகத் தோன்றுகிறது. ஒரே சமயத்தில் நடைபெறுகிற கொள்வினைகளும் விற்பனைகளும் எவ்வளவுதான் தற்செயலாகவும் பரவலாகவும் நடந்த போதிலும் செலாவணி நடக்கும் பொழுது கொள்வினையாளருக்கு எதிரில் எப்பொழுதும் ஒரு விற்பனையாளர் இருக்கிறார்; விற்பனையான பண்டத்தின் இடத்தை அடைகிற பணம் கொள்வினையாளர் கைகளில் வந்து சேருவதற்கு முன்பாகவே வேறொரு பண்டத்தோடு ஒரு தடவை இடங்களை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு மாறாக, அந்தப் பணம், இப்பொழுது கொள்வினையாளராக மாறிவிட்ட விற்பனையாளரிடமிருந்து இன்னொரு புதிய விற்பனையாளரிடம் சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ மறுபடியும் போய்ச் சேரும்; இப்படி அடிக்கடி இடங்களை மாற்றிக் கொள்வது பண்டங்களின் உருமாற்றத்தின் பொருந்திய இணைப்பை எடுத்துக் காட்டுகிறது. எனவே சுற்று வளையத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு அதே நாணயங்கள்—பண்டங்கள் முன்னேறும் திசைக்கு எதிர்த் திசையில்—எப்பொழுதுமே முன்னேறிச் செல்கின்றன; சில நாணயங்கள் அடிக்கடியும் மற்றவை குறைவாகவும் முன்னேறுகின்றன. எனவே வரைபடத்தில் அவை நீளமான அல்லது குட்டையான வளைவைக் காட்டுகின்றன. ஒரே நாணயத்தின் வெவ்வேறு இயக்கங்கள் ஒன்றையொன்று காலஞ்சார்ந்த வகையில் தான் தொடர முடியும். அது போலவே இதற்குத் தலைகீழாக கொள்வினைகள், விற்பனைகளின் ஏராளமான, சிதறுண்ட

தன்மைகள் பண்டமும் பணமும் ஒரே சமயத்தில் இடங்களை மாற்றிக் கொள்கிற இடஞ்சார்ந்த வகையில் பிரதிபலிக்கின்றன.

பணம் வாங்குபவரிடமிருந்து விற்பனையாளருக்குப் போய்ச் சேர்ந்து பிறகு வாங்குபவராக மாறிவிட்ட விற்பனையாளரிடமிருந்து இன்னொரு புதிய விற்பனையாளருக்குப் போய்ச் சேரும் பொழுது C—M—C என்ற பண்டச் செலாவணியின் சாதாரண வடிவம் நடைபெறுகிறது. இது பண்டத்தின் உருமாற்றத்தைப் பூர்த்தி செய்கிறது; அதனால் இந்த உருமாற்றத்தின் வெளியீடாக இருக்கும் அளவுக்குப் பணத்தின் இயக்கத்தையும் பூர்த்தி செய்கிறது. ஆனால் புதிய பயன் மதிப்புகள் பண்டங்களின் வடிவத்தில் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்படுவதால் அவை செலாவணி வட்டத்திற்குள் தொடர்ச்சியாக செலுத்தப்பட வேண்டுமென்பதால், அதே பண்டங்களின் உரிமையாளர்கள் C—M—C என்ற சுற்று வளையத்தைப் புதுப்பித்துத் திரும்பத் திரும்பச் செய்கிறார்கள். கொள்வினையாளர்கள் என்ற முறையில் அவர்கள் செலவிட்ட பணம் மறுபடியும் அவர்கள் பண்டங்களின் விற்பனையாளர்களாகும் பொழுது அவர்களிடமே வந்து சேருகிறது. முதலாளித்துவ சமூகத்தின் மேற்பரப்பு முழுவதிலும் பணம் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குச் செலாவணியாவது மட்டுமல்லாமல் அதே சமயத்தில் தனிவகையான சிறு அளவிலான சுற்றுவளையங்கள் பலவற்றையும் (முடிவற்ற அளவுக்கு வெவ்வேறான முனைகளிலிருந்து புறப்பட்டு மறுபடியும் அந்த இயக்கத்தைப் புதிதாகத் திருப்பிச் செய்வதற்காக, அதே முனைகளுக்குத் திரும்புகிறது) நிறைவேற்றுவதில் பண்டச் செலாவணியின் இடைவிடாத புதுப்பித்தல் பிரதிபலிக்கப்படுகிறது.

பண்டத்தின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் பணத்தின் இடத்தில் ஏற்படுகிற மாற்றமாக மட்டுமே தோன்றுவதால், செலாவணி இயக்கத்தின் தொடர்ச்சி முழுமையாகப் பணவியல் பக்கத்திலேயே இருப்பதால் (ஏனென்றால் பண்டம் எப்பொழுதுமே பணத்துக்கு எதிரான திசையில் ஓர் அடி எடுத்து வைக்கும் பொழுது பண்டம் ஆரம்பித்த இயக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காக பண்டத்தின் இரண்டாவது அடியைப் பணம் தவறாமல் எடுத்து வைக்கிறது) இந்த

இயக்கம் முழுவதுமே பணத்திஞல் ஆரம்பித்து வைக்கப் பட்டதாகத் தோன்றுகிறது. ஆஞல் விற்பனையின் போது பண்டம் பணத்தை முன்னே போகச் செய்து—கொள்வினை யின் போது பணம் பண்டச் செலாவணியை ஏற்படுத்துவது போல அதே முறையில்—பணச் செலாவணியை ஏற்படுத்து கிறது. மேலும் பணம் எப்பொழுதுமே கொள்வினைச் சாதனம் என்ற வகையில் பண்டங்களை எதிரிடுவதால் அந்த முறை யில் பண்டங்களைத் தங்கள் விலைகள் கைகூடிஞல் மட்டுமே முன்னே போகச் செய்வதால் செலாவணியின் மொத்த இயக்கமுமே பண்டங்களுடைய விலைகள் கைகூடியதும் பணம் பண்டங்களோடு இடங்களை மாற்றிக் கொள்வதில் அடங்கியிருப்பதாகத் தோன்றுகிறது; அதே நாணயம் வெவ்வேறு பண்டங்களின் விலைகளை ஒன்றுக்குப் பின் ஒன்ருக அடைகின்ற பொழுது ஒரே சமயத்தில் பக்கத்துக்குப் பக்கம் தனித்தனியாக அல்லது அடுத்தடுத்து நடைபெறும் நட வடிக்கைகளில் விலைகளைக் கைவரப் பெறுகின்றன. உதாரண மாக, C—M—C′—M—C″—M—C‴, இதரவைகளை ஒருவர் ஆராயும் பொழுது, செலாவணி நடைமுறையில் அடையாளம் காண முடியாது போய்விடுகிற குண ரீதியான அம்சங்களை ஒதுக்கி விட்டால், ஒரே மாதிரியான, சலிப்புத் தரக் கூடிய நட வடிக்கை மட்டுமே மிஞ்சும். C என்ற விலை கைக்கு வந்ததும் M அடுத்தடுத்து C′, C″ இதரவைகளின் விலைகளைக் கைவரப் பெறுகிறது. C′, C″, C‴ (இதரவை) என்ற பண்டங்கள் பணம் காலி செய்த இடத்தைத் தவருமல் எடுத்துக் கொள்கின் றன. இவ்விதம் பண்டங்களுடைய விலைகள் கைகூடியதும் அவற்றின் செலாவணியைப் பணம் ஏற்படுத்துவதாகத் தோன்றுகிறது. விலைகள் கைகூடுவதற்குப் பணம் உதவுவ தோடு, அதுவே தொடர்ச்சியாகச் செலாவணியாகிறது— சில சமயங்களில் வேமெுரு இடத்துக்கு மட்டுமே முன்னேறு கிறது; வேறு சமயங்களில் ஒரு வளைவு போல நடக்கிறது, அல்லது விலகல் நிலையும் திரும்பும் நிலையும் ஒன்ருகவுள்ள சிறு வட்டத்தை ஏற்படுத்துகிறது. செலாவணி ஊடகம் என்ற முறையில் அதற்கென்றே தனியான செலாவணி இருக் கிறது. எனவே செலாவணியாகிற பண்டங்களின் இயக்க மும் மாறுகிற வடிவங்களும் பண்டங்களின் பரிவர்த்தனை யில் — அவை தம்மளவில் இயங்காதிருப்பவையாகும்—

தொடர்புபடுத்துகிற பணத்தின் இயக்கமாகத் தோன்றுகிறது. எனவே பண்டங்களின் பரிவர்த்தனை நிகழ்வுப் போக்கின் இயக்கம் செலாவணி ஊடகம் என்ற முறையில் பணத்தின் இயக்கத்தால், அதாவது **பணத்தின் செலாவணியால்** பிரதி நிதித்துவப்படுத்தப்படுகிறது.

பண்ட உடைமையாளர்கள் ஒரு பொருளை, அதாவது தங்கத்தைப் பொதுவான உழைப்பு நேரத்தின் நேரடியான புறவடிவமாக, பணமாக மாற்றிக் கொள்வதன் மூலம் தனிப் பட்ட உழைப்பின் உற்பத்திப் பொருள்களை சமூக உழைப் பின் உற்பத்திப் பொருள்களாகக் காட்டியதைப் போல இப்பொழுது அவர்களுடைய உழைப்பின் பொருளாயதக் கூறுகளின் பரிவர்த்தனையை ஏற்படுத்துகிற அவர்களுடைய சொந்த சர்வவியாபக இயக்கம் ஒரு பொருளின் தனிவகை யான இயக்கமாக, அதாவது தங்கத்தின் செலாவணியாக அவர்களை எதிரிடுகிறது. பண்ட உடைமையாளர்களுக்கு இந்த சமூக இயக்கம், ஒரு பக்கத்தில், ஒரு வெளிப்புறத் தேவையாகும்; மறு பக்கத்தில், அது ஒவ்வொரு தனி நபருக் கும் அவர் செலாவணியில் புகுத்திய பண்டங்களின் மொத்த மதிப்புக்கு ஏற்ப அதே மாதிரியான வெவ்வேறு பயன் மதிப்புகளைப் பெறுவதற்கு உதவி செய்கின்ற சம்பிரதாய மான இடைநிலை நிகழ்வு மட்டுமே. பண்டமானது செலாவணி வட்டத்தை விட்டு வெளியேறும் பொழுதுதான் பயன் மதிப் பாக இயங்க ஆரம்பிக்கிறது; ஆனால் செலாவணிச் சாதனம் என்ற முறையில் பணத்தின் பயன் மதிப்பு பணத்தின் செலா வணியில்தான் அடங்கியிருக்கிறது. செலாவணி வட்டத் திற்குள் பண்டத்தின் இயக்கம் ஓர் அற்பமான கூறுமட்டு மாகும்; ஆனால் இந்த வட்டத்திற்குள் இடைவிடாத இயக் கம் பணத்தின் கடமையாகி விடுகிறது. செலாவணிக்குள்ளே பணம் நிறைவேற்றுகின்ற தனியான கடமை செலாவணி ஊடகம் என்ற முறையில் பணத்துக்கு ஒரு புதிய, தனித்துவ மிக்க அம்சத்தைக் கொடுக்கிறது. இதை இங்கே இன்னும் விரிவாக ஆராய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலில், பணச் செலாவணி என் பது முடிவற்ற அளவுக்குப் பிரிந்து நிற்கிற இயக்கம் என்பது தெளிவு. ஏனென்றால் செலாவணி நிகழ்வுப் போக்கு கொள் விணைகள், விற்பனைகள் என்று முடிவற்ற வகையில் சிதறி

நிற்பதையும் பண்டங்களின் உருமாற்றத்தை முழுமை யாக்குகிற கட்டங்கள் முற்றிலும் பிரிந்து நிற்பதையும் அது பிரதிபலிக்கிறது. பணத்தின் சிறிய சுற்று வளையங்களில்—இங்கே விலகல் நிலையும் திரும்பும் நிலையும் ஒன்றே—ஒரு தொடர்ந்து வரும் இயக்கம், உண்மையாகவே வட்டமான இயக்கம் நடைபெறுவது உண்மையே. ஆனால் முதலாவ தாக, எவ்வளவு பண்டங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அதிகமான விலகல் நிலைகளும் இருக்கின்றன; திட்டவட்ட மாகச் சொல்ல முடியாத வகையில் அவை மிகவும் அதிக மாக இருந்து இந்தச் சுற்று வளையங்களைக் கண்காணிக்க, அளவிட, எண்ணிக் கணக்கிடச் செய்யும் முயற்சிகளைத் தடுத்து விடுகின்றன. ஆரம்ப நிலையிலிருந்து புறப்படுவதற் கும் பிறகு ஆரம்ப நிலைக்குத் திரும்புவதற்கும் இடையில் எடுத்துக் கொள்கிற நேரம் அது போலவே நிச்சயமில்லா திருக்கிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட உதாரணத்தில் அப் படிப்பட்ட சுற்று வளையம் நடைபெறுகிறதா இல்லையா என்ப தும் சம்பந்தமற்றதாகும். ஒருவர் செலவழிக்கிற பணத்தைத் திரும்பப் பெறாமலே செலவு செய்து கொண்டிருக்கலாம் என்ற பொருளாதார உண்மையைக் காட்டிலும் மிக அதிக மான அளவில் எல்லோருக்கும் தெரிந்த உண்மை வேறு ஒன்றுமில்லை. பணம் முடிவில்லாத அளவுக்கு ஏராளமான முனைகளிலிருந்து தன்னுடைய சுற்று வளையத்தை ஆரம்பித்து முடிவில்லாத அளவுக்கு ஏராளமான முனைகளுக்குத் திரும்பு கிறது; ஆனால் விலகல் முனைக்கும் திரும்பும் முனைக்கும் இருக் கின்ற நிகழ்வுப் பொருத்தம் தற்செயலானதே; ஏனென்றால் C—M—C என்ற இயக்கம் கொள்வினையாளர் மறுபடியும் விற் பனையாளர் ஆகிறார் என்று தவிர்க்க முடியாதபடிக் குறிக்க வில்லை. பணத்தின் செலாவணியை ஒரு மையப் புள்ளியி லிருந்து ஆரம்பமாகிப் புற எல்லையின் எல்லா முனைகளுக்கும் சென்றுவிட்டுப் புற எல்லையின் எல்லா முனைகளிலிருந்தும் மையப் புள்ளிக்குத் திரும்புகிற இயக்கம் என்று வர்ணிப்பது இன்னும் அதிகமாகச் சரியில்லாததாகும். பணத்தின் சுற்று வளையம் என்று சொல்லப்படுவதை மக்கள் கற்பனை செய்வது போல, பணத்தின் தோற்றமும் மறைவும், ஓர் இடத்திலி ருந்து மற்றொரு இடத்துக்கு அதனுடைய தொடர்ச்சியான இயக்கத்தை எல்லா இடங்களிலும் பார்க்க முடியும் என்பது

மட்டுமே. செலாவணிக்குத் தொடர்புபடுத்துகிற பணத்தின் அதிக வளர்ச்சியடைந்த வடிவத்தை, அதாவது வங்கிப் பத்திரங்களை ஆராய்ந்தால், பணம் வெளியிடுவதற்குரிய நிபந்தனைகள் அதனுடைய பின்னேக்கும் இயக்கத்தையும் நிர்ணயிக்கின்றன என்பதைக் காணலாம். ஆனால் சாதாரண பணச் செலாவணியைப் பொறுத்தவரையில், ஒரு குறிப்பிட்ட கொள்வினையாளர் மறுபடியும் விற்பனையாளராக மாறுகிருரா என்பது சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாகும். சாதாரணப் பணச் செலாவணியின் வட்டத்தில் வட்டவடிவ இயக்கங்கள் உண்மையில் தொடர்ச்சியாக நடைபெறும் இடங்களில் அவை அதிக அடிப்படையான உற்பத்தி நிகழ்வுகளை அப்படியே பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, தொழில் அதிபர் வங்கியிலிருந்து வெள்ளிக்கிழமையன்று பணத்தைப் பெற்று சனிக்கிழமையன்று தன்னுடைய தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கிருர்; அவர்கள் அந்தப் பணத்தில் பெரும் பகுதியைச் சில்லறைக் கடைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் உடனடியாகக் கொடுக்கிருர்கள். அந்தக் கடைக்காரர்கள் திங்கட்கிழமையன்று வங்கியில் பணத்தைத் திருப்பிப் போடுகிருர்கள்.

இடஞ்சார்ந்த வகையில் ஒன்றுசேர்ந்து வாழ்கிற பல்வேறு கொள்வினைகளும் விற்பனைகளும் அடங்கிய விலைகளின் குறிப்பிட்ட தொகையைப் பணம் ஒரே சமயத்தில் கைவரப் பெறுகிறது; அது ஒவ்வொரு பண்டத்தோடும் ஒரு தடவை மட்டுமே இடத்தை மாற்றிக் கொள்கிறது என்பதைப் பார்த்தோம். ஆனல் இதற்கு மறு பக்கத்தில், பண்டங்களின் பரிபூரணமான உருமாற்றங்களின் இயக்கங்களும் அவற்றின் சங்கிலித் தொடரும் பணத்தின் இயக்கத்தில் பிரதிபலிக்கப் படுகின்றன என்ற அளவில் ஒரே நாணயம் பல்வேறு பண்டங்களின் விலைகளைப் பெற்றுத் தருகிறது; எனவே எண்ணிக்கையில் அதிகமான அல்லது குறைவான சுற்று வளையங்களைச் செய்கிறது. எனவே ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், உதாரணமாக ஒரு நாளில் நடைபெறுகிற செலாவணி நிகழ்வுப் போக்கை எடுத்துக் கொள்வோமானல், விலைகள் கைவரப் பெறுவதற்குத் தேவையான தங்கத்தின் அளவும் அதன் வழியே பண்டங்களின் செலாவணியும் இரண்டு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு

பக்கத்தில், விலைகளின் கூட்டுமொத்தம்; மறு பக்கத்தில், தனிப்பட்ட தங்க நாணயங்கள் செய்கின்ற சுற்று வளையங்களின் சராசரி எண்ணிக்கை. சுற்று வளையங்களின் எண்ணிக்கை அல்லது பணச் செலாவணியின் வேக அளவு, பண்டங்கள் தங்களுடைய உருமாற்றத்தின் பல்வேறான கட்டங்கள் வழியே போகும் பொழுது கொண்டிருக்கும் சராசரி வேக அளவினால், ஒரு சங்கிலித் தொடராக இருக்கின்ற உருமாற்றங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வருகிற வேகத்தினால், உருமாற்றம் முடிவடைந்துவிட்ட பண்டங்களுக்குப் பதிலாகப் புதிய பண்டங்கள் செலாவணியில் போடப்படுகிற வேகத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது; அல்லது அதைப் பிரதிபலிக்கிறது. ஆனால் விலைகளை நிர்ணயம் செய்கின்ற பொழுது எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் அதே மதிப்பு கொண்ட தங்கத்தின் அளவுக்குப் பெயரளவில் மாற்றப்பட்டு, M—C, C—M என்ற இரண்டு தனியான நடவடிக்கைகளிலும் ஒரே மதிப்பு இரண்டு தடவை—ஒரு பக்கத்தில் பண்டங்களின் வடிவத்திலும் மறு பக்கத்தில் தங்கத்தின் வடிவத்திலும்—இருக்கிறது. ஆனால் செலாவணி ஊடகம் என்ற முறையில் தங்கத்தை நிர்ணயிப்பது தனிப்பட்ட அசைவற்ற பண்டங்களோடு இருக்கிற தனித்து ஒதுங்கிய உறவு அல்ல; பண்டங்களின் நெகிழ்ச்சியான உலகத்தில் அதனுடைய சுறுசுறுப்பான வாழ்க்கையே அதை நிர்ணயிக்கிறது. பண்டத்தின் உருமாற்றத்தைத் தன்னுடைய இடத்தை மாற்றிக் கொள்வதன் மூலமாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதே தங்கத்தின் செயலாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அவற்றின் உருமாற்ற வேகத்தைத் தங்கம் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குப் போகின்ற வேகத்தின் மூலமாகச் சுட்டிக் காட்டுவதே தங்கத்தின் செயலாகும். இந்த நிகழ்வின் மொத்தத்திலும் அதன் செயல் செலாவணியிலிருக்கிற தங்கத்தின் உண்மையான அளவை அல்லது செலாவணியாகிற உண்மையான அளவை நிர்ணயிக்கிறது.

பணச் செலாவணியின் முன்தேவை பண்டச் செலாவணியே. மேலும் பணம் விலைகளைக் கொண்ட பண்டங்களை, அதாவது தங்கத்தின் திட்டவட்டமான அளவுகளோடு முன்பே கற்பனையாகச் சமப்படுத்தப்பட்ட பண்டங்களைச் செலாவணிப்படுத்துகிறது. பண்டங்களின் விலைகளை நிர்ணயிப்பது

ஆதாரமான அளவுகோலாகச் செயல்புரியும் தங்கத்தின் அளவின் மதிப்பு அல்லது தங்கத்தின் மதிப்பு கொடுக்கப்படுவதை முற்கோளாகக் கொண்டிருக்கிறது. இந்த அனுமானத்தின் படி, செலாவணிக்குத் தேவைப்படுகிற தங்கத்தின் அளவு அடைய வேண்டிய பண்ட விலைகளின் மொத்தத்தினால் முதலில் நிர்ணயிக்கப்படுகிறது. எனினும் இந்த மொத்த எண் கீழ் வரும் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது: 1. விலை மட்டம், தங்கத்தின் மூலமாகச் சொல்லப்படுகிற பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பின் சார்பு அளவு; 2. திட்டவட்டமான விலைகளில் செலாவணியாகிக் கொண்டிருக்கும் பண்டங்களின் அளவு, அதாவது கொடுக்கப்பட்ட விலைகளில் நடைபெற்ற கொள்வினைகளும் விற்பனைகளும்.* ஒரு குவார்ட்டர் கோதுமையின் விலை 60ஷி. என்றிருக்குமானால், அது 30ஷி. விலையாக இருந்த பொழுது அதன் விலை கைவரப்பெறுவதற்கு அல்லது அதைச் செலாவணிப்படுத்துவதற்குத் தேவையான தங்கத்தைப் போல இரண்டு மடங்கு இப்பொழுது தேவைப்படும். 250 குவார்ட்டர்கள் கோதுமை 60ஷி. விலையில் செலாவணியாவதற்குத் தேவைப்படுகிற தங்கத்தைப் போல இரண்டு மடங்கு 500 குவார்ட்டர்கள் கோதுமையை 60ஷி. விலையில் செலாவணிப்படுத்துவதற்குத் தேவைப்படும். கடைசியாக, 40 குவார்ட்டர்கள் கோதுமையை 50ஷி. விலையில் செலாவணிப்படுத்துவதற்குத் தேவைப்படுகிற தங்கத்தைப் போல பாதியளவு 10 குவார்ட்டர்கள் கோதுமையை 100ஷி. விலையில் செலாவணிப்படுத்துவதற்குப் போதுமானதாகும். எனவே செலா

* ''பண்டங்கள் நிர்ணயிக்கிற விலைகள் நீடிப்பதற்குப் போதிய அளவுக்குப் பணம் இருந்தால்'' பணத்தின் அளவு ஓர் அலட்சியமான விஷயமே. Boisguillebert, *Le détail de la France*, p. 209.

''நாற்பது கோடி பெருமானமுள்ள பண்டங்கள் செலாவணியாவதற்கு நான்கு கோடி நாணயப் புழக்கம் தேவை என்றால்... இந்தப் பத்தில் ஒரு பங்கு அளவு பொருத்தமான சமநிலை எனப்பட்டால்... செலாவணியாக வேண்டிய பண்டங்களின் மதிப்பு இயற்கைக் காரணங்களின் விளைவாக நாற்பத்தைந்து கோடியாக உயர்ந்தால்... நாணயப் புழக்கம் அதே சமநிலையில் நீடிக்க, நாலரைக் கோடியாக அதிகரிக்க வேண்டும்.'' William Blake, *Observations on the Effects Produced by the Expenditure of Government*, etc., London, 1823, pp. 80, 81.

வணியிலிருக்கிற பண்டங்களின் மொத்தம் விலைகளின் அதிகரிப்பின் மொத்த எண்ணைக் காட்டிலும் வேகமாகக் குறையுமானால், விலைகள் அதிகரித்த போதிலும் பண்டங்களின் செலாவணிக்குத் தேவையான தங்கத்தின் அளவு குறைய முடியும்; இதற்கு எதிர்நிலையாக செலாவணியில் இருக்கின்ற பண்டங்களின் மொத்தம் குறைகிற பொழுது அவற்றின் ஒன்றுகூட்டிய மொத்தத் தொகை இன்னும் கூடுதலாக அதிகரிக்குமானால் செலாவணிச் சாதனங்களின் அளவு அதிகரிக்க முடியும். ஆங்கிலேயர்கள் மிகவும் விரிந்த அளவுக்குச் செய்திருக்கிற சிறப்புமிக்க ஆராய்ச்சிகள் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்கின்றன: உதாரணமாக, இங்கிலாந்தில் தானிய நெருக்கடியின் ஆரம்ப கட்டங்களின் போது செலாவணியாகின்ற பணத்தின் அளவு அதிகரிக்கிறது; ஏனென்றால் அளிப்பிலுள்ள குறைந்த அளவு தானியத்தின் ஆகக் கூடிய மொத்த விலை அளிப்பிலிருந்த அதிகமான அளவு தானியத்தின் ஆகக் கூடிய மொத்த விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது; மேலும் சிறிது காலத்துக்கு மற்ற பண்டங்கள் முந்திய மாதிரியே பழைய விலைகளில் தொடர்ந்து செலாவணியாகிக் கொண்டிருக்கின்றன. எனினும் தானிய நெருக்கடியின் பிந்திய கட்டத்தில் செலாவணியாகிற பணத்தின் அளவு குறைகிறது. ஏனென்றால் தானியத்தோடு சேர்ந்து பழைய விலைகளில் குறைவான பண்டங்களே விற்பனையாகின்றன, அல்லது குறைந்த விலைகளில் பண்டங்களின் அதே அளவே விற்பனையாகிறது.

ஆனால் நாம் முன்பே பார்த்த மாதிரியாக, செலாவணியிலிருக்கிற பணத்தின் அளவு, கைவரப்பெற வேண்டிய பண்ட விலைகளின் மொத்தத்தால் மட்டுமல்லாமல் பணம் செலாவணியாகிற வேக அளவினாலும், அதாவது ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் போது விலைகள் கைவரப்பெறுகின்ற வேகத்தினாலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரே நாளில் ஒரு சவரன் நாணயத்தைக் கொண்டு பத்துக் கொள்விலைகள் செய்வதாகவும், ஒவ்வொரு தடவையும் ஒரு சவரன் மதிப்புள்ள பண்டத்தை வாங்குவதாகவும் வைத்துக் கொண்டால், அது பத்துத் தடவை கைமாறுகிறது; பத்து சவரன்கள்—அவை ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு ஒரு சுற்றுவளையத்தை மட்டுமே நிறைவேற்றுகின்றன—செய்கின்ற அதே

அளவு வர்த்தகத்தை அது செய்கிறது.* எனவே தங்கத்தின் அளவை அது செலாவணியாகிற வேகம் ஈடு செய்ய முடியும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், செலாவணியிலிருக்கும் தங்கத்தின் அளவு மற்ற பண்டங்களுக்குப் பக்கத்தில் தங்கம் சமமதிப்புடையதாக இயங்குவதால் மட்டுமல்லாமல் பண்டங்களின் உருமாற்றங்களில் அது நிறைவேற்றுகின்ற செயலினுலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனுல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே நாணயப் புழக்கத்தின் வேகம் அதன் அளவை ஈடு செய்ய முடியும்; ஏனென்ருல் கொடுக்கப்படுகின்ற குறிப்பிட்ட தருணத்தில் முடிவில்லாத எண்ணிக்கைக்குத் தனியான கொள்வினைகளும் விற்பனைகளும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன.

செலாவணியிலிருக்கின்ற பண்டங்களின் ஒன்றுகூட்டிய மொத்தத் தொகையின் அதிகரிப்பு, நாணயத்தின் வேக அளவின் அதிகரிப்பைக் காட்டிலும் குறைவாக இருக்குமானுல், செலாவணியாகின்ற பணத்தின் அளவு குறைகிறது. இதற்கு மாருக, செலாவணியின் வேக அளவு செலாவணியிலிருக்கின்ற பண்டங்களின் மொத்த விலையைக் காட்டிலும் வேகமான அளவுக்குக் குறைகிறதென்ருல், செலாவணியிலிருக்கின்ற பணத்தின் அளவு அதிகரிக்கும். செலாவணி ஊடகத்தின் அளவு அதிகரிக்கும் பொழுது அதனேடு சேர்ந்து விலைகளின் பொதுவான வீழ்ச்சி ஏற்படுவதும் செலாவணி ஊடகத்தின் அளவு குறைகின்ற பொழுது விலைகள் பொதுவாக அதிகரிப்பதும் விலைகளின் வரலாற்றில் மிக அதிகமாகப் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளில் சிலவாகும். எனினும் விலைகள் அதிகரிப்பதும் அதே சமயத்தில் நாணயத்தின் வேக அளவு அதைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு அதிகரிப்பதும், அதன் எதிர்மாருன நிகழ்வையும் ஏற்படுத்தும் காரணங்கள் சாதாரணச் செலாவணி பற்றிய இந்த ஆராய்ச்சியின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். கடன் வசதி அதிகரிக்கின்ற கட்டங்களில் நாணயப் புழக்கத்தின்

---

* ''அதிகமான பணம் அல்லது குறைவான பணம் கிடைக்கக் கூடியதாக இருப்பதற்குக் காரணம் பணச் செலாவணியின் வேக அளவுதான் காரணமே தவிர, உலோகத்தின் அளவு காரணமல்ல'' (Galiani, *op. cit.*, p. 99).

வேக அளவு பண்டங்களின் விலைகளைக் காட்டிலும் வேகமாக அதிகரிக்கிறது; ஆனால் கடன்வசதி சுருங்குகின்ற கட்டங்களில் நாணயப் புழக்கத்தின் வேக அளவு பண்டங்களின் விலைகளைக் காட்டிலும் வேகமாகக் குறைகிறது என்பதை மட்டும் இங்கே உதாரணமாகக் குறிப்பிடுவோம். செலாவணிச் சாதனத்தின் அளவை நிர்ணயிக்கிற காரணிகள்—செலாவணியிலிருக்கும் பண்டங்களின் அளவு, விலைகள், அவை அதிகரிப்பது அல்லது குறைவது, ஒரே சமயத்தில் நடைபெறுகின்ற கொள்வினைகள், விற்பனைகளின் எண்ணிக்கை, நாணயப் புழக்கத்தின் வேக அளவு முதலியவை—அனைத்துமே பண்டங்களின் உலகத்தில் நடைபெறுகிற உருமாற்றத்தைப் பொறுத்திருப்பதும், அது தன்னளவில் உற்பத்தி முறையின் பொதுவான தன்மை, மக்கள் தொகையின் அளவு, நகரத்துக்கும் கிராமப் பகுதிகளுக்கும் இடையிலுள்ள உறவு, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, உழைப்புப் பிரிவினையின் அதிக வளர்ச்சியடைந்த நிலை அல்லது வளர்ச்சி குன்றிய நிலை, கடன், இதரவைகளை, சுருக்கமாகச் சொல்வதென்றால் சாதாரணமான பணச் செலாவணியின் சுற்று வட்டத்துக்கு வெளியிலே இருக்கிற, அதில் வெறும் பிரதிபலிப்பு மட்டுமே கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களைப் பொறுத்திருப்பதும் சாதாரண பணச் செலாவணியின் மேலெழுந்தவாரியான, வடிவியல் ரீதியான தன்மைக்கு எடுத்துக் காட்டாகும்.

செலாவணியின் வேக அளவு கொடுக்கப்படுமானால், செலாவணிச் சாதனத்தின் அளவு பண்டங்களின் விலைகளினால் சாதாரணமாக நிர்ணயிக்கப்படுகிறது. பணம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செலாவணியாவதனால் விலைகள் அதிகரிப்பதோ அல்லது குறைவதோ ஏற்படவில்லை; ஆனால் விலைகள் அதிகரித்திருப்பதனால் அல்லது குறைந்து விட்டதனால் அதிகமான அல்லது குறைவான பணம் செலாவணியிலிருக்கிறது. இது பொருளாதார விதிகளில் முக்கியமான ஒன்றாகும்; விலைகளின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இதை விவரமாக நிருபித்ததே, ரிக்கார்டோவுக்குப் பிந்திய ஆங்கிலப் பொருளியலாளர்களின் ஒரே சாதனை என்று சொல்லலாம். தற்காலிகமான ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும்—சில சமயங்களில் இந்த ஏற்ற இறக்

கங்கள் அதிகத் தீவிரமடைந்த போதிலும்*—நீண்ட கால கட்டங்களில் உலோக நாணயத்தின் சமநிலை அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டில் செலாவணியாகிற தங்கம், வெள்ளியின் அளவு மொத்தத்தில் நிலையாக இருக்கும்; சராசரி மட்டத்திலிருந்து ஏற்படும் திரிபுகள் சிறு அளவில் ஊசலாட்டங்களாக இருக்கும் என்று ஆராய்ச்சியில் அறிகிறோம். செலாவணியிலுள்ள பணத்தின் அளவை நிர்ணயிக்கின்ற காரணிகளின் முரண்பாடான இயல்புதான் இந்த நிகழ்வுக்குக் காரணம். இந்தக் காரணிகளில் ஒரே சமயத்தில் ஏற்படுகிற மாற்றங்கள் அவற்றின் விளைவை சரிக்கட்டி விடுவதால் எல்லாமே முன்பிருந்தபடியே இருக்கின்றன.

பணம் செலாவணியாகிற வேகமும் பண்ட விலைகளின் கூட்டு மொத்தமும் கொடுக்கப்படுமானால், செலாவணியாகின்ற பணத்தின் அளவை நிர்ணயிக்க முடியும் என்ற

---

* உலோக நாணயம் தனது சராசரி மட்டத்துக்கும் கீழே வீழ்ச்சியடைந்த குறிப்பிடத்தக்க சம்பவம் 1858ம் வருடத்தில் இங்கிலாந்தில் நடைபெற்றதென்பதை லண்டனிலிருந்து வெளியிடப்படும் *Economist*[23] பத்திரிகையின் பின்வரும் பகுதியிலிருந்து தெரிந்து கொள்கிறோம்: ''இந்த உதாரணத்தின் இயல்பிலிருந்து'' (அதாவது, சாதாரணச் செலாவணி சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக) ''சந்தையிலும் வங்கிகளோடு சம்பந்தமில்லாத வர்க்கங்களின் கைகளிலும் இருக்கின்ற, ஏற்ற இறக்கங்களுக்கு ஆளான பணத்தின் அளவைப் பற்றி மிகவும் சரியான விவரங்களைச் சேகரிக்க முடியவில்லை. ஆனால், ஒருவேளை, வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மாபெரும் தேசங்களின் நாணயச் சாலைகள் இயங்குவதும் இயங்காதிருப்பதும் இந்த அளவில் ஏற்படுகிற மாற்றங்களை மிகவும் சரியாகச் சுட்டிக்காட்டக் கூடிய குறியீடுகளாகும். தேவைப்படும் பொழுது அதிகமான [நாணயங்கள்] தயாரிக்கப்படும்; தேவை குறைந்துவிட்டால் தயாரிப்பு குறைந்துவிடும்.... ஆங்கில நாணயச் சாலையில் பின்வரும் வருடங்களில் அச்சிடப்பட்ட நாணயங்களின் மொத்த மதிப்பு கீழே தரப்படுகிறது: 1855—92,45,000 பவுன்கள்; 1856—64,76,000 பவுன்கள்; 1857—52,93,858 பவுன்கள். 1858ம் வருடத்தில் நாணயச் சாலைக்கு மிக அபூர்வமாகவே வேலை இருந்தது.'' *Economist* July 10, 1858. ஆனால் அதே சமயத்தில் 1,80,00,000 பவுன் ஸ்டெர்லிங்குகள் வங்கிகளின் இரும்புப் பெட்டிகளில் இருந்தன.

விதியைப் பின்வரும் முறையிலும் சொல்லலாம்: பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளும் அவைகளின் உருமாற்றத்தின் சராசரி வேகமும் கொடுக்கப்படுமானல், செலாவணியாகின்ற தங்கத்தின் அளவு அதன் சொந்த மதிப்பைச் சார்ந்திருக்கிறது. தங்கத்தின் மதிப்பு, அதாவது அதை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் அதிகரிக்குமானல் அல்லது குறையுமானல், அதற்கு எதிரிடையான விகிதத்தில் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கும் அல்லது குறையும்; ஆகவே வேகத்தின் அளவு மாருதபடியிருக்குமானல் இவ்வாறு விலைகளில் ஏற்படுகின்ற பொதுவான அதிகரிப்பு, குறைவது ஆகியவற்றின் விளைவாக, அதே அளவு பண்டங்கள் செலாவணியாவதற்குத் தேவையான தங்கத்தின் அளவு கூடும் அல்லது குறையும். முன்பு மதிப்பின் ஆதார அளவாக இருந்த பொருளுக்குப் பதிலாக அதிக விலையுயர்ந்த அல்லது விலை குறைந்த உலோகம் பயன்படுத்தப்பட்டால் ஏற்படக் கூடிய அதே மாதிரியான விளைவு இப்பொழுது ஏற்படும். உதாரணமாக, ஹாலந்து நாடு தனக்குக் கடன் கொடுத்தவர்களுக்குப் பணிந்தும் கலிபோர்னியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதனல் ஏற்படக் கூடிய விளைவுக்குப் பயந்தும், தங்க நாணயத்துக்குப் பதிலாக வெள்ளி நாணயத்தை உபயோகித்த பொழுது, பண்டங்களின் பழைய அளவைச் செலாவணியாக்குவதற்கு முன்பு தேவைப்பட்ட தங்கத்தைக் காட்டிலும் 14 அல்லது 15 மடங்கு அதிகமான வெள்ளி இப்பொழுது அதற்குத் தேவைப்பட்டது.

செலாவணியாகின்ற தங்கத்தின் அளவு இரண்டு மாறக் கூடிய காரணிகளைப்—பண்ட விலைகளின் மொத்த எண்ணையும் செலாவணியின் வேக அளவையும்—பொறுத்திருப்பதால், உலோக நாணயத்தின் அளவைப் பெருக்கவும் குறைக்கவும் முடியும் என்பது பெறப்படும். சுருக்கமாகச் சொல்வதென்றல், செலாவணி நிகழ்வுப் போக்கின் தேவைகளுக்குத் தகுந்தாற்போல, செலாவணியில் சில சமயங்களில் தங்கத்தைப் போட வேண்டியிருக்கும்; சில சமயங்களில் தங்கத்தை எடுக்க வேண்டியிருக்கும். செலாவணி நிகழ்வுப் போக்கில் இந்த நிபந்தனைகள் எவ்வாறு நிறைவேறுகின்றன என்பதைப் பின்னர் பார்ப்போம்.

## இ. நாணயங்களும் மதிப்பின் அடையாளச் சின்னங்களும்

செலாவணி ஊடகம் என்ற முறையில் செயலாற்றும் பொழுது தங்கம் ஒரு தனிவகையான வடிவத்தைப் பெறு கிறது; அது ஒரு நாணயமாகிறது. அதன் செலாவணியில் தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, கணக்கிடப்படும் பணத்தின் ஆதார அளவுக்குத் தகுந்தாற் போல தங்கம் நாணயமாகத் தயாரிக்கப்படுகிறது. தங்கத்தின் சிறு பகுதிகள் நாணயங்கள் எனப்படுகின்றன. அவை பவுன் ஸ்டெர்லிங், ஷில்லிங்கு மற்றும் கணக்கிடப்படும் பணத்தின் இதர பெயர்களினுல் குறிப்பிடப்படுகிற தங்க எடைகளைக் கொண்டிருக்கின்றன என்பதை அவற்றின் வடிவமும் முத் திரையும் குறிக்கின்றன. நாணயச் சாலை விலையை முடிவு செய்வதும், நாணயங்களைத் தயாரிக்கின்ற தொழில்நுட்பப் பணியும் அரசிடம் இருக்கிறது. கணக்கிடப்படும் பணத்தைப் போலவே அச்சிடப்படும் பணமும் ஒரு ஸ்தல, அரசியல் தன்மையைப் பெற்றுள்ளது; அது வெவ்வேறு தேசிய மொழி களைப் பயன்படுத்துகிறது; வெவ்வேறு தேசிய உடைகளை அணிந்து கொள்கிறது. எனவே பண்டங்களின் செலாவணி யின் உள் வட்டத்தில் அச்சிடப்பட்ட பணம் செலாவணி யாகிறது. அந்த உள் வட்டம் பண்டங்களின் உலகத்தின் சர்வ வியாபகமான செலாவணியிலிருந்து பிரிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் எல்லைகளினுல் கட்டுப்படுத்தப் படுகிறது.

கட்டிகளின் வடிவத்தில் இருக்கிற தங்கத்துக்கும் நாணய வடிவத்திலிருக்கிற தங்கத்துக்கும் ஒரே வேறுபாடு நாணயத் தின் இடுபெயருக்கும் அதன் உலோக எடையின் இடுபெய ருக்கும் உள்ள வேறுபாடே. பிந்திய உதாரணத்தில் இடு பெயரில் உள்ள வேறுபாடாகத் தோன்றுவது முந்திய உதார ணத்தில் வடிவத்தைப் பொறுத்த வேறுபாடாகத் தோன்று கிறது. தங்க நாணயங்களை மூசைக்குள் போட்டு மறுபடி யும் வார்த்தைகள் இல்லாத (sans phrase) தங்கமாக மாற்ற முடியும். இது போல இதன் எதிரிடையாகத் தங்கப் பாளங் களை நாணயச் சாலைக்கு அனுப்பி நாணயங்களாக மாற்ற முடியும். ஒரு வடிவத்தை மற்ருெரு வடிவமாக மாற்று

வதும், மறுபடியும் மாற்றுவதும் வெறும் தொழில்நுட்ப நடவடிக்கையாகத் தோன்றுகிறது.

இங்கிலாந்தின் நாணயச் சாலையிலிருந்து 22 காரட் தங்கத்தில் 100 பவுன்கள் அல்லது 1,200 டிராய் அவுன்ஸ்களுக்குப் பரிவர்த்தனையாக $4,672^1/_2$ பவுன் ஸ்டெர்லிங்குகளை அல்லது $4,672^1/_2$ தங்க சவரன்களை ஒருவர் பெற முடியும். தராசின் ஒரு தட்டில் இந்த சவரன் நாணயங்களையும் மறு தட்டில் 100 பவுண்ட் தங்கக் கட்டிகளையும் வைத்தால் இரண்டும் சம எடையாக இருக்கும். சவரன் என்பது தங்கத்தின் பகுதியே—தனிவகையான வடிவமும் தனிவகையான முத்திரையும் கொண்டிருப்பது; ஆங்கில நாணய முறையின் அளவுகோலில் இந்தப் பெயர் அதன் எடையைக் குறிக்கிறது என்பதை அது நிரூபிக்கும். செலாவணியின் வெவ்வேறு முனைகளில் $4,672^1/_2$ தங்க சவரன்கள் நுழைகின்றன; சுழலுக்கு வந்ததும் அவை ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நடவடிக்கைகளைச் செய்கின்றன; சில சவரன்கள் அதிகமாகவும் சில குறைவாகவும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஓர் அவுன்ஸ் தங்கம் ஒரு நாளில் ஈடுபடுகிற சராசரி நடவடிக்கை பத்து என்றால், 1,200 அவுன்ஸ் தங்கம் மொத்தம் 12,000 அவுன்ஸ்கள் அல்லது 46,725 சவரன்கள் பண்ட விலைகளை அடையும். ஓர் அவுன்ஸ் தங்கம் நாம் எவ்வளவுதான் முயற்சித்த போதிலும் ஒருபோதும் பத்து அவுன்ஸ் எடை இருக்காது. ஆனால் இங்கே செலாவணி நிகழ்வில் ஓர் அவுன்ஸ் தங்கம் பத்து அவுன்ஸ்களாக உபயோகமாகிறது. செலாவணி நிகழ்வில் ஒரு நாணயம் அதில் அடங்கியிருக்கிற தங்கத்தின் அளவை அதன் நடவடிக்கைகளின் எண்ணினால் பெருக்குவதற்குச் சமம். ஒரு குறிப்பிட்ட எடையுள்ள நாணயம் தங்கத்தின் தனிப்பட்ட பகுதி என்ற நடைமுறை இருத்தலோடு சேர்த்து அது செய்கின்ற வேலையிலிருந்து உருவாகின்ற கற்பனையான இருத்தலையும் பெற்றிருக்கிறது. ஆனால் அந்த சவரன் ஒன்று அல்லது பத்து நடவடிக்கைகள் செய்த போதிலும் ஒவ்வொரு குறிப்பிட்ட கொள்வினையிலும் விற்பனையிலும் அது ஒரு தனி சவரன் நாணயம் என்ற முறையில்தான் செயலாற்றுகிறது. ஒரு ஜெனரல் போர்க்களத்தில் நெருக்கடியான நேரத்தில் பத்து ஜெனரல்களுக்குப் பதிலாகப்

பத்து வெவ்வேறு இடங்களில் தோன்றிப் போரை நடத்து கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் பத்து இடங் களில் தோன்றினாலும் கூட ஒவ்வொரு இடத்திலும் அவர் அதே ஜெனரலாகவே இருக்கிறார். செலாவணி ஊடகத் தின் கற்பனையாக்கம் என்பது அளவுக்குப் பதிலாக வேகத் தைக் கணக்கிடுவதால் ஏற்படுகிறது. இது செலாவணி நிகழ் வுக்குள்ளாக நாணயங்கள் இயங்கும் விதத்தை கவனிக் கிறதே தவிர, தனிப்பட்ட நாணயங்களின் தகுதியை பாதிப்பதில்லை.

ஆனால் பணத்தில் செலாவணி என்பது ஒரு வெளிப்புற இயக்கமாகும்; சவரனுக்கு வாசனை இல்லாவிட்டாலும் (non olet) பல வகையான கூட்டத்தோடு சேர்ந்திருக்கிறது. நாணயம் பலவிதமான கைகள், பைகள், பணப் பைகள், சட்டைப் பைகள், கல்லாப் பெட்டிகள், இரும்புப் பெட்டி கள், மரப் பெட்டிகள் ஆகியவற்றோடு தொடர்பு கொள் கிற பொழுது தேய்ந்து போகிறது. இது ஓரிடத்தில் ஒரு துகள் தங்கத்தையும் மற்றொரு இடத்தில் வேறொரு துகள் தங்கத்தையும் இழந்து விடுகிறது. எனவே அது தன்னுடைய உலகியல் பயணத்தில் ஏற்பட்ட காயங்களினால் தன்னுடைய உள்ளார்ந்த மதிப்பை மென்மேலும் இழந்து கொண்டிருக் கிறது. அது பயன்படும் பொழுதே தன்னை அழித்துக் கொள் கிறது. ஒரு சவரன் நாணயத்தை—அதன் ஆரம்பகால நிலை யான அம்சங்கள் இன்னும் பாதிக்கப்படாத தன்மையில்— எடுத்துக் கொள்வோம்.

''ரொட்டி தயாரிப்பவர் ஒருவர் ஒரு நாள் ஒரு சவரன் நாணயத்தைப் பெற்றுக் கொள்கிறார்; அவர் மறு நாள் மாவு அரைப்பவரிடம் அதைக் கொடுக்கிறார் என்றால் அவர் அதே (veritable) சவரனைக் கொடுக்கவில்லை. அவர் வாங்கும் பொழுது இருந்ததைக் காட்டிலும் அதன் எடை சிறிது குறைந்திருக்கிறது....''*

''எல்லாப் பொருள்களையும் போல நாணயங்கள், சாதா ரணமான, தவிர்க்க வியலாத உராய்வுகளினால், ஒவ்வொரு அளவாகத் தேய்மானத்துக்கு எப்பொழுதும் உட்பட வேண் டும் என்பது தெளிவு... எடை குறைந்த நாணயங்களை ஒரு

---

* Dodd, *The Curiosities of Industry*, London, 1854 [p. 16].

நாணக்காவது முழுமையாகச் செலாவணியிலிருந்து அகற்று வது என்பது எந்தக் காலத்திலும் நடக்காது.''*

ஐரோப்பாவில் 1809ம் வருடத்தில் புழக்கத்திலிருந்த 38 கோடி பவுனில் 1829ம் வருடத்துக்குள் 1.9 கோடி பவுன் உராய்வினால் பூரணமாக மறைந்து விட்டதென்று ஜேகப் மதிப்பிடுகிறார்.** பண்டம் முதல் காலடி எடுத்து வைத்து நாணயத்தைச் செலாவணி வட்டத்துக்குள் கொண்டு வந்த பிறகு அதை விட்டு மறுபடியும் வெளியேறி விடுகிறது; செலாவணி உலகத்தில் சில காலடிகள் எடுத்துவைத்த பிறகு நாணயம் அதில் அடங்கியிருக்கிற உலோகத்தின் அளவைக் காட்டிலும் அதிகமான அளவைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறது. ஒரு நாணயம் ஒரு குறிப்பிட்ட வேக அளவில் எவ் வளவு அதிகமான காலத்துக்குச் செலாவணியாகிறதோ அல் லது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் எவ்வளவு வேகமாகச் செலாவணியாகிறதோ அவ்வளவு அதிக அளவில் நாணயம் என்ற அதனுடைய தன்மைக்கும் தங்கம் அல்லது வெள்ளி என்ற அளவில் அதனுடைய வாழ்க்கைக்கும் வேறுபட்டிருக் கிறது. இப்பொழுது magni nominis umbra*** மிஞ்சுகிறது; நாணயத்தின் உடல் இப்பொழுது வெறும் நிழலாக மட்டுமே இருக்கிறது. ஆரம்பத்தில் செலாவணி நாணயத்தின் எடை யைக் கூட்டியது; இப்பொழுது அது லேசாகி விடுகிறது. ஆனால் ஒவ்வொரு தனியான கொள்வினையிலும் விற்பனை யிலும் அது இன்னும் ஆரம்பத்திலிருந்த தங்கத்தின் அள வாகவே கருதப்படுகிறது. அந்த சவரன் பொய்யான சவர னாக அல்லது பொய்யான தங்கமாக, சட்டபூர்வமான தங்க நாணயத்தின் கடமையைத் தொடர்ந்து செய்கிறது. மற்ற

* *The Currency Theory Reviewed... By a Banker*, Edinburgh, 1845, p. 69. ''லேசாகத் தேய்வடைந்த நாணயம் முற்றிலும் புதிய நாணயத்தைக் காட்டிலும் குறைவான மதிப்புடைய தாகக் கருதப்படுமானால் செலாவணி தொடர்ச்சியாக பாதிக் கப்படும்; ஒரு பண வழங்கீடு கூட விவாதமின்றி நடக்க முடியாது'' (G. Garnier, *Histoire de la monnaie*, tome 1, p. 24).

** William Jacob, *An Historical Inquiry into the Production and Consumption of the Precious Metals*, London, 1831, Vol. 2, Chapter 26, p. 322.

*** பிரபலமான பெயரின் நிழல்.—ப-ர்.

இனங்கள் வெளி உலகத்துக்கும் தமக்கும் ஏற்படுகின்ற உராய்வினால் தம்முடைய இலட்சியபூர்வமான தன்மையை இழக்கின்றன—ஆனால் புழக்கத்தின் விளைவாக நாணயம் மென்மேலும் இலட்சியச் சாதனமாகிறது. அதன் தங்கம் அல்லது வெள்ளி என்ற தன்மை வெறும் போலி வாழ்க்கையாகப் போய் விடுகிறது. உலோக நாணயத்தின் இந்த இரண்டாவது இலட்சியமாக்கம், அதாவது அதனுடைய பெயர் மட்டிலான உள்ளடக்கத்துக்கும் உண்மையான உள்ளடக்கத்துக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை (இது செலாவணி நிகழ்வின் மூலமாகவே ஏற்படுகிறது) அரசாங்கங்களும் தனிப்பட்ட சாகசக்காரர்களும் பலவிதமான வழிகளில் நாணயத்தின் தரத்தைக் குறைத்து தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். மத்திய காலத்தின் ஆரம்பத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரை பணவியல் முறையின் மொத்த வரலாறு என்பது இப்படிப்பட்ட இரு தரப்பு, முரணியல் கள்ள நாணயத் தயாரிப்புக்களின் வரலாறு ஆகும். கஸ்தோடியின் மாபெரும் தொகுப்பான இத்தாலியப் பொருளியலாளரின் நூல்களில் பெரும் பகுதி இதைப் பற்றி எழுதப்பட்டதே.

ஆனால் தன்னுடைய பணிகளின் எல்லைக்குள் தங்கத்தின் ''இலட்சியபூர்வமான'' வாழ்க்கை அதனுடைய உண்மையான வாழ்க்கையோடு மோதுகிறது. செலாவணி நடைபெறுகிற பொழுது சில தங்க நாணயங்கள் அதிகமாகவும் சில குறைவாகவும் தங்களுடைய உலோக உள்ளடக்கத்தை இழந்து விடுகின்றன. இப்பொழுது ஒரு சவரன் மற்றொரு சவரனைக் காட்டிலும் உண்மையில் அதிக மதிப்புடையதாக இருக்கிறது. ஆனால் அவை நாணயம் என்ற முறையில் இயங்கும் பொழுது சமமான அளவுக்குச் செல்லுபடியாவதால் (கால் அவுன்ஸ் எடையுள்ள சவரன் கால் அவுன்சைப் பிரதிநிதித்துவம் மட்டுமே செய்கிற சவரனைக் காட்டிலும் அதிகமானதாக மதிக்கப்படுவதில்லை) மனச் சாட்சியில்லாத உடைமையாளர்கள் சிலர் ஆதார எடையைக் கொண்ட சவரன் நாணயங்களில் சில பாகங்களை வெட்டி எடைக்குறைவான நாணயங்களைப் பொறுத்து செலாவணி தானாகவே ஏற்படுத்தும் அதே விளைவைச் செயற்கையாக ஏற்படுத்துகிறார்கள். சவரன் நாணயங்கள் செதுக்கப்படுகின்றன; அவை

தேய்க்கப்பட்டு உபரித்தங்கம் உருக்கப்படுகிறது. $4,672\frac{1}{2}$ தங்க சவரன்களைத் தராசில் நிறுக்கும் பொழுது அவை 1,200 அவுன்ஸ்களுக்குப் பதிலாக சராசரி 800 அவுன்ஸ் மட்டும் எடையைக் கொண்டிருந்தால், தங்கச் சந்தையில் அவற்ருல் 800 அவுன்ஸ் தங்கத்தை மட்டுமே வாங்க முடியும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், தங்கத்தின் சந்தை விலை அதன் நாணயச் சாலை விலையைக் காட்டிலும் உயர்ந்து விட்டது. எல்லா சவரன் நாணயங்களும்—ஆதார எடையளவைக் கொண்டிருக்கிற சவரன்கள் உள்பட—தங்கக் கட்டிகள் என்ற வடிவத்திலிருப்பதைக் காட்டிலும் நாணயங்களாக இருக்கும் பொழுது குறைந்த மதிப்புக் கொண்டிருக்கும். ஆதார எடையளவுள்ள சவரன்கள் தங்கக் கட்டிகளாக மறுபடியும் மாற்றப்படும். இந்த வடிவத்தில் குறைந்த அளவிலிருக்கிற தங்கத்தைக் காட்டிலும் அதிக அளவிலிருக்கும் தங்கம் அதிக மதிப்புக் கொண்டிருக்கிறது. இவற்றின் உலோக உள்ளடக்கத் தேய்வு, தங்கத்தின் நாணயச் சாலை விலையைக் காட்டிலும் சந்தை விலை நிரந்தரமாக அதிகரிக்கும் அளவுக்குப் போதுமான எண்ணிக்கையில் சவரன்களைப் பாதிக்கும் பொழுது, இந்த நாணயங்கள் அதே கணக்கிடப்படும் பெயர்களைக் கொண்டிருக்கும். ஆனல் இனிமேல் இவை குறைவான அளவு தங்கத்தையே குறிக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், பணத்தின் ஆதார அளவு மாறிவிடும்; இனிமேல் இந்தப் புதிய ஆதார அளவின்படி தங்க நாணயம் தயாரிக்கப்படும். எனவே செலாவணி ஊடகம் என்ற இலட்சியமாக்கலின் விளைவாக, தங்கம் அதன் பங்குக்கு விலையின் ஆதார அளவாக இருந்து வந்த சட்டபூர்வமாக நிறுவப்பட்ட உறவை மாற்றியிருக்கும். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குப் பிறகு இதே மாதிரியான சுழற்சி மறுபடியும் ஏற்படும்; விலையின் ஆதார அளவு, செலாவணி ஊடகம் என்ற இரு வகைகளிலும் தங்கம் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உட்படுகிறது; அதனுல் ஏதேனும் ஓர் அம்சத்தில் ஏற்படுகிற மாற்றம் அடுத்த அம்சத்திலும் மாற்றத்தைத் தூண்டுகிறது; இதற்கு எதிர்த் திசையிலும் இதே மாதிரி நடைபெறும். இதுதான் நாம் முன்பு குறிப்பிட்ட நிகழ்வை ஏற்படுத்துகிறது—எல்லா நவீன தேசங்களின்

வரலாறும் சுட்டிக் காட்டுவது போல அதே பணப் பெயர்கள் தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டிருக்கிற உலோக உள்ளடக்கத்தைத் தொடர்ந்து சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தன. நாணயம் என்ற முறையில் தங்கத்துக்கும் விலையின் ஆதார அளவு என்ற முறையில் தங்கத்துக்கும் உள்ள முரண்பாடு நாணயம் என்ற வகையில் தங்கத்துக்கும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் எல்லைகளுக்குள் மட்டும் அல்லாமல் உலகச் சந்தையில் செலாவணியாகிற எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பு என்ற வகையில் தங்கத்துக்கும் உள்ள முரண்பாடாகவும் மாறுகிறது. மதிப்பின் அளவுகோல் என்ற முறையில் தங்கம் எப்பொழுதுமே தன்னுடைய முழு எடையைத் தக்க வைத்துக்கொள்கிறது; ஏனென்றால் அது கற்பனையில்தான் தங்கமாகப் பயன்பட்டிருக்கிறது. C — M என்ற தனியான நடவடிக்கையில் சமமதிப்பாகப் பயன்படும் பொழுது, தங்கம் இயக்கத்திலிருந்து உடனடியாக அசைவற்ற நிலைக்கு வந்து விடுகிறது; ஆனால் அது நாணயமாகப் பயன்படும் பொழுது அதன் இயல்பான தன்மை அதன் பணிகளோடு தொடர்ச்சியாக மோதிக் கொள்கிறது. தங்க சவரன் நாணயங்களை வெறும் தங்கமாக மாற்றுவதை முழுமையாகத் தடுக்க முடியாது; ஆனால் நாணயங்கள் தமது பொருளின் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை இழந்துவிடும் பொழுது அந்த நாணயங்களைத் திரும்பப் பெறுவதன் மூலம் வெறும் தங்கம் நாணயமாகப் பயன்படுவதைத் தடுக்க சட்டம் முயற்சி செய்கிறது. உதாரணமாக, ஆங்கிலச் சட்டத்தின்படி ஒரு சவரன் நாணயம் 0.747 கிரெயினுக்கும் அதிகமான எடையை இழந்து விடுமானால் அது சட்டபூர்வமான நாணயம் அல்ல. 1844—1848ம் வருடங்களுக்கிடையே பாங்க் ஆப் இங்கிலாந்து 4.8 கோடி தங்கச் சவரன்களை எடைபோட்டது. தங்கத்தை எடை போடுவதற்குத் திரு. காட்டன் என்பவர் கண்டுபிடித்த தராசை இந்த வங்கி உபயோகிக்கிறது. இரண்டு சவரன்களுடைய எடையில் ஒரு கிரெயினில் நூறில் ஒரு பங்கு வித்தியாசம் இருந்தாலும் அதை இந்தத் தராசு கண்டுபிடித்து விடுவதோடு, பகுத்தறிவுடைய நபரைப் போல அந்த எடைக்குறைவான நாணயத்தை ஒரு பலகையின் மீது வீசுகிறது; அது பலகையிலிருந்து ஓர் இயந்திரத்திற்குள் விழுந்தவுடன் அது அந்த நாணயத்தைக் கீழ்த்

திசை நாடுகளின் கொடுமையான வகையில் கண்டதுண்டமாக வெட்டி விடுகிறது.

எனினும் இத்தகைய நிலைமைகளில் தங்க நாணயங்களை அவை இன்னும் குறைந்த வேகத்தில் தேய்மானம் அடையக் கூடிய செலாவணி வட்டத்துக்குள் நிறுத்தி வைக்காவிட்டால் அவை செலாவணி ஆவதென்பதே முடியாது. செலாவணியிலிருக்கிற தங்க நாணயம் $^1/_5$ அவுன்ஸ் எடை மட்டுமே இருந்த போதிலும் $^1/_4$ அவுன்ஸ் மதிப்புடையதாக இருப்பதால் $^1/_{20}$ அவுன்ஸ் தங்கத்துக்கு அது உண்மையில் ஒரு குறியீடாக அல்லது அடையாளச் சின்னமாகி விடுகிறது. இவ்விதத்தில் செலாவணி நிகழ்வுப் போக்கு ஓரளவுக்கு எல்லாத் தங்க நாணயங்களையும் தங்கள் பொருளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குறியீடுகளாக அல்லது அடையாளச் சின்னங்களாக ஓரளவுக்கு மாற்றி விடுகிறது. ஆனால் ஒரு பொருள் தனக்கே குறியீட்டுச் சின்னமாக முடியாது. திராட்சைப் பழங்களின் படத்தை வரைவதால் அவை உண்மையான திராட்சைப் பழங்களாகி விடுவதில்லை; அவை கற்பனையான திராட்சைப் பழங்கள்தான். எடைக்குறைவான சவரன் நாணயம் ஆதார எடையுள்ள சவரன் நாணயத்துக்குக் குறியீடாவது என்பது இதைக் காட்டிலும்—மெலிந்த குதிரை கொழுத்திருக்கிற குதிரைக்குக் குறியீடாக முடியாததைப் போல—முடியாததாகும். இவ்விதத்தில் தங்கம் தனக்கே ஒரு குறியீடாவதனாலும் ஆனால் அப்படிப்பட்ட குறியீடாகச் செயலாற்ற முடியாததனாலும் அது—தன்னுடைய சொந்த வாழ்நிலையிலிருந்து தனித்திருக்கின்ற—குறியீடான வாழ்நிலையைப் பெறுகிறது. அது வேகமாகத் தேய்வடைகிற செலாவணித் துறைகளில், அதாவது மிகச் சிறிய அளவில் கொள்வினையும் விற்பனையும் தொடர்ச்சியாக நடைபெறும் துறைகளில் வெள்ளி அல்லது செப்பு வடிவத்தை அடைகிறது. தங்க நாணயங்களின் மொத்த எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம்—எப்பொழுதும் அதே நாணயங்கள் இல்லை என்ற போதிலும்—இந்தத் துறைகளுக்குள் இடைவிடாமல் செலாவணியாகின்றன. இந்தச் சதவிகிதத்தில் உள்ள தங்க நாணயங்களுக்குப் பதிலாக வெள்ளி அல்லது செம்பு அடையாளச் சின்னங்கள் இடம் பெறுகின்றன. எனவே மதிப்பின் ஆதார அளவாக ஒரு தனி வகை

யான பண்டமே இருக்க முடியும்; அதனால் ஒரு குறிப்பிட்ட நாட்டில் அதுதான் பணமாக இருக்க முடியும் என்ற போதி லும் தங்கத்தோடு பல்வேறு பண்டங்களும் நாணயமாகப் பயன்படுகின்றன. இவை செலாவணியின் துணைச் சாதனங் கள். உதாரணம்: வெள்ளி அல்லது செம்பு அடையாளச் சின்னங்கள். இவை செலாவணிக்குள் இருக்கும் தங்க நாண யங்களின் திட்டவட்டமான பகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஆகவே இந்த அடையாள வில்லைகளில் அடங்கி யிருக்கிற வெள்ளி அல்லது செம்பின் அளவு தங்கத்தோடு சார்பு நிலையில் வெள்ளி அல்லது செம்பின் மதிப்பைக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதில்லை; சட்டத்தின்படி எதேச் சையாக நிர்ணயிக்கப்படுகிறது. அவை பிரதிநிதித்துவம் செய் கின்ற தங்க நாணயத்தின் சிறு பின்னங்கள் தொடர்ச்சியாக செலாவணியாகக் கூடிய அளவுக்கு அதிகப்படாமல், அதிக மதிப்புடைய தங்க நாணயத்துக்குச் சில்லறைக் காசுகளாக வும் அல்லது பண்டங்களின் குறைந்த விலைகளைக் கைவரப் பெறுவதற்காகவும் வெளியிடப்படுகின்றன. வெள்ளி, செம்பு ஆகிய அடையாளச் சின்னங்கள் சில்லறை வர்த்தகத்தின் குறிப்பிட்ட எல்லைகளுக்கு உரியவையாகும். ஒவ்வொரு தனி யான கொள்வினை, விற்பனையிலும் அவை கைவரப்பெறும் விலைக்கு அல்லது அவை பிரதிநிதித்துவப்படுத்துகிற தங்க நாணயத்தின் பின்னத்தின் மதிப்புக்கு எதிர்மாறான விகிதத் தில் அவற்றின் செலாவணியின் வேக அளவு இருப்பது தானு கவே புலப்படும். செலாவணியில் இருக்கின்ற துணை நாண யங்களின் மொத்த அளவை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அற்பமானதுதான்; ஆனால் இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டில் நாள்தோறும் பிரம்மாண்டமான அளவுக்கு நடைபெறும் சில்லறை வர்த்தகத்தை மனதில் கொண்டால், அவை இடை விடாமல் செலாவணியாகிற வேக அளவை அது குறிக் கிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட பார்லிமெண்ட் அறிக் கையின்படி இங்கிலாந்தின் நாணயச் சாலை 1857ம் வருடத் தில் 48,59,000 பவுன் ஸ்டெர்லிங் மதிப்புடைய தங்க நாணயங்களையும் 7,33,000 பவுன் ஸ்டெர்லிங் பெயரளவு மதிப்பும் 3,63,000 பவுன் ஸ்டெர்லிங் உலோக மதிப்புடைய வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டது. 1857ம் வருடம் டிசம்பர் மாதம் 31ந் தேதியன்று முடிவடைந்த பத்து வருட

காலத்தில் வெளியிடப்பட்ட நங்க நாணயங்களின் மொத்த மதிப்பு 5,52,39,000 பவுன்கள்; வெள்ளி நாணயங்களின் மொத்த மதிப்பு 24,34,000 பவுன்கள் மட்டுமே. 1857ல் வெளியிடப்பட்ட செம்பு நாணயங்களின் கற்பனையான மதிப்பு 6,720 பவுன்கள் மட்டுமே; அவற்றிலடங்கிய உலோகத்தின் மதிப்பு 3,492 பவுன்கள்; இதில் 3,136 பவுன்கள் மதிப்புக்குப் பென்னிகளும் 2,464 பவுன்கள் மதிப்புக்கு அரைப் பென்னிகளும், 1,120 பவுன்கள் மதிப்புக்கு பார்த்திங்குகளும் வெளியிடப்பட்டன. கடந்த பத்து வருடங்களில் வெளியிடப்பட்ட செம்பு நாணயங்களின் கற்பனையான மதிப்பு மொத்தம் 1,41,477 பவுன்கள் ஆகும்; அவற்றின் உலோக மதிப்பு 73,503 பவுன்களாக இருந்தது. தங்க நாணயம் தன் உலோகத்தின் குறிப்பிட்ட அளவை இழந்துவிட்டால் அது செல்லத் தக்கதல்ல என்று சட்டம் விதிக்கிறது; அதன் மூலம் அது நிரந்தரமாக நாணயமாகப் பயன்படுவது தடுக்கப்படுகிறது. அது போலவே அதற்கு எதிர்மறையாக வெள்ளி அல்லது செப்புக் குறிவில்லைகள் பயன்படுத்தப்படக் கூடிய விலை மட்டத்தைச் சட்டப்படி விதிப்பதன் மூலம் அவை தங்க நாணயங்களின் வட்டத்துக்குள் நுழைந்து பணம் என்பதாகத் தங்கத்தை உறுதியாக அமைத்துக் கொள்வது தடுக்கப்படுகிறது. ஆகவே இங்கிலாந்தில், உதாரணமாக, 6 பென்ஸ் வரையுள்ள தொகைகளுக்குச் செம்பு நாணயம் சட்டப்படி செல்லத் தக்கதாகும்; 40 ஷில்லிங்குகள் வரையுள்ள தொகைகளுக்கு வெள்ளி நாணயம் சட்டப்படிச் செல்லத் தக்கதாகும். வெள்ளி அல்லது செம்பு அடையாளச் சின்னங்களை அவற்றின் செலாவணித் துறைகளின் தேவைகளுக்கும் அதிகமான அளவுகளில் வெளியிட்டால் அது பண்ட விலைகளின் அதிகரிப்பைத் தூண்டாது; சில்லறைக் கடைக்காரர்களின் கைகளில் இந்த அடையாளவில்லைகள் குவிந்து விடும். கடைசியில் அவர்கள் இவற்றை உலோகமாக விற்பனை செய்ய நிர்ப்பந்திக்கப்படுவார்கள். உதாரணமாக, 1798ம் வருடத்தில் இங்கிலாந்தில் சிறு கடைக்காரர்களின் இரும்புப் பெட்டிகளில் 20,350 பவுன் தொகைகளுக்குச் செம்பு நாணயங்கள் குவிந்து விட்டன. இவற்றை மீண்டும் செலாவணியில் ஈடுபடுத்துவதற்கு அவர்கள் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. கடைசியில் அவர்கள் இந்த நாண

யங்களைச் செம்புச் சந்தையில் உலோக எடைக்கு விற்பனை செய்வது அவசியமாயிற்று.*

உள்நாட்டுச் செலாவணியின் தனியான துறைகளில் தங்க நாணயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற வெள்ளி அல்லது செம்புச் சின்னங்களின் உலோக உள்ளடக்கத்தைச் சட்டம் நிர்ணயிக்கிறது. ஆனால் செலாவணியாகிற பொழுது, தங்க நாணயங்களைப் போலவே, இவையும் தேய்வடைகின்றன; இவற்றின் செலாவணியின் வேக அளவினாலும் தொடர்ச்சியான செலாவணியாலும் இவை வெறும் கற்பனையான, நிழலைப் போன்ற வாழ்நிலைக்கு இன்னும் வேகமாகவே வந்து விடுகின்றன. வெள்ளி, செம்பு நாணயங்களும் கூட ஒரு குறிப்பிட்ட அளவு உலோகத்தை இழந்துவிட்டால் நாணயமாகப் பயன்பட முடியாது என்று சட்டம் இயற்றப்படுமானால், அவை செலாவணியடைகிற துறைகளில் சிலவற்றில் அவற்றுக்குப் பதிலாக வேறு ஏதாவது குறியீட்டுப் பணத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். உதாரணமாக, இரும்பு அல்லது ஈயத்தைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். இவ்விதத்தில் ஒரு வகையான குறியீட்டுப் பணத்துக்குப் பதிலாகக் குறியீட்டுப் பணத்தின் பிற வகைகளால் பிரதிநிதித்துவம் செய்வது தொடர்ந்து போய்க் கொண்டிருக்கும். வளர்ச்சியடைந்த செலாவணி முறை இருக்கின்ற எல்லா நாடுகளிலும் வெள்ளி, செம்பு ஆகிய அடையாளச் சின்னங்கள் தாங்கள் இழக்கின்ற உலோகத்தின் சதவிகிதத்துக்குச் சம்பந்தமில்லாத வகையில் நாணயங்களாகப் பயன்பட வேண்டும் என்று நாணயச் செலாவணியின் தேவைகள் வற்புறுத்துகின்றன. எனவே அவை வெள்ளியினாலோ அல்லது செம்பினாலோ செய்யப்பட்டிருப்பதனால் அவற்றுக்கு மதிப்பு இருப்பதனால் அவை தங்க நாணயத்தின் குறியீடாக இருக்கவில்லை; அவை மதிப்பு இல்லாத காரணத்தால் தங்க நாணயத்தின் குறியீடாக இருக்கின்றன என்பது அவற்றின் இயல்பிலிருந்து தெளிவாகிறது.

சார்பு நோக்கில் பயனற்றவை, அதாவது காகிதம் போன்றவை தங்க நாணயங்களின் குறியீடுகளாக இயங்க முடியும். துணை நாணயங்கள் உலோகச் சின்னங்களை

* David Buchanan, *Observations on the Subjects Treated of in Doctor Smith's Inquiry into the Nature and Causes of the Wealth of Nations*, Edinburgh, 1814, p. 31.

(வெள்ளி, செம்பு போன்றவை) கொண்டிருப்பதற்கு முக்கியமான காரணம் பெரும்பாலான நாடுகளில் மதிப்பில் குறைவான உலோகங்களே பணமாகப் பயன்பட்டன என்பதனால்தான். உதாரணமாக, இங்கிலாந்தில் வெள்ளியும் பழைய ரோமன் குடியரசிலும், ஸ்வீடன், ஸ்காட்லாந்து இன்னும் மற்ற நாடுகளிலும் செம்பும் பயன்படுத்தப்பட்டன. செலாவணி நிகழ்வு இந்த உலோகங்களைச் சிறு நாணயங்களின் தரத்துக்குக் கீழ்ப்படுத்தி, இவற்றைக் காட்டிலும் அதிக விலையுயர்ந்த உலோகத்தை அவற்றின் இடத்தில் வைக்கின்ற வரையிலும் இவை பயன்படுத்தப்பட்டன. மேலும் உலோக நாணயத்திலிருந்து நேரடியாக ஏற்படுகிற பணவியல் குறியீடு முதலாவதாக, மறுபடியும் உலோகமாகவே இருக்க வேண்டும் என்பது இயற்கையானதுதான். சில்லறை நாணயமாகத் தொடர்ச்சியாகச் செலாவணி செய்யப்படுகின்ற தங்கத்தின் பகுதிக்குப் பதிலாக உலோகச் சின்னங்கள் பயன்படுத்தப்படுவது போல நாணயம் என்ற வகையில் உள்நாட்டுச் செலாவணித் துறையில் எப்பொழுதும் இருக்கின்ற, அதன் காரணமாக இடைவிடாது செலாவணியிலிருக்கின்ற தங்கத்தின் பகுதிக்குப் பதிலாக உள்ளுறை மதிப்பு இல்லாத சின்னங்களைப் பயன்படுத்த முடியும். நாணயத்தின் அளவு எந்த மட்டத்துக்குக் கீழே ஒருபோதும் வீழ்ச்சி அடையாது என்பது அனுபவத்தில் ஒவ்வொரு நாட்டிலும் நிறுவப்பட்டிருக்கிறது. உலோக நாணயத்தின் கற்பனையான அடக்கத்துக்கும் அதன் உண்மையான உலோக உள்ளடக்கத்துக்கும் ஆரம்பத்தில் அற்பமானதாக இருந்த வேறுபாடு, இந்த இரண்டுமே முற்றிலும் பிரிந்து விடுகின்ற கட்டத்தை அடைய முடியும். நாணயத்தின் பெயர்கள் பணத்தின் பெயரிலிருந்து பிரிக்கப்பட்டு அவற்றிலிருந்து தனியே மதிப்பு இல்லாத காகிதச் சீட்டுகளின் வடிவத்தில் இருக்கின்றன. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு பரிவர்த்தனையின் விளைவாகத் தங்கப் பணமாகக் கெட்டியான வடிவத்தைப் பெறுகின்ற அதே முறையில் செலாவணியிலிருக்கிற தங்கப் பணம் தன்னுடைய சொந்தக் குறியீட்டில் தூய்மையாக்கப்படுகிறது. இது முதலில் தேய்ந்து போன தங்க நாணயமாகவும், பிறகு உலோகத் துணை நாணயமாகவும், கடைசியாக மதிப்பு இல்லாத குறிவில்லைகள், காகிதச் சீட்டுகள், வெறும்

மதிப்பின் அடையாளச் சின்னங்களின் வடிவத்தில் நிறைவடைகிறது.

ஆனால் தங்க நாணயம் அதற்கு ஏற்பட்ட உலோக இழப்பையும் மீறி நாணயமாகப் புழங்கியதால்தான் முதலில் உலோகப் பதில்பொருளும் பிறகு காகிதப் பதில்பொருளும் தோன்றுவதற்கு அது இடமளித்தது. அது தேய்வடைந்ததனால் செலாவணியாகவில்லை. ஆனால் தொடர்ச்சியாக செலாவணியாகிக் கொண்டிருந்ததனால் அது குறியீடு என்ற அளவுக்குத் தேய்ந்து விட்டது. செலாவணி நிகழ்வுப் போக்கில் தங்க நாணயம் அதனுடைய மதிப்பின் அடையாளச் சின்னமாக மட்டுமே மாறுகிற அளவுக்குத்தான், மதிப்பின் வெறும் அடையாளச் சின்னங்களைத் தங்கத்துக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியும்.

C—M, M—C என்ற இரண்டு அம்சங்களின் (நேரடியாகவே இவை ஒன்று மற்றொன்றாக மாறுகின்றன) சுறுசுறுப்பான ஒருமையாக C — M — C என்ற சுற்றுவளையம் இருக்கும் அளவுக்கு, அல்லது பண்டம் முழு உருமாற்றத்துக்கும் உட்படுகிற அளவுக்கு, அது தன்னுடைய பரிவர்த்தனை மதிப்பை விலையாகவும் பிறகு பணமாகவும் பரிணமிக்கச் செய்கிறது; ஆனால் உடனடியாகவே இந்த வடிவங்களை மறுபடியும் கைவிட்டு மறுபடியும் பண்டமாக அல்லது பயன் மதிப்பாக மாறி விடுகிறது. இவ்விதத்தில் பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு பார்வையளவில் சுதந்திரமான வாழ்நிலையை மட்டுமே அடைகிறது. இதன் மறு பக்கத்தில் இனம் என்ற அடிப்படையில் மட்டுமே தங்கம் இயங்கும் பொழுது, அதாவது தங்கம் இடைவிடாத செலாவணியில் இருக்கும் பொழுது பண்டங்களின் உருமாற்றங்களின் இடையிணைப்புக்களையும் பணம் என்பதாக அவற்றின் நிலையற்ற வாழ்நிலையையும் மட்டுமே உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தங்கம் ஒரு பண்டத்தின் விலையை அடைவது, மற்றொரு பண்டத்தின் விலையை அடைவதற்கு மட்டுமே; ஆனால் அது அசைவற்ற நிலையில் இருக்கிற பரிவர்த்தனை மதிப்பாக அல்லது அசைவற்ற நிலையில் இருக்கிற பண்டமாகக் கூட ஒருபோதும் தோன்றுவதில்லை. இந்த நிகழ்வில் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு பெறுகிற யதார்த்தம்—செலாவணியிலிருக்கிற தங்கமும் இதை வெளிப்படுத்துகிறது—ஒரு மின்னியக்கப் பொறியின்

யதார்த்தம் மட்டுமே. அது உண்மையான தங்கமாக இருந்த போதிலும் பார்வையளவில் தங்கம் என்பதாக மட்டுமே இயங்குகிறது; எனவே இந்தச் செயலில் அதற்குப் பதிலாக அதனுடைய அடையாளச் சின்னத்தைப் பயன்படுத்த முடியும்.

நாணயமாகச் செயலாற்றுகின்ற மதிப்பின் அடையாளச் சின்னம், அதாவது ஒரு காகிதச் சீட்டு, அந்த நாணயத்தின் பெயர் குறிப்பிடுகிற தங்கத்தின் அளவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; எனவே அது தங்கத்தின் அடையாளச் சின்னமாகும். தங்கத்தின் திட்டவட்டமான அளவு, அந்த அளவுக்கு ஒரு மதிப்பு உறவை வெளிப்படுத்துவதில்லை; அதன் இடத்தைப் பெறுகிற அடையாளச் சின்னமும் அவ்வாறு வெளிப்படுத்துவதில்லை. தங்கத்தின் திட்டவட்டமான அளவு அது பொருள் வடிவத்திலுள்ள உழைப்பு நேரம் என்பதால் ஒரு திட்டவட்டமான மதிப்பைக் கொண்டிருக்கிற அளவுக்குத்தான் தங்கத்தின் அடையாளச் சின்னம் மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆனல் அந்த அடையாளச் சின்னம் பிரதிநிதித்துவப்படுத்துகிற மதிப்பின் அளவு ஒவ்வொரு உதாரணத்திற்கும் அதனுல் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற தங்கத்தின் அளவின் மதிப்பைப் பொறுத்திருக்கிறது. பண்டங்களைப் பொறுத்தவரை, மதிப்பின் அடையாளச் சின்னம் அவற்றின் விலையின் யதார்த்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; அவற்றின் மதிப்பு விலையில் வெளிப்படுவதால் மட்டுமே அவற்றின் விலையின் அடையாளச் சின்னமாகவும் மற்றும் மதிப்பின் அடையாளச் சின்னமாகவும் இருக்கிறது. C — M — C என்ற சுற்றுவளையம் இரண்டு உருமாற்றங்களின் சுறுசுறுப்பான ஒருமையை அல்லது ஓர் உருமாற்றம் மற்ருென்ருக நேரடியாக மாற்றமடைவதை மட்டுமே வெளிப்படுத்துகிறது என்ற அளவில் (மதிப்பின் அடையாளச் சின்னம் இயங்குகிற செலாவணித் துறையில் சுற்றுவளையம் இப்படித்தான் தோன்றுகிறது) பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு விலையில் கற்பனையான வாழ்க்கையை மட்டுமே பெறுகிறது; பணத்தில் கற்பனையான அல்லது அடையாளபூர்வமான வாழ்க்கையை மட்டுமே பெறுகிறது. ஆகவே பரிவர்த்தனை மதிப்பு என்பது ஏதோ கலப்பற்ற கருத்து அல்லது கற்பனையான இனமாகவும் திட்டவட்ட

மான அளவு உழைப்பு நேரம் பண்டங்களில் பொருண்மைப் படுத்தப்பட்டிருப்பதால் பண்டங்களைத் தவிர வேறு எத் தகைய மெய்ம்மையும் இல்லாததாகத் தோன்றுகிறது. எனவே மதிப்பின் அடையாளச் சின்னம் பண்டங்களின் மதிப்பை நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்துவது போலத் தோன்று கிறது. ஏனென்றால் அது தங்கத்தின் அடையாளச் சின்ன மாக அல்லாமல் பண்டத்தில் மட்டுமே இருக்கின்ற, விலையில் மட்டுமே வெளிப்படுகின்ற பரிவர்த்தனை மதிப்பின் அடை யாளச் சின்னமாகத் தோன்றுகிறது. ஆனால் இந்தத் தோற் றம் பொய்யானதாகும். மதிப்பின் அடையாளச் சின்னம் என்பது நேரடியாக **விலையின் அடையாளச் சின்னம்**, அதா வது **தங்கத்தின் அடையாளச் சின்னம்** மட்டுமே; சுற்று முகமாகத்தான் பண்டத்தின் மதிப்பின் அடையாளச் சின்ன மாக மட்டுமே இருக்கிறது. தங்கம், பீட்டர் ஷ்லேமிலைப்[24] போல, தன்னுடைய நிழலை விற்றுவிடவில்லை; ஆனால் தன் னுடைய நிழலைக் கொள்வினைச் சாதனமாகப் பயன்படுத்து கிறது. ஆகவே மதிப்பின் அடையாளச் சின்னம் பரிவர்த்தனை நிகழ்வுப் போக்கின் போது மற்றொரு பண்டத்தோடு ஒப் பிடுகிற பொழுது ஒரு பண்டத்தின் விலையைக் குறிக்கும் பொழுது அல்லது ஒவ்வொரு பண்ட உடைமையாளருக்கும் அது தங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற பொழுதுதான் அது பலனுள்ளதாக இருக்கிறது. முதலாவதாக, ஒப்புநோக்கில் மதிப்பில்லாத ஏதாவதொரு பொருள், ஒரு தோல் துண்டு, ஒரு காகிதச் சீட்டு முதலியனவற்றைப் பணம் அடங்கி யிருக்கும் பொருளின் அடையாளச் சின்னமாக மரபு மாற்றி விடுகிறது. ஆனால் குறியீடு என்ற முறையில் அதன் செயல் பண்ட உடைமையாளர்களின் பொதுவான எண்ணத்தால் உத்தரவாதமளிக்கப்பட்டால் மட்டுமே அது தன்னுடைய நிலையில் நீடிக்க முடியும்; வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால், அது சட்ட ரீதியாக சம்பிரதாயமான வாழ் நிலையைப் பெற்றால், அதன் மூலமாக சட்ட ரீதியான பரி வர்த்தனை வீதத்தைப் பெற்றால் மட்டுமே, அது தன்னுடைய நிலையில் நீடிக்க முடியும். அரசால் வெளியிடப்பட்டு சட்ட பூர்வமான பரிவர்த்தனை விகிதம் கொடுக்கப்படுகிற காகிதப் பணம் மதிப்பின் அடையாளச் சின்னத்தின் வளர்ச்சி யடைந்த வடிவமாகும்; உலோக நாணயத்திலிருந்து அல்லது

சாதாரணமான பண்டச் செலாவணியிலிருந்து நேரடியாகத் தோன்றுகிற காகிதப் பணத்தின் ஒரே வடிவமாகும். **கடன் பணம்** என்பது உற்பத்தியின் சமூக நிகழ்வுப் போக்கில் இன்னும் அதிகமாக வளர்ச்சியடைந்த கட்டத்தைச் சேர்ந்ததாகும்; அது மிகவும் வேறான சட்டங்களை அனுசரிக்கிறது. குறியடையாளமான காகிதப் பணம் துணை உலோக நாணயத்தைக் காட்டிலும் விரிவான செலாவணித் துறையைக் கொண்டிருக்கிறது என்பதைத் தவிர அவைகளுக்கிடையே வேறு எத்தகைய வித்தியாசமும் இல்லை. விலையின் ஆதார அளவின் அல்லது நாணயச் சாலை விலையின் வெறும் தொழில்நுட்ப வளர்ச்சி, பிற்காலத்தில் தங்கப் பாளங்கள் தங்க நாணயங்களாகச் செய்யப்பட்ட வெளிப்புற மாற்றம், அரசு தலையீட்டுக்கும், அதன் காரணமாகப் பண்டங்களின் பொதுச் செலாவணியிலிருந்து உள்நாட்டுச் செலாவணியைப் பார்க்கக் கூடிய முறையில் பிரிப்பதற்கும் இட்டுச் சென்றது. நாணயத்தை மதிப்பின் அடையாளச் சின்னமாக மாற்றியமைத்ததன் மூலம் இந்தப் பிரிவினை முழுமையாக்கப்பட்டது. சாதாரணச் செலாவணி ஊடகம் என்ற முறையில் பணம் ஒரு சுயேச்சையான வாழ்நிலையை உள்நாட்டுச் செலாவணித் துறைக்குள்ளாக மட்டுமே பெற முடியும்.

நாணயத்தின் வடிவத்தில் இருக்கின்ற தங்கம், அதாவது தங்கம் என்ற பொருளிலிருந்து பிரிக்கப்பட்ட மதிப்பின் அடையாளச் சின்னங்கள் செலாவணி நிகழ்விலிருந்தே தோன்றுகின்றன; வேறு ஏற்பாட்டின் மூலமாகவோ அல்லது அரசின் தலையீட்டின் காரணமாகவோ தோன்றவில்லை என்பதை நமது விளக்கம் காட்டியிருக்கிறது. தானாகவே வளர்ச்சியடைந்த மதிப்பின் அடையாளச் சின்னத்துக்குக் குறிப்பிடத்தக்க உதாரணம் ருஷ்யாவில் காணப்படுகிறது. அந்த நாட்டில் தடிப்பான தோலும் மென்மையான தோலும் பணமாகப் பயன்பட்டு வந்த காலத்தில் அவற்றின் அழியும் தன்மை, எளிதில் கையாள முடியாத தன்மைக்கும் செலாவணி ஊடகம் என்ற முறையில் அவற்றின் செயலுக்கும் இருந்த முரண்பாட்டின் காரணமாக, அவற்றுக்குப் பதில் முத்திரையிடப்பட்ட சிறு தோல் துண்டுகள் பயன்படுத்தப்பட்டன; இந்தத் துண்டுகள் தடிப்பான தோலிலும் மென்மையான தோலிலும் கொடுக்கப்படக் கூடிய

பண அஞ்சலாக மாறி விட்டன. பின்னர் இவை கோபெக்குகள் என்று சொல்லப்பட்டு வெள்ளி ரூபிள் நாணயத்தின் பின்னங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளச் சின்னங்களாகி விட்டன; இவை அங்கும் இங்கும் இப்படியே பயன்படுத்தப்பட்டன. 1700ம் வருடத்தில் இவற்றுக்குப் பதிலாக அரசால் வெளியிடப்பட்ட சிறு செம்பு நாணயங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று பீட்டர் மாமன்னர் ஆணை பிறப்பித்தார்.* பண்டைக்காலத்தில் உலோக நாணயத்தின் நிகழ்வுகளை மட்டுமே ஆராய்கின்ற வாய்ப்புப் பெற்ற எழுத்தாளர்கள்—அவர்களில் பிளாட்டோவும்** அரிஸ்டாட்டிலும்*** உட்படுவர்—தங்க நாணயம் என்பது மதிப்பின் குறியீடு அல்லது அடையாளச் சின்னம் என்பதை முன்பே

---

* Henry Storch, *Cours d'économie politique*... avec des notes par J. B. Say, Paris, 1823, tome 4, p. 79. ஷ்டோர்ஹ் தம்முடைய புத்தகத்தை பிரெஞ்சு மொழியில் பீட்டர்ஸ்பர்க் நகரத்தில் வெளியிட்டார். ஸே உடனடியாக அப்புத்தகத்தில், குறிப்புகள் என்று சொல்லப்படும் பகுதியைச் சேர்த்து பாரிசில் அதை மறுபதிப்புச் செய்தார். அவருடைய குறிப்புகளில் பயனில்லாத வெற்றுரைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ''விஞ்ஞானத்தின் இளவரசர்'' ("prince de la science") என்று போற்றப்பட்ட ஸே தம்முடைய புத்தகத்தை இப்படி அபகரித்துக் கொண்டதைப் பற்றி ஷ்டோர்ஹ் மிகவும் ஆத்திரமடைந்தார் (*Considérations sur la nature du revenu national*, Paris, 1824).

** Plato, *De Republica*, L. 2. ''நாணயம் என்பது பரிவர்த்தனைக்கு அடையாளச் சின்னம்'' (*Opera omnia* etc., ed. G. Stallbaumius, London, 1850, p. 304). பிளாட்டோ பணத்தின் இரண்டு தன்மைகளை மட்டுமே, அதாவது மதிப்பின் ஆதார அளவு என்ற முறையில் பணம், மதிப்பின் அடையாளச் சின்னம் என்ற முறையில் பணம் ஆகியவற்றையே ஆராய்கிறார். உள்நாட்டில் செலாவணியாகின்ற மதிப்பின் அடையாளச் சின்னத்தைத் தவிர, கிரீஸ் மற்ற நாடுகளோடு நடத்துகின்ற வர்த்தகத்துக்கு உபயோகப்படும் வகையில் மதிப்பின் அடையாளச் சின்னமாக இன்னொன்று தேவை என்கிறார் அவர் (அவர் எழுதிய சட்டங்கள் என்ற புத்தகத்தின் ஐந்தாம் பகுதியைப் பார்க்கவும்).

*** Aristoteles, *Ethica Nicomachea*, L. 5, C. 8 [p. 98]. ''ஆனால் பணம் என்பது மரபு வழியாகவே தேவையின் ஒரு வகையான பிரதிநிதியாக இருக்கிறது; அது இயற்கையாக நீடிக்கவில்லை—'சட்டத்தின்படி' (νόμῳ) ஏற்பட்டிருக்கிறது; அதனால்

புரிந்து கொண்டிருந்தார்கள். சீனு போன்று கடன் அமைப்பை உருவாக்காத நாடுகளில், சட்ட ரீதியான பரிவர்த்தனை விகிதத்துடன் கூடிய காகிதப் பணம் சீக்கிரமாகவே ஏற்

---

தான் அதற்குப் 'பணம்' (νδμισμα) என்ற பெயர் தரப்பட்டிருக்கிறது; அதை மாற்றவும் பயனற்றதாகச் செய்வதற்கும் நம்மிடம் அதிகாரம் இருக்கிறது.'' பணத்தைப் பற்றிய பிளாட்டோவின் கருத்தைக் காட்டிலும் அரிஸ்டாட்டிலின் கருத்து அதிக ஆழமானது; அதிகமான பன்முகத் தன்மை கொண்டிருப்பது. வெவ்வேறுன குழுக்களுக்கிடையே பண்டமாற்றின் விளைவாக, ஒரு தனிவகையான பண்டத்தை, அதாவது தன்னுள் மதிப்பைக் கொண்டிருக்கிற ஒரு பொருளை, பணம் என்று மாற்ற வேண்டிய அவசியம் எப்படி ஏற்படுகிறது என்பதை அவர் பின்வரும் பகுதியில் மிகச் சிறப்பாக விளக்குகிறுர். ''ஒரு நாட்டில் வசிப்பவர்கள் மற்றொரு நாட்டில் வசிப்பவர்களை அதிகமாகச் சார்ந்திருந்தால், தங்களுக்குத் தேவையானவற்றை அவர்கள் இறக்குமதி செய்தும், தங்களிடம் அதிகமாக இருப்பவற்றை ஏற்றுமதி செய்வதுமாக இருந்தால், பணம் அவசியமாகப் புழக்கத்துக்கு வருகிறது... எனவே மனிதர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய வாணிகத்தில், உள்ளார்ந்த **பயனுடைய** ஒன்றை வாழ்க்கை நோக்கங்களுக்கு எளிதில் உபயோகிக்கக் கூடிய ஒன்றை, உதாரணமாக, இரும்பு, வெள்ளி, இவை போன்ற ஒன்றைப் பயன்படுத்த ஒத்துக்கொண்டார்கள்'' (Aristoteles, *De Republica*, L. 1, C. 9, *loc. cit.* [p. 14]).

மிஷேல் ஷெவலியே அரிஸ்டாட்டிலைப் படிக்காமல் அல்லது அவரைப் புரிந்து கொள்ளாமல், அரிஸ்டாட்டிலின் கருத்துப்படி செலாவணி ஊடகம் தன்னளவில் விலையுயர்ந்த பொருளாக இருக்க வேண்டும் என்று கூறி அதற்குச் சான்ருக மேற்கூறிய பகுதியைக் காட்டுகிறுர். எனினும் செலாவணி ஊடகம் என்று மட்டிலும் பார்க்கிற பொழுது பணம் அதனுடைய பெயர் (νδμισμα) சுட்டிக்காட்டுவதைப் போல சம்பிரதாயமான அல்லது சட்டபூர்வமான பொருள்; அதன் பயன் மதிப்பு அதன் செயலினுல் ஏற்படுவதே தவிர, உள்ளார்ந்த பயன் மதிப்பு என்பது அதற்குக் கிடையாது என்று அரிஸ்டாட்டில் மூடி மழுப்பாமல் சொல்லுகிறுர். ''அச்சிடப்பட்ட பணம் என்பது வெறும் போலி; இயற்கையான பொருள் அல்ல; ஆனுல் அது மரபுவழிப்பட்டது; ஏனென்ருல் நுகர்வோர் அதற்குப் பதிலாக வேருெரு பண்டத்தைப் பயன்படுத்தினுல், அது உபயோகமற்றதாகிறது; ஏனென்ருல் வாழ்க்கையின் எந்தத் தேவைக்கும் சாதனம் என்ற அளவில் அது பயனுள்ளதாக இருப்பதில்லை'' (Aristoteles, *De Republica*, [p. 15]).

பட்டிருக்கிறது.* பிற்காலத்தில் காகிதப் பணத்தை ஆதரித்தவர்களும் உலோக நாணயம் மதிப்பின் அடையாளச் சின்னமாக மாறுவது செலாவணி நிகழ்வுப் போக்கிலிருந்தே ஏற்படுவது என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். பென்ஜமென் பிராங்களின்,** பெர்க்லி பாதிரி

---

* Sir John Mandeville, *Voyages and Travels*, London, 1705, p. 105: ''இந்த (சீனாவின்) சக்கரவர்த்தி எப்படிப்பட்ட கணக்குமில்லாமல் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கலாம். ஏனென்றால் அவர் தோலில் அல்லது காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட பணத்தைத் தவிர வேறுவிதமான பணத்தை வெளியிடுவதுமில்லை, செலவழிப்பதுமில்லை. இந்தப் பணம் அதிகமான காலம் புழங்கிய பிறகு கெட்டுப் போய்விடுமானால் மக்கள் சக்கரவர்த்தியின் கஜானாவுக்கு அதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாகப் புதிய பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்தப் பணம் நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாகாணம் முழுவதிலும் செலாவணியாகிறது.... அங்கே தங்கத்திலோ அல்லது வெள்ளியிலோ பணத்தை அச்சிடுவது கிடையாது.'' எனவே மேண்டவில் நம்புவதைப் போல ''அந்தச் சக்கரவர்த்தி தொடர்ச்சியாக, முடிவில்லாத அளவுக்குச் செலவழிக்க முடிகிறது.''

** Benjamin Franklin, *Remarks and Facts Relative to the American Paper Money*, 1764, *op. cit.*, p. 348: ''இதே நேரத்தில் இங்கிலாந்தின் வெள்ளிப் பணம் கூட, தன்னுடைய மதிப்பில் ஒரு பகுதிக்கு—அதன் உண்மையான எடைக்கும் அதன் இடுபெயருக்கும் உள்ள வேறுபாடு என்னும் பகுதிக்கு—அது சட்ட ரீதியான நாணயம் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. இப்பொழுது புழக்கத்திலிருக்கிற ஷில்லிங்குகள், ஆறு பென்ஸ் நாணயங்கள் ஆகியவற்றின் பெரும் பகுதி தேய்வடைந்து, 5, 10, 20 சதவிகிதம்—சில ஆறு பென்ஸ் நாணயங்கள் 50 சதவிகிதம் கூட—எடை குறைந்திருக்கின்றன. கற்பனைக்கும் உண்மைக்கும் உள்ள இந்த வேறுபாட்டுக்கு எந்த உள்ளுறையான மதிப்பும் இல்லை; காகிதத்தின் மதிப்பு கூட இல்லை; ஒன்றுமே இல்லை. அது சட்டபூர்வமான நாணயம் என்பதால்தான், அதே மதிப்புக்கு அதை சுலபமாகத் திரும்பப் பயன்படுத்தலாம் என்ற ஞானமே மூன்று பென்னி மதிப்புள்ள வெள்ளியை ஆறு பென்ஸ் என்று ஏற்கச் செய்கிறது.''

யார்* எழுதிய புத்தகங்களில் இத்தகைய கருத்துக்கள் காணப்படுகின்றன.

எத்தனை ரீம் காகிதத்தைச் சிறு துண்டுகளாக வெட்டி பணமாகச் செலாவணி செய்ய முடியும்? இந்தக் கேள்வி இந்த வடிவத்தில் பொருளற்றதாகும். மதிப்பு இல்லாத அடையாளச் சின்னங்கள் செலாவணி நிகழ்வுக்குள் இருக்கிற தங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பொழுதுதான் அவை மதிப்பின் அடையாளச் சின்னமாகின்றன. அவை நாணயமாகச் செலாவணியாகக் கூடிய தங்கத்தின் அளவுக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் வகிக்க முடியும். பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் அவைகளின் உருமாற்றங்களின் வேக அளவும் கொடுக்கப்படுமானால் இந்த அளவு தங்கத்தின் மதிப்பைப் பொறுத்திருக்கிறது. 5 பவுன் இடுபெயரைக் கொண்டிருக்கும் காகிதத் துண்டுகள் செலாவணியில் பயன்படுத்தப் படக் கூடிய எண்ணிக்கை 1 பவுன் இடுபெயரைக் கொண்ட காகிதத் துண்டுகளின் எண்ணிக்கையில் 1/5 பங்காக இருக்கும். எல்லாவிதமான பண வழங்கீடுகளும் ஷில்லிங்கு நோட்டுகளில் செய்யப்படுமானால் பவுன் நோட்டுகளைக் காட்டிலும் இருபது மடங்கு அதிகமான நோட்டுகள் செலாவணிக்குத் தேவைப்படும். தங்க நாணயத்தை வெவ்வேறு இடுபெயர்களைக் கொண்ட நோட்டுகளினால், உதாரணமாக 5 பவுன், 1 பவுன், 10 ஷில்லிங் நோட்டுகளினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டால் தேவைப்படுகின்ற மதிப்பின் அடையாளச் சின்னங்களின் வெவ்வேறு வகைகளின் எண்ணிக்கை, செலாவணி உலகத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டால் தேவைப்படுகின்ற தங்கத்தின் அளவின் மூலம் நிர்ணயிக்கப் படுவதில்லை; ஒவ்வொரு குறிப்பிட்ட வகை நோட்டின் செலாவணி வட்டத்துக்கும் தேவையான அளவின் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் செலாவணி 1.4 கோடி பவுன் மட்டத்துக்குக் கீழே ஒருபோதும் போவதில்லை என்றால் (ஆங்கில வங்கிச் சட்டம்—நாணயங்களைப் பொறுத்து அல்லாமல் கடன் பணத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும்—முற்கோள் இது) ஒரு காகிதத் துண்டு 1 பவுனைப் பிரதி

* Berkeley, *op. cit.* [p. 3]. ''தங்கம் போன பிறகு இடுபெயர்களை மட்டும் வைத்துக் கொள்வதால்... வர்த்தகத்தின் செலாவணியை... நீடிக்கச் செய்ய முடியாதா?''

நிதித்துவப்படுத்துகின்ற 1.4 கோடி காகிதத் துண்டுகள் செலாவணியாகும். தங்கத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் குறைவதால் அல்லது அதிகரிப்பதால் தங்கத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்தால் அல்லது அதிகரித்தால், பண்டங்களின் அதே அளவின் பரிவர்த்தனை மதிப்பு மாருத நிலையில் இருக்கும் பொழுது, செலாவணியிலிருக்கும் பவுன் நோட்டுகளின் எண்ணிக்கை தங்கத்தின் மதிப்பில் ஏற்பட்டிருக்கிற மாற்றத்துக்கு எதிர்விகிதத்தில் அதிகரிக்கும் அல்லது குறையும். மதிப்பின் ஆதார அளவாகத் தங்கத்துக்குப் பதிலாக வெள்ளி உபயோகிக்கப்பட்டால், வெள்ளிக்கும் தங்கத்துக்கும் உள்ள ஒப்பீட்டு மதிப்பு 1 : 15 என்று வைத்துக் கொண்டால், இனிமேல் ஒவ்வொரு காகிதச் சீட்டும் முன்பு பிரதிநிதித்துவப்படுத்திய தங்கத்தின் அதே அளவுக்கு வெள்ளியைப் பிரதிநிதித்துவப்படுத்துமானுல், 1.4 கோடி நோட்டுகள் செலாவணியானதற்குப் பதிலாக இனிமேல் 21 கோடி பவுன் நோட்டுகள் செலாவணியாக வேண்டும். இவ்விதமாக காகிதச் சீட்டுகளின் எண்ணிக்கை அவை செலாவணியில் பிரதிநிதித்துவப்படுத்துகிற தங்க நாணயத்தின் அளவினுல் நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் அவை தங்க நாணயத்தின் இடத்தில் பயன்படுத்தப்படுவதால் மட்டுமே மதிப்பின் அடையாளச் சின்னங்களாக இருப்பதால் அவற்றின் மதிப்பு அளவினுல் சுலபமாக நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, செலாவணியிலிருக்கும் தங்கத்தின் அளவு பண்டங்களின் விலைகளைப் பொறுத்திருக்கும் பொழுது, இதற்கு மாருக செலாவணியிலிருக்கும் காகிதத்தின் மதிப்பு அதன் சொந்த அளவை மட்டுமே பொறுத்திருக்கிறது.

அரசாங்கம் சட்ட ரீதியான பரிவர்த்தனை விகிதத்தைக் கொண்ட காகிதப் பணத்தை வெளியிடுவதனுல்—நாம் இவ்வகையைச் சேர்ந்த காகிதப் பணத்தைப் பற்றி மட்டுமே பேசுகிருேம்—பொருளாதார விதி செல்லாது போய்விடுவது போலத் தோன்றுகிறது. அரசின் நாணயச் சாலை விலை என்பது தங்கத்தின் திட்டவட்டமான எடைக்கு ஒரு பெயரைத் தருவது மட்டுமே; அரசாங்க நாணயச் சாலை தங்கத்தின் மீது தன்னுடைய முத்திரையை வைப்பதைத் தவிர வேறென்றும் செய்யவில்லை; ஆனுல் இப்பொழுது அந்த

முத்திரையின் மந்திர சக்தியினுல் காகிதம் தங்கமாக மாறி விட்டது போலத் தோன்றுகிறது. இந்தக் காகிதச் சீட்டு கள் சட்ட ரீதியான பரிவர்த்தனை விகிதத்தைக் கொண்டிருப் பதால், அரசு இந்தச் சீட்டுகளின் எண்ணிக்கையை எதேச் சாதிகாரமாக முடிவு செய்து அவற்றைச் செலாவணியில் புகுத்துவதும், இந்தக் காகிதச் சீட்டுகளின் மீது 1 பவுன், 5 பவுன் அல்லது 20 பவுன் என்ற பணப் பெயர்களை விருப்பப் படி முத்திரையிடுவதையும் தடுக்க முடியாது. அவற்றைச் செலாவணியில் ஈடுபடுத்திய பிறகு வெளியே துரத்து வது முடியாத காரியம். ஏனென்ருல் ஒரு பக்கத்தில் நாட்டின் எல்லைகள் அவற்றின் இயக்கத்தைத் தடுத்து நிறுத்து கின்றன; மறு பக்கத்தில் செலாவணி எல்லைக்கு வெளியே அவை எல்லா மதிப்பையும்—பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு இரண்டையுமே—இழந்து விடுகின்றன. அவற்றுக்குச் செயல் இல்லையென்ருல், அவை வெறும் காகிதச் சீட்டுகளே. ஆனுல் அரசின் இத்தகைய அதிகாரம் ஒரு பிரமை மட்டுமே. அது இப்படிப்பட்ட காகித நோட்டுகளில் எந்த இடுபெயரை யும் கொண்ட நோட்டுகளை எந்த எண்ணிக்கையிலும் செலா வணியில் ஈடுபடுத்தலாம். ஆனுல் இந்த இயந்திரத்துக்குரிய நடவடிக்கையோடு அதன் சக்தி நின்று விடுகிறது. மதிப்பின் அடையாளச் சின்னம் அல்லது காகிதப் பணம் செலாவணி உலகத்துக்குள் நுழைந்த உடனேயே அது இந்த உலகத்தின் உள்ளார்ந்த விதிகளுக்குக் கட்டுப்பட்டு விடுகிறது.

பண்டங்கள் செலாவணியாவதற்குத் தேவைப்படுகின்ற தங்கத்தின் அளவு 1.4 கோடி பவுன் என்றும் அரசு 1 பவுன் என்று கூறப்படும் 21 கோடி நோட்டுகளைச் செலா வணியில் ஈடுபடுத்துகிறது என்றும் வைத்துக் கொள்வோம்; இந்த 21 கோடி நோட்டுகள் மொத்தம் 1.4 கோடி பவுன் தங்கத்தின் அளவுக்கு இருக்கும். இதனுல் அரசால் வெளி யிடப்பட்ட நோட்டுகள் தங்கத்தின் 1/15 பங்கு மதிப்பு டைய உலோகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினுல் ஏற்படும் விளைவு அல்லது ஒவ்வொரு நோட்டும் தங்கத்தின் முந்திய எடையின் 1/15 பங்கைப் பிரதிநிதித்துவப்படுத்த உத்தே சிக்கப்படுமானுல் ஏற்படுகிற அதே விளைவுதான் ஏற்படும். விலைகளின் ஆதார அளவின் பெயரை மாற்றுவதைத் தவிர இதனுல் வேறு எத்தகைய மாற்றமும் ஏற்படாது. இந்தப்

பெயர் முற்றிலும் சம்பிரதாயமானது; அது பணத்தின் ஆதார அளவு மாற்றப்படும் பொழுது நேரடியாக ஏற்படு வதா அல்லது புதிய கீழான ஆதார அளவின்படி வெளியிடப் பட்ட காகித நோட்டுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனுல் மறைமுகமாக ஏற்படுவதா என்பதற்குச் சிறிதும் சம்பந்த மில்லாதது. பவுன் ஸ்டெர்லிங் என்ற பெயர் இப்பொழுது தங்கத்தின் முந்திய அளவில் 1/15 பங்கைக் குறிப்பதால், எல்லாப் பண்டங்களின் விலைகளும் பதினைந்து மடங்கு அதி கரித்துவிடும்; முன்பு 1.4 கோடி பவுன் நோட்டுகள் இருந்த இடத்தில் இப்பொழுது 21 கோடி நோட்டுகள் தேவைப்படும். மதிப்பின் அடையாளச் சின்னம் ஒவ்வொன்றும் தனியே பிரதிநிதித்துவப்படுத்துகிற தங்கத்தின் அளவில் ஏற்பட் டிருக்கும் குறைவு இந்த அடையாளச் சின்னங்களின் ஒன்று சேர்ந்த மதிப்பின் அதிகரிப்புக்கு விகிதாச்சார அளவில் இருக்கும். மதிப்பின் அடையாளச் சின்னங்கள் செலாவணி நிகழ்வில் தங்கத்தின் அளவுக்குப் பதிலாக இடம் பெறும் என்று கருதப்பட்டது. ஆனுல் தற்பொழுது மதிப்பின் அடை யாளச் சின்னங்களைப் பலவந்தமாக அந்த இடத்தில் வைத் திருப்பதால் செலாவணி நிகழ்வுக்கு எதிர்விளைவாக விலைகள் அதிகரிக்கும்.

ஆங்கில, பிரெஞ்சு அரசாங்கங்கள் பல சந்தர்ப்பங் களில் நாணயத்தின் மதிப்பைக் குறைத்திருக்கின்றன. அம் மாதிரியான சந்தர்ப்பங்களில் விலைகளின் உயர்வு வெள்ளி நாணயங்களின் தேய்வின் விகிதாச்சார அளவில் இருக்க வில்லை. அதற்குக் காரணம் நாணயத்தின் அளவின் அதிக ரிப்பு அதன் தேய்வின் விகிதாச்சாரப்படி இருக்கவில்லை என் பதே. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், எதிர்காலத் தில் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு மதிப்பின் கீழான ஆதார அளவின்படிக் கணக்கிடப்பட்டு, இந்தக் கீழ் ஆதார அளவுக்குப் பொருந்திய நாணயங்களில் கைவரப்படுமானுல் வெளியிடப்பட்ட குறைந்த உலோக எடையுள்ள நாணயங் களின் எண்ணிக்கை போதியவை அல்ல. லோக், லௌன்ட்ஸ் ஆகியோரிடையே நடைபெற்ற விவாதத்தின் போது எழுப்பப்பட்டு முடிவுக்கு வராது போன சிக்கலுக்கு இதுதான் முடிவு. மதிப்பின் அடையாளச் சின்னம்—அது காகிதமா அல்லது போலியான தங்கமா, வெள்ளியா என்பது முற்றி

லும் சம்பந்தம் இல்லாததாகும்—நாணயச் சாலை விலையின் கணக்கிடப்பட்ட திட்டவட்டமான அளவு தங்கம், வெள்ளியின் இடத்தைப் பிடிக்கிற வேக அளவு என்ன என்பது செலாவணியிலிருக்கும் அடையாளச் சின்னங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்; அவை எந்தப் பொருளில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஒருபோதும் சம்பந்தமில்லை. இந்த உறவைப் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்படுவதற்குக் காரணம் பணத்தின் இரண்டு செயல்களும்—மதிப்பின் ஆதார அளவு என்ற வகையிலும் செலாவணி ஊடகம் என்ற முறையிலும்—ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற விதிகளுக்கு உட்பட்டிருப்பதாகும். அது மட்டுமல்லாமல் இந்த விதிகள் அதனுடைய இரண்டு செயல்களின் எதிரெதிர் அம்சங்களோடு வேறுபட்டிருப்பதாகவும் தோன்றுகின்றன. மதிப்பின் ஆதார அளவு என்ற முறையில் அதன் செயலைப் பொறுத்தவரை, தங்கம் பெயரளவுக்குத் தங்கமாகவும் பணம் கணக்கிடப்படும் பணமாக மட்டுமே செயல் புரிகிற பொழுது, எந்த பௌதிகப் பொருள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் தீர்மானமான அம்சமாகும். வெள்ளியின் மூலம் அல்லது வெள்ளியின் விலைகளில் சொல்லப்படும் பரிவர்த்தனை மதிப்புகள் தங்கத்தின் மூலம் அல்லது தங்கத்தின் விலைகளில் சொல்லப்படுகிற பரிவர்த்தனை மதிப்புகளைக் காட்டிலும் வித்தியாசமாகவே தோன்றும் என்பது திண்ணம். இதற்கு மாறாக, அது செலாவணி ஊடகமாகச் செயல் புரியும் பொழுது, பணம் என்பது கற்பனையான பொருளாக இல்லாமல் உண்மையான ஒன்றாக, மற்ற பண்டங்களுக்குப் பக்கத்தில் இருந்தாக வேண்டிய நிலையில் அது எந்தப் பொருள் என்பது சம்பந்தமில்லாதது; அதன் அளவுதான் தீர்மானமான அம்சமாகிறது. அது ஒரு பவுன் தங்கமா அல்லது வெள்ளியா அல்லது செம்பா என்பது ஆதார அளவுக்குத் தீர்மானமானதாக இருந்த போதிலும், நாணயத்தின் வெறும் எண்ணிக்கை அதை எந்த ஆதார அளவுக்கும் போதுமான புறவுருவமாக்குகிறது. இங்கே அந்த நாணயத்தின் பொருளைப் பற்றிய சம்பந்தமே இல்லை. முழுவதும் கற்பனையான பணத்தைப் பொறுத்தவரை எல்லாமே பௌதிகப் பொருளைப் பொறுத்ததாக இருப்பதும், சடப் பொருளான நாணயத்தைப் பொறுத்தவரை எல்லாமே

வெறும் பெயரளவிலுள்ள எண்ணிக்கை விகிதத்தைப் பொறுத்திருப்பதும் பொது அறிவுக்கு மாறுபட்டதாகத் தோன்றும்.

காகித நோட்டுகளின் அளவு அதிகரிப்பதற்கும் குறைவதற்கும் ஏற்ப பண்ட விலைகள் அதிகரிப்பதும் குறைவதும்—காகித நோட்டுகள் மட்டுமே செலாவணி ஊடகமாக இருக்குமிடங்களில் பிந்திய விளைவு ஏற்படுகிறது—வெளி நடவடிக்கையினால் யாந்திரீகமாக மீறப்பட்ட ஒரு விதியைச் செலாவணி நிகழ்வு பலவந்தமாக உறுதிப்படுத்துவதாகும். செலாவணியிலிருக்கிற தங்கத்தின் அளவைப் பண்டங்களின் விலைகள் நிர்ணயிக்கின்றன; செலாவணியிலிருக்கிற மதிப்பின் அடையாளச் சின்னங்களின் அளவை அவை செலாவணியில் இடம் மாற்றுகிற தங்க நாணயத்தின் அளவு நிர்ணயிக்கிறது என்பது அந்த விதியாகும். இதற்கு மாறாக, செலாவணி நிகழ்வுப் போக்கு காகித நோட்டுகளின் எந்த எண்ணிக்கையையும் வாங்கிக் கொள்ளும் அல்லது ஜீரணிக்கும்; ஏனென்றால் செலாவணிக்குள் நுழைகிற மதிப்பின் அடையாளச் சின்னங்கள் கொண்டிருக்கிற தங்கம் என்ற சிறப்புப் பெயருக்குச் சம்பந்தமில்லாதபடி, அதற்குப் பதிலாக தங்கத்தின் அளவின் அடையாளச் சின்னமாகக் குறுக்கப்பட்டு செலாவணியில் உபயோகமாகிறது.

மதிப்பின் அடையாளச் சின்னங்களின் செலாவணியில் உண்மையான பணத்தின் செலாவணியைக் கட்டுப்படுத்துகிற எல்லா விதிகளுமே எதிர்மாறாக இருப்பது போலவும் தலை கீழாகத் திருப்பப்பட்டு விட்டது போலவும் தோன்றுகிறது. மதிப்பு இருப்பதனால் தங்கம் செலாவணியாகிறது; ஆனால் காகிதம் செலாவணியின் காரணமாக மதிப்பைக் கொண்டிருக்கிறது. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு கொடுக்கப்படுமானால், செலாவணியிலிருக்கும் தங்கத்தின் அளவு அதன் மதிப்பைப் பொறுத்திருக்கிறது; ஆனால் காகித அடையாளச் சின்னங்களின் மதிப்பு செலாவணியிலிருக்கிற அடையாளச் சின்னங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இருக்கிறது. செலாவணியிலிருக்கிற தங்கத்தின் அளவு பண்டங்களின் விலைகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஏற்ப அதிகரிக்கிறது அல்லது குறைகிறது; ஆனால் பண்டங்களின் விலைகள் செலாவணியிலிருக்கிற காகிதத்தின்

அளவு மாறுவதற்கு ஏற்ப அதிகரிப்பது அல்லது குறைவது போலத் தோன்றுகிறது. பண்டங்களின் செலாவணியில் ஒரு குறிப்பிட்ட அளவு தங்க நாணயங்களைத்தான் ஏற்றுக் கொள்ள முடிகிறது. இதன் காரணமாகச் செலாவணியிலிருக்கிற பணத்தின் அளவு மாறிமாறிச் சுருங்குவதும் விரிவடைவதும் ஒரு தவிர்க்க முடியாத விதியாக வெளிப்படுகிறது. ஆனால் காகிதப் பணத்தில் எந்த அளவையும் செலாவணி ஏற்றுக் கொள்வதாகத் தோன்றுகிறது. அரசாங்கம் ஆதார எடையளவில் ஒரு கிரெயினில் நூறில் ஒரு பங்குக்குக் குறைவாக நாணயத்தை வெளியிட்டாலும் அது தங்கம், வெள்ளி நாணயத்தைக் குறைப்புச் செய்வதாகிறது; எனவே செலாவணி ஊடகம் என்ற முறையில் அதன் செயலைக் கெடுக்கிறது. ஆனால் உலோகத்தோடு நாணயத்தின் இடு பெயரைத் தவிர வேறு எந்த உறவுமில்லாத மதிப்பற்ற காகிதச் சீட்டுகளை வெளியிடுவது முற்றிலும் சரியான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது. பண்டங்களின் மதிப்பு தங்கத்தின் மூலமாகத் தீர்மானிக்கப்பட்ட பிறகு அல்லது விலை என்று எடுத்துரைக்கப்பட்ட பிறகுதான் தங்க நாணயம் அதைப் பிரதிநிதித்துவப்படுத்துவது தெளிவு; ஆனால் மதிப்பின் அடையாளச் சின்னம் பண்டங்களின் மதிப்பை நேரடியாகவே பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தோன்றுகிறது. எனவே நாணயச் செலாவணியை ஆராய்கின்ற ஒருவர் சட்ட ரீதியான பரிவர்த்தனை விகிதத்தைக் கொண்ட காகிதப் பணத்தின் செலாவணியை மட்டும் ஆராய்வதோடு நின்று விட்டால் அவர் நாணயச் செலாவணியின் உள்ளுறை விதிகளைத் தவருகப் புரிந்து கொள்வார். மதிப்பின் அடையாளச் சின்னங்கள் செலாவணியில் இந்த விதிகளைத் தலைகீழாக மாற்றி விடுவதோடு அவற்றை ரத்துச் செய்து விடுவது போலவும் தோன்றுகிறது. ஏனென்றால் பொருத்தமான அளவில் வெளியிடப்படுகின்ற காகிதப் பணத்தின் இயக்கம் மதிப்பின் அடையாளச் சின்னம் என்ற முறையில் அதன் குணும்சங்களோடு பொருந்தவில்லை; ஆனால் அதன் தனிவகையான இயக்கம் தங்கத்தோடு அதன் சரியான விகிதம் மீறப்படுவதால் ஏற்படுகிறது; பண்டங்களின் உருமாற்றத்தினுல் அது நேரடியாக ஏற்படுவதில்லை.

## 3. பணம்

நாணயத்திலிருந்து வேறுபட்டிருக்கின்ற பணம் என்பது C—M—C என்ற சுற்றுவளையத்தின் விளைவாகும். M—C—M என்ற சுற்றுவளையத்தின், அதாவது பணத்துக்குப் பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதற்காகப் பண்டங்களைப் பணத்துக்குப் பரிவர்த்தனை செய்வதன் தொடக்க நிலையாகும். C—M—C என்ற வடிவத்தில் பண்டமே நடவடிக்கையின் ஆரம்பமாகவும் முடிவாகவும் இருக்கிறது; M—C—M என்ற வடிவத்தில் பணம் இந்த நிலையை வகிக்கிறது. முதல் சுற்றுவளையத்தில் பண்டங்களின் பரிவர்த்தனையில் பணம் மத்தியஸ்தம் செய்கிறது. இரண்டாவது சுற்றுவளையத்தில் பணம் பணமாகப் பரிணமிப்பதற்குப் பண்டம் மத்தியஸ்தம் செய்கிறது. முதல் சுற்றுவளையத்தின் போது ஊடகமாக மட்டுமே செயல் புரிந்த பணம் இரண்டாவது சுற்றுவளையத்தில் செலாவணியின் இலக்காகத் தோன்றுகிறது; ஆனால் முதல் சுற்றுவளையத்தின் போது இலக்காக இருந்த பண்டம் இரண்டாவது சுற்றுவளையத்தில் வெறும் ஊடகமாகத் தோன்றுகிறது. முன்பே C—M—C என்ற சுற்றுவளையத்தின் விளைவாகப் பணம் இருப்பதால் செலாவணியின் விளைவு M—C—M என்ற வடிவத்தில் அதன் விலகல் முனையாகவும் தோன்றுகிறது. பொருளின் பரிவர்த்தனை C—M—Cயின் உள்ளடக்கம்; ஆனால் M—C—M என்ற இரண்டாவது சுற்றுவளையத்தின் உண்மையான உள்ளடக்கம் முதல் சுற்றுவளையத்திலிருந்து வெளியேறிய வடிவத்திலிருக்கின்ற பண்டமாகும்.

C—M—C என்ற சூத்திரத்தில் இரண்டு முனைக்கோடிகளும் ஒரே மதிப்பை உடைய பண்டங்களாகும்; ஆனால் அவை அதே சமயத்தில் குண ரீதியில் வெவ்வேறு பயன் மதிப்புகளைக் கொண்டவை. C—C என்கிற அவற்றின் பரிவர்த்தனை பொருளின் உண்மையான பரிவர்த்தனையாகும். மறு பக்கத்தில், M—C—M என்ற சூத்திரத்தில் இரண்டு முனைக்கோடிகளும் தங்கம்; மேலும் அவை ஒரே மதிப்பை உடைய தங்கமாக இருக்கின்றன. ஆனால் பண்டங்களைத் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்வதற்காகத் தங்கத்தைப் பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்வது அல்லது இறுதி நிலையான M—M என்பதை எடுத்துக் கொண்டால் தங்கத்தைத் தங்கத்

துக்குப் பரிவர்த்தனை செய்வது பொருளற்றதாகத் தோன்று கிறது. ஆனால் M—C—M என்ற சூத்திரத்தை ஒருவர் விற்பனை செய்வதற்காக வாங்குவது என்று விரிவுபடுத்தினால்—தங் கத்தை ஓர் இடைநிலை இயக்கத்தின் உதவியினால் தங்கத் துக்குப் பரிவர்த்தனை செய்வது என்பதே அதன் பொருள்— அவர் உடனடியாக முதலாளித்துவ உற்பத்தி முறையில் மாபெரும் ஆதிக்கம் வகிக்கும் வடிவத்தைக் காண முடியும். எனினும் யதார்த்த வாழ்க்கையில் மக்கள் விற்பனை செய் வதற்காக வாங்குவது கிடையாது; ஆனால் அதிகமான விலை யில் விற்பதற்காகக் குறைந்த விலைக்குப் பொருள்களை வாங்குகிறார்கள். அவர்கள் பண்டங்களுக்குப் பணத்தைப் பரிவர்த்தனை செய்கிறார்கள்; பிறகு அதிகமான பணத்துக்கு இவற்றைப் பரிவர்த்தனை செய்வதற்காக. எனவே M—M என்ற முனைக்கோடிகள் குண ரீதியாக வேறுபடவில்லை என்ற போதி லும் அளவு ரீதியாக வேறுபட்டிருக்கின்றன. இந்த அளவு ரீதியான வேறுபாடு சமமதிப்பு இல்லாதவற்றைப் பரிவர்த்தனை செய்வதை முன் அனுமானமாகக் கொண்டிருக்கிறது; ஆனால் பண்டங்களும் பணமும் அவையளவில் வெறும் பண்டத் தின் முரணியல் வடிவங்களே; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒரே மதிப்பு இருக்கக் கூடிய வெவ் வேறு வடிவங்களே. எனவே M—C—M என்ற சுற்றுவளையத்தில் பணமும் பண்டமும் உற்பத்தியில் மேலும் வளர்ச்சியடைந்த உறவுகளை உள்ளடக்கியிருக்கின்றன; சாதாரணச் செலா வணியில் இந்தச் சுற்றுவளையம் அதிகச் சிக்கல் நிறைந்த தன்மையுடைய ஓர் இயக்கத்தின் பிரதிபலிப்பு ஆகும். எனவே பண்டச் செலாவணியின் உடனடியான வடிவமா கிய C—M—C என்பதிலிருந்து, செலாவணி ஊடகத்திலிருந்து தனி வகையான பணத்தை வருவிக்க வேண்டும்.

தங்கம், அதாவது மதிப்பின் ஆதார அளவாகவும் செலா வணி ஊடகமாகவும் செயல் புரிகின்ற தனி வகையான பண்டம் சமூகத்தின் எந்த விசேஷமான முயற்சியும் இல்லா மலே பணம் என மாறுகிறது. இங்கிலாந்தில் வெள்ளி மதிப் பின் ஆதார அளவாகவோ அல்லது சக்திமிக்க செலாவணி ஊடகமாகவோ இருக்கவில்லை; அங்கே வெள்ளி பணமாக மாறவில்லை. இது போலவே ஹாலந்தில் மதிப்பின் ஆதார அளவு என்ற நிலையிலிருந்து தங்கத்தை அகற்றியதும் அது

பணமாக இருந்தது முடிந்து விட்டது. முதலாவதாக, எந்தப் பண்டத்தில் மதிப்பின் ஆதார அளவு, செலாவணி ஊடகம் என்ற செயல்கள் ஒன்றுகூடியிருக்கின்றனவோ அது பணம் ஆகிறது; அல்லது மதிப்பின் ஆதார அளவு, செலாவணி ஊடகத்தின் ஒருமை பணமாகும். ஆனல் தங்கத்தைப் பொறுத்தவரை, இப்படிப்பட்ட ஒருமையோடு கூட, இந்த இரண்டு செயல்களிலிருந்தும் தனியான சுதந்திர வாழ் நிலையைக் கொண்டிருக்கிறது. மதிப்பின் ஆதார அளவு என்ற முறையில் தங்கம் கற்பனைப் பணம், கற்பனைத் தங்கம் மட்டுமே; செலாவணி ஊடகம் என்ற கலப்பற்ற வகையில் அது அடையாளபூர்வமான பணம், அடையாளபூர்வமான தங்கமாகும். ஆனல் அதனுடைய சாதாரண உலோக சடப் பொருள் என்ற வகையில் தங்கம் என்பது பணம்; அல்லது பணம் என்பது உண்மையான தங்கம்.

தங்கம், அதாவது பணம் என்ற பண்டத்தை அசைவற்ற நிலையிலும் மற்ற பண்டங்களோடு அதன் உறவுகளையும் சிறிது ஆராய்வோம். பண்டங்களின் விலைகள் அனைத்துமே தங்கத்தின் திட்டவட்டமான அளவுகளைக் குறிக்கின்றன. எனவே விலைகள் கருத்து ரீதியான தங்கம் அல்லது கருத்து ரீதியான பணம் மட்டுமே; அதாவது, தங்கத்தின் குறியீடுகளே. மறு பக்கத்தில், மதிப்பின் அடையாளச் சின்னமாகக் கருதப்பட்ட பணம் பண்டங்களின் விலைகளின் குறியீடாக மட்டுமே தோன்றியதைப் போன்றதே இதுவும்.* எனவே எல்லாப் பண்டங்களும் கருத்து ரீதியான பணம் மட்டுமே. பணம் ஒன்றுதான் உண்மையான பண்டம். பரிவர்த்தனை மதிப்பு, எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு, சூக்குமமான செல்வம் ஆகியவற்றின் சுயேச்சையான வடிவத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிற பண்டங்களை வேறுபடுத்திக் காட்டுகிற தனிச் சிறப்பு என்ற வகையில் தங்கம் சூக்குமமான செல்வத்தின் பொருளாயத அம்சமாக இருக்கிறது. பயன் மதிப்பைப் பொறுத்தவரை ஒரு குறிப்

* "விலையுயர்ந்த உலோகங்கள் பொருள்களின் அடையாளச் சின்னங்கள் என்பது மட்டுமல்லாமல்... மறு புறத்தில், பொருள்களும்... தங்கம், வெள்ளியின் அடையாளச் சின்னங்களாகும்." A. Genovesi, *Lezioni di Economia Civile*, 1765, in Custodi, *Parte Moderna*, t. 8, p. 281.

பிட்ட தேவையோடு அதன் உறவு மூலமாக ஒவ்வொரு பண்டமும் பொருட்செல்வத்தின் ஓர் அம்சத்தை மட்டுமே, செல்வத்தின் ஒரே ஒரு முகப்பை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆனால் பணத்தை எந்தவிதமான தேவையின் புறப் பொருளாகவும் உடனடியாக மாற்ற முடியும் என்பதால் அது எந்தத் தேவையையும் பூர்த்தி செய்கிறது. அதனுடைய பயன் மதிப்பு அதன் சமமதிப்புகளாக இருக்கின்ற பயன் மதிப்புகளின் முடிவில்லாத தொடர்வரிசையில் அடையப்படுகிறது. பரிணமத்தின் விளைவாகப் பண்டங்களின் உலகத்தின் ஏற்பட்டுள்ள பொருட்செல்வம் அனைத்துமே இந்த உறுதியான உலோகத் துண்டில் மறைந்த நிலையில் இருக்கிறது. பண்டங்களின் விலைகள் தங்கத்தை, எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பை அல்லது சூக்குமமான செல்வத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற பொழுது, தங்கத்தின் பயன் மதிப்பு எல்லாப் பண்டங்களின் பயன் மதிப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே தங்கம் பொருட்செல்வத்தின் பொருளாயதக் குறியீடாகும். அது ''எல்லாப் பொருள்களின் சாரம்'' ("precis de toutes les choses") (புவகில்பெர்); சமூகச் செல்வத்தின் சுருக்கப் பதிப்பு. வடிவத்தைப் பொறுத்தமட்டில் தங்கம் எக்காலத்துக்கும் உரிய உழைப்பின் நேரடியான அவதாரம்; உள்ளடக்கத்தைப் பொறுத்த மட்டில் அது ஸ்தூலமான உழைப்பு எல்லாவற்றின் சாராம் சமாகும். அது தனிப்பட்ட வடிவத்தில் இருக்கிற எக்காலத்துக்கும் உரிய செல்வம்.* தங்கம் செலாவணி ஊடகமாகச் செயல் புரிகிற பொழுது எல்லாவிதமான காயங்களையும் அடைந்தது; அது நறுக்கப்பட்டது; கலப்பற்ற அளவுக்கு அடையாள பூர்வமான காகிதச் சீட்டாகவும் அது மாற்றமடைந்தது. அது பணமாகச் செயல் புரியும் பொழுது தன்னுடைய தங்கப் பேரொளியை மறுபடியும் பெறுகிறது. வேலை செய்யும் பணியாள் எஜமானன் ஆகிறான்.** வெறும்

---

* தங்கமும் வெள்ளியும் ''எக்காலத்துக்கும் உரிய செல்வம்.'' Petty, *Political Arithmetick*, p. 242.

** E. Misselden, *Free Trade or the Means to Make Trade Florish*, London, 1622. ''வர்த்தகத்தின் இயல்பான பொருள் சரக்குகள் எனப்படுகின்றன; உற்பத்தியானவுடன் வணிகர்கள் இவற்றைப் பண்டங்கள் என்று கூறுகிறார்கள். பணமே வர்த்

கொத்தடிமை பண்டங்களின் கடவுளாகி விட்டது.*

### அ. பதுக்கலின் உருவாக்கம்

பணம் என்ற வகையில் தங்கம் முதலாவதாக செலாவணி ஊடகத்திலிருந்து பிரிக்கப்பட்டது. ஏனென்றால் பண்டத்தின் உருமாற்றம் தடைப்படுத்தப்பட்டு பண்டம் தங்கத்தின் வடிவத்திலேயே இருந்து விட்டது. ஒரு விற்பனை உடனே ஒரு கொள்வினையாக மாற்றப்படாத பொழுது இது நடைபெறுகிறது. பணம் என்ற முறையில் தங்கம் ஒரு சுதந்திரமான வாழ்க்கையைக் கொண்டிருப்பது எல்லாவற்றுக்கும் மேலே செலாவணி நிகழ்வு பிரிக்கப்படுவது அல்லது பண்டங்கள்

---

தகத்தின் செயற்கையான நோக்கமாகும்; அந்தப் பணத்துக்கு அரசு மற்றும் யுத்தத்தின் வலிமையான நரம்புகள் என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.... தன்மையினுலும் காலத்திலுைம் பணம் சரக்குகளுக்குப் பிறகே ஏற்பட்டாலும் கூட இப்பொழுது உபயோகத்திலிருப்பதால் அதுவே முக்கியமானதாகும்'' (p. 7). அவர் பண்டம், பணத்தின் நிலையையும் ''முதிய யாக்கூபின்'' வழித்தோன்றல்களோடு ஒப்பிடுகிறார். யாக்கூப் ''பேரக் குழந்தைகளுக்கு ஆசி கூறுவதற்காகத் தன் கைகளைக் குறுக்காகக் கொண்டுபோய், வலது கையை இளையவன் மீதும், இடது கையை மூத்தவன் மீதும் வைக்கிறார்'' (l. c.). Boisguillebert, *Dissertation sur la nature des richesses.* ''இவ்விதத்தில் வாணிபத்தின் அடிமை அதன் எஜமானனுகிறது.... அடிமை எஜமானனுக அல்லது கொடுங்கோலனுக மாறி விட்டதுதான் மக்களின் துன்பங்களுக்குக் காரணம்'' (pp. 395, 399).

* ''இந்த உலோகங்கள் (தங்கமும் வெள்ளியும்) வழிபாட்டுக்குரிய தெய்வங்களாக மாறி விட்டன. வர்த்தகத்தில் இவை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை மற்றும் இலட்சியத்தை, அதாவது பரிவர்த்தனையிலும் பரஸ்பர மாற்றத்திலும் அடையாளச் சின்னங்களாக இருப்பதை அவை விட்டுவிட்டன; அதிகமான பொருள்கள், அத்தியாவசியமான தேவைகள், அதிகமான மனிதர்கள்— குருட்டுத் தனமான பழங்காலத்தில் பொய்க் கடவுள்களுக்கு எந்தக் காலத்திலும் பலியிடப்பட்டதைக் காட்டிலும்— அதிகமானவர்கள் பலியிடப்பட்ட, தொடர்ந்து பலியிடப்படுகிற தெய்வங்களாக மாறுவதற்காக இந்தச் சேவையை முழுமையாகக் கைவிடுவதற்கு இவை அனுமதிக்கப்பட்டன...'' (Boisguillebert, *op. cit.*, p. 395).

பக்கத்துக்குப் பக்கம் இருக்கின்ற இரண்டு தனியான, தொடர்ச்சியற்ற நடவடிக்கைகளாக உருமாற்றங்களடைவதன் தெளிவான வெளியீடாகும். நாணயத்தின் இயக்கம் தடைப்பட்டதும் அதுவே பணமாகி விடுகிறது. பண்டத்துக்குப் பதிலாக அதைப் பெறுகின்ற விற்பனையாளர் கையில் அது பணமே தவிர நாணயமல்ல; ஆனால் அவர் கையிலிருந்து வெளியே புறப்பட்டவுடன் அது மறுபடியும் நாணயமாகி விடுகிறது. ஒவ்வொருவரும் தான் உற்பத்தி செய்கிற குறிப்பிட்ட பண்டத்தை விற்பனை செய்கிறார்; ஆனால் ஒரு சமூக மனிதன் என்ற முறையில் தனக்குத் தேவைப்படுகிற மற்ற எல்லாப் பண்டங்களையும் வாங்குகிறார். அவர் விற்பனையாளர் என்ற முறையில் சந்தைக்கு எவ்வளவு முறை வருகிறார் என்பது அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரத்தைப் பொறுத்தது; ஆனால் வாங்குபவர் என்ற முறையில் அவர் சந்தைக்கு வருவது அவருடைய ஜீவாதாரமான தேவைகள் அடிக்கடி ஏற்படுவதைப் பொறுத்ததாகும். அவர் விற்பனை செய்யாமல் கொள்வினை செய்ய வேண்டுமென்றால், அவர் கொள்வினை செய்யாமல் எதையாவது விற்பனை செய்திருக்க வேண்டும். C—M—C என்ற சுற்றுவளையம் ஒரே சமயத்தில் அவற்றின் பிரிவினையின் தொடர்ச்சியான நிகழ்வாக இருக்கின்ற அளவுக்குத்தான் விற்பனை, கொள்வினையின் சுறுசுறுப்பான ஒருமையாக இருக்கிறது. நாணயம் என்ற முறையில் பணம் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருப்பதற்கு நாணயம் தொடர்ச்சியாகப் பணமாக உறைய வேண்டும். நாணயத்தின் தொடர்ச்சியான இயக்கம் அது பெரும் அளவுகளில் அல்லது சிறிய அளவுகளில் நாணயங்களின் காப்பு நிதிகளாக நிரந்தரமாகத் தேங்கி விடுவதையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. இவை செலாவணிச் சுற்றுவட்டத்துக்குள் எல்லா இடங்களிலும் தோன்றுவதோடு அதே சமயத்தில் செலாவணியின் நிபந்தனையாகவும் இருக்கின்றன. இந்த நிதிகளின் உருவாக்கமும், பங்கீடும், கலைப்பும் மறு-உருவாக்கமும் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கின்றன. இருக்கின்ற பணங்கள் தொடர்ச்சியாக மறைந்து விடுகின்றன; அப்படி அவை மறைந்து விடுவதும் தொடர்ச்சியான உண்மையாக இருக்கிறது. ஒவ்வொரு பண்ட உடைமையாளரும் தான் விற்

பனே செய்கின்ற குறிப்பிட்ட பண்டத்தோடு கூடுதலாக, தான் கொள்வினைக்குப் பயன்படுத்துகிற பொதுவான பண்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை எப்பொழுதும் இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்று ஆடம் ஸ்மித் கூறிய பொழுது நாணயம் பணமாகவும் பணம் நாணயமாகவும் முடிவில்லாத வகையில் மாற்றமடைந்து கொண்டிருப்பதைக் குறிப்பிட்டார். C—M—C என்ற சுற்றுவளையத்தின் இரண்டாவது உறுப்பாகிய M—C என்பது தொடரான கொள்வினை நடவடிக்கைகளாகப் பிரிந்து விடுகிறது; இவை அனைத்தும் உடனடியாக நடைபெறுவதில்லை; ஒரு காலப்பரப்பில் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறுகின்றன; அதனால் M என்பதின் ஒரு பகுதி நாணயமாகச் செலாவணியாகிறது; அதன் மறு பகுதி பணமாக அசைவற்ற நிலையில் இருக்கிறது என்பதை முன்னர் பார்த்தோம். இந்த உதாரணத்தில் பணம் என்பது உண்மையில் இயங்காத நிலையிலிருக்கும் நாணயமே; செலாவணியிலிருக்கும் நாணயத்தின் பல்வேறு பகுதிகளான உறுப்புக்களும் இப்பொழுது ஒரு வடிவத்திலும் உடனே வேறொரு வடிவத்திலும் தொடர்ச்சியான மாறும் நிலையில் தோன்றுகின்றன. எனவே செலாவணி ஊடகம் பணமாக ஆகும் முதல் மாற்றம் என்பது பணச் செலாவணியின் தொழில் நுட்ப அம்சமாக இருக்கிறது.*

செல்வத்தின் தானாகவே வளர்ச்சியடைந்த முதல் வடிவம் மிகையளவில் அல்லது அதிகமான உற்பத்திப் பொருள்

---

* புவகில்பெர் இடைவிடாத இயக்க இயந்திரத்தின் (perpetuum mobile) முதலாவது நகராத் தன்மை, அதாவது செலாவணி ஊடகம் என்ற முறையில் அதன் செயலை நிராகரித்தல் அதைப் பண்டங்களின் உறவில் சுயேச்சையானதாக உடனடியாகச் செய்துவிடும் என்று ஊகிக்கிறார். பணம் "தொடர்ச்சியான இயக்கத்தில் இருக்க வேண்டும்; அது நகர்ந்து கொண்டிருக்கும் வரை சரியாக இருக்கும்; அது நகர முடியாத பொழுது எல்லாம் போய்விடும்" என்கிறார் (Boisguillebert, *Le détail de la France*, p. 213). அதன் செயலற்ற தன்மை என்பது அதனுடைய இயக்கத்தின் முன்தேவை என்பதை அவர் கவனிக்கத் தவறி விடுகிறார். பண்டங்களின் மதிப்பு வடிவம் அவற்றின் வளர்சிதை மாற்றத்தில் மிகவும் அற்பமான அம்சமாக இருக்க வேண்டுமே தவிர, அதுவே அதற்கு ஒரு முடிவாக இருக்கக் கூடாது என்பதைத்தான் அவர் உண்மையாக விரும்புகிறார்.

களைக் கொண்டிருக்கிறது; அதாவது பயன் மதிப்புகளாக நேரடியாகத் தேவைப்படாத உற்பத்திப் பொருள்களின் பகுதியை அளவுக்கு மீறிக் கொண்டிருக்கிறது; அல்லது பயன் மதிப்பு வெறும் தேவையின் எல்லைக்கு அப்பாற்பட்டிருக்கும் உற்பத்திப் பொருள்களைக் கொண்டிருக்கிறது. பண்டத்திலிருந்து பணத்துக்கு ஏற்பட்ட மாற்றத்தை ஆராய்கிற பொழுது பூர்விக உற்பத்திக் கட்டத்தில் உற்பத்திப் பொருள்களின் மிகையளவு அல்லது அதிகமான பண்டங்களின் பரிவர்த்தனைத் துறையாக உண்மையில் அமைகிறது என்பதைப் பார்த்தோம். தேவைக்கு அதிகமான பொருள்கள் பரிவர்த்தனைக்குரிய பொருள்களாக அல்லது பண்டங்களாக மாறுகின்றன. இந்த உபரியின் பொருத்தமான வடிவம் தங்கமும் வெள்ளியுமாகும்; செல்வம் சூக்குமமான சமூகச் செல்வமாக வைக்கப்பட்டிருந்த முதல் வடிவம் இது தான். பண்டங்களைத் தங்கம், வெள்ளியின் வடிவத்தில், அதாவது பணத்தின் பொருளாயத உருவத்தில் சேமித்து வைப்பது சாத்தியம் என்பதோடு, தங்கமும் வெள்ளியும் செல்வத்தின் கெட்டுப்போகாத வடிவமாக அமைகின்றன. ஒவ்வொரு பயன் மதிப்பும் நுகரப்படும் பொழுது, அதாவது அழிக்கப்படுகிற பொழுது தன்னுடைய செயலை நிறைவேற்றிக் கொள்கிறது; ஆனால் பணம் என்ற முறையில் தங்கத்தின் பயன் மதிப்பு பரிவர்த்தனை மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுதான்; வடிவமற்ற மூலப் பொருளாக எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் புறவடிவமாக இருப்பதுதான். வடிவமற்ற உலோகம் என்ற வகையில் பரிவர்த்தனை மதிப்பு அழியாத வடிவத்தைக் கொண்டிருக்கிறது. இப்படி நுகர முடியாது தடுக்கப்பட்ட பணம் என்ற வகையில் தங்கம் அல்லது வெள்ளி பதுக்கல் பணமாகிறது. கலப்பற்ற உலோக நாணயத்தைக் கொண்டிருந்த பழங்காலத்திய நாடுகளைப் போன்றவற்றில் பதுக்கல் பணம் என்பது தனி நபரிலிருந்து அரசு வரையிலும் எக்காலத்துக்கும் உரிய நடவடிக்கையாகப் பின்பற்றப்படுகிறது. அரசு தன்னுடைய பதுக்கல் பணத்தை அதிகமான பாதுகாப்போடு வைத்திருக்கிறது. ஆசியாவிலும் எகிப்திலும், அந்த நாடுகளின் வரலாற்றின் ஆரம்ப காலத்தில் இத்தகைய பதுக்கல் பணக் குவியல்கள் மன்னர்கள், மதகுருக்களின் பாது

காப்பில் இருந்தன; அவர்களுடைய வல்லமைக்குச் சான்றாக முக்கியமாகப் பயன்பட்டன. கிரீசிலும் ரோமாபுரியிலும் அரசாங்கப் பதுக்கல் பணக் குவியல்களை ஏற்படுத்துவது முக்கியமான அரசாங்கக் கொள்கையாக இருந்தது. ஏனென்றால் மிகைச் செல்வம் இந்த வடிவத்தில் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறது; எந்த நேரத்திலும் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். வெற்றியாளர்கள் இத்தகைய பதுக்கல் பணக் குவியல்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு வேகமாக மாற்றுவதும், அவற்றின் ஒரு பகுதியாவது செலாவணி உலகத்துக்குள் திடீரென்று புகுத்தப்படுவதும் பண்டைக் காலப் பொருளாதாரத்தின் சிறப்பான அம்சங்களாகும்.

தங்கம் பொருள் வடிவத்திலுள்ள உழைப்பு நேரம் என்ற முறையில் தன்னுடைய மதிப்பின் அளவுக்குத்தானே உறுதியளிக்கிறது; மேலும் அது எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் புறவடிவம் என்பதால், பரிவர்த்தனை மதிப்பு என்ற வகையில் அதனுடைய தொடர்ச்சியான செயல் செலாவணி நிகழ்வினால் உத்தரவாதமளிக்கப்படுகிறது. பண்ட உடைமையாளர் பரிவர்த்தனை மதிப்பின் வடிவத்தில் தன்னுடைய பண்டங்களை வைத்துக் கொள்ள முடிவதும் அல்லது பண்டங்களின் வடிவத்தில் பரிவர்த்தனை மதிப்பை வைத்துக் கொள்ள முடிவதும் பண்டங்கள் தங்கமாக மாற்றப்பட்டுத் திரும்பப் பெறுவதற்காக நடைபெறுகிற பண்டங்களின் பரிவர்த்தனையை, செலாவணியின் தனியான நோக்கமாக ஆக்குகிறது. பண்டங்களில் உருமாற்றமாகிய C—M என்பது அவற்றின் உருமாற்றத்துக்காக, குறிப்பிட்ட பொருட்செல்வத்தைப் பொதுவான சமூகச் செல்வமாக மாற்றுவதற்காக நடைபெறுகிறது. பொருளின் பரிவர்த்தனைக்குப் பதிலாக வடிவத்தின் மாற்றம் தானே முதலும் முடிவுமாகி விடுகிறது. வெறும் வடிவமாக மட்டுமே இருந்த பரிவர்த்தனை மதிப்பு இந்த இயக்கத்தின் உள்ளடக்கமாக மாறி விடுகிறது. பண்டங்கள் செலாவணி உலகத்துக்குள் இருக்கும் வரைதான் பணமாக, அதாவது பண்டங்களாக இருக்கின்றன; அவை தங்கம், வெள்ளியாகக் கெட்டிப்படும் அளவுக்கு மட்டுமே இந்த மாறும் நிலையில் இருக்கின்றன. செலாவணி நிகழ்வுப் போக்கின் நிலையுருவம் என்ற

அளவுக்கு அவை மாறும் நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தங்கமும் வெள்ளியும் செலாவணி ஊடகமாகச் செயல்படாத அளவுக்குத்தான் தங்களைப் பணம் மட்டுமே என்று காட்டிக் கொள்கின்றன. அவை செலாவணி ஊடகமாக இராத பணமாக மாறுகின்றன. இவ்விதமாக, செலாவணியிலிருந்து பண்டங்களைத் தங்கத்தின் வடிவத்தில் திரும்பப் பெறுவதுதான் அவற்றைச் செலாவணியில் தொடர்ந்து வைத்திருப்பதற்குரிய ஒரே வழியாகும்.

பண்டங்களின் உரிமையாளர் செலாவணிக்குள் பண்டங்களின் வடிவத்தில் போட்ட அளவுக்குத்தான் அதிலிருந்து பணத்தின் வடிவத்தில் திரும்பப் பெற முடியும். பண்டங்களின் செலாவணி என்ற கருத்து நிலையிலிருந்து பார்க்கும் பொழுது, பதுக்கலின் முதல் நிபந்தனை தொடர்ச்சியான விற்பனை, செலாவணிக்குள் பண்டங்களை இடைவிடாமல் போடுவதாகும். மறு பக்கத்தில், செலாவணி ஊடகம் என்ற முறையில் பணம் செலாவணி நிகழ்வுக்குள்ளாகவே தொடர்ச்சியாக மறைந்து விடுகிறது. ஏனென்றால் அது எப்பொழுதும் பயன் மதிப்புகளில் ஈடேற்றம் பெற்று நிலையற்ற இன்பங்களில் கரைந்து கொண்டிருக்கிறது. எனவே அதைச் செலாவணியின் நீரோட்டத்திலிருந்து திரும்பப் பெற வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பணம் கொள்வினைச் சாதனமாகச் செயலாற்றுவதைத் தடுக்க வேண்டுமென்றால் பண்டங்கள் அவற்றின் உருமாற்றத்தின் முதல் கட்டத்திலேயே நிறுத்தி வைக்கப்பட வேண்டும். தற்பொழுது பணத்தைப் பதுக்கி வைப்பவராக மாறியுள்ள பண்டங்களின் உடைமையாளர் இயன்ற அளவுக்கு அதிகமாக விற்பனை செய்ய வேண்டும்; இயன்ற அளவுக்குக் குறைவாகவே வாங்க வேண்டும். முதிய கதோன் இந்த அறிவுரையைச் சொல்லியிருக்கிறார்: ''குடும்பத் தலைவர் விற்பதில் ஆர்வமாக இருக்க வேண்டும்; வாங்குவதில் ஆர்வம் காட்டக் கூடாது.''* சுறுசுறுப்பான உழைப்பு பதுக்கலுக்கு நேரான முன்நிபந்தனையாக இருப்பதைப் போல கருமித்தனம் அதன் எதிர்மறையான முன்நிபந்தனையாகும். [செலா

* "Patrem familias vendacem, non emacem esse". Cato The Elder, *De re rustica*.—ப-ர்.

வணிக்குள் போடப்பட்ட] பண்டங்களின் சமமதிப்பு—குறிப்பிட்ட பண்டங்கள் அல்லது பயன் மதிப்புகளைக் கொண்டது—அதிலிருந்து திரும்பப் பெறப்படும் அளவுவீதம் எவ்வளவு குறைவானதோ அவ்வளவு அதிகமாக பணம் அல்லது பரிவர்த்தனை மதிப்பைக் கொண்ட அளவுவீதம் இருக்கும்.* எனவே செல்வத்தை அதன் பொதுவான வடிவத்தில் ஒதுக்கீடு செய்வது செல்வத்தின் பொருளாயத எதார்த்தத்தை விட்டுக் கொடுப்பதையும் மறைமுகமாகக் கொண்டிருக்கிறது. எனவே பதுக்கலுக்கு உந்துவிசை பேராசையே; அது பண்டங்களைப் பயன் மதிப்புகளாக விரும்பவில்லை; ஆனால் பரிவர்த்தனை மதிப்பைப் பண்டமாக விரும்புகிறது. எனவே அளவுக்கு மீறிய செல்வத்தை அதன் பொதுவான வடிவத்தில் கைப்பற்றுவதற்காகக் குறிப்பிட்ட தேவைகளை வசதிப் பொருள்கள், அனுவசியமான பொருள்கள் என்று காட்ட வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக, கோர்தெஸுக்கள் (Cortes) இரண்டாம் ஃபிலீப் மன்னருக்கு அனுப்பிய மனுவில் மற்ற பல விஷயங்களோடு பின்வரும் பகுதியும் காணப்படுகிறது:

''மாட்சிமை பொருந்திய மன்னரிடம் 1586ம் வருடத்தில் மெழுகுவர்த்திகள், கண்ணாடிச் சாமான்கள், ஆபரணங்கள், கத்திகள் இன்னும் இவை போன்று வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மற்ற பொருள்களை இந்த இராஜ்யத்துக்குள் மேலும் இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டாமென்று வலியதோலித்தின் கோர்தெஸுக்கள் கேட்டுக் கொண்டார்கள். இந்தப் பொருள்களால் மனித வாழ்க்கைக்கு ஒரு பயனும் கிடையாது. ஆனால் செவ்விந்தியர்களைப் போலவே ஸ்பானிஷ் மக்களும் தங்கத்தைப் பரிவர்த்தனை செய்து அவற்றைப் பெற வேண்டியிருக்கிறது.''**

பணத்தைப் பதுக்குபவன் வண்டுகளால் தொட முடியாத, துருப்பிடிக்காத முற்றிலும் விண்ணுலகத்துக்குரிய, எப்பொழுதும் நிலைத்திருக்கும் செல்வத்தைத் தேடிப் போகும்

---

* ''சரக்கு பொருள்களாக...அதிகப்படுகின்ற பொழுது... அந்த அளவுக்கு அது கருவூலத்தில் குறைகிறது.'' E. Misselden, *op. cit.*, p. 23.

** Sempéré, *Considérations sur les causes de la grandeur et de la décadence de la Monarchie Espagnole*, Vol. 1, pp. 275—276.—ப-ர்.

பொழுது உலகத்தோடு ஒட்டிய இவ்வாழ்வுக்குரிய நிலையில்லாத இன்பங்களை ஒதுக்க வேண்டியது அவசியமாகிறது.

முன்னர் மேற்கோள் காட்டிய புத்தகத்தில் மிஸ்ஸெல்தேன் பின்வருமாறு எழுதுகிறார்: ''இந்த இராஜ்ஜியத்தில் பணம் குறைந்து விட்டதற்குப் பொதுவான ஆதிகாரணம் நாம் வெளிநாட்டுப் பண்டங்களை மிகவும் அதிகமான அளவுக்குப் பயன்படுத்துவதே. இந்தப் பொம்மைகளுக்குப் பதிலாக நமது பொக்கிஷத்தைக் கொடுக்கிறோம். இல்லையென்றால் அது நம்மிடமே இருக்கும். எனவே இவை பண்டங்கள் அல்லாதவை என்பது பெறப்படும்.... நாம்... ஸ்பெயின், பிரான்ஸ், ரைன் பிரதேசம், லெவாந்த் ஆகியவற்றின் ஒயினையும்... ஸ்பெயினிலிருந்து உலர் திராட்சையையும் லெவாந்திலிருந்து மசாலைப் பொருள்களையும் ஏனோவிலிருந்து லான், கேம்பிரிக் துணிகளையும்... இத்தாலியிலிருந்து பட்டுத் துணியையும் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து சீனி, புகையிலையையும் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து மசாலைப் பொருள்களையும் மிக அதிகமான அளவில் வாங்கி உபயோகிக்கிறோம். இவை நமக்கு **அவசியமான** பொருள்கள் அல்ல; எனினும் நாம் சுத்தமான தங்கத்தைக் கொடுத்து இவற்றை வாங்குகிறோம்.''*

தங்கம், வெள்ளியின் வடிவத்தில் இருக்கின்ற செல்வம் அழியாதது. ஏனென்றால் அவற்றின் பரிவர்த்தனை மதிப்பு அழியாத உலோகத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. தங்கமும் வெள்ளியும் செலாவணிச் சாதனமாகப் பயன்பட்டு பண்டங்களின் மறையக் கூடிய பணவியல் அம்சமாக மட்டுமே செயல் புரிவது தடுக்கப்படுவதும் மற்றொரு முக்கிய காரணமாகும். எனவே அழிவில்லாத வடிவத்துக்கு அழியக் கூடிய உள்ளடக்கம் பலியிடப்படுகிறது.

''அளவுக்கு மீறிய சாப்பாட்டிலும் குடியிலும் அல்லது அழியக் கூடிய எந்தப் பண்டத்திலாவது... பணத்தைச் செலவழிக்கின்ற நபரிடமிருந்து (வரிகளின் மூலம்) அதை எடுப்பதாக வைத்துக் கொள்வோம். துணிகளை வாங்குவதில் பணத்தை உபயோகிக்கும் நபருக்கு அந்தப் பணத்தைக் கொடுப்போம். இப்படிச் செய்தால் கூட நாட்டுக்குச் சிறிதளவு நன்மையாவது ஏற்படும் என்று நான் சொல்வேன். ஏனென்றால் துணிகள் உணவையும் மதுபானங்களையும்

* E. Misselden, *op. cit.*, pp. 11—13 *passim.*

போல உடனடியாக அழிந்து போகிறவையல்ல. ஆனால் வீடுகளுக்கு மரச் சாமான்கள் வாங்குவதில் அதைச் செலவிட்டால் இன்னும் அதிகமான பலன் கிடைக்கும்; வீடு கட்டினால் கூடுதலான பலன்; நிலங்களையும், சுரங்கங்களையும், மீன் பிடிக்கும் தொழிலையும் சீரமைப்பதிலும் விஸ்தரிப்பதிலும் செலவிட்டால் மேலும் அதிகமான பலன் கிட்டும்; எல்லாவற்றுக்கும் மேலாகத் தங்கத்தையும் வெள்ளியையும் இந்த நாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பணத்தைச் செலவிடுவதே மிகவும் நல்லதாகும். ஏனென்றால் இவை அழியாதவை என்பது மட்டுமல்ல; எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இவை செல்வம் என்று மதிக்கப்படுகின்றன. ஆனால் மற்ற பண்டங்கள் [அவை அழிகின்றவை அல்லது அவற்றின் மதிப்பு நாகரிக மோஸ்தர்களையொட்டி ஏற்படுகிறது; அல்லது அவை அதிக அளவில் கிடைப்பதும் இல்லாது போவதும் தற்செயலானவை] செல்வம் என்றபோதிலும் அவை குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே மதிப்புடையவை (pro hic et nunc).''*

செலாவணி ஓட்டத்திலிருந்து பணத்தைத் திரும்பப் பெற்று சமூக வளர்சிதை மாற்றத்திலிருந்து அதைக் காப்பாற்றுகின்ற ஆசையின் வெளிப்புற நடவடிக்கையைப் பணத்தைப் புதைத்து வைப்பதில் காணலாம். இதன் மூலமாக சமூகச் செல்வமானது அழியாத பாதாளப் பதுக்கலாக மாற்றப்படுகிறது. பண்ட உடைமையாளருக்கும் அதற்கும் முற்றிலும் ரகசியமான தனியான உறவு ஏற்படுகிறது. டில்லியில் ஔரங்கசீப்பின் அரண்மனையில் சிறிது காலம் தங்கியிருந்தவரான டாக்டர் பெர்னியே வியாபாரிகள்—குறிப்பாக, வர்த்தகம், பணம் ஆகிய எல்லாவற்றையும் தங்களிடம் குவித்து வைத்திருந்த முஸ்லிம் அல்லாதவர்கள்—பணத்தைப் பூமியின் ஆழத்தில் ரகசியமாகப் புதைத்து வைக்கிறார்கள் என்று கூறுகிறார்:

''தங்கள் வாழ்நாளில் புதைத்து வைக்கப்படும் பணம் தங்களுடைய மரணத்துக்குப் பிறகு மறு உலகத்தில் தங்களுக்குப் பயன்படும் என்ற நம்பிக்கையில் அவர்கள் கட்டுண்டிருந்தார்கள்.''**

---

* Petty, *Political Arithmetick*, p. 196.

** François Bernier, *Voyage contenant la description des états du Grand Mogol*, Paris, 1830, t. 1, *cf*. pp. 312—314.

பணத்தைப் பதுக்குபவர் கடுமையான முயற்சியோடு இன்ப மறுப்பையும் இணைப்பதால் அவர் தமது உள்ளார்ந்த பண்பினால், மதக்கருத்தின்படி ஒரு புரொடஸ்டன்ட் ஆகிறார்; பரிசுத்தவாதியாகிறார் என்று கூடச் சொல்லலாம்.

''வாங்குவதும் விற்பனையும் அவசியமான நடவடிக்கைகள்; இவற்றைக் கைவிட முடியாது என்பதை மறுக்க இயலாது; குறிப்பாகத் தேவை, கௌரவம் ஆகியவற்றுக்குப் பயன்படுகிற பொருள்களைப் பொறுத்தவரை இவற்றைக் கிறிஸ்தவ சமய ரீதியில் நிச்சயமாகப் பயன்படுத்த முடியும். கால் நடைகள், கம்பளி, தானியம், வெண்ணெய், பால் இன்னும் மற்ற பொருள்களைக் குலத்தலைவர்கள் வாங்கி விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். இவை கடவுளின் நன்கொடையாகும். கடவுள் இவற்றைப் பூமியில் உற்பத்தி செய்து மனிதர்களிடையே பிரித்துத் தருகிறார். ஆனால் காலிகட், இந்தியா முதலிய இடங்களிலிருந்து வருகின்ற சரக்குகள்—எத்தகைய தேவையையும் பூர்த்தி செய்யாமல் அலங்காரத்துக்குப் பயன்படுகிற விலையுயர்ந்த பட்டுத் துணிகள், தங்க ஆபரணங்கள், மசாலைப் பொருள்கள் முதலியவை—மக்களிடமிருந்தும் தேசத்திலிருந்தும் பணத்தை வடித்துக் கொண்டு போகின்றன. நம்மிடம் அரசாங்கமும் அரசர்களும் இருக்கிறார்களென்றால் இத்தகைய வெளிநாட்டு வர்த்தகத்தை அனுமதிக்கக் கூடாது. ஆனால் நான் இதைப் பற்றி எழுதுவதற்கு இப்பொழுது விரும்பவில்லை. ஏனென்றால் கடைசியாக, நம்மிடம் செலவழிக்கப் பணம் இல்லாத நிலை ஏற்படுகிற பொழுது நாம் இதை விட்டுவிட வேண்டியிருக்கும்; ஆபரணங்களையும் விருந்துகளையும் கைவிட வேண்டியிருக்கும். தேவையும் ஏழ்மையும் நம்மை இவ்விதத்தில் நிர்ப்பந்திக்கும் வரை எப்படி எழுதினாலும் பேசினாலும் பயன் ஏற்படாது.''*

---

* Dr. Martin Luther, *Bücher vom Kaufhandel und Wucher*, 1524. இதே பகுதியில் லூதர் பின்வருமாறு எழுதுகிறார்: ''ஜெர்மானியர்கள் தமது தங்கத்தையும் வெள்ளியையும் வெளிநாடுகளுக்குக் கொடுத்து உலகத்தைப் பணக்காரர்களாக்கிவிட்டு நாம் பிச்சைக்காரர்களாக இருக்கும்படி கடவுள் செய்து விட்டார். இங்கிலாந்தின் துணியை ஜெர்மனி எடுத்துக்கொள்ள மறுத்தால் நிச்சயமாக இங்கிலாந்தில் தங்கம் குறைவாகத்தான் இருக்கும். போர்த்துகல் நாட்டின் மசாலைப் பொருள்களை நாம் வாங்காவிட்டால் போர்த்துகல் அரசரிடமும் தங்கம் குறைவாகவே இருக்கும். ஃபிராங்ஃபுர்ட்டில் நடைபெறும் சந்தையில் ஜெர்மானியப்

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூகங்களில் கூட சமூக வளர்சிதை மாற்ற நிகழ்வுகளின் போது கொந்தளிப்பான நேரங்களில் எராளமான பணம் புதைத்து வைக்கப்படு

---

பிரதேசங்களிலிருந்து எத்தகைய தேவையும் காரணமும் இல்லாமல் ஒரே தடவையில் எவ்வளவு பணம் சுரண்டப்படுகிறது என்பதைக் கணக்கிட்டால், ஜெர்மனியில் ஒரு பார்த்திங் காசாவது மிச்சமிருப்பது எப்படி என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கும். ஃபிராங்ஃபுர்ட் சந்தை என்பது இங்கே தோன்றி வளர்கின்ற ஒவ்வொன்றும், அச்சடிக்கப்படுகிற, தயாரிக்கப்படுகிற ஒவ்வொன்றும் நாட்டை விட்டு வெளியேறுகிற தங்கம், வெள்ளிக் கால்வாயாகும். இதை அடைத்துவிட்டால், 'எங்கு பார்த்தாலும் தீர்க்க முடியாத கடன்கள் இருக்கின்றன; பணமே இல்லை; நகரங்களும் நாடு முழுவதும் தாங்க முடியாத வட்டிக் கொடுமையால் தவிக்கின்றதாக' இன்று சொல்லப்படும் புகாரை இனி கேட்க இயலாது போகும். ஆனல் கவலைப்பட வேண்டாம். விவகாரங்கள் இதே பாதையில்தான் நீடிக்கப் போகின்றன. ஜெர்மானியர்களாகிய நாம் ஜெர்மானியர்களாகத்தான் இருக்க வேண்டும். வேறு வழி இல்லை என்ற நிலை ஏற்பட்டால் ஒழிய நாம் திருந்தப் போவதில்லையே.'' [Pp. 4—5.]

மிஸ்ஸெல்தேன் முன்னர் மேற்கோள் காட்டிய புத்தகத்தில் தங்கம், வெள்ளியைக் கிறிஸ்தவ உலகத்தின் எல்லைகளுக்குள் எப்படியாவது வைத்திருக்க வேண்டும் என்கிறார்: ''பணம் குறைந்து விடுவதற்கு அந்நியமான தொலைக் காரணங்களில் துருக்கி, பாரசீகம் மற்றும் கிழக்கிந்தியத் தீவுகளோடு கிறிஸ்தவ உலகம் செய்து வரும் வர்த்தகமும் ஒன்றாகும். இந்த வர்த்தகம் பெரும்பாலும் ரொக்கப் பணத்தில் நடைபெறுகிறது; எனினும் கிறிஸ்தவ உலகத்துக்குள் நடைபெறும் வர்த்தகத்திலிருந்து இது வேறுவிதமாக இருக்கிறது. கிறிஸ்தவ உலகத்துக்குள் நடைபெறும் வர்த்தகமும் ரொக்கப் பணத்திற்குத்தான் நடைபெறுகிறது என்றாலும் கூட, இந்தப் பணம் கிறிஸ்தவ உலகத்தின் எல்லைக்குள் என்றும் இருப்பதோடு தொடர்ந்து செலாவணியாகும். கிறிஸ்தவ உலகத்துக்குள் நடைபெறும் வர்த்தகத்தில் புழங்குகின்ற பணம் செயலையும் எதிர்ச்செயலையும், பெருக்கமும் வடிதலையும் போன்றது. ஏனென்றல் சில சமயங்களில் கிறிஸ்தவ உலகத்திற்குள்ளாகவே ஒரு தேசத்தில் பணம் அதிகமாகவும் ஒரு தேசத்தில் குறைவாகவும் இருக்கிறது; ஒரு தேசத்தில் பணம் தேவைப்படுகிறது; இன்னொரு தேசத்தில் அது ஏராளமாக இருக்கிறது; கிறிஸ்தவ உலகத்துக்குள் அது வருகிறது, போகிறது, சுற்றிச் சுழல்கிறது; ஆனல் இன்னும் அதன் எல்லைகளுக்குள்ளாகத்தான் இருக்கிறது. ஆனல் கிறிஸ்தவ

கிறது. இது சமூக இயக்கத்திலிருந்து சமூக ஒருங்கிணைப்பை—பண்ட உடைமையாளருக்கு இந்த ஒருங்கிணைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவது பண்டமே; அந்தப் பண்டத்தின் போதிய புறவுருவம் பணம்—அதன் சுருக்கமான வடிவத்தில் பாதுகாப்பதற்குச் செய்யப்படும் முயற்சியாகும். பொருள்களின் உடலோடு சேர்த்து அவற்றின் சமூகத் தசைநார்களும் (nervus rerum) புதைக்கப்படுகின்றன; ஏனென்றால் இவை அந்த உடலின் தசைநார்கள்.

பதுக்கப்பட்ட பணம் செலாவணியோடு தொடர்ச்சியாக மோதல் நிலையில் இருக்கவில்லையென்றால், அது இப்பொழுது பயனற்ற உலோகக் குவியலாகவே இருக்கும்; அதன் பண ஆன்மா மறைந்து போயிருக்கும்; செலாவணியின் எரிந்து போன சாம்பல், அதன் எலும்புக்குவியல் (caput mortuum) மட்டும்தான் மிஞ்சும். பணம், அதாவது சுயேச்சையான வாழ்நிலையை மேற்கொண்ட பரிவர்த்தனை மதிப்பு இயல்பாகவே சூக்குமமான செல்வத்தின் புறவுருவமாகும். ஆனால் மறு பக்கத்தில், பணத்தின் கொடுக்கப்பட்ட அளவு எதாக இருந்தாலும் அது அளவு ரீதியாக முடிவுடைய மதிப்பின் அளவாகும். பரிவர்த்தனை மதிப்பை அளவு ரீதியாக வரையறுப்பது அதன் குண ரீதியான சர்வாம்சத்தோடு மோதுகிறது. பதுக்கிவைப்பவர் இந்த வரையறுப்பை ஒரு தடையாகக் கருதுகிறார்; அது உண்மையில் குண ரீதியான தடையாகவே மாறுகிறது; அதாவது, அந்தப் பதுக்கப்பட்ட பணக் குவியல் பொருட்செல்வத்தின் வரையறுக்கப்பட்ட பிரதிநிதித்துவமாக மட்டுமே மாறுகிறது. எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பு என்ற வகையில் பணத்தை ஒரு சமன்பாடாக நேரடியாகக் கூறலாம்; அது ஒரு பக்கத்தில் பணத்தையும் மறு பக்கத்தில் பண்டங்களின் முடிவில்லாத தொடர்வரிசையையும் கொண்டிருக்கும் என்பதை முன்னர் பார்த்தோம். இத்தகைய முடிவில்லாத தொடர்வரிசையில் பரிவர்த்தனை மதிப்பு கைவரப்பெறுதல் எந்த அளவுக்கு நடைபெறும் என்பது—வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பரி

---

உலகத்துக்கு வெளியே மேலே சொல்லப்பட்ட நாடுகளுக்கு வர்த்தகத்தின் மூலமாகப் போகின்ற பணம் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருக்கிறதே தவிர, ஒருபோதும் திரும்புவதேயில்லை.'' [Pp. 19—20.]

வர்த்தனை மதிப்பு என்ற கருத்துக்கு எந்த அளவுக்கு ஒத்து வரும் என்பது—அதனுடைய அளவைப் பொறுத்திருக்கிறது. ஏனென்றால் பரிவர்த்தனை மதிப்பு அதனளவில், ஒரு இயந்திரம் என்ற முறையில் அதன் இயக்கம் அதன் அளவு ரீதியான எல்லைகளை விஸ்தரிப்பதாகத்தான் இருக்க முடியும். பதுக்கி வைக்கப்பட்ட பணக் குவியலின் அளவு ரீதியான எல்லைகளின் ஓர் தொகுதியை அனுமதிக்கும் பொழுது புதிய தடைகள் எழுப்பப்படுகின்றன. இவையும் பின்னர் ஒழிக்கப்பட வேண்டும். தடையாகத் தோன்றுவது பதுக்கி வைக்கப்பட்ட பணக் குவியலின் குறிப்பிட்ட கட்டுப்பாடு அல்ல, ஆனால் எந்தக் கட்டுப்படுத்தலுமே. பதுக்கிவைக்கப்பட்ட பணக் குவியலின் உருவாக்கத்துக்கு உள்ளுறையான கட்டுப்பாடுகள், தனக்குள் எல்லைகள் என்பவை கிடையாது. அது ஒரு முடிவில்லாத நிகழ்வு—அதன் ஒவ்வொரு குறிப்பிட்ட விளைவும் ஒரு புதிய தொடக்கத்துக்குத் தூண்டுகிறது. பதுக்கிவைக்கப்பட்ட பணக் குவியலைப் பாதுகாப்பதன் மூலமே அதிகப்படுத்த முடியும் என்ற போதிலும், மறு பக்கத்தில் அதை அதிகப்படுத்துவதன் மூலமாகத்தான் அதைப் பாதுகாக்க முடியும்.

பணம் என்பது செல்வவேட்கையின் ஒரு பருப்பொருள் அல்ல; அது ஒன்றே பருப்பொருள். இந்த வேட்கை சாராம்சத்தில் தங்கத்தின் மீது கொண்டிருக்கும் பாழாய்ப்போன ஆசையே (auri sacra fames). செல்வவேட்கைக்கும் குறிப்பிட்ட பொருட் செல்வத்தை, அதாவது ஆடைகள், ஆபரணங்கள், கால்நடை முதலிய பயன் மதிப்புகளை அடைய வேண்டுமென்னும் உந்துதலோடு வேறுபடுத்துவது பொதுப்படையான செல்வமே தனிவகையான பொருளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பொழுது அதனால் குறிப்பிட்ட பண்டமாக நீடிக்கிற பொழுது சாத்தியமாகும். எனவே பணம் செல்வத்தின் ஆசையின் பிறப்பிடமாகவும் அதன் பருப்பொருளாகவும் தோன்றுகிறது.* பரிவர்த்தனை மதிப்பு இலக்கு முயற்சி நோக்கமாகி

---

* ''பணத்திலிருந்துதான் முதலில் பேராசை பிறக்கிறது... இது படிப்படியாக ஒருவகையான பைத்தியக்காரத்தனமாக வளர்ச்சியடைகிறது—இனிமேல் அது பேராசை மட்டுமல்ல, தங்கத்துக்கான தீவிரமான பசியாகும்.'' (Plinius, *Historia naturalis*, L. 33, C. 3.)

விடுவதால் அதனுல் பரிவர்த்தனை மதிப்பின் விஸ்தரிப்பும் நோக்கமாகி விடுவதே உண்மையில் அடிநிலையான காரண மாகும். பேராசையானது பதுக்கிவைக்கப்பட்ட பணக் குவியலைப் பற்றிக் கொண்டு பணம் செலாவணியின் ஊடகமாக மாற அனுமதிப்பதில்லை. ஆனுல் தங்கத்தின் மீதுள்ள பேராசை பதுக்கல் பணத்தின் ஆன்மாவைப் பாதுகாத்து அதைச் செலாவணியோடு தொடர்ச்சியான மோதல் நிலையில் வைத்திருக்கிறது.

பணத்தைப் பதுக்கும் நடவடிக்கை, ஒரு பக்கத்தில், தொடர்ச்சியாகத் திரும்பவும் செய்யப்படுகிற விற்பனைகளின் மூலம் செலாவணியிலிருந்து பணத்தைத் திரும்பப் பெறுவது; மறு பக்கத்தில், சாதாரணமாக அடுக்கிக் கொண்டு போதல், குவிப்பு எனலாம். சாதாரண செலாவணித் துறையில் மட்டுமே அதிலும் குறிப்பாகப் பதுக்கல் பணத்தின் வடிவத்தில் செல்வக் குவிப்பு நடைபெறுகிறது; செல்வக் குவிப்பின் மற்ற வடிவங்கள் என்று சொல்லப்படுபவை பணத்தின் சாதாரணக் குவிப்பின் ஒப்புமை காரணமாகக் குவிப்பு என்று தவருகக் கருதப்படுவதைப் பிறகு கவனிப்போம். மற்ற எல்லாப் பண்டங்களுமே ஒன்று பயன் மதிப்புகளாகக் குவித்து வைக்கப்படுகின்றன. இந்த வகையில் அவை குவித்து வைக்கப்படும் முறையை அவற்றின் பயன் மதிப்புகளின் தனிவகையான அம்சங்கள் நிர்ணயிக்கின்றன. உதாரணமாக, தானியத்தைக் குவித்து வைக்க விசேஷமான சாதனங்கள் தேவைப்படுகின்றன; ஆடுகளைச் சேகரிக்கும் நபர் ஆட்டிடையராக வேண்டியிருக்கிறது; அடிமைகளையும் நிலத்தையும் குவித்துக் கொள்வதென்ருல் ஆதிக்கம், அடிமை நிலை உறவுகளை அவசியமாக்குகிறது இன்னும் பல. அடுக்கிக் கொண்டு போதல் என்னும் சாதாரண நடவடிக்கையைப் போலன்றி செல்வத்தின் குறிப்பிட்ட வகைகளின் கையிருப்புக்களை உருவாக்குவதற்கு விசேஷமான முறைகளைக் கையாள்வது அவசியமாகிறது; இவை தனி நபரிடம் விசேஷமான குணுதிசயங்களையும் ஏற்படுத்துகின்றன. அல்லது பண்டங்களின் வடிவத்தில் செல்வமானது பயன் மதிப்புகளாகக் குவித்துவைக்கப்படலாம். இந்த வகைப்படிக் குவித்தல் என்பது ஒரு வர்த்தக நடவடிக்கையாக அல்லது தனிவகையான பொருளாதார ஏற்பாடாக இருக்கிறது. இதில்

சம்பந்தப்பட்டிருக்கும் ஒருவர் தானிய வியாபாரியாக, கால் நடை வியாபாரியாக இதரவையாக இருக்கிருர். தங்கமும் வெள்ளியும் அவற்றைக் குவித்து வைக்கின்ற நபரினுடைய நடவடிக்கையினுல் பணமாகிவிடவில்லை; அவருடைய உதவி இல்லாமல் நடைபெறுகின்ற செலாவணி நிகழ்வின் கெட்டிப்படுதல்கள் என்பதால் பணமாகின்றன. அவர் வேறு ஒன்றும் செய்யாமல் அவற்றைத் தனியே ஒரு தொகுதி மீது மற்ருென்ருக அடுக்கிஞல் போதும். இது முற்றிலும் அறிவீனமான நடவடிக்கை என்பதால் வேறு எந்தப் பண்டத்துக்காவது இதைப் பயன்படுத்திஞல் அதன் மதிப்புக் குறைவில் முடிவடையக் கூடும்.*

---

* எனவே ஹோரேஸ் செல்வத்தைப் பதுக்கி வைப்பதிலிருக்கிற தத்துவத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதபடி எழுதியிருக்கிருர் (*Satir*. L. 2, Satir. 3): "ஒரு மனிதர் இசைக் கருவிகளை வாங்கி உடனே அவற்றை அடுக்கி வைத்துக் கொள்கிருர்; அவருக்கு இசையைப் பற்றியோ இசைத் தெய்வத்தைப் பற்றியோ அக்கறையில்லை. அது மாதிரியே செருப்புத் தொழிலாளியாக இல்லாத போதிலும் பூட்சுகள், பூட்சுகள் செய்வதற்குரிய உருவக் கட்டைகள், கத்திகள் முதலியவற்றை வாங்கிச் சேர்க்கிருர்; அல்லது வியாபாரியாக இல்லாத போதிலும் கப்பல்களின் பாய் மரங்களை வாங்கிச் சேர்க்கிருர். எல்லோரும் இவரைப் பைத்தியக்காரன் என்று கூறுவார்கள். அப்படிச் சொல்லுவதும் சரியானதே. அப்படியாஞல் வெள்ளியையும் தங்கத்தையும்—அதை என்ன செய்வதென்று தெரியாமல்—பதுக்கி வைக்கிற மனிதன், அதைத் தூய்மையானதாகக் கருதுவதால் தொடுவதற்கும் அஞ்சுகிற மனிதன் மேற்கூறிய நபரிடமிருந்து வேறுபடுவது எப்படி?" [Horace, *Satires*, *Epistles*, *Ars Poetica*, London, 1942, p. 163.]

இந்தப் பொருளைப் பற்றி திரு. சீனியர் அதிகமாக அறிந்திருக்கிருர்:

"எல்லோரும் எக்காலத்திலும் ஆசைப்படுகிற ஒரே பொருள் பணம் மட்டுமே என்று தோன்றுகிறது. பணம் சூக்குமமான செல்வம் என்பதே இதற்குக் காரணம். அதை வைத்திருப்பவர் தம்முடைய தேவைகளை—அவை எப்படிப்பட்டவையாக இருந்தாலும்—நினைத்த போது தீர்த்துக் கொள்ள முடியும்." *Principes fondamentaux de l'économie politique*, traduit par le Comte Jean Arrivabene, Paris, 1836, p. 221. ஷ்டோர்ஹ் அப்படிப்பட்டவர்தான்: "செல்வத்தின் எல்லா வடிவங்களையும் பணம் பிரதிநிதித்துவப்படுத்துவதால் பூமியிலிருக்கும் எல்லா வகையான செல்வங்களையும் ஒருவர்

பதுக்கல் செய்பவர் பரிவர்த்தனை மதிப்பு என்னும் உலோக ஸ்தூபியின் மீது உட்கார்ந்திருக்கும் புனிதத் துறவி; அதற்காகத் தன்னை பலியிடத் தயாராக இருப்பவர். அவர் செல்வத்தின் சமூக வடிவத்தின் மீது மட்டுமே அக்கறை கொண்டிருப்பவர்; எனவே சமூகத்திலிருந்தே அதை மறைத்து விடுகிறார். பண்டங்களை எப்பொழுதும் செலாவணியாகக் கூடிய வடிவத்தில் அவர் விரும்புகிறார்; எனவே அவற்றைச் செலாவணியிலிருந்து திரும்பப் பெற்று விடுகிறார். அவர் பரிவர்த்தனை மதிப்பைப் போற்றுகிறார்; எனவே பரிவர்த்தனை செய்வதைத் தவிர்க்கிறார். செல்வத்தின் நீர்ம வடிவம்—அதனுடைய உறைந்த வடிவமான—வாழ்க்கை அமுதம், தத்துவஞானியின் மணிக்கல் ஆகியவை ஒரு ரஸவாதியின் பேய்க்கனவைப் போல ஒழுங்கற்ற முறையில் கலந்திருக்கின்றன. ஆனந்தமடைய வேண்டும் என அவருக்குள்ள கற்பனையான, எல்லையற்ற ஆசை அவர் எல்லாவிதமான ஆனந்தத்தையும் துறக்கும்படிச் செய்கிறது. அவர் எல்லாவிதமான சமூகத் தேவைகளையும் பூர்த்தி செய்ய விரும்புகிறார்; எனவே மிகவும் அவசியமான பொருளாயதத் தேவைகளையும் பூர்த்தி செய்வதில்லை. பதுக்கல்காரர் செல்வத்தின் உலோகச் சடப் பொருளைப் பிடித்துக் கொண்டு தொங்குகிற பொழுது அவர் அதைப் பொருந்தாக் கற்பனையாக மாற்றி விடுகிறார். ஆனால் பணத்துக்காகப் பணத்தைத் திரட்டுவதென்பது உண்மையில் உற்பத்தி என்பதற்காக நடைபெற்ற உற்பத்தி என்ற காட்டுமிராண்டி வடிவமே; அதாவது, சமூக உழைப்பின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி வழக்கமான தேவைகளின் அளவுக்கும் அதிகமாக ஏற்படுவதாகும். பண்டங்களின் உற்பத்தி குறைவான வளர்ச்சியை அடைந்திருக்கிறது. பரிவர்த்தனை மதிப்பு பணம் என்ற சுயேச்சையான வாழ்நிலையை அடைகிற பொழுது பெறும் முதல் வடிவமான பதுக்கல் அதன் அதிக முக்கியமான நிலையாகும்; பண்டங்களின் உற்பத்தி என்பது வளர்ச்சியின் கீழ்நிலையாகும். எனவே பழமையான நாடுகளிலும்—ஆசியாவில் இன்றளவும்—பரிவர்த்தனை மதிப்பு எல்லா உற்

பெற வேண்டுமென்றால் அவர் பணத்தைத் திரட்டினால் போதும்'' (*op. cit.*, t. 2, p. 135).

பத்தி உறவுகளிலும் இது வரை ஊடுருவாத நம் காலத்திய விவசாய நாடுகளிலும் அது ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. எனினும் உலோக நாணயத்தைப் பொறுத்தவரை பதுக்கல் நிறைவேற்றுகின்ற தனிவகையான பொருளாதாரச் செயலை ஆராய்வதற்கு முன்பாக, பதுக்கலின் மற்றொரு வடிவத்தை நாம் எடுத்துக் கொள்வோம்.

தங்கத்திலும் வெள்ளியிலும் செய்யப்பட்ட பொருள்களை—அவற்றின் அழகியல் அமைப்பு எப்படியிருந்தாலும்—பணமாக மாற்ற முடியும். ஏனென்றால் அவை செய்யப்பட்டிருக்கும் பொருள் பணத்தின் பொருளாகும். தங்க நாணயங்களையும் தங்கப் பாளங்களையும் இப்படிப்பட்ட பொருள்களாக மாற்றுவது போன்றதே இதுவும். தங்கமும் வெள்ளியும் சூக்குமமான செல்வத்தின் பொருள் என்பதால் அவற்றை ஸ்தூலமான பயன் மதிப்புகளாக உபயோகிப்பது செல்வத்தைக் குறிப்பிடக் கூடிய வகையில் காட்டுவதாகும். பண்ட உடைமையாளர் உற்பத்தியின் சில கட்டங்களில் தன்னுடைய பொக்கிஷங்களை ஒளித்து வைத்துக் கொண்ட போதிலும்தான் ஒரு பணக்காரர் (rico hombre) என்பதை மற்ற பண்ட உடைமையாளர்களுக்குக் காட்ட விரும்புகிறார். ஆபத்தில்லாத சந்தர்ப்பங்களில் இதைச் செய்கிறார். அவர் தன் உடல் முழுவதும் தங்க ஆபரணங்களை அணிந்துகொள்வதோடு தன் வீட்டையும் தங்கத்தால் இழைக்கிறார்.* ஆசியாவில், குறிப்பாக இந்தியாவில் பதுக்கல் பணத்தின் உருவாக்கம் உற்பத்தியின் மொத்த இயந்திர அமைப்பில் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இருப்பதைப் போல கீழான பங்கு வகிக்காத பொழுது—செல்வத்தின் இந்த வடிவம் இறுதி இலட்சியமாக இன்னும் கருதப்படுகிற

---

* தனிப்பட்ட பண்டங்களின் உடைமையாளரின் உள் மனம் (inner man) அவர் நாகரிகமடைந்து முதலாளியான பிறகும் கூட சிறிதும் மாறவில்லை என்பதை நிரூபிக்க ஓர் உதாரணத்தைக் காண்போம். ஒரு சர்வதேச வங்கியின் லண்டன் பிரதிநிதி 1,00,000 பவுன் நோட்டைக் கண்ணாடி போட்டு வீட்டில் தொங்க விட்டிருக்கிறார். அவருடைய குடும்பத்தின் மரபுரிமைச் சின்னமாக அது காட்சி தருகிறது. இங்கே அந்த நோட்டு எவ்வளவு அகம்பாவத்தோடும் ஏளனத்தோடும் செலாவணியைக் கீழ் நோக்கிப் பார்க்கிறது என்பது இங்கே முக்கியமாகும்.

பொழுது—தங்கம், வெள்ளியில் செய்யப்பட்ட நகைகள் உண்மையில் அழகியல் வடிவத்திலிருக்கின்ற பதுக்கல் பணக் குவியல் மட்டுமே. மத்திய கால இங்கிலாந்தின் சட்டம் தங்கம், வெள்ளிப் பொருள்களை புதையல் பணத்தின் ஒரு வடிவமாகத்தான் கருதியது; ஏனென்றால் அவற்றில் பயன் படுத்தப்பட்டிருக்கிற திருந்தா நிலை உழைப்பு அவற்றின் மதிப்பைச் சிறிதளவு கூட உயர்த்தவில்லை. அவற்றை மீண்டும் செலாவணியில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டது; எனவே நாணயத்தை மாதிரியே அவை செய்யப்பட்டிருக் கும் நயமான உலோகங்களையும் அதே தனியான வகையில் குறிப்பிட்டார்கள். செல்வம் அதிகரிக்கும் பொழுது வசதிப் பொருள்கள் என்ற வடிவத்தில் தங்கமும் வெள்ளியும் அதிக மாக உபயோகப்படுத்தப்படும் என்பது சாதாரண உண்மை யானபடியால், பண்டைக் காலத்திய சிந்தனையாளர்கள்* இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார்கள். ஆனால் நவீன பொருளியலாளர்கள் தங்கம், வெள்ளிப் பொருள் களின் உபயோகம் செல்வத்தின் பெருக்கத்துக்குத் தகுந் தாற்போல அதிகரிக்கவில்லை; விலையுயர்ந்த உலோகங்க ளின் மதிப்பின் வீழ்ச்சிக்குத் தகுந்தவாறு அதிகரிக்கிறது என்ற தவறான கருத்தைக் கூறினார்கள். கலிபோர்னியாவி லிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் கிடைத்த தங்கத்தின் உபயோகம் பற்றிய அவர்களுடைய விளக்கம் மற்றபடி சரியானதாக இருந்த போதிலும் ஒரு தவறு அதில் எப் பொழுதும் இருக்கிறது. ஏனென்றால் தங்கத்தின் மதிப்பில் ஏற்பட்டிருக்கிற வீழ்ச்சி அதை மூலப் பொருளாக அதிகமான அளவில் உபயோகப்படுத்துவதை நியாயப்படுத்தவில்லை என்பது அவர்கள் கருத்தாகும். அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கும் ஸ்பெயினுக்கும் ஏற்பட்ட போரினாலும்,[25] புரட்சிகளினால் சுரங்கத் தொழில் தடைப்பட்டதனாலும் 1810—1830ம் வருடங்களுக்கிடையில் விலையுயர்ந்த உலோ கங்களின் சராசரி வருடாந்தர உற்பத்தி பாதியளவுக்கும் அதிகமாகக் குறைந்தது. ஐரோப்பாவில் செலாவணியி லிருந்த நாணயம் 1809ம் வருடத்தோடு ஒப்பிடுகிற பொழுது 1829ம் வருடத்தில் சுமாராக ஆறில் ஒரு பங்காகக் குறைந்

* கிசெனபோன் எழுதிய பகுதி பின்னர் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதைப் படிக்கவும்.

தது. இப்படி உற்பத்தி குறைந்து உற்பத்திச் செலவுகள் (அவை மாறியிருக்குமானல்) அதிகரித்த போதிலும், இங்கிலாந்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும், பாரிஸ் உடன்படிக்கைக்குப் பிறகு ஐரோப்பாவிலும் வசதிப் பொருள்கள் என்ற முறையில் விலையுயர்ந்த உலோகங்களின் உபயோகம் மிகவும் அதிகமான அளவுக்கு வேகமாக அதிகரித்தது. பொதுவாக செல்வத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப அவற்றின் உபயோகமும் அதிகரித்தது.* தங்க, வெள்ளி நாணயங்களை வசதிப் பொருள்களாக உருமாற்றுவது சமாதான காலங்களில் மிகவும் அதிகமாக நடைபெறுகிறது; அவை கட்டிகளாகவும் நாணயங்களாகவும் மறு உருமாற்றம் அடைவது கொந்தளிப்பான காலங்களில் மட்டுமே அதிகமாக நடைபெறுகிறது என்பதை ஒரு பொது விதி எனக் கூறலாம்.** தங்கம், வெள்ளி இருப்பில், பணமாக உபயோகிக்கப்படும் அளவோடு ஒப்பிடுகிற பொழுது எவ்வளவு கணிசமான விகிதம் வசதிப் பொருளாக இருக்கிறது என்பதை ஜேகப் என்பவர் தருகிற புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன: இங்கிலாந்தில் அது 2 : 1 என்ற விகிதத்தில் இருந்தது; ஐரோப்பா முழுமையிலும் அமெரிக்காவிலும் நாணயங்களைக் காட்டிலும் விலையுயர்ந்த உலோகங்கள் 25 சதவிகிதம் அதிகமாக வசதிப் பொருள்களாக உபயோகிக்கப்பட்டன.

பணச் செலாவணி என்பது பண்டங்களின் உருமாற்றத்தின் வெளியீடு அல்லது சமூக வளர்சிதை மாற்றத்தின் போது ஏற்படுகிற உருமாற்றம் மட்டுமே என்பதை நாம் பார்த்தோம். ஆகவே செலாவணியிலிருக்கிற தங்கத்தின் மொத்த அளவு செலாவணியிலிருக்கிற பண்டங்களின் மாறுகின்ற ஆகக் கூடிய மொத்த விலைக்குத் தகுந்தவாறு நிரந்தரமாக அதிகரித்துக் கொண்டிருக்கும் அல்லது குறைந்து கொண்டிருக்கும்; அதாவது, ஒரு பக்கத்தில், ஒரே சமயத்தில் நடைபெறு

---

* Jacob, *op. cit.*, Vol. 2, ch. 25, 26.

** "பெருங்கிளர்ச்சிகள் தோன்றிப் பாதுகாப்பு இல்லாதிருக்கும் பொழுது, குறிப்பாக உள்நாட்டுக் கொந்தளிப்புகளும் படையெடுப்புகளும் நடைபெறும் காலங்களில் தங்கம், வெள்ளிப் பொருள்கள் வேகமாகப் பணமாக மாற்றப்படுகின்றன. அமைதியும் சுபிட்சமும் உள்ள காலங்களில் பணம் பொருள்களாகவும் ஆபரணங்களாகவும் மாற்றப்படுகிறது" (*op. cit.*, Vol. 2, p. 357).

கின்ற உருமாற்றத்தின் அளவுக்கு ஏற்பவும், மறு பக்கத்தில், அவற்றின் உருமாற்றத்தின் அப்போதைய வேக அளவுக்கு ஏற்பவும் நடைபெறுகிறது. ஒரு குறிப்பிட்ட நாட்டில் இருக்கும் மொத்தப் பணத்தோடு ஒப்பிடும் பொழுது செலாவணியிலிருக்கின்ற பணத்தின் விகிதம் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். பணக் குவியல்கள் பதுக்கி வைக்கப்படுவதனால் இந்த நிபந்தனை பூர்த்தி செய்யப்படுகிறது. விலைகள் வீழ்ச்சியடைந்தால் அல்லது செலாவணியின் வேக அளவு அதிகரித்தால், செலாவணி உலகத்திலிருந்து வெளியே தள்ளப்படுகிற பணம் பதுக்கல்காரர்களின் பணத் தேக்கங்களில் வாங்கிக் கொள்ளப்படுகிறது. விலைகள் அதிகரித்தால் அல்லது செலாவணியின் வேக அளவு குறைந்தால், பதுக்கல் பணம் திறக்கப்பட்டு அவற்றில் ஒரு பகுதி செலாவணி ஓட்டத்தினுள் சேர்ந்து விடுகிறது. செலாவணியிலிருக்கிற பணம் பதுக்கல் குவியலாகக் கெட்டிப்படுவதும் இந்தப் பதுக்கல் பணம் செலாவணிக்குள்ளாகப் பாய்வதும் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கிற ஊசலாட்டமான இயக்கமாகும். இவற்றில் எந்தப் போக்கு மேலோங்குகிறது என்பது பண்டங்களின் செலாவணியின் மாற்றங்களால் மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே பதுக்கல் பணக் குவியல் செலாவணியாகும் பணத்தைக் கொடுப்பதற்கு அல்லது திரும்பப் பெறுவதற்குரிய கால்வாய்களாக இருக்கின்றன. அதனால் நாணயமாகச் செலாவணியாகின்ற பணத்தின் அளவு எப்பொழுதுமே செலாவணியின் உடனடித் தேவைகளுக்குக் கணக்காகப் போதுமானதாக இருக்கிறது. செலாவணியின் மொத்த அளவு திடீரென்று பெருக்கமடைந்து, விற்பனை, கொள்வினையின் நெகிழ்ச்சியான ஒருமை மேலோங்கி, கைவரப் பெற வேண்டிய விலைகளின் மொத்த அளவு பணச் செலாவணியின் வேக அளவைக் காட்டிலும் அதிக வேகத்தில் வளர்ச்சி அடையுமானால் பதுக்கல் பணக் குவியல் பார்வைக்குத் தெரியும்படியாகவே குறைய ஆரம்பிக்கும்; இந்த மொத்த இயக்கத்திலும் வழக்கத்துக்கு மாறான தேக்கம் ஏற்படும் பொழுது, அதாவது கொள்வினையிலிருந்து விற்பனை பிரிக்கப்படுவது மேலோங்கும் பொழுது, மிகவும் குறிப்பிடத்தக்க அளவுக்குச் செலாவணி ஊடகம் பணமாகக் கெட்டிப்படுகிறது; பதுக்கல்காரர்களின் பணத் தேக்கங்கள் அவற்றின் சராசரி

மட்டத்துக்கும் மிகவும் அதிகமாகவே நிறைந்து விடுகின்றன. உலோக நாணயங்களை மட்டும் கொண்டிருக்கும் நாடுகளில் அல்லது உற்பத்தி வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்ற நாடுகளில் பதுக்கப்பட்ட பணக் குவியல்கள் மிகவும் சிறு கூறுகளாகப் பிரிந்து நாடு முழுவதும் சிதறிக் கிடக்கின்றன. ஆனால் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் அவை வங்கிகளின் தேக்கங்களில் திரண்டிருக்கின்றன. பதுக்கி வைக்கப்பட்ட பணக் குவியல்களை எப்பொழுதும் செலாவணியிலிருக்கின்ற பணத்தின் மொத்த அளவின் முக்கியப் பகுதியான நாணயங்களின் சேமிப்பு நிதியோடு குழப்பக் கூடாது. பதுக்கி வைக்கப்பட்ட பணக் குவியலுக்கும் செலாவணி ஊடகத்துக்கும் உள்ள சுறுசுறுப்பான உறவு பணத்தின் மொத்த அளவு குறைவதை அல்லது அதிகரிப்பதை முற்கோளாகக் கொண்டிருக்கிறது. நாம் பார்த்தது போல, தங்கம், வெள்ளிப் பொருள்கள் விலையுயர்ந்த உலோகங்களைத் திரும்பப் பெறுவதற்கான கால்வாய்களாகவும் அவற்றின் அளிப்புக்கான மறைவான பிறப்பிடங்களாகவும் இருக்கின்றன. சாதாரண சூழ்நிலைமைகளில், உலோக நாணயத்தின் பொருளாதாரத்தில் முதலாவது செயல் மட்டுமே முக்கியமான பங்கு வகிக்கிறது.*

---

* கிசெனபோன் பணத்தின் இரு தனிவகையான, வெவ்வேறு அம்சங்களை—பணம், பதுக்கி வைக்கப்பட்ட பணக் குவியல் என்ற அம்சங்களை—பின்வரும் பகுதியில் விவாதிக்கிறார்: ''எனக்குத் தெரிந்த தொழில்கள் எல்லாவற்றிலும் இது ஒன்றில் மட்டுமே அது மேலும் வளர்ச்சி அடைவது எத்தகைய பொறுமையையும் ஏற்படுத்துவதில்லை... மூலப் பொருளின் அளவை எவ்வளவு அதிகமாகக் கண்டுபிடிக்கிறார்களோ அதிலிருந்து எவ்வளவு அதிகமாக வெள்ளியைப் பிரித்தெடுக்கிறார்களோ, அவ்வளவு அதிகமான எண்ணிக்கை உடையவர்கள் இந்தத் தொழிலில் உழைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.... வீட்டுக்குப் போதுமான மரச்சாமான்கள் இருக்கும் பொழுது அவற்றை மேலும் அதிகமாக வாங்குவதற்கு யாரும் கனவுகூடக் காண்பது கிடையாது; ஆனால் வெள்ளியைப் பொறுத்தவரை, 'போதும' என்று சொல்ல நிர்ப்பந்திக்கப்படுகிற அளவுக்கு அதிகமான வெள்ளியை யாரும் இது வரை வைத்திருந்ததில்லை. இதற்கு மாறாக, யாரிடமாவது எப்பொழுதாவது அளவுக்கு மீறிய வகையில் இது இருக்குமானால் தரையிலே குழியை வெட்டி அதைப்

## ஆ. பண வழங்கீட்டின் சாதனம்

இது வரை செலாவணி ஊடகத்திலிருந்து வேறுபட்டிருக்கிற இரண்டு பண வடிவங்களை—இயங்காத நிலையிலிருக்கும் நாணயம், பதுக்கல் பணக் குவியல் என்பவைகளை—ஆராய்ந்தோம். முதல் வடிவம்—நாணயங்கள் தற்காலிகமாகப் பணமாக மாற்றப்பட்டிருப்பது—செலாவணியின் குறிப்பிட்ட துறைக்குள் C—M—C என்பதன் இரண்டாவது இனம், அதாவது கொள்வினையாகிய M—C அடுத்தடுத்து நடைபெறுகிற தொடர் கொள்வினைகளாகப் பிரிய வேண்டும் என்ற உண்மையைப் பிரதிபலிக்கிறது. எனினும் பதுக்கல் பணம் என்பது C—M என்ற நடவடிக்கை M—C என்று முன்னேறிச் செல்லாமல் பிரிந்து நிற்பதனால் எளிதாக ஏற்படுகிறது; அல்லது அது பண்டங்களின் முதல் உருமாற்றமாகிய பணத்தின் சுதந்திரமான வளர்ச்சி மட்டுமே; அல்லது எப்பொழு

---

பதுக்கி வைப்பதில், அதை அநுபவிக்கும் பொழுது ஏற்படுகிற ஆனந்தத்தை அவர் பெறுகிறார்.... ஒரு நாடு சுபிட்சமாக இருக்கும் பொழுது வெள்ளியைத் தவிர வேறு எந்தப் பொருளையும் மக்கள் அதிகமாக விரும்புவது கிடையாது: அழகான கவசங்கள், நல்ல குதிரைகள், வீடுகள் இன்னும் பலவகையான பரிவாரப் பொருள்களை வாங்குவதற்கு ஆண்களுக்குப் பணம் தேவைப்படுகிறது; விலையுயர்ந்த உடைகளையும் தங்க ஆபரணங்களையும் வாங்குவதற்குப் பெண்களுக்குப் பணம் தேவைப்படுகிறது. அல்லது தானியவகைகளும் பழங்களும் விளையாத வறட்சிக் காலங்களில் அல்லது யுத்தங்களினால் அரசாட்சிகள் நலிந்து போயிருக்கும்பொழுது தேவைப் பொருள்களை வாங்குவதற்கும் இராணுவ உதவிகளைப் பெறுவதற்கும் (பூமி வறண்டு போய் உற்பத்தி இல்லாதிருப்பதால்) நாணயம் மிக அவசியமாகத் தேவைப்படுகிறது.'' (Xenophon, *De Vectigalibus*, C. 4.) அரிஸ்டாட்டில் தமது அரசியல் என்ற நூலின் முதல் புத்தகத்தின் ஒன்பதாம் அத்தியாயத்தில் C—M—C, M—C—M என்ற செலாவணியின் இரண்டு சுற்று வளையங்களையும்—அவர் இவற்றை குறிக்க ''பொருளாதாரம்'', ''செல்வ இயல்'' ("Chrematistics") என்ற பெயர்களைப் பயன்படுத்துகிறார்—அவற்றின் வேறுபாடுகளையும் விளக்குகிறார். கிரேக்க சோக நாடகாசிரியர்கள், குறிப்பாக யூரிபிடிஸ் இந்த இரண்டு வடிவங்களையும் διχη (நியாயம்), χερδος (இலாபம்) என்ற பெயர்களில் ஒன்றோடொன்றை வேறுபடுத்திக் காட்டுகிறார்கள்.

தும் பண்டங்கள் விற்பனையாகும் வடிவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற செலாவணி ஊடகத்திலிருந்து எல்லாப் பண்டங்களின் அந்நியப்படுத்தப்பட்ட வாழ்க்கையின் வடிவமாக இருக்கலாம். இருப்பில் வைக்கப்பட்டிருக்கிற நாணயங்களும் பதுக்கல் பணமும் செலாவணிச் சாதனமாக இராதவை என்ற முறையில்தான் பணமாக இருக்கின்றன. அவை செலாவணி ஆகாததால் மட்டுமே அவை செலாவணிச் சாதனமாக இராதவையாக இருக்கின்றன. நாம் இப்பொழுது ஆராய்கின்ற பணத்தின் தனியான வடிவம் செலாவணி ஆகிறது அல்லது செலாவணிக்குள் நுழைகிறது; ஆனால் செலாவணி ஊடகமாகச் செயல்படுவதில்லை. பணம் செலாவணி ஊடகம் என்ற முறையில் எப்போதுமே கொள்வினைச் சாதனமாக இருந்திருக்கிறது; ஆனால் இப்பொழுது அந்தத் தகுதியின்படிச் செயல் புரியவில்லை.

பணம் பதுக்கி வைக்கப்படுவதன் காரணமாகச் சூக்குமமான சமூகச் செல்வத்தின் புறவடிவமாகவும் பொருளாயதச் செல்வத்தின் பொருண்மையான பிரதிநிதியாகவும் பணத்தின் இந்த அம்சம் செலாவணி நிகழ்வுப் போக்குக்குள்ளாக தனிவகையான செயல்களை நிறைவேற்றுகிறது. பணம் சாதாரணமான வகையில் செலாவணி ஊடகமாகவும் அதன்படி கொள்வினை ஊடகமாகவும் செலாவணியாகிற பொழுது, பண்டமும் பணமும் ஒரே சமயத்தில் ஒன்றையொன்று எதிரிடுவதை முற்கோளாகக் கொண்டிருக்கிறது; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒரே மதிப்பு இரண்டு தடவைகளில்—ஒரு முனையில் விற்பனையாளரின் கைகளில் பண்டமாகவும் மறு முனையில் கொள்வினையாளர் கைகளில் பணமாகவும்—கிடைக்கிறது. இரு சமமதிப்புகள் ஒரே சமயத்தில் எதிர் முனைகளில் இருப்பதும்—அவை ஒரே நேரத்தில் இடங்களை மாற்றிக் கொள்வது அல்லது பரஸ்பரம் அந்நியமாவதும்—விற்பனையாளரும் கொள்வினையாளரும் உண்மையிலேயே இருக்கின்ற பண்டங்களின் உடைமையாளர்கள் என்ற வகையில் மட்டுமே ஒருவரோடு ஒருவர் உறவுகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை முற்கோளாகக் கொண்டிருக்கிறது. ஆனால் பணத்தின் பல்வேறு தனியான வகைகள் பரிணமிக்கின்றதாகிய பண்டங்களின் உருமாற்றம் பண்ட உடைமையாளர்களையும் சேர்த்து மாற்றி விடுகிறது;

அவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஈடுபடுகின்ற சமூகப் பாத்திரத்தையும் மாற்றி விடுகிறது. பண்டங்களின் உருமாற்றத்தின் போது பண்டம் எத்தனை தடவை மாற்றத்துக்கு உட்படுகிறதோ அல்லது பணம் என்ற வகையில் புதிய வடிவத்தில் தோன்றுகிறதோ அவ்வளவு தடவை பண்டங்களை வைத்திருப்பவரும் மாற்றத்துக்கு உள்ளாகிறார். பண்ட உடைமையாளர்கள் ஆரம்பத்தில் சாதாரண பண்ட உடைமையாளர்கள் என்பதாக ஒருவரையொருவர் சந்தித்தார்கள்; பிறகு அவர்களில் ஒருவர் விற்பனையாளராக மாறினார்—அடுத்தவர் கொள்வினையாளராக மாறினார்; பிறகு ஒவ்வொருவரும் மாறிமாறி கொள்வினையாளராகவும் விற்பனையாளராகவும் ஆனார்கள்; பிறகு அவர்கள் பதுக்கல்காரர்களாகி கடைசியில் பணக்காரர்கள் ஆனார்கள். பண்ட உடைமையாளர்கள் பரிவர்த்தனை நிகழ்விலிருந்து வெளியே வருகிற பொழுது அதில் நுழைகிற பொழுது இருந்ததைக் காட்டிலும் வேறுவிதமானவர்களாக மாறி விடுகிறார்கள். பரிவர்த்தனை நிகழ்வின் போது பணம் அடைகின்ற வெவ்வேறு வடிவங்கள் என்பவை உண்மையில் பண்டங்களின் மாற்றத்தின் நிலையான உருவங்களே. இந்த மாற்றம் என்பது பண்ட உடைமையாளர்கள் தங்களுடைய பரிவர்த்தனையை நடத்துகின்ற சமூக உறவுகள் மாறிக் கொண்டிருப்பதின் யதார்த்தமான வெளியீடு மட்டுமாகும். செலாவணி நிகழ்வின் போது இடைத் தொடர்பில் புதிய உறவுகள் தோன்றுகின்றன; இப்படி மாறிய உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற பண்ட உடைமையாளர்கள் புதிய பொருளாதாரத் தன்மைகளை அடைகிறார்கள். உள்நாட்டுச் செலாவணித் துறைக்குள் நடைபெறுவது போலவே பணம் கற்பனையாக மாறி விடுகிறது; தங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற சாதாரணமான காகிதத் துண்டு பணமாகச் செயல்பட முடிகிறது. எனவே பணத்தின் பிரதிநிதியாகவோ அல்லது பண்டங்களின் பிரதிநிதியாகவோ முன்னால் வருகிற வாங்குபவர் அல்லது விற்பனையாளர், அதாவது எதிர்காலப் பணத்தை அல்லது எதிர்காலப் பண்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற ஒருவர் உண்மையான கொள்வினையாளராக அல்லது விற்பனையாளராக இயங்குவதற்கு அதே நிகழ்வு அனுமதிக்கிறது.

தங்கம் பணம் என்ற வகையில் அடைந்திருக்கிற தனி யான வடிவங்கள் அனைத்தும் பண்டங்களின் உருமாற்றத்தில் மறைவாக இருக்கின்ற அம்சங்களின் வெளிப்பாடுகள்தான்; ஆனால் சாதாரண பணச் செலாவணியின் போது, அதாவது பணம் நாணயமாகவும் C—M—C என்ற சுற்றுவளையத்தின் சுறு சுறுப்பான ஒருமையாகவும் தோன்றும் பொழுது இந்த அம் சங்கள் தனியான வடிவத்தை அடையவில்லை; அல்லது அவை உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டவையாகத் தோன்றின. இதற்கு உதாரணமாக பண்டங்களின் உருமாற்றத்தின் போது ஏற்படுகிற இடைநிறுத்தத்தைக் குறிப்பிடலாம். C—M என்ற நடவடிக்கையின் போது பண்டம் உண்மையான பயன் மதிப்பும் பெயரளவில் மட்டும் பரிவர்த்தனை மதிப்பும் கொண்டிருக்கிற நிலையில் உண்மையான பரிவர்த்தனை மதிப் பும் பெயரளவில் மட்டும் பயன் மதிப்பும் கொண்டிருக்கிற பணத்தோடு உறவுபடுத்தப்படுகிறது. விற்பனையாளர் பண் டத்தைப் பயன் மதிப்பு என்ற வகையில் அந்நியப்படுத்து வதால் அவர் அதன் பரிவர்த்தனை மதிப்பையும் பணத்தின் பயன் மதிப்பையும் கைவரப்பெறுகிறார். இதற்கு மாறாக, கொள்வினையாளர் பணத்தைப் பரிவர்த்தனை மதிப்பு என்ற வகையில் அந்நியப்படுத்துவதால் அவர் அதன் பயன் மதிப் பையும் பண்டத்தின் விலையையும் கைவரப்பெறுகிறார். இவ் விதத்தில் பண்டமும் பணமும் இடங்களை மாற்றிக் கொள் கின்றன. இந்த இரு தரப்பு முனையின் எதிரெதிர் நிலையின் சுறுசுறுப்பான நிகழ்வு அது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே பிரிக்கப்படுகிறது. விற்பனையாளர் உண்மையா கவே பண்டத்தை அந்நியப்படுத்துகிறார்; ஆனால் அதன் விலையை முதலில் கற்பனையாக மட்டுமே பெறுகிறார். அவர் அந்தப் பண்டத்தை அதனுடைய விலைக்கு விற்பனை செய்து விட்டார்; ஆனால் முன்கூட்டி முடிவு செய்யப்பட்ட பிந்திய நாளின் போதுதான் விலை கைவரப்பெறும். கொள்வினை யாளர் எதிர்காலப் பணத்தின் பிரதிநிதியாக அதை வாங்கு கிறார்; ஆனால் விற்பனையாளரோ இங்கே, இப்பொழுதே கிடைக்கிற பண்டத்தின் உடைமையாளர் என்ற முறை யில்தான் விற்பனை செய்கிறார். ஒரு பக்கத்தில், விற்பனை யாளர் பண்டத்தின் விலையை உண்மையில் பெற்றுக் கொள் ளாமலேயே, பயன் மதிப்பு என்ற வகையில் பண்டத்தைக்

கொடுத்து விடுகிருர்; மறு பக்கத்தில், கொள்வினையாளர் பரிவர்த்தனை மதிப்பு என்ற வகையில் உண்மையாகப் பணத்தைக் கொடுக்காமலேயே, பண்டத்தின் பயன் மதிப்பில் தன்னுடைய பணத்தைக் கைவரப்பெறுகிருர். முன்பு பணம் மதிப்பின் அடையாளச் சின்னத்திஞல் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டது போல இப்பொழுது அது கொள்வினையாளரால் அடையாள பூர்வமாகப் பிரதிநிதித் துவப்படுத்தப்படுகிறது. முன்பு மதிப்பின் எக்காலத்துக் கும் உரிய அடையாளச் சின்னத்துக்குச் சட்ட ரீதியான விகிதமும் அரசாங்க உத்தரவாதமும் தேவைப்பட்டது போலவே இப்பொழுது தனிப்பட்ட குறியீடு என்ற முறை யில் கொள்வினையாளர் பண்ட உடைமையாளர்களுக்கு இடையே தனிவகையான சட்டப்படி நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தங்களைத் தோற்றுவிக்கிருர்.

இதற்கு மாருக, M—C என்ற நடவடிக்கையில், உண்மை யான கொள்வினைச் சாதனம் என்ற முறையில் பணத்தை அந்நியப்படுத்தலாம். அதன் மூலம் பணத்தின் பயன்மதிப்பை அடைவதற்கு முன்பு அல்லது பண்டம் கொடுக்கப்படுவ தற்கு முன்பாகவே பண்டத்தின் விலையைக் கைவரப்பெற லாம். உதாரணமாக, எல்லோருக்கும் தெரிந்த முன்பணம் கொடுத்தல் என்ற வடிவத்தில் இது நடைபெறுகிறது. இது போலவே இந்திய விவசாயிகளிடமிருந்து கஞ்சா வாங்கு வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தகைய பண வழங்கீட்டு வடிவத்தைப் பின்பற்றுகிறது. ருஷ்யாவிலிருக்கும் வெளி நாட்டு வியாபாரிகள் அந்த நாட்டில் உற்பத்தியாகும் விவ சாயப் பொருள்களை வாங்குவதற்குப் பெரும்பாலும் இந்த முறையைப் பின்பற்றுகிருர்கள். எனினும் இந்த இனங்களில் பணம் கொள்வினைச் சாதனம் எனப்படுகிற பழக்கமான வடிவத்தில்தான் இயங்குவதால், அதைப் பற்றி புதிய வரை யறைகளோ* அல்லது விரிவான விவாதங்களோ தேவையில்லை. இங்கே M—C, C—M என்ற இரண்டு நடவடிக்கைகளும் அடை

---

*மூலதனமும் பணத்தின் வடிவத்தில் முன்பணமாகக் கொடுக்கப்படுகிறது என்பது திண்ணம். முன்பணமாகக் கொடுக்கப்பட்ட பணம் முன்கொடுக்கப்பட்ட மூலதனமாக இருப்பதும் சாத்தியமே. எனினும் இந்த அம்சம் சாதா ரணச் செலாவணியின் எல்லைக்குள் இல்லாதது.

கின்ற மாறிய வடிவத்தைப் பொறுத்தவரை செலாவணியில் நேரடியாக ஏற்படுகிற கொள்வினை, விற்பனை என்ற கலப்பற்ற கருத்தளவிலான வேறுபாடு, இப்பொழுது உண்மையான வேறுபாடாகி விடுகிறது என்பதை மட்டும் இங்கே குறித்துக் கொள்வோம். ஏனென்றால் இங்கே ஓர் இனத்தில் பணம் மட்டும், அடுத்த இனத்தில் பண்டம் மட்டுமே இருக்கின்றன. எனினும் அவை ஒவ்வொன்றிலும் கூட முன்முயற்சியைச் செய்கின்ற முனைக்கோடி மட்டுமே உண்மையில் கிடைக்கிறது. மேலும் இரண்டு வடிவங்களிலும் அவை ஒவ்வொன்றிலும் கொள்வினையாளர், விற்பனையாளரின் பொது முடிவின் பேரில் ஒரு சமமதிப்பு இருக்கிறது என்பது அவைகளுக்கிடையே உள்ள பொதுவான அம்சமாகும். கொள்வினையாளர், விற்பனையாளரின் பொது முடிவு பரஸ்பரம் இருவரையும் கட்டுப்படுத்தக் கூடியது என்பதுடன் அதற்குத் தனியான சட்ட ரீதியான வடிவம் தரப்படுகிறது.

கொள்வினையாளரும் விற்பனையாளரும் கடன் கொடுத்தவரும் கடன் வாங்கியவரும் என ஆகின்றனர். பதுக்கல் பணத்தின் பாதுகாவலர் என்ற முறையில் பண்ட உடைமையாளர் ஒரு கேலிக்குரிய நபராக இருந்தார். அவர் இப்பொழுது பயங்கரமானவராக மாறி விடுகிறார். ஏனென்றால் அவர் தன்னையல்ல, தமது அண்டைவீட்டுக்காரரைக் குறிப்பிட்ட அளவு பணத்தின் புறவடிவமாகக் கருதுகிறார்; பரிவர்த்தனை மதிப்புக்கு உயிரைப் பலியிடுகின்ற வீரத்தியாகியாக தன்னை மாற்றவில்லை—தமது அண்டைவீட்டுக்காரரை மாற்றுகிறார். முன்பு நம்பிக்கைவாதியாக இருந்தவர் கடன் கொடுப்பவராகிறார்;* மதத்திலிருந்து சட்ட இயலுக்குத் திரும்புகிறார்:

''நான் எனது கடன் பத்திரத்தின் பேரில் இங்கே இருக்கிறேன்!''**

---

* ஜெர்மன் மொழியில் "der Gläubige" என்பது நம்பிக்கையுடையவரையும் ''der Gläubiger" என்பது கடன் கொடுப்பவரையும் குறிக்கும். இந்த இடத்தில் இது சிலேடையாகும்.—ப-ர்.

** ஷேக்ஸ்பியரின் **வெனிஸ் வர்த்தகன்** என்ற நாடகத்தில் நான்காம் அங்கம், முதல் காட்சியில் ஷைலக் கூறும் வார்த்தைகள்.—ப-ர்.

பண்டம் உண்மையிலேயே கையிலும் பணம் வெறும் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் இருக்கின்ற C—M என்ற மாறிய வடிவத்தில் பணம் முதலில் மதிப்பின் அளவுகோலாகப் பயன்படுகிறது. பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு அளவுகோலாக இருக்கும் பணத்தால் மதிப்பிடப்படுகிறது; ஆனால் ஒப்பந்தத்தால் மதிப்பிடப்படும் பரிவர்த்தனை மதிப்பு அதாவது, அதன் விலை விற்பனையாளரின் மூளையில் மட்டும் இருப்பது அல்ல; அது வாங்குபவரின் கடன் பொறுப்புக்கும் அளவுகோலாக இருக்கிறது. இரண்டாவதாக, பணத்தின் எதிர்கால வாழ்நிலை அதன் முன்னால் நிழலாக விழுந்த போதிலும்—ஏனென்றால் விற்பனையாளர் கையிலிருந்து கொள்வினையாளர் கைகளுக்குப் பண்டத்தை முன்னேக்கிச் செலுத்துவது அதுவே—இங்கே பணம் கொள்வினை ஊடகமாகப் பயன்படுகிறது. ஒப்பந்தம் தீர்க்கப்பட வேண்டிய தினத்தன்று பணம் செலாவணிக்குள் நுழைகிறது; அது முன்பு கொள்வினையாளர் கையிலிருந்து முன்பு விற்பனை செய்தவர் கைக்குப் போய்ச் சேர்கிறது. ஆனால் அது செலாவணிச் சாதனமாகவோ, கொள்வினைச் சாதனமாகவோ செலாவணித் துறைக்குள் வருவதில்லை. அது தோன்றுவதற்கு முன்பு இந்தச் செயல்களை நிறைவேற்றியது; அப்படி நிறைவேற்றுவதை நிறுத்திக் கொண்ட பிறகுதான் அது களத்திலே தோன்றுகிறது. பண்டத்துக்குப் போதிய சம மதிப்பாக இருக்கும் ஒரே பொருளாக, பரிவர்த்தனை மதிப்பின் தனிமுதலான நிலையுருவமாக, பரிவர்த்தனை நிகழ்வின் கடைசிச் செயலாக, சுருக்கமாகச் சொல்வதென்றால் பணமாக,—மேலும்—எக்காலத்துக்கும் உரிய பண வழங்கீட்டின் சாதனமாகச் செயல் புரியும் பணம் என்ற வகையில் செலாவணிக்குள் நுழைகிறது. பண வழங்கீட்டின் சாதனமாகச் செயல் புரியும் பணம் தனிமுதலான பண்டமாகத் தோன்றுகிறது; ஆனால் அது செலாவணித் துறைக்கு உள்ளே இருக்கிறது; பதுக்கல் பணக் குவியலைப் போல அதற்கு வெளியே இருக்கவில்லை. கொள்வினைச் சாதனத்துக்கும் பண வழங்கீட்டின் சாதனத்துக்கும் உள்ள வேறுபாடு அதிகத் தெளிவாகத் தெரிகிறது; வர்த்தக நெருக்கடி ஏற்படுகிற காலங்

களில் இது அதிக வேதனை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது.*

செலாவணித் துறைக்குள் உற்பத்திப் பொருள்களைப் பணமாக மாற்றுவது, பண்ட உடைமையாளருக்கு அவருடைய உற்பத்திப் பொருள் பயன் மதிப்பாக இல்லாத பொழுது, அந்நியமாதலின் மூலமாக அது அவருக்குப் பயன் மதிப்பாக இன்னும் ஆகாதிருக்கிற பொழுது, அது முதலில் அந்தப் பண்ட உடைமையாளருக்கு ஒரு தனிப்பட்ட தேவையாக இருந்தது. ஒப்பந்தத்தை நிறைவேற்றும் தினத்தன்று பண வழங்கீடு செய்ய வேண்டுமென்றால், அவர் முன்பே பண்டங்களை விற்பனை செய்திருக்க வேண்டும். எனவே செலாவணி நிகழ்வுப் போக்கின் பரிணாம வளர்ச்சி விற்பனையை அவருடைய தனிப்பட்ட தேவைகளுக்குச் சம்பந்தமில்லாமல் சமூகத் தேவையாக மாற்றுகிறது. பண்டங்களை முன்பு வாங்கியவர் என்ற முறையில் அவர் பணத்தைப் பெறுவதற்காக—கொள்வினைச் சாதனம் என்ற வகையில் அல்ல, பண வழங்கீட்டின் சாதனம், பரிவர்த்தனை மதிப்பின் தனிமுதலான வடிவம் என்ற வகையில்—மற்ற பண்டங்களின் விற்பனையாளராக மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார். பண்டங்கள் பணமாக மாற்றமடைகின்ற கடைசிச் செயல் அல்லது பண்டங்களின் முதல் உருமாற்றமான இறுதி லட்சியம்—பதுக்கலில் இது பண்ட உடைமையாளரின் விளையாட்டு மனப் போக்காகத் தோன்றியது—இப்பொழுது ஒரு பொருளாதாரச் செயலாகி விட்டது. பண வழங்கீட்டுக்காக நடைபெற்ற விற்பனையின் நோக்கமும் உள்ளடக்கமும் செலாவணி நிகழ்வுப் போக்கின் உள்ளடக்கமாகி விடுகிறது. இந்த உள்ளடக்கம் அதன் வடிவத்திலிருந்தே தோன்றுவதாகும்.

இத்தகைய விற்பனை வகையில், பண்டத்தின் முதல் உருமாற்றம்—அது பணமாக மாற்றமடைவது—தள்ளிவைக்கப்பட்ட போதிலும், அது ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு முன்னேறுகிறது. எனினும் கொள்வினையாளர் தரப்பில் முதல் உருமாற்றம், அதாவது பண்டங்கள் பணமாக மாறுவது நடைபெறுவதற்கு முன்பே, இரண்டாவது உரு

---

* கொள்வினைச் சாதனத்துக்கும் பண வழங்கீட்டின் சாதனத்துக்கும் உள்ள வேறுபாட்டை லூதர் வலியுறுத்துகிறார். [மார்க்ஸ் கைப்பட எழுதியுள்ள குறிப்பு.—ப-ர்.]

மாற்றம், அதாவது பணம் பண்டங்களாக மறுமாற்றமடைவது நடைபெற்று விடுகிறது. எனவே இந்த உதாரணத்தில் முதல் உருமாற்றம் இரண்டாவது உருமாற்றத்துக்குப் பிறகு நடைபெறுவதாகத் தோன்றுகிறது. எனவே முதல் உருமாற்றத்தின் போது பண்டத்தின் வடிவமாகிய பணம் ஒரு புதிய தனிவகையான அம்சத்தைப் பெறுகிறது. பணம், அதாவது பரிவர்த்தனை மதிப்பின் சுதந்திரமான வளர்ச்சி இனியும் பண்டச் செலாவணியின் இடைநிலைக் கட்டம் அல்ல; அதனுடைய இறுதி விளைவாகிறது.

கடனுகச் செய்யப்படும் கொள்வினைகள்—இவற்றில் நடவடிக்கைகளின் இரண்டு முனைகளும் காலத்தால் பிரிக்கப்பட்டிருக்கின்றன—பண்டங்களின் சாதாரணச் செலாவணியின் அடிப்படையில் சுயமாகவே தோன்றி வளர்ச்சி அடைகின்றன எனக் காட்ட விரிவான ஆதாரங்கள் தேவையில்லை. செலாவணி நிகழ்வின் போது சில பண்ட உடைமையாளர்கள் கொள்வினையாளர்களாகவும் விற்பனையாளர்களாகவும் திரும்பத்திரும்ப ஒருவருக்கொருவர் எதிரிடுவது முதலில் நடைபெறுகிறது. இப்படி திரும்பத்திரும்ப நடைபெறுபவை சந்தர்ப்ப வசமானவையாக மட்டுமே இருப்பதில்லை; உதாரணமாக, பிற்காலத்தில் ஒரு தேதியில் பண்டங்களைக் கொடுத்துப் பணம் வாங்கிக் கொள்வதென்னும் அடிப்படையில் பண்டங்களுக்கு அனுப்பாணை கொடுக்கலாம். இந்த உதாரணத்தில் பண்டங்களும் பணமும் நடைமுறையில் இல்லாமல் விற்பனை என்பது கற்பனையாக, அதாவது சட்டரீதியில் மட்டுமே நடைபெறுகிறது. செலாவணிச் சாதனம் பண வழங்கீட்டின் சாதனம் என்ற பணத்தின் இரண்டு வடிவங்களும் இங்கே இன்னும் ஒரே தன்மையாகவே இருக்கின்றன; ஏனென்றால், ஒரு பக்கத்தில், பண்டங்களும் பணமும் ஒரே சமயத்தில் இடங்களை மாற்றிக் கொள்கின்றன; மறு பக்கத்தில், பணம் பண்டங்களைக் கொள்வினை செய்யவில்லை; ஆனால் முன்னரே விற்பனையாகிய பண்டங்களின் விலைகளைக் கைவரப்பெறுகிறது. மேலும், அதிகமான பயன் மதிப்புகளின் தனிவகையான இயல்பு காரணமாக, அவை நடைமுறையில் கொடுக்கப்படுவதன் மூலமாக உண்மையில் அந்நியமாவதில்லை; ஒரு குறிப்பிட்ட காலத்துக்குக் குத்தகைக்கு விடப்படுவதன் மூலம் அவை

அந்நியமாகின்றன. உதாரணமாக, ஒருவர் தன்னுடைய வீட்டின் உபயோகத்தை ஒரு மாத காலத்துக்கு விற்பனை செய்யும் பொழுது, மாதத்தின் தொடக்கத்திலேயே வீடு கைமாறிய போதிலும் அதன் பயன் மதிப்பு மாதம் முடிந்த பிறகுதான் கொடுக்கப்படுகிறது. இந்த உதாரணத்தில் பயன் மதிப்பின் நடைமுறை மாற்றமும் அதன் உண்மையான அந்நியமாதலும் காலத்தால் பிரிக்கப்பட்டிருப்பதால் அதன் விலை கைவரப்பெறுவதும் அது கைமாறிய தேதிக்குப் பிறகுதான் நடைபெறுகிறது. கடைசியாக, வெவ்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான கால, நேர அளவுகளின் வேறுபாடுகள் காரணமாக ஓர் உற்பத்தியாளர், அடுத்தவர் கொள்வினையாளராகச் செயல்படுவதற்கு முன்பாக சந்தைக்கு வந்து விடுகிறார். அதே பண்ட உடைமையாளர்கள் ஒருவர் மற்றொருவரின் உற்பத்திப் பொருள்களைத் திரும்பத்திரும்ப வாங்குவதும் விற்பதுமாக இருந்தால், அவர்களது பண்டங்களின் உற்பத்தியின் நிலைமைகளுக்கு ஏற்ப இந்த நடவடிக்கையின் இரண்டு அம்சங்களும் பிரிக்கப்படுகின்றன. இதனால் பண்ட உடைமையாளர்களுக்கிடையே கடன் கொடுப்பவர் கடன் வாங்கியவர் என்ற உறவுகள் தோன்றுகின்றன. இத்தகைய உறவுகளே கடன் முறைக்கு இயற்கையான அடிப்படை என்ற போதிலும், கடன் முறை தோன்றுவதற்கு முன்பாகவே இந்த உறவுகள் முழுமையாக வளர்ச்சியடைந்திருப்பது முடியும். எனினும் கடன் முறையின் பரிணாமம், அதனால் பொதுவாக முதலாளித்துவ உற்பத்தி முறையுமே பணம் மென்மேலும் அதிகமாகப் பண வழங்கீட்டுச் சாதனமாக—கொள்வினைச் சாதனம் இன்னும் அதிகமாகவே பதுக்கல் பணத்தின் மூலக் கூறு என்ற இரு வகைகளிலும் அதன் செயலுக்குக் கேடான வகையில்—செயல்படக் காரணமாக இருக்கின்றன என்பது தெளிவாகும். உதாரணமாக, இங்கிலாந்தில் நாணயம் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் ஏற்படுகிற சில்லறை நடவடிக்கைகளுக்கும் சில்லறை வர்த்தகம் நடைபெறும் துறைக்கும் அநேகமாக முழுமையாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரிய வர்த்தக நடவடிக்கைகளின்

துறையில் பணம் வழங்கீட்டுச் சாதனமாக மேலோங்கியிருக்கிறது.*

எக்காலத்துக்கும் உரிய பண வழங்கீட்டின் சாதனம் என்ற வகையில் பணம் ஒப்பந்தங்களின் எக்காலத்துக்கும் உரிய பண்டமாக ஆகிறது. ஆனால் முதலில் பண்டச் செலாவணித் துறைக்குள் மட்டுமே செயல்படுகிறது.** ஆனால் பணத்தின் இந்தச் செயல் வளர்ச்சியடைகிற பொழுது, வழங்கீட்டின் எல்லா வகையான வடிவங்களும் படிப்படியாக பணத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் வழங்கீடுகளாக மாற்

---

* திரு. மாக்ளியோட் வரையறைகள் மயிரிழைகூடப் பிசகக் கூடாது என்ற கோட்பாட்டின் மீது பிரியமுள்ளவர். ஆனால் பொதுவாகப் பணம் அதன் மிக வளர்ச்சியடைந்த வடிவத்திலிருந்து, அதாவது பண வழங்கீட்டின் சாதனம் என்பதிலிருந்து தோன்றுகிறது என்று அவர் சொல்லுகிற பொழுது மிக ஆரம்ப நிலையிலுள்ள பொருளாதார உறவுகளைக் கூட அவர் அதிக அளவுக்குத் தவறாக எடுத்துக் கூறுகிறார். அவர் inter alia (மற்றவைகளோடு சேர்த்து) பின்வரும் கருத்தையும் கூறியிருக்கிறார்: மக்கள் ஒருவருக்கொருவருடைய சேவைகளை—அதே சமயத்திலும் அதே மதிப்பளவிலும்—எப்பொழுதும் தேவைப்படவில்லை என்பதால் ''முதலாவது நபரிடமிருந்து இரண்டாவது நபருக்குக் கிடைக்க வேண்டிய சேவை அளவு அல்லது வேறுபாடு மிஞ்சியிருக்கும்; இது கடன் எனப்படும்.'' கடன் வர வேண்டிய உடைமையாளருக்கு ஒரு மூன்றாவது நபரின் சேவை தேவைப்படலாம்; ஆனால் அவருக்கு இவருடைய சேவை உடனடியாகத் தேவைப்படாது. எனவே ''இரண்டாவது நபர் முதல் நபரிடமிருந்து தனக்கு வர வேண்டிய கடனை மூன்றாவது நபருக்கு மாற்றி விடுவதைக் காட்டிலும் இயற்கையானது உண்டா?'' ''கடன் அத்தாட்சி கைமாறும்.... நாணயம் என்று இது சொல்லப்படும். ...ஒரு நபர் உலோக நாணயத்தால் எடுத்துரைக்கப்படும் கடன் உரிமையைப் பெற்றால், அவர் ஆரம்பக் கடனாளியின் சேவைகளை மட்டுமல்லாமல், பாடுபட்டு உழைக்கின்ற சமூகம் அனைத்தின் சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடிகிறது.'' (H.D. Macleod, *The Theory and Practice of Banking*, Vol. 1, London, 1855, Ch. 1 [pp. 24, 29].)

** ''ஒப்பந்தத்தின் பொதுப் பண்டம் பணம், அல்லது எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய சொத்துக்கள் பற்றிய பேரங்களில் பெரும்பாலானவை இதன் மூலமாகச் செய்யப்படுகின்றன.'' (Bailey, *op. cit.*, p. 3.)

றப்படுகின்றன. மற்ற வகைகளை விலக்கிய வழங்கீட்டுச் சாதனம் என்ற வகையில் பணம் இயங்குகின்ற அளவு உற்பத்தியின் மீது பரிவர்த்தனை மதிப்பு எந்த அளவுக்கு விரிவாகவும் ஆழமான வகையிலும் மேலாதிக்கம் வகிக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.*

செலாவணியில் பண வழங்கீட்டின் சாதனம் என்ற வகையில் இருக்கும் பணத்தின் அளவு முதலாவதாக கொடுக்கப்பட வேண்டிய பண வழங்கீடுகளின் மொத்தத் தொகையினால், அதாவது விற்பனையாகிய பண்டங்களின் ஆகக் கூடிய மொத்த விலைகளினால் நிர்ணயிக்கப்படுகிறது; சாதாரணப் பணச் செலாவணியில் நடைபெறுவதைப் போல விற்பனையாக வேண்டிய பண்டங்களினால் நிர்ணயிக்கப்படுவதில்லை.

---

* சீனியர் (*op. cit.*,p. 221) பின்வருமாறு எழுதுகிறார்: ''ஒவ்வொன்றின் மதிப்பும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் மாறி விடுவதால் மிகக் குறைவான அளவுக்கே மாறுகின்ற மதிப்பும், பொருள்களை வாங்குவதற்கு சராசரித்தகுதியை மிக நீண்ட காலத்துக்கு வைத்துக் கொள்ளக் கூடியதுமான ஒரு பொருளைப் பண வழங்கீட்டின் சாதனமாக மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இவ்விதத்தில் பணம் மதிப்புகளின் வெளியீடாக அல்லது பிரதிநிதியாகிறது.'' இந்தக் கருத்துக்கு மாறாக தங்கம், வெள்ளி, இதரவை பணம், அதாவது பரிவர்த்தனை மதிப்பின் சுதந்திரமான புறவடிவமாக ஆகிவிட்டதனால்தான் பொதுவில் பண வழங்கீட்டின் சாதனங்களாகின்றன. திரு. சீனியர் குறிப்பிடுகிற பணத்தின் மதிப்பின் நிலையான தன்மையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் பொழுது, அதாவது சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தத்தால் பணம் எக்காலத்துக்கும் உரிய பண வழங்கீட்டின் சாதனம் என்று நிறுவப்படுகிற பொழுதுதான், மக்கள் பணத்தின் மதிப்பில் உள்ள மாறுபாடுகளை உணர ஆரம்பிக்கிறார்கள். இங்கிலாந்தில் எலிசபெத் ராணியின் ஆட்சி அப்படிப்பட்ட காலமாகும். அப்பொழுது விலையுயர்ந்த உலோகங்கள் வெளிப்படையாக மதிப்புக் குறைந்தன. அதனால் பெர்லி பிரபுவும் சர் தாமஸ் ஸ்மித்தும் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குரிய குத்தகைப் பணத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கோதுமையாகவும் முளைதானியமாகவும் (malt) கொடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களை நிர்ப்பந்திப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் தரக்கூடிய மசோதாவைப் பார்லிமெண்டில் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள்.

ஆனால் இப்படி நிர்ணயிக்கப்பட்ட தொகை இரண்டு காரணி களால் மாற்றியமைக்கப்படுகிறது: முதலாவதாக, ஒரு நாணயம் ஒரே நடவடிக்கையைத் திரும்பத்திரும்பச் செய்கின்ற வேக அளவு அல்லது வழங்கீடுகளின் சுறுசுறுப்பான சங்கிலியை ஏற்படுத்துகின்ற வழங்கீடுகளின் எண்ணிக்கை அதை மாற்றியமைக்கிறது.[1] A என்பவர் B என்பவரிடம் பணம் கொடுக்கிறார், B அந்தப் பணத்தை அடுத்தபடியாக C என்பவரிடம் கொடுக்கிறார்—இப்படியே தொடர்கிறது. ஒரே நாணயம் பண வழங்கீட்டின் சாதனமாக செயல்படக் கூடிய வேக அளவு, ஒரு பக்கத்தில், பண்ட உடைமையாளர் களின் கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் என்ற உறவு களின் இடையிணைப்பைப் பொறுத்திருக்கிறது (இதில் ஒரு நபரைப் பொறுத்தவரை கடன் கொடுத்தவராக இருக்கிற அதே பண்ட உடைமையாளர் அடுத்த நபரைப் பொறுத்த வரை கடன் வாங்கியவராகிறார்; இப்படியே தொடரும்); மறு பக்கத்தில், பணம் கொடுக்கப்பட வேண்டிய வெவ் வேறு தேதிகளைப் பிரிக்கின்ற கால அளவைப் பொறுத்திருக் கிறது. பண வழங்கீடுகள் அல்லது பிறகு நிறைவேற்றப்படு கின்ற முதல் உருமாற்றங்களின் தொடர்வரிசை செலா வணிச் சாதனம் என்ற வகையில் பணத்தின் இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற உருமாற்றங்களின் தொடர் வரிசையிலிருந்து குண ரீதியாக மாறுபட்டதாகும். இரண் டாவது தொடர்வரிசை காலக்கிரமப்படி தொடர்ந்து தோன்றுவது மட்டுமல்லாமல் அது இந்த வழியிலே தோற்ற மெடுக்கிறது. ஒரு பண்டம் பணமாக மாற்றப்படுகிறது; பிறகு மறுபடியும் பண்டமாக மாற்றப்படுகிறது; அதன் மூலம் மற்றொரு பண்டம் பணமாக மாற்றப்படுவதைச் சாத் தியமாக்குகிறது, இப்படியே தொடர்கிறது. வேறு வார்த் தைகளில் சொல்வதென்றால், ஒரு விற்பனையாளர் கொள் வினையாளராக மாறுகிறார்; அதன் மூலம் இன்னொரு பண்ட உடைமையாளர் விற்பனையாளராக மாறுகிறார். இந்த வரிசை முறை பண்டம் பரிவர்த்தனை செய்யப்படுகின்ற நிகழ்வின் போது தற்செயலாக ஏற்படுகிறது. ஆனால் A என்பவர் B 'என்பவரிடம் கொடுக்கின்ற பணம் பிறகு B, C என்பவருக்குக் கொடுப்பதற்கும், பிறகு C, D என்பவருக்கும், இப்படியே தொடர்ந்து நடைபெறுவது என்ற விவரமும் பண வழங்

கீடுகள் வேகமாக ஒன்றையொன்று தொடர்ந்து நடைபெறு கின்றன என்பதும்—இந்த வெளி உறவு முன்பே இருக்கின்ற சமூக உறவின் வெளியீடாக மட்டுமே இருப்பதாகும். ஒரே நாணயம் பல கைகள் மாறுவது அது பண வழங்கீட்டின் சாதனமாகச் செயல் புரிவதால் அல்ல. ஆனல் இந்தக் கைகள் அனைத்தும் முன்பே ஒன்றுசேர்க்கப்பட்டிருப்பதால் அந்த நாணயம் பண வழங்கீட்டின் சாதனமாகத் தொடர்ந்து அனுப்பப்படுகிறது. ஒரு தனி நபர் செலாவணி நிகழ்வுப் போக்குடன் இதைக் காட்டிலும் இன்னும் அதிக விரிவான அளவுக்கு ஒருங்கிணைந்திருப்பதை நாணயம் அல்லது கொள் வினைச் சாதனம் என்ற வகையில் பணத்தின் வேக அளவு குறிப்பதைக் காட்டிலும், வழங்கீட்டுச் சாதனம் என்ற வகை யில் பணத்தின் வேக அளவு குறிக்கிறது.

ஒரே சமயத்தில் நடைபெறுவதால் இடஞ்சார்ந்த வகை யில் ஒத்து வாழ்கின்ற கொள்வினை, விற்பனை விலைகளின் ஆக மொத்தத் தொகை என்ற கடைசி எல்லைக்கு அப்பால் நாணயத்தின் வேகத்தை அதன் அளவுக்குப் பதிலாக வைக்க முடியாது. ஆனல் பணம் பண வழங்கீட்டின் சாதனமாகச் செயல் புரியும் பொழுது இந்தத் தடை இருப்பது கிடை யாது. ஒரே சமயத்தில் கொடுக்கப்பட வேண்டிய வழங் கீடுகள் ஒரே இடத்தில் குவிக்கப்படுமானல்—இது முதலில் பண்டச் செலாவணியின் மாபெரும் குவிமுனையில் தானகவே ஏற்படுகிறது—அவை நேர்முனை எதிர்முனை அளவுகளைப் போல ஒன்றுக்கொன்று சரியீடு செய்து கொள்கின்றன. A என்பவர் B என்பவருக்குப் பணம் கொடுக்க வேண்டி யிருக்கலாம். அதே சமயத்தில் C என்பவர் Aக்குப் பணம் கொடுப்பார். இப்படியே தொடரும். எனவே பண வழங் கீட்டின் சாதனம் என்ற வகையில் தேவைப்படுகின்ற பணத் தின் அளவு ஒரே சமயத்தில் கொடுக்கப்பட வேண்டிய வழங்கீடுகளின் ஆக மொத்தத் தொகையைப் பொறுத் திருப்பதில்லை; அவற்றின் குவிப்பின் அளவையும் எதிர்நிலை நேர்நிலை அளவுகள் ஒன்றுக்கொன்று சரியீடு செய்யப்பட்ட பிறகு எஞ்சியிருக்கும் மீதியின் அளவையும் பொறுத்திருக் கிறது. கடன் முறை தோன்றியிராத இடங்களில் கூட, இந்த முறையில் சமநிலைப்படுத்துவதற்கு விசேஷமான உபாயங் கள் தோன்றுகின்றன. பண்டைக் காலத்திய ரோம் இதற்கு

உதாரணமாகும். ஆனல் அவற்றை இங்கே ஆராய்வது பொருத்தமல்ல. அது போலவே ஒவ்வொரு நாட்டிலும் சமூகத்தின் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த மக்களிடம் வேரூன்றியிருக்கிற வழக்கமான ஒப்பந்த முடிவுத் தேதிகளை ஆராய்வதும் இங்கே பொருத்தமல்ல. ஆனல் செலாவணியிலிருக்கின்ற பணத்தின் அளவு வெவ்வேறு கட்டங்களில் மாற்றமடைவதில் இத்தகைய தேதிகள் ஏற்படுத்துகிற தனி வகையான தாக்கத்தைப் பற்றி அறிவார்ந்த ஆராய்ச்சிகள் சமீப காலத்தில்தான் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்.

வழங்கீடுகள் ஒன்றையொன்று நேர்நிலை எதிர்நிலை அளவுகளாக ரத்துச் செய்யும் பொழுது பணம் நடைமுறையில் அங்கே தோன்ற வேண்டியது அவசியமல்ல. இங்கே பண்டத்தின் விலையையும் பரஸ்பரக் கடன்களின் அளவையும் பொறுத்தவரை பணம் மதிப்பின் அளவாக மட்டுமே இயங்குகிறது. எனவே இந்த உதாரணத்தில் பரிவர்த்தனை மதிப்பு அதன் கற்பனையான வாழ்நிலையைத் தவிர ஒரு சுதந்திரமான வாழ்நிலையை—மதிப்பின் அடையாளச் சின்னம் என்ற வடிவத்தில் கூட—அடைவதில்லை; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றல், பணம் என்பது கலப்பற்ற, கற்பனையான கணக்கிடப்படும் பணம் ஆகிறது. எனவே பணம் பண வழங்கீட்டின் சாதனமாகச் செயல் புரியும் பொழுது ஒரு முரண்பாட்டைக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில், பண வழங்கீடுகள் சமநிலையில் இருக்கும் பொழுது அது அளவுகோலாகக் கற்பனையாக மட்டுமே செயல் புரிகிறது. மறு பக்கத்தில், வழங்கீடுகள் நடைமுறையில் கொடுக்கப்பட வேண்டிய பொழுது பணம் செலாவணிக்குள் தற்காலிகமான செலாவணிச் சாதனமாக இல்லாமல்—எக்காலத்துக்கும் உரிய சம மதிப்பின் தேங்கி நிற்கும் அம்சமாக, தனிமுதலான பண்டமாக, சுருக்கமாகச் சொல்வதென்றல் பணமாக நுழைகிறது. எங்கே பண வழங்கீடுகளின் சங்கிலிகளும் அவற்றைச் சரிப்படுத்துவதற்குச் செயற்கையான அமைப்பும் வளர்ச்சி அடைந்திருக்கிறதோ அங்கே பண வழங்கீடுகள் பாய்வதைப் பலவந்தமாகத் தடுத்து, அவற்றை ஒன்றுக்கொன்று சமநிலைப்படுத்தும் இயந்திரத்தை நிலை குலையச் செய்கின்ற எத்தகைய கொந்தளிப்பும் பணத்தை (அது

மதிப்பின் அளவுகோல் என்ற முறையில் அடைந்திருக்கும் தெளிவற்ற, கேலிக்குரிய உருவத்திலிருந்து) திடீரென்று ரொக்கப் பணமாக அல்லது பண வழங்கீட்டுச் சாதனமாக மாற்றி விடுகிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உற்பத்தி நிலைமைகளில், பண்ட உடைமையாளர் எப்பொழுதோ முதலாளியாகி விட்டதோடு தன்னுடைய தத்துவாசிரியரான ஆடம் ஸ்மித்தையும் நன்குக அறிந்து கொண்டிருப்பதால், தங்கமும் வெள்ளியும்தான் பணம் அல்லது மற்ற பண்டங்களிலிருந்து வேறுபட்ட முறையில் தனிமுதலான பண்டமாக இருப்பது பணமே என்ற மூட நம்பிக்கையைப் பற்றி ஏளனமாகச் சிரிக்கிற பொழுது, பணம் திடீரென்று தோன்றுகிறது. இந்தப் பணம் செலாவணி ஊடகமாகத் தோன்றவில்லை; பரிவர்த்தனை மதிப்பின் ஒரே ஒரு போதுமான வடிவமாக மறுபடியும் தோன்றுகிறது; பதுக்கல்காரர் நினைப்பதைப் போலவே செல்வத்தின் தனித்தன்மையான வடிவமாகத் தோன்றுகிறது. செல்வத்தின் ஒரே அவதாரம் பணம் என்பது எல்லா வகையான பொருட்செல்வத்தையும் உண்மையில் மதிப்புக் குறைத்து ஒன்றுமில்லாமற் செய்வதில் வெளிப்படுகிறது; அது கலப்பில்லாத கற்பனையான மதிப்புக் குறைவில், உதாரணமாக, பணவியல் முறையில் வெளிப்படுவது இல்லை. உலகச் சந்தை நெருக்கடியில் இந்தக் குறிப்பிட்ட கட்டத்திற்குப் பணவியல் நெருக்கடி என்று பெயர். இம்மாதிரியான நேரங்களில் மக்கள் செல்வத்தின் உயர்குறிக்கோளாகிய, (summum bonum) செல்வத்தின் ஒரே வடிவமாகிய பணத்துக்காக, ரொக்கப் பணத்துக்காகக் கூக்குரல் எழுப்புகிறார்கள். அதனோடு ஒப்பிடுகிற பொழுது மற்ற எல்லாப் பண்டங்களும்—அவை பயன் மதிப்புகளாக இருப்பதால்—பயனற்றவையாக, வெறும் விளையாட்டு பொம்மைகளாகவும் கிலுகிலுப்பைகளாகவும் தோன்றுகின்றன; அல்லது டாக்டர் மார்ட்டின் லூதர் சொல்லுவது போல வெறும் ஆபரணங்களாகவும் பெருந்தீனியாகவும் தோன்றுகின்றன. கடன் முறை இந்த வகையில் திடீரென்று பணவியல் முறையாக மாற்றமடைவது ஏற்கெனவே இருந்து வரும் பயத்தில் தத்துவ ரீதியான கலக்கத்தையும் சேர்க்கிறது. செலாவணி நிகழ்வின் பிரதிநிதிகள் தங்களுடைய சொந்த உறவுகளைச்

சூழ்ந்திருக்கிற ஊடுருவ முடியாத மர்மத்தைக் கண்டு தாங்களே பெரும் பயம் அடைந்து விடுகிறார்கள்.*

பண வழங்கீடுகளுக்கு வரும் பொழுது பண வழங்கீட்டின் சாதனங்களாகப் பணக் குவிப்பு, சேம ஒதுக்கீடு நிதிகள் தேவைப்படுகின்றன. சேம ஒதுக்கீடு நிதிகளின் உருவாக்கம், பதுக்கல் செய்வதைப் போல இல்லாமல், செலாவணிக்கு வெளிப்புற நடவடிக்கையாக இனியும் தோன்றுவதில்லை; அல்லது நாணயக் கையிருப்புகளைப் போல முற்றிலும் தொழில்நுட்ப ரீதியான நாணயத் தேக்கம் என்பதாகவும் தோன்றுவதில்லை. இதற்கு மாறாக எதிர்காலத்தில் வழங்கீடுகள் கொடுக்கப்பட வேண்டிய உரிய தேதிகளின் போது கொடுப்பதற்காகப் பணத்தைப் படிப்படியாகத் திரட்ட நேரிடுகிறது. எனவே முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியில் செல்வப் பெருக்கம் என்று கருதப்படுகிற பதுக்கலின் சூக்குமமான வடிவம் குறைந்த போதிலும் பரிவர்த்தனை நிகழ்வுப் போக்கின் காரணமாகவே அவசியமாகின்ற பதுக்கல் அதிகரிக்கிறது; பண்டச் செலாவணித் துறைக்குள் பொதுவாகக் குவிகின்ற செல்வத்தின் ஒரு பகுதி பண வழங்கீட்டின் சாதனங்களின் சேம ஒதுக்கீட்டு நிதிகளாகச் சேகரிக்கப்படுகிறது. முதலாளித்துவ உற்பத்தி எவ்வளவு அதிக வளர்ச்சி அடைந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த

---

* புவகில்பெர் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகவே திருப்புவதைத் தடுக்க விரும்புகிறார். எனவே அவர் பணம் கற்பனை நிகழ்வுகள் அல்லது தற்காலிக நிகழ்வுகளாக மட்டுமே தோன்றும் பணத்தின் வடிவங்களையே எடுத்துக் கொள்ள விரும்புகிறார். அவர் முன்பு செலாவணிச் சாதனங்களை இந்தக் கருத்து நிலையிலிருந்து பார்த்தார்; இப்பொழுது பண வழங்கீட்டின் சாதனத்தை இப்படிப் பார்க்கிறார். எனினும் கற்பனையான பணத்தின் வடிவம் வெளிப்புற யதார்த்தமாக திடீரென்று மாற்றமடைவதையும் கலப்பற்ற கருத்தளவான மதிப்பின் அளவுகோல் கூட மறைமுகமாக ரொக்கப் பணத்தைக் கொண்டிருக்கிறது என்ற உண்மையையும் பார்க்கத் தவறுகிறார். மொத்த வர்த்தகம்—இதில் ''பண்டங்களின் பரிசீலனைக்குப் பிறகு'' பணத்தை உபயோகப்படுத்தாமலேயே பரிவர்த்தனை நிறைவேற்றப்படுகிறது—பணம் என்பது பண்டங்களின் அம்சம் மட்டுமே என்று காட்டுவதாக அவர் கூறுகிறார். (Boisguillebert, *Le détail de la France*, p. 210.)

நிதிகள் மிகவும் அத்தியாவசியமான குறைந்த அளவிலிருக்கும்படிக் குறைக்கப்படுகின்றன. வட்டி விகிதத்தைக் குறைப்பது பற்றி லோக் எழுதிய நூல்* அவர் காலத்தில் இந்த சேம ஒதுக்கீடு நிதிகளின் அளவைப் பற்றிய சுவையான தகவல்களைக் கொண்டிருக்கிறது. இங்கிலாந்தில் வங்கி முறை வளர்ச்சி அடையத் தொடங்கிய காலகட்டத்தில் செலாவணியிலிருந்த பணத்தில் கணிசமான பகுதி எப்படி பண வழங்கீட்டின் சாதனங்களின் சேம ஒதுக்கீட்டு நிதிகளாக உறிஞ்சப்பட்டன என்பதை அந்த நூல் எடுத்துக் காட்டுகிறது.

சாதாரண பணச் செலாவணியை உத்தேசித்து செலாவணியிலிருக்கிற பணத்தின் அளவு பற்றிய சட்டம் வழங்கீட்டுச் சாதனத்தின் செலாவணியால் குறிப்பிடத்தக்க விதத்தில் மாற்றியமைக்கப்படுகிறது. பணத்தின் வேகம்—செலாவணிச் சாதனம், பண வழங்கீட்டின் சாதனம் என்ற இரு வகைகளிலும்—கொடுக்கப்படுமானுல், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் செலாவணியிலிருக்கிற பணத்தின் ஆகக் கூடிய மொத்த அளவு, இந்தக் காலகட்டத்தில் கொடுக்கப்பட வேண்டிய வழங்கீடுகளின் மொத்தத்தொகையில் ஒன்றுக்கொன்று சமநிலைப்படுத்தும் வழங்கீடுகளைக் கழித்தால் வருவதைக் கைவரப்பெற வேண்டிய பண்ட விலைகளின் மொத்தத்தொகையோடு கூட்டினுல் வருவது நிர்ணயிக்கிறது. இது செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு பண்ட விலைகளைப் பொறுத்திருக்கிறது என்ற பொது விதியைச் சிறிதும் பாதிப்பதில்லை. ஏனென்ருல் வழங்கீடுகளின் ஆகக் கூடிய மொத்த அளவு என்பதே ஒப்பந்தங்களில் குறிப்பிடப்படும் விலைகளினுல் நிர்ணயிக்கப்படுகிறது. எனினும் ஒரு குறிப்பிட்ட கால அளவில், உதாரணமாக ஒரு தினத்தில், செலாவணியாகிற பண்டங்களின் ஆக மொத்த விலைகள், அதே தினத்தில் செலாவணியாகின்ற பணத்தின் அளவோடு ஒரே அளவாக இருப்பதில்லை என்பது தெளிவு. செலாவணியின் வேகமும் வழங்கீடுகளின் சிக்கனமான முறைகளும் மாறவில்லை என்று வைத்துக் கொண்டால்கூட அவை ஒரே அளவாக இருப்பதில்லை; ஏனென்ருல் செலாவணியில் இருக்கிற குறிப்

---

* Locke, *Some Considerations on the Lowering of Interest*, pp. 17, 18.

பிட்ட அளவு பண்டங்களின் விலைகள் பிந்திய தேதியில் தான் பணமாகக் கைவரப்பெறும்; மேலும் செலாவணியில் இருக்கிற குறிப்பிட்ட அளவு பணம் வெகு காலத்துக்கு முன்பே செலாவணித் துறையை விட்டு வெளியேறிய பண்டங்களுக்குப் பொருந்துகிறது. இந்தப் பணத்தின் அளவு—சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் அதிகமான இடைவெளியுள்ள வெவ்வேறு தேதிகளில் முடிவு செய்யப்பட்டவை என்ற போதிலும்—அன்றைய தினத்தில் கொடுக்கப்பட வேண்டிய பணத்தின் மதிப்பைப் பொறுத்திருக்கிறது.

தங்கம், வெள்ளியின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் மதிப்பின் அளவுகோல் என்றும் கணக்கிடப்படும் பணம் என்றும் அவை புரிகின்ற செயல்களைப் பாதிப்பதில்லை என்பதை முன்னர் பார்த்தோம். ஆனால் பதுக்கல் பணக் குவியலைப் பொறுத்தவரை, இந்த மாற்றங்கள் தீர்மான மான பங்கு வகிக்கின்றன. ஏனென்றால் வெள்ளி, தங்கத்தின் மதிப்பு அதிகரித்தால் அல்லது வீழ்ச்சியடைந்தால் தங்கம் அல்லது வெள்ளிப் பதுக்கல் பணக் குவியலின் மதிப்பு அதிகரிக்கும் அல்லது வீழ்ச்சியடையும். இந்த மாற்றங்கள் பண வழங்கீட்டின் சாதனம் என்ற வகையில் பணத்துக்கு இன்னும் அதிகமான முக்கியத்துவம் கொண்டிருக்கின்றன. பண்டங்கள் விற்பனை செய்யப்பட்ட தினத்திலிருந்து பிந்திய ஒரு தினத்தில் பண வழங்கீடு நடைபெறுகிறது; அதாவது, பணம் இரண்டு வெவ்வேறு காலங்களில் இரண்டு வெவ் வேறு செயல்களைப் புரிகிறது. அது முதலில் மதிப்பின் ஆதார அளவாகவும், பிறகு அதற்குப் பொறுத்தமான பண வழங் கீட்டின் சாதனமாகவும் செயல் புரிகிறது. இந்த இடைக் காலத்தில் அரிய உலோகங்களின் மதிப்பில், அல்லது அவை களை உற்பத்தி செய்ய அவசியமான உழைப்பு நேரத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், அதே அளவு தங்கம் அல்லது வெள்ளி பண வழங்கீட்டின் சாதனமாகச் செயல் புரியும் பொழுது, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட காலத்தில் அது மதிப்பின் அளவுகோலாகச் செயல் புரிந்த பொழுது இருந் ததைக் காட்டிலும் கூடுதலான அல்லது குறைந்த மதிப்பைக் கொண்டிருக்கும். தங்கம், வெள்ளி போன்ற ஒரு தனிவகை யான பண்டம், பணம் என்ற வகையில் அல்லது சுதந்திரமான வடிவத்தை மேற்கொண்ட பரிவர்த்தனை மதிப்பு என்ற

வகையில் அதன் செயல் இங்கே அந்தத் தனிவகையான பண்டத்தின் இயல்புடன் மோதுகிறது. ஏனென்றால் அந்தப் பண்டத்தின் மதிப்பு உற்பத்திச் செலவுகளில் ஏற்படுகிற மாற்றங்களைப் பொறுத்து இருக்கிறது. ஐரோப்பாவில் அரிய உலோகங்களின் மதிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி ஒரு மாபெரும் சமூகப் புரட்சியைத் தோற்றுவித்தது என்பது நன்கு தெரிந்ததே. இது போலவே பண்டைக் காலத்திய ரோமன் குடியரசின் வரலாற்றின் ஆரம்ப கட்டத்தில், சாமான்யர்களின் (plebeians) கடன்கள் ஒப்பந்தம் செய்யப்படுகிற உலோகமாகிய செம்பின் மதிப்பு அதிகரித்த பொழுது, அங்கே இதற்கு எதிர் நிலையான புரட்சி ஏற்பட்டது. அரிய உலோகங்களின் மதிப்பின் ஏற்ற இறக்கங்கள் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஏற்படுத்தும் தாக்கத்தை மேலும் ஆராய வேண்டுமென்ற அவசியம் இல்லாமலேயே கீழ்க்கண்டவை தெளிவாகின்றன: அரிய உலோகங்களின் மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சி கடன் கொடுத்தவர்களைப் பாதித்து கடன் வாங்கியவர்களுக்குச் சாதகமானதாகும்; அவற்றின் மதிப்பு அதிகரித்தால் கடன் வாங்கியவர்களைப் பாதித்து கடன் கொடுத்தவர்களுக்குச் சாதகமானதாக இருக்கும்.

## இ. உலகப் பணம்

தங்கம் — நாணயத்திலிருந்து வேறானதாக — முதலில், செலாவணியிலிருந்து திரும்ப வாங்கிப் பதுக்கப்பட்டு, பிறகு செலாவணிச் சாதனமாக இராமல் செலாவணிக்குள் நுழைந்து, கடைசியில் பண்டங்களின் உலகத்தில் எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பாக இயங்குவதற்காக உள்நாட்டுச் செலாவணியின் தடைகளை உடைத்துப் பணமாகிறது. இவ்விதத்தில் தங்கம் உலகப் பணம் ஆகிறது.

ஆரம்பத்தில் அரிய உலோகங்களின் வழக்கமாக உபயோகப்படும் எடைகள் மதிப்பின் ஆதார அளவுகளாகச் செயல் புரிந்தது போல அதே முறையில் உலகச் சந்தையில் பணத்தின் இடுபெயர்கள் அவற்றுக்குப் பொருத்தமான எடைகளின் இடுபெயர்களாக மறுபடியும் மாற்றப்படுகின்றன. செலாவணிச் சாதனத்தின் ஆரம்பம் வடிவமற்ற கரடுமுரடான உலோகமாக (aes rude) இருந்ததைப்போல—நாணய

வடிவம் என்பது அந்த உலோக எடையின் அதிகாரபூர்வமான குறியீடாகும்—உலக நாணயமாகச் செலாவணியாகின்ற விலையுயர்ந்த உலோகம் தன்னுடைய தனியான வடிவத்தையும் முத்திரையையும் கைவிட்டு தனது நடுநிலையான முனை வடிவத்துக்குத் திரும்பி விடுகிறது. தேசிய நாணயங்களான ருஷ்யாவின் இம்பீரியல்கள், மெக்சிகோவின் தாலெர்கள், இங்கிலாந்தின் சவரன்கள் வெளிநாடுகளில் செலாவணியாகிற பொழுது அவைகளின் பெயர்களுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை; அவைகளில் அடங்கியிருக்கிற பொருள் மட்டுமே முக்கியமானது. கடைசியாக, சர்வதேசப் பணம் என்ற வகையில் விலையுயர்ந்த உலோகங்கள் பரிவர்த்தனைச் சாதனம் என்ற தங்களுடைய ஆரம்பச் செயலை (இந்தச் செயல் பண்டப் பரிவர்த்தனையைப் போலவே வெவ்வேறு பூர்வீகக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தொடர்பு முனைகளில் தோன்றியதே தவிர அந்தக் குழுக்களின் உட்பிரதேசத்தில் தோன்றவில்லை) மறுபடியும் நிறைவேற்றுகின்றன. பணம் உலகப் பணமாகச் செயல் புரியும் பொழுது ஆரம்பத்தில் தனக்கிருந்த இயல்பான வடிவத்துக்குத் திரும்புகிறது. அது உள்நாட்டுச் செலாவணியை விட்டு வெளியேறும் பொழுது குறிப்பிட்ட பகுதிகளில் பரிவர்த்தனை வளர்ச்சியினால் ஏற்பட்ட குறிப்பிட்ட வடிவங்களை அல்லது விலையின் அளவுகோலாகப் பணம் அடைகின்ற ஸ்தல வடிவங்களை —நாணயம், சில்லறை, மதிப்பின் அடையாளம் என்பனவற்றைக்—கைவிடுகிறது.

எந்த நாட்டின் உள்நாட்டுச் செலாவணியிலும் மதிப்பின் ஆதார அளவு அடையாளமாக ஒரு பண்டம் மட்டுமே செயல் புரிகிறது என்பதைப் பார்த்தோம். ஆனால் இந்தச் செயலை ஒரு நாட்டில் தங்கமும் இன்னொரு நாட்டில் வெள்ளியும் நிறைவேற்றுவதால் உலகச் சந்தையில் இரண்டு ஆதார அளவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன; பணத்தின் எல்லாச் செயல்களும் இரட்டிப்பாக்கப்பட்டிருக்கின்றன. பண்டங்களின் மதிப்புகளைத் தங்கத்தின் விலைகளிலிருந்து வெள்ளியின் விலைகளுக்கு மாற்றுவதும், வெள்ளியின் விலைகளிலிருந்து தங்கத்தின் விலைகளுக்கு மாற்றுவதும் எப்பொழுதும் இந்த இரண்டு உலோகங்களின் சார்பு மதிப்பைப் பொறுத்திருக்கிறது. இந்தச் சார்பு மதிப்பு தொடர்ச்சி

யாக மாறிக் கொண்டிருப்பதால் அதற்கு ஏற்ப அதன் தீர்மானமும் தொடர்ச்சியான நிகழ்வாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பண்ட உடைமையாளர்கள் வெளிநாட்டு வர்த்தகத்துக்குத் தங்கத்தையும் வெள்ளியையும் மாறிமாறி உபயோகிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதனால் தங்கள் நாட்டுக்குள் பணமாகப் பயன்படுத்தப்படும் உலோகத்தை வெளிநாட்டில் தங்களுக்குப் பணம் என்ற வகையில் தேவைப்படும் உலோகத்துக்குப் பரிவர்த்தனை செய்கிறார்கள். எனவே ஒவ்வொரு நாடும் தங்கம், வெள்ளி இரண்டையும் உலகப் பணமாகப் பயன்படுத்துகிறது.

சர்வதேச பண்டச் செலாவணி உலகத்தில் தங்கமும் வெள்ளியும் செலாவணிச் சாதனமாகத் தோன்றுவதில்லை; ஆனால் சர்வாம்ச பரிவர்த்தனைச் சாதனமாகத் தோன்றுகின்றன. எனினும் சர்வாம்ச பரிவர்த்தனைச் சாதனம் நாம் முன்பு வர்ணித்த இரண்டு வடிவங்களான, கொள்வினைச் சாதனம், பண வழங்கீட்டின் சாதனம் என்ற வடிவங்களில் இயங்குகிறது; ஆனால் உலகச் சந்தையில் அவற்றின் உறவுகள் எதிர்மறையாக இருக்கின்றன. உள்நாட்டுச் செலாவணி உலகத்தில் பணம் நாணயமாக, அதாவது C—M—C என்ற சுறுசுறுப்பான ஒருமையில் இடைக் கண்ணியாகப் பயன்படுத்தப்பட்ட பொழுது அல்லது பண்டங்களின் இடைவிடாத இயக்கத்தின் போது பரிவர்த்தனை மதிப்பின் தற்காலிக வடிவமாகப் பயன்படுத்தப்பட்ட பொழுது அது மற்றவற்றை விலக்கிய கொள்வினைச் சாதனமாகச் செயல் புரிந்தது. உலகச் சந்தையில் இதற்கு எதிர்மறையாக நடக்கிறது. இங்கே இடைமாற்றம் என்பது ஒரு தரப்பாக இருக்குமானால் தங்கமும் வெள்ளியும் கொள்வினைச் சாதனமாகப் பயன்படுகின்றன. எனவே கொள்வினையும் விற்பனையும் பிரிந்திருக்கின்றன. உதாரணமாக, கியாஹ்தா என்ற இடத்தில் நடக்கின்ற எல்லைப்புற வர்த்தகம் நடைமுறையிலும், ஒப்பந்த ஷரத்துக்களின்படியும்[26] பண்டமாற்று; இதில் மதிப்பின் அளவுகோலாக மட்டுமே வெள்ளி உபயோகப்படுகிறது. 1857-58ம் வருட யுத்தம்[27] சீனர்களைக் கொள்வினை செய்யாமல் விற்பனை செய்வதற்குத் தூண்டியது. உடனே வெள்ளி திடீரென்று கொள்வினைச் சாதனமாகத் தோன்றியது. ருஷ்

யர்கள் ஒப்பந்த ஷரத்துக்களின் வாசகத்தை மதிப்பதற்காக பிரான்சின் ஐந்து பிராங்க் நாணயங்களைக் கரடுமுரடான வெள்ளிப் பொருள்களாக மாற்றி அவற்றைப் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுத்தினார்கள். வெள்ளி ஒரு பக்கத்தில் ஐரோப்பா, அமெரிக்காவிலும் மறு பக்கத்தில் ஆசியாவிலும் கொள்வினைச் சாதனமாக எப்பொழுதுமே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது; ஆசியாவில் அது பதுக்கப்பட்ட பணக் குவியலாகவும் உபயோகப்பட்டிருக்கிறது. இரு நாடுகளுக்கிடையே பொருள்களின் பரிவர்த்தனையில் வழக்கமாக நிலவுகிற சமநிலை திடீரென்று பாதிக்கப்படுகிற பொழுது, அதாவது, மோசமான அறுவடை காரணமாக ஒரு நாடு அசாதாரணமான அளவுக்கு வெளியே தானியத்தை வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிற பொழுது, அரிய உலோகங்கள் சர்வதேச கொள்வினைச் சாதனமாகவும் பயன்படுகின்றன. கடைசியாக, தங்கம், வெள்ளியை உற்பத்தி செய்கிற நாடுகள் அரிய உலோகங்களை சர்வதேச கொள்வினைச் சாதனமாகப் பயன்படுத்துகின்றன. இந்த நாடுகளில் அவை நேரடியான உற்பத்திப் பொருள்கள், பண்டங்கள்; பண்டங்களின் மாற்றப்பட்ட வடிவம் அல்ல. செலாவணியின் வெவ்வேறு தேசிய உலகங்களுக்கிடையே பண்டங்களின் பரிவர்த்தனை வளர்ச்சியடையும் பொழுது, சர்வதேசக் கணக்குகளைச் சரிசெய்வதற்குப் பண வழங்கீட்டின் சாதனமாக உலகப் பணம் நிறைவேற்றும் செயலும் வளர்ச்சியடைகிறது.

உள்நாட்டுச் செலாவணியைப் போலவே சர்வதேசச் செலாவணியிலும் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் அளவில் தங்கமும் வெள்ளியும் தேவைப்படுகின்றன. எனவே ஒவ்வொரு நாடும் குவிந்திருக்கும் பணக் குவியலின் பகுதியை உலகப் பணத்தின் சேம ஒதுக்கீட்டு நிதியாகப் பயன்படுத்துகிறது. இந்த நிதி பண்டங்களின் பரிவர்த்தனையின் ஏற்ற இறக்கங்களுக்குத் தகுந்தபடி சில சமயங்களில் குறைகிறது; வேறு சமயங்களில் நிரப்பப்படுகிறது.* உலகப் பணம்

* ''இவ்வாறு குவிந்திருக்கும் பணம் மொத்தப் பணத்தோடு சேர்க்கப்படுகிறது; அந்தப் பணம் வர்த்தகத்தின் சாத்தியக்கூறுகளைத் திருப்தி செய்து உண்மை செலாவணியில் இருக்க வேண்டும் என்பதற்காக செலாவணித் துறையி

செலாவணியின் தேசிய எல்லைகளுக்குள் முன்னும் பின்னும் குறிப்பிட்ட இயக்கங்களில் பாய்கிறது. உலகப் பணத்துக்கு இவற்றைத் தவிர ஒரு பொதுவான இயக்கமும் உண்டு. இங்கே விலகல்நிலை உற்பத்தியின் தோற்றுவாய்களே—இங்கிருந்துதான் தங்கமும் வெள்ளியும் பல்வேறு திசைகளிலும் இருக்கின்ற உலகத்தின் எல்லாச் சந்தைகளுக்கும் போகின்றன. இவ்விதத்தில் தங்கமும் வெள்ளியும் பண்டங்கள் என்ற வகையில் உலகச் செலாவணி எல்லைக்குள் நுழைகின்றன. அவை உள்நாட்டுச் செலாவணி எல்லைக்குள் வருவதற்கு முன்பே, அவற்றில் அடங்கியிருக்கிற உழைப்பு நேரத்தின் விகிதாச்சாரத்துக்குத் தகுந்தபடி அவை பண்ட சமமதிப்புகளுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. எனவே அவை இந்தப் பகுதிகளுக்கு வருகிற பொழுது அவைகளுக்குத் திட்டவட்டமான மதிப்பு முன்பே ஏற்பட்டு விடுகிறது. எனவே உலகச் சந்தையில் அவற்றின் சார்பு மதிப்பு அவற்றின் உற்பத்திச் செலவுகள் ஒவ்வொரு முறை குறையும் பொழுதும் அல்லது அதிகரிக்கும் பொழுதும் ஒரு சீராக பாதிக்கப்படுகிறது. மேலும் இது பல்வேறு தேசிய செலாவணி எல்லைகள் தங்கத்தையும் வெள்ளியையும் சேர்த்துக் கொள்கிற அளவிலிருந்து சுதந்திரமானதாகும். பண்டங்களின் உலகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் சிக்கியிருக்கிற உலோகத் தொடர் இயக்கத்தின் ஒரு பிரிவு தேய்ந்து போன நாணயங்களுக்குப் பதிலாக உடனடியாக உள்நாட்டுச் செலாவணியில் நுழைகிறது; நாணயம், வழங்கீட்டுச் சாதனம், உலகப் பணம் ஆகியவை குவிந்திருக்கிற பல்வேறு தேக்கங்களுக்குள் போகுமாறு இன்னொரு பிரிவு திருப்பிவிடப்படுகிறது; மூன்றுவது பிரிவு வசதிப் பொருள்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது; கடைசியில், எஞ்சியவை வெறும் பதுக்கி வைக்கப்பட்ட பணக் குவியலாக மாற்றப்படுகிறது. எங்கே முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ச்சியடைந்த கட்டத்தை அடைந்திருக்கிறதோ அங்கு பதுக்கப்பட்ட பணக் குவியலின் உருவாக்கம் செலாவணி நிகழ்வின் வெவ்வேறு பிரிவுகளின் சுதந்திரமான இயந்திர நடவடிக்கைக்குத் தேவை

---

லிருந்தே விலகி வெளியே போய் விடுகிறது.'' (G.R. Carly, Note on Verri, *Meditazioni sulla Economia Politica*, t. 15, p. 162, Custody, *l.c.*)

யான மிகக் குறைந்த அளவில் மட்டுமே வைக்கப்படுகிறது. இந்த நிலைமைகளில் பதுக்கிவைக்கப்பட்ட பணக் குவியல்கள் என்பது உபயோகமில்லாமல் கிடக்கும் செல்வம் ஆகும். ஆனால் சில சமயங்களில் அவை பண்டங்களின் இடமாற்றம் தடுக்கப்பட்டதன் விளைவாக, வழங்கீடுகளின் சமநிலையில் தற்காலிகமான உபரியைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம். அப்படிப்பட்ட நிலையில் அவை முதல் உருமாற்றத்தில் கெட்டியாகிப் போன பண்டங்களாகும்.

கொள்கையளவில் பணம் என்ற வகையில் தங்கமும் வெள்ளியும் சர்வாம்சப் பண்டங்களாக இருப்பதைப் போல, உலகப் பணம் என்பது சர்வாம்சப் பண்டம் வகிப்பதற்குத் தகுந்த வடிவமாகும். எல்லாப் பண்டங்களும் தங்கத்துக்கும் வெள்ளிக்கும் பரிவர்த்தனை செய்யப்படுகிற அதே விகிதத்தில் இவையும் எல்லாப் பண்டங்களின் மாற்றமடைந்த வடிவமாகின்றன. எனவே எக்காலத்துக்கும் உரிய பரிவர்த்தனைக்குரிய பண்டங்களாகின்றன. ஸ்தூலமான உழைப்பின் உற்பத்திப் பொருள்களின் இடைமாற்றம் எந்த அளவுக்கு உலக ரீதியாகிறதோ அந்த அளவுக்கு அவை எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரத்தின் நிலையுருவங்களாகக் கைவரப் பெறுகின்றன. அவற்றின் பரிவர்த்தனைத் துறைகளை அமைக்கின்ற குறிப்பிட்ட சமமதிப்புகளின் தொடர்வரிசையின் வளர்ச்சியின் விகிதாச்சாரத்தில் அவை எக்காலத்துக்கும் உரிய சமமதிப்புகள் ஆகின்றன. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு சர்வதேசச் செலாவணியில் சர்வாம்ச வளர்ச்சி பெறுவதால் அது சர்வதேசப் பணமாகத் தங்கம், வெள்ளியில் மாற்றமடைந்திருப்பதாகத் தோன்றுகிறது. பண்ட உடைமையாளர்களுடைய தேசங்கள் தமது பல்துறை உழைப்பாலும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய வர்த்தகத்தாலும் தங்கத்தைப் போதிய பணமாக மாற்றிவிட்டபடியால், அவைகள் உலகச் சந்தையிலிருந்து தங்கம், வெள்ளியின் வடிவத்தில் பணத்தைத் திரும்பப் பெறுவதற்குரிய சாதனங்களாகவே தொழிலையும் வர்த்தகத்தையும் கருதுகின்றன. எனவே தங்கமும் வெள்ளியும் சர்வதேசப் பணம் என்ற முறையில் பண்டங்களின் சர்வதேசச் செலாவணியின் உற்பத்திப் பொருள்கள்; அதன் நோக்கெல்லையை விரிவுபடுத்தும் சாதனங்கள் என்ற இரண்டாகவும் இருக்கின்றன.

தங்கத்தைச் செய்ய விரும்பிய இரஸவாதிகள் எப்படி இரசாயனத் துறையின் வளர்ச்சியைத் தெரிந்து கொள்ளாதிருந்தார்களோ, அது போல பண்டத்தின் மந்திர வடிவத்தைத் தேடிச் செல்லும் பண்ட உடைமையாளர்களும் உலகத் தொழில், உலக வர்த்தகத்தில் இப்பொழுது தோன்றிக் கொண்டிருக்கும் மூலங்களைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். தங்கமும் வெள்ளியும் பணம் பற்றிய தங்களது கருதுகோளில் உலகச் சந்தையை முன்னோக்கிப் பார்ப்பதால், அது உருவாவதற்கும் அவை உதவி செய்கின்றன. அவற்றின் மந்திர சக்தி முதலாளித்துவ சமூகத்தின் குழந்தைப் பருவத்தோடு மட்டும் நிற்கவில்லை. பண்டங்களின் உலகத்தின் பிரதிநிதிகளுக்கு அவற்றின் சொந்த சமூக உழைப்பு தோன்றுகிற தலைகீழ் முறையின் தவிர்க்க முடியாத விளைவுதான் அது. பல புதிய பகுதிகளில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க தாக்கத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

பணம் சர்வதேசப் பணமாக வளர்ச்சி அடைகிற பொழுது, பண்ட உடைமையாளர் பொது நலவாதியாக மாறுகிறார். மனிதர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கின்ற பொது நல உறவுகள் ஆரம்பத்தில் பண்ட உடைமையாளர்கள் என்ற உறவுகளாக மட்டுமே இருந்தன. பண்டங்கள் என்ற வகையில் அவை எல்லாவிதமான மத, அரசியல், தேசிய, மொழித் தடைகளையும் பொருட்படுத்துபவை அல்ல. அவற்றின் சர்வாம்ச மொழி விலையே; பொது இணைப்பு பணமே. ஆனால் தேசிய நாணயங்களுக்கு எதிராக சர்வதேசப் பணத்தின் வளர்ச்சியை ஒட்டி பண்ட உடைமையாளரின் பொது நலவாதமும் வளர்ச்சி அடைகிறது. மனித குலத்தின் வளர்சிதை நிகழ்வுப் போக்கைத் தடுக்கின்ற மரபுவழிப்பட்ட மத, தேசிய, இன்னும் பல்வகையான தப்பெண்ணங்களுக்கு எதிராக அது செய்முறைப் பகுத்தறிவு வழிபாடாகும். தேசம் என்பது ''கினியா நாணயத்தின் முத்திரை மட்டுமே'' என்பதைப் பண்ட உடைமையாளர் நன்கு உணர்ந்திருக்கிறார்; ஏனென்றால் இங்கிலாந்திற்கு அமெரிக்கக் ''கழுகுகளின்'' வடிவத்தில் (eagles) வந்து சேரும் தங்கம் சவரன்களாக மாற்றப்படுகிறது; மூன்று நாட்களுக்குப்

பிறகு அவை பாரிஸ் நகரத்தில் நெப்போலியன்களாகச் செலாவணியாகின்றன; இன்னும் சில வாரங்களுக்குப் பிறகு அவற்றை வெனிசில் டியூகாட்டுகளாகச் சந்திக்கலாம். அவருடைய விழுமிய கருத்தில் உலகம் முழுவதுமே ஒரு சந்தையாக, உலகச் சந்தையாக இணைந்து விட்டது.*

## 4. அரிய உலோகங்கள்

உலோக நாணய முறை படிப்படியாக மாற்றியமைக்கப் பட்ட போதிலும் அதன் ஆதார அமைப்பு அப்படியே நீடித்து வந்திருக்கிறது. இது முன்பே இருக்கின்ற, முன்னரே தயாரிக்கப்பட்ட கருவி என்ற வகையில் முதலாளித்துவ உற்பத்தி இந்த உலோக நாணய முறையை முதலில் கைப்பற்றுகிறது. பணத்தின் பொருளாக மற்ற பண்டங்களை உபயோகிக்காமல் தங்கம், வெள்ளியை ஏன் உபயோகிக்க வேண்டும் என்ற கேள்வி முதலாளித்துவ முறையின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டதாகும். எனவே நாம் இங்கே மிக முக்கியமான அம்சங்களை மட்டும் சுருக்கிச் சொல்லுவோம்.

சர்வாம்ச உழைப்பு நேரம் என்பது அளவுரீதியான வேறுபாடுகளை மட்டுமே வெளிக்காட்ட முடியும் என்பதால் ஒரு பொருளை அதன் தனிவகையான புறவடிவம் என்று அங்கீகரிக்க வேண்டுமென்றால் அது முற்றிலும் அளவுரீதியான வேறுபாடுகளை வெளிக்காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். எனவே இதில் ஒரே மாதிரியான, ஒரே சீரான தன்மை முன்னூகிக்கப்படுகிறது. ஒரு பண்டம் மதிப்புகளின் அளவுகோலாகச் செயல்புரிவதற்கு இந்த நிபந்தனையை முதலில் நிறைவேற்ற வேண்டும். உதாரணமாக, ஒருவர் எல்லாப்

---

* ''தேசங்களுக்கிடையே வர்த்தக உறவுகள் உலகம் பூராவும் அதிகமான அளவுக்கு வளர்ச்சி அடைந்திருப்பதால் இன்று உலகம் முழுவதையுமே எல்லாப் பண்டங்களையும் கொண்ட நிரந்தரமான சந்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு நகரம் என்று சொல்லக் கூடும். ஒரு நபர் தன்னுடைய வீட்டில் இருந்து கொண்டே நிலம், விலங்குகள், மனித உழைப்பு ஆகியவற்றிலிருந்து கிடைக்கிற பொருள்களைப் பணத்தைக் கொண்டு வாங்கவும் அனுபவிக்கவும் இன்று முடியும். எவ்வளவு அதிசயமான கண்டுபிடிப்பு!'' Montanari, *Della Moneta* (1683), p. 40.

பண்டங்களையும் மாடு, தோல், தானியம் இதரவை மூலமாக மதிப்பிடுகிறாரென்றால் அவர் நடைமுறையில் இலட்சியச் சராசரி மாடு, இலட்சியச் சராசரித் தோல் இதரவை மூல மாக அளந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் மாடுகள் ஒவ்வொன்றுக்குமிடையே, தோல் ஒவ்வொன்றுக்கும் இடையே, தானியக் குவியல் ஒவ்வொன்றுக்குமிடையே அளவுரீதியான வேறுபாடுகள் இருக்கின்றன. இதற்கு மாறாக, தங்கமும் வெள்ளியும் சாதாரணப் பொருள்கள் என்ற வகை யில் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. எனவே அவற்றின் சம அளவுகள் சம மதிப்புகளைக் கொண்டிருக் கின்றன.* எக்காலத்துக்கும் உரிய சம மதிப்பாகச் செயல் புரிகிற பண்டம் மற்றொரு நிபந்தனையையும் நிறைவேற்ற வேண்டும். அது முற்றிலும் அளவுரீதியான வேறுபாடுகளையே பிரதிநிதித்துவப்படுத்துகிற செயலிலிருந்து நேரடியாக இந்த நிபந்தனை ஏற்படுகிறது. அந்த உலோகம் தேவைப்படும் எண்ணிக்கையில் பகுதிகளாகப் பிரிபடுந்தன்மை உடைய தாக இருக்க வேண்டும். இந்தப் பகுதிகளை மறுபடியும் ஒன்று சேர்க்கும் சாத்தியமும் அவசியம், அப்பொழுதுதான் கணக் கிடப்படுகிற பணம் உணரக்கூடிய வடிவத்தில் புலப்படும். தங்கமும் வெள்ளியும் இந்தக் குணங்களை மிகவும் அதிகமான அளவில் கொண்டிருக்கின்றன.

செலாவணி ஊடகம் என்ற வகையில் தங்கமும் வெள்ளி யும் மற்ற பண்டங்களோடு ஒப்பிடும்பொழுது சாதகமான அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவற்றின் அதிகமான இன எடை—ஒப்புநோக்கில் சிறிய அளவில் அதிகமான எடையைப் பிரதிநிதித்துவப்படுத்துவது—அவற்றின் பொரு ளாதார இன எடையோடு—ஒப்புநோக்கில் அதிகமான உழைப்பு நேரத்தை, அதாவது அதிகமான பரிவர்த்தனை மதிப்பைச் சிறு அளவில் கொண்டிருப்பது—பொருந்துகிறது.

---

* ''உலோகங்களில் மட்டும்தான் எல்லாவிதமான உறவு களும் ஒரே ஒரு உறவாக, அதாவது அவற்றின் அளவின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டிருப்பது அவற்றின் தனி அம்சமாகும். ஏனென்றால் அவற்றின் உள் அமைப்பில் அல்லது வெளி வடிவத்திலும் அமைப்பிலும் குணரீதியான வேறுபாடுகள் இயற்கையிலேயே அவற்றில் இல்லையாகும்'' (Galiani, *op. cit.*, pp. 126—127).

இது அவற்றின் போக்குவரத்தை, ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கும் மாற்றுவதைச் சுலபமாக்குகிறது. இதனால் தங்கமும் வெள்ளியும் திடீரென்று தோன்றுவதும் அதே போல திடீரென்று மறைவதும் முடிகிறது. சுருக்கமாகச் சொல்வதென்றால் செலாவணி நிகழ்வின் perpetuum mobile என ஒரு பண்டம் இயங்க வேண்டுமென்றால் அதற்கு இன்றியமையாத தகுதியாகிய (sine qua non) உடல்சார்ந்த இடம்பெயர் தன்மையை இந்த குணும்சங்கள் உலோகங்களுக்குத் தருகின்றன.

விலையுயர்ந்த உலோகங்களின் உயர்ந்த தனி மதிப்பு, அவற்றின் நீடிக்கும் தன்மை, ஒப்புநோக்கில் அழிக்க முடியாத தன்மை, காற்றுப்படும் இடத்தில் இருக்கும் பொழுது துருப்பிடிக்காதிருப்பது, அதிலும் குறிப்பாகத் தங்கம் aqua regia தவிர மற்ற அமிலங்களில் கரையாதிருப்பது—இந்த பௌதிக குணும்சங்கள் அனைத்தும் விலையுயர்ந்த உலோகங்களைப் பதுக்குவதற்கு இயற்கையிலேயே தகுந்த பொருட்களாக ஆக்குகின்றன. பீட்டர் மர்டைர்—இவர் சாக்கலேட் பானத்தை மிகவும் விரும்பிக் குடிப்பவராக இருந்திருக்க வேண்டும்—மெக்சிகோவில் ஒருவகைப் பணமாக உபயோகிக்கப்பட்ட கோகோ மூட்டைகளைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:

''மனித குலத்துக்கு இனிமையையும் உடல் ஆரோக்கியத்தையும் தருகின்ற பானம் தயாரிக்கப்படுகிற இந்தப் பொருள் ஆசீர்வதிக்கப்பட்ட பணமாகும். இது தன்னை வைத்திருக்கிற கள்ளமில்லாதவர்களைப் பேராசை என்னும் வெறுக்கத்தக்க நோயிலிருந்து காப்பாற்றுகிறது. ஏனென்றால் இதை நெடுங்காலத்துக்குப் பதுக்க முடியாது; பூமிக்கு அடியிலும் புதைத்து வைக்க முடியாது.'' (*De orbe novo* [Alcala, 1530, dec. 5, cap. 4].[28])

உற்பத்தியின் நேரடியான நிகழ்வில் பொதுவாக உலோகங்கள் வகிக்கும் மாபெரும் முக்கியத்துவத்துக்கு அவை உற்பத்திக் கருவிகளாகப் பயன்படுவது காரணமாகும். தங்கம், வெள்ளியை—அவை அபூர்வமாகக் கிடைப்பவை என்ற போதிலும்—இப்படிப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால் இரும்புடனும், செம்புடனும்கூட (பழங்காலத்து மக்கள்

உபயோகப்படுத்திய கெட்டியான வடிவத்தில்) ஒப்பிடும் பொழுது அவை மிக மென்மையானவை என்பதால் பொதுவாக உலோகங்களுக்கு இருக்கின்ற பயன்மதிப்பு இவற்றிடம் பெருமளவுக்கு இல்லை. உற்பத்தியின் நேரடியான நிகழ்வில் விலையுயர்ந்த உலோகங்களால் ஒரு பயனும் இல்லை என்பது போலவே பிழைப்புச் சாதனம் அதாவது நுகர்வுப் பொருள்கள் என்ற வகையிலும் அவை தேவையற்றவை எனத் தோன்றுகின்றன. எனவே செலாவணியின் சமூக நிகழ்வினுள் அவற்றை நாம் விரும்புகிற எந்த அளவுக்கும் வைக்கலாம். அதனால் உற்பத்தியோ நுகர்வோ பாதிக்கப்படுவதில்லை. அவற்றின் தனிப்பட்ட பயன்மதிப்பு அவற்றின் பொருளாதாரச் செயலோடு மோதிக்கொள்வதில்லை. இதற்கு மாறான வகையில் தங்கமும் வெள்ளியும் எதிர்மறை மிகைப் பொருட்களாக, அதாவது கழித்து விடக்கூடிய பொருள்களாக இருப்பதோடு விழாக்காலங்களுக்குத் தேவையான அலங்காரம், ஆபரணம், ஆடம்பரம் முதலியவற்றுக்குப் பொருத்தமான அழகியல் பொருளாக, சுருக்கமாகச் சொல்வதென்றால் அளவு மீறிய வளத்துக்கும் செல்வத்துக்கும் நேரான வெளியீடாக்குகின்றன. அவை பாதாள உலகத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் கெட்டியாக்கப்பட்ட ஒளி என்று கூடச் சொல்லலாம். ஏனென்றால் ஒளியின் எல்லாக் கதிர்களையும்—அவற்றின் ஆரம்பக் கலவையில்—வெள்ளி பிரதிபலிக்கும். தங்கம் அதிகமான ஆற்றலையுடைய சிவப்பை மட்டுமே பிரதிபலிக்கிறது. மேலும் பொதுவாக வர்ணக் கவர்ச்சியே அழகுணர்ச்சியின் அதிகமான பொதுஜன ரசனையின் வடிவமாகும். இந்திய-ஐரோப்பிய மொழிகளில் விலையுயர்ந்த உலோகங்களின் பெயர்களுக்கும் வர்ணங்களுக்கும் உள்ள அடிச் சொல் தொடர்பை யாக்கப் கிரிம் எடுத்துக் காட்டியிருக்கிறார் (அவர் எழுதிய ஜெர்மானிய மொழியின் வரலாறு என்ற புத்தகத்தைப் பார்க்கவும்[29]).

கடைசியாக, தங்கத்தையும் வெள்ளியையும் நாணயத்திலிருந்து மூசையாகவும், மூசையிலிருந்து வசதிப் பொருள்களாகவும், இதைப்போல எதிர்த்திசையிலும் மாற்றுவது சாத்தியம் என்பதால்—அவற்றுக்கு ஒரு தடவை கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட பயனுள்ள வடிவத்தில் மட்டுமே இருக்க வேண்டியதில்லை என்பது மற்ற பண்டங்களைக் காட்டிலும்

அவற்றுக்கு உள்ள சாதகமான அம்சமாகும்—ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு தொடர்ச்சியாக மாறிக்கொண்டிருக்கும் பணத்துக்கு அவை இயற்கையான பொருளாக அமைகின்றன.

இயற்கையானது வங்கி அதிபர்களையும் பரிவர்த்தனை விகிதத்தையும் எப்படி உண்டாக்குவதில்லையோ அது போலவே பணத்தையும் உண்டாக்குவதில்லை. ஆனால் முதலாளித்துவ உற்பத்தி முறையில் மாய்மாலம் என்ற வகையில் செல்வம் ஒரு குறிப்பிட்ட பொருளில் நிலையான உருவமாக்கப்பட வேண்டும். தங்கமும் வெள்ளியும் அதற்குப் பொருத்தமான புறவடிவங்களாக இருக்கின்றன. தங்கமும் வெள்ளியும் இயற்கையான பணம் அல்ல; ஆனால் பணம் இயற்கையாகவே தங்கம், வெள்ளியில் அடங்கியிருக்கிறது. பணத்தின் நிலையான உருவம் என்ற வகையில் தங்கம் அல்லது வெள்ளி ஒரு பக்கத்தில் செலாவணி நிகழ்வின் உற்பத்திப் பொருள் என்பது மட்டுமல்லாமல், நடைமுறையில் அதன் நிலையான ஒரே உற்பத்திப் பொருளாக இருக்கிறது. இதற்கு மறு பக்கத்தில் தங்கமும் வெள்ளியும் முடிவடைந்த இயற்கைப் பொருள்கள். அவை தனிவகையான வடிவங்களால் கௌரவிக்கப்படாத இந்த இரு அம்சங்களையும் நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. சமூக நிகழ்வின் சர்வாம்ச உற்பத்திப் பொருள் அல்லது உற்பத்திப் பொருளாகக் கருதப்பட்ட சமூக நிகழ்வு ஒரு குறிப்பிட்ட இயற்கைப் பொருள், உலோகம் என்பதாகும். பூமியின் மேற்பரப்பு அதைக் கொண்டிருப்பதால், அது வெட்டி எடுக்கப்படுகிறது.*

பணம் என்பது மாறுத மதிப்பைக் கொண்டிருக்க

* 760ம் வருடத்தில் பிராக் நகரத்துக்குத் தெற்கேயுள்ள ஆற்றுப்படுகையில் தங்கத்தைப் பிரிக்கும் வேலையில் ஏழை மக்கள் கூட்டமாக ஈடுபட்டனர். அவர்களில் மூன்று பேர்கள் ஒரு நாளில் ஒரு மார்க் (அரை பவுண்ட்) எடையளவுக்குத் தங்கத்தைச் சேகரித்தார்கள். இதன் விளைவாக ஏராளமானவர்கள் உடனே அங்கு வந்து சேர்ந்தார்கள். விவசாயத் தொழிலை விட்டுவிட்டு வந்தவர்களின் எண்ணிக்கை வெகு அதிகமாயிருந்ததனல் அடுத்த வருடத்தில் அந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. (M. G. Körner, *Abhandlung von dem Altertum des böhmischen Bergwerks*, Schneeberg, 1758, p. 37 seq.).

வேண்டும் என்ற கோரிக்கையைத் தங்கமும் வெள்ளியும் பூர்த்தி செய்ய முடியாது என்பதை முன்னர் பார்த்தோம். எனினும் இவற்றின் மதிப்பு சராசரியாக மற்ற பண்டங்களைப் பார்க்கும் பொழுது அதிகமான அளவுக்கு நிலையானதாக இருக்கிறது. இதை அரிஸ்டாட்டில் கூட குறிப்பிட்டிருக்கிறார். விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பு அதிகரிப்பதனால் அல்லது குறைவதனால் ஏற்படுகிற பொதுவான விளைவைத் தவிர, தங்கத்துக்கும் வெள்ளிக்கும் ஒப்பீட்டு மதிப்பில் ஏற்படுகிற மாற்றங்களும் குறிப்பிடத்தக்கவையாகும். ஏனென்றால் உலகச் சந்தையில் அவை இரண்டும் பணப் பொருளாக அருகருகாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த உலோகங்களின் மதிப்பில் ஏற்படுகிற மாற்றங்களுக்குக் கலப்பற்ற பொருளாதாரக் காரணங்களாக—நாடுகள் கைப்பற்றப்படுவதும் அரசியல் கொந்தளிப்புக்களும் பண்டைக் காலத்தில் உலோகங்களின் மதிப்பில் கணிசமான விளைவை ஏற்படுத்தினாலும் அந்த விளைவு ஸ்தல அளவிலும் தற்காலிகமாகவுமே இருந்தது—இவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தைச் சொல்ல வேண்டும். இந்த உழைப்பு நேரமுமே இயற்கைக் கனிவளங்கள் ஒப்பு நோக்கில் குறைவாக இருப்பதையும் அவற்றைக் கலப்பற்ற உலோக நிலையில் சேகரிப்பதிலுள்ள சிரமங்களையும் பொறுத்திருக்கும். உண்மையாகச் சொல்வதென்றால் மனிதன் கண்டுபிடித்த முதல் உலோகம் தங்கமே. ஒரு பக்கத்தில் இயற்கையில் தங்கம் கலப்பற்ற கெட்டியான வடிவத்தில், மற்ற பொருள்களோடு இரசாயன ரீதியில் சேர்ந்திராத தனிப் பொருளாகக் கிடைக்கிறது, அல்லது ரஸவாதிகள் சொன்னதைப் போல கன்னி நிலையில் கிடைக்கிறது. மறு பக்கத்தில் தங்கத்தை சுத்தப்படுத்துகின்ற தொழில்நுட்ப வேலையை இயற்கையே ஆறுகளில் பெருமளவுக்குச் செய்துவிடுகிறது. எனவே ஆறுகளிலிருந்தோ அல்லது வண்டல் படிமங்களிலிருந்தோ தங்கத்தைச் சேகரிப்பதற்கு மனிதனின் கரடு முரடான உழைப்பு மட்டுமே தேவையானதாக இருக்கிறது; ஆனால் வெள்ளியை உற்பத்தி செய்வதற்கு சுரங்கங்களும் பொதுவாக ஒப்புநோக்கில் உயர்ந்த நிலையிலுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியும் தேவைப்படுகிறது. எனவே வெள்ளி தங்கத்தைக்

காட்டிலும் குறைவாக அருமையாக இருந்தாலும் அதிக மாகக் கிடைத்தாலும் அதன் மதிப்பு ஆரம்பத்தில் தங்கத் தைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது. ஒரு அராபிய இனக்குழு ஒரு பவுண்ட் இரும்புக்குப் பத்துப் பவுண்ட் தங்க மும் ஒரு பவுண்ட் வெள்ளிக்கு இரண்டு பவுண்ட் தங்கமும் கொடுத்ததாக ஸ்ட்ராபோ சொல்லியிருப்பது முற்றிலும் நம்ப முடியாததல்ல. ஆனல் சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சி அடைகிற பொழுது சாதாரண உழைப் பின் உற்பத்திப் பொருள் சிக்கலான உழைப்போடு ஒப் பிடுகையில் அதிக விலையைப் பெறுகிறது; மேலும் பூமியின் மேற்பரப்பு மென்மேலும் அதிகமாக வெட்டப்படுகிற பொழுது ஆரம்பத்தில் தங்கம் கிடைத்துக் கொண்டிருந்த மேற்பரப்புத் தோற்றுவாய்கள் முழுமையும் பயன்படுத்தித் தீர்க்கப்பட்டு விடுகின்றன. எனவே தங்கத்தோடு ஒப்பிடு கிற பொழுது வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைய ஆரம்பிக் கிறது. கடைசியாக, தொழில்நுட்பம் மற்றும் போக்கு வரத்துச் சாதனங்களின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத் தில் தங்கம் அல்லது வெள்ளி கிடைக்கின்ற புதிய பிரதேசங் களைக் கண்டுபிடிப்பது முக்கியமான பாத்திரத்தை வகிக் கிறது. பண்டைக் கால ஆசியாவில் தங்கமும் வெள்ளியும் 6 : 1 அல்லது 8 : 1 என்ற விகிதாச்சாரத்தில் இருந்தது. இரண்டாவது விகிதாச்சாரம் சீனவிலும் ஜப்பானிலும் பத் தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்திலும் கூட இருந்தது. கிசெனபோன் காலத்தில் இருந்த விகிதாசாரமான 10 : 1 என்பதை பண்டைக்காலத்தின் மத்தியப் பகுதியில் இருந்த சராசரி விகிதாசாரமாகக் கொள்ளலாம். ஸ்பெயி னுக்கு உரிய வெள்ளிச் சுரங்கங்களைக் கார்தேஜும் பிறகு ரோமாபுரியும் உபயோகித்ததன் மூலம் பண்டைய உலகத் தில் ஏற்பட்ட விளைவு அமெரிக்காவில் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டது நவீன ஐரோப்பாவின் மீது ஏற்படுத்திய விளைவுக்குச் சமமானதாகும். ரோமானியப் பேரரசர்கள் சகாப்தத்தின் போது 15 அல்லது 16 : 1 என்பதை சுமாரான சராசரி விகிதமாகக் கொள்ளலாம். ஆனல் ரோமாபுரியில் வெள்ளியின் மதிப்பு இதற்கும் கீழே அடிக்கடி வீழ்ச்சிய டைந்தது. மத்திய காலத்திலிருந்து நவீன காலத்துக்கு வரு கிற காலகட்டத்தில் தங்கம் ஒப்பு நோக்கில் மதிப்புக் குறை

வதில் ஆரம்பமாகி வெள்ளியின் வீழ்ச்சியில் முடிவடைகின்ற இதே போன்ற இயக்கத்தைக் காணலாம். கிசெனபோன் காலத்தில் இருந்ததைப் போலவே மத்திய காலத்திலும் 10 : 1 என்ற சராசரி விகிதாசாரமே இருந்தது. அமெரிக்காவில் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக இந்த விகிதம் மறுபடியும் 16 அல்லது 15 : 1 என்று ஆயிற்று. ஆஸ்திரேலியாவிலும், கலிபோர்னியாவிலும் கொலம்பியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தங்கத்தின் மதிப்பில் மற்றுமொரு வீழ்ச்சியை ஏற்படுத்தக் கூடும்.*

---

* ஆஸ்திரேலியாவிலும் மற்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக தங்கம் வெள்ளியின் ஒப்பு மதிப்பில் இதுவரை எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. மிஷேல் ஷெவலியே இதற்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்த போதிலும் இந்த முன்னாள் சான்-சிமோன்வாதியின் சோஷலிசத்துக்குத் தருகிற அதே மதிப்பைத்தான் இந்த மாறான கருத்துக்கும் தர வேண்டும். 1850 முதல் 1858 வரையுள்ள காலத்தில் தங்கத்தின் மூலமாகச் சொல்லப்படுகிற வெள்ளியின் சராசரி மதிப்பு 1830இலிருந்து 1850 வரை உள்ள காலத்தில் இருந்ததைக் காட்டிலும் 3 சதவிகிதம் அதிகமாக இருந்தது என்று லண்டன் பங்கு மார்க்கெட் விலைப்புள்ளிகள் காட்டுகின்றன; ஆனால் ஆசிய நாடுகள் வெள்ளியை வாங்கியதுதான் இந்த உயர்வுக்குக் காரணமாகும். 1852-1858ம் வருடங்களின் இடையே வெவ்வேறு வருடங்களிலும் மாதங்களிலும் வெள்ளியின் விலைகள் மாறி வருவது இந்தக் கொள்வினையினால் மட்டுமே ஏற்படுகிறது; புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தோற்றுவாய்களிலிருந்து வந்த தங்கத்தினால் இது நிச்சயமாக ஏற்படவில்லை. லண்டன் பங்கு மார்க்கெட்டில் தங்கத்தின் மூலமாகச் சொல்லப்படும் வெள்ளி விலைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்படுகிறது.

ஒரு அவுன்ஸ் வெள்ளியின் விலை

| வருடம் | மார்ச் | ஜுலை | நவம்பர் |
|---|---|---|---|
| 1852 | $60^1/_8$ பென்ஸ் | $60^1/_4$ பென்ஸ் | $61^7/_8$ பென்ஸ் |
| 1853 | $61^3/_8$ ” | $61^1/_2$ ” | $61^7/_8$ ” |
| 1854 | $61^7/_8$ ” | $61^3/_4$ ” | $61^1/_2$ ” |
| 1855 | $60^7/_8$ ” | $61^1/_2$ ” | $60^7/_8$ ” |
| 1856 | 60 ” | $61^1/_4$ ” | $62^1/_8$ ” |
| 1857 | $61^3/_4$ ” | $61^5/_8$ ” | $61^1/_2$ ” |
| 1858 | $61^5/_8$ ” | — ” | — ” |

## இ. செலாவணி ஊடகம், பணம் பற்றிய கொள்கைகள்

தற்கால முதலாளித்துவ சமூகம் தனது குழந்தைப் பருவத்தில் இருந்த பதினாறாவது, பதினேழாவது நூற்றாண்டுகளின்போது மக்களும் அரசர்களும் பொதுவான பணத் தாசையால் உந்தப்பட்டு, தங்கக் கலத்தைத்* தேடி வெகு தூரத்திலுள்ள நாடுகளின் மீது புனிதப் போர் தொடுத்துச் சென்றதைப் போல, பணவியல் முறையின் (வர்த்தக முறை என்பது அதன் மாறுபட்ட வடிவம்தானே) ஆரம்ப கர்த்தாக்கள் தங்கம், வெள்ளியே, அதாவது பணம் மட்டுமே செல்வம் என்று அறிவித்தார்கள். முதலாளித்துவ சமூகத்தின் வேலை ''பணம் செய்வது''; அதனால் சாதாரண பண்ட உற்பத்திக் கருத்துநிலையில், பூச்சிகள் அரிக்காத, துருப்பிடிக்காத நிரந்தரமான பதுக்கல் பணக் குவியலை ஏற்படுத்துவது என்று சரியாகச் சொன்னார்கள். 3 பவுன் மதிப்புள்ள ஒரு டன் இரும்பு 3 பவுன் தங்கத்தின் மதிப்பைக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டினால் அது பணவியல் முறையை மறுப்பதாகாது. இங்கேயுள்ள பிரச்சினை பரிவர்த்தனை மதிப்பின் அளவு அல்ல, அதன் போதிய வடிவமே. சர்வதேச வர்த்தகத்தின் மீதும், சர்வதேச வர்த்தகத்துக்கு நேரடியாக இட்டுச் சென்ற தேச அளவிலான உழைப்பின் தனிப்பட்ட பிரிவுகள் மீதும் பணவியல் முறையும் வர்த்தக முறையும் காட்டிய விசேஷமான அக்கறையைப் பொறுத்தவரை—செல்வம் அல்லது பணத்தின் உண்மையான தோற்றுவாய்கள் இவை மட்டுமே என்று அவர்கள் கருதினார்கள்.—அந்தக் காலங்களில் தேசிய உற்பத்தி என்பது பெருமளவில் இன்னும் நிலப்பிரபுத்துவ வடிவங்களின் சுற்றுவட்டத்துக்குள்ளாகவே நடைபெற்று வந்தது என்பதையும் இது உற்பத்தியாளர்களுக்கு உடனடியான வாழ்க்கை ஆதாரமாக இருந்தது என்பதையும் ஒருவர் நினைவில் கொள்ள வேண்

* ''தங்கம் ஒரு அற்புதமான பொருள்! அதை வைத்திருப்பவருக்கு விரும்பிய பொருள்கள் எல்லாம் கிடைக்கும். ஆன்மாக்கள் சொர்க்கத்தில் நுழைவதற்குக் கூட தங்கம் உதவக் கூடும்'' (1503ம் வருடத்தில் கொலம்பஸ் ஜமெய்க்காவிலிருந்து எழுதிய கடிதம்). (ஆசிரியருடைய பிரதியில் உள்ள குறிப்பு—ப-ர்.)

டும். பெரும்பான்மையான பொருள்கள் பண்டங்கள் ஆக வில்லை; எனவே அவை பணமாக மாற்றப்படவும் இல்லை; சமூக வளர்சிதை மாற்றத்தின் பொது நிகழ்வுக்குள் சேர்க்கப்படவுமில்லை. எனவே இவை எக்காலத்துக்கும் உரிய சூக்கும உழைப்பின் பொருண்மையாகத் தோன்றவில்லை, உண்மையில் முதலாளித்துவச் செல்வம் என்று ஆகவில்லை. பணம் செலாவணியின் நோக்கமாகவும் இலட்சிய எல்லையாகவும் இருக்கும்பொழுது பரிவர்த்தனை மதிப்பை அல்லது சூக்கும செல்வத்தை (செல்வத்தின் பொருட் கூறு எதையும் அல்ல) உற்பத்தியை நிர்ணயிக்கும் நோக்கமாகவும் முன்னே செலுத்தும் சக்தியாகவும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இந்த தவருகப் புரிந்து கொள்ளப்பட்ட தீர்க்க தரிசிகள் பரிவர்த்தனை மதிப்பின் கெட்டியான, தொடக்கூடிய, பளபளப்பான வடிவத்தை, எல்லாவிதமான குறிப்பிட்ட பண்டங்களிலிருந்தும் வேறுபட்ட சர்வாம்சப் பண்டத்தின் வடிவத்தில் இருக்கிற பரிவர்த்தனை மதிப்பைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தது முதலாளித்துவ உற்பத்தியின் தொடக்க நிலைக்குப் பொருத்தமானதே. அந்தக் காலத்தில் பண்டச் செலாவணி எல்லை என்பது கருரான முதலாளித்துவப் பொருளாதார எல்லையாக இருந்தது. எனவே அவர்கள் அந்த அடிப்படையான எல்லையின் கருத்தோட்டத்திலிருந்து சிக்கலான முதலாளித்துவ உற்பத்தி நிகழ்வு முழுவதையும் ஆராய்ந்தார்கள்; பணத்தை மூலதனம் என்று குழப்பிக் கொண்டார்கள். பணவியல் முறையையும் வாணிப ஊக்க முறையையும் எதிர்த்து நவீன பொருளாதாரவாதிகள் முடிவில்லாதபடி சண்டை போடுவதற்குப் பிரதான காரணமே இந்த முறைகள் முதலாளித்துவ உற்பத்தியின் இரகசியத்தை, அதாவது பரிவர்த்தனை மதிப்பு அதில் மேலாதிக்கம் வகிப்பதை, சூதுவாதில்லாத முரட்டுத்தனத்தோடு வெளிப்படுத்தி விட்டன என்பதனுல் தான். பஞ்சம் ஏற்படுகிற பொழுதுகூட தானிய வியாபாரி தானியத்தை இறக்குமதி செய்வது பணம் செய்வதற்காகத் தானே ஒழிய, நாடு பட்டினி கிடப்பதனுல் அல்ல என்று ரிக்கார்டோ எழுதியிருக்கிருர்; ஆனுல் அவர் இதிலிருந்து தவருன நடைமுறை முடிவுகளுக்கு வருகிருர். பணவியல் முறையையும் வாணிப ஊக்க முறையையும் வெறும் கற்பனைகள், முற்றிலும் தவருன கொள்கைகள்

என்று அரசியல் பொருளாதாரம் தாக்கும்பொழுது அதன் விமர்சனம் தவறுடையதாகும். தன்னுடைய அடிப்படையான முற்கருதுகோள்களையே இவை ஆரம்ப நிலையில் கொண்டிருக்கின்றன என்பதை அது கவனிக்கத் தவறுகிறது. மேலும் இந்த முறைகள் வரலாற்று ரீதியாகச் செல்லுபடியாவதோடு நவீனப் பொருளாதாரத்தின் சில துறைகளில் முழுமையாகச் செல்லுபடியாகக் கூடியவையாகவும் இருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்தி நிகழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், செல்வம் பண்டங்களின் ஆரம்ப வடிவத்தைப் பெறுகிற பொழுது, பரிவர்த்தனை மதிப்பு பணத்தின் ஆரம்ப வடிவத்தைப் பெறுகிறது. உற்பத்தி நிகழ்வின் எல்லாக் கட்டங்களிலும் செல்வம் ஒரு கண நேரத்துக்குத் தனது பண்டங்களின் சர்வாம்ச ஆரம்ப வடிவத்துக்கு மறுபடியும் திரும்புகிறது. பணம் என்ற வகையில் தங்கம், வெள்ளியின் விசேஷ செயல்கள்—செலாவணிச் சாதனம் என்ற வகையில் அவற்றின் வேறுபட்ட தனிப் பண்புகளுக்கும், மற்ற பண்டங்கள் எல்லாவற்றுக்கும் மாறுபட்டும்—அதிகமான வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தில் கூட ஒழிக்கப்படுவதில்லை, ஆனால் குறைக்கப்படுகின்றன; எனவே பணவியல் முறையும் வாணிப ஊக்க முறையும் செல்லுபடியாகத் தக்கனவாகவே இருக்கின்றன. தங்கமும் வெள்ளியும் சமூக உழைப்பின் நேரடியான புறவடிவம் என்ற வகையில், எனவே சூக்குமமான செல்வம் என்ற வகையில் மற்ற ஆசாரமில்லாத பண்டங்களை எதிரிடுகின்ற விரிந்த மனப்பான்மையுள்ள (catholic) உண்மையானது முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களின் மறுப்பு (protestant) விதிப் பட்டியலை மீறிவிட்டது. பணவியல் முறையின் தவறான எண்ணங்களைப் பற்றிய அச்சத்தினால் அவர்கள் பணச் செலாவணி நிகழ்வு பற்றிய அறிவைப் பெருங்காலத்துக்கு இழந்துவிட்டனர். பின்வரும் பகுதி அதை எடுத்துக் காட்டும்.

பணம் என்பது செலாவணியின் கெட்டியான உற்பத்திப் பொருள் என்று மட்டுமே புரிந்துகொண்டிருந்த பணவியல் முறை, வர்த்தக முறைக்கு மாறாக, மூலச் சிறப்புடைய அரசியல் பொருளாதாரம் பணத்தின் நீர்ம வடிவத்தை, அதாவது பண்டத்தின் உருமாற்றத்துக்குள் தோன்றி மறைகிற பரிவர்த்தனை மதிப்பின் வடிவத்தை முதல் கட்டத்தி

லேயே புரிந்து கொண்டது இயற்கையானதுதான். மற்ற வைகளை விலக்கி C—M—C என்ற வடிவத்தில் மட்டுமே பண்டச் செலாவணியைப் பார்ப்பதால், இதையும் கொள்வினை, விற்பனையின் சுறுசுறுப்பான ஒருமையாக மட்டுமே பார்ப்பதால், செலாவணிச் சாதனம் என்ற வகையில் பணத்தின் தனிவகையான அம்சம் பணம் என்ற அதன் தனிவகையான அம்சத்துக்கு எதிராக உறுதியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. நாணயமாகச் செயல் புரியும் பொழுது செலாவணிச் சாதனம் என்கிற அதனுடைய செயல் தனிமைப்படுத்தப்படுமானால், நாம் முன்பு பார்த்தது போல அது மதிப்பின் அடையாளச் சின்னமாகிறது. ஆனால் மூலச் சிறப்புடைய அரசியல் பொருளாதாரமானது நாணயத்தில் மேலாதிக்கம் வகிக்கிற வடிவமாக உலோக நாணயத்தை முதன்முதலில் சந்தித்ததிலிருந்து, அது உலோகப் பணத்தை நாணயமாகவும், நாணயத்தை மதிப்பின் அடையாளச் சின்னமாகவும் கருதியது. மதிப்பின் அடையாளச் சின்னங்களின் செலாவணி பற்றிய சட்டத்துக்குத் தகுந்தவாறு பண்டங்களின் விலைகள் செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவைப் பொறுத்திருக்கின்றன; செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு பண்டங்களின் விலைகளைப் பொறுத்திருப்பதில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டிலிருந்த இத்தாலியப் பொருளியல் நிபுணர்கள் இந்தக் கருத்தைச் சற்றுத் தெளிவாகவே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். லோக் இந்தக் கருத்தைச் சில சமயங்களில் ஒத்துக் கொள்கிறார், சில சமயங்களில் நிராகரிக்கிறார். *Spectator* பத்திரிகையில் (1711ம் வருடம் அக்டோபர் மாதம் 19ந் தேதிய இதழில்) மாண்டெஸ்கியே, ஹியூம் ஆகியோரால் இந்தக் கருத்து உறுதியான முறையில் விரித்துரைக்கப்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தக் கொள்கையை வலியுறுத்தியவர்களில் மிக முக்கியமானவர் ஹியூம் என்பதால் நமது ஆராய்ச்சியை அவரிடமிருந்து தொடங்குவோம்.

குறிப்பிட்ட சில சூழ்நிலைமைகளில் செலாவணியிலிருக்கும் உலோக நாணயம் அல்லது மதிப்பின் அடையாளச் சின்னங்களின் அளவு அதிகரித்தல் அல்லது குறைதல் பண்ட விலைகளின் மீது ஒரே மாதிரியான விளைவை ஏற்படுத்துவது போலத் தோன்றுகிறது. பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு

விலையாக அளவிடப்படுகிற தங்கம், வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைந்தால் அல்லது அதிகரித்தால் விலைகள் அதிகரிக்கும் அல்லது வீழ்ச்சியடையும். ஏனென்றால் அவற்றின் மதிப்பின் ஆதார அளவில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது: விலைகள் அதிகரித்திருப்பதால் அல்லது குறைந்திருப்பதால் தங்கமும் வெள்ளியும் அதிகமான அளவில் அல்லது குறைவான அளவில் செலாவணியிலிருக்கின்றன. எனினும் காணக் கூடிய நிகழ்வு என்னவென்றால் செலாவணிச் சாதனத்தின் அளவு அதிகரிக்கும் பொழுது அல்லது குறையும் பொழுது விலைகள் மாறுகின்றன; பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு மாருதபடி இருக்கிறது. இதற்கு மாருக, செலாவணியிலிருக்கிற மதிப்பின் அடையாளச் சின்னங்களின் அளவு தேவைப்படுகிற அளவுமட்டத்துக்குக் கீழே குறைகிற பொழுது அல்லது அதற்கு மேலே உயர்கிறபொழுது அது பண்ட விலைகளின் வீழ்ச்சியினுல் அல்லது அதிகரிப்பினுல் அந்த அளவு மட்டத்துக்கு பலவந்தமாகக் கொண்டுவரப்படுகிறது. இந்த விளைவு இரண்டு வகைகளிலுமே ஒரே காரணத்தால் கொண்டுவரப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. ஹியூம் இந்த வெளித்தோற்றத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்கிருர்.

செலாவணிச் சாதனங்களின் அளவுக்கும் பண்ட விலைகளின் போக்குக்கும் இடையே உள்ள உறவு பற்றிய எப்படிப் பட்ட அறிவார்ந்த ஆராய்ச்சியும் பணப் பொருளின் மதிப்பு கொடுக்கப்பட்டிருப்பதாக அனுமானித்துக்கொள்ள வேண்டும். ஆனுல், அரிய உலோகங்களின் மதிப்பில் புரட்சிகரமான மாற்றங்கள், அதாவது மதிப்புகளின் ஆதார அளவில் புரட்சிகள் ஏற்படும் காலங்களை மட்டுமே ஹியூம் தனியாக எடுத்துக்கொள்கிருர். அமெரிக்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப் பட்டதன் விளைவாக உலோக நாணயத்தின் அளவு அதிகரித்த அதே சமயத்தில் ஏற்பட்ட பண்ட விலைகளின் அதிகரிப்பு அவருடைய கொள்கைக்கு வரலாற்றுரீதியான பின்னணியாக இருக்கிறது. அதே போல பணவியல் முறையையும் வாணிப ஊக்க முறையையும் எதிர்த்து அவர் நடத்திய விவாதம் அதன் செய்முறை நோக்கமாகும். அரிய உலோகங்களின் உற்பத்திச் செலவுகள் மாருதபடி இருக்கும் பொழுது அவற்றின் அளிப்பை அதிகப்படுத்துவது சாத்திய

மானதே. இதற்கு மறுபக்கத்தில் அவற்றின் மதிப்பு, அதாவது அவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் குறையுமானல், முதன்மையாக அவற்றின் அளிப்பு அதிகரிப்பது தக்க சான்ருகும். இதைப் பின்பற்றி அரிய உலோகங்களின் குறைந்துவிட்ட மதிப்பு செலாவணிச் சாதனங்களின் அளவு அதிகரித்ததில் பிரதிபலிக்கப்படுகிறது, செலாவணிச் சாதனங்களின் அளவு அதிகரித்துக் கொண்டிருப்பது பண்ட விலைகள் அதிகரித்திருப்பதில் பிரதிபலிக்கப் படுகிறது என்று ஹியூமின் சீடர்கள் அவருக்குப் பிறகு கூறினர்கள். ஆனல் உண்மையில் செலாவணிச் சாதனங்களாக இல்லாமல் பண்டங்களாகத் தங்கம், வெள்ளிக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிற ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் மட்டுமே அதிகரிக்கின்றன. குறைந்திருக்கும் மதிப்பை உடைய தங்கம், வெள்ளியின் விலைகளில் அளவிடப்படுகின்ற அந்தப் பண்டங்களின் விலைகள், தங்கம், வெள்ளியின் பழைய உற்பத்திச் செலவுகளின் அடிப்படையில் பரிவர்த்தனை மதிப்பு அளவிடப்படுகின்ற மற்ற பண்டங்களோடு ஒப்பிடப்படுகிற பொழுது இவ்விதமாக அதிகரிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட நாட்டில் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புக்கள் இரட்டை முறையில் அளவிடப்படுவது தற்காலிகமாக மட்டுமே ஏற்பட முடியும்; தங்கம், வெள்ளியில் அளவிடப்படுகின்ற விலைகள் பரிவர்த்தனை மதிப்புக்களோடு ஒத்திருக்கும் வகையில் சீரமைக்கப்பட வேண்டும்; அப்பொழுதுதான் கடைசியில் எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புக்களும் பணப் பொருளின் புதிய மதிப்புக்கு ஏற்ப மதிப்பிடக் கூடும். இந்த நிகழ்வை விவரிப்பதற்கோ அல்லது சந்தை விலைகளின் ஏற்ற இறக்கங்களுக்கிடையே பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு நிலவுகின்ற வழிகளை ஆராய்வதற்கோ இது உரிய இடம் அல்ல. பதினரும் நூற்ருண்டில் பண்ட விலைகளின் போக்குகளைப் பற்றி அண்மையில் செய்யப்பட்ட விமர்சன ஆராய்ச்சிகள், முதலாளித்துவ உற்பத்தி முறையின் பரிணுமத்தின் ஆரம்ப கட்டங்களில் அத்தகைய சீரமைப்பு மிகவும் படிப்படியாக மட்டுமே நடை பெற்று நெடுங் காலத்துக்கு நீடிக்கிறது, செலாவணியிலிருக்கும் ரொக்கப் பணத்தின் அதிகரிப்போடு நிச்சயமாக ஒத்திருப்பதில்லை என்

பதை சந்தேகமில்லாதபடி விளக்கியிருக்கின்றன.* எனவே ஹியூமின் சீடர்கள் பரவலாகச் சொல்லுகின்ற குறிப்புகள்— மாசிடோனியா, எகிப்து, ஆசியா மைனர் ஆகியவற்றின் மீது படையெடுத்து வென்றதனுல், பண்டைக்கால ரோமாபுரியில் விலைகள் அதிகரித்துவிட்டன என்பது — முற்றிலும் பொருத்தமற்றதாகும். பதுக்கப்பட்ட பணக்குவியலை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு திடீரென்று பலவந்தமாக மாற்றுவது பண்டைய உலகத்தின் தனிவகையான அம்சமாகும்; ஆனுல் கொள்ளையடித்தல் என்ற சுலபமான வழியினுல் ஒரு குறிப்பிட்ட நாட்டில் அரிய உலோகங்களின் உற்பத்திச் செலவுகள் தற்காலிகமாகக் குறைக்கப்பட்டது பணவியல் செலாவணியின் உள்ளார்ந்த விதிகளை பாதிக்க மாட்டா. உதாரணமாக, எகிப்திலிருந்தும் சிசிலியாவிலிருந்தும் கொண்டுவரப்பட்ட தானியத்தை ரோமாபுரியில் இலவசமாக வினியோகிப்பது தானிய விலைகளை ஒழுங்குபடுத்துகிற பொது விதிகளை பாதிக்காது. மேலே சொல்லப்பட்டதும் இதைப் போன்றதே. பதினெட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த மற்ற எல்லா ஆராய்ச்சியாளர்களையும் போலவே ஹியூமுக்கும் பணச் செலாவணியை விரிவாக ஆராய்வதற்குத் தேவையான விவரங்கள், அதாவது ஒரு பக்கத்தில் பண்ட விலைகளைப் பற்றிய நம்பிக்கையான வரலாறு, மறு பக்கத்தில் செலாவணி ஊடகம் விரிவடைவதும் சுருங்குவதும் பற்றி, விலையுயர்ந்த உலோகங்கள் உள்ளே நுழைவது, வெளியேறுவது முதலியவை பற்றிய அதிகார பூர்வமான தொடர்ச்சியான புள்ளி விவரங்கள் அவருக்குக் கிடைக்கவில்லை. இவை வங்கி முறை முழுமையாக வளர்ச்சியடைந்த பிறகு மட்டுமே கிடைக்கக் கூடிய விவரங்கள். ஹியூமின் செலாவணிக் கொள்கையைக் கீழ்க்கண்ட கருதுகோள்களாகச் சுருக்கிக் கூறலாம். 1. ஒரு குறிப்பிட்ட நாட்டில் இருக்கின்ற பண்ட விலைகள் அங்கேயிருக்கிற பணத்தின் (உண்மையான பணம் அல்லது பணத்தின் அடையாளச் சின்னம்) அளவினுல் நிர்ணயிக்கப்படுகின்றன. 2. ஒரு குறிப்பிட்ட நாட்

* ஹியூமின் கொள்கைக்கு ஒத்து வராவிட்டாலும் கூட, இந்தச் சீரமைப்பு படிப்படியாகவே ஏற்படுகிறது என்பதை ஹியூம் ஒத்துக் கொள்கிறுர். (David Hume, *Essays and Treatises on Several Subjects*, London, 1777, Vol. I, p. 300.)

டில் செலாவணியிலிருக்கும் பணம் அந்த நாட்டில் உள்ள எல்லாப் பண்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பணத்தின் அளவு அதிகரிக்கும் பொழுது, அதற்குத் தக்க வகையில் ஒவ்வொரு அடிப்படை அளவும் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் பொருள்களின் அதிகமான அல்லது குறைவான அளவு விகிதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 3. பண்டங்களின் அளவு அதிகரிக்குமானல் அவற்றின் விலைகள் குறையும் அல்லது பணத்தின் மதிப்பு அதிகரிக்கும். பணத்தின் அளவு அதிகரிக்குமானல், இதற்கு மாருக, பண்ட விலைகள் அதிகரிக்கும், பணத்தின் மதிப்பு குறையும்.*

ஹியூம் பின்வருமாறு எழுதுகிருர்: "அதிகமான பணப் புழக்கத்திஞல் எல்லாப் பொருள்களும் அதிக விலை சொல்லப்படுவது அப்போதுள்ள வர்த்தகத்துக்குக் கெடுதலை ஏற்படுத்தும். எல்லா வெளிநாட்டுச் சந்தைகளிலும் ஏழை நாடுகள் பணக்கார நாடுகளோடு போட்டியிட்டுக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு இது உதவுவதால் ஒவ்வொரு நாட்டிலும் மேற்கூறிய வர்த்தகத்தை வளர்ச்சியடையாதபடி தடுக்கிறது."**"எங்கே நாணயங்கள் அதிகமான அளவில் இருக்கின்றனவோ அங்கே பொருள்களின் ஒரே அளவைப் பிரதிநிதித்துவப்படுத்த அதிக அளவில் அது தேவைப்படும். ஒரு நாட்டை மட்டும் எடுத்துக் கொண்டால் அதஞல் நன்மையுமிருக்காது, தீமையும் ஏற்படாது, ஒரு விளைவும் இருக்காது. ஒரு வியாபாரி தன்னுடைய கணக்குப் பேரேடுகளில் குறைந்த எண்களையுடைய அராபியக் கணக்கிடும் முறையைப் பயன்படுத்துவதற்கு பதிலாக அதிக எண்களையுடைய ரோமானிய முறை உபயோகிப்பாராஞல் அதஞல் கணக்கில் எந்த மாற்றமும் ஏற்படாதது போன்றதே இதுவும். இல்லை, ரோமானிய எண்களைப் போல அதிகமான அளவில் பணம் இருப்பதும் தொல்லையானதுதான். ஏனென்ருல் அதை வைத்திருப்பதற்கும் வெளியிடங்களுக்கு அனுப்புவதற்கும் அதிகமான சிரமங்கள் உண்டாகும்."***

இந்த உதாரணத்தால் எதையாவது நிரூபிக்க முடியுமென்ருல், கொடுக்கப்பட்ட கணக்கு முறையில் பயன்படுத்தப்படும் எண்களின் அளவு எண்ணியல் மதிப்பைப் பொறுத்

* *Cf*. Steuart, *op. cit.*, Vol. 1, pp. 394—400.

** David Hume, *op. cit.*, p. 300.

*** David Hume, *op. cit.*, pp. 302—303.

திருப்பதில்லை, இதற்கு மாருக எண்ணியல் மதிப்பு பயன் படுத்தப்படும் எண்களின் அளவிஞல் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை ஹியூம் எடுத்துக்காட்ட வேண்டும். குறைந்து போய்விட்ட மதிப்பை உடைய தங்கம் அல்லது வெள்ளியில் பண்ட மதிப்புக்களை மதிப்பிடுவது அல்லது ''கணக்கிடுவதில்'' எந்தப் பயனும் இல்லை என்பது உண்மையே; எனவே செலா வணியிலிருக்கின்ற பண்டங்களின் மதிப்பு அதிகரித்ததும் அவற்றைக் கணக்கிடுவதற்கு செம்பைக் காட்டிலும் வெள் ளியை, வெள்ளியைக் காட்டிலும் தங்கத்தைப் பயன்படுத்து வது வசதியானது என்று நாடுகள் ஒரே மாதிரியாக முடிவு செய்தன. நாடுகளின் செல்வவளம் அதிகரிக்கும் விகிதத்தில் அவை மதிப்புக் குறைவான உலோகங்களைத் துணை நாணய மாகவும் அதிக மதிப்புடைய உலோகங்களைப் பணமாகவும் பயன்படுத்தின. மேலும் தங்கம், வெள்ளியின் மூலமாக மதிப்புக்களைக் கணக்கிடுவதற்கு, தங்கமோ வெள்ளியோ 'இருக்க வேண்டும்' என்பது அவசியமல்ல என்பதை ஹியூம் மறந்து விடுகிருர். கணக்கிடப்படும் பணமும் செலாவணிச் சாதனமும் அவருக்கு ஒரே மாதிரியான நிகழ்வுகளே; அவை இரண்டையுமே அவர் நாணயமாகக் (coin) கருதுகிருர். மதிப் பின் ஆதார அளவில், அதாவது கணக்கிடப்படும் பணமாகச் செயல்படும் அரிய உலோகங்களின் மதிப்பில் ஏற்படும் மாற் றம் பண்ட விலைகளில் அதிகரிப்பை அல்லது குறைவை ஏற் படுத்துவதால்—அதே போல பணத்தின் வேக அளவு மாரு மலிருந்தால் செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு அதி கரிக்கிறது அல்லது குறைகிறது—செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு பண்ட விலைகளின் அதிகரிப்பு அல்லது குறைவை நிர்ணயிக்கிறது என்று ஹியூம் முடிவு செய்கிருர். பதினறு, பதினேழாம் நூற்ருண்டுகளில் தங்கம், வெள்ளியின் அளவு அதிகரித்தது மட்டுமல்லாமல் அதே சமயத்தில் அவற் றின் உற்பத்திச் செலவும் குறைந்தது என்பதை ஐரோப்பா வின் சுரங்கங்கள் மூடப்பட்டதிலிருந்து ஹியூம் புரிந்திருக்க வேண்டும். ஐரோப்பாவில் பதினறு, பதினேழாம் நூற் ருண்டுகளில் பண்ட விலைகள் இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்கத் தங்கம், வெள்ளியின் அளவோடு சேர்ந்து அதி கரித்தன; எனவே ஒவ்வொரு நாட்டிலும் பண்ட விலைகள் அந்த நாட்டில் இருக்கின்ற தங்கம், வெள்ளியின் அளவி

ஞல் நிர்ணயிக்கப்படுகின்றன. இது ஹியூம் தயாரித்த முதல் ''அவசியமான விளைவு'' ஆகும்.* பதினாறு, பதினேழாம் நூற்றாண்டில் விலைகள் விலையுயர்ந்த உலோகங்களின் அளவின் அதிகரிப்போடு இணைந்து அதிகரிக்கவில்லை. பண்டங்களின் விலைகளில் ஏதாவதொரு மாற்றத்தையாவது காண்பதற்கு அரை நூற்றாண்டுக்கும் அதிகக் காலமாயிற்று. இதற்குப் பிறகும் வெகு காலத்துக்குப் பிறகுதான் பொதுவாகப் பண்டங்களின் விலைகளில் புரட்சி ஏற்பட்டது, அதாவது குறைந்து போய்விட்ட தங்கம், வெள்ளியின் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பண்டங்களின் மதிப்புக்கள் பொதுவாக மதிப்பிடப்பட்டன. ஹியூம் தமது சொந்தத் தத்துவத்தின் கொள்கைகளுக்கு விரோதமான வகையில் ஒரு பக்கமாக விளக்கம் தரப்பட்ட விவரங்களைச் சிறிதும் ஆராயாமல் பொதுவான கருதுகோள்களாக மாற்றிவிடுகிருர். எனவே பண்டங்களின் விலை அல்லது பணத்தின் மதிப்பு ஒரு நாட்டில் இருக்கும் பணத்தின் தனிமுதலான அளவிஞல் நிர்ணயிக்கப்படுவதில்லை, உண்மையில் செலாவணியிலிருக்கின்ற தங்கம், வெள்ளியின் அளவிஞல் நிர்ணயிக்கப்படுகிறது; எனினும் நெடுங்கால அளவில் நாட்டிலிருக்கின்ற தங்கம், வெள்ளி எல்லாமே செலாவணி எல்லைக்குள் நாணயமாக வாங்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று ஹியூம் முடிவு செய்கிருர்.** தங்கமும் வெள்ளியும் செலாவணியிலிருக்கும் மற்ற எல்லா விதிகளுக்கும் சம்பந்தமில்லாத வகையில், தமக்கென்று மதிப்பைக் கொண்டிருந்தால் திட்டவட்டமான அளவு தங்கம், வெள்ளி மட்டுமே

---

* David Hume, *op. cit.*, p. 303.

** ''விலைகள் சந்தைக்கு வருகின்ற, வரக்கூடிய பண்டங்களையும் செலாவணியாகும் பணத்தையும் பொறுத்திருக்கும் அளவுக்கு ஒரு நாட்டிலிருக்கின்ற பணத்தையோ, பண்டங்களின் தனி முதலான அளவையோ அதிகமாகச் சார்ந்திருக்கவில்லை என்பது தெளிவு. நாணயங்களை இரும்புப் பெட்டிகளில் பூட்டி வைத்திருந்தால், அவை ரத்துச் செய்யப்பட்டுவிட்டது போலவே விலைகளைப் பொறுத்த வரை இதே நிலைதான் இருக்கும். பண்டங்களைக் களஞ்சியங்களிலும் மண்டிகளிலும் பூட்டி வைத்தாலும் இதே விளைவுதான் ஏற்படும். இந்த உதாரணங்களில் பணமும் பண்டங்களும் ஒரு போதும் சந்திப்பதில்லை என்பதால் அவை ஒன்றையொன்று பாதிப்பதில்லை... கடைசியில் விலைகளின் மொத்தம்

பண்டங்களின் கொடுக்கப்பட்ட ஆகக்கூடிய மொத்த மதிப்பின் சம மதிப்பாகச் செலாவணியாக முடியும். எனவே, பண்டங்களின் மொத்த மதிப்புக்குச் சம்பந்தமில்லாமல், நாட்டில் இருக்கும் எல்லாத் தங்கமும் வெள்ளியுமே செலாவணிச் சாதனம் என்ற வகையில் பண்டங்களின் பரிவர்த்தனையில் கலந்து கொள்வதென்ருல், பிறகு தங்கம், வெள்ளிக்கு ஒரு விதமான உள்ளார்ந்த மதிப்பும் இல்லை, அவை உண்மையான பண்டங்களும் அல்ல. இது ஹியூமின் மூன்ருவது ''அவசியமான விளைவு''. ஹியூம் சொல்கிறபடி பார்த்தால், விலையில்லாத பண்டங்களும் மதிப்பில்லாத தங்கமும் வெள்ளியும் செலாவணி நிகழ்வுக்குள் நுழைகின்றன. எனவே அவர் பண்டங்களின் மதிப்பையும் தங்கத்தின் மதிப்பையும் ஒரு போதும் சொல்வதில்லை, ஆனுல் அவற்றின் பரஸ்பர அளவைப் பற்றி மட்டுமே கூறுகிருர். தங்கத்துக்கும் வெள்ளிக்கும் கலப்பற்ற வகையில் கற்பனையான அல்லது சம்பிரதாய ரீதியான மதிப்பு மட்டுமே உண்டு என்று லோக் முன்பே கூறியிருக்கிருர். தங்கம், வெள்ளி மட்டுமே உண்மையான மதிப்புக் கொண்டிருப்பவை என்று பணவியல் முறையின் சார்பில் கூறப்பட்டதற்கு இதுதான் முதல் எதிர்ப்பாகும். தங்கமும் வெள்ளியும் பரிவர்த்தனை என்ற சமூக நிகழ்வில் தாங்கள் நிறைவேற்றும் செயல்கள் காரணமாக மட்டுமே பணமாக இருக்கின்றன என்பதை அவற்றின் தனிவகையான மதிப்பும் அதன் காரணமாக மதிப்பின் அளவும் அவற்றின் சமூகச் செயல்பாட்டினுல் ஏற்படுவது என்ற பொருளில் புரிந்து கொள்ளப்பட்டது.* எனவே தங்கமும் வெள்ளியும் மதிப்பு இல்லாத பொருள்கள்; ஆனுல் செலாவணி நிகழ்வில் அவை பண்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதால், அவை கற்பனையான மதிப்பைப் பெறு

---

நாட்டிலுள்ள நாணயங்களின் புதிய அளவோடு நியாயமான விகிதாச்சாரத்தை ஏற்படுத்திக் கொள்கிறது.'' (David Hume, *op. cit.*, pp. 303, 307, 308.)

* ''தங்கமும் வெள்ளியும் பணம் என்ற வகையில் புரிகிற செயலில் இருந்து பெறுகிற உபரி மதிப்பு பற்றி லா, பிரான்க்ளின் ஆகியோர் எழுதியவற்றைப் பார்க்கவும். போர்பொன்னே எழுதியதையும் பார்க்கவும்''. (ஆசிரியருடைய பிரதியில் உள்ள குறிப்பு.—ப-ர்.)

கின்றன. இந்த நிகழ்வு அவற்றைப் பணமாக மாற்றுவதில்லை, ஆனால் மதிப்பாக மாற்றுகிறது. அவற்றின் சொந்த அளவுக்கும் பண்டங்களின் மொத்த அளவுக்கும் உள்ள விகிதத்தால் இந்த மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. ஏனென்றால் இரண்டு மொத்த அளவுகளும் சமநிலையை அடைய வேண்டும். தங்கமும் வெள்ளியும் பண்டங்களின் உலகத்துக்குள் பண்டங்கள் அல்லாதவையாக நுழைவதாக ஹியூம் சொன்ன போதிலும், அவை நாணயமாகச் செயல் புரிய ஆரம்பித்ததும் அவர் அவற்றை சாதாரணப் பண்டங்களாக, சாதாரணப் பண்டமாற்றின் மூலம் மற்ற பண்டங்களுக்கும் பரிவர்த்தனை செய்யப்படுகிறவையாக மாற்றிவிடுகிறார். பண்டங்களின் உலகம் ஒரு தனிப் பண்டத்தை, உதாரணமாக பத்து லட்சம் குவார்ட்டர் தானியத்தைக் கொண்டதாக இருந்தால், இருபது லட்சம் அவுன்ஸ் தங்கம் இருக்குமானால், ஒரு குவார்ட்டர் தானியம் இரண்டு அவுன்ஸ் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படும்; அல்லது இரண்டு கோடி அவுன்ஸ் தங்கம் இருக்குமானால் ஒரு குவார்ட்டர் தானியம் இருபது அவுன்ஸ் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படும். பண்டத்தின் விலையும் பணத்தின் மதிப்பும் இருக்கும் பணத்தின் அளவுக்கு எதிர்மறை விகிதத்தில் அதிகரிக்கும் அல்லது குறையும்.* ஆனால் பண்டங்களின் உலகம் என்பது முடிவில்லாத பல்வேறு பயன்மதிப்புக்களைக் கொண்டிருக்கிறது; அவற்றின் ஒப்பீட்டு மதிப்பு ஒப்புநோக்கில் அவற்றின் அளவுகளினால் ஒரு போதும் நிர்ணயிக்கப்படுவதில்லை. அப்படியானால் தங்கத்துக்குப் பண்டங்களின் பரிவர்த்தனையை ஹியூம் எவ்வாறு எதிர்நோக்குகிறார்? ஒவ்வொரு பண்டமும் பண்டங்களின் மொத்த அளவில் ஒரு பகுதியாக இருப்பதால் இருக்கின்ற தங்கத்தின் அளவில் அதற்குப் பொருந்துகிற பகுதிக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது என்ற தெளிவில்லாத சூக்குமமான கருத்தைச் சொல்லுவதோடு நிறுத்திக் கொள்கிறார். இவ்விதம் பண்டங்களின் சுறுசுறுப்பான இயக்கம்—பண்டங்களில் அடங்கியிருக்கும் பயன் மதிப்புக்கும் பரிவர்த்தனை மதிப்புக்கும் உள்ள முரண்பாட்டில் இந்த

* ''இந்தக் 'கண்டுபிடிப்பை' உண்மையாகவே மாண்டெஸ்க்யேவின் நூல்களில் பார்க்கலாம்''. (ஆசிரியருடைய பிரதியில் உள்ள குறிப்பு.—ப-ர்.)

இயக்கம் ஆரம்பமாகி பணத்தின் செலாவணியில் பிரதி பலிக்கப்பட்டு பணத்தின் பல்வேறு தனியான அம்சங்களில் அது சிற்றுருவம் அடைகிறது—அழிக்கப்பட்டு, ஒரு குறிப் பிட்ட நாட்டில் இருக்கிற அரிய உலோகங்களின் அளவுக்கும் அதே சமயத்தில் அங்கே கிடைக்கப் பெறுகின்ற பண்டங் களின் அளவுக்கும் ஒரு கற்பனையான, யாந்திரீகமான சம நிலையால் இடம்நிரப்பப்படுகிறது.

சர் ஜேம்ஸ் ஸ்டூவர்ட் நாணயத்தையும் பணத்தையும் பற்றிய தமது ஆராய்ச்சியை ஹியூம், மாண்டெஸ்க்யே பற் றிய நுணுக்கமான விமரிசனத்தோடு தொடங்குகிறார்.* செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு பண்டங்களின் விலை களால் நிர்ணயிக்கப்படுகிறதா அல்லது பண்டங்களின் விலை கள் செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவால் நிர் ணயிக்கப்படுகின்றனவா என்ற கேள்வியை முதன்முதலாக எழுப்பியவர் அவரே. மதிப்பின் அளவுகோல் பற்றி அவர் கொண்டிருக்கும் நம்பமுடியாத அபிப்பிராயம், பொதுவாகப் பரிவர்த்தனை மதிப்பு பற்றி அவர் முரண்பாடாக எழுதி யிருப்பது, வாணிப ஊக்க முறையை நினைவுபடுத்தக் கூடிய வாதங்கள் ஆகியவை அவருடைய விளக்கத்தை மாசுபடுத் திய போதிலும் பணத்தின் ஆதாரமான அம்சங்களையும், பணச் செலாவணியின் பொது விதிகளையும் அவர் கண்டு பிடித்திருக்கிறார். ஏனென்றால் அவர் யாந்திரீகமான வகையில் பண்டங்களை ஒரு பக்கத்திலும் பணத்தை மறு பக்கத்திலும் வைக்காமல், பண்டங்களின் பரிவர்த்தனையின் வெவ்வேறு கட்டங்களிலிருந்து பணத்தின் பல்வேறான செயல்களையும் உண்மையிலேயே கண்டறிகிறார்.

''உள்நாட்டுச் செலாவணியில் பணத்தின் உபயோகத் தை இரண்டு பொதுத் தலைப்புகளில் புரிந்து கொள்ள லாம். முதலாவது, ஒருவர் தமக்குள்ள கடனைக் கொடுப் பது; இரண்டாவது, ஒருவர் தமக்குத் தேவைப்படுவதை வாங்குவது. முன்னதையும் பின்னதையும் ரொக்கப் பணத் தின் தேவைகள் (ready money demands) என்ற பொதுவான தலைப்பில் குறிப்பிடலாம்.... வர்த்தகம், பட்டறைத் தொழில்களின் நிலை, வாழ்க்கை முறை, குடியிருப்போரின் வாடிக்கையான செலவுகள் ஆகியவற்றை மொத்தமாக

* Steuart, *op. cit.*, Vol. 1, p. 394 *et seq.*

எடுத்துக் கொண்டு பார்த்தால் அவை ரொக்கப் பணத் தேவைகளின் தொகுதி அல்லது அந்நியமாதல் என்று நாம் சொல்லக் கூடியனவற்றை ஒழுங்குபடுத்துகின்றன, நிர்ணயிக்கின்றன. இப்படிப் பல்வகைப்பட்ட வழங்கீடுகளைச் செயல்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் பணம் தேவைப்படுகிறது. அந்நியமாதலின் அளவு முன்போலவே இருந்த போதிலும் இந்த விகிதாச்சாரம் சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு அதிகரிக்கலாம் அல்லது குறையலாம்.... ஒரு நாட்டின் செலாவணி நிர்ணயிக்கப்பட்ட அளவு பணத்தையே வாங்கிக் கொள்ளும் என்று நாம் முடிவு செய்யலாம்.''*

''ஒவ்வொரு பொருளின் தகவு விலையும் தேவை, போட்டி (demand and competition) என்ற சிக்கலான நடவடிக்கைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. நாட்டில் இருக்கும் தங்கம், வெள்ளியின் அளவுக்கும் அவைகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விகிதம் எதுவும் இல்லை. கூடுதலான அளவில் இருக்கும் நாணயங்களுக்கு என்ன ஏற்படும்? அவை பெட்டகங்களில் பதுக்கப்படும் அல்லது வசதிப் பொருள்களாக மாற்றப்படும். செலாவணிக்காகத் தேவையான விகிதத்துக்குக் குறைவாக தங்கம், வெள்ளியின் அளவு போய்விடுமானால் அதற்குச் சமமதிப்பீட்டை ஏற்படுத்துவதற்காக அடையாளப் பணம் போன்ற கண்டுபிடிப்புகள் ஏற்படும். வர்த்தகத்தில் சாதகமான நிலையினால் அளவுக்கு மீறிய நாணயங்கள் குவிந்தால் அதே சமயத்தில் அதை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று வர்த்தகத் துறையினரின் கோரிக்கைகள் தடுக்கப்பட்டால், அது பெரும்பாலும் பெட்டகங்களில் போய்ச்சேரும்; அங்கே அவை சுரங்கத்தில் இருந்ததைப் போலவே ஒரு பயனும் இல்லாதிருக்கும்.''**

கடனை அடிப்படையாகக் கொண்ட செலாவணி தன்னுடைய திருப்பு முனைக்குத் திரும்பும் என்பது ஸ்டுவேர்ட் கண்டுபிடித்த இரண்டாம் விதியாகும். கடைசியாக அவர் அரிய உலோகங்களின் ஏற்றுமதி, இறக்குமதியில் வெவ்வேறு நாடுகளில் நிலவுகின்ற வித்தியாசமான வட்டி விகிதங்களினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்கிறார். ஒரு முழுமையான படத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே கடைசி இரண்டு அம்சங்களையும் இங்கே குறிப்பிடுகிறோம். ஏனென்றால் அவை சாதாரணச் செலாவணி என்ற நமது

* James Steuart, *op. cit.*, Vol. 2, pp. 377—379 *passim*.

** James Steuart, *op. cit.*, Vol. 2, pp. 380, 397—407 *passim*.

ஆராய்ச்சிப் பொருளுக்கு மிகவும் அப்பாற்பட்டவையாகும்.* அடையாளப் பணம், கடன் பணம்—பணத்தின் இந்த இரண்டு வடிவங்களையும் ஸ்டுவர்ட் இன்னும் வேறுபடுத்திக் கொள்ள

* "கூடுதலான நாணயங்கள் அநேகமாகப் பெட்டகத்தில் பூட்டப்பட்டிருக்கும் அல்லது தகடுகளாக மாற்றப்பட்டிருக்கும்... காகித நாணயத்தைப் பொறுத்தவரை, அதை வாங்கிக் கொண்டவர்களின் தேவையை நிறைவேற்றுகின்ற அதன் முதல் குறிக்கோளைச் செய்து முடித்ததும் அது காகிதப் பணத்தில் கடன்கொடுத்தவருக்குத் திரும்பிவந்து, கைவரப்பெறும்... எனவே ஒரு நாட்டின் நாணயம் எவ்வளவு அதிகமான அளவுக்கும் அதிகரிக்கட்டும் அல்லது குறையட்டும், அதன் பிறகும் பண்டங்களின் விலை தேவை, போட்டியின் கோட்பாடுகளுக்கு ஏற்ப அதிகரிக்கும் அல்லது குறையும். இது சொத்து வைத்திருப்பவர்கள் அல்லது கொடுப்பதற்குரிய சம மதிப்பு வைத்திருப்பவர்களின் விருப்பங்களையே எப்பொழுதும் சார்ந்திருக்கும், அவர்களிடமிருக்கும் நாணயத்தின் அளவை ஒருபோதும் சார்ந்திருக்காது... நாட்டிலிருக்கும் நாணயத்தின் அளவு எவ்வளவு கீழே குறைந்தாலும், ஒரு நாட்டில் உண்மையான சொத்து எந்தப் பெயரிலாவது இருக்குமானால், அப்படிச் சொத்துக்களைக் கொண்டிருப்பவர்களிடம் நுகர்வுக்குப் போட்டி இருக்குமானல், பண்ட மாற்று, அடையாளப் பணம், பரஸ்பர உறுதிகள், இன்னும் ஆயிரம் விதமான கண்டுபிடிப்புக்கள் மூலமாக விலை உயர்ந்து அப்படியே நிலைத்திருக்கும்.... இந்த நாடு மற்ற நாடுகளோடு தொடர்பு கொண்டிருக்குமானல் அங்கிருக்கும் பலவகையான சரக்குகளின் விலைகளுக்கும் மற்ற பகுதிகளிலுள்ள விலைகளுக்கும் ஒரு அளவுவிகிதம் இருக்க வேண்டும்; நாணயம் திடீரென்று அதிகரிப்பதும் குறைவதும்—அது தானகவே விலைகளை அதிகரிக்கவும் குறைக்கவும் செய்கின்ற நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியுமென்றல்—அந்நியப் போட்டி காரணமாக அந்த நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும்" (*op. cit.*, Vol. 1, pp. 400—401). "ஒவ்வொரு நாட்டின் செலாவணியும் அங்கே சந்தைக்கு வருகிற பண்டங்களை உற்பத்தி செய்கின்ற மக்களின் உழைப்பும் அளவு விகிதத்தில் எப்போதும் இருக்க வேண்டும்... எனவே ஒரு நாட்டின் நாணயம் தொழில் உற்பத்தியின் அளவு விகிதத்துக்குக் கீழாகக் குறைந்து விடுமானல் அதற்குச் சமமதிப்பை உருவாக்குவதற்கு அடையாளப் பணம் போன்ற கண்டுபிடிப்புகள் பயன்படுத்தப்படும். ஆனல் நாணயம் தொழில் உற்பத்தியின் அளவு விகிதத்துக்கு அதிகமாக இருக்குமானல் அதற்கு விலைகளை அதிகரிக்கக் கூடிய விளைவு இருக்காது, அது செலாவணியிலும் நுழையாது. அது பொக்கிஷமாகப்

வில்லை — ஆகியவை உள்நாட்டுச் செலாவணியில் அரிய உலோகங்களுக்குப் பதிலாக கொள்வினைச் சாதனமாக, வழங்கீட்டுச் சாதனமாகச் செயல் புரிய முடியும், ஆனால் உலகச் சந்தையில் அவ்வாறு முடியாது. எனவே காகித நோட்டுக்கள் "சமூகத்தின் பணம்" (money of the society), ஆனால் தங்கமும் வெள்ளியும் "உலகப் பணம்" (money of the world).*

"வரலாற்று ரீதியான"—இந்த வார்த்தை சட்டம் பற்றிய வரலாற்று மரபின்[30] ஆதரவாளர்கள் தருகிற பொருளில் உபயோகிக்கப்படுகிறது—வளர்ச்சியைக் கொண்ட மக்களின் ஒரு அம்சம் அவர்கள் எப்பொழுதும் தம்முடைய சொந்த வரலாற்றை மறந்துவிடுவதாகும். கடந்த அரை நூற்றாண்டில் பண்ட விலைகளுக்கும் பணத்தின் மொத்த அளவுக்கும் உள்ள உறவு பற்றிய பிரச்சினை தொடர்ச்சி

---

பதுக்கப்படும்... உலகத்தின் மற்ற பகுதிகளோடு தொடர்பு கொண்டிருக்கிற எந்த நாட்டிலும் பணத்தின் அளவு எவ்விதமிருந்தாலும், பணக்காரர்களின் நுகர்வுக்கும் ஏழை மக்களின் உழைப்புக்கும் உற்பத்திக்கும் சுமாரான அளவு விகிதத்திலிருக்கக் கூடிய தொகை மட்டுமே எப்போதும் செலாவணியில் இருக்க முடியும்", "நாட்டில் உண்மையிலிருக்கிற பணத்தின் அளவு" இந்த அளவு விகிதத்தை நிர்ணயிப்பதில்லை (*op.cit.*, pp.403—408), "எல்லா நாடுகளும் தங்களுடைய சொந்த செலாவணிக்காக தேவையற்ற ரொக்கப் பணத்தை, தங்கள் நாட்டோடு ஒப்பிடும் பொழுது பணத்துக்கு வட்டி அதிகமாக இருக்கிற நாட்டில் போடுவதற்கு முயற்சி செய்வார்கள்" (*op. cit.*, Vol. 2, p. 5). "ஐரோப்பாவில் அதிகமான செல்வம் படைத்த நாடு, செலாவணியாகும் நாணயத்தின் அடிப்படையில் அதிக ஏழ்மையான நாடாகவும் இருக்கலாம்" (*op.cit.*,Vol.2,p. 6). [ஆசிரியருடைய பிரதியிலிருக்கும் குறிப்பு]: ஆர்தர் யங் எழுதியிருக்கும் புத்தகத்தில் ஸ்டூவர்ட்டுக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள வாதத்தைப் பார்க்கவும்.

* Steuart, *op. cit.*, Vol. 2, p. 370. "சமூகத்தின் பணம்" என்பது உள்நாட்டு, தேசியப் பணம் என்பதே. ஆனால் லூயி பிளாங் "சமூகத்தின் பணத்தை" சோஷலிஸ்ட் பணமாக—இது ஒன்றையும் குறிக்காது—மாற்றுகிறார். அதன் படியே ஜான் லாவையும் சோஷலிஸ்டாக மாற்றுகிறார் (அவர் எழுதிய பிரெஞ்சுப் புரட்சியின் வரலாறு, முதல் தொகுதியைப் பார்க்கவும்).

யாக நாடாளுமன்றத்தில் பேசப்பட்டிருந்தாலும், இங்கிலாந்தில் பெரிதும் சிறிதுமாக ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் வெளிவரக் காரணமாக இருந்த போதிலும், லெஸ்ஸிங் காலத்தில் ஸ்பினேஸா மோஸஸ் மென்டெல்ஸானுக்குத் தோன்றியதைக் காட்டிலும் அதிகமான அளவில் ''செத்த நாயாக'' ஸ்டூவர்ட் இருந்தார். நாணயத்தைப் ('currency') பற்றி மிகவும் சமீபத்தில் எழுதிய வரலாற்றாசிரியரான மக்லாரென் ஸ்டூவர்ட்டின் கொள்கைகளை ஆடம் ஸ்மித் கண்டுபிடித்தாரென்றும் ஹியூம் கொள்கைகளை ரிக்கார்டோ கண்டுபிடித்தாரென்றும் எழுதுகிறார்.* ஹியூம் கொள்கைகளையே ரிக்கார்டோ சிறப்பான வகையில் எழுதியிருக்கிறார். ஆனால் ஆடம் ஸ்மித் ஸ்டூவர்ட் செய்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை அப்படியே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். ஒருவருக்குச் சிறியது கிடைக்குமானால், பெரியது கிடைப்பது சுலபமே; ஆனால் சிறியது கிடைப்பது தான் கஷ்டம் என்று ஒரு ஸ்காட்லாந்துப் பழமொழி கூறுகிறது. இதை ஆடம் ஸ்மித் அறிவுச் செல்வத்துக்கும் சேர்த்துத்தான் என்று பயன்படுத்திக் கொண்டிருப்பது விந்தையே. அவருக்குக் கிடைத்த சிறியதை அவர் பெரியதாக மாற்றிவிடுகிறார், ஆனால் அந்தச் சிறியதின் ஆதாரங்களை, அவற்றை யாரிடமிருந்து எடுத்தார் என்பதை அதிகமான கவனத்தோடு ரகசியமாகவே வைத்துக் கொள்கிறார். அவர் பல தடவைகளில் துல்லியமான வரையறைகளை உபயோகிக்காமல் பிரச்சினையின் கூர்மையான முனையிலிருந்து விலகிப் போய்விடுகிறார். ஆனால் அப்படிப்பட்ட துல்லியமான வரையறைகளை உபயோகித்தால் தமக்கு முந்தியவர்களோடு கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுமே. உதாரணமாக, பணத்தைப் பற்றிய கொள்கையில்

---

* Maclaren, *op. cit.*, p. 43 *seq.* அகால மரணமடைந்த ஒரு ஜெர்மானியர் (குஸ்டவ் யூலியஸ்) தேசபக்தியின் காரணமாக ரிக்கார்டோ மரபுக்கு எதிராக வயோதிகரான பூஷ் என்பவரை நிபுணராக நிறுத்துகிறார். கண்ணிய மிக்க பூஷ் ஸ்டூவர்ட்டின் அற்புதமான ஆங்கில நடையை ஹாம்பர்க் நகரத்தின் கொச்சை மொழியில் மாற்றி எழுதியதோடு, முடிந்த இடங்களில் எல்லாம் மூலக்கருத்தைத் திரித்து எழுதியிருக்கிறார்.

இப்படி நடந்து கொள்கிருர். ஒரு நாட்டிலிருக்கின்ற தங்கம், வெள்ளியின் ஒரு பகுதி நாணயமாகப் பயன்படுகிறது, ஒரு பகுதி வங்கி அமைப்பு இல்லாத நாடுகளிலுள்ள வியாபாரிகளுக்கு சேம நிதி ஒதுக்கீடாகவும் கடன் முறை உள்ள நாடுகளில் வங்கி இருப்பாகவும் திரட்டப்படுகிறது, ஒரு பகுதி சர்வதேச வழங்கீடுகளை சரிப்படுத்திக் கொள்வதற்கு இருப்பாகப் பயன்படுகிறது, ஒரு பகுதி வசதிப் பொருள்களாக மாற்றப்படுகிறது என்று ஆடம் ஸ்மித் சொல்கிறபொழுது அவர் ஸ்டூவர்ட்டின் கருத்தை வாய்விட்டுச் சொல்லாமல் ஒத்துக் கொள்கிருர். அவர் பணத்தை சாதாரணமான பண்டம் என்று தவருகக் குறிப்பிடுவதன் மூலம் செலாவணியிலிருக்கும் நாணயத்தின் அளவு பற்றிய கேள்வியை மெதுவாக ஒதுக்கிவிடுகிருர்.* ஆடம் ஸ்மித் முற்றிலும் அப்பாவித்தனமான முறையில் தவறு செய்தார் என்று சொல்ல முடியாது. எனினும் இதை மிகுந்த ஆடம்பரத்தோடு வறட்டுச் சூத்திரமாக** மாற்றியிருக்கிருர் ஆடம் ஸ்மித்தைக் கொச்சைப்படுத்தியவரான ஜெ. பி. ஸே என்ற மந்தமான நபர். யோஹான் கிரிஸ்டோப் கோட்ஷெட் தமது ஷோனயிஹை ஹோமர் என்றும் பியெட்ரோ அரெட்டினே தம்மை 'பெரிய மனிதர்களுக்குப் பயத்தைக் கொடுப்பவர்' (terror principum) என்றும் 'உலகத்தின் ஒளி' (lux mundi) என்றும் சொல்லிக் கொள்வதைப் போல பிரெஞ்சுக்காரர்

---

* ''இது தவருனதாகும். இதற்கு மாருக, ஆடம் ஸ்மித் சில பகுதிகளில் விதியைச் சரியாக எடுத்துரைத்திருக்கிருர்'' (ஆசிரியரின் பிரதியில் உள்ள குறிப்பு—ப-ர்.).

** எனவே ''நாணயத்துக்கும்'' ''பணத்துக்கும்'', அதாவது செலாவணிச் சாதனத்துக்கும் பணத்துக்கும் உள்ள வேறுபாடு ஸ்மித் எழுதிய நாடுகளின் செல்வம் என்ற நூலில் இடம் பெறவில்லை. ஹியூமையும் ஸ்டூவர்ட்டையும் நுணுக்கமாகப் படித்திருக்கும் ஆடம் ஸ்மித் வெளித்தோற்றத்துக்கு வெள்ளை மனதுடையவராகத் தோன்றுவதைக் கண்டு ஏமாந்த மக்லாரென் நேர்மையோடு எழுதுகிருர்: ''விலைகள் செலாவணியின் அளவைப் பொறுத்திருக்கிறது என்ற கொள்கை இன்னும் போதுமான கவனத்தைப் பெறவில்லை; திரு. லோக் மாதிரியே டாக்டர் ஸ்மித் உலோக நாணயம் பண்டத்தைத் தவிர வேறு அல்ல என்று கருதுகிருர்'' (லோக்கின் கருத்து வேருனதாகும்) (Maclaren, *op. cit.*, p. 44).

கள் இந்த ஸேயை விஞ்ஞானத்தின் இளவரசர் (prince de la science) என்று முடிசூட்டியிருக்கிறார்கள். வாணிப ஊக்க முறையின் கற்பனவாதத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் பரபரப்பு ஆடம் ஸ்மித்தை உலோக நாணயத்தின் செலாவணியை யதார்த்த பூர்வமாகப் பார்க்க முடியாத படி தடுத்துவிட்டது; ஆனால் கடன் பணத்தைப் பற்றிய அவருடைய கருத்துக்கள் மூலச் சிறப்போடும் ஆழமானவையாகவும் இருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் புதைபடிவ ஆராய்ச்சியாளர்களின் கொள்கைகளில் பைபிள் நூலில் சொல்லப்படுகிற ஊழிப்பெருவெள்ள மரபுக்கு ஆதரவான அல்லது அதை விமர்சிக்கிற நோக்கிலிருந்து பிறக்கும் அடிச்சரடு தவிர்க்க முடியாத வகையில் இடம் பெறுவதைப் போல, பதினெட்டாம் நூற்றாண்டின் பணக் கொள்கைகளின் முகப்புக்குப் பின்னால் பணவியல் முறையை எதிர்த்து ஒரு மறைமுகமான போராட்டம் நடத்தப்படுகிறது. ஏனென்றால் பணவியல் முறைதான் முதலாளித்துவ பொருளாதாரத்தின் தொட்டிலைக் காத்துக் கொண்டிருந்த பூதம்; அதனுடைய நிழல் சட்டங்களின் மீது இன்னும் விழுந்து கொண்டிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பண விவகாரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை நேரடியாக ஊக்குவித்தவை வங்கி நோட்டுகளின் செலாவணியை ஒட்டிய நிகழ்வுகளே தவிர, உலோக நாணயத்தால் ஏற்பட்டவை அல்ல. வங்கி நோட்டுகளின் செலாவணியைப் பற்றிய விதிகளைக் கண்டுபிடிப்பதற்கு மட்டுமே பின்னதைப் பற்றிக் குறித்துக் கொண்டார்கள். 1797ம் வருடத்தில் பாங்க் ஆப் இங்கிலாந்து காகிதப் பணத்துக்குத் தங்கம் கொடுப்பதை நிறுத்தியது, அதனைத் தொடர்ந்து பல பண்டங்களின் விலைகள் அதிகரித்தது, தங்கத்தின் நாணயச்சாலை விலை அதன் சந்தை விலைக்கும் கீழே குறைந்தது, குறிப்பாக 1809ம் வருடத்துக்குப் பிறகு வங்கி நோட்டுகளின் மதிப்புக் குறைந்தது; நாடாளுமன்றத்திற்குள் ஏற்பட்ட கட்சிச் சண்டையும் அதற்கு வெளியே நடைபெற்ற கொள்கை ரீதியான வாதங்களும் இவற்றின் உடனடியான செய்முறை விளைவுகளாகும். இவை இரண்டுமே சம அளவுக்கு உணர்ச்சிகரமாக நடத்தப்பட்டன. பதினெட்டாம் நூற்றாண்டில் காகிதப் பணத்

தின் பரிணாமம், லா என்பவருடைய வங்கியின் முறிவு[31], மதிப்பின் அடையாளச் சின்னங்களின் மொத்த அளவின் வளர்ச்சி அதே சமயத்தில் வட அமெரிக்காவிலுள்ள ஆங்கிலக் காலனிகளின் மாகாண வங்கி நோட்டுகள் பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து நடுப்பகுதி வரையிலும் மதிப்புக் குறைந்தது, அதற்குப் பிறகு சுதந்திரப் போரின் போது அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட 'கான்டினென்டல் சட்டங்கள்' (Continental bills) மூலம் திணிக்கப்பட்ட காகிதப் பணம், கடைசியாக பிரான்சில் இன்னும் பெரிய அளவில் நடத்தப்பட்ட பரிசோதனையான தாள் நாணயங்கள் (assignats) இந்த விவாதங்களுக்கு வரலாற்றுப் பின்னணியாக அமைந்தன. இந்தக் காலத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஆங்கில எழுத்தாளர்கள் முற்றிலும் வேறு வகையான சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்ட வங்கி நோட்டுகளின் செலாவணியை பலவந்தமான நாணயமாகிய மதிப்பின் அடையாளச் சின்னங்கள் அல்லது அரசாங்கப் பத்திரங்களின் செலாவணியோடு குழப்பிக் கொண்டார்கள். இந்த பலவந்தமான நாணயத்தின் நிகழ்வுகளை உலோகச் செலாவணியின் விதிகளால் விளக்கிக் கூறுவதற்கு அவர்கள் பாசாங்கு செய்த போதிலும் உண்மையில் முன்னதின் நிகழ்வுகளிலிருந்துதான் பின்னதின் விதிகளை வருவிக்கிறார்கள். 1800—1809ம் வருடங்களுக்கிடையில் வெளிவந்த எண்ணற்ற எழுத்தாளர்களின் நூல்களை நாம் ஒதுக்கிவிட்டு உடனடியாக ரிக்கார்டோவை எடுத்துக் கொள்கிறோம். ஏனென்றால் அவர் தமக்கு முந்தியவர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகத் தருவதோடு அவற்றை அதிகத் துல்லியமாக எடுத்துரைக்கிறார். அது மட்டுமல்லாமல் பணக் கொள்கைக்கு அவர் கொடுத்த வடிவம் இன்றுவரை ஆங்கில வங்கிச் சட்டத்தில் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது. தமக்கு முந்தியவர்களைப் போலவே ரிக்கார்டோவும் வங்கி நோட்டுகள் அல்லது கடன் பணத்தின் செலாவணியை மதிப்பின் சாதாரண அடையாளச் சின்னங்களின் செலாவணியோடு சேர்த்துக் குழப்புகிறார். அவருடைய சிந்தனையில் காகிதப் பணத்தின் மதிப்புக் குறைவும் அதே சமயத்தில் ஏற்பட்ட பண்ட விலைகளின் உயர்வும் மேலாதிக்கம் வகிக்கின்றன. அமெரிக்கச் சுரங்கங்கள் ஹியூமுக்கு என்ன பாத்திரம் வகித்தனவோ

அதே பாத்திரத்தை காகித நோட்டுகளை அச்சடிக்கிற திரெட்நீடில் தெரு[32] அச்சகங்கள் ரிக்கார்டோவுக்கு வகிக்கின்றன; இந்த இரண்டு காரணங்களுமே சமமானவை என்று ரிக்கார்டோ ஒரு பகுதியில் குறிப்பிடுகிறார். பாங்க் ஆப் இங்கிலாந்து அமைச்சர்கள், யுத்தக் கட்சியினரின் ஆதரவோடு தனது எதிரிகளுடன்—நாடாளுமன்ற எதிர்க் கட்சி, விக் கட்சியினர், சமாதானக் கட்சியினர் ஆகியோர் இதில் அடங்குவர்—அதிதீவிரமாக விவாதப் போர் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் பண விவகாரங்களைப் பற்றி மட்டுமே எழுதப்பட்ட அவருடைய ஆரம்ப நூல்கள் வெளிவந்தன. அவருடைய எழுத்துக்கள் 1810ம் வருடத்தில் வெளிவந்த 'புல்லியன் கமிட்டி'யின் புகழ் வாய்ந்த அறிக்கையின் நேரடியான முன்னோடிகளாக இருந்தன. அந்த அறிக்கை ரிக்கார்டோவின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டது.* பணம் என்பது மதிப்பின் அடையாளச் சின்னம் மட்டுமே என்று வாதாடிய ரிக்கார்டோவும் அவருடைய ஆதரவாளர்களும் 'புல்லியன்வாதிகள்' (Bullionists) என்று விநோதமாக அழைக்கப்பட்டதற்கு இந்தக் கமிட்டியின் பெயரோடு ரிக்கார்டோவின் கொள்கையின் உள்ளடக்கமும் காரணமே. ரிக்கார்டோ அரசியல் பொருளாதாரம் பற்றிய தமது நூலில் இதே கருத்துக்களை மறுபடியும் கூறியதோடு அவற்றை மேலும் விரிவாக எழுதியிருக்கிறார்; ஆனால் அவர் பரிவர்த்தனை மதிப்பு, லாபம், வாரம் முதலியவற்றை ஆராய்ந்த முறையில் பணம் என்பதை ஒரு இடத்தில் கூட ஆராயவில்லை.

ரிக்கார்டோ ஆரம்பத்தில் தங்கம், வெள்ளியின் மதிப்பை, மற்ற எல்லாப் பண்டங்களின் மதிப்பையும் போலவே அவற்றில் பொருண்மைப்படுத்தப்பட்டிருக்கும் உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கிறார்.** நிர்ணயிக்கப்பட்ட

* David Ricardo, *The High Price of Bullion a Proof of the Depreciation of Bank-notes*, 4th edition, London, 1811 (முதல் பதிப்பு 1809ல் வெளியிடப்பட்டது). மற்றும்: *Reply to Mr. Bosanquet's Practical Observations on the Report of the Bullion Committee*, London, 1811.

** David Ricardo, *On the Principles of Political Economy and Taxation*, p. 77: ''மூலப் பொருள்கள் மற்றும் தயாரிப்புப் பண்டங்களின் மதிப்பை ஒழுங்குபடுத்துகிற அதே பொது விதி அரிய

மதிப்புடைய பண்டங்கள் என்பதால் தங்கம், வெள்ளியின் மூலமாக மற்ற பண்டங்களின் மதிப்பு அளவிடப்படுகிறது.* எனவே ஒரு நாட்டில் உபயோகிக்கப்படும் செலாவணிச் சாதனங்களின் அளவு ஒரு பக்கத்தில் பணத்தின் ஆதார அளவின் மதிப்பினுலும், மறு பக்கத்தில் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பின் ஆகக் கூடிய மொத்தத்தினுலும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த அளவானது வழங்கீடுகளில் செய்யப் படுகின்ற சிக்கனத்தினுல் மாற்றியமைக்கப்படுகிறது.**குறிப்பிட்ட மதிப்பை உடைய பணம் எந்த அளவில் செலாவணியாக முடியும் என்பது நிர்ணயிக்கப்படுவதால், செலாவணிச் சுற்று வட்டத்துக்குள்ளாக அதன் மதிப்பு அளவிலே மட்டுமே வெளிப்படுவதால், செலாவணி எல்லைக்குள் இருக்கும் பணத்துக்கு பதிலாக சாதாரணமான மதிப்பின் அடையாளச் சின்னங்களைப் பயன்படுத்தலாம். ஆனல் இவை பணத்தின் மதிப்பினுல் நிர்ணயிக்கப்படுகிற அளவைக் கொண்டிருக்க வேண்டும். மேலும்

''செலாவணியானது முழுவதும் காகிதப் பணமாக இருக்கும் பொழுது அதனுடைய அதிகச் சிறப்பான நிலை

---

உலோகங்களுக்கும் பொருந்தக் கூடியதே, அவற்றின் மதிப்பு அந்த உலோகங்களை உற்பத்தி செய்யவும் சந்தைக்குக் கொண்டுவருவதற்கும் தேவையான உழைப்பின் மொத்த அளவைப் பொறுத்திருக்கிறது.''

* David Ricardo, *op. cit.*, pp. 77, 180, 181.

** Ricardo, *op.cit.*, p. 421: ''ஒரு நாட்டில் உபயோகப் படுத்தக் கூடிய பணத்தின் அளவு அதன் மதிப்பைச் சார்ந்திருக்க வேண்டும். பண்டங்களின் செலாவணிக்குத் தங்கத்தை மட்டுமே உபயோகிப்பதாக இருந்தால், அதே காரியத்துக்கு வெள்ளியை உபயோகித்தால் தேவைப்படுகிற அளவில் 1/15 பங்கு தேவையாக இருக்கும்.'' பின்வரும் பகுதியையும் பார்க்கவும்: ''காகிதப் பணம், உலோகத்தின் அளவுக்கு பதிலாகப் பயன்படுத்தப்படுகிற பொழுது அது பகுதியாகவோ, முழுமையாகவோ பயன்படுத்தப்படுமானுல், அது மூன்று பொருள்களைப் பொறுத்திருக்கும்: முதலாவது, அதன் மதிப்பு; இரண்டாவது, கொடுக்கப்பட வேண்டிய வழங்கீடுகளின் அளவு அல்லது மதிப்பு; மூன்ருவது, இந்த வழங்கீடுகளைக் கொடுக்கும் பொழுது பின்பற்றப்படும் சிக்கனத்தின் அளவு'' (Ricardo, *Proposals for an Economical and Secure Currency*, London, 1816, p. 8).

மையில் இருக்கிறது. ஆனால் காகிதப் பணம் அது பிரதிநிதித்துவம் செய்ய முனைகிற தங்கத்துக்குச் சமமான அளவில் இருக்க வேண்டும்.''*

இதுவரையிலும் ரிக்கார்டோ பணத்தின் மதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று அனுமானித்துக் கொண்டு செலாவணிச் சாதனங்களின் அளவை பண்டங்களின் விலைகளினால் நிர்ணயிக்கிறார். அவருக்கு மதிப்பின் அடையாளச் சின்னம் என்ற முறையில் பணம் தங்கத்தின் நிர்ணயிக்கப்பட்ட அளவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளச் சின்னமாகும். ஹியூம் கருதியது போல பண்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற மதிப்பில்லாத அடையாளச் சின்னமல்ல.

ரிக்கார்டோ தம்முடைய ஆற்றொழுக்கான விளக்கத்தை திடீரென்று நிறுத்திவிட்டு எதிர்த்தரப்புக் கருத்தை ஏற்றுக்கொள்ளும் பொழுது, அரிய உலோகங்களின் சர்வதேசப் போக்கைப் பற்றி ஆராய்வதற்காக அப்படிச் செய்கிறார். அதன் மூலம் அந்நிய அம்சங்களை உள்ளே நுழைத்துப் பிரச்சினையைச் சிக்கலாக்குகிறார். அவருடைய சிந்தனை ஓட்டத்தை நாமும் தொடர்ந்து செல்வோம். முதலில் எல்லா விதமான செயற்கையான, தற்செயலான அம்சங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அரிய உலோகங்கள் பணமாகச் செலாவணியாகின்ற நாடுகளில் உள்ள தங்கம், வெள்ளிச் சுரங்கங்களைத் தேடிக் கண்டுபிடிப்போம். இதுவரையிலும் ரிக்கார்டோவின் ஆராய்ச்சியிலிருந்து நமக்குக் கிடைக்கிற ஒரே கருதுகோள் என்னவென்றால், தங்கத்தின் மதிப்பு கொடுக்கப்படுமானால் செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு பண்டங்களின் விலைகளினால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதே. எனவே ஒரு நாட்டில் செலாவணியிலிருக்கிற தங்கத்தின் மொத்த அளவு அதே சமயத்தில் செலாவணியிலிருக்கிற பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தப் பரிவர்த்தனை மதிப்புக்களின் ஆகக் கூடிய மொத்த அளவு குறைவதாக வைத்துக் கொள்வோம் (பழைய பரிவர்த்தனை மதிப்புடைய பண்டங்கள் முன்னைக் காட்டிலும் குறைவாக உற்பத்தி செய்யப்படுவது அல்லது அதே அளவில் பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், உழைப்பின் உற்பத்தித் திறன்

---

* Ricardo, *Principles of Political Economy*, pp. 432, 433.

அதிகரித்திருப்பதால் அவை குறைவான பரிவர்த்தனை மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவது இதற்குக் காரணமாக இருக்கட்டும்). அல்லது முன்னே சொல்லப்பட்டதற்கு மாறான வகையில் ஆகக் கூடிய மொத்த பரிவர்த்தனை மதிப்பு அதிகரித்திருப்பதாக வைத்துக் கொள்வோம் (உற்பத்திச் செலவுகள் மாறாத நிலையில் இருக்கும் பொழுது அதிகமான அளவில் பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருப்பது அல்லது உழைப்பின் உற்பத்தித் திறன் குறைந்துவிடவே பண்டங்களின் அதே அளவுக்கு அல்லது அதைக் காட்டிலும் குறைந்த அளவுக்கு முன்னை விட அதிகமான மதிப்பு ஏற்படுவது இதற்குக் காரணமாக இருக்கட்டும்). இந்த இரண்டு வகைகளிலும் செலாவணியில் இருக்கின்ற உலோக அளவுக்கு என்ன ஏற்படும்? செலாவணிச் சாதனமாகச் செலாவணியாவதால் மட்டுமே தங்கம் பணம் ஆகிறது என்றால், அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பலவந்தமான காகிதப் பணத்தைப் போல செலாவணி உலகத்தில் இருக்குமாறு அது நிர்ப்பந்திக்கப் படுமானால் (ரிக்கார்டோ இதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்) செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு முதல் வகையில் உலோகத்தின் பரிவர்த்தனை மதிப்புடன் ஒப்பிடுகிறபொழுது அதிகமானதாக இருக்கும்; இரண்டாவது வகையில், வழக்கமான மட்டத்துக்கும் கீழே அது குறைந்து விடும். எனவே தங்கத்துக்குத் தனிவகையான மதிப்பு இருந்த போதிலும் தங்கம் இவ்விதத்தில் மதிப்பின் அடையாளச் சின்னமாகிறது. முதல் வகையில் அது தன்னைக் காட்டிலும் குறைந்த பரிவர்த்தனை மதிப்பை உடைய உலோகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இரண்டாவது வகையில் அதிகமான மதிப்பை உடைய உலோகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. மதிப்பின் அடையாளச் சின்னம் என்ற முறையில் தங்கமானது முதல் வகையில் தமது உண்மையான மதிப்புக்கும் கீழே குறைந்து விடும்; இரண்டாவது வகையில் அதற்கு மேலே உயர்ந்து விடும் (பலவந்தமான காகிதப் பணத்தின் செலாவணியிலிருந்து மறுபடியும் இந்த முடிவு பெறப்படுகிறது). முதல் வகையில் எல்லாப் பண்டங்களும் தங்கத்தைக் காட்டிலும் குறைவான மதிப்பை உடைய உலோகத்தினால் மதிப்பிடப்பட்டால் ஏற்படக் கூடிய அதே விளைவுதான் ஏற்படுகிறது. இரண்டாவது வகையில் அதிக

மதிப்பை உடைய உலோகத்திஞல் மதிப்பிடப்பட்டால் ஏற்படக் கூடிய அதே விளேவுதான் இப்பொழுது ஏற்படுகிறது. எனவே முதல் வகையில் பண்ட விலேகள் அதிகரிக்கும். இரண்டாவது வகையில் குறைந்து விடும். பண்ட விலேகளின் போக்கு, இரண்டிலும் அவை அதிகரிப்பது அல்லது குறைவது, செலாவணியிலிருக்கிற தங்கத்தின் அளவு சார்பு நிலேயில் விரிவடைந்து அல்லது சுருங்கிப் போய், அதன் சொந்த மதிப்புக்குப் பொருந்துகிற மட்டத்துக்கு, அதாவது அதன் மதிப்புக்கும் செலாவணியாகப் போகிற பண்டங்களின் மதிப்புக்கும் உள்ள உறவால் நிர்ணயிக்கப்படுகிற சகஜமான அளவுக்கு மேலே அதிகரிக்க அல்லது அதற்குக் கீழே குறைந்துவிட நேர்கிறது.

செலாவணியிலிருக்கிற பண்டங்களின் ஆகக் கூடிய மொத்த விலே மாருத நிலேயில் இருந்து ஆனல் செலாவணியிலிருக்கிற தங்கத்தின் அளவு பொருத்தமான மட்டத்துக்குக் கீழே குறைந்தாலும் அல்லது மேலே உயர்ந்தாலும் இதே விதமான நிகழ்வு நடைபெறும். செலாவணியில் தேய்ந்துபோன தங்க நாணயத்துக்கு பதிலாக சுரங்கத்திலிருந்து வருகிற புதிய உற்பத்தி போதுமான அளவுக்குப் பயன்படுத்தப்படாவிட்டால் முதலில் கூறப்பட்ட விளேவு ஏற்படும். சுரங்கத்திலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய அளிப்பு செலாவணியின் தேவைகளுக்கு அதிகமான அளவில் இருந்தால் இரண்டாவது விளேவு ஏற்படும். இருவிதமான உதாரணங்களிலுமே தங்கத்தின் உற்பத்திச் செலவு அல்லது அதனுடைய மதிப்பு மாருத நிலேயில் இருப்பதாக வைத்துக் கொள்ளப்படுகிறது.

இதுவரை எழுதியதை சுருக்கமாகச் சொல்லுவோம். பண்டங்களின் பரிவர்த்தனே மதிப்புக்கள் கொடுக்கப்பட்டால், செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு அதனுடைய உலோக மதிப்பிஞல் நிர்ணயிக்கப்படுகிற பொழுது அது பொருத்தமான மட்டத்தில் இருக்கிறது. பண்டங்களின் பரிவர்த்தனே மதிப்பின் ஆகக் கூடிய மொத்தம் குறைவடைகிற பொழுது அல்லது சுரங்கங்களிலிருந்து வருகிற அளிப்பு அதிகரிக்கும் பொழுது பணத்தின் அளவு இந்த மட்டத்துக்கு மேலே உயர்கிறது. தங்கம் அதனுடைய உலோக மதிப்புக்குக் கீழே குறைந்து விடுகிறது; பண்டங்களின் விலே

கள் உயரும். பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பின் ஆகக் கூடிய மொத்தம் அதிகரிக்கும் பொழுது அல்லது சுரங்கங் களிலிருந்து வருகிற தங்கம் தேய்ந்து போன நாணயங் களுக்கு பதிலாக இடம்பெறுவதற்குப் போதுமானதாக இல் லாதிருக்கும் பொழுது பணத்தின் அளவு இந்தப் பொருத்த மான அளவுக்கு கீழே போய்விடும்; தங்கம் அதனுடைய உலோக மதிப்புக்கு மேலே உயரும்; பண்டங்களின் விலை கள் குறைந்துவிடும். இந்த இரு உதாரணங்களிலும் செலா வணியிலிருக்கும் தங்கம் அது உண்மையாகக் கொண்டிருக் கிற மதிப்பைக் காட்டிலும் அதிகமான அல்லது குறைவான மதிப்பின் அடையாளச் சின்னமாகிறது. அது தனக்குத்தானே அதிகமான அல்லது குறைவான மதிப்பின் அடையாளச் சின்னமாகிறது. பணத்தின் புதிய மதிப்புக்குத் தக்கவாறு பண்டங்கள் பொதுவாக மதிப்பிடப்படுகிற பொழுது, பொது வாகப் பண்ட விலைகள் அதற்குத் தகுந்தவாறு அதிகரித் திருக்கும் அல்லது குறைந்திருக்கும் பொழுது, செலாவணி யிலிருக்கிற தங்கத்தின் அளவு செலாவணியின் தேவை களுக்குப் பொருத்தமாக மறுபடியும் இருக்கும் (ரிக்கார்டோ இந்த விளைவை விசேஷமான திருப்தியோடு வலியுறுத்து கிறார்); ஆனால் அது அரிய உலோகங்களின் உற்பத்திச் செலவுகளோடு மாறுபட்டிருக்கும்; ஆகவே பண்டங்கள் என்ற வகையில் அரிய உலோகங்கள் மற்ற பண்டங்களோடு கொண் டிருக்கும் உறவுகளும் அதனால் மாறுபட்டிருக்கும். ரிக்கார் டோவின் பொதுவான பரிவர்த்தனை மதிப்புக் கொள்கை யின் படி, தங்கம் பரிவர்த்தனை மதிப்பைக் காட்டிலும் அதிகமாக உயர்கிற பொழுது, வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அதிலடங்கியிருக்கும் உழைப்பு நேரத்தி னால் நிர்ணயிக்கப்படுகிற மதிப்பைக் காட்டிலும் அதிகமாக உயர்கிறபொழுது, தங்கம் அதிகமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, அதிகரித்த அளிப்பு அதன் பொருத்தமான மதிப்புக்கு மறுபடியும் அதைக் குறைத்துவிடும். இதற்கு மாறாக, தங்கம் அதன் மதிப்புக்குக் கீழே வீழ்ச்சியடைகிற பொழுது, அதன் மதிப்பு அதனுடைய பொருத்தமான மட் டத்துக்கு மறுபடியும் உயர்கிற வரையிலும் தங்கத்தின் உற்பத்தி குறைந்துவிடும். தங்கத்தின் உலோக மதிப்புக்கும் செலாவணி ஊடகம் என்ற முறையில் அதன் மதிப்புக்கும்

இடையிலுள்ள முரண்பாட்டை இந்த எதிர் இயக்கங்கள் தீர்வுக்குக் கொண்டுவரும்; செலாவணியிலிருக்கும் தங்கம் அதன் பொருத்தமான மட்டத்தை அடையும்; பண்ட விலைகள் மதிப்பின் ஆதார அளவுக்குத் தக்கவாறு மறுபடியும் அமைந்துவிடும். தங்கத்தின் மதிப்பில் இவ்விதம் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்கள் மூலைத் தங்கத்தையும் சம அளவுக்கு பாதிக்கும். ஏனென்றல் வசதிப் பொருள்களாகப் பயன்படாமல் இருக்கின்ற தங்கம் அனைத்துமே செலாவணியில் இருப்பதாகவே கருதப்படுகிறது. தங்கம், நாணயமாக அல்லது மூலையாக இருக்கும் போதுகூட, தன்னுடைய சொந்த உலோக மதிப்பைக் காட்டிலும் அதிகமான அல்லது குறைவான மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற அடையாளச் சின்னமாக இருக்கக் கூடும் என்பதால் செலாவணியிலிருக்கும் மாற்றப்படக் கூடிய வங்கி நோட்டுகளும் அதே மாதிரியானவை என்பது தெளிவு. வங்கி நோட்டுகள் மாற்றப்படக் கூடியவை, அவற்றின் பெயரளவிலான மதிப்புக்கு ஏற்ப அவற்றின் உண்மையான மதிப்பு இருக்கிறது என்ற போதிலும் முன்னர் விவரிக்கப்பட்ட காரணங்களினல் செலாவணியிலிருக்கும் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பும் தங்கத்தின் உலோக மதிப்பும் நிர்ணயிக்கின்ற மட்டத்துக்கு மேலே அதன் மொத்த அளவு அதிகரிக்கும் பொழுது அல்லது கீழே குறைந்துவிடுகிற பொழுது உலோகங்களும், மாற்றப்படக் கூடிய நோட்டுகளும் அடங்கிய ஆகக் கூடிய நாணயம் (the aggregate currency consisting of metal and of convertible notes) மதிப்பில் உயர்கிறது அல்லது குறைகிறது. இந்தக் கருத்தின்படி, மாற்றப்படக்கூடிய காகிதப் பணத்தைக் காட்டிலும் மாற்றப்பட முடியாத காகிதப் பணம் ஒரு சாதகமான அம்சத்தைக் கொண்டிருக்கிறது. அதை இரண்டு வழிகளில் மதிப்புக் குறைவு செய்ய முடியும் என்பது அந்த சாதகமான அம்சமாகும். அது அதிக அளவில் வெளியிடப்படுமானல் அது பிரதிநிதித்துவம் செய்கிற உலோகத்தின் மதிப்புக்குக் கீழே குறைந்துவிடும்; அல்லது அது பிரதிநிதித்துவம் செய்கிற உலோகம் தன்னுடைய சொந்த மதிப்புக்குக் கீழே குறைந்துவிட்டாலும் அது வீழ்ச்சியடையும். இந்த மதிப்புக் குறைவு—தங்கத்தைப் பொறுத்த அளவில் நோட்டுகளின் மதிப்புக் குறைவு அல்ல,

தங்கம், நோட்டுகள் இரண்டுக்குமே அதாவது ஒரு நாட்டின் செலாவணியின் ஆகக் கூடிய மொத்த சாதனங்களின் மதிப்புக் குறைவாக இருக்கும் என்பது ரிக்கார்டோவின் முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்ருகும். இதை ஓவர்ஸ்டோன் பிரபுவும் அவருடைய கூட்டாளிகளும் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்து சர் ராபர்ட் பீல் 1844, 1845ம் வருடங்களில் தயாரித்த வங்கிச் சட்டத்தின் அடிப்படையான கோட்பாடாக மாற்றிக்கொண்டனர்.

பண்டங்களின் விலைகள் அல்லது தங்கத்தின் மதிப்பு செலாவணியிலிருக்கிற தங்கத்தின் அளவைப் பொறுத்திருக்கிறது என்பது விளக்கப்பட்டிருக்க வேண்டும். எதை நிரூபிக்க வேண்டுமோ அதை முறையாக எடுத்துரைப்பதில் தான் நிரூபணமே அடங்கியிருக்கிறது. அதாவது பணமாகப் பயன்படுகின்ற விலையுயர்ந்த உலோகத்தின் எந்த அளவும்—அதன் உள்ளார்ந்த மதிப்புக்கும் அதற்கும் உள்ள உறவு எப்படியிருந்த போதிலும்—செலாவணி ஊடகமாக, நாணயமாக ஆக வேண்டும், எனவே செலாவணியிலிருக்கும் பண்டங்களுக்கு—அவற்றின் மதிப்பின் மொத்த அளவு என்னவாக இருந்த போதிலும்—மதிப்பின் அடையாளச் சின்னமாகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், செலாவணி ஊடகம் என்பதைத் தவிர பணம் நிறைவேற்றுகின்ற மற்ற செயல்களை ஒதுக்கி விடுவதில் அதன் நிரூபணம் இருக்கிறது. ரிக்கார்டோ ஒரு மூலைக்குள் தள்ளப்படும் பொழுது—உதாரணமாக பொசாங்கேயோடு நடந்த விவாதத்தில்—அவர் வறட்டுத்தனமான வாதங்களைச் சரணடைகிருர்.* மதிப்பின் அடையாளச் சின்னங்கள் அவற்றின் அளவு அதிகரிப்பதன் காரணமாக மதிப்புக் குறைகின்ற நிகழ்வு அவர் மீது முழுமையாக ஆதிக்கம் செலுத்துவதன் விளைவு இது.

ரிக்கார்டோ தமது கொள்கையை—நாம் கொடுத்திருப்பது போல—முற்றிலும் சூக்கும வடிவத்தில் கொடுத்திருந்தால், பிரதான பிரச்சினையிலிருந்து விலகிச் செல்கிற வகை

---

* David Ricardo, *Reply to Mr. Bosanquet's Practical Observations*, p. 49. ''பணம் அளவில் அதிகரிப்பதற்கும் குறைந்து விடுவதற்கும் தக்க விகிதாச்சாரத்தில் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கும் அல்லது குறையும் என்பதை மறுக்கப் பட முடியாத உண்மையாக நான் எடுத்துக்கொள்கிறேன்.''

யில் ஸ்தூலமான சந்தர்ப்பங்களையும் தற்செயலான அம்சங்களையும் நுழைக்காதபடி இருந்திருந்தால், அதிலிருக்கிற ஓட்டைகள் தெளிவாகப் புலப்பட்டிருக்கும். ஆனால் அவர் தம்முடைய ஆராய்ச்சி முழுமைக்குமே சர்வதேச மேல் பூச்சைப் பூசிவிடுகிருர். எனினும் அவர் எடுத்துக் கொள்ளும் அளவு தோற்றத்தில் பெரிதாக இருந்த போதிலும் அடிப்படையான கருத்துக்கள் முக்கியம் இல்லாதவை என்பதை மறைக்க முடியாது.

எனவே முதல் கருதுகோள் இதுவே: செலாவணியிலிருக்கும் பண்டங்களின் ஆகக் கூடிய மொத்த மதிப்பை நாணயத்தின் உலோக மதிப்பின் மூலமாக மதிப்பிட்டால் வருவது செலாவணியிலிருக்கிற நாணயத்தின் அளவை நிர்ணயித்தால் அந்த அளவு சரியானதாகும். சர்வதேச அரங்கத்துக்குத் தகுந்தவகையில் இதை மாற்றிச் சொல்கிறபொழுது பின்வருமாறு இருக்கும்: செலாவணி சரியான அளவில் இருக்கும் பொழுது ஒவ்வொரு நாட்டிலும் இருக்கிற பணத்தின் அளவு அந்த நாட்டின் செல்வத்துக்கும் உற்பத்திக்கும் பொருந்திய வகையில் இருக்கும். செலாவணியிலிருக்கும் பணத்தின் மதிப்பு அதன் உண்மையான மதிப்புக்கு, அதாவது உற்பத்திச் செலவுகளுக்கு ஒத்தவாறு இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், எல்லா நாடுகளிலும் பணத்துக்கு ஒரேவிதமான மதிப்பு உண்டு.* எனவே பணத்தை ஒரு நாட்டிலிருந்து மற்ருெரு நாட்டுக்கு ஒரு போதும் (ஏற்றுமதியாகவோ அல்லது இறக்குமதியாகவோ) மாற்ற மாட்டார்கள்.** இவ்வாறு வெவ்வேறு நாடுகளின் நாணயங்களுக்கிடையே (செலாவணியிலிருக்கும் பணத்தின் மொத்த அளவு) ஒரு சமநிலை நிலவும். தேசிய நாணயத்தின் பொருத்தமான மட்டம் இப்பொழுது சர்வதேச நாணயச் சமநிலையின் வடி

* Ricardo, *The High Price of Bullion*: ''எல்லா நாடுகளிலும் பணம் ஒரே மதிப்பைக் கொண்டிருக்கும்'' (ப.4). ரிக்கார்டோ தமது *Principles of Political Economy* என்ற புத்தகத்தில் இந்தக் கருதுகோளைச் சிறிது மாற்றுகிருர் என்ருலும் அது இந்த இடத்துக்கு எந்த முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கவில்லை.

** *Op. cit.*, pp. 3—4.

வத்தில் எடுத்துரைக்கப்படுகிறது. இதற்குப் பொருள் என்னவென்றால் தேசியம் பொருளாதாரப் பொது விதியைச் சிறிதும் பாதிக்காது என்பதே. நாம் அதே முக்கியமான கட்டத்துக்கு மறுபடியும் வந்துவிட்டோம்: பொருத்தமான மட்டம் எப்படித் தலைகீழாக்கப்படுகிறது? இப்பொழுது இதைப் பின்வருமாறு குறிப்பிடுவோம். நாணயங்களின் சர்வதேசச் சமநிலை எப்படிக் கவிழ்க்கப்படுகிறது அல்லது பணம் எல்லா நாடுகளிலும் ஏன் ஒரே மதிப்பைக் கொண்டிருப்பதில்லை அல்லது கடைசியாக, பணம் ஒவ்வொரு நாட்டிலும் ஏன் தனக்குரிய தனிவகையான மதிப்பைக் கொண்டிருக்க முடிவதில்லை? முன்பு பண்டங்களின் ஆகக் கூடிய மொத்த மதிப்பு மாறாமல் இருந்தபொழுது செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு அதிகரித்ததால் அல்லது குறைந்ததால் பொருத்தமான மட்டம் கவிழ்ந்து போயிற்று. அல்லது செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு மாறாமலிருக்கும் பொழுது பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு அதிகரித்ததால் அல்லது குறைந்ததால் இந்த விளைவு ஏற்பட்டது. அது போல, இப்பொழுது ஒரு நாட்டில் புதிய சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படுவதன் விளைவாக அந்த நாட்டிலுள்ள தங்கத்தின் அளவு அதிகரிப்பதால், அந்த உலோகத்தின் மதிப்பினால் நிர்ணயிக்கப்படுகிற சர்வதேச மட்டம் கவிழ்ந்து விடுகிறது;* அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டில் செலாவணியிலிருக்கிற பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பின் ஆகக் கூடிய மொத்தம் அதிகரிப்பது அல்லது குறைவதால் இந்த விளைவு ஏற்படுகிறது. முன்பு நாணயத்தைச் சுருக்க அல்லது பெருக்குவதற்கான தேவைகளை முன்னிட்டு, அதனை ஒட்டி பண்ட விலைகளைக் குறைக்க அல்லது உயர்த்த அரிய உலோகங்களின் உற்பத்தி குறைக்கப்பட்டது அல்லது அதிகரிக்கப்பட்டது. அது போலவே இப்பொழுது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு ஏற்றுமதி, இறக்குமதி செய்வதன் மூலம் இதே விளைவு ஏற்படுத்தப்படுகிறது. ஒரு நாட்டில் விலைகள் அதிகரித்து பணச் செலாவணிப் பெருக்கத்தின் காரணமாக தங்கத்தின் மதிப்பு அதனுடைய உலோக மதிப்புக்குக் கீழே குறைந்து விடுகிற பொழுது, மற்ற நாடு

* Ricardo, *The High Price of Bullion*, p. 4.

களோடு ஒப்பிடுகையில் தங்கம் மதிப்புக் குறைவை அடைந்திருக்கும்; எனவே மற்ற நாடுகளில் இருப்பதைக் காட்டிலும் பண்டங்களின் விலைகள் அதிகமாக இருக்கும். எனவே தங்கத்தை ஏற்றுமதி செய்வார்கள்; பண்டங்களை இறக்குமதி செய்வார்கள். இதற்கு எதிரிடையான நிலைமை ஏற்படும் பொழுது முன்பு சொல்லப்பட்டதற்கு எதிர்வகையான போக்கு ஏற்படும். முன்பு பண்டங்களுக்கும் தங்கத்துக்கும் இடையே இருந்த மதிப்புக்களின் பொருத்தமான விகிதாசாரம் மறுபடியும் ஏற்படுகிறவரை தங்க உற்பத்தி தொடர்ந்து நடைபெறுவதைப் போல, இப்பொழுது சர்வதேச நாணயங்களின் சமநிலை மறுபடியும் ஏற்படும் வரையில் தங்கத்தின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி அதனோடு சேர்த்து பண்ட விலைகள் அதிகரிப்பது அல்லது குறைவது தொடர்ந்து நடக்கும். முதல் உதாரணத்தில் தங்கம் அதன் மதிப்பைக் காட்டிலும் அதிகமாக அல்லது குறைவாக இருந்ததனால் மட்டுமே தங்கத்தின் உற்பத்தி அதிகரித்தது அல்லது குறைந்ததைப் போல, இப்பொழுது அதே காரணம் தங்கத்தின் சர்வதேசப் போக்குவரத்தை உண்டாக்குகிறது. முந்திய உதாரணத்தில் தங்க உற்பத்தியில் ஏற்படுகிற ஒவ்வொரு மாற்றமும் செலாவணியிலிருக்கிற நாணயத்தின் அளவையும் அதன் மூலம் விலைகளையும் பாதித்ததைப் போல இப்பொழுது அவை அதே போல தங்கத்தின் சர்வதேச இறக்குமதி, ஏற்றுமதியினால் பாதிக்கப்படுகின்றன. தங்கத்துக்கும் பண்டங்களுக்கும் இருக்கின்ற சார்பு மதிப்பு அல்லது செலாவணிச் சாதனங்களின் வழக்கமான அளவு ஏற்படும்பொழுது முதல் உதாரணத்தில் தங்கம் மேலும் உற்பத்தி செய்யப்படுவதில்லை; பிந்திய உதாரணத்தில், தேய்ந்து போன நாணயங்களுக்கு பதிலாக உபயோகப்படுவதற்கும் வசதிப் பொருள்களைத் தயாரிப்பதற்கும் தவிர, தங்கம் மேலும் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எனவே

''பொருள்களுக்குப் பரிவர்த்தனையாகப் பணத்தை ஏற்றுமதி செய்கிற ஆசை மயக்கம் அல்லது சாதகமில்லாத வர்த்தக சமநிலை என்று சொல்லப்படுவது தேவைக்கு மீறிய நாணயம் இருந்தாலொழிய வேறு நிலைமைகளில் ஒரு போதும் ஏற்படுவதில்லை.''*

* Ricardo, *op. cit.*, pp. 11, 12.

நாணயம் அதனுடைய சரியான மட்டத்துக்கு மேலே பெருகுவதால் அல்லது கீழே சுருங்குவதால் ஏற்படுகிற உலோகத்தின் குறைவான மதிப்பு அல்லது மிகையான மதிப்பு தங்கத்தின் இறக்குமதி அல்லது ஏற்றுமதியைத் தவருமல் ஏற்படுத்துகிறது.* இதன் தொடர்ச்சியைக் காண்போம் நமது முதல் உதாரணத்தில் தங்கத்தின் உற்பத்தி அதிகரிப்பது அல்லது குறைவது இரண்டாவது உதாரணத்தில் தங்கம் இறக்குமதி செய்யப்படுவதும் அல்லது ஏற்றுமதி செய்யப்படுவதும் அது அதனுடைய உலோக மதிப்புக்கு அதிகமாக அல்லது குறைவாகக் கருதப்படுவதனுல் அதன் அளவு அதனுடைய சரியான மட்டத்துக்கு மேலே உயர்வதனுல் அல்லது வீழ்ச்சியடைவதனுல் மட்டுமே ஏற்பட்டு அதன் விளைவாகப் பண்ட விலைகள் மிகவும் உயர்வாக அல்லது மிகவும் குறைவாக இருந்தால், இந்தப் போக்குகள் ஒவ்வொன்றும் அதன் குறைதிருத்துவதாக இருக்கின்றன.** ஏனென்ருல் செலாவணியிலிருக்கும் பணத்தை அதிகமாக்குவது அல்லது குறைப்பதன் மூலம், விலைகள் மறுபடியும் தங்களுடைய சரியான மட்டத்தை அடைவதற்கேற்ற வகையில் குறைக்கப்படுகின்றன. இந்த சரியான மட்டமானது முதல் உதாரணத்திற்கு தங்கத்தின் மதிப்பினுலும் பண்டங்களின் மதிப்பினுலும் நிர்ணயிக்கப்படுகிறது; இரண்டாவது உதாரணத்திற்கு நாணயங்களின் சர்வதேச மட்டத்தினுல் நிர்ணயிக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல் பணம் ஒவ்வொரு நாட்டிலும் நாணயமாகச் செலாவணியாவதனுல் மட்டுமே அது வெவ்வேறு நாடுகளிலும் செலாவணியாகிறது. பணம் என்பது நாணயமே; ஒரு நாட்டில் இருக்கிற தங்கமானது செலாவணி உலகத்துக்குள் நுழைய வேண்டும்; தன்னையே பிரதிநிதித்துவப்படுத்துகிற அடையாளச் சின்னம் என்ற வகையில் அது இவ்விதத்தில் தன்னுடைய மதிப்புக்கு மேலே உயரலாம் அல்லது கீழே குறையலாம். சர்வதேச நுணுக்கங்கள் எனப்படுகிற இந்த சுற்றுப் பாதையின் வழியாக நாம் நமது

* ''நாணயத்தின் ஏற்றுமதிக்குக் காரணம் அதனுடைய விலைக்குறைவே; சாதகமில்லாத சமநிலைக்கு இது விளைவல்ல—அதன் காரணம்'' (*op. cit.*, p. 14).
** Ricardo, *op. cit.*, p. 17.

சாதாரணமான, ஆனால் திருப்பு முனையான ஆராய்ச்சி யுரைக்குத் திரும்பிவிட்டோம்.

ரிக்கார்டோ தமது சூக்குமமான கொள்கைக்கு ஆதரவாக நடைமுறை நிகழ்வுகளை எப்படி தமது மனம்போன படி அமைத்துக் கொள்கிறார் என்பதைச் சில உதாரணங்களின் மூலமாகக் காட்டுவோம். உதாரணமாக, தானிய விளைச்சல் சரியில்லாத காலங்களில்—1800 முதல் 1820ம் வருடங்களில் இங்கிலாந்தில் இது அடிக்கடி ஏற்பட்டது—தங்கம் ஏற்றுமதி செய்யப்படுகிறது; தானியம் தேவைப் படுவதாலும் தங்கம் பணமாக இருப்பதாலும், அதாவது தங்கமானது உலகச் சந்தையில் எப்பொழுதுமே சிறந்த கொள் வினைச் சாதனமாகவும் வழங்கீட்டுச் சாதனமாகவும் இருப் பதனால் அது ஏற்றுமதி செய்யப்படவில்லை, ஆனால் மற்ற பண்டங்களோடு ஒப்பிடுகிறபொழுது தங்கத்தின் மதிப்பு குறைந்து விட்டதனால், அதன் விளைவாக சரியான விளைச்சல் இல்லாத நாட்டின் நாணயம் மற்ற நாடுகளின் தேசிய நாணயங்களோடு ஒப்பிடும் பொழுது மதிப்புக்குறைந்து விடு வதால் அது ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று அவர் சொல்கிறார். மோசமான அறுவடையானது செலாவணி யிலிருக்கும் பண்டங்களின் அளவைக் குறைத்துவிடுவதால், செலாவணியில் இருக்கிற நாணயத்தின் அளவு அதன் சரி யான மட்டத்தைக் காட்டிலும் அதிகரித்துவிடுவதால் எல்லாப் பண்டங்களின் விலைகளும் அதிகரிக்கின்றன.* இந்த

---

* Ricardo, *op. cit.*, pp. 74, 75: ''மோசமான அறுவடையின் விளைவாக தன்னுடைய பண்டங்களின் ஒரு பகுதியைப் பறி கொடுத்த நாடு என்ற இனத்தின் கீழ் இங்கிலாந்து வருகிறது. எனவே அதற்கு செலாவணி ஊடகத்தின் அளவு குறைவது அவசியமாகிறது. முன்பு அதன் வழங்கீடுகளுக்குச் சமமாக இருந்த நாணயம் இப்பொழுது அபரிமிதமானதாக இருக்கும்; அதன் உற்பத்திக் குறைவின் விகிதாச்சாரத்துக்கு மலிவாக வும் இருக்கும். எனவே இந்தத் தொகையை ஏற்றுமதி செய் வது அதன் நாணயத்தின் மதிப்பை மற்ற நாடுகளின் நாண யங்களோடு சரிப்படுத்தும்.'' அவர் பணத்துக்கும் பண்டங் களுக்கும் பணத்துக்கும் நாணயத்துக்கும் எவ்வாறு குழப்பு கிறார் என்பதைக் கீழ்வரும் பகுதி மிகவும் கேலிக்குரிய வகையில் காட்டுகிறது. ''மோசமான அறுவடைக்குப் பிறகு, அசாதாரணமான அளவுக்கு தானிய இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இங்கிலாந்து இருப்பதாக வைத்துக்

விளக்கம் ஒரு புதிர் போலவே இருக்கிறது. ஆனால் இதற்கு மாறுபட்ட வகையில் 1793ம் வருடத்திலிருந்து இன்று வரையிலும் தானிய அறுவடை மோசமாக இருந்த காலங்களில் எல்லாம் அப்பொழுதிருந்த செலாவணிச் சாதனம் மிகையான அளவில் இருக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக அது போதவில்லை; எனவே முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகமான பணம் செலாவணியிலிருந்தது; அப்படியே எதிர்காலத்திலும் செலாவணியிலிருக்கும் என்பதைப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.*

நெப்போலியனின் கான்டினென்டல் ஏற்பாடு (Continental System)[33] இங்கிலாந்தின் முற்றுகை ஆணைகளின்போது (English Blockade Decrees)[34] ரிக்கார்டோ இது போலவே பிரிட்டிஷ்காரர்கள் ஐரோப்பாவின் மற்ற பகுதிகளுக்குப் பண்டங்களுக்குப் பதிலாகத் தங்கத்தை ஏற்றுமதி செய்தார்கள், ஏனென்றால் அங்கேயுள்ள மற்ற நாடுகளோடு ஒப்பிடும் பொழுது ஆங்கிலப் பணம் மதிப்புக் குறைந்திருந்தது, எனவே அவர்களுடைய பண்டங்களின் விலைகள் அதிகமாகவிருந்த கார

---

கொள்வோம், இன்னொரு நாட்டில் அந்தப் பொருள் அபரிமிதமான அளவில் இருக்கிறது, ஆனால் அதற்கு வேறு எந்தப் பண்டமும் தேவையில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட ஒரு நாடு தன்னுடைய தானியத்தைப் பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்யாது என்பது பெறப்படும்; ஆனால் அது பணத்துக்காகவும் தானியங்களை ஏற்றுமதி செய்யாது. ஏனென்றால் பணமும் ஒரு பண்டம் தான். எந்த நாடும் அதைத் தனி முதலாக விரும்புவதில்லை, சார்புநிலையில்தான் விரும்புகிறது'' (*l.c.*, p. 45). பூஷ்கின் தன்னுடைய காவியத்தில் தன்னுடைய கதாநாயகனின் தகப்பனுருக்குப் பண்டங்கள் பணம் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று எழுதுகிறார். ஆனால் ருஷ்யர்கள் வெகு காலத்துக்கு முன்பே பணம் ஒரு பண்டம் என்பதைப் புரிந்து கொண்டார்கள் என்பதை 1838 முதல் 1842ம் வருடம் முடிய இங்கிலாந்து அவர்களிடமிருந்து தானிய இறக்குமதி செய்ததும் அவர்களுடைய வர்த்தகத்தின் வரலாறு முழுவதும் விளக்கும்.

* *Cf.* Thomas Tooke, *History of Prices*, மற்றும் James Wilson, *Capital, Currency and Banking*. பின்னால் சொல்லப்பட்டிருப்பது 1844, 1845, 1847 ஆகிய வருடங்களில் லண்டன் *Economist* பத்திரிகையில் வெளிவந்த தொடர் கட்டுரைகளின் மறுபதிப்பு.

ணத்தால் பண்டங்களைக் காட்டிலும் தங்கத்தை ஏற்றுமதி செய்வது மிகவும் லாபகரமான வர்த்தக சூதாட்டமாக இருந்தது என்று கூறினார். அவர் கூற்றுப்படி இங்கிலாந்துச் சந்தையில் பண்டங்களின் விலை அதிகமாகவும் பணம் மலிவாகவும் இருந்தது; ஆனால் ஐரோப்பாக் கண்டத்தில் பண்டங்கள் மலிவாகவும் பணம் அருமையாகவும் இருந்தது.

எனினும் வேறொரு ஆங்கில எழுத்தாளர் பின்வருமாறு எழுதுகிறார்:

''கடந்த ஆறு வருடங்களாக நடைபெற்றிருக்கிற யுத்தத்தின்போது பின்பற்றப்பட்ட, இங்கிலாந்துக்கு எதிரான 'கான்டினென்டல் ஏற்பாட்டில்' நமது காலனி நாடுகள் மற்றும் நம் நாட்டுத் தயாரிப்புகள் அழிவு ஏற்படுத்தும் அளவுக்கு விலை குறைவாக இருந்தன என்பது உண்மையே. உதாரணமாக, ஐரோப்பாவில் சீனி, காப்பிக்கொட்டையின் விலையைத் தங்கத்தில் கணக்கிடும்பொழுது இங்கிலாந்தில் அவற்றின் விலைகளை வங்கி நோட்டுகளில் கணக்கிட்டால் வருவதைக் காட்டிலும் நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாக இருந்தன. பிரான்சின் ரஸாயன அறிஞர்கள் பீட்ரூட் கிழங்கில் சர்க்கரைச் சத்தையும் காப்பிக்கொட்டைக்குப் பதிலாக சிக்கரியைப் பயன்படுத்தலாம் என்பதையும் கண்டுபிடிக்க ஆரம்பித்த காலம் இது. அதே சமயத்தில் இங்கிலாந்தில் கால்நடைகளை வளர்த்து விற்பவர்கள் வெல்லப் பாகையும் கருப்பட்டியையும் கொடுப்பதன் மூலம் கால்நடைகளை அதிக பருமனுள்ளதாக்க முயற்சிக்கும் சோதனைகளை மேற்கொண்டார்கள். அந்தக் காலத்தில் தான் நாம் ஐரோப்பாவின் வட பகுதிக்கு நம் சரக்குகளைக் கள்ளத்தனமாக அனுப்புவதை முடியுமானால் சுலபமாக்குவதற்கு அங்கே ஒரு சரக்குக் கிடங்கை ஏற்படுத்துவதற்காக ஹெல்கோலாந்து தீவைக் கைப்பற்றினோம். இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட சுலபமாக விற்பனை செய்யப்படக்கூடிய பொருள்கள் துருக்கி வழியாக ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டன... அநேகமாக உலகத்தின் எல்லாப் பொருள்களுமே நமது கிட்டங்கிகளில் குவிந்து கிடந்தன; அங்கே அவை மூடிவைக்கப்பட்டன. ஒரு சிறு பகுதி மட்டும் பிரெஞ்சு அனுமதியின் பேரில் வெளியே அனுப்பப்பட்டது. இதற்கு ஹாம்பர்க் அல்லது ஆம்ஸ்டர்டாம் வியாபாரிகள் நெப்போலியனுக்கு அதிகமான பணத்தை நாற்பது அல்லது ஐம்பதாயிரம் பவுன்களைக் கொடுத்தார்கள். அவர்கள் விசித்திரமான வியாபாரிகளே... சரக்குகளை வெளியே எடுத்து அதிக விலையுள்ள சந்தையிலிருந்து குறைவான விலையுள்ள சந்தைக்குக் கொண்டு போவதற்கு அவர்

கள் இவ்வளவு பெருந் தொகையைக் கொடுத்தார்கள்! வியாபாரிக்கு வேறு வெளிப்படையான வழி என்ன இருந்தது? காப்பிக்கொட்டை ஒரு பவுண்டுக்கு 6 பென்ஸ் என்ற விலையில் வங்கி நோட்டுக்களில் வாங்கி அதை ஒரு பவுண்ட் 3 அல்லது 4 ஷில்லிங்குக்குத் தங்கத்தில் உடனடியாக விற்பனை ஆகக் கூடிய இடத்துக்கு அனுப்பலாம். அல்லது ஒரு அவுன்ஸ் தங்கம் 5 பவுன் என்ற விலையில் வங்கி நோட்டுகளைக் கொடுத்து தங்கத்தை வாங்கி, அதை ஒரு அவுன்ஸ் 3 பவுன் 17 ஷில்லிங் $10^1/_2$ பென்ஸ் என்ற விலைக்கு வாங்கப்படுகிற இடத்துக்கு அனுப்பலாம். இலாபகரமான வர்த்தக நடவடிக்கை என்ற முறையில் காப்பிக்கொட்டைக்குப் பதிலாகத் தங்கம் அனுப்பப்பட்டது என்று சொல்வது பொருளற்றதுதான்... இங்கிலாந்தில் ஒரு அவுன்ஸ் தங்கத்தைக் கொடுத்து தேவையான பொருள்களை மிக அதிகமாக வாங்க முடிந்தது போல உலகத்தில் வேறு ஒரு நாடும் இல்லை. போனபார்ட் எப்பொழுதும் இங்கிலாந்தின் விலைவாசிகளின் விவரப் பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்தார். இங்கிலாந்தில் காப்பிக் கொட்டை மலிவாகவும் தங்கம் அதிகமான விலையிலும் விற்பனையாவதைப் பார்த்துக் கொண்டிருந்த வரையில், தன்னுடைய கான்டினென்டல் ஏற்பாடு நன்ருக வேலை செய்கிறது என்று திருப்தியடைந்தார்.''*

1810ம் வருடத்தில்—ரிக்கார்டோ தம்முடைய நாணயக் கொள்கையை முதன்முதலாக முன்வைத்து 'புல்லியன் கமிட்டி' அதைத் தன்னுடைய நாடாளுமன்ற அறிக்கையில் பயன்படுத்திய பொழுது—பிரிட்டனில் எல்லாவிதமான பண்டங்களின் விலைகளும் 1808—1809ம் வருடங்களோடு ஒப்பிடுகையில் அழிவு ஏற்படுத்தக் கூடிய வகையில் வீழ்ச்சியடைந்தன; ஆனல் சார்பு நிலையில் தங்கத்தின் மதிப்பு அதிகரித்தது. இதில் விவசாயப் பொருள்கள் மட்டும் விதிவிலக்காக இருந்தன. ஏனென்ருல் அவற்றை இறக்குமதி செய்ய இயலவில்லை. நாட்டில் மோசமான அறுவடைகளின் விளைவாக உள்நாட்டிலிருந்த தானிய அளவு மிக மோசமாகக் குறைந்து போயிருந்தது.** சர்வதேச வழங்கீட்டுச் சாதனம் என்ற முறையில் அரிய உலோகங்கள் புரிகிற செயலை ரிக்கார்டோ

* James Deacon Hume, *Letters on the Corn Laws*, London, 1834, pp. 29—31.

** Thomas Tooke, *History of Prices*, London, 1848, p. 110.

அதிகமான அளவுக்குத் தவருகப் புரிந்து கொண்டிருந்தார். அதன் காரணமாகவே அவர் பிரபுக்கள் சபையின் கமிட்டியின் முன்பாகத் தமது சாட்சியத்தில் (1819) பின்வருமாறு கூறினர்:

''ரொக்க வழங்கீடுகளை ஆரம்பித்த உடனே தங்க ஏற்றுமதியின் கால்வாய்கள் அடைபட்டுவிடும்; நாணயம் அதன் உலோக மட்டத்தை மீண்டும் அடைந்துவிடும்.''

ரிக்கார்டோவின் முன் அறிவிப்பு எவ்வளவு போலியானது என்பதை 1825ம் வருடத்திய நெருக்கடி அவருக்கு விளக்குவதற்குச் சற்று முன்பாகவே அவர் மரணமடைந்து விட்டார். ரிக்கார்டோ தமது ஆராய்ச்சிகளைச் செய்த காலகட்டம் உலகப் பணம் என்ற வகையில் விலையுயர்ந்த உலோகங்கள் புரிகின்ற செயலை ஆராய்வதற்குப் பொதுவாக அவ்வளவு சாதகமான காலமல்ல. 'கான்டினென்டல் ஏற்பாடு' ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் பிரிட்டன் அநேகமாகத் தொடர்ச்சியாக ஒரு சாதகமான வர்த்தகச் சமநிலையைக் கொண்டிருந்தது; அது அமுலில் இருந்த காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தோடு பிரிட்டனின் வர்த்தகம் மிகக் குறைவாக இருந்தபடியால் அது ஆங்கிலப் பரிவர்த்தனை விகிதத்தை பாதிக்கவில்லை. பணம் மாற்றப்படுவது பெரும்பாலும் அரசியல் தன்மையைக் கொண்டிருந்தது. பிரிட்டனின் தங்க ஏற்றுமதியில் பண உதவிகள் வகித்த பாத்திரத்தை ரிக்கார்டோ முற்றிலும் தவருகப் புரிந்துகொண்டாரெனத் தோன்றுகிறது.*

ரிக்கார்டோவின் சம காலத்தவர்களில், அவருடைய அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை ஆதரித்தவர்களில் ஜேம்ஸ் மில் மிகவும் முக்கியமானவர். அவர் சாதாரண உலோக நாணயத்தை அடிப்படையாகக் கொண்டு ரிக்கார்டோவின் பணவியல் கொள்கையை விளக்கிக் கூற முயற்சித்தார்; ரிக்கார்டோவின் கருதுகோளில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டக் கூடிய தேவையில்லாத சிக்கலான சர்வதேச அனுமானங்களையும், பாங்க் ஆப் இங்கிலாந்து பற்றிச் சொல்லப்பட்ட விவாதத்துக்குரிய குறிப்புகளையும் நீக்கிக்

* *Cf.* W. Blake, *Observations*, முன்னர் மேற்கோள் காட்டப்பட்டிருப்பது.

கொண்டார். அவருடைய முக்கியமான கருதுகோள்கள் கீழே தரப்படுகின்றன.*

''இங்கே பணத்தின் மதிப்பு என்று குறிப்பிடும் பொழுது அது மற்ற பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிற விகிதாச்சாரம் அல்லது மற்ற பண்டங்களின் குறிப்பிட்ட அளவுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிற அதன் குறிப்பிட்ட அளவு என்பதாக அறிய வேண்டும்... ஒரு நாட்டில் இருக்கும் பணத்தின் மொத்த அளவுதான் அந்த விகிதாச்சாரத்தை நிர்ணயிக்கிறது. ஒரு நாட்டில் இருக்கும் பண்டங்கள் அனைத்தும் ஒரு பக்கத்திலும் பணம் அனைத்தும் மறு பக்கத்திலும் இருப்பதாகவும், அவை ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்யப்படுவதாகவும் வைத்துக் கொள்வோம்... பணத்தின் மதிப்பு அதன் அளவைப் பொறுத்திருக்கிறது என்பது புலப்படும். இது போலவேதான் நடைமுறையில் இருக்கிறது. ஒரு நாட்டில் இருக்கிற பண்டங்கள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் மொத்தப் பணத்துக்கும் பரிவர்த்தனை செய்வது கிடையாது. பண்டங்கள் பகுதி பகுதியாக, பெரும்பாலும் மிகச் சிறிய பகுதிகளாக ஒரு வருடம் முழுவதிலும் வெவ்வேறு சமயங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. ஒரு பரிவர்த்தனைக்கு இன்று கொடுக்கப்படும் அதே நாணயம் நாளைக்கும் மற்றொரு பரிவர்த்தனைக்குக் கொடுக்கப்படக் கூடும். இவற்றில் சில மிக அதிகமான பரிவர்த்தனைகளிலும், சில மிகக் குறைவான பரிவர்த்தனைகளிலும் பயன்படுத்தப் படலாம்; பதுக்கப்பட்டிருக்கும் நாணயங்கள் ஒரு பரிவர்த்தனைக்கும் பயன்படாது போகலாம். இப்படிப்பட்ட வேறுபாடுகளுக்கு இடையே பரிவர்த்தனைகளின் குறிப்பிட்ட சராசரி எண்ணிக்கையும் ஏற்படும்; எல்லா நாணயங்களும் சம எண்ணிக்கையில் பரிவர்த்தனை ஆகியிருந்தால் அவை ஒவ்வொன்றும் செய்திருக்கக் கூடிய பரிவர்த்தனையின் எண்ணிக்கையே இது. அந்த சராசரியாக நமக்கு விருப்பமான எந்த எண்ணையும் வைத்துக் கொள்ளலாம். உதாரணமாக, பத்து என்று வைத்துக் கொள்வோம். நாட்டிலுள்ள ஒவ்வொரு நாணயமும் பத்துக் கொள்வினைகள் செய்வதாக வைத்துக் கொண்டால், ஒவ்வொன்றும் ஒரு கொள்வினை செய்து எல்லா நாணயங்களுமே பத்தால் பெருக்கிக் கொள்வது போன்றதுதான் இது. நாட்டில் இருக்கிற எல்லாப் பண்டங்களின் மதிப்பும் மொத்தப் பணத்தின் மதிப்பின் பத்து

---

* James Mill, *Elements of Political Economy* [ஜே.டி. பரிஸோ என்பவருடைய பிரெஞ்சு மொழிபெயர்ப்பை மார்க்ஸ் உபயோகப்படுத்தினர்].

மடங்குக்குச் சமமாகும்... நாணயம் ஒவ்வொன்றும் வருடத்துக்குப் பத்துக் கொள்வினைகள் செய்வதற்கு பதிலாக மொத்தப் பணமும் பத்து மடங்கு அதிகமானதாக இருந்து வருடத்துக்கு ஒரு கொள்வினை மட்டுமே செய்வதாக இருந்தால், மொத்தப் பணத்தில் அதிகமாகச் சேர்க்கப்படுவது அதனுடைய விகிதாச்சாரத்தில் நாணயம் ஒவ்வொன்றிலும் தனித்தனியே மதிப்புக் குறைவை ஏற்படுத்தும். மொத்தப் பணத்துக்கும் ஒரே சமயத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் பண்டங்கள் அதே அளவில் இருப்பதாக வைத்துக் கொள்ளப் படுவதால், மொத்தப் பணத்தின் மதிப்பு, அதன் அளவில் கூடுதலான பிறகும், கூடுதலாவதற்கு முன்பு இருந்த படியேதான் இருக்கும். அது $^{1}/_{10}$ என்ற அளவில் அதிகப் படுத்தப்பட்டால் பண்டங்களின் ஒவ்வொரு பகுதியின், உதாரணமாக ஒரு அவுன்சின் மதிப்பும் $^{1}/_{10}$ பங்கு குறைந்து விடும். எனவே பணத்தின் மொத்தம் எந்த அளவுக்காவது அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும்—மற்றவை ஒரே மாதிரியாக இருக்குமானால்—அதே விகிதாச்சாரத்தில் பண மொத்தத்தின் மதிப்பும், அதன் ஒவ்வொரு பகுதியினுடைய மதிப்பும் எதிர்நிலை அளவில் குறையும் அல்லது அதிகரிக்கும். இந்தக் கருதுகோள் எக்காலத்துக்கும் உண்மையானது என்பது தெளிவு. எப்பொழுதாவது பணத்தின் மதிப்பு அதிகரித்தால் அல்லது குறைந்தால் (அதற்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிற பண்டங்களின் அளவும் செலாவணியின் வேகமும் ஒரேவிதமாக இருக்கும் பொழுது) அதற்குக் காரணம் அதன் அளவில் ஏற்படுகிற பெருக்கம் அல்லது சுருக்கமே. இதைத் தவிர வேறு காரணம் இல்லை. பணத்தின் அளவு மாருமல் இருக்கும் பொழுது பண்டங்களின் அளவு குறைந்தால், பணத்தின் அளவு அதிகரித்தால் ஏற்படுவது போன்ற விளைவு ஏற்படும். இதற்கு எதிர்மாருக நடைபெற்ருல் எதிர்மாருன விளைவு ஏற்படும். செலாவணியின் வேகத்தில் மாற்றமேற் பட்டால் இது போன்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன. கொள் வினைகளின் எண்ணிக்கை அதிகரித்தால் பணத்தின் அளவு அதிகரித்தால் ஏற்படுவதைப் போன்ற அதே விளைவு ஏற் படும்; அது குறைந்து விட்டால் அதற்கு எதிரான விளைவு ஏற்படும்.... வருடாந்தர உற்பத்தியில் பரிவர்த்தனை செய்யப்படாத பகுதி இருந்தால்—உதாரணமாக, உற்பத்தியாளருடைய நுகர்வுக்காகப் பயன்படும் பகுதி—அது கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை; அது பணத்துக்காகப் பரிவர்த்தனை செய்யப்படாததால் அது பணத்தைப் பொறுத்த வரை இல்லாதது போன்றுதான் கருதப்படும்.... எப்பொழுது நாணய வெளியீடு சுதந்திரமானதாக இருக்கிறதோ, அங்கு அதன் மொத்த அளவு விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பினுல் ஒழுங்குபடுத்தப்படுகிறது... ஆனுல் தங்கமும்

வெள்ளியும் உண்மையில் பண்டங்களே, மற்ற சாதாரண உற்பத்திப் பொருள்களைப் போலவே இவற்றின் மதிப்பையும் உற்பத்திச் செலவு நிர்ணயிக்கிறது.''*

மில்லின் அறிவு முழுமையுமே தன்னிச்சையான, மிகச் சாதாரணமான அனுமானங்களின் தொடராக இருக்கிறது. பண்டங்களின் விலையை அல்லது பணத்தின் மதிப்பை நிர்ணயிப்பது ''ஒரு நாட்டிலே இருக்கிற பணத்தின் மொத்த அளவு'' என்று நிரூபிக்க அவர் விரும்புகிறார். பண்டங்களின் அளவும் பரிவர்த்தனை மதிப்பும் மாறாமல் இருப்பதாகவும், அதே மாதிரி செலாவணியின் வேகமும் விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பும் (இது உற்பத்திச் செலவுகளினால் நிர்ணயிக்கப்படுவது) மாறவில்லையென்றும் வைத்துக்கொண்டால், எனினும் ஒரு நாட்டில் இருக்கின்ற பணத்தின் அளவுக்குத் தகுந்தாற்போல செலாவணியில் இருக்கும் நாணயம் அதிகரிக்கிறது அல்லது குறைகிறது என்றும் வைத்துக்கொண்டால், ஒருவர் எதை நிரூபிக்கப் புறப்பட்டாரோ அதையே அனுமானித்துக் கொள்கிறார் என்பது ''புலப்படும்''. ஹியூம் செய்த அதே தவறை மில் செய்கிறார், அதாவது செலாவணியில் நிர்ணயிக்கப்பட்ட பரிவர்த்தனை மதிப்பை உடைய பண்டங்களை வைப்பதற்கு பதிலாகப் பயன் மதிப்புக்களை வைக்கிறார். எனவே அவருடைய எல்லா ''அனுமானங்களையும்'' ஒருவர் ஒத்துக்கொண்டாலும்கூட அவருடைய கருதுகோள் தவறானதாகும். செலாவணியின் வேகம் மாறாதபடி இருக்கலாம்; அதைப் போல விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பும் செலாவணியிலிருக்கும் பண்டங்களின் அளவும் மாறாதபடி இருக்கலாம். எனினும் பண்டங்களினுடைய பரிவர்த்தனை மதிப்பில் ஏற்படுகிற மாற்றங்களின் விளைவாகத் தங்கள் செலாவணிக்குத் தேவைப்படுகிற பணத்தின் அளவு சில சமயங்களில் கூடுதலாகவும் வேறு சமயங்களில் குறைவாகவும் இருக்கும். ஒரு நாட்டிலுள்ள பணத்தின் ஒரு பகுதி செலாவணியாகிறது; அதே சமயத்தில் வேறு பகுதி தேங்கியிருக்கிறது என்பதை மில் பார்க்கிறார். அவர் சராசரி என்று சொல்லப்படுகிற விசித்திரமான விதியின் மூலம் நாட்

---

* James Mill, *op. cit.*, Paris, 1823, pp. 128—136 *passim.* [*Elements of Political Economy*, London, 1821, pp. 95—101 *passim.*]

டில் இருக்கிற எல்லாப் பணமுமே செலாவணியாவதாக அனுமானித்துக் கொள்கிறார்; ஆனால் யதார்த்தத்தில் அப்படி இருப்பதாகத் தோன்றவில்லை. ஒரு குறிப்பிட்ட நாட்டில் ஒரு கோடி வெள்ளி தேலர்கள் வருடத்துக்கு இரண்டு தடவை செலாவணியாகுமானால், ஒவ்வொரு தேலரும் ஒரு கொள்வினைக்கு மட்டுமே உபயோகப்படுகிறதென்றால் இரண்டு கோடி தேலர்கள் செலாவணியில் இருக்கும். ஒரு நாட்டில் எல்லா வடிவங்களிலும் இருக்கும் வெள்ளியின் மொத்த அளவு 10 கோடி என்றால் ஒவ்வொரு நாணயமும் ஐந்து வருடங்களில் ஒரு கொள்வினையை நிறைவேற்றினால் 10 கோடியும் செலாவணியில் இருப்பதாகக் கருதலாம். இதைக் காட்டிலும் உலகத்தில் இருக்கும் மொத்தப் பணமுமே ஹாம்ஸ்டெட்[35] என்ற சிற்றூரில் செலாவணி யாவதாக அனுமானித்துக் கொள்ளலாம். ஆனால் அதன் ஒவ்வொரு பகுதியும் வருடத்துக்கு மூன்று சுற்றுவளையங் களுக்குப் பதிலாக முப்பது லட்சம் வருடங்களுக்கு ஒரு சுற்றுவளையத்தை நிறைவேற்ற வேண்டும். பண்ட விலைகளின் ஆகக் கூடிய மொத்தத்துக்கும் நாணயத்தின் அளவுக்கும் இடையே உள்ள உறவை நிர்ணயிப்பதில் அந்த அனுமானம் பொருந்துகிற அளவுக்கு இதுவும் பொருந்தக் கூடியதே. ஒரு குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட காலத்தில் இருக்கின்ற மொத்தப் பணத்துக்கும்—செலாவணியில் இருக்கின்ற பணத்தின் அளவுக்கு மட்டுமல்ல—பண்டங்களுக்கும் நேரடி யான தொடர்பை நிறுவுவதன் தீர்மானமான முக்கியத்து வத்தை மில் உணர்ந்திருக்கிறார். ஒரு நாட்டில் இருக்கின்ற பண்டங்கள் அனைத்துமே மொத்தப் பணத்துக்கும் ''ஒரே சமயத்தில்'' பரிவர்த்தனை செய்யப்படுவதில்லை என்பதை ஒத்துக் கொள்கிறார்; ஆனால் பண்டங்களின் தனித்தனிப் பகுதி கள் பணத்தின் வெவ்வேறு அளவுகளுக்கு வருடம் பூராவும் வெவ்வேறு சமயங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன என்கிறார். இந்த ஏறுமாறான நிலையை அகற்ற வேண்டும் என்பதற்காக அப்படி ஒரு நிலை ஏற்படவில்லை என்று அனு மானித்துக் கொள்கிறார். பண்டங்களும் பணமும் நேரடி யாக எதிர்நிலைப்படுவது, நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவது என்ற மொத்தக் கருத்துமே சாதாரணக் கொள்வினைகள், விற்பனைகளின் போக்கிலிருந்து அல்லது கொள்வினைச் சாதனம் என்ற வகையில் பணம் புரிகிற

செயலிலிருந்து பெறப்படுகிறது. பணம் வழங்கீட்டுச் சாதனமாகச் செயல்படும் பொழுது ஒரே சமயத்தில் பண்டங்களும் பணமும் தோன்றுவது நின்றுவிடுகிறது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஏற்பட்ட வர்த்தக நெருக்கடிகள், குறிப்பாக 1825, 1836ம் வருடங்களில் ஏற்பட்ட மாபெரும் நெருக்கடிகள் ரிக்கார்டோவின் பணக் கொள்கையில் மேலும் வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை, ஆனல் புதிய செய்முறை உபயோகங்களை ஏற்படுத்தின. இந்நெருக்கடிகள் முன்பு ஒற்றைப் பொருளாதார நிகழ்வுப் பிரச்சினைகளாக இருந்தன. பதினுறு, பதினேழாம் நூற்றுண்டுகளில் ஏற்பட்ட அரிய உலோகங்களின் மதிப்புக் குறைவுப் பிரச்சினை ஹியூமை எதிர்நோக்கியது; பதினெட்டாம் நூற்றுண்டிலும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் ஏற்பட்ட காகிதப் பணத்தின் மதிப்புக் குறைவுப் பிரச்சினை ரிக்கார்டோவை எதிர்நோக்கியது. அந்த நிலை மாறிவிட்டது. முதலாளித்துவ உற்பத்தி நிகழ்வின் எல்லாக் கூறுகளினுடைய முரணியலும் வெடிக்கிற பெரும்புயல்கள் உலகச் சந்தையில் வீசிக் கொண்டிருந்த காலம் அது. இந்தப் புயல்களின் தோற்றுவாய்களையும் அவற்றுக்கு எதிரான தற்காப்புச் சாதனங்களையும் இந்த நிகழ்வின் மிகவும் மேலோட்டமான, சூக்குமமான பகுதியாகிய நாணயத்தின் உலகத்துக்குள் தேடினர்கள். பொருளாதாரப் பருவநிலை நிபுணர்கள் மரபின் திருப்புமுனையாக உண்மையில் பயன்பட்ட தத்துவ ரீதியான அனுமானம் முற்றிலும் உலோக நாணயம் சம்பந்தப்பட்ட விதிகளை ரிக்கார்டோ கண்டுபிடித்துவிட்டார் என்ற வறட்டுக் கோட்பாடே. எனவே கடன் பணம் அல்லது வங்கி நோட்டுகளின் செலாவணியை இந்தச் சட்டங்களின் கீழ் உட்படுத்திக் கூறும் பணியை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

வர்த்தக நெருக்கடிகளைத் தொடர்ந்து ஏற்படுகிற மிகப் பரவலான, அதே சமயத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வு பண்ட விலைகளின் பொதுவான அதிகரிப்பு அதிகமான காலத்துக்கு இருந்த பிறகு அவற்றின் பொது மட்டம் திடீரென வீழ்ச்சியடைவதாகும். பண்ட விலைகளின் பொது வீழ்ச்சி மற்ற எல்லாப் பண்டங்களோடும் ஒப்பிடும் பொழுது பணத்தின் மதிப்பு உயர்ந்து விட்டதனல் ஏற்படும்; இதற்கு மாருக

விலேகளின் பொதுவான அதிகரிப்பு பணத்தின் சார்பு மதிப்பு குறைந்து விட்டதனுல் ஏற்படுவது என்று கூறலாம். இந்த இரண்டு கருத்துரைகளுமே அந்த நிகழ்வை வர்ணிக்கின்றனவே தவிர அதை விளக்கவில்லே. விலேகளின் பொதுவான மட்டம் ஒரு பொது வீழ்ச்சிக்குப் பிறகு காலத்துக்குக் காலம் இடையிடையே அதிகரிப்பதை விளக்குவது நமக்குக் கொடுக்கப்பட்ட கடமை என்ருலும்—அல்லது பண்டங்களோடு ஒப்பிடுகிற பொழுது பணத்தின் சார்பு மதிப்பு மாறி மாறிக் குறைவதும் அதிகரிப்பதுமாக இருப்பதை விளக்குவது கொடுக்கப்பட்ட கடமை என்ருலும்—அந்தக் கடமையைப் பொறுத்தவரையிலும் வெவ்வேருன வார்த்தைகளே உபயோகிப்பதனுல் ஏற்படுகிற பயன் அந்த வார்த்தைகளே ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்பதால் உண்டாகும் பயனேப் போலவே ஒன்றும் இல்லாதிருக்கிறது. ரிக்கார்டோவின் பணக் கொள்கை கூறியது கூறலுக்குக் காரணகாரிய விளக்கம் போன்ற ஒரு போலித் தோற்றத்தை ஏற்படுத்தியதனுல் அது பொருத்தமானதாகக் கருதப்பட்டது. இடையிடையே ஏற்படுகின்ற பண்ட விலேகளின் பொது வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? பணத்தின் சார்பு மதிப்பு இடையிடையே அதிகரிப்பதுதான் அதற்குக் காரணம். இதற்கு மாருக, பண்டங்களின் விலேகளில் திரும்பத் திரும்ப ஏற்படும் பொதுவான அதிகரிப்புக்குக் காரணம் என்ன? பணத்தின் சார்பு மதிப்பு திரும்பத் திரும்ப வீழ்ச்சி அடைவதுதான் அதற்குக் காரணம். இதற்கு பதிலாக, விலேகள் திரும்பத் திரும்ப அதிகரிப்பதற்கும் வீழ்ச்சியடைவதற்கும் காரணம் அவை திரும்பத் திரும்ப அதிகரிப்பதும் வீழ்ச்சியடைவதுமே என்று சொல்வது எவ்வளவு சரியானதோ அவ்வளவு சரியானதே இதுவும். பணத்தின் உள்ளார்ந்த மதிப்பு, அதாவது விலேயுயர்ந்த உலோகங்களின் உற்பத்திச் செலவுகளினுல் நிர்ணயிக்கப்படுகிற அதனுடைய மதிப்பு மாருதபடி இருப்பதாக இங்கே கூறப்படும் கருதுகோள் முன்னூகிக்கிறது. கூறியது கூறலே அதற்கு மேலும் சிந்தனேக்குரியதாக நினேத்தால், அது மிகவும் தொடக்க நிலேயான கருத்துக்களேத் தவருகப் புரிந்துகொண்டதனுல் ஏற்படுவதே.

Bயின் மூலமாக எடுத்துரைக்கப்படுகிற Aயின் பரிவர்த்

தனை மதிப்பு குறையுமானல், அது Aயின் மதிப்பு குறைந்த தனல் ஏற்படலாம் அல்லது Bயின் மதிப்பு அதிகரித்ததனல் ஏற்படலாம். இதற்கு மாருக Bயின் மூலமாக எடுத்துரைக்கப் படுகிற Aயின் பரிவர்த்தனை மதிப்பு அதிகரிக்குமானலும் மேலே சொல்லப்பட்டது போன்றுதான். கூறியது கூறலைக் காரணகாரிய விளைவின் விளக்கம் என்று அனுமானித்துக் கொண்டால், மற்ற எல்லாமே சுலபமாகத் தொடரும். பண்ட விலைகள் அதிகரிப்பு பணத்தின் மதிப்பு குறைவதனல் ஏற்படுகிறது. எனினும் பணத்தின் மதிப்புக் குறைவது மிகை நாணயத்தினல், அதாவது செலாவணியிலிருக்கிற பணத்தின் அளவு தனது உள்ளார்ந்த மதிப்பினலும் பண்டங்களின் உள்ளார்ந்த மதிப்பினலும் நிர்ணயிக்கப்பட்ட மட்டத்துக்கு மேலே அதிகரிப்பதனல் ஏற்படும் என்று ரிக்கார்டோ மூல மாக நாம் அறிந்திருக்கிருேம். அதைப் போல இதற்கு எதிரிடையான உதாரணத்தில் பண்ட விலைகளின் பொது வான வீழ்ச்சி, போதுமானதல்லாத நாணய அளவினல் பணத்தின் மதிப்பு தனது உள்ளார்ந்த மதிப்புக்கு மேலே அதிகரிப்பதனல் ஏற்படுகிறது. எனவே விலைகள் இடை யிடையே அதிகரிப்பதும் குறைவதும் செலாவணியில் இடை யிடையே அதிகமான அல்லது குறைவான பணம் இருப் பதனல் ஏற்படுகிறது. உதாரணமாக, செலாவணியில் பணத் தின் அளவு குறைந்தபொழுது விலைகள் அதிகரித்தன, பணத் தின் அளவு அதிகரித்த பொழுது விலைகள் குறைந்தன என் பதை நிருபிக்க முடியுமானல், செலாவணியிலிருக்கிற பண் டங்களின் குறைவு அல்லது அதிகரிப்பின்—இதைப் புள்ளி விவர அடிப்படையில் கணக்கெடுக்க முடியாது—விளைவாக செலாவணியிலிருக்கும் பணத்தின் அளவு—தனிமுதலாக இல்லாவிட்டலும் சார்புநிலையில்—அதிகரித்திருக்கிறது அல் லது குறைந்திருக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடி யும். முற்றிலும் உலோக நாணயத்தை உபயோகப்படுத்தும் பொழுதுகூட, விலைகளின் மட்டத்தில் ஏற்படும் இந்தப் பொதுவான மாற்றங்கள் ஏற்படவே செய்யும், ஆனல் மாறி மாறி ஏற்படுவதால் அவை ஒன்றையொன்று சரிப்படுத்திக் கொள்கின்றன என்று ரிக்கார்டோ கூறுவதைப் பார்த்தோம். உதாரணமாக, நாணயத்தின் குறைவான அளவு பண்ட விலைகளில் வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது; பண்ட விலைகளின்

வீழ்ச்சி மற்ற நாடுகளுக்குப் பண்டங்களை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கிறது; இந்த வகையிலான ஏற்றுமதி நாட்டுக்குள் பணத்தைக் கொண்டுவருகிறது; நாட்டுக்குள் வருகிற பணம் மறுபடியும் பண்ட விலைகளை அதிகரிக்கச் செய்கிறது. பணத்தின் அளவு மிக அதிகமாக இருந்தால் இதற்கு மாருன வகையில் நடைபெறும்; பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன, பணம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட பொதுவான விலைப் போக்குகள் ரிக்கார்டோவின் உலோக நாணயத்தின் இயல்பினுல் தோன்றிய போதிலும் அவற்றின் கரடுமுரடான அழுத்தமான வடிவம், நெருக்கடியின் வடிவம் நன்கு வளர்ச்சியடைந்த கடன் அமைப்பு உள்ள காலங்களைச் சேர்ந்தது; எனவே வங்கி நோட்டுகளை வெளியிடுவது உலோக நாணயங்களின் விதிகளினுல் நேரடியாக ஆளப்படவில்லை என்பது முற்றிலும் தெளிவாகும். உலோக நாணயங்களுக்குச் செய்யப்படக் கூடிய மருத்துவ உதவி அரிய உலோகங்களை இறக்குமதி, ஏற்றுமதி செய்வதும், அவற்றை உடனே நாணயங்களாகச் செலாவணியில் சேர்ப்பதும் தான்; அவற்றின் வருகையும் வெளியேறுதலும் பண்ட விலைகள் இவ்விதத்தில் குறைய அல்லது அதிகரிக்கக் காரணமாகின்றன. வங்கிகள் இப்பொழுது உலோக நாணயங்களின் விதிகளைப் பின்பற்றி பண்ட விலைகளின் மீது அதே தாக்கத்தைச் செயற்கையாக ஏற்படுத்த வேண்டும். வெளிநாடுகளிலிருந்து தங்கம் உள்ளே வருகிறதென்ருல் அங்கே நாணயம் போதுமான அளவுக்கு இல்லை, பணத்தின் மதிப்பு மிக அதிகமாக இருக்கிறது, பண்ட விலைகள் மிகக் குறைவாக இருக்கின்றன என்பதை அது நிரூபிக்கிறது; புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்துக்குத் தகுந்தாற்போல வங்கி நோட்டுகள் செலாவணியில் சேர்க்கப்பட வேண்டும். இதற்கு எதிரிடையான நிலைமையில், நாட்டிலிருந்து வெளியே செல்கின்ற தங்கத்துக்குத் தகுந்தாற்போல வங்கி நோட்டுகள் செலாவணியிலிருந்து அகற்றப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல் வங்கி நோட்டுகளை வெளியிடுவதை விலையுயர்ந்த உலோகங்களின் இறக்குமதி, ஏற்றுமதிக்குத் தகுந்தவாறு அல்லது பரிவர்த்தனை விகிதத்துக்குத் தகுந்தவாறு ஒழுங்குபடுத்த வேண்டும். தங்கம் என்பது வெறும் நாண

யமே, எனவே இறக்குமதி செய்யப்படுகிற தங்கம் முழுவதுமே செலாவணியிலிருக்கும் பணத்தை அதிகப்படுத்த உபயோகிக்கப்பட்டு விலைகள் அதிகரிப்பதற்குக் காரணமாகிறது, ஏற்றுமதி செய்யப்படுகிற தங்கம் முழுவதும் நாணயத்தின் அளவு குறைந்து விடுவதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, அதனுல் விலைகள் குறைந்துவிடுகின்றன—இது ரிக்கார்டோவின் தவருன அனுமானமாகும். ஒரு நாட்டில் செலாவணியிலிருக்கும் நாணயம் அந்த நாட்டில் இருக்கிற தங்கத்தின் அளவுக்கு எப்பொழுதும் பொருந்தியிருக்க வேண்டும் என்ற இந்தக் கொள்கை ரீதியான அனுமானம் ஒரு செய்முறைச் சோதனையாக மாற்றப்படுகிறது. ஓவர்ஸ்டோன் பிரபு (ஜோன்ஸ் லாயிட் என்ற வங்கிக்காரர்), கர்னல் டோரென்ஸ், நார்மன், கிளே, அர்பத்னுட் மற்றும் ''நாணய மரபினர்'' என்று இங்கிலாந்தில் கூறப்படுகிற எண்ணற்ற எழுத்தாளர்கள் பலர் இந்தக் கோட்பாட்டைப் பிரச்சாரம் செய்தது மட்டுமல்லாது, 1844, 1845ம் வருடங்களில் நிறைவேற்றப்பட்ட ஸர் ராபர்ட் பீலின் வங்கிச் சட்டங்களின் மூலம் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலுமுள்ள வங்கிச் சட்டங்கள் இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்குமாறு செய்துள்ளனர். இவர்கள் மிகவும் விரிந்த தேசிய அளவில் பல சோதனைகளைச் செய்து இறுதியில் அடைந்த பரிதாபகரமான தோல்வியை கடன் பற்றிய கொள்கையை எடுத்துக் கொள்கிற பொழுதுதான் ஆராய முடியும்.* பணத்தின் நீர்ம வடிவமான நாணயத்தைத்

* 1857ம் வருடத்திய பொது வர்த்தக நெருக்கடி ஆரம்பமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு காமன்ஸ் சபையின் கமிட்டி 1844, 1845ம் வருடத்திய வங்கிச் சட்டங்கள் இயங்குவதை ஆராய்ந்தது. இந்தச் சட்டங்களின் கொள்கையின் பிதாவாகிய ஓவர்ஸ்டோன் பிரபு கமிட்டிக்கு முன்பு தமது சாட்சியத்தில் பின்வருமாறு தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டார்: ''1844ம் வருடத்திய சட்டத்தின் கொள்கைகளை உடனுக்குடனுகக் கருராகப் பின்பற்றியதன் மூலம் எல்லாமே ஒழுங்காகவும் சுகமாகவும் முடிந்திருக்கிறது; பண முறை ஆட்டங் கொடுக்காமல் பாதுகாப்பாக இருக்கிறது; நாட்டில் இருக்கும் சுபிட்சத்தை யாரும் சந்தேகிக்க முடியாது; 1844ம் வருடத்திய சட்டத்தின் நுண்ணறிவில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படைகள்

தனித்துப் பார்க்கின்ற ரிக்கார்டோவின் கொள்கை, அரிய உலோகங்களின் அளவுகளின் அதிகரிப்புக்கும் குறைவுக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது தனிமுதலான தாக்கம் இருப்பதாகக் கற்பிப்பதில் முடிவடைகிறது. பணவியல் முறையின் மூட நம்பிக்கையான கருதுகோள்களில் கூட இந்த அளவுக்கு ஒரு போதும் கற்பனை செய்யப்படவில்லை. காகித நாணயம்தான் பணத்தின் மிகச் சிறப்பான வடிவம் என்று கூறிய ரிக்கார்டோ 'புல்லியன்வாதிகளால்' தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டார்.

ஹியூமின் கொள்கை அல்லது பணவியல் முறைக்கு மாறான சூக்கும எதிர்ப்பு அதன் மிகத் தீவிரமான முடிவுகளுக்கு வளர்ச்சியடைந்த பிறகு, பணத்தைப் பற்றிய ஸ்டூவர்ட்டின் ஸ்தூலமான விளக்கத்துக்கு அதற்குரிய நியாயமான இடத்தை தாமஸ் டூக் மறுபடியும் கொடுத்தார்.* டூக் தமது கோட்பாடுகளை ஏதாவதொரு கொள்கையிலிருந்து பெறவில்லை; 1793ம் வருடத்திலிருந்து 1856ம் வருடம் வரை

---

எவ்வளவு உறுதியானவை என்பதற்கு அல்லது அதனால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளைப் பற்றி இன்னும் செய்முறை உதாரணங்கள் வேண்டுமென்று கமிட்டியினர் விரும்பினால், உங்களைச் சுற்றிப் பாருங்கள் என்று கமிட்டியைக் கேட்டுக் கொள்வதுதான் அதற்குப் பொருத்தமான, உண்மையான பதிலாகும். உங்களைச் சுற்றிப் பாருங்கள்; நாட்டின் வர்த்தகத்தின் இன்றைய நிலையை நன்றாகப் பாருங்கள்; மக்களிடமிருக்கும் மனநிறைவைப் பாருங்கள்; சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் நிறைந்திருக்கும் செல்வத்தையும் சுபிட்சத்தையும் பாருங்கள். அப்படிப் பார்த்துவிட்டு இத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தை நீடிப்பதில் குறுக்கிட வேண்டுமா என்பதைக் கமிட்டியினர் முடிவு செய்து கொள்ளட்டும்.'' 1857ம் வருடம் ஜூலை மாதம் 14ந் தேதியன்று ஓவர்ஸ்டோன் இப்படித் தம்முடைய சொந்தப் புகழைத் தாமே பாடினார். அந்த வருடத்தின் நவம்பர் மாதம் 12ந் தேதியன்று மந்திரிசபை தனது சொந்தப் பொறுப்பில் 1844ம் வருடத்திய அதிசயச் சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

* டூக் தமது *History of Prices from 1839 to 1847*, London, 1848 என்ற நூலில் பணம் பற்றிய கொள்கைகளின் வரலாற்றை சுருக்கித் தருகிறார். அவர் ஸ்டூவர்ட்டின் புத்தகத்தைப் பார்க்கவில்லை என்பதை இந்தச் சுருக்கத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

யுள்ள பண்ட விலைகளின் வரலாற்றை மிகவும் கவனமாகச் செய்த ஆராய்ச்சியின் பலன் அது. அவருடைய **விலைகளின் வரலாறு** என்ற புத்தகத்தின் முதல் பதிப்பு 1823ம் வருடத்தில் வெளியிடப்பட்டது. டூக் இன்னும் ரிக்கார்டோவின் கொள்கையில் முழுவதுமாக மூழ்கியிருந்ததால் இந்தக் கொள்கைக்கும் விவரங்களுக்கும் முரண்பாடுகளை நீக்குகிற வீண் முயற்சிகளைத் தமது புத்தகத்தில் செய்தார். 1825ம் வருடத்திய நெருக்கடிக்குப் பிறகு அவருடைய **நாணயங்களைப் பற்றி** என்ற சிறு நூல் வெளிவந்தது. பிற்காலத்தில் ஓவெர்ஸ்டோன் அமுலாக்கிய கருத்துக்கள் இச்சிறு நூலில் முதன் முறையாக முரணில்லாத வகையில் விளக்கப்பட்டிருந்தன. ஆனால் டூக் பண்ட விலைகளின் வரலாற்றைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தபொழுது விலைகளுக்கும் நாணயத்தின் அளவுக்கும் நேரடியான இடைத்தொடர்பு இருப்பதாக இந்தக் கொள்கை முன்னூகித்தது முற்றிலும் கற்பனையே என்பதை அறிந்தார். விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பு மாறாமல் இருக்கும் பொழுது நாணயத்தின் அளவு அதிகரிப்பது அல்லது குறைவது விலைகளில் ஏற்படுகிற மாற்றங்களின் விளைவே தவிர, ஒருபோதும் அதன் காரணமல்ல; பணத்தின் செலாவணி என்பது துணைவகையான இயக்கமே; பணம் செலாவணி ஊடகமாகப் பயன்படுவதைத் தவிர, உற்பத்தியின் உண்மை நிகழ்வில் வேறு பல செயல்களையும் புரிகிறது. அவருடைய நுணுக்கமான ஆராய்ச்சி (அதே மரபைச் சேர்ந்தவர்களான **வில்சன், புல்லர்ட்டன்** ஆகியோருடைய நூல்கள் போலவே) சாதாரண உலோக நாணயத்தின் எல்லைக்கு உட்பட்டதல்ல; எனவே நாம் இந்தக் கட்டத்தில் அதை ஆராய்வது இயலாது.* இந்த எழுத்தாளர்கள் பணத்தைப் பற்றி

---

* டூக் எழுதிய **விலைகளின் வரலாறு** (*History of Prices*) என்ற புத்தகத்தை அவரோடு பணியாற்றிய நியூமார்ச் என்பவர் ஆறு பகுதிகளாக வெளியிட்டார். இதைத் தவிர அவர் எழுதிய மற்றொரு முக்கியமான புத்தகம் *An Inquiry into the Currency Principle, the Connection of Currency with Prices*, 2nd edition, London, 1844 என்பதாகும். வில்சன் எழுதிய புத்தகத்தை முன்பே மேற்கோள் காட்டியிருக்கிறோம். ஜான் புல்லர்ட்டன் எழுதிய புத்தகமாகிய *On the Regulation of Currencies*, 2nd edition, London, 1845 என்பது மட்டுமே இனி குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

ஒரு பக்கத்தையே பார்க்காமல் அதன் பல்வேறு அம்சங்களையும் ஆராய்கிருர்கள். ஆனல் இந்த அம்சங்கள் ஒன்று மற்றென்ருேடும் அல்லது மொத்தமான பொருளாதார இனங்கள் என்ற அமைப்போடும் கொண்டிருக்கிற அங்கக ரீதியான உறவைப் பற்றி அவர்கள் எவ்விதமான கவனமும் செலுத்தாமல் யாந்திரீகமான கோணத்திலிருந்து ஆராய்கிருர்கள். எனவே அவர்கள் நாணயம் என்பதிலிருந்து தனி வகைப்பட்ட பணத்தை மூலதனத்தோடு அல்லது பண்டத்தோடு சேர்த்துக் குழப்புகிற தவறைச் செய்கிருர்கள்; ஆனல் இதற்கு மாருன வகையில், இந்த இரண்டு இனங்களுக்கும் பணத்துக்கும் வேறுபாடு இருப்பதாக எப்பொழுதாவது அவர்கள் சொல்லக்கூடிய அவசியமும் ஏற்படுகிறது.* உதாரணமாக, தங்கத்தை வெளிநாட்டுக்கு அனுப்பும்

---

* ''பண்டம், அதாவது மூலதனம் என்று கருதப்படும் தங்கத்துக்கும் நாணயம் என்று கருதப்படும் தங்கத்துக்கும் நாம் வேறுபடுத்திப் பார்ப்பது... அவசியம்'' (Thomas Tooke, *An Inquiry into the Currency Principle*, p. 10). ''தங்கமும் வெள்ளியும் வந்து சேர்ந்தவுடனே தேவையான சரிநிகரான தொகை கிடைத்துவிடும் என்று நம்பலாம்... தங்கமும் வெள்ளியும்... பணமாக எங்கும் பயன்படுத்தப்படுகிற காரணத்தால்... பண்டங்களின் மற்ற வகைகளைக் காட்டிலும் எல்லையற்ற அனுகூலத்தைக் கொண்டிருக்கின்றன. கடன்களை—அந்நியக் கடனே அல்லது உள்நாட்டுக் கடனே—தேயிலே, காப்பிக் கொட்டை, சர்க்கரை, அவுரியில் திருப்பிக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்வது வழக்கமல்ல; அவை நாணயத்தில் தான் திருப்பித்தரப்படுகின்றன. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அதே நாணயத்தில் பணம் கொடுக்கப்படுகிறது அல்லது மூசையில் தரப்படுகிறது. இது நாணயச் சாலேயிலோ அல்லது அது அனுப்பப்படும் அந்த நாட்டுச் சந்தையில் உடனே நாணயமாக மாற்றப்படலாம். கடனேத் திருப்பிக் கொடுப்பவர் தம் பணம் நிச்சயமாக, உடனடியாக, துல்லியமாக இந்த நோக்கத்தை நிறைவேற்றும்; தேவை ஏற்படாததனுல் அல்லது விலே ஊசலாட்டத்தினுல் அவர் ஏமாற்றமடைகின்ற ஆபத்து இருக்காது என்ற நம்பிக்கையைத் தர வேண்டும்'' (John Fullarton, *op. cit.*, pp. 132, 133). ''தங்கம், வெள்ளியைத் தவிர வேறு எந்தப் பொருளும்—அளவிலோ அல்லது ரகத்திலோ—அது அனுப்பப்படுகிற நாட்டின் வழக்கமான தேவைக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம்'' (Tooke, *An Inquiry...*, p. 10).

பொழுது, மூலதனம் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகிறது; ஆனால் இரும்பு, பருத்தி, தானியம் சுருக்கமாகச் சொல்வதென்றால் எந்தப் பண்டத்தை ஏற்றுமதி செய்தாலும் இதே நிலை தான். இரண்டுமே மூலதனம்தான். எனவே ஒன்று மட்டும் மூலதனம் என்பது அவற்றுக்கிடையே உள்ள வேறுபாடு அல்ல; ஆனால் ஒன்று பணம், மற்றது பண்டம் என்பதுதான் அவற்றுக்கிடையே உள்ள வேறுபாடாகும். எனவே சர்வதேச பரிவர்த்தனைச் சாதனம் என்ற வகையில் தங்கம் வகிக்கும் பாத்திரம் அது மூலதனம் என்ற தனிவகையான வடிவத்தைக் கொண்டிருப்பதால் அல்ல; பணம் என்ற வகையில் அது செய்கின்ற தனிவகையான செயலினால் ஏற்படுவதாகும். இதுபோல தங்கம் அல்லது அதன் இடத்தை அடைகிற வங்கி நோட்டுக்கள் உள்நாட்டு வர்த்தகத்தில் வழங்கீட்டுச் சாதனமாகச் செயல் புரியும் பொழுது அதே சமயத்தில் அவை மூலதனமாகவும் இருக்கின்றன. ஆனால் இதற்கு பதிலாக பண்டத்தின் வடிவத்தில் மூலதனத்தை உபயோகிப்பது முடியாது. இதை நெருக்கடிகள் குறிப்பிடத்தக்க வகையில் எடுத்துக் காட்டுகின்றன. பண்டத்துக்கும் பணமாக உபயோகப்படும் தங்கத்துக்கும் உள்ள வேறுபாடு தங்கத்தை வழங்கீட்டுச் சாதனமாக மாற்றுகிறதே தவிர, மூலதனம் என்ற வகையில் அது புரியும் செயல் அல்ல என்பதை மறுபடியும் வலியுறுத்துவோம். மூலதனம் நேரடியாகவே மூலதனமாக ஏற்றுமதி செய்யப்படும் பொழுது கூட, அதாவது வெளிநாட்டுக்கு குறிப்பிட்ட தொகையை வட்டி தரவேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்கிற பொழுது, இது பண்டங்களின் வடிவத்தில் ஏற்றுமதி செய்யப்படுகிறதா அல்லது தங்கமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்பது சந்தை நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது; அது தங்கமாக ஏற்றுமதி செய்யப்படுமானால் அரிய உலோகங்கள் பண்டங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் தனிப்பண்பாகப் பணம் என்ற வகையில் புரியும் தனிவகையான செயலினால் அவ்விதம் நடைபெறுகிறது. பொதுவாகச் சொல்வதென்றால் இந்த எழுத்தாளர்கள் முதலாவதாக, சாதாரண பண்டச் செலாவணியின் சுற்றுவட்டத்துக்குள் பணம் தனது சூக்கும வடிவத்தில் வளர்ச்சியடைந்து, செலாவணியிலிருக்கும் பண்டங்களின் உறவுகளிலிருந்து வெளியேறுவதை,

ஆராய்வதில்லை. அதன் காரணமாக அவர்கள் பண்டங்களுக்கு எதிராகப் பணம் அடைகின்ற சூக்குமமான வடிவங்களுக்கும் பணத்தின் ஸ்தூலமான கூறுகளை மறைக்கின்ற வடிவங்களாகிய மூலதனம், வருமானம் முதலியவற்றுக்கும் இடையே தொடர்ச்சியாக ஊசலாடிக் கொண்டிருக்கிறார்கள்.*

---

* பணம் மூலதனமாக மாறுவது மூன்றும் அத்தியாயத்தில் ஆராயப்படும். மூலதனத்தைப் பற்றி ஆராய்கின்ற அந்த அத்தியாயத்தோடு இந்தப் புத்தகத்தின் முதற் பகுதி முடிவடைகிறது.

# பிற்சேர்க்கைகள்

## கார்ல் மார்க்ஸ்

## அறிமுகம்[36]

## I. உற்பத்தி, நுகர்வு, பங்கீடு, பரிவர்த்தனை (செலாவணி)

### 1. உற்பத்தி

(அ) முதலில் பொருளாயத உற்பத்தி என்ற பிரச்சினை இங்கே விவாதிக்கப்படுகிறது.

சமூகத்தில் தனிநபர்கள் உற்பத்தி செய்தல், எனவே தனிநபர்களின் சமூக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியே திருப்பு முனையாகும். ஆடம் ஸ்மித்துக்கும் ரிக்கார்டோவுக்கும்[37] ஆரம்ப முனையாகப் பயன்படுகிற தனியான, தனித்து நிற்கும் வேடன் அல்லது செம்படவன் ராபின்சன் குரூசோ மாதிரியான கற்பனை நயமில்லாத பதினெட்டாம் நூற்றாண்டுப் புனைவுருக் கதைகளில் ஒன்றாகும். சமூக வரலாற்றாசிரியர்கள் எப்படிச் சொன்னபோதிலும்கூட இவை மிகையான மென்மை நயத்துக்கு மாறான எதிர்ச் செயலையும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட இயற்கையான வாழ்க்கைக்குத் திரும்புதலையும் மட்டுமே எவ்விதத்திலும் குறிக்காது. ரூஸ்ஸோ எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்' (contract social)[38]—இதில் இயற்கையில் சுதந்திரமானவர்களான குடிமக்கள் ஒப்பந்தத்தின் மூலமாக உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்—இம்மாதிரியான இயற்கைவாதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. இது ஒரு பிரமையாகும்; சிறிதும், பெரிதுமான ராபின்சன்களின் கலாபூர்வமான பிரமை என்பதைத் தவிர இதில் வேறு ஒன்றுமில்லை. இதற்கு மாறான வகையில், இது பதினாறாம் நூற்றாண்டில் பரிணமிக்கத் தொடங்கி, பதினெட்டாம் நூற்றாண்டில் அசுர வேகத்தில் முதிர்ச்சியடைந்த ''சிவில் சமூ

கத்தை'' முன்னூகித்தலாகும். சுதந்திரமான போட்டியைக் கடைப்பிடிக்கின்ற இந்த சமூகத்தில் தனிநபர், முந்திய சரித்திர ரீதியான சகாப்தங்களில் தன்னை ஒரு குறிப்பிட்ட, வரையறைகளுக்கு உட்பட்ட மனிதக் குழுக்களின் உடைமை யாக ஆக்கிய இயற்கைத் தொடர்புகள் முதலியனவற்றை இழந்துவிட்டது போலத் தோன்றுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் தீர்க்கதரிசிகள்—இவர்களுடைய தோள்கள் மீதுதான் ஆடம் ஸ்மித்தும் ரிக்கார்டோவும் இன்னும் நின்று கொண்டிருக்கிறார்கள்—ஒரு பக்கத்தில் நிலப்பிரபுத்துவ சமூ கத்தின் தகர்வின் விளைவாகவும் மறு பக்கத்தில் பதினாரும் நூற்றாண்டிலிருந்து உருவாகிக்கொண்டிருக்கும் புதிய உற் பத்தி சக்திகளின் படைப்பாகவும் தோன்றிய இந்தப் பதி னெட்டாம் நூற்றாண்டின் தனிமனிதனை கடந்த காலத் துக்குச் சொந்தமான இலட்சியமாகக் கருதினார்கள். அவர்கள் இந்தத் தனிநபரை வரலாற்று ரீதியான விளைவாகப் பார்க்க வில்லை, ஆனால் வரலாற்றின் தொடக்க நிலையாகப் பார்த் தார்கள். வரலாற்றின் போக்கில் பரிணமிக்கின்ற ஒன்றாகப் பார்க்கவில்லை; இயற்கையால் எதிர்நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாகப் பார்த்தார்கள்—ஏனென்றால் இந்தத் தனிநபர் அவர்களுக்கு இயற்கையோடு இணைந்தவனாக, மனித இயல்பு பற்றிய அவர்கள் கருத்துக்களுக்கு ஒத்தவனாக இருந்தான். இந்த மயக்கம் இது வரை ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு புதிய சகாப்தத்துக்கும் சிறப்பான அம்சமாகும். ஸ்டூவர்ட் சில அம்சங்களில் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு எதிர்ப்பாக இருந்தார். மேலும் மேன்மக்களில் ஒருவர் என்பதால் அவர் எல்லாப் பொருள்களையும் வரலாற்று நிலையிலிருந்து பார்ப் பதை விரும்பியவர். அவர் முதிர்ச்சியற்ற இக்கருத்தை ஒதுக்கிவிட்டார்.

வரலாற்றுப் போக்கை நாம் எவ்வளவு பின்னே சென்று ஆராய்ந்தாலும் தனிநபர், அதிலும் உற்பத்தியாளரான தனிநபர் அந்த அளவுக்கு அதிகமாக பெருங்குழு ஒன்றைச் சேர்ந்தவராகவும் அதை நம்பியிருப்பவராகவும் இருப்பதைப் பார்க்கிறோம். முதலில் தனிநபர் இன்னும் இயற்கையான வகையில் குடும்பத்தின் ஒரு பகுதியாகவும் அந்தக் குடும் பத்திலிருந்து பரிணமித்த இனக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருக்கிறார். பிறகு அவர் சமூகத்தின் ஒரு பகுதியாகிறார்—

இனக்குழுக்களின் மோதல்களிலும் இணைப்பிலும் உருவாகிய சமூகத்தின் பல்வேறு வடிவங்களில் ஒன்றில் ஒரு பகுதியாகிறார். சிவில் சமூகத்தில் சமூக இழையமைப்பின் பல்வேறு வடிவங்களும் ஒரு தனிநபருக்கு முன்பு அவருடைய தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் சாதனங்களாக, அந்நியத் தேவையாக எதிர்ப்படுவதென்பது பதினெட்டாம் நூற்றாண்டிலேயே ஏற்படுகிறது. ஆனால் இந்தக் கருத்து நிலையை, அதாவது தன்னந்தனியான தனிநபர் என்ற கருத்து நிலையை ஏற்படுத்தும் சகாப்தம் உண்மையில் மிக அதிகமான (அதுவரை) வளர்ச்சியடைந்த சமூக (இந்தக் கருத்து நிலையின்படி பொது) உறவுகளின் சகாப்தமாகும். மனிதன் ζῶον πολιτικόν* என்பது அதிகமான அளவுக்கு சொல்லுக்குச் சொல் சரியானதாகும்; அவன் சமூகப் பிராணி என்பது மட்டுமல்ல, சமூகத்துக்குள்ளாக மட்டுமே தனிநபராக்கப்படக் கூடிய பிராணியாகும். சமூகத்துக்கு வெளியே தன்னந்தனியான தனிநபர் உற்பத்தி செய்வது—சுறுசுறுப்பான சமூக சக்திகளைப் புரிந்துகொண்ட ஒரு நாகரிகமடைந்த மனிதன் தற்செயலாக ஒரு பாலைவனத்திலே விழுந்துவிடுகிற பொழுது இந்த அபூர்வமான சம்பவம் நடைபெறலாம்—சேர்ந்து வாழ்ந்து கூடிப் பேசும் தனிநபர்கள் இல்லாமல் பேச்சு வளர்ச்சியடையும் என்பதைப் போலவே அபத்தமானதாகும். இந்தக் கருத்தை மேலும் விரித்துரைப்பது அவசியமற்றதாகும். பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தாளர்களின் நூல்களில் பலவாறாகப் புகழ்ந்து பேசப்பட்ட இந்த அறிவுச் சூனியத்தை பாஸ்தியா, கேரி, புருதோன் போன்றவர்கள் நவீன அரசியல் பொருளாதாரத்தில் வெளிப்படையாக நுழைக்காதிருந்தால் நாம் இதைப் பற்றிப் பேச முற்பட்டிருக்க மாட்டோம். புருதோனுக்கு இது சுலபமானதாக இருக்கும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட பொருளாதார உறவை—அதன் வரலாற்றுப் பரிணாமம் அவருக்குத் தெரியாது—தொல்கதைகளின் மூலமாக வரலாற்றுத் தத்துவ ரீதியில் விளக்கம் கொடுக்க முடியுமானால் அது சுலபமானதுதானே. ஆதாம் அல்லது புரோமித்தியஸ் முன்பே

* Zoon politikon — சமூகப் பிராணி. அரிஸ்டாட்டில் *Republica* என்ற நூலில் மனிதனை இப்படி வர்ணிக்கிறார். —ப-ர்.

தயாராகியிருந்த கருத்தை எடுத்துக் கொண்டு அதை செயல்படுத்தினர்கள், இதரவை. Locus communis புனைவுருக் கதைகளைப் போல சுவையற்றதும் சலிப்பூட்டுவதும் வேறு எதுவும் இருக்காது.

எனவே நாம் உற்பத்தியைப் பற்றிப் பேசுகிற பொழுது சமூக வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்திலுள்ள உற்பத்தியை, ஒரு சமூகத்தில் தனிநபர்களின் உற்பத்தியைக் குறிப்பிடுகிறோம். எனவே உற்பத்தியைப் பற்றிப் பேசுவதென்றாலே, அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களையும் எடுத்துக் கொண்டு ஆராய வேண்டும் அல்லது நாம் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தை, உதாரணமாக நவீன முதலாளித்துவ உற்பத்தியை ஆராயப் போகிறோம் என்பதைத் தொடக்கத்திலேயே அறிவித்துவிடுவது நல்லது என்று தோன்றுகிறது. நவீன முதலாளித்துவ உற்பத்தியே நமது புத்தகத்தில் ஆராயப்படும் உண்மையான பொருளாகும். எனினும் எல்லா உற்பத்திக் கட்டங்களும் சில பொதுவான அம்சங்களைக் கொண்டிருக்கின்றன; அவற்றில் சில பொது இனங்கள் இருக்கின்றன. பொதுவான உற்பத்தி என்பது சூக்குமமான வடிவம்; ஆனால் அது பொது அம்சங்களை நடைமுறையில் வலியுறுத்தியும் விளக்கியும் திரும்பச் சொல்லுவதைத் தவிர்ப்பதால் அது அறிவார்ந்த சூக்கும வடிவம். எனினும் இந்தப் பொதுக் கருத்து அல்லது ஒப்பீட்டின் மூலமாக வெளியுலகத்துக்குக் கொண்டு வரப்படுகிற பொது அம்சமானது, வெவ்வேறான இனங்களை உள்ளடக்கிய பன்முகமான கலவையாக இருக்கிறது. சில அம்சங்கள் எல்லா சகாப்தங்களிலும் காணப்படுகின்றன; வேறு அம்சங்கள் சில சகாப்தங்களுக்கே பொதுவானவையாக இருக்கின்றன. மிகவும் நவீன காலமும் மிகவும் பழமையான காலமும் சில இனங்களைப் பொதுவாகக் கொண்டிருக்கும். அவை இல்லாத உற்பத்தி நினைக்கக் கூட முடியாததாகும். மிகவும் அதிகமான வளர்ச்சியடைந்த மொழிகளில் ஆதிகாலத்துப் பூர்விக மொழிகளோடு சில விதிகளையும் இனங்களையும் பொதுவாகக் கொண்டிருந்தாலும் இந்தப் பொதுப்படையான, பொதுவான அம்சங்களிலிருந்து அவை விலகியிருப்பதுதான் உண்மையில் அவற்றின் வளர்ச்சியாகும். பொதுவான உற்பத்தியைக் குறிப்பிடுகிற வரையறைச் சூத்திரங்களை வேறு

படுத்திப் பார்ப்பது அவசியம். ஆதாரப் பொருளாகிய மனிதகுலமும் புறப் பொருளாகிய இயற்கையும் ஒரே மாதிரியானவை என்பதனுல் ஒருமை ஏற்பட்டபோதிலும் பிற அடிப்படையான வேறுபாடுகளை ஒதுக்கிவிடாமல் இருப்பதற்கு இது தேவைப்படுகிறது. உதாரணமாக, நவீன பொருளாதார நிபுணர்கள் தங்களுடைய மாமேதைமையைக் கொண்டு இன்றைக்கிருக்கும் சமூக உறவுகள் ஒத்திசைவானவை, எக்காலத்துக்கும் உரியவை என்று நிரூபிப்பது இந்த உண்மையைப் பார்க்கத் தவறியதனுல் ஏற்படுவதே. உதாரணமாக, உற்பத்திக் கருவி இல்லாமல் எத்தகைய உற்பத்தியும் சாத்தியமல்ல; சில சமயங்களில் இந்தக் கருவி மனிதனுடைய கையாகவும் இருக்கக் கூடும். சென்ற காலத்திய உழைப்பு, திரட்டப்பட்ட உழைப்பு இல்லாமல் உற்பத்தி சாத்தியமல்ல; இந்த உழைப்பு என்பது ஒரு காரியத்தைத் திரும்பத் திரும்பச் செய்ததனுல் ஏற்பட்ட நுட்பத்திறனுக, அதுவும் ஒரு காட்டுமிராண்டியிடம் குவிந்திருப்பதாகவும் இருக்கலாம். மூலதனம் என்பது மற்றவற்ருேடு உற்பத்திக் கருவியாகவும், சென்றகால உழைப்பாக, பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பாகவும் இருக்கிறது. 'உற்பத்திக் கருவியை' அல்லது 'குவிக்கப்பட்ட உழைப்பை' மூலதனமாக மாற்றுகின்ற தனி வகையான கூறுகளைக் குறிப்பாக ஒதுக்கிவிட்டால் மூலதனம் என்பது இயற்கையால் கொடுக்கப்பட்ட சர்வாம்ச உறவு, எக்காலத்துக்கும் உரிய உறவாகும். உற்பத்தி உறவுகளின் மொத்த வரலாறுமே அரசாங்கங்களால் தீய நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட மாய்மாலமாக சிலருக்குத் தோன்றுகிறது. இதற்கு உதாரணம் கேரியின் கட்டுரைகள்.

பொது வகையில் உற்பத்தி என்பது இல்லாததைப் போலவே சர்வாம்ச உற்பத்தி என்பதும் கிடையாது. உற்பத்தி என்பது எப்பொழுதுமே ஒரு குறிப்பிட்ட வகையின்—உதாரணமாக, விவசாயம், கால்நடை வளர்ப்பு, பொருட்கள் தயாரிப்பு—உற்பத்தி வகை அல்லது அது அவற்றின் முழுமையாகும். எனினும் அரசியல் பொருளாதாரம் என்பது தொழில்நுட்பவியலல்ல. ஒரு குறிப்பிட்ட சமூகக் கட்டத்தில் உற்பத்தியின் பொது இனங்களுக்கும் உற்பத்தியின் குறிப்பிட்ட வடிவங்களுக்கும் உள்ள உறவு பிறிதோரிடத்தில் எடுத்துரைக்கப்படும்.

கடைசியாக, உற்பத்தி என்பது குறிப்பிட்ட உற்பத்தி மட்டுமல்ல; அது எல்லா சந்தர்ப்பங்களிலுமே விரிவான அல்லது குறுகிய உற்பத்தி வகைகளின் முழுமையில் ஈடு பட்டிருக்கிற திட்டவட்டமான சமூக உடம்பு, சமூக ஆதாரப் பொருள். நடைமுறை நிகழ்வுக்கும் புத்தகங்களில் விவரிக்கப்படுவதற்கும் உள்ள உறவும் இங்கே தொடர் பானது அல்ல. பொது வகையில் உற்பத்தி. உற்பத்தியின் குறிப்பிட்ட வகைகள். உற்பத்தியின் முழுமை.

பொருளாதார நூல்களில் உற்பத்தியின் பொது நிலைமை கள் அனைத்தையும் எடுத்துக் கூறுகின்ற பொதுப் பகுதியை முன்னுரையாக எழுதுவது—உதாரணமாக, ஜான் ஸ்டுவர்ட் மில்[39] எழுதிய புத்தகத்தில் உற்பத்தி என்ற தலைப்பின் கீழ் இதுவே காணப்படுகிறது—இன்றைய நாகரிகமாகும்.

இங்கே எழுதப்படும் பொதுப் பகுதி கீழ்க்கண்ட வற்றைக் கொண்டிருக்கும் அல்லது அப்படிக் கொண்டிருக்க உத்தேசிக்கப்படுகிறது:

1. உற்பத்தி தொடர்ந்து செய்யப்பட முடியாத நிலைமை கள். எந்த வகையைச் சேர்ந்த உற்பத்தியாக இருந்தாலும் அதற்குத் தேவைப்படுகிற அவசியமான கூறுகளைக் குறிப் பிடுவதே இதன் பொருள். ஆனால் இது நடைமுறையில் சில மிகச் சாதாரணமான வரையறைகளைச் சொல்லுவது அவசியமாவதை நாம் காண்போம். இவை அற்பமான கூறி யது கூறலாக மேலும் விரிக்கப்படும்.

2. உற்பத்தியை அதிக அளவில் அல்லது குறைந்த அளவில் ஊக்குவிக்கும் நிலைமைகள். உதாரணமாக, ஆடம் ஸ்மித்தின் முற்போக்கு நிலைச் சமுதாயமும், தேக்க நிலைச் சமுதாயமும்[40]. ஸ்மித் எழுதுவதற்கு விஞ்ஞான ரீதியான முக்கியத்துவம் கொடுப்பதற்காக—இதற்கு aperçu மாதிரி யான முக்கியத்துவம் தரப்படுகிறது—தனிப்பட்ட நாடு களின் வளர்ச்சியில் வெவ்வேறு கட்டங்களில் இருந்த உற்பத்தித் திறனின் அளவு பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டி யிருக்கும். கறாராகப் பார்க்கும் பொழுது, அப்படிப்பட்ட ஆராய்ச்சி நாம் எடுத்துக் கொண்டிருக்கும் தலைப்புப் பொரு ளின் சுற்றுவட்டத்துக்கு அப்பாற்பட்டதாகும். எனினும் அதற்குத் தொடர்புடைய சில அம்சங்களை போட்டி, திரட்

டல், இதரவையின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட வரையிலும் குறிப்பிட வேண்டியது அவசியம். ஒரு தொழில்வளமிக்க நாடு தனது வரலாற்று ரீதியான வளர்ச்சியின் உச்ச கட்டத்திலிருக்கும் பொழுது தனது மிக அதிகமான உற்பத்தித் திறனை அடைகிறது என்ற பொதுவான கூற்று பொது வடிவத்தில் அதற்கு பதிலாகும். உண்மையைச் சொல்வதென்றால், லாபத்தைக் காட்டிலும் லாபமடைவது முக்கிய நோக்கமாக இருக்கும் வரையிலும் ஒரு நாடு தன்னுடைய தொழில் வளர்ச்சியின் உச்ச கட்டத்தில் இருக்கிறது. இதைப் பொறுத்த வரை ஆங்கிலேயர்களைக் காட்டிலும் யாங்கிகள் (அமெரிக்கர்கள்) உயர்வானவர்கள். அல்லது உதாரணமாக, சில இனங்கள், உருவாக்கங்கள், தட்பவெப்ப நிலை, கடலோர வசதிகள், மண்ணின் வளம், முதலிய இயற்கை வசதிகள் ஆகியவற்றில் மற்றவைகளைக் காட்டிலும் உற்பத்திக்கு அதிகச் சாதகமானவையாக இருக்கின்றன. செல்வத்தின் உற்பத்தி, அதன் அகநிலைப், புறநிலைக் கூறுகள் கிடைக்கின்ற அளவுக்குச் சுலபமாக இருக்கிறது என்று முன்பு சொன்னதையே திரும்பச் சொல்லுவதற்கு இது ஒப்பானதாகும்.

ஆனால் பொதுப் பகுதி என்று சொல்லப்படுவதில் பொருளியலாளர்கள் உண்மையாக கவனிப்பது இவை அனைத்தையும் அல்ல. விநியோகம், இதரவைகளிலிருந்து வேறுபட்டிருக்கும் உற்பத்தி, வரலாற்றுக்குச் சம்பந்தமில்லாத சுதந்திரமான அழிவில்லாத இயற்கை விதிகளால் ஆளப்படுவதாகக் காட்டுவதும், அதே சமயத்தில் முதலாளித்துவ உறவுகளை சமூகத்தின் in abstracto மறுக்கவியலாத இயற்கை விதிகள் என்று திருட்டுத்தனமாக ஒப்புக்கொள்ளச் செய்வதும் அவர்களுடைய அக்கறையாகும். உதாரணமாக, மில் எழுதியிருப்பதைப் படிக்கவும்[41]. அவர்களுடைய மொத்த நடைமுறையின் உணர்வு பூர்வமான நோக்கம் அநேகமாக இதுதான். விநியோகத்தைப் பொறுத்தவரையிலும் மனிதர்கள் ஓரளவுக்கு சுதந்திரமான தேர்வுரிமையைப் பயன்படுத்தி வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உற்பத்திக்கும் விநியோகத்துக்கும் உள்ள உண்மையான இடைத் தொடர்பை இப்படி முரட்டுத்தனமாகப் பிரிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். சமூகத்தின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் விநியோகமுறை எவ்வளவு வேறுபாடுடையதாக இருந்த போதி

லும், உற்பத்தியைப் போலவே இங்கும் பொது அம்சங்களை வலியுறுத்துவது சாத்தியம் என்பது தொடக்கத்திலேயே தெளிவாகியிருக்கும். அது போலவே மனிதகுலம் அனைத்துக் குமே பொதுவான விதிகளில் உள்ள வரலாற்று ரீதியான வேறுபாடுகள் எல்லாவற்றையும் குழப்புவதும் அழித்து விடுவதும் சாத்தியமே. உதாரணமாக, அடிமை, பண்ணையாள், கூலி உழைப்பாளி ஆகியோர் தாங்கள் அடிமையாக, பண்ணை யாளாக, கூலி உழைப்பாளியாக ஜீவித்திருக்க உதவு கிற அளவுக்குத்தான் உணவைப் பெறுகிறார்கள். கப்பப் பணத்தைக் கொண்டு வாழ்கிற வெற்றியடைந்த மன்னர் அல்லது வரிப்பணத்தால் வாழ்கிற அதிகாரி அல்லது நில வாரத்தைக் கொண்டு வாழ்கிற நிலவுடமையாளர் அல்லது யாசகத்தின் மூலம் வாழ்கிற துறவி அல்லது நிலவரிப் பொருளைக் கொண்டு வாழ்கிற மதகுரு—இவர்கள் அனை வருமே சமூக உற்பத்தியின் விளைவுகளின் ஒரு பகுதியைப் பெறுகிறார்கள். ஆனால் அடிமையும் மற்றையோரும் பெறுகின்ற பகுதியை நிர்ணயிக்கும் விதிகளிலிருந்து இவர்கள் பெறும் சமூகப் பகுதியை நிர்ணயிக்கும் விதிகள் வேறானவையாக இருக்கின்றன. எல்லாப் பொருளாதார நிபுணர்களுமே இந்தப் பகுதியில் சேர்க்கிற இரண்டு மூலாதாரக் கூறுகள் பின்வருவனவாகும்: 1)சொத்து, 2)நீதித்துறை, காவல் துறை இதரவை அதை எவ்விதமாகக் காப்பாற்ற வேண்டும்.

இதற்கு சுருக்கமான பதில் போதும்:

முதலாவதைப் பற்றி: ஒரு தனிநபர் திட்டவட்டமான சமூக அமைப்பின் உதவியோடு அதற்குள்ளாகவே இயற்கைப் பொருட்களை ஒதுக்கீடு செய்தல் என்பதே எப்பொழுதும் உற்பத்தியாக இருந்திருக்கிறது. இங்கே சொத்து (ஒதுக் கீடு) உற்பத்தியின் நிபந்தனை என்று சொல்வது கூறியது கூறலாகும். ஆனால் இதிலிருந்து சொத்தின் தனிவகையான வடிவத்துக்கு, உதாரணமாக, தனிச் சொத்துரிமைக்கு (மேலும் இது எதிர்நிலைக்கும் சற்று மேம்பட்ட வடிவ மாகும்; அதைப் போலவே இது சொத்து இல்லாததை நிபந் தனையாகக் கொண்டிருக்கிறது) தாவிக் குதிப்பது கேலிக்குரி யதாகும். இதற்கு மாறாக, ஆதிவடிவம் பொதுச் சொத்து (உதாரணம்: இந்தியர்கள், ஸ்லாவ் இன மக்கள், பூர்வகாலத் திய கெல்ட்டுகள், முதலியோர்) என்று வரலாறு காட்டு

கிறது; கூட்டுச் சொத்து என்ற வடிவத்தில் அது நெடுங் காலம் வரையிலும் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. சொத்துரிமையின் எந்த வடிவத்தின் கீழ் செல்வம் வேக மாக வளர்ச்சியடைகிறது என்ற கேள்வி இந்தக் கட்டத்தில் இன்னும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனி னும் எங்கே ஒரு விதமான சொத்துவடிவமும் இல்லையோ அங்கே உற்பத்தியும் இல்லை, அதன் காரணமாக சமூகமும் இல்லை என்று குறிப்பிடுவது கூறியது கூறலாகும். ஒன்றை யும் ஒதுக்கீடு செய்யாத ஒதுக்கீடு என்பது ஒரு முரண் பாடாகும்.

இரண்டாவதைப் பற்றி: சேர்த்த பொருளைப் பாது காப்பது இதரவை. இந்த அற்பமானவற்றை அவற்றின் உண்மையான உள்ளடக்கத்துக்கு வகைப்படுத்தினால் அவற் றின் ஆசிரியர்கள் உணர்ந்து கொண்டதற்கும் அதிகமாகவே அவை எடுத்துக் கூறுகின்றன. அதாவது ஒவ்வொரு உற்பத்தி முறையும் அதன் தனிவகையான சட்ட உறவுகளை, அரசியல் வடிவங்களை, இதரவைகளை ஏற்படுத்துகிறது என்பதே. அங்கக ரீதியாக ஒன்றிணைந்த கூறுகளை ஒன்றுக்கொன்று வெறும் தற்செயலான உறவாக, அதாவது வெறும் மறிவினைச் செய லாக அமைப்பது வெறும் கொச்சைத் தன்மைக்கும் புரிந்து கொள்ள இயலாமைக்கும் எடுத்துக்காட்டாகும். பழங்கா லத்து குண்டாந்தடிச் சட்டத்தின் போது இருந்ததைக் காட் டிலும் இன்றைய போலீஸ் அமைப்பில் உற்பத்தி தடையில் லாமல் நடைபெறுகிறது என்பதை மட்டுமே நவீன பொரு ளியலாளர்கள் கருத்தில் கொண்டிருக்கிறார்கள். எனினும் குண்டாந்தடிச் சட்டமும் சட்டம்தான்; மேலும் அதிகமான பலத்தைக் கொண்டிருப்பவன் பிரயோகிக்கிற சட்டம்; அவர்களுடைய 'அரசியலமைப்புச் சட்ட அரசாங்கத்திலும்' கூட அது வேறு வடிவத்தில் இன்னும் உயிரோடிருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட உற்பத்திக் கட்டத்துக்குப் பொருத்த மான சமூக நிலைமைகள் இன்னும் பரிணமிக்கும் நிகழ்வில் இருக்கும் பொழுது அல்லது ஏற்கெனவே தகர்ந்து போய்க் கொண்டிருக்கும் நிலையில் இருக்கும் பொழுது உற்பத்தி நிகழ்வில் நெருக்கடிகள் ஏற்படுவது இயற்கை. ஆனால் இவை வெவ்வேறான அளவிலும் தன்மையிலும் இருக்கலாம்.

தொகுத்துச் சொல்ல: உற்பத்தியின் எல்லாக் கட்டங் களுக்கும் பொதுவாக இருக்கும் இனங்கள் பொது இனங் கள் என்று விவாதித்து முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லா உற்பத்திக்கும், எந்தவொரு உற்பத்திக்கும் பொது நிலைமைகள் என்று சொல்லப்படுபவை சூக்குமமான கருதுகோள்கள் என்பதைத் தவிர வேறில்லை; உற்பத்தியில் நடைமுறையிலுள்ள வரலாற்றுக் கட்டங்களை அவை விளக்க வில்லை.

## 2. உற்பத்திக்கும் வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வுக்கும் உள்ள பொதுவான உறவுகள்

உற்பத்தியைப் பற்றி மேலும் ஆராய்வதற்கு முன்பு, பொருளாதார நிபுணர்கள் அதனோடு சேர்த்துக் குறிப்பிடு கிற பல்வேறு பிரிவுகளையும் விவாதிப்பது அவசியமாகும்.

எடுத்த எடுப்பில் தோன்றும் கருதுகோள் இதுதான்: உற்பத்தி நிகழ்வின் போது சமூகத்தின் உறுப்பினர்கள் மனிதர் களின் தேவைகளுக்குத் தகுந்தவாறு இயற்கைப் பொருள் களை ஒதுக்கீடு (உற்பத்தி, தயாரித்தல்) செய்கிறார்கள்; ஒவ் வொரு தனிநபருக்கும் இந்தப் பொருள்கள் கிடைக்கும் அளவு வினியோகத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; வினியோகத் தின் பலனாக ஒரு நபருக்குக் கிடைத்த பகுதியைப் பரிவர்த் தனையின் மூலம் அவருடைய விருப்பத்துக்கு ஏற்ற குறிப் பிட்ட பொருள்களாக மாற்றிக் கொள்கிறார்; கடைசியாக நுகர்வின் போது பொருள்கள் பயன்படு பொருள்களாக மாறுகின்றன, அதாவது தனிநபர்கள் அவற்றை ஒதுக்கீடு செய்கிறார்கள். உற்பத்தியானது, தேவைகளுக்குப் பொருந் தும் அளவில் பொருள்களைத் தயாரிக்கிறது; வினியோகம் அவற்றை சமூக விதிகளுக்குத் தகுந்தவாறு பிரித்துத் தரு கிறது; இப்படி முன்பே பிரிக்கப்பட்ட பொருள்களைத் தனி நபர்களின் தேவைகளுக்குத் தகுந்தவாறு பரிவர்த்தனை வினி யோகிக்கிறது; கடைசியாக, நுகர்வின் போது பொருள் இந்த சமூக இயக்கத்திலிருந்து வெளியேறி ஒரு தனிநப ருடைய தேவையின் நேரடியான இலக்காகவும் பணியாளாக வும் மாறுகிறது; அந்தத் தேவை இதைப் பயன்படுத்தித் திருப்தியடைகிறது. இவ்விதத்தில் உற்பத்தி திருப்பு முனை யாகவும், நுகர்வு இறுதி நோக்கமாகவும், வினியோகமும்

பரிவர்த்தனையும் அதன் நடுப் பகுதியாகவும் தோன்றுகின் றன; இந்த நடுப் பகுதி இரட்டை வடிவத்தைக் கொண்டிருக் கிறது. ஏனென்றால் வரையறையின்படி வினியோகத்தைத் தூண்டுவது சமூகம்; பரிவர்த்தனையைத் தூண்டுவது தனி நபர்கள். உற்பத்தியில் நபர்கள் புறநிலை அம்சத்தைப் பெறு கிறார்கள்; நுகர்வில் பொருள்கள் அகநிலை அம்சத்தைப் பெறுகின்றன; வினியோகத்தில் சமூகம் பொது விதிகளின் பலத்தைத் துணையாகக் கொண்டு உற்பத்திக்கும் நுகர்வுக் கும் தொடர்பு படுத்துகிறது. பரிவர்த்தனையில் தனிநபர் கள் தம்மிடையே தொடர்பின்றி எடுக்கின்ற முடிவுகளின் விளைவாக இந்தத் தொடர்பு ஏற்படுகிறது.

தனிநபர்களுக்குச் சேர வேண்டிய பொருள்களின் விகி தாச்சாரத்தை (அளவை) வினியோகம் நிர்ணயிக்கிறது; வினியோகத்தின் மூலமாகத் தனிநபருக்கு ஒதுக்கப்பட்ட பங்குக்கு ஏற்ற வகையில் தனிநபர் கோரும் பொருள்களைப் பரிவர்த்தனை நிர்ணயிக்கிறது.

உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு ஒரு சரியான முக்கூற்று முடிவாக இருக்கிறது. பொது இனத்தை உற்பத்தியும், குறிப்பிட்ட இனத்தை வினியோகமும் பரிவர்த்தனையும், மொத்த இனங்களையும் தொகுத்துச் சொல் கிற தனி இனத்தை நுகர்வும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இது ஒரு வரிசைமுறை; ஆனால் இது மிகவும் மேலெழுந்த வாரியானது தான். உற்பத்தியை நிர்ணயிப்பவை இயற் கையின் பொது விதிகள்; தம்மிடையே தொடர்பில்லாத சமூகக் கூறுகள் வினியோகத்தை நிர்ணயிக்கின்றன. எனவே அது உற்பத்தி மீது நன்மையான தாக்கத்தை அதிகமான அல்லது குறைந்த அளவில் ஏற்படுத்தும். வடிவ ரீதியான சமூக இயக்கமான பரிவர்த்தனை இவை இரண்டிற்கும் இடை யில் இருக்கிறது. கடைசி நோக்கமாக மட்டுமின்றி, இறுதி யான இலட்சியமாகவும் கருதப்படுகிற முடிவான நட வடிக்கையாகிய நுகர்வு—அது திருப்பு முனையில் எதிரிடை யான இயக்கத்தை ஏற்படுத்தி இந்த மொத்த நிகழ்வையும் மறுபடியும் தொடங்கி வைப்பதைத் தவிர—பொருளா தாரத்தின் எல்லைக்கு வெளியே போய்விடுவது சரியானதே.

இப்பொருளாதார நிபுணர்களின் எதிரிகள் அவர்களை இடைத் தொடர்புடைய கூறுகளை முரட்டுத்தனமாகப் பிரிப்

பதாகக் குற்றம் சாட்டுகிருர்கள். ஆனுல் இவர்கள்—அரசியல் பொருளாதார உலகத்துக்குள்ளேயிருந்து வந்தாலும் அல்லது அதற்கு வெளியிலிருந்து வந்தாலும்—அதே கருத்து நிலையிலிருந்து விவாதிக்கிருர்கள் அல்லது இன்னும் கீழான நிலையிலிருந்து விவாதிக்கிருர்கள். பொருளாதார நிபுணர்கள் உற்பத்தியை அதுவே ஒரு தனி இலக்காக ஆகிவிட்டது போலக் கருதுகிருர்கள்; ஆனுல் வினியோகமும் சம அளவுக்கு முக்கியத்துவம் உடையது என்ற குற்றச்சாட்டு பரவலாகச் சொல்லப்படுகிறது. வினியோகம் என்பது உற்பத்திக்குப் பக்கத்தில் இருக்கிற தனியான, சுதந்திரமான உலகம் என்று பொருளாதார நிபுணர்கள் சொன்னதை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு சுட்டிக் காட்டப்படுகிறது. வெவ்வேறு கூறுகளையும் ஒரு தனி மொத்தமாகப் பார்க்கவில்லை என்பது மற்ருெரு வாதமாகும். இந்தப் பிரிவினை பாடபுத்தகங்களிலிருந்து நடைமுறை வாழ்க்கைக்குள் பலவந்தமாக நுழைந்து விட்டது போல இவர்கள் கருதுகிருர்கள்; ஆனுல் அது நடைமுறை வாழ்க்கையிலிருந்து தான் பாடபுத்தகங்களுக்குப் போயிருக்கிறது. கருதுகோள்களை இயக்கவியல் ரீதியாக சமரசப்படுத்துவது தான் பிரச்சினை; நடைமுறையில் இருக்கின்ற நிலைமைகளைத் தீர்வு செய்வது பிரச்சினையல்ல என்பது போல இவர்கள் பேசுகிருர்கள்.

### அ. [உற்பத்தியும் நுகர்வும்]

உற்பத்தியானது அதே சமயத்தில் நுகர்வாகவும் இருக்கிறது. அது அகநிலை நுகர்வு, புறநிலை நுகர்வு என்று இரட்டை வடிவத்தில் நுகர்வாக இருக்கிறது. [முதலாவதாக,] உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் பொழுது தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்கிற தனிநபர், உற்பத்தி நடவடிக்கையில் அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி அவற்றைச் செலவிட்டுவிடுகிருர். இயற்கையில் இனப்பெருக்கத்தில் உயிராற்றல் செலவழிக்கப்படுவது போன்றதே இதுவும். இரண்டாவதாக, உற்பத்தியானது உற்பத்திச் சாதனங்களின் நுகர்வாகும்—அவை உபயோகிக்கப்படுவதோடு உபயோகித்து முடிக்கப்படுகின்றன. ஒரு பகுதி (உதாரணமாக, எரிபொருள்) இன்னும் சாதாரணமான கூறுகளாகப் பிரிக்கப்படுகிறது. இது போலவே அது மூலப் பொருளின் நுகர்வைக்

கொண்டிருக்கிறது. அந்த மூலப் பொருள் தன்னுடைய மூல வடிவத்தையும் தன்மையையும் தொடர்ந்து வைத்திருப்ப தில்லை. இவ்விதத்தில் உற்பத்தி நடவடிக்கை அதனுடைய சகல அம்சங்களிலும் நுகர்வு நடவடிக்கையாக இருக்கிறது. பொருளாதார நிபுணர்கள் இதை ஒத்துக் கொள்கிறார்கள். நுகர்ச்சியோடு ஒரே சமயத்தில் இணைந்திருக்கும் உற்பத்தி யையும் உற்பத்தியோடு நேரடியாக உடன் இயங்குகிற நுகர் வையும் அவர்கள் உற்பத்திக்கான நுகர்வு என்று சொல் கிறார்கள். உற்பத்தியும் நுகர்வும் ஒன்று சேர்ந்திருப்பது ஸ்பினோஸாவின் determinatio est negatio*வைப் போன்றதாகும்.

ஆனால் இந்த உற்பத்திக்கான நுகர்வு என்ற வரை யறையை முன்வைப்பது சரியான அர்த்தத்திலுள்ள நுகர் விலிருந்து (இதை உற்பத்தியின் அழிக்கக் கூடிய எதிர்நிலை என்று வேறுபடுத்திக் காட்டுகிறார்கள்) உற்பத்தியோடு சேர்ந் திருக்கும் நுகர்வைப் பிரித்துக் காட்டுவதற்கே. எனவே நாம் சரியான நுகர்வு எனப்படுவதை ஆராய்வோம்.

நுகர்வு அதே சமயத்தில் உற்பத்தியாகவும் இருக்கிறது. இயற்கையில் ஒரு செடியின் வளர்ச்சியில் ரசாயனப் பொருள் களும் இயற்கைச் சக்திகளும் பயன்படுவதைப் போன்றதே இது. மனிதன் சாப்பாட்டின் மூலம், அதாவது நுகர்ச்சியின் ஒரு வடிவத்தின் மூலம் தன்னுடைய உடலை உற்பத்தி செய் வது நன்கு தெரிந்ததே. ஆனால் மனிதனின் உடலில் ஏதா வது ஓர் அம்சத்தின் வளர்ச்சிக்கு ஏதாவதொரு வழியில் உதவக்கூடிய எப்படிப்பட்ட நுகர்வுக்கும் இதே மாதிரி யாகச் சொல்லலாம். எனவே இது நுகர்வு உற்பத்தியாகும். எனினும் நுகர்வு மாதிரியே இருக்கும் இப்படிப்பட்ட உற் பத்தியின் வகை முதலாவது உற்பத்திப் பொருளின் அழிவி லிருந்து பிறக்கிற இரண்டாவது கட்டம் என்று அரசியல் பொருளாதாரம் கூறுகிறது. முதல் வகையைச் சேர்ந்த உற்பத்தியில் உற்பத்தியாளர் புறநிலை அம்சத்தை அடை கிறார், இரண்டாவது வகையில் அவரால் உருவாக்கப்பட்ட பொருள்கள் தனிவகையான அம்சத்தை அடைகின்றன. எனவே இந்த நுகர்வு உற்பத்தி—அது உற்பத்தி, நுகர்வின் நேரடியான ஒருமையைப் பிரதிநிதித்துவம் செய்த போதி

* definition is negation (வரையறுப்பதே மறுத்தலாகும்).

லும்—சரியான உற்பத்தியிலிருந்து அடிப்படையில் வேறு பட்டதாகும். நுகர்வோடு உடன் இருக்கும் உற்பத்தியும் உற்பத்தியோடு உடன் இருக்கும் நுகர்வும் கொண்ட நேரடியான ஒருமை அவற்றிடம் ஒரே சமயத்தில் இருக்கும் இரட்டைத்தன்மையைப் பாதிப்பதில்லை.

இவ்விதம் உற்பத்தி ஒரே சமயத்தில் நுகர்வாகவும், நுகர்வு ஒரே சமயத்தில் உற்பத்தியாகவும் இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒரே சமயத்தில் அதன் எதிரிடையாகவும் இருக்கிறது. ஆனால் இவற்றுக்கிடையே ஒரே சமயத்தில் ஓர் இடை நிலை இயக்கம் ஏற்படுகிறது. உற்பத்தி, அதற்கான பொருளைக் கொடுத்துதவி செய்து நுகர்வை ஏற்படுத்துகிறது; உற்பத்தி இல்லாமல் நுகர்வு என்பது புறப்பொருள் இல்லாததாகும். ஆனால் நுகர்வும் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்தும் அகப்பொருளைக் கொடுப்பதன் மூலமாக உற்பத்தியை ஏற்படுத்துகிறது. உற்பத்திப் பொருள் நுகர்விலே தான் தனது இறுதி நிறைவை அடைகிறது. ஒரு ரயில் வண்டியில் ஒருவரும் பிரயாணம் செய்யவில்லை என்றால் அது உபயோகமாகவில்லை, நுகர்வு நடைபெறவில்லை. எனவே அது செயலுக்கு வரக்கூடியது என்ற முறையில் ரயில் வண்டியாக இருக்கலாம், நடைமுறையில் அல்ல. உற்பத்தி இல்லாமல் நுகர்வு கிடையாது; ஆனால் நுகர்வு இல்லாமல் உற்பத்தியும் கிடையாது. ஏனென்றால் அத்தகைய இனத்தில் உற்பத்தி பயனற்றதாகும்.

நுகர்வு இரண்டு வழிகளில் உற்பத்தியை ஏற்படுத்துகிறது.

1. ஒரு பொருள் நுகர்வின் மூலமாகவே உண்மையில் பொருள் ஆகிறது. உதாரணமாக, ஓர் உடை அணியப்படுவதால் மட்டுமே உண்மையில் உடையாகிறது. ஒரு வீட்டில் ஒருவரும் குடியிருக்கவில்லை என்றால் அது உண்மையில் ஒரு வீடு அல்ல. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒரு பொருள்—சாதாரணமான இயற்கைப் பொருளிலிருந்து வேறுபட்டிருப்பது — தன்னை ஒரு பொருளாக வெளிப்படுத்துவது, ஒரு பொருளாக ஆவது நுகர்விலேதான். பொருளை அழித்து அதற்குக் கடைசி வர்ணம் தீட்டுவது நுகர்வே. ஏனென்றால் ஒரு பொருள் பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பு மட்டும் என்பதால் பொருள் ஆவது

கிடையாது; சுறுசுறுப்பான அகப்பொருளுக்குப் புறப்பொருளாக இருக்கிற அளவில்தான் அது பொருளாக இருக்கிறது.

2. நுகர்வு புதிய உற்பத்திக்கான தேவையை ஏற்படுத்துகிறது. எனவே உற்பத்தியின் முன்நிபந்தனையாகிய, உற்பத்தியின் உள்ளார்ந்த, கருத்தளவிலான காரணத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நுகர்வு உற்பத்தி நடைபெறுவதற்கான தூண்டுவிசையைக் கொடுப்பதோடு உற்பத்தியின் நிர்ணயிக்கப்பட்ட நோக்கமாகச் செயல் புரியும் புறப்பொருளையும் ஏற்படுத்துகிறது. உற்பத்தி வெளிப்புறத்தில் நுகர்வின் புறப்பொருளை ஏற்படுத்துகிறதென்று தெளிவாகி விட்டால், நுகர்வு உற்பத்தியின் புறப்பொருளை ஒரு கருத்தாக, உள்ளார்ந்த பிம்பமாக, ஒரு தேவையாக, ஓர் உந்துதலாக, ஒரு நோக்கமாக எதிர்நிலைப்படுத்துகிறது என்பதும் அது போலவே தெளிவாகப் புலப்படும். நுகர்வு உற்பத்தியின் புறப்பொருளை இன்னும் அகநிலையான வடிவத்தில் அமைத்துக் கொடுக்கிறது. தேவைஇல்லாமல் உற்பத்தி இருக்க முடியாது; ஆனால் நுகர்வு அந்தத் தேவையை மறுபடியும் படைக்கிறது.

உற்பத்தியின் தரப்பிலும் இதைப் போலவே நிகழ்கிறது.

1. உற்பத்தி நுகர்வின் புறப்பொருளான மூலப் பொருளைத் தருவதனால் புறப்பொருள் இல்லாத நுகர்வு என்பது நுகர்வு அல்ல. எனவே இதைப் பொறுத்தவரை, உற்பத்தி நுகர்வை ஏற்படுத்துகிறது, படைக்கிறது.

2. ஆனால் உற்பத்தி நுகர்வின் புறப்பொருளை ஏற்படுத்தித் தருவது மட்டுமல்லாமல் அது நுகர்வுக்கு ஒரு தனியான வடிவத்தை, தன்மையை, ஒரு பூச்சைக் கொடுக்கிறது. ஒரு பொருளுக்குப் பொருள் என்ற முறையில் கடைசிப் பூச்சை நுகர்வு கொடுப்பதைப் போல, உற்பத்தி நுகர்வுக்குக் கடைசிப் பூச்சைக் கொடுக்கிறது. மூலப் பொருள் பொதுவான வெறும் மூலப் பொருள் மட்டுமல்ல, அது குறிப்பிட்ட வகையில் உற்பத்தியால் நிர்ணயிக்கப்பட்ட வழியில் நுகர்வு செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட மூலப் பொருள் ஆகும். பசி என்பது பசியே; ஆனால் நன்கு சமைக்கப்பட்ட மாமிசத்தை கத்தி, முட்கரண்டியால் நறுக்கிச் சாப்பிடும் பொழுது தீர்ந்து விடுகிற பசி, பச்சை மாமிசத்தைக் கைகள், பற்கள், நகங்களை உபயோகித்துச் சாப்பிடும் பொழுது தீர்ந்து

விடுகிற பசியிலிருந்து வேறுபட்டிருக்கிறது. இவ்விதம் உற்பத்தி நுகர்வின் மூலப் பொருளை உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல் நுகர்வு செய்யப்படும் முறையையும்—புறநிலையாக மட்டுமல்லாமல் அகநிலையாகவும் கூட—ஏற்படுத்தித் தருகிறது. எனவே உற்பத்தி நுகர்வோனை உற்பத்தி செய்கிறது.

3. உற்பத்தி ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்கான மூலப் பொருளைத் தருவது மட்டுமல்லாமல், அந்த மூலப் பொருளின் தேவையையும் ஏற்படுத்துகிறது. நுகர்வு தனது தொடக்க காலத்து பூர்வீக முரட்டுத்தனம், உடனடித் தன்மை ஆகியவற்றிலிருந்து வெளியேறும் பொழுது—உற்பத்தி இன்னும் பூர்வீக முரட்டுத்தனத்தைக் கொண்டதாக இருந்தால்தான் அது அந்த நிலைமையிலேயே இருக்கும்—புறப்பொருளினால் ஏற்படுத்தப்பட்ட ஆசையின் காரணமாகவே அவ்வாறு செய்கிறது. புறப்பொருளின் மீது ஏற்படுகிற தேவை அந்தப் புறப்பொருள் உணர்ச்சியால் தூண்டிவிடப்படுகிறது. ஒரு கலைப் பொருளானது கலையுணர்ச்சியும் அழகை அனுபவிக்கும் விருப்பமும் கொண்ட ரசிகர்களை உருவாக்குகிறது—இதைப் போன்று வேறு உற்பத்திப் பொருள்களைப் பற்றியும் சொல்லலாம். எனவே உற்பத்தி அகப்பொருளுக்குப் புறப்பொருளை உற்பத்தி செய்வதோடு புறப்பொருளுக்கு அகப்பொருளையும் உற்பத்தி செய்கிறது.

எனவே உற்பத்தி நுகர்வை உற்பத்தி செய்கிறது: 1) நுகர்வின் மூலப் பொருளைக் கொடுப்பதன் மூலம்; 2) நுகர்வு முறையை நிர்ணயிப்பதன் மூலம்; 3) நுகர்வோனிடம் முதலில் உற்பத்திப் பொருள்களாகக் காட்டுகின்ற புறப்பொருள்கள் மீது ஒரு தேவையை உருவாக்குவது. எனவே அது நுகர்வுப் பொருளை, நுகர்வு முறையை, நுகர்வின் உந்துவிசையை உற்பத்தி செய்கிறது. இது போலவே நுகர்வு உற்பத்தியாளரை அவசியமிக்க தேவையாக எதிர்நிலைப்படுத்துவதன் மூலம் அவரிடம் திறமையை ஏற்படுத்துகிறது.

நுகர்வுக்கும் உற்பத்திக்கும் இருக்கின்ற ஒரே படித்தான நிலை மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

1. நேரடியான ஒரேநிலை: உற்பத்தியே நுகர்வு—நுகர்வுதான் உற்பத்தி. நுகர்வு உற்பத்தியும் உற்பத்திக்கான

நுகர்வும். பொருளாதார நிபுணர்கள் இரண்டையுமே உற்பத்திக்கான நுகர்வு என்று சொல்கிறார்கள் ஆனால் இரண்டுக்குமிடையே வேறுபாடும் காண்கிறார்கள். அவர்களுடைய நூல்களில் முன்னதைப் புனருற்பத்தி என்றும் பின்னதை உற்பத்திக்கான நுகர்வு என்றும் குறிப்பிடுகிறார்கள். முன்னதைப் பற்றிச் செய்யப்படுகின்ற எல்லா ஆராய்ச்சிகளும் பயனுள்ள உழைப்பு, பயனில்லாத உழைப்பு சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன; பின்னதைப் பற்றிய எல்லா ஆராய்ச்சிகளும் பயனுள்ள நுகர்வு, பயனில்லாத நுகர்வைப் பற்றியனவாக இருக்கும்.

2. ஒன்று மற்றொன்றின் சாதனமாக, அதனால் தூண்டப்பட்டதாகத் தோன்றுகிறது. இதைப் பரஸ்பரம் சார்ந்திருத்தல் என்கிறோம். அவை இவ்விதத்தில் பரஸ்பர உறவுக்குக் கொண்டுவரப்படுகின்றன; ஒன்றுக்கொன்று மிக அவசியமானதாகத் தோன்றுகின்றன. எனினும் அவை ஒன்றுக்கொன்று அந்நியமாகவே இருக்கின்றன. உற்பத்தி தருகிற பொருள் நுகர்வின் வெளிப்புற நோக்கமாகிறது. நுகர்வு உற்பத்தியின் தேவையை, அதாவது உள்ளார்ந்த நோக்கத்தை, குறியை ஏற்படுத்துகிறது. உற்பத்தி இல்லாமல் நுகர்வு கிடையாது; நுகர்வு இல்லாமல் உற்பத்தி கிடையாது. இந்தக் கருதுகோள் அரசியல் பொருளாதாரத்தில் பல வடிவங்களில் தோன்றுகிறது.

3. உற்பத்தி ஒரே சமயத்தில் நுகர்வாக இருப்பதும், நுகர்வு ஒரே சமயத்தில் உற்பத்தியாக இருப்பதும் மட்டுமல்ல; உற்பத்தி நுகர்வுச் சாதனம், நுகர்வு உற்பத்தியின் நோக்கம், அதாவது ஒன்று மற்றொன்றுக்கு அதன் நோக்கத்தைக் கொடுக்கிறது — உற்பத்தி நுகர்வுக்கு அதன் வெளிப்புற நோக்கத்தைக் கொடுக்கிறது, நுகர்வு உற்பத்திக்கு அதன் கருத்தளவிலான நோக்கத்தைத் தருகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் இவை ஒவ்வொன்றும் ஒரே சமயத்தில் மற்றதாகவும் இருப்பதோடு அதன் காரணமாகவும் இருப்பது மட்டுமல்லாமல், அவை ஒவ்வொன்றும் உந்தித் தள்ளப்படுவதன் விளைவாக அடுத்ததைப் படைக்கிறது, தன்னையே அடுத்த ஒன்றாகப் படைக்கிறது. நுகர்வு உற்பத்திப் பொருளின் சுயேச்சையான, ஸ்தூலமான வடிவத்தை நுகர்வு செய்து உற்பத்திப்

பொருள் என்ற வகையில் அதை அழித்து முழுமையாக்கு கிறது. எனவே உற்பத்தி நிகழ்வை முழு நிறைவாக்குவது நுகர்வு மட்டுமே. மேலும் ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்வது நுகர்வுக்குத் தேவைப்படுவதன் விளைவாக உற்பத்தியின் முதல் நிகழ்வின் போது ஏற்பட்ட திறமை முழுத் தேர்ச்சியடைந்து நுட்பத்திறனாக மாற்றமடைகிறது. எனவே உற்பத்திப் பொருளை உற்பத்திப் பொருளாக மாற்றுவது மட்டுமல்லாமல் உற்பத்தியாளரை உற்பத்தியாளராகவும் மாற்றுகின்ற கடைசி நடவடிக்கை நுகர்வே. இதற்கு மறு பக்கத்தில் உற்பத்தி, குறிப்பிட்ட வகையான நுகர்வை ஏற்படுத்துவதன் மூலமாக நுகர்வை ஏற்படுத்துகிறது; நுகர்வுக்கு ஊக்கமளிப்பதன் மூலமாக நுகர்வு செய்கின்ற திறமையை ஒரு தேவையான பொருளாக்கிவிடுகிறது. கடைசியாகச் சொல்லப்பட்ட ஒரே படித்தான நிலைக்கு—இது எண். 3ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது—பொருளியலாளர்கள் தேவைக்கும் அளிப்புக்கும், பொருட்களுக்கும் தேவைகளுக்கும், சமூகத்தினால் உருவாக்கப்பட்ட தேவைகளுக்கும் இயற்கையான தேவைகளுக்கும் உள்ள உறவை விவாதம் செய்யும் பொழுது பலவாறாக விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

இதற்குப் பிறகு, உற்பத்தியும் நுகர்வும் ஒரே படித்தானவை என்று அனுமானிப்பது ஒரு ஹெகல்வாதிக்கு மிகவும் சுலபமானதாகும். இப்படி சோஷலிஸ்ட் கட்டுரையாளர்கள்[42] மட்டுமல்ல நயமில்லாத பொருளாதார நிபுணர்கள் கூட இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஒரு தேசத்தை அல்லது சூக்கும வடிவத்தில் மனித குலத்தை எடுத்துக் கொண்டால் அதன் உற்பத்தியே அதனுடைய நுகர்வு என்று ஸே எழுதியிருப்பதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். ஸேயின் இந்தக் கருதுகோள் தவறானது, ஏனென்றால் உதாரணமாக, ஒரு தேசம் தன்னுடைய மொத்த உற்பத்தியையும் நுகர்வு செய்வதில்லை; உற்பத்திச் சாதனம், நிலையான மூலதனம், இதரவைகளை அது ஏற்படுத்த வேண்டும் என்று ஷ்டோர்ஹ் எடுத்துக் காட்டியிருக்கிறார். மேலும் ஒரு சமூகம் முழுவதையும் ஒரு தனிப்பொருளாகப் பார்க்கக் கூடாது. ஏனென்றால் அது ஊக ஆய்வுப் போக்காகும். ஒரு தனிப் பொருளைப் பொறுத்தவரையிலும் உற்பத்தியும் நுகர்வும் ஒரு தனி நடவடிக்கையின் கட்டங்களாகத் தோன்றுகின்றன.

உற்பத்தியும் நுகர்வும், ஒரு அகப்பொருளின் நடவடிக்கை களாகவோ அல்லது தனிநபர்களின் நடவடிக்கைகளாகவோ கருதப்படுமானல், அவை மேற்சொன்னவற்றில் எந்த வகையிலும் ஒரு நிகழ்வின் கட்டங்களாகத் தோன்றுகின்றன; அவற்றின் திருப்பு முனையான உற்பத்தி தீர்மானமான கூறு ஆகிறது—இந்த மிக முக்கியமான அம்சம் மட்டுமே இங்கே வலியுறுத்தப்படுகிறது. நுகர்வு—தேவை என்பதாகவும் அவசியமானது என்ற வகையிலும்—உற்பத்தி நடவடிக்கையின் உள்ளார்ந்த அம்சமாக இருக்கிறது; எனினும் உற்பத்தி என்ற முனையில்தான் கைவரப்பெறும் நிலை ஆரம்பமாகிறது. இந்த நடவடிக்கை நிகழ்வு முழுவதற்குமே சாரமாக இருப்பதால் அது தீர்மானமான கட்டமாகவும் இருக்கிறது. ஒரு தனிநபர் பொருளை உற்பத்தி செய்கிறார், அதை நுகர்வு செய்தபிறகு திருப்பு முனைக்கு மீண்டும் வருகிறார். எனினும் அவர் உற்பத்தி செய்யும் தனிநபராக, தன்னைப் புனருற்பத்தி செய்துகொள்ளும் தனிநபராகத் திரும்புகிறார். இவ்விதமாக நுகர்வு உற்பத்தியில் ஒரு கட்டமாகும்.

ஆனால் சமூகத்தில், உற்பத்தி முடிவடைந்த பிறகு பொருளுக்கும் உற்பத்தியாளருக்கும் அந்நியமான உறவுதான் இருக்கிறது. அந்தப் பொருள் அவருக்குத் திரும்புவது மற்ற தனிநபர்களோடு அவருக்குள்ள உறவுகளைப் பொறுத்திருக்கிறது. பொருள் உடனடியாக அவர் கைக்கு வந்து சேருவதில்லை. மேலும் அவர் சமூகத்துக்கு உள்ளே உற்பத்தி செய்பவரென்றால் அதன் உடனடியான ஒதுக்கீடு அவருடைய நோக்கம் அல்ல. பொருட்களின் உலகத்தில் தனிநபருடைய பங்கை சமூக விதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கிற வினியோகம் உற்பத்தியாளருக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் இடையே, அதாவது உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே குறுக்கிடுகிறது.

அப்படியானல், வினியோகம் என்பது உற்பத்தியை ஒட்டியும் அதற்கு வெளியிலும் இருக்கின்ற சுதந்திரமான பகுதியா?

### ஆ. [உற்பத்தியும் வினியோகமும்]

சாதாரணமாக எழுதப்பட்டிருக்கும் பொருளாதார நூல்களைப் படிக்கும் பொழுது அவற்றில் எல்லாவற்றையும்

இரண்டு தடவை சொல்லியிருப்பது நம்முடைய கவனத்தை உடனே கவரும். உதாரணமாக, வினியோகம் என்ற தலைப்பின் கீழ் நிலவாரம், கூலி, வட்டி, லாபம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; உற்பத்தி என்ற தலைப்பின் கீழ் உற்பத்திக் காரணிகளாக நிலம், உழைப்பு, மூலதனம் குறிப்பிடப்படுகின்றன. மூலதனம் இரண்டு தடவை கணக்கிடப்படுவது தொடக்கத்திலிருந்தே புலப்படுகிறது. முதல் சந்தர்ப்பத்தில் உற்பத்திக் காரணியாகவும் இரண்டாவது சந்தர்ப்பத்தில் வருமானத்தின் தோற்று வாயாகவும், அதாவது வினியோகத்தின் குறிப்பிட்ட வடிவங்களை நிர்ணயிக்கிற காரணியாகவும் இரண்டு முறை கணக்கிடப்படுகிறது. வட்டியும் லாபமும் உற்பத்தியிலும் வருகின்றன; ஏனென்றால் அவை மூலதனம் அதிகமாகி வளர்ச்சியடைகின்ற வடிவங்கள் என்பதால் மூலதன உற்பத்தியின் கட்டங்கள். வினியோகத்தின் வடிவங்கள் என்ற வகையில் வட்டியும் லாபமும் மூலதனத்தை உற்பத்திக் காரணியாக முன்னூகிக்கின்றன. அவை உற்பத்தியின் காரணியாக மூலதனம் இருக்க வேண்டும் என்பதை முன்நிபந்தனையாகக் கொண்டிருக்கிற வினியோகத்தின் வடிவங்கள். இது போலவே அவை மூலதனப் புனருற்பத்தியின் வெவ்வேறு முறைகள்.

கூலி என்பது வேறு பகுதியில் ஆராயப்படுகின்ற கூலி உழைப்பையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஒரு இனத்தில் உழைப்பு உற்பத்திக் காரணி என்ற முறையில் புரிகின்ற குறிப்பிட்ட செயல் மற்றொரு இனத்தில் வினியோகத்தின் செயலாகத் தோன்றுகிறது. உழைப்பு கூலி உழைப்பு என்ற தனிவகையான வடிவத்தைக் கொண்டிராவிட்டால், உற்பத்திப் பொருளில் அதன் பங்கு கூலி என்ற வடிவத்தில் தோன்றாது. இதற்கு உதாரணம் அடிமை முறை. கடைசியாக நிலவாரம். உற்பத்திப் பொருளில் நிலச் சொத்து பங்கு பெறுகின்ற மிக அதிகமான வளர்ச்சியை அடைந்த வினியோகத்தின் வடிவத்தை எடுத்துக் கொண்டால் இங்கே நிலவாரம் பெரிய அளவிலுள்ள நிலச் சொத்துடைமையை (சரியாகச் சொல்வதென்றால் பெரிய அளவு விவசாயத்தை) உற்பத்திக் காரணியாக முன்னூகிக்கிறதே தவிர, பொதுவாக நிலத்தை அல்ல. கூலி என்பது பொதுவாக உழைப்பை முன்னூகிப்பதில்லை என்பதைப் போன்றதே இதுவும். வினியோ

கத்தின் உறவுகளும் முறைகளும் உற்பத்திக் காரணிகளின் எதிர்நிலை அம்சமே. ஒரு தனிநபர் கூலி உழைப்பு என்ற வடிவத்தில் உற்பத்தியில் பங்கு பெறும் பொழுது உற்பத்தியின் விளைவாகிய உற்பத்திப் பொருளில் கூலி என்ற வடிவத்தில் தம்முடைய பங்கினைப் பெறுவார். வினியோகத்தின் அமைப்பு உற்பத்தியின் அமைப்பினால் முழுவதுமே நிர்ணயிக்கப்படுகிறது. வினியோகம் என்பது உற்பத்தியின் தயாரிப்பு என்பது உள்ளடக்கத்தைப் பொறுத்த வரையிலும் மட்டுமல்ல—ஏனென்றால் உற்பத்தியின் விளைவுகளை மட்டுமே வினியோகிக்க முடியும்,—வடிவத்தைப் பொறுத்தும் அப்படியே. ஏனென்றால் உற்பத்தியில் மனிதர்கள் பங்கெடுக்கிற குறிப்பிட்ட வகை, வினியோகத்தின் தனி வகையான வடிவத்தை, அவர்கள் வினியோகத்தில் பங்கு கொள்கின்ற வடிவத்தை நிர்ணயிக்கிறது. உற்பத்தி என்ற பகுதியில் நிலத்தைப் பற்றிப் பேசுவதும், வினியோகத்தைக் குறித்த பகுதியில் நிலவாரத்தைப் பற்றிப் பேசுவதும், இதரவையும் மொத்தத்தில் ஒரு பிரமையே.

ரிக்கார்டோ போன்ற பொருளாதார நிபுணர்கள் மீதுள்ள முக்கிய குற்றச்சாட்டு, அவர்கள் மற்றவைகளை ஒதுக்கி உற்பத்தியில் மட்டுமே கவனம் செலுத்தினார்கள் என்பதே. அவர்கள் அரசியல் பொருளாதாரத்தில் மற்றவைகளை விலக்கிய தனியான பாடமாக வினியோகத்தைக் கருதி வந்திருக்கிறார்கள். ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உற்பத்திக் காரணிகள் வெளிப்படுகின்ற மிகத் துல்லியமான வெளியீடாக வினியோகத்தின் வடிவங்களை இயல்புணர்ச்சி மூலமாகக் கருதி வந்திருக்கிறார்கள்.

ஒரு தனிநபருக்கு அவர் உற்பத்தி செய்கின்ற சுற்றுவட்டத்துக்குள் அவருடைய நிலைமையை நிர்ணயிக்கின்ற சமூக விதியாக வினியோகம் இயற்கையிலேயே தோன்றுகிறது. இவ்விதத்தில் வினியோகம் உற்பத்திக்கு முற்பட்டதாக இருக்கிறது. ஒரு தனிநபரிடம் தனக்கென்று மூலதனமோ அல்லது நிலச் சொத்துக்களோ இல்லாதபொழுது, சமூக வினியோகத்தின் விளைவாக அவர் பிறந்தது முதல் கூலி உழைப்பைச் சார்ந்திருக்கிறார். ஆனால் இப்படிச் சார்ந்திருப்பதே மூலதனமும் நிலச் சொத்துடைமையும் சுதந்திரமான உற்பத்திக் காரணிகளாக இருப்பதனால் ஏற்பட்ட விளைவாகும்.

ஒருவர் சமூகங்களை மொத்தமாக எடுத்துக் கொண்டால் வினியோகத்தின் மற்றொரு அம்சம் உற்பத்திக்கு முந்தியதாகத் தோன்றுகிறது. அது பொருளாதாரத்துக்கு முந்திய காரணியைப் போல உற்பத்தியை நிர்ணயிக்கிறது. ஒரு வெற்றியடைந்த நாடு வெற்றியாளர்களுக்கு இடையே நிலத்தைப் பிரித்துக் கொடுத்து அதன் மூலமாக நிலச் சொத்துடைமையின் தனியான வடிவத்தையும் வினியோகத்தின் தனியான வடிவத்தையும் திணித்து உற்பத்தியை நிர்ணயிக்கலாம். அல்லது அந்த நாட்டின் மக்களை அடிமைகளாக மாற்றி அடிமை உழைப்பை உற்பத்தியின் அடிப்படையாகக் கொண்டுவரலாம். அல்லது ஒரு புரட்சியின் போது ஒரு நாடு அங்குள்ள பெரிய பண்ணைகளை சிறு அளவுள்ள நிலங்களாகப் பிரிக்கலாம். இந்தப் புதிய வினியோகத்தின் விளைவாக உற்பத்தியின் தன்மையை மாற்றிவிடலாம். அல்லது சட்டத்தின் மூலமாகச் சில குடும்பங்களில் நிலச் சொத்துடைமையை நிரந்தரமாக்கி விடலாம். அல்லது உழைப்பை ஒரு பரம்பரைக் கடமையாக மாற்றி அதையே ஒரு ஜாதீய அமைப்பாக நிறுவி விடலாம். இப்படிப்பட்ட வகைகளில் எல்லாம்—இவை அனைத்தும் வரலாற்றில் நடைபெற்றதுண்டு—வினியோகம் உற்பத்தியினால் நிர்ணயிக்கப்படவோ, ஒழுங்குபடுத்தப்படவோ இல்லை, இதற்கு மாறாக உற்பத்தியே வினியோகத்தால் நிர்ணயிக்கப்படுவது போலத் தோன்றுகிறது.

வினியோகம் என்பது—மிகவும் மேலோட்டமான விளக்கத்தின் படி—உற்பத்திப் பொருள்களின் வினியோகமாகும். அது இவ்விதமாக உற்பத்தியிலிருந்து வெகு தூரத்துக்குக் கொண்டு போகப் பட்டு அதிலிருந்து தோற்றத்தில் மட்டும் சுதந்திரமானதாக ஆக்கப்படுகிறது. ஆனால் வினியோகம் பொருள்களின் வினியோகமாவதற்கு முன்பு, அது 1) உற்பத்திச் சாதனங்களின் வினியோகம், 2) இதே நிலைமையின் வேறொரு அம்சம்—சமூகத்தின் உறுப்பினர்களை உற்பத்தியின் பல்வேறு வகைகளிலும் வினியோகிப்பது (உற்பத்தியின் திட்டவட்டமான உறவுகளின் கீழ் தனிநபர்களை உட்படுத்துவது). பொருள்களின் வினியோகம் என்பது உற்பத்தி நிகழ்வில் அடங்கியிருப்பதும் உற்பத்தியின் அமைப்பை நிர்ணயிப்பதுமான இந்த வினியோகத்தின் விளைவு என்பது தெளி

வாகும். உற்பத்தியை அதனோடு இணைந்த உறுப்பாகிய வினியோகத்திலிருந்து பிரித்து ஆராய்வது ஒரு வீண் வேலை என்பது தெளிவு. இதற்கு எதிராக, உற்பத்திப் பொருள்களின் வினியோகம் ஆரம்பத்தில் உற்பத்திக் காரணியாக இருந்த வினியோகத்தால் தானாகவே நிர்ணயிக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தியின் மிகச் சிறந்த பொருளாதார நிபுணராகிய ரிக்கார்டோ—நவீன உற்பத்தியின் தனி வகையான சமூக அமைப்பைப் புரிந்துகொள்வதே அவருடைய நோக்கம்—அதே காரணத்தால், நம் காலத்திய அரசியல் பொருளாதாரத்தின் முறையான பொருள் வினியோகமே, உற்பத்தி அல்ல என்று கூறுகிறார். உற்பத்தியை அழிவில்லாத உண்மையென்று பறைசாற்றி, வினியோகத்தின் உலகத்துக்குள் மட்டும் வரலாற்றை நிறுத்திக் கொள்கிற பொருளாதார நிபுணர்களின் சிறுதரமான ஆராய்ச்சிக்கு இது ஒரு சான்றாகும்.

உற்பத்தியை நிர்ணயிக்கும் வினியோகத்தின் வடிவத்துக்கும் உற்பத்திக்குமிடையே உள்ள உறவைப் பற்றிய கேள்வி உற்பத்தி உலகம் சம்பந்தப்பட்டது என்பது தெளிவு. குறைந்த பட்சமாக, இந்த உதாரணத்திலாவது, உற்பத்தியானது உற்பத்திச் சாதனங்களின் தனிவகையான வினியோகத்தின் மூலமாக நடைபெற்றாக வேண்டுமென்பதால், அந்த அளவுக்கு வினியோகம் உற்பத்திக்கு முந்தியிருப்பது, அதன் முன்நிபந்தனை என்றும் சொல்லப்படுமானால், அதற்குப் பின்வருமாறு பதில் கூறலாம்: உற்பத்திக்கென்று நிலைமைகளும் முன்நிபந்தனைகளும் இருக்கின்றன; அவை உற்பத்தியோடு இணைந்த கூறுகள். தொடக்கத்தில் இவை தாமாகவே வளர்ந்திருப்பது மாதிரித் தோன்றியிருக்கலாம். எனினும், உற்பத்தி நிகழ்வின்போது அவை இயற்கையாகவே வளர்ச்சியடைந்த கூறுகள் என்பதிலிருந்து வரலாற்று ரீதியான கூறுகளாக மாற்றப்படுகின்றன. எந்த ஒரு கட்டத்துக்கும் அவை உற்பத்தியின் இயற்கையான முன்நிபந்தனைகளாகத் தோன்றிய போதிலும், மற்றொரு கட்டத்தின் வரலாற்று விளைவாகும். அவை உற்பத்தி நிகழ்வின் போது தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, இயந்திரங்களைப் பயன்படுத்தியது உற்பத்திச் சாதனம், உற்பத்திப் பொருள் இரண்டின் வினியோகத்திலுமே மாற்றங்

களை ஏற்படுத்தியது. நவீன காலத்திலுள்ள பெரிய அளவு நிலவுடைமை என்பது நவீன முறை வர்த்தகம், தொழில் துறை ஆகியவற்றினால் மட்டுமல்லாமல், பின்னே சொல்லப் பட்டதை விவசாயத்துக்குப் பயன்படுத்துவதனாலும் ஏற் பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்ட கேள்விகளைக் கடைசியில் பின்வரு மாறு வரிசைப்படுத்தலாம். பொதுவான வரலாற்று நிலைமை கள் உற்பத்தியில் வகிக்கும் பாத்திரம் என்ன? வரலாற்று ரீதியான வளர்ச்சியை மொத்தமாக எடுத்துக் கொள்ளும் பொழுது அதனோடு உற்பத்தி எவ்வாறு சம்பந்தப்பட்டிருக் கிறது? இந்தக் கேள்வி உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சி யோடும் விவாதங்களோடும் சம்பந்தமுடையது என்பது தெளிவு.

எனினும் இந்தக் கேள்விகளுக்கு மேலே எழுப்பப்பட் டிருக்கும் சாதாரணமான வடிவத்தில் சுருக்கமாக பதில் சொல்லி விடலாம். படையெடுப்பினால் ஏற்படும் வெற்றி கள் மூன்று விளைவுகளில் ஏதாவதொன்றை ஏற்படுத்தலாம். வெற்றியடைந்த நாடு தன்னுடைய உற்பத்தி முறையைத் தோல்வியடைந்த மக்கள் மீது திணிக்கலாம் (உதாரணம்: இந்த நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் அயர்லாந்திலும், இந்தி யாவில் ஓரளவுக்கும் இதைச் செய்தார்கள்); அல்லது பழைய உற்பத்தி முறையில் குறுக்கிடாமல், கப்பம் வாங்குவதோடு திருப்தி அடையலாம் (உதாரணம்: துருக்கியர்களும், ரோமா னியர்களும்); அல்லது இவை இரண்டுக்கும் இடையே பின் னிய செயல் ஏற்பட்டு கூட்டுச் சேர்க்கையாக ஒரு புதிய அமைப்பு தோன்றலாம் (ஜெர்மானிய வெற்றிகளில் இது ஓரளவுக்கு நடை பெற்றது). எந்த வகையாக இருந்தாலும் உற்பத்தி முறைதான்—வெற்றியடைந்த நாட்டின் முறை அல்லது தோல்வியடைந்த நாட்டின் முறை அல்லது இந்த இரண்டும் இணைந்து உருவான புதிய முறை—அங்கே பயன் படுத்தப்படும் புதிய வினியோக முறையை நிர்ணயிக்கிறது. பின்னே சொல்லப்பட்டது உற்பத்தியின் புதிய கட்டத்தின் முன்நிபந்தனையாகத் தோன்றியபோதிலும் அதுவும் உற்பத்தி யின் விளைவுதான்; பொதுவான உற்பத்தியின் வரலாற்று ரீதியான பரிணாமத்தில் ஏற்பட்ட விளைவு மட்டுமல்ல, ஆனால்

உற்பத்தியின் தனிவகையான வரலாற்று ரீதியான வடிவத்தின் விளைவாகும்.

உதாரணமாக, ருஷ்யாவில் மாபெரும் நாசத்தை ஏற்படுத்திய மங்கோலியர்கள், அவர்களுடைய உற்பத்தி முறையான கால்நடை வளர்ப்புக்குத் தக்க முறையில் நடந்து கொண்டார்கள். கால்நடை வளர்ப்புக்கு மனிதர்கள் வசிக்காத பெரிய நிலப்பரப்புக்கள் அடிப்படையான தேவையாகும். ஜெர்மானியக் காட்டுமிராண்டிகளின் மரபுவழிப்பட்ட உற்பத்தி முறை பண்ணையடிமைகளின் உதவியால் நடத்தப்படுகிற விவசாயமாகும்; மேலும் அவர்கள் கிராமப் பகுதிகளில் தனித்தனியாக வசித்து வந்தார்கள். அவர்கள் ரோமானிய மாகாணங்களைப் பிடித்தபொழுது, அங்கே நிலச் சொத்துடைமையின் குவிப்பு பழமையான விவசாய உறவுகளை முன்பே தகர்த்துவிட்டபடியால் அவர்களால் அந்த மாகாணங்களைத் தங்களுடைய தேவைகளுக்குத் தகுந்தாற் போல சுலபமாக மாற்றிக் கொள்ள முடிந்தது.

சில குறிப்பிட்ட சகாப்தங்களின் போது மக்கள் கொள்ளையடித்து வாழ்க்கை நடத்தினார்கள் என்பது நன்கு வேரூன்றிய கருத்தாகும். ஆனால் கொள்ளையடிப்பதென்றால், கொள்ளையடிப்பதற்கு ஏதாவது இருக்க வேண்டும், இது உற்பத்தியை மறைமுகமாகக் குறிக்கிறது. மேலும் கொள்ளையடிக்கும் முறையும் உற்பத்தி முறையைப் பொறுத்ததாகவே இருக்கும். உதாரணமாக, கால்நடைகளை வளர்ப்பவர்களைக் கொண்ட நாட்டைக் கொள்ளையடிக்கிற முறையில் பங்கு வர்த்தகத்தைக் கொண்ட நாட்டைக் கொள்ளையடிக்க முடியாது.

உற்பத்திச் சாதனத்தை—அடிமையின் வடிவத்தில்—நேரடியாகக் கொள்ளையடிக்கலாம். அம்மாதிரியான வகையில் அடிமையைக் கொண்டு போகின்ற நாட்டின் உற்பத்தி முறை அடிமை உழைப்பை அனுமதிப்பதாக இருப்பது அவசியம்; அல்லது (அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலும் இன்னும் சில பகுதிகளிலும் இருப்பதைப் போல) அடிமை உழைப்புக்குப் பொருத்தமான உற்பத்தி முறை உருவாக்கப்பட வேண்டும்.

சட்டம் ஒரு குறிப்பிட்ட உற்பத்திச் சாதனத்தை, உதாரணமாக நிலத்தை, சில குடும்பங்களுக்கு நிரந்தரமாகக்

கொடுத்து விடலாம். இங்கிலாந்திலிருப்பதைப் போல பெரிய அளவிலிருக்கும் நிலச் சொத்து சமூக உற்பத்தி முறைக்கு ஏற்றதாக இருக்கும் பொழுது மட்டுமே இந்தச் சட்டங்கள் பொருளாதார முக்கியத்துவம் பெற முடியும். பிரான்சில் பெரிய பண்ணைகள் இருந்தபோதிலும் விவசாயம் சிறு அளவு நிலங்கள் மூலமாகவே நடைபெற்றது. எனவே புரட்சியின்* போது நிலங்கள் சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஆனுல் நிலத்தை சிறு பகுதிகளாகப் பிரித்து வைத்திருப்பதைச் சட்டத்தின் மூலம் நிரந்தரமாக்க முடியுமா? நிலச் சொத்துடைமை சட்டங்களை மீறி ஒருவரிடத்தில் குவிய முற்படுகிறது. வினியோகத்தின் இன்றைய நிலைமைகளைப் பாதுகாப்பதில் சட்டங்களின் தாக்கத்தையும், அதன் மூலமாக அவை உற்பத்தியின் மீது ஏற்படுத்துகிற விளைவையும் மற்ருெரு பகுதியில் ஆராய்வோம்.

இ. கடைசியாக—பரிவர்த்தனையும் செலாவணியும்

செலாவணி என்பது பரிவர்த்தனையின் குறிப்பிட்ட கட்டமாகும் அல்லது மொத்தமான அளவில் பரிவர்த்தனையாகும்.

**பரிவர்த்தனை** என்பது ஒரு புறம் உற்பத்திக்கும் உற்பத்தியால் நிர்ணயிக்கப்படுகிற வினியோகத்துக்கும் நடுவே ஒரு இடை நிலைக் கட்டம் என்பதால், மேலும் நுகர்வு என்பதே உற்பத்தியின் ஒரு அம்சம் என்பதால்—உற்பத்தி பரிவர்த்தனையைத் தனது அம்சங்களில் ஒன்ருகக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

முதலாவதாக, உற்பத்தியின் போது ஏற்படுகிற நடவடிக்கைகள், திறமைகளின் பரிவர்த்தனை உற்பத்தியின் நேரடியான, அவசியமான பங்கு என்பது தெளிவு. இரண்டாவதாக, பரிவர்த்தனை என்பது உடனடியான நுகர்வுக்கு முடிவடைந்த பொருள்களைத் தயாரித்துக் கொடுப்பதற்கான சாதனம் என்ற அளவில் பொருள்களின் பரிவர்த்தனைக்கும் மேலே சொன்னது பொருந்தக் கூடியதே. இந்த அம்சத்தில் பரிவர்த்தனையின் செயல் உற்பத்தி என்ற கருத்தில் அடங்கி

---

* இங்கு பிரான்சில் 1789ம் ஆண்டில் நடைபெற்ற புரட்சி குறிப்பிடப்பட்டது.—ப-ர்.

யிருக்கிறது. மூன்ருவதாக, வர்த்தகருக்கும் வர்த்தகருக்குமிடையே பரிவர்த்தனை[43] என்று சொல்லப்படுவதன் அமைப்பு முழுவதுமே உற்பத்தியால் நிர்ணயிக்கப்படுகிறது, பரிவர்த்தனை என்பதே உற்பத்தி நடவடிக்கைதானே. பரிவர்த்தனை உற்பத்தியின் பக்கத்திலேயே சுதந்திரமானதாக இருப்பது போன்றும், கடைசிக் கட்டத்தில்—உடனடியான நுகர்வுக்கு அந்தப் பொருள் பரிவர்த்தனையாகின்ற கட்டத்தில்—மட்டுமே அதிலிருந்து பிரிக்கப்படுவது போலவும் தோன்றுகிறது. ஆனுல் 1) உழைப்புப் பிரிவினை இல்லாமல், இந்த உழைப்புப் பிரிவினை இயற்கையாகவே வளர்ச்சி அடைந்திருந்தாலும் அல்லது வரலாற்று நிகழ்வின் விளைவாக முன்பே இருந்தாலும்—அது இல்லாமல் பரிவர்த்தனை நடைபெற முடியாது; 2) தனியார் பரிவர்த்தனை தனியார் உற்பத்தியை முன்னூகிக்கிறது; 3) பரிவர்த்தனையின் தீவிரமும், அதன் தன்மையும் அளவும் உற்பத்தியின் அமைப்பினுலும் வளர்ச்சியினுலும் நிர்ணயிக்கப்படுகின்றன. உதாரணம்: நகரத்துக்கும் நாட்டுப்புறப் பகுதிகளுக்குமிடையே நடைபெறும் பரிவர்த்தனை, நகரத்திற்குள், நாட்டுப்புறப் பகுதிக்குள் நடைபெறும் பரிவர்த்தனை இதரவை. பரிவர்த்தனையின் எல்லா அம்சங்களும் இந்த அளவுக்கு உற்பத்தியில் நேரடியாக அடங்கியதாக அல்லது அதனுல் நிர்ணயிக்கப்படுவதாகத் தோன்றுகின்றன.

இதிலிருந்து பெறக்கூடிய முடிவு உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவை ஒரே படித்தானவை என்பதல்ல; இவை அனைத்தும் ஒரு தனி மொத்தத்தின் கண்ணிகள், ஒரே அளவின் வெவ்வேருன அம்சங்கள் என்பதே. உற்பத்தியின் முரண்பாடான அம்சங்களைப் பொறுத்தும், அதன் மற்ற கட்டங்களைப் பொறுத்தும் உற்பத்தியே தீர்மானமான கட்டமாகும். நிகழ்வு எப்பொழுதுமே உற்பத்தியிலிருந்துதான் புத்துணர்ச்சியோடு தொடங்குகிறது. பரிவர்த்தனையும் நுகர்வும் தீர்மானமான கூறுகளாக இருக்க முடியாது என்பது தெளிவாகும். உற்பத்திப் பொருள்களை வினியோகிப்பது என்ற அர்த்தத்தில் வினியோகத்துக்கும் இது பொருந்துவதே. இதற்கு மாருக, உற்பத்திக் காரணிகளை வினியோகிப்பதே உற்பத்தியின் கட்டமாகும். ஒரு தனியான உற்பத்திமுறை இப்படி நுகர்வு, வினியோகம், பரிவர்த்

தனே ஆகியவற்றின் தனிவகையான முறைகளையும் இந்த வெவ்வேறு கட்டங்கள் ஒவ்வொன்றேடும் கொண்டிருக்கிற தனிவகையான உறவுகளையும் நிர்ணயிக்கிறது. எனினும், உற்பத்தியானது—அதன் குறுகிய அர்த்தத்தில்—அதன் பங்கு வரும்பொழுது, மற்ற அம்சங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, சந்தையோ அல்லது பரிவர்த்தனே எல்லேயோ விரிவடையுமானல், உற்பத்தியின் அளவு அதிகரிக்கிறது; வெவ்வேறு வகைகளாக மாறுவதும் அதிகரிக்கிறது. வினியோகத்தில் ஏற்படுகிற மாற்றங்களால், உதாரணமாக, மூலதனக் குவிப்பு, நகரத்திலும் நாட்டுப்புறப் பகுதியிலும் மக்கள் தொகை வெவ்வேறு அளவுகளில் வினியோகமாயிருத்தல் இவை போன்றவற்றின் விளேவாக உற்பத்தியும் மாற்றமடைகிறது. உற்பத்தி — கடைசியில் — நுகர்வின் தேவைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. பல்வேறு அம்சங்களுக்கிடையே ஒரு பின்னிய செயல்விளேவு இருக்கிறது. எந்த அங்ககப் பொருளிலும் இத்தகைய பின்னிய செயல் விளேவு உண்டு.

### 3. அரசியல் பொருளாதாரத்தின் முறை

அரசியல் பொருளாதார நிலேயிலிருந்து ஒரு குறிப்பிட்ட நாட்டை ஆராய்கிற பொழுது நாம் முதலில் அதன் மக்கள் தொகை, வர்க்கங்கள், நகரம், நாட்டுப்புற மற்றும் கடல் பகுதிகள் என்று மக்கள் தொகையிலிருக்கும் பிரிவுகள், உற்பத்தியின் வெவ்வேறு பிரிவுகள், ஏற்றுமதி, இறக்குமதி, வருடாந்தர உற்பத்தியும் நுகர்வும், பண்ட விலேகள் முதலியவற்றிலிருந்து தொடங்குகிறேம்.

உண்மையான, ஸ்தூலமான கூறுகளிலிருந்து, நடைமுறையிலுள்ள முன்நிபந்தனேகளிலிருந்து தொடங்குவதே சரியான முறை என்று தோன்றுகிறது. அதாவது பொருளாதார உலகத்தைப் பற்றி ஆராய்ச்சியை சமூக உற்பத்தி நிகழ்வின் மொத்தத்துக்கும் அடிப்படையாகவும் பொருளாகவும் இருக்கும் மக்கள் தொகையிலிருந்து தொடங்குவது சரியானதாகத் தோன்றுகிறது. எனினும், நுணுக்கமாக ஆராய்கிற பொழுது இது தவறனதென்று புலப்படும். மக்கள் தொகை என்பது—உதாரணமாக, அதில் அடங்கியுள்ள வர்க்கங்

களைக் கவனிக்கவில்லை என்றால்—வெறும் மனத்தோற்றமே. இந்த வர்க்கங்கள் எவ்வகையான காரணிகளைச் (உதாரணமாக, கூலி உழைப்பு, மூலதனம் இதரவை) சார்ந்திருக்கின்றன என்பது ஒருவருக்குத் தெரியவில்லை என்றால் இந்த வர்க்கங்களும் கூட வெறும் வார்த்தைகளாகவே இருக்கும். இந்தக் காரணிகள் பரிவர்த்தனை, உழைப்புப் பிரிவினை, விலைகள், இதரவை ஆகியவற்றை முன்னூகிக்கின்றன. உதாரணமாக, கூலி உழைப்பு இல்லாமல், மதிப்பு, பணம், விலை, இதரவை இல்லாமல் மூலதனம் என்பது ஒன்றுமில்லாததாகும். ஒருவர் மக்கள் தொகையைத் திருப்பு முனையாக எடுத்துக்கொண்டால், அது ஒரு சிக்கலான மொத்தத்தைப் பற்றி மிகவும் தெளிவில்லாத கருத்தாகவே இருக்கும். இன்னும் நுணுக்கமான வரையறைகளின் மூலம் ஒருவர் மென்மேலும் எளிமையான கருத்துக்களுக்குப் பகுப்பாராய்ச்சியின் மூலமாக வந்து சேருவார்; கற்பனையான ஸ்தூல இனங்களிலிருந்து மென்மேலும் நுணுக்கமான கருத்தாக்கங்களுக்கு முன்னேறிய பிறகு அதிக எளிமையான வரையறைகளுக்கு வந்து சேருவார். அங்கிருந்து எதிர்த்திசையில் மறுபடியும் தொடங்கி மக்கள் தொகைக் கருத்துக்கு வருகிறவரை பிரயாணம் செய்ய வேண்டும். இப்பொழுது மக்கள் தொகைக் கருத்து என்பது ஒரு மொத்தத்தைப் பற்றிய தெளிவில்லாத கருத்து அல்ல; பல நிர்ணயிப்புகளையும் உறவுகளையும் அடக்கிக் கொண்டிருக்கிற மொத்தமாகும்.

முதல் வழி வரலாற்று ரீதியான வழி; இதை அரசியல் பொருளாதாரம் தனது தொடக்க காலத்தில் பின்பற்றியது. உதாரணமாக, பதினேழாம் நூற்றாண்டுப் பொருளாதார நிபுணர்கள் வாழ்கிற உயிரினத்தை, மக்கள் தொகை, தேசம், அரசு, சில அரசுகள், இதரவை தங்களுடைய தொடங்கும் நிலையாக எப்பொழுதும் கொண்டிருந்தார்கள்; ஆனால் முடிவில் உழைப்புப் பிரிவினை, பணம், மதிப்பு போன்ற சில தீர்மானமான, சூக்குமமான, பொதுவான உறவுகளைக் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சி அவர்களை எப்பொழுதும் இட்டுச் சென்றது. இந்தத் தனிக் காரணிகளை அநேகமாகத் தெளிவாக வருவித்து நிறுவிய பிறகு பொருளாதார முறைகள் உருவாக்கப்பட்டன; இவை உழைப்பு, உழைப்புப் பிரிவினை, தேவை, பரிவர்த்தனை மதிப்பு போன்ற எளிமையான

கருத்துக்களிலிருந்து அரசு, சர்வதேசப் பரிவர்த்தனை, உலகச் சந்தை போன்ற இனங்களை நோக்கி முன்னேறின.

பிந்தியதுதான் சரியான விஞ்ஞான முறை என்பது தெளிவு. ஸ்தூலமான கருத்து பல வரையறைகளின் சேர்க்கையாக இருப்பதால், பல்வேறு அம்சங்களின் ஒருமையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் அது ஸ்தூலமானதாக இருக்கிறது. எனவே அது ஆரம்பத்தின் உண்மையான முனையாக, அதனால் புலன் உணர்வு, கற்பனையின் ஆரம்ப முனையாகவும் இருந்தபோதிலும் சிந்தனையின் போது அது ஆரம்ப நிலையாக இல்லாமல் தொகுக்கப்பட்ட முடிவாகத் தோன்றுகிறது. முதலாவதாகச் சொல்லப்பட்ட முறை அர்த்தமுள்ள பிம்பங்களைச் சூக்குமமான வரையறைகளுக்கு உட்படுத்தித் தளர்த்துகிறது; இரண்டாவது முறை சூக்குமமான வரையறைகளிலிருந்து தொடங்கி ஸ்தூலமான நிலைமையைச் சிந்தனையின் மூலம் மறுபதிப்புச் செய்கிறது.

இதன் மூலமாக உண்மையான உலகம் என்பது தன்னுடைய சொந்தக் கூட்டுச் சேர்க்கையை, தன்னுடைய சொந்த ஆழப்படுத்துதலை, தன்னுடைய சொந்த இயக்கத்தைத் தானே ஏற்படுத்திக் கொள்கிற சிந்தனையின் விளைவு என்ற பிரமையான கருத்தை ஹேகல் உருவாக்கிக் கொண்டார்; ஆனால் சூக்குமத்திலிருந்து ஸ்தூலமானவற்றுக்கு முன்னேறும் முறையில்தான் சிந்தனையானது ஸ்தூலமானவற்றைத் தன்வயப்படுத்தி ஸ்தூலமான கருத்து இனமாகப் புனருற்பத்தி செய்கிறது. ஆனால் இது ஸ்தூலமான உலகத்தின் பரிணமப் போக்கு அல்ல. உதாரணமாக, மிகவும் எளிமையான பொருளாதார இனம், அதாவது பரிவர்த்தனை மதிப்பு, மக்கள் தொகையை, அதிலும் குறிப்பிட்ட நிலைமைகளில் உற்பத்தி செய்கிற மக்கள் தொகையையும் தனி வகையான குடும்பம், சமூகம், அரசு இதரவைகளையும் முன்னூகிக்கிறது. பரிவர்த்தனை மதிப்பு முன்பே இருந்து வருகிற, ஸ்தூலமான அடிப்படையான மொத்தத்தின் சூக்குமமான, ஒருதலையான உறவு என்பதைத் தவிர வேறு வகையில் இருக்க முடியாது.

ஆனால் இனம் என்ற வகையில் பரிவர்த்தனை மதிப்பு மிகப் பழமையான வாழ்க்கையைக் கொண்டதாகும். புரிந்து கொள்ளுகின்ற சிந்தனையை உண்மையான மனிதனாகவும்

எனவே புரிந்து கொள்ளப்பட்ட உலகத்தை உண்மையாக இருக்கின்ற ஒரே உலகமாகவும் கருதுகின்ற உணர்வுக்கு (தத்துவ உணர்வு இத்தகையதுதான்) இனங்களின் பரிணாமம் உண்மையான உற்பத்தி நிகழ்வு—துரதிர்ஷ்டவசமாக அதற்கு வெளியேயிருந்து ஒரு தூண்டுதல் வருகிறது—மாதிரியாகவும் அதன் விளைவுதான் உலகமென்றும் தோன்றுகிறது. (எனினும் இது மீண்டும் கூறியது கூறுவதாகும்) ஸ்தூலமான மொத்தம் கருத்தளவான மொத்தமாக, அறிவு சார்ந்த உண்மையாக நினைக்கப்படும் பொழுது அது சிந்தனையின், அறிதலின் விளைவு என்பது உண்மையே. ஆனால் அது தானாகவே தோன்றி சிந்தனையில் உணர்தலுக்கும் கற்பனைக்கும் வெளியிலும் அதற்கு மேலாகவும் போகின்ற கருத்தின் விளைவாக ஒருபோதும் இல்லை; உணர்வுகளையும் கற்பனைகளையும் கருத்துக்களாகத் தன்வயப்படுத்தி மாற்றியமைப்பதன் விளைவாகும். மொத்தமானது, அறிவினால் காணப்பட்ட கருத்தளவான இனம் என்ற வகையில் உலகத்தைத் தனக்குத் தெரிந்த ஒரே வழியில் தன்வயப்படுத்துகிற சிந்திக்கும் மூளையின் விளைவாகும். இந்த வழியானது உலகத்தைக் கலையின் மூலமாக, மதத்தின் மூலமாகத் தன்வயப்படுத்துகிற, அதாவது அறிவுபூர்வமாகத் தன்வயப்படுத்துகிற வழியிலிருந்து வேறுபட்டிருக்கிறது. அறிவு கலப்பற்ற கொள்கைரீதியான நிலையை, கலப்பற்ற ஊக ஆய்வினைப் பின்பற்றுகிற வரை ஸ்தூலமான பொருள் அறிவுக்கு வெளியேயும் அதிலிருந்து சுதந்திரமானதாகவும் இருக்கிறது. எனவே அகப்பொருளாகிய சமூகத்தை—தத்துவரீதியான முறையைக் கையாள்கிறபொழுது கூட—அறிதலின் முன்நிபந்தனையாகவே காண வேண்டும்.

ஆனால் இந்த சாதாரண இனங்கள் அதிக ஸ்தூலமான இனங்களுக்கு முன்பே ஒரு சுதந்திரமான வரலாற்று அல்லது இயற்கைத் தன்மையைக் கொண்டிருக்கவில்லையா? இது சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாகும். உதாரணமாக, ஹெகல் சொத்துடைமையை அதன் எளிமையான சட்ட உறவை சட்ட தத்துவஞானத்தின் திருப்புமுனை என்று சரியாகக் கருதுகிறார். குடும்பம் அல்லது எசமானர் ஊழியர் என்ற உறவுகள் உருவாவதற்கு முன்பு—இவை மேலும் அதிக அளவுக்கு ஸ்தூலமான உறவுகள்—சொத்துடைமை இருக்க

வில்லை. இதற்கு மாறாக, இன்னும் பொருள்களை மட்டுமே—சொத்துக்களை அல்ல—வைத்திருக்கும் குடும்பங்களும் இனக்குழுக்களும் இருக்கின்றன என்பது இன்னும் சரியானதாக இருக்கும். எனவே மேற்கூறப்பட்ட அதிகச் சாதாரண இனம் சாதாரணக் குடும்பம் அல்லது இனக் குழுக்கள் சொத்து என்பதற்குக் கொண்டிருக்கும் உறவாகத் தோன்றுகிறது. இதைக் காட்டிலும் உயர்வான கட்டத்தை அடைந்து விட்ட சமூகங்களில் இந்த இனம் அதிக வளர்ச்சியடைந்த குழுக்களில் இருக்கின்ற ஒப்பு நோக்கில் சாதாரணமான உறவாகத் தோன்றுகிறது. எனினும் சொத்துடைமை உறவின் கீழே இருக்கிற ஸ்தூலமான அடிப்பகுதி எப்பொழுதுமே முன்னூகிக்கப்படுகிறது. பொருள்களை வைத்திருக்கும் தனிப்பட்ட காட்டுமிராண்டியை ஒருவர் கற்பனை செய்யக் கூடும்; எனினும் இந்த உதாரணத்தில் உடைமை என்பது ஒரு சட்டபூர்வமான உறவு அல்ல. வரலாற்று ரீதியான வளர்ச்சியில் உடைமை குடும்பத்தை ஏற்படுத்தியது என்பது சரியல்ல. இதற்கு மாறாக, உடைமை இந்த ''அதிக ஸ்தூலமான சட்டரீதியான இனத்தை'' எப்பொழுதுமே முன்னூகிக்கிறது. எனினும் இந்த சாதாரண இனங்கள் அதிக ஸ்தூலமான இனத்தில் கருத்தளவில் வெளிப்படுகிற அதிகச் சிக்கலான உறவு அல்லது நிலைமையை இன்னும் எதிர்நிலைப்படுத்தாத, முதிர்ச்சி அடையாத ஸ்தூல நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்று முடிவு செய்யலாம். இதற்கு மாறாக, இன்னும் வளர்ச்சியடைந்த ஸ்தூலமான நிலைமைகளில் இதே இனம் கீழ்நிலை உறவாக வைத்துக் கொள்ளப்படலாம்.

மூலதனம், வங்கிகள், கூலி உழைப்பு இதரவை இன்னும் ஏற்படாத பொழுதே வரலாற்றுக் காலத்தில் பணம் இருந்திருக்கக் கூடும்; அப்படி இருந்துமிருக்கிறது. எனவே இதைப் பொறுத்த வரை, இந்த அதிகச் சாதாரண இனம் முதிர்ச்சி அடையாத அமைப்பில் மேலோங்கியிருக்கும் உறவுகளை அல்லது மேலும் வளர்ச்சியடைந்த அமைப்பில் கீழ்நிலை உறவுகளை வெளியிடுவதாகச் சொல்லலாம், இந்தக் கீழ்நிலை உறவுகள் அந்த அமைப்பு தனது அம்சங்களை அதிக ஸ்தூலமான இனங்களாக வளர்த்துக் கொள்வதற்கும் முன்பாகவே வரலாற்று ரீதியாக இருந்திருக்கின்றன. மிகவும் எளிமை

யான கருத்துக்களிலிருந்து மிகவும் சிக்கலான கருத்துக்களுக்கு முன்னேறுகின்ற சூக்குமமான சிந்தனை நடைமுறை வரலாற்று ரீதியான வளர்ச்சிக்கு ஒத்திருக்கிறது.

இதற்கு மாறாக, அதிகமான வளர்ச்சியடைந்த, ஆனால் வரலாற்று ரீதியில் முதிர்ச்சியடையாத சமூகக் குழுக்கள் இருக்கின்றன என்பது உண்மையே. அங்கு கூட்டுறவு, வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினை இதரவை போன்ற உச்ச பொருளாதார வடிவங்கள் இருந்தபோதிலும் பணம் எதுவும் இருக்கவில்லை. இதற்கு உதாரணமாக பெரு என்ற நாட்டைச் சொல்லலாம்[44]. ஸ்லாவ் இனங்களைச் சேர்ந்த சமூகக் குழுக்களிலும் பணத்துக்கும் அதன் முன்நிபந்தனையாகிய பரிவர்த்தனைக்கும் அந்தத் தனிப்பட்ட குழுவிற்குள் ஒரு முக்கியத்துவமும் இல்லை அல்லது மிகக் குறைவான முக்கியத்துவமே உண்டு; ஆனால் அந்நியக் குழுக்களோடு வர்த்தகம் நடைபெறுகின்ற எல்லைப் பகுதிகளில் அவை பயன்படுத்தப்படுகின்றன. சமூகக் குழுவிற்குள்ளாகப் பரிவர்த்தனை என்பது ஆரம்பத்திலிருந்தே இருக்கும் இணை உறுப்பு என்று கருதுவது முற்றிலும் தவறானதாகும். இதற்கு மாறாக, ஆரம்பத்தில் பரிவர்த்தனை ஒரே சமூகத்தின் உறுப்பினர்களுக்கு இடையே ஏற்படுவதைக் காட்டிலும் மற்ற குழுக்களோடு ஏற்படுகிற இடைத் தொடர்பில் தோன்றுவதுதான் அதிக சாத்தியமாகும். மேலும் பணம் மிகவும் ஆரம்பகாலத்திலேயே அதிலும் பல விதமான வழிகளில் கணிசமான பாத்திரத்தை வகித்தபோதிலும் பண்டைக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட திசையில் வளர்ச்சியடைந்த தேசங்களில், அதாவது வர்த்தக தேசங்களில் மட்டுமே அது சர்வவல்லமையுள்ள பாத்திரத்தை வகித்தது என்பது தெரிந்ததே. பண்டைக் காலத்தில் அதிகமான வளர்ச்சியடைந்த தேசங்களாகிய கிரீசிலும் ரோமிலும் பணம், நவீன முதலாளித்துவ சமூகத்தில் முன்னூகிக்கப்படுகிற அதன் முழு வளர்ச்சியை அந்த நாடுகள் தகர்ந்து சிதறிப்போகிற கட்டங்களில் தான் அடைகின்றது. எனவே இந்த சாதாரணமான இனத்தின் மறைந்திருக்கும் முழு ஆற்றலும் சமூகத்தின் அதிகமான வளர்ச்சி அடைந்த கட்டங்களில் மட்டுமே வரலாற்று ரீதியாக வெளிப்படுகிறது. அது எல்லாப் பொருளாதார உறவுகளுக்குள்ளேயும் ஊடுருவிச் செல்ல

வில்லை. உதாரணமாக, ரோமானியப் பேரரசில் அதன் உச்ச வளர்ச்சிக் கட்டத்திலும் கூட வரிகளும் ஒப்படைப்புகளும் பண்டங்களாகக் கொடுக்கப்பட்டன; உண்மையில் நன்கு வளர்ச்சியடைந்த பணவியல் முறை ரோமில் ராணுவத் தில் மட்டுமே இருந்தது; உழைப்பின் மொத்தத் துறை களிலும் அது ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை.

வரலாற்றுக் கோணத்தில் அதிக ஸ்தூலமான இனத் துக்கு முன்பாகவே மிகச் சாதாரண இனம் இருந்திருக்கலாம் என்ற போதிலும், அதன் முழுமையான, தீவிரமான, விரிவான வளர்ச்சி ஒரு பல் கூட்டுத் தொகுதியான சமூக அமைப்பில் தான் ஏற்பட முடியும்; ஆனால் அதிக ஸ்தூலமான இனம் மிகவும் வளர்ச்சி குன்றிய சமூக அமைப்பில் முழுமையாக வளர்ச்சி அடைய முடியும்.

உழைப்பு மிகவும் சாதாரண இனமாகத் தோன்றுகிறது. பொதுவான உழைப்பைப் போலவே, இந்த சர்வாம்ச வடிவத்தில் உழைப்பைப் பற்றிய கருத்தும் மிகவும் பழமையானதாகும். எனினும் இந்த சாதாரண வடிவத்தில் ''உழைப்பு'', இந்த சாதாரண சூக்கும வடிவத்தை ஏற்படுத்துகிற உறவுகளைப் போலவே நவீனமான இனமாகப் பொருளாதார அடிப்படையில் கருதப்படுகிறது. உதாரணமாக, பணவியல் அமைப்பு செல்வத்தை, பணத்தின் வடிவத்தில் சுயேச்சையாக இருக்கின்ற பொருள் என்று புறநிலை ரீதியில் இன்னும் கருதுகிறது. இந்தக் கருத்து நிலையோடு ஒப்பிடும் பொழுது பட்டறை அல்லது வர்த்தக அமைப்பு செல்வத்தின் பிறப்பிடத்தை புறநிலையிலிருந்து அகநிலை நடவடிக்கைக்கு—வியாபாரம் அல்லது தொழில் உழைப்புக்கு—மாற்றியது ஒரு கணிசமான முன்னேற்றமாகும்; ஆனால் இந்தக் குறுகிய வேலை மட்டுமே பணத்தை உற்பத்தி செய்வதாக இன்னும் கருதப்பட்டது. இந்த அமைப்புக்கு வேறுபட்ட வகையில், உழைப்பின் தனிவகையான வடிவம்—விவசாயம்—செல்வத்தைப் படைப்பதாக பிசியோகிராட்டுகள் கருதினார்கள்; அவர்கள் புறப்பொருளை இனிமேலும் பணத்தின் வேடத்தில் பார்க்கவில்லை; பொதுவான உற்பத்திப் பொருளாக, உழைப்பின் எக்காலத்துக்கும் உரிய விளைவாகப் பார்த்தார்கள். இன்னும் நீடித்த குறுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஏற்றவாறு உற்பத்திப் பொருள் இயற்கையாக வளர்ச்சியடைந்த

பொருளாக, விவசாயப் பொருளாக, பெரும்பாலும் நிலத்தின் உற்பத்திப் பொருளாக இருக்கிறது.

செல்வத்தை உற்பத்தி செய்கின்ற நடவடிக்கையைப் பொறுத்தவரையில் எல்லாக் கட்டுப்பாடுகளையும் ஆடம் ஸ்மித் நிராகரித்த பொழுது அவருக்கு அது பட்டறை உழைப்பாக, வர்த்தக உழைப்பாக, விவசாய உழைப்பாக இருக்கவில்லை; எல்லா வகையான உழைப்புமாக, உழைப்பாக மட்டுமே இருந்தது ஒரு பெரிய முன்னேற்றமாகும். செல்வத்தைப் படைக்கின்ற சூக்குமமான சர்வாம்சம் செல்வம் என்று வரையறுக்கப்படுகின்ற புறப்பொருளின் சர்வாம்சத்தையும் மறைபொருளாகச் சுட்டுகிறது; அது வெறும் உற்பத்திப் பொருள் அல்லது மீண்டும் வெறும் உழைப்பு; ஆனால் இந்த உதாரணத்தில் சென்ற காலத்திய உழைப்பு, பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்பு. இது எந்த அளவுக்குப் பெரிய, கடினமான மாற்றம் என்பதை ஆடம் ஸ்மித் ஏதாவதொரு சமயத்தில் மறுபடியும் பிசியோக்கிராட் அமைப்புக்குத் திரும்பி விடுவது எடுத்துக்காட்டுகிறது. மனிதர்கள்—அவர்கள் வாழ்கின்ற சமூகம் எந்த வகையானதாக இருந்தபோதிலும் — உற்பத்தியாளர்களாக இயங்குகிற மிகச் சாதாரணமான, பழமையான உறவுக்கு இந்த வகையில் ஒரு சூக்குமமான கருத்தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டது போலத் தோன்றுகிறது. இது ஒரு வகையில் உண்மையே; மற்றொரு வகையில் உண்மையல்ல.

தனிவகையான உழைப்பு வகை சம்பந்தம் இல்லாதது என்ற உண்மை நடைமுறையில் இருக்கின்ற உழைப்பு வகைகளின் அதிக வளர்ச்சியடைந்த அமைப்பை முன்னூகிக்கிறது. இந்த உழைப்பு வகைகளில் ஒன்றுகூட ஆதிக்கம் செலுத்தக்கூடியதல்ல. இவ்வாறு மொத்தத்தில் ஸ்தூலமான வளர்ச்சி மிகவும் ஏராளமான அளவில் இருக்கும்பொழுது மட்டுமே மிகப் பொதுப்படையான சூக்குமக் கருத்தாக்கங்கள் தோன்றுகின்றன. ஒரு தனிவகையான தன்மை பல நிகழ்வுகளுக்கு அல்லது எல்லா நிகழ்வுகளுக்கும் பொதுவானதாக இருப்பதைக் காண்பதே இதற்குக் காரணம். அது ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் மட்டுமே இனியும் உணரப்படுவதில்லை. இதற்கு மாறாக, உழைப்பின் இந்த சூக்குமக் கருத்தாக்கம் ஸ்தூலமான பல உழைப்பு வகைகளின் கருத்

தளவிலான விளைவு மட்டுமே என்று சாதாரண முறையில் ஒருபோதும் இருப்பதில்லை. உபயோகப்படுத்தப்பட்ட உழைப்பின் குறிப்பிட்ட வகையோடு சம்பந்தமில்லாமலிருப்பது தனிநபர்கள் ஒரு குறிப்பிட்ட வகை உழைப்பிலிருந்து மற்றொரு வகைக்கு சுலபமாக மாறக்கூடிய சமூக வடிவத்துக்குப் பொருத்தமானதாகும்; உழைப்பின் குறிப்பிட்ட வகை என்பது அவர்களுக்குத் தற்செயலாக ஏற்படுவதால் அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாததாகிறது. உழைப்பு—ஓர் இனம் என்ற வகையில் மட்டுமல்லாமல் உண்மையிலேயே—பொதுப்படையான செல்வத்தைப் படைக்கும் சாதனமாகி விட்டது; ஒரு குறிப்பிட்ட தனிநபருக்குச் சொந்தமான திறமையாகக் கருதப்படுவது நின்றுவிட்டது. முதலாளித்துவ சமூகத்தின் மிகவும் நவீனமான வடிவமாகிய அமெரிக்காவில் இந்த நிலைமை இன்னும் குறிப்பான வகையில் காணப்படுகிறது. நவீன பொருளாதாரத்தின் திருப்பு முனையாகிய, சூக்கும இனமாகிய ''உழைப்பு'', ''பொதுவான உழைப்பு'', வார்த்தைகள் இல்லாத உழைப்பு இவ்வகையில் அங்கேதான் நடைமுறை சாத்தியமாகியிருக்கிறது.

இவ்வாறு நவீன அரசியல் பொருளாதாரத்தில் தீர்மானமான பங்கு வகிக்கின்ற மிகச் சாதாரணமான சூக்குமக் கருத்தாக்கம், எல்லா சமூக அமைப்புகளிலும் இருக்கின்ற பண்டைக் காலத்திய உறவை வெளியிடுகின்ற கருத்தாக்கம் இந்த சூக்கும வடிவத்தில் மிகவும் நவீனமான சமூகத்தின் இனம் என்ற அளவில் மட்டுமே நடைமுறையில் உண்மையாக இருப்பதாகத் தோன்றுகிறது. அமெரிக்காவில் வரலாற்று ரீதியான விளைவாக இருக்கும் நிகழ்வு—உதாரணமாக, உழைப்பின் குறிப்பிட்ட வகையின் சம்பந்தமில்லாத தன்மை—ருஷ்யர்களிடம் இயல்பாகவே உருவாகியிருக்கும் முன்விருப்பமாக இருப்பதாகச் சொல்ல முடியும். ஆனால் முதலாவதாக, காட்டுமிராண்டிகள் முன்விருப்பம் கொண்டிருப்பதனால் பலவகையான வேலைகளில் அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் நாகரிகமுள்ள மனிதர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபடுவதற்கும் அதிகமான வேறுபாடு இருக்கிறது. மேலும் ருஷ்யர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்த வகை உழைப்பைச் செய்கிறோம் என்பதில் கொண்டிருக்கும் ஆர்வமின்மை, ஒரு குறிப்பிட்ட வகை

உழைப்பை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்கிற அவர்களுடைய நெடுங்கால மரபுக்கு—இதிலிருந்து வெளித்தாக்கங்களினுல்தான் அவர்கள் விடுவிக்கப்படுகிருர்கள்—இணையானதாக இருக்கிறது.

அதிக சூக்குமமான இனங்கள்கூட—அவை சூக்குமமாக இருப்பதாலேயே எல்லா சகாப்தங்களிலும் செல்லுபடியாக இருந்தாலும்—அவை கருத்தாக்கங்கள் என்ற சூக்குமமான வடிவத்திலும்கூட, வரலாற்று நிலைமைகளின் விளைவு என்பதை உழைப்பின் உதாரணம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது; அவை இந்த நிலைமைகளின் சுற்றுவட்டத்துக்குள்ளாகவும் இவற்றுக்காகவுமே முழு அளவுக்குச் செல்லுந்தன்மையைக் கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவ சமூகம் உற்பத்தியின் அதிக வளர்ச்சியடைந்த, அதிகச் சிக்கலான வரலாற்று ரீதியான அமைப்பாகும். அதன் உறவுகளை வெளிப்படுத்தி அதன் அமைப்பைப் புரிந்து கொள்ள உதவுகிற இனங்கள், முன்னர் இருந்த சமூக அமைப்புக்களின்—இவற்றின் அழிவுகளும் இணைந்த உறுப்புக்களும் அதன் உருவாக்கத்தில் பயன்படுத்தப்பட்டன—உற்பத்தி உறவுகளையும் அமைப்பையும் புரிந்து கொள்வதற்குத் தேவையான நுண்மையான பார்வையைத் தருகின்றன. இவ்வகையில் வாங்கிக் கொள்ளப்படாத மிச்சங்கள் இன்னும் முதலாளித்துவ சமூகத்தில் தொடர்ந்து எடுத்துச் செல்லப்படுகின்றன; முன்பு தொடக்கநிலை வடிவத்தில் மட்டுமே இருந்தவை மேலும் வளர்ச்சியடைந்து தமது முழு முக்கியத்துவத்தையும் அடைந்திருக்கின்றன, இன்னும் பல. குரங்கின் உடலமைப்பைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் மனிதனின் உடலமைப்பாகும். இதற்கு மாருக விலங்குகளின் கீழான இனங்களில் மேலும் வளர்ச்சியடைந்த வடிவங்களின் தொடக்கக் கட்டத்தை, அதிக வளர்ச்சி அடைந்த வடிவங்கள் முன்பே தெரிந்திருந்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இவ்விதம் பண்டைக் காலத்தின் பொருளாதாரத்துக்கு முதலாளித்துவப் பொருளாதாரம் திறவுகோலைத் தருகிறது, இன்னும் பல. ஆனுல் வரலாற்று ரீதியான வேறுபாடுகளை அழித்துவிட்டு, எல்லாவிதமான சமூக நிகழ்வுகளையும் முதலாளித்துவ நிகழ்வுகளாகவே பார்க்கின்ற பொருளாதார நிபுணர்கள் அந்த முறையில் இதைப்

பெற முடியாது. ஒருவருக்கு நிலவாரத்தைப் புரிந்து கொள்ள முடியுமென்ருல் அவரால் கப்பப்பணம், நிலவரிப் பொருள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளக்கூடும்; ஆனுல் அவற்றை ஒரே படித்தானவையாகக் கருதக் கூடாது.

மேலும் முதலாளித்துவ சமூகம் என்பது முரணியலான வளர்ச்சியின் வடிவம் என்பதால், முந்திய சமூகங்களின் உறவுகளை மிகவும் குறுக்கப்பட்ட வடிவத்தில் அல்லது அவற்றின் கேலிக்குரிய போலிவடிவங்களிலும் கூட (உதாரணமாக, கூட்டுச் சொத்து முறை) அது பெரும்பாலும் கொண்டிருக்கிறது. எனவே முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இனங்கள் மற்ற எல்லாவிதமான சமூக அமைப்புக்களுக்கும் பொருந்தும் என்றபோதிலும் இதை cum grano salis (சொல்லுக்குச் சொல் அர்த்தம் பாராமல்) என்ற வகையில் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்ருல் அதில் இவை வளர்ச்சியடைந்த வடிவத்தில், வளர்ச்சி குறுக்கப்பட்ட வடிவத்தில், கேலிக்குரிய போலி வடிவத்தில் இருந்தாலும், கணிசமான வேறுபாடுகளோடுதான் இருக்கலாம். பொதுவாக வரலாற்றுப் பரிணுமம் என்பது—சமீபத்திய வடிவம் தனக்கு முந்தியனவற்றைத் தன்னுடைய வளர்ச்சியின் கட்டங்களாகக் கருதுவதோடு—ஒரு சமூகம் தன்னையே விமரிசனம் செய்துகொள்வது அபூர்வமாகவும் மிகச் சிறப்பான நிலைமைகளிலுமே நடைபெறும் என்பதால் அவற்றை எப்பொழுதும் ஒரு தலைப்பட்சமாகவே பார்க்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது; சில வரலாற்றுக் காலங்கள் தாங்களே தம்மைத் தேக்க காலம் என்று நம்புவதுண்டு. அத்தகைய வரலாற்றுக் காலங்களைப் பற்றி நாம் இங்கே ஆராயவில்லை. கிறிஸ்துவ சமயம் தன்னுடைய சுய விமர்சனத்தை ஓரளவுக்கேனும் மறைந்திருக்கும் சக்தியோடு தயாரித்துக் கொண்டபொழுதுதான், தனக்கு முந்திய பழங்கதைகளை யதார்த்த ரீதியில் புரிந்து கொள்வதற்கு அது உதவி செய்ய முடிந்தது. அது போலவே முதலாளித்துவ சமூகத்தின் சுய விமரிசனம் தொடங்கிய பிறகுதான், முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்திஞல் நிலப்பிரபுத்துவ, பண்டைக்காலத்திய, கிழக்கு நாடுகளின் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. முதலாளித்துவ அரசியல் பொருளாதாரமானது பழங்கதைகளின் பாணியில்

தன்னைச் சென்ற கால பொருளாதாரத்தோடு ஒத்திருப்ப தாகக் கருதவில்லை என்ற அளவில் முந்திய சமூக வடிவங் களைப் பற்றிய அதனுடைய விமர்சனம்—குறிப்பாக அது இன்னும் நேரடியான போராட்டத்தை நடத்த வேண்டி யிருந்த நிலப்பிரபுத்துவ அமைப்பு பற்றிய விமர்சனம்—கிறிஸ்துவ சமயம் முந்திய நம்பிக்கைகளின் மீதும், புரோ டெஸ்டெண்டு சமயம் கத்தோலிக்க சமயத்தின் மீதும் நடத் திய விமர்சனத்தை ஒத்திருந்தது.

பொதுவாக எந்த வரலாற்று அல்லது சமூக விஞ்ஞானத்தை யும் ஆராய்கின்ற பொழுதும், அது போலவே பொருளாதார இனங்களின் வளர்ச்சியிலும், அகப்பொருள்—இங்கே சமகா லத்திய முதலாளித்துவ சமூகம்—யதார்த்தத்திலும் கருத்தி லும் முன்னூகிக்கப்படுகிறது; எனவே இனங்கள் இந்தக் குறிப் பிட்ட சமூகத்தின் இருக்கும் வடிவங்களையும் நிலைமைகளை யும்—சில சமயங்களின் அதன் தனியான அம்சங்களை மட் டுமே—வெளியிடுகின்றன என்பதை எப்பொழுதும் நினைவில் கொண்டிருப்பது அவசியம்; இவ்விதத்தில் அந்த இனம்—விஞ்ஞான ரீதியான கருத்து நிலையில் கூட—அதை அப் படியானதாகவே எடுத்துக்கொண்டு விவாதிக்கிறபொழுது, அந்த நேரத்தில் ஒரு போதும் ஆரம்பமாவதில்லை. விவரங் களை சீராக்குவதற்கு முக்கியமான மூலவிதிகளை அது கொடுப் பதால் இதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஓரளவுக்கு ஸ்திரத்தன்மையைப் பெற்ற எல்லா சமூகங்களிலும் முதலாவது உற்பத்தி வடிவமான விவ சாயத்தோடும் எல்லா உற்பத்திகளுக்கும் அனைத்து வாழ்க் கைக்கும் பிறப்பிடமான நிலத்தோடும் இது சம்பந்தப்பட் டிருப்பதால் நில வாரத்திலிருந்து, நிலச் சொத்துடைமை யிலிருந்து தொடங்குவது மற்றவைகளைக் காட்டிலும் இயல் பானதாகத் தோன்றுகிறது. ஆனால் இது மிகவும் தவறானதா கும். ஒவ்வொரு சமூக அமைப்பிலும் மற்ற எல்லாவற்றின் நிலையையும் முக்கியத்துவத்தையும் நிர்ணயிக்கக் கூடிய உற்பத்தியின் குறிப்பிட்ட வகை இருக்கிறது; இதே போல இதில் நிலவுகிற உறவுகள் மற்ற எல்லாப் பிரிவுகளிலும் இருக்கும் உறவுகளை நிர்ணயிக்கின்றன. இது ஏதோ ஒரு குறிப்பிட்ட வர்ணத்தைக் கொண்ட ஒளி எல்லாவற்றின்

மீதும் விழுந்து, மற்ற வர்ணங்களுக்கெல்லாம் தனது வர்ணத்தைத் தடவி அவற்றின் தனிவகையான அம்சங்களை மாற்றி விடுவது போல இருக்கிறது; அல்லது ஒரு விசேஷமான ஊடுபொருள் ஈதர் அங்கே காணப்படுகிற எல்லாப் பொருள்களின் இன எடையையும் நிர்ணயிப்பது போன்றதாகும்.

கால்நடை வளர்ப்புச் சமுதாயக் குழுக்களை உதாரணமாக எடுத்துக் கொள்வோம் (வேட்டை அல்லது மீன் பிடித்தலை மட்டுமே ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கும் குழுக்கள் உண்மையான வளர்ச்சி ஆரம்பமாகின்ற எல்லைக் கோட்டுக்கு அப்பால் இருப்பவையாகும்). ஒரு குறிப்பிட்ட வகை விவசாய நடவடிக்கை அவைகளுக்கிடையே அவ்வப்பொழுது நடைபெறுவதால் இது அம்மக்களுடைய நிலச்சொத்துடைமையை நிர்ணயிக்கிறது. அது கூட்டுச் சொத்து. இவர்கள் தங்களுடைய மரபுகளை எந்த அளவுக்கு நீடித்துப் பின்பற்றுகிறார்கள் என்பதைப் பொறுத்து அது இந்த வடிவத்தை அதிக அளவிலோ அல்லது குறைவான அளவுக்கோ கொண்டிருக்கிறது. உதாரணம்—ஸ்லாவ் இனத்தினரிடையே இருக்கிற கூட்டுச் சொத்துடைமை. ஓர் இடத்தில் நிலையாக அமர்ந்து விட்ட விவசாய மக்களிடம்—அவர்கள் பெருமளவுக்கு முன்பே நிலையாகிவிட்டார்கள்—பண்டைக் கால சமூகத்திலும், நிலப்பிரபுத்துவ சமூகத்திலும் போல விவசாயம் மேலோங்கியிருக்கிற பொழுது உற்பத்தி கூட, அதன் அமைப்பும் அதற்குப் பொருந்துகிற சொத்து வடிவங்களும் ஓர் அளவுக்குத் தனி வகையான விவசாய அம்சங்களைக் கொண்டிருக்கின்றன, பண்டைய ரோமானியக் காலத்தைப் போல விவசாயத்தைப் பூரணமாகச் சார்ந்திருக்கிறது; அல்லது மத்திய காலத்தைப் போல நாட்டுப்புறப் பகுதிகளில் இருக்கின்ற அமைப்பை நகரத்திலும் நகர உறவுகளிலும் பின்பற்றுகிறது. மத்திய காலத்தில் மூலதனம்—அது பண மூலதனமாக மட்டுமே இருந்தால் ஒழிய—பரம்பரையான கருவிகள் இதரவற்றின் வடிவத்தில் குறிப்பிடத்தக்க விவசாயத் தன்மையைக் கொண்டிருந்தது.

முதலாளித்துவ சமூகத்தில் நடப்பது இதற்கு முற்றிலும் மாறானதாகும். விவசாயம் மென்மேலும் அதிகமான அளவுக்குத் தொழிற்துறையின் ஒரு பிரிவாகிறது; மூலதனம் அதன் மீது முழுமையான ஆதிக்கம் வகிக்கிறது. நில

வாரத்துக்கும் இது பொருந்தும். நிலச் சொத்துடைமை தீர்மானமான அம்சமாக இருக்கின்ற எல்லா சமூக வடிவங்களிலும் இயற்கையான உறவுகள் இன்னும் மேலோங்கியிருக்கின்றன; மூலதனம் தீர்மானமான அம்சமாக இருக்கின்ற சமூக வடிவங்களில் சமூக ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் பரிணமித்த கூறுகள் ஆதிக்கம் வகிக்கின்றன. மூலதனம் இல்லாமல் நில வாரத்தைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் நிலவாரம் இல்லாமல் மூலதனத்தைப் புரிந்து கொள்ள முடியும். முதலாளித்துவ சமூகத்தில் எல்லாவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிற பொருளாதார சக்தி மூலதனமே. அது திருப்பு முனையாகவும் முடிவாகவும் இருக்க வேண்டும்; நிலச் சொத்துடைமைக்கு முன்பாகவே அது விளக்கம் பெற வேண்டும். மூலதனத்தையும் நிலச் சொத்துடைமையையும் தனித்தனியே ஆராய்ந்த பிறகு அவற்றின் இடைத் தொடர்பு ஆராயப்படும்.

பொருளாதார இனங்களை, அவை வரலாற்றில் வகித்த வல்லமைமிக்க பாத்திரத்தின் வரிசைக் கிரமப்படி எடுத்துக் கூறுவது உசிதம் அல்ல என்பதோடு தவறுடையதாகும். இதற்கு மாறாக, அவை அடுத்தடுத்து வருகின்ற முறையை நவீன முதலாளித்துவ சமூகத்தில் அவற்றின் பரஸ்பர உறவு நிர்ணயிக்கிறது; இது அவற்றுக்கு இயற்கையாகத் தோன்றுவதற்கு எதிர்மாறானது. வரலாற்றுரீதியான வளர்ச்சியின் தொடர் வரிசைக் கிரமத்துக்கும் எதிர்மாறானது. இங்கேயுள்ள பிரச்சினை, வரலாற்று வளர்ச்சி நிகழ்வில் பல்வேறு சமூக வடிவங்கள் தொடர்ச்சியாக வருவதில் பல்வேறு பொருளாதார உறவுகள் வகித்த பாத்திரம் எப்படிப்பட்டது என்பதல்ல. ''கருத்துக்கள்'' (புரூதோன்) (வரலாற்று நிகழ்வு பற்றிய தெளிவில்லாத சிந்தனை) என்ற முறையில் அவற்றின் தொடர்வரிசைக் கிரமம் இன்னும் குறைவானதே—ஆனால் நவீன முதலாளித்துவ சமூகத்தினுள் அவற்றின் நிலையே இங்குள்ள பிரச்சினையாகும்.

பண்டைக்கால உலகத்தில் விவசாயக் குடியினர் மிகப் பெரும் அளவில் இருந்ததன் காரணமாகவே வர்த்தக தேசங்களாகிய பொனீஷியர்கள், கார்த்தஜீனியர்கள் அவ்வளவு கலப்பற்ற வகையில் (சூக்குமமான துல்லியத்தோடு) வளர்ச்சி அடைய முடிந்தது. ஏனென்றால் சமூகத்தில் மூல

தனம் எங்கே மேலாதிக்கம் வகிக்கின்ற கூறாக இன்னும் ஆகவில்லையோ அங்கே அது வர்த்தக அல்லது பண மூலதனத்தின் வடிவத்தில் சூக்குமமாகத் தோன்றுகிறது. மத்தியகால விவசாய சமூகங்களில் லோம்பார்டுகளும் யூதர்களும் இதே நிலையை வகித்தார்கள்.

இதே இனங்கள் சமூகத்தின் வெவ்வேறு கட்டங்களில் வகித்த பல்வேறு பாத்திரங்களுக்கு மற்றொரு உதாரணம் முதலாளித்துவ சமூகத்தின் மிகச் சமீப காலத்திய கூறுகளான கூட்டுப் பங்குக் கம்பெனிகளாகும்; இவை முதலாளித்துவ சமூகத்தின் ஆரம்ப காலத்தில் தனியான அதிகாரங்களும் ஏகபோக உரிமைகளும் கொண்ட பெரிய வர்த்தகக் கம்பெனிகளின் வடிவத்தில் தோன்றுகின்றன.

பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்களின் நூல்களில் அரசுக்காக மட்டும் செல்வம் உருவாக்கப்படுகிறது, அரசின் அதிகாரம் இந்த செல்வத்தின் விகிதாச்சார ரீதியில் இருக்கிறது என்ற அர்த்தத்தில் தேசியச் செல்வம் என்ற கருத்து நுழைகிறது. பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்களிடம் கூட இந்தக் கருத்து இன்னும் ஓரளவுக்கு நீடிக்கிறது. நவீன அரசு என்பது செல்வத்தின் உற்பத்திக்கு ஒரு சாதனம் மட்டுமே என்று கருதப்படுகிறது; நவீன அரசின் இலட்சியம் செல்வ வளமும் செல்வ உற்பத்தியுமே என்று சரியான சிந்தனையில்லாமல் போலியான முறையில் சொல்லப்படுகிறது.

பாடப் பொருள் பின்வரும் முறையில் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவு: 1) பொதுவான—அதனால் எல்லா சமூக அமைப்புக்களுக்கும் ஓரளவுக்குப் பொருந்துகிற—வரையறைகள், ஆனால் முன்னர் எடுத்துக் கூறிய அர்த்தத்தில். 2) முதலாளித்துவ சமூகத்தின் உள் அமைப்பை உருவாக்குகிற இனங்கள், முக்கியமான வர்க்கங்கள் இதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மூலதனம், கூலி உழைப்பு, நிலச் சொத்துடைமை. இவை ஒன்றோடொன்று கொண்டிருக்கும் உறவுகள். நகரமும் கிராமப் பகுதியும். மூன்று பெரிய சமூக வர்க்கங்கள். அவைகளுக்கிடையே உள்ள பரிவர்த்தனை. செலாவணி. (தனியார்) கடன் முறை. 3) முதலாளித்துவ சமூகத்தின் சாரம் என்ற வகை

யில் அரசு. அரசு தனக்குக் கொண்டுள்ள உறவுகளைப் பற்றிய ஆராய்ச்சி. ''பயனில்லாத'' வர்க்கங்கள். வரிகள். தேசியக் கடன். பொதுக் கடன். மக்கள் தொகை. காலனிகள். அந்நிய நாடுகளில் குடியேறுதல். 4) சர்வதேச உற்பத்தி உறவுகள். சர்வதேச உழைப்புப் பிரிவினை. சர்வதேசப் பரிவர்த்தனை. ஏற்றுமதியும் இறக்குமதியும். பரிவர்த்தனை விகிதம். 5) உலகச் சந்தையும் நெருக்கடிகளும்.

## 4. உற்பத்தி

உற்பத்திச் சாதனங்களும் உற்பத்தி உறவுகளும். உற்பத்தி உறவுகளும் தகவல் தொடர்புகளும். உற்பத்தி உறவுகளுக்கும் தகவல் தொடர்புகளுக்கும் சம்பந்தமுள்ள அரசு வடிவங்களும் அறிதல் வடிவங்களும் (Forms of Cognition).
சட்ட உறவுகள். குடும்ப உறவுகள்

மறந்துவிடாமல் சொல்லப்பட வேண்டிய கருத்துக்கள் பற்றிய குறிப்புகள்.

1. சமாதானத்துக்கு முன்பே யுத்தம் [சில கூறுகளை] வளர்த்து விடுகிறது. யுத்தத்தின் காரணமாக, இராணுவம் இதரவைகளில், சில பொருளாதார உறவுகள் (உதாரணமாக, கூலி உழைப்பு, இயந்திரங்கள் முதலியவை) சிவில் சமூகத்துக்கு முன்பாகவே பரிணமிக்கின்றன. இது போல உற்பத்தி சக்திகளுக்கும் தகவல் தொடர்புகளுக்கும் உள்ள உறவு இராணுவத்தில் குறிப்பிடத்தக்க விதத்தில் புலப்படுகிறது.

2. இது வரை இருந்து வந்திருக்கும் கருத்துமுதல்வாத வரலாற்று ஆய்வுக்கும், குறிப்பாக நாகரிகத்தின் வரலாறு என்று கூறப்படுவதற்கும் எதார்த்தமான வரலாற்று ஆராய்ச்சிக்கும் உள்ள உறவு. மதங்கள், அரசுகளைப் பற்றிய பழைய வரலாறும். (இது வரை இருந்து வந்திருக்கிற பல வகையான வரலாற்று ஆய்வுமுறைகளையும் இங்கே விவாதிக்கலாம். யதார்த்த வகை என்று சொல்லப்படுவது. அகநிலை (அறவியலும் மற்றவையும்) வகை. தத்துவஞான வகை.)

3. இரண்டாவது நிலை, மூன்றாவது நிலை, பொதுவாக பெறப்பட்ட, கொடுக்கப்பட்ட, அதாவது முதன்மை அல்லாத உற்பத்தி உறவுகள். சர்வதேச உறவுகளின் தாக்கம்.

4. இந்தக் கருத்தின் பொருள்முதல்வாதம் பற்றிய கண்டனக் கருத்துக்கள்; இயற்கைவாத பொருள்முதல்வாதத்தோடுள்ள உறவு.

5. உற்பத்திச் சக்திகள் (உற்பத்திச் சாதனங்கள்), உற்பத்தி உறவுகளுக்கிடையே உள்ள இயக்கவியல், உண்மையான வேறுபாடுகளை ஒழிக்காத இந்த இயக்கவியல் தொடர்பின் எல்லைகளை வரையறுத்துக் கூற வேண்டும்.

6. பொருளுற்பத்திக்கும் மற்றும் உதாரணமாக கலைக்கும் உள்ள சமத்துவம் அல்லாத வளர்ச்சி. முன்னேற்றம் என்ற கருத்தை மொத்தத்தில் வழக்கமான சூக்கும வடிவத்தில் புரிந்து கொள்ளக் கூடாது. நவீன கலை மரபுகள் முதலியவை. இந்த ஏற்றத்தாழ்வு ஸ்தூலமான சமூக உறவுகளுக்கிடையே முக்கியமானதாகவும் புரிந்து கொள்ள முடியாததாகவும் இருப்பதைப் போன்றது அல்ல. உதாரணம், கல்வி. அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் உள்ள உறவு. எனினும், இந்த சமத்துவமில்லாத வளர்ச்சியில் உற்பத்தி உறவுகள் சட்ட உறவுகள் என்ற முறையில் எப்படிப் பங்கெடுக்கின்றன என்பதை விவாதிப்பதுதான் உண்மையிலேயே சிக்கலான விஷயமாகும். உதாரணமாக, ரோமானிய சிவில் சட்டத்துக்கும் (கிரிமினல் சட்டத்துக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் இது சற்றுக் குறைந்த அளவில் பொருந்துவதே) நவீன உற்பத்திக்கும் உள்ள உறவு.

7. இந்தக் கருத்து தவிர்க்க முடியாத வளர்ச்சியாகத் தோன்றுகிறது. ஆனால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கையை நிறுவுவது. எப்படி? (சுதந்திரம் முதலானவற்றையும் சேர்த்து.) (போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சியின் தாக்கம்.) உலக வரலாறு என்பது எப்பொழுதுமே இருக்கவில்லை. உலக வரலாறு என்ற வகையில் வரலாற்றின் வளர்ச்சியே விளைவு.

8. இயற்கையில் நிர்ணயிக்கப்பட்ட கூறுகள் தான் தொடக்க நிலை; அக நிலையிலும் புற நிலையிலும்; இனக் குழுக்கள், இனங்கள் முதலியவை.

கலையைப் பொறுத்தவரையிலும் அதன் சில சிகரங்கள் பொதுவான சமூக வளர்ச்சியோடு ஒருபோதும் பொருந்துவதில்லை; எனவே அவை சமூகத்தின் அமைப்பின் உடற்கூடு போன்ற பொருளாயத உள் அமைப்புக்கும் பொருந்துவதில்லை. உதாரணம்: கிரேக்கர்களை நவீன தேசங்களோடு

ஒப்பிடுதல் அல்லது ஷேக்ஸ்பியர். கலைப் படைப்புகள் என்பது தோன்றிய பிறகு சில குறிப்பிட்ட கலை வடிவங்களை (உதாரணமாக epos) அவற்றின் சகாப்தத்தைப் படைக்கிற மூலச்சிறப்புடைய வடிவத்தில் இனிமேல் தயாரிக்க முடியாது என்பது ஒத்துக் கொள்ளப்படுகிறது; வேறு வார்த்தை களில் சொல்வதென்றால், கலை என்ற எல்லைக்குள் சில முக்கியமான படைப்புகளைத் தயாரிப்பதென்பது கலை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் மட்டுமே முடியும். கலை உலகத்துக்குள் இருக்கின்ற வெவ்வேறான கலைப் பிரிவுகளின் நிலை இது என்றால், கலையின் மொத்த உலகத்துக்கும் சமூகத்தின் பொதுவான வளர்ச்சிக்கும் உள்ள உறவும் இது மாதிரியாகவே இருக்கும் என்பது அவ்வளவு ஆச்சரியமானதல்ல. இந்த முரண்பாடுகளைப் பொதுவாக வரையறுத்துச் சொல்லுவதில் தான் சிரமங்கள் இருக்கின்றன. அவற்றைக் குறிப்பிட்ட கேள்விகளாக வகைப்படுத்தியவுடனே அவை முன்பே விளக்கம் பெற்றுவிடுகின்றன.

நாம் இங்கே கிரேக்கக் கலைக்கும் இன்றைய நிலைமைக்கும், ஷேக்ஸ்பியருக்கும் இன்றைய நிலைமைக்கும் உள்ள உறவை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். கிரீசின் பழங்கதைகள் கிரேக்கக் கலையின் சேமிப்புக் கிடங்கு மட்டுமல்லாமல் அதற்கு ஆதாரமாகவும் இருப்பது நமக்குத் தெரியும். கிரேக்கக் கற்பனை, அதனால் கிரேக்கக் [கலை] முதலியவற்றின் அடிக்கருத்தான, இயற்கை மற்றும் சமூக உறவுகள் பற்றிய கருத்து இன்று தானாகவே இயங்கும் கழுதை, ரயில் வண்டி, மின்சார வண்டி, மின்சாரத் தந்தி முதலியவை ஏற்பட்டிருக்கும் பொழுது சாத்தியமா? ராபர்ட்ஸ் அண்ட் கம்பெனியோடு (Roberts & Co)[45] ஒப்பிடும் பொழுது தீக்கடவுள் (Vulcan) எம்மாத்திரம்? இடி-தாங்கியோடு ஒப்பிடும்பொழுது, ஜூபிட்டர் கடவுளால்[46] என்ன பயன்? Crédit mobilier இருக்கும் பொழுது ஹெர்மஸ் கடவுளால்[47] என்ன பயன்? பழங்கதைகள் இயற்கைச் சக்திகளைக் கற்பனை மூலமாகக், கற்பனையில் கீழ்ப்படுத்தி அதிகாரம் செலுத்தி அவற்றை உருவாக்குகின்றன; எனவே இந்த இயற்கைச் சக்திகளின் மீது உண்மையான ஆதிக்கம் ஏற்பட்டவுடன் அவை மறைந்துவிடுகின்றன. அச்சு நிலையச் சதுக்கத்தில் பாமாவும் (Fama)[48] ஒருங்கே இருக்க முடியுமா? கிரேக்கக் கலை கிரேக்கப்

பழங்கதைகளை முன்னூகிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், மக்கள் இயற்கை, சமூக நிகழ்வுகளைத் தமது கற்பனையின் மூலமாக உணர்வு இல்லாமல் கலாரீதியில் முன்பே தன்வயப்படுத்திவிட்டனர். கிரேக்கர்களின் கலையின் உட்பொருள் இதுவே; அது ஏதோவொரு பழங்கதையல்ல; அதாவது இயற்கையை (இங்கே இந்த வார்த்தை சமூகம் உள்ளிட்ட எல்லாப் பொருளாயத நிகழ்வுகளையும் உள்ளடக்கியது) உணர்வு இல்லாமல் கலாரீதியில் தன்வயப் படுத்தியது அல்ல. எகிப்தியப் பழங்கதைகள் கிரேக்கக் கலைக்கு அடிப்படையாக அல்லது அதைத் தோற்றுவிப்பதாக ஒரு போதும் ஆக முடியாது. ஆனால் எப்படியும் அது பழங்கதையை [முன்னூகிக்கிறது]. இயற்கையின்பால் பழங்கதை ரீதியான அணுகுமுறையை அதாவது பழங்கதைகள் தோன்றக்கூடிய வகையில் இயற்கையின்பால் ஏதாவதொரு அணுகுமுறையைத் தடுக்கின்ற சமூக வளர்ச்சி அல்ல; எனவே கலைஞனின் கற்பனை பழங்கதைகளிலிருந்து விடுபட்டிருப்பதை வலியுறுத்துகின்ற சமூகம் இது.

இதை வேறு வகையில் சிந்தித்துப் பார்க்கும் பொழுது: துப்பாக்கி வேட்டும் தோட்டாவும் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அஹில்லஸ் (Achilles) சாத்தியமா? அச்சியந்திரங்களும் மாபெரும் அச்சகங்களும் இருக்கும் காலத்தில் இலியது போன்ற காவியம் சாத்தியமா? கட்டையை விரலால் அழுத்தியதும் இசை பிறக்கும் பொழுது பாட்டும் பாவமும் இசைத் தெய்வமும் முடிவடைவது தவிர்க்க முடியாததுதானே? அதாவது காவியச் சிறப்புடைய கவிதை தோன்றுவதற்கு அவசியமான நிலைமைகள் மறைவது தவிர்க்க முடியாததுதானே?

எனினும் நமக்கு ஏற்படுகிற சிரமம் கிரேக்கர்களின் கலையும் காவியச் சிறப்புடைய கவிதையும் சமூக வளர்ச்சியின் சில வடிவங்களோடு தொடர்பு கொண்டிருப்பதைப் புரிந்து கொள்வது அல்ல. அவை நமக்கு இன்னும் அழகியல் ரீதியில் மகிழ்ச்சியைத் தருவதும், அவை—சில அம்சங்களில்—அடைய முடியாத உச்ச எல்லையாக, இலட்சியமாகக் கருதப்படுவதுதான் நமக்கு ஏற்படுகிற சிரமமாகும்.

வயது வந்தவர் மறுபடியும் குழந்தையாக மாற முடியாது. அப்படி மாறினால் அது சிறு பிள்ளைத்தனமாகும். ஆனால் சிறு குழந்தையின் கள்ளங்கவடற்ற தன்மை அவருக்கு

மகிழ்ச்சியைத் தருவதில்லையா? அந்தச் சிறு குழந்தையின் வாய்மையை உயர்ந்த மட்டத்தில் பிரதிபலிப்பதற்கு அவர் முயற்சி செய்வதில்லையா? ஒவ்வொரு சகாப்தத்தின் தன்மையை இயல்பான நேர்மையோடு அந்த சகாப்தத்தின் குழந்தைகள் பிரதிநிதித்துவப்படுத்துவது இல்லையா? மனித குலத்தின் வரலாற்று ரீதியான குழந்தைப் பருவம் அதனுடைய மிகவும் அழகு நிறைந்த காலமாகும். அந்தக் குழந்தைப் பருவம் இனி ஒருபோதும் திரும்ப முடியாது என்பதற்காக அதன் அழியாக் கவர்ச்சியை நம் மீது செலுத்தக் கூடாது என்று சொல்ல முடியுமா? குழந்தைகளில் முரட்டுக் குழந்தைகள், பிஞ்சில் பழுத்த குழந்தைகள் உண்டு. பண்டைக் கால மக்களில் பலர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள். கிரேக்கர்கள் இயல்பான குழந்தைகள். அவர்களுடைய கலை நம்மைக் கவர்கிறது; சமூகம் முதிர்ச்சி அடையாத கட்டத்தில் அந்தக் கலை பிறந்து வளர்ந்தது என்பதனுல் அதற்கும் நம்முடைய ரசனைக்கும் எத்தகைய மோதலுமில்லை. இதற்கு மாருக, இதன் விளைவுதான் அதனுடைய கவர்ச்சி; இந்தக் கலையைத் தோற்றுவித்த முதிர்ச்சியடையாத சமூக நிலைமைகள்—அவை இந்தக் கலையை மட்டுமே தோற்றுவிக்க முடியும்—மறுபடியும் ஏற்பட முடியாது என்ற உண்மையோடு அந்தக் கவர்ச்சி பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது.

1857ம் வருடம் ஆகஸ்ட்
மாதக் கடைசிக்கும்
செப்டெம்பர் மாதத்தின்
நடுப்பகுதிக்கும் இடையில் எழுதப்பட்டது

# பிரெடெரிக் எங்கெல்ஸ்

## கார்ல் மார்க்ஸ், "அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை"[49]

### முதல் பகுதி, பிரான்ஸ் டன்க்கெர், பெர்லின், 1859

### 1

*[Das Volk, எண் 14, ஆகஸ்ட் 6, 1859]*

விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளிலும் மற்ற நாகரிகமடைந்த நாடுகளோடு ஜெர்மானியர்கள் சமமான தகுதி கொண்டிருப்பதையும், பெரும்பாலான துறைகளில் அந்த நாடுகளைக் காட்டிலும் மேன்மை அடைந்திருப்பதையும் அவர்கள் வெகு காலத்துக்கு முன்பே எடுத்துக் காட்டி விட்டனர். விஞ்ஞானத்தின் ஒரே ஒரு துறையில்—அரசியல் பொருளாதாரத்தில் மட்டும்—அதன் தலை சிறந்த அறிஞர்களிடையே ஒரு ஜெர்மானியர் இல்லாதிருந்தார். அதன் காரணம் வெளிப்படையாகத் தெரிந்ததே. அரசியல் பொருளாதாரம் என்பது நவீன முதலாளித்துவ சமூகத்தைப் பற்றிய தத்துவரீதியான ஆராய்ச்சியாகும்; எனவே அது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உறவுகளை முன்னூகிக்கிறது; ஜெர்மனியில் மதச் சீர்திருத்த இயக்கத்தை[50] ஒட்டி ஏற்பட்ட யுத்தங்கள், விவசாயிகள் யுத்தம் குறிப்பாக முப்பது வருட யுத்தம்[51] ஆகியனவற்றால் பல நூற்றாண்டுக் காலமாக இந்த உறவுகள் தம்மை நிறுவிக் கொள்ள முடியவில்லை. பேரரசிலிருந்து ஹாலந்து பிரிக்கப்பட்டது[52] சர்வதேச வர்த்தகப் பாதைகளிலிருந்து ஜெர்மனியை அகற்றிவிட்டதோடு அதன் தொழில் துறை வளர்ச்சியை ஆரம்பத்திலிருந்தே மிகவும் குறைந்த அளவில் வைத்திருந்தது. உள்நாட்டு யுத்தங்களினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து ஜெர்மானியர்கள் மெதுவாகவும் வேதனையோடும் தங்களைப் புனரமைத்துக் கொண்டிருந்த பொழுது, ஜெர்மனியில் ஒவ்வொரு அற்பமான அரசரும், அரசதோரணையுள்ள பிரபுவும் தங்கள் குடிமக்கள் செய்து வந்த தொழில்களின் மீது சுமத்திய பொரு

ளற்ற வர்த்தக ஒழுங்கு விதிகளையும் சுங்கத் தடைகளையும் எதிர்த்து வீணைகப் போராடுவதில் ஜெர்மானியர்கள் தங்களுடைய சமூக வேகத்தை (அது எப்பொழுதுமே அதிகமாக இருக்கவில்லை) செலவிட்டுத் தீர்த்துக் கொண்டிருந்த பொழுது, முக்கியமான நகரங்கள் அவற்றின் கைத்தொழிற் குழுச் செய்முறைகளோடும் பிரபுத்துவ மேல் வர்க்க உணர்ச்சியோடும் சீரழிந்து கொண்டிருந்த பொழுது ஹாலந்தும் இங்கிலாந்தும் பிரான்சும் இதற்கிடையில் சர்வதேச வர்த்தகத்தின் தலைமையான இடங்களைப் பிடித்துவிட்டன. அடுத்தடுத்துக் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தித் தொழில் உற்பத்தியை அதன் உச்ச நிலைக்குக் கொண்டு வந்தன. கடைசியில் இங்கிலாந்தின் நிலக்கரி மற்றும் இரும்புக் கனிப் பொருட் செல்வம் நீராவிச் சக்தியின் உதவியினுல் விலை மதிப்பற்றதாகிவிடவே அந்த நாடு நவீன முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தலைமை தாங்கியது. ஆனுல் ஜெர்மனியில் 1830ம் வருடம் வரையிலும் அதன் பொருளாயத சக்திகளின் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தடையாக இருந்த, முற்றிலும் காலம் கடந்த மத்திய கால எச்சங்களுக்கு எதிரான போராட்டம் இன்னும் நடத்தப்பட வேண்டியிருந்த காரணத்தால் அங்கே அரசியல் பொருளாதாரம் தோன்ற முடியவில்லை. சுங்க இணையம் ஏற்பட்டதனுல்[53] மட்டுமே ஜெர்மானியர்கள் அரசியல் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ளவாவது முடிந்தது. ஜெர்மானிய முதலாளி வர்க்கத்தின் நன்மைக்காக ஆங்கில, பிரெஞ்சு அரசியல் பொருளாதாரத்தின் இறக்குமதி இந்தச் சமயத்தில் ஆரம்பமாயிற்று. அறிவாளிகளும் அதிகார வர்க்கத்தினரும் சீக்கிரத்தில் இந்த இறக்குமதிச் சரக்கைக் கைப்பற்றிக் கொண்டனர்; ''ஜெர்மன் மேதா விலாசத்துக்குச்'' சிறிது கூடப் பெருமையளிக்காத விதத்தில் அவற்றைப் பயன்படுத்தினர். வர்த்தகர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், அதிகார வர்க்கத்தினர் ஆகிய சுதம்பக் கூட்டணியின் இலக்கிய முயற்சிகளின் விளைவாக ஒரு கொத்து ஜெர்மன் பொருளாதார நூல்கள் வெளியிடப்பட்டன; அவற்றின் சாதாரணமான, அற்பத்தனமான, விளையாட்டுத்தனமான, வளவளவென்று நீண்டு போகின்ற, காப்பியடிக்கப்பட்ட தன்மைகளுக்கு இணையாக ஜெர்மானிய நாவலை மட்டுமே சொல்ல முடியும். செய்முறை நோக்கங்

களைப் பின்பற்றியவர்கள் மத்தியில் தொழிலதிபர்களின் காப்புவாத மரபு முதலில் தோன்றியது; அவர்களின் முக்கியமான பிரதிநிதியான லிஸ்ட், ஜெர்மன் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் உற்பத்தி செய்த தலைசிறந்த நபராக இன்னும் இருக்கிறார்; ஆனால் அவருடைய பிரபலமான புத்தகம் 'கான்டினென்டல் ஏற்பாட்டை'க் கொள்கை ரீதியில் உருவாக்கிய பிரெஞ்சுக்காரரான பெர்ரியேயின் புத்தகத்திலிருந்து அப்படியே காப்பியடிக்கப்பட்டதாகும். பால்டிக் மாநிலங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள் நாற்பதுக்களில் இந்தப் போக்குக்கு எதிராக சுதந்திர வர்த்தக மரபை ஏற்படுத்தினார்கள்; அவர்கள் இங்கிலாந்தில் சுதந்திர வர்த்தகத்தை ஆதரித்தவர்களுடைய வாதங்களைத் தட்டித் தடவித் தடுமாறி, சிறு குழந்தையின் நம்பிக்கையோடு—அதில் லாப நோக்கமும் கலந்திருந்தது—ஒப்பித்தார்கள். கடைசியாக, விஞ்ஞானத்தின் தத்துவ ரீதியான அம்சங்களைக் கையாள வேண்டிய பள்ளி ஆசிரியர்கள், அதிகாரிகள் மத்தியில் ஹெர் ரௌவைப் போன்று விமர்சனத் திறன் இல்லாத, உலர்ந்த இலைகளைச் சேகரிப்பவர்கள், ஹெர் ஷ்டைனைப் போல அந்நியக் கருதுகோள்களை ஜீரணம் செய்யப்படாத ஹெகலின் மொழியில் மொழிபெயர்த்த, அறிவுடையவர்கள் மாதிரித் தோன்றும் சூதாட்டக்காரர்கள், ஹெர் ரீலைப் போல ''நாகரிகத்தின் வரலாறு'' என்று சொல்லப்படுகின்ற துறையில் சலித்தெடுக்கின்ற இலக்கியப் போலிகள் இருக்கிறார்கள். இவை எல்லாவற்றின் விளைவாகவுமே 'காமெரலிஸ்டிக்ஸ்' (cameralistics)[54] தோன்றியது. எல்லாவிதமான சாதாரண அம்சங்களையும் கொண்ட கதம்பமான பொருளாதார அவியல் என்று இதைக் கூறலாம். ஒரு கீழ்நிலை அரசு ஊழியர் தனது கடைசித் தேர்வை எழுதும் நேரத்தில் இந்தப் பாடத்தை நினைவு வைத்துக் கொள்வது ஒருவேளை அவருக்கு உபயோகமாக இருக்கலாம்.

ஜெர்மனியின் முதலாளி வர்க்கமும் பள்ளி ஆசிரியர்களும் அதிகார வர்க்கத்தினரும் ஆங்கில-பிரெஞ்சு அரசியல் பொருளாதாரத்தின் முதற் கூறுகளை (அவர்கள் இவற்றை மறுக்க முடியாத சூத்திரங்களாகக் கருதினார்கள்) உருப்போடவும் ஓரளவுக்குப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் ஜெர்மன் பாட்டாளி வர்க்கக்

கட்சி அரங்கத்துக்கு வந்தது. அந்தக் கட்சியின் தத்துவ ரீதியான அம்சம் அரசியல் பொருளாதார ஆராய்ச்சியையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருந்தது; இந்தக் கட்சி தோன்றியதிலிருந்துதான் தனிப்பட்ட விஞ்ஞானம் என்ற முறையில் ஜெர்மன் அரசியல் பொருளாதாரம் தொடங்கு கிறது. வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதம் இந்த ஜெர்மன் அரசியல் பொருளாதாரத்தின் அவசியமான அடிப் படையாகும்; அதன் முக்கியமான அம்சங்கள் இந்தப் புத் தகத்தின் முன்னுரையில்* சுருக்கமாக எடுத்துக் கூறப்படு கின்றன. இந்த முன்னுரையின் முக்கியமான பகுதிகள் *Das Volk* பத்திரிகையில் முன்பே வெளியிடப்பட்டிருப்பதால் நாம் இங்கே அதை மேற்கோள் காட்டுகிறோம். ''பொருளா யத வாழ்க்கையின் உற்பத்தி முறையே சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக் கிறது'', எல்லாவிதமான சமூக, அரசியல் உறவுகளும், மத, சட்ட அமைப்புக்களும், வரலாற்றுப் போக்கில் உருவாகின்ற அனைத்துத் தத்துவக் கருதுகோள்களும் அந்தக் குறிப்பிட்ட சகாப்தத்தில் நிலவிய வாழ்க்கையின் பொருளாயத நிலைமை களைப் புரிந்து கொண்டால் மட்டுமே, பின்னோக்கிச் சென்று இந்த பொருளாயத நிலைமைகளின் தடத்தை முன்னவற்றில் தேடிக் கண்டுபிடித்தால் மட்டுமே புரிந்து கொள்ளப்பட முடியும் என்பது அரசியல் பொருளாதாரத்துக்கு மட்டுமல் லாமல், வரலாற்று விஞ்ஞானங்களுக்கும் கூட (இயற்கை விஞ்ஞானங்களில் சேராத மற்ற துறைகள் அனைத்துமே வர லாற்று விஞ்ஞானங்களே) ஒரு புரட்சிகரமான கண்டுபிடிப்பா கும். ''மனிதர்களுடைய உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது.'' இந்தக் கருதுகோள் மிக எளிமையாக இருப்பதால், கருத்துமுதல் வாத மோசடியில் சிக்கிவிடாத எவரும் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அது தத்துவத் துறை யில் மட்டுமல்லாது செய்முறைத் துறையிலும் கூட மிக அதிகப் புரட்சிகரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்கிறது ''வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்

* இந்த நூல், பக்கங்கள் 7-14 பார்க்கவும்.—ப-ர்.

பத்தி உறவுகளோடு—அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு—இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்று வட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அந்த மாபெரும் மேற்கட்டடம் முழுவதையும் சீக்கிரமாகவோ அல்லது சற்றுத்தாமதமாகவோ மாற்றியமைக்கின்றன... முதலாளித்துவ உற்பத்தி முறைதான் உற்பத்தியின் சமூக நிகழ்வில் கடைசி முரணியல் வடிவம்—முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனிநபர்களின் ஜீவனோபாயத்தின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்றும் முரணியலே—ஆனால் முதலாளித்துவச் சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் இந்த முரணைத் தீர்ப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளையும் உருவாக்குகின்றன.''* இந்தப் பொருள்முதல்வாத ஆய்வுரையை நாம் மேலும் தொடர்ந்து அதை நிகழ் காலத்துக்குப் பயன்படுத்திய உடனே பிரம்மாண்டமான புரட்சி, இதற்கு முன்பு எப்போதும் நடைபெற்றிராத மிக பிரம்மாண்டமான புரட்சிக்குரிய வாய்ப்பு வளம் தோன்றிவிடுகிறது.

மனிதர்களின் உணர்வு அவர்களின் வாழ்க்கையினால் நிர்ணயிக்கப்படுகிறது (இதற்கு எதிர்முறையில் அல்ல) என்பது சாதாரணமாகத் தோற்றமளிக்கும் கருதுகோள். ஆனால் இதன் முதல் விளைவுகள் கருத்துமுதல்வாதத்தின் எல்லா வடிவங்களையும்—மறைவாக இருக்கின்ற வடிவங்களையும் கூட—ஒதுக்குகின்றன; வரலாற்று விவகாரங்களில் மரபுவழியான, வழக்கத்தை ஒட்டிய எல்லாக் கருத்துக்களையும் நிராகரிக்கின்றன என்பது நுணுக்கமாக ஆராய்கின்ற பொழுது உடனே தெளிவாகிறது. மரபுவழிப்பட்ட அரசியல் வாதங்களின் மொத்த முறையுமே அங்கே கவிழ்ந்து போகிறது. இத்தகைய கொள்கையற்ற பொருள்விளக்கத்தை தேசபக்தப் பெருந்தன்மை ஆத்திரத்தோடு எதிர்க்கிறது. எனவே இந்தப் புதிய கருத்தோட்டம் முதலாளி வர்க்கத்தை ஆதரித்தவர்களுக்கு

* இதே நூல், பக்கங்கள் 10—11.—ப-ர்.

மட்டுமல்லாமல், liberté, égalité, fraternité (சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்) என்ற சொற்களின் மந்திரசக்தியின் மூலமாக உலகத்தைப் புரட்சிகரமாக்க விரும்பிய பிரெஞ்சு சோஷலிஸ்டுகளில் பெரும்பான்மையினருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது தவிர்க்க முடியாததே. ஆனல் ஓயாது பேசிக் கொண்டிருக்கும் ஜெர்மன் கொச்சையான ஜனநாயகவாதிகளிடம் கூட அது தீவிரமான கோபத்தை ஏற்படுத்தியது. எனினும் இந்தப் புதிய கருத்துக்களை அவர்கள் சிறிது கூடப் புரிந்து கொள்ளா விட்டாலும் கூட, தங்களுடைய சொந்த நலனுக்காக இவற்றைக் காப்பியடிக்கும் முயற்சியில் தனியான ஆர்வம் காட்டுகிறார்கள்.

பொருள்முதல்வாதக் கருதுகோளை ஒரு தனி வரலாற்று உதாரணத்திற்காவது விளக்கிக் காட்டுவதென்பது பல வருடங்கள் அமைதியாக ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய விஞ்ஞானக் கடமையாகும். ஏனென்றல் இந்த விஷயத்தில் வீண் பேச்சைக் கொண்டு எதையும் சாதிக்க முடியாது என்பது வெளிப்படை; விமர்சன ரீதியாக ஆராயப்பட்ட ஏராளமான வரலாற்று விவரங்கள்—அவற்றில் முழுமையான தேர்ச்சியும் அடைந்திருக்க வேண்டும்—மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். பிப்ரவரி புரட்சியின் விளைவாக எங்கள் கட்சி அரசியல் அரங்கத்தை நோக்கி உந்தித் தள்ளப்பட்டபடியால் முற்றிலும் விஞ்ஞான ரீதியான கடமைகளில் தொடர்ந்து ஈடுபட முடியாது போய் விட்டது. எனினும் எங்கள் கட்சியின் இலக்கிய வெளியீடுகளில் இந்த அடிப்படையான கருதுகோள் ஒரு நூலிழை போல நெடுகிலும் இருப்பதைக் காண முடியும். ஒவ்வொரு குறிப்பிட்ட உதாரணத்திலும் பொருளாயதக் காரணங்கள் தான் நடவடிக்கைகளைத் தவருமல் தொடங்கி வைத்திருக்கின்றன—அவற்றைத் தொடர்ந்து வரும் சொற்றொடர்கள் அல்ல என்பதை அவை ஒவ்வொன்றும் எடுத்துக் காட்டும். இதற்கு மாருக, அரசியல் நடவடிக்கைகளையும் அவற்றின் விளைவுகளையும் போல அரசியல் மற்றும் சட்டரீதியான சொற்றொடர்கள் பொருளாயதக் காரணங்களில்தான் ஆரம்பமாகின்றன.

*1848-49*ம் வருடப் புரட்சியின் தோல்விக்குப் பிறகு, வெளி நாட்டிலிருந்து ஜெர்மனியின் மீது எத்தகைய தாக்

கத்தையும் ஏற்படுத்துவது இயலாததாகிவிட்ட நேரத்தில், வெளிநாட்டிலிருந்து கொண்டு கூச்சல் போடுவதை (அன்றைக்கு அது ஒன்று மட்டுமே சாத்தியமாக இருந்தது) எங்கள் கட்சி கொச்சையான ஜனநாயகவாதிகளிடம் விட்டுவிட்டது. அவர்கள் இந்த வேலையைத் தாங்கள் திருப்தியடைகின்ற வரை உற்சாகமாகச் செய்து கொண்டிருந்தனர்; இன்று சச்சரவு செய்வதும் நாளைக்குச் சேர்ந்து கொள்வதும் அதற்கு மறுநாள் தங்களுடைய அழுக்கு மூட்டையைப் பொதுமக்களுக்கு முன்னால் மறுபடியும் அம்பலப்படுத்திக் கொள்வதுமாக இருந்தனர்; அமெரிக்கா முழுவதிலும் பிச்சை எடுத்துக் கொண்டு போனார்கள்; அதற்குப் பிறகு தாங்கள் சேகரித்த குறைவான காசுகளை எப்படிப் பிரித்துக் கொள்வதென்று மறுபடியும் உடனடியாகச் சண்டை போட்டுக் கொண்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தேவையான அமைதியான நேரம் மறுபடியும் கிடைத்ததைப் பற்றி எங்கள் கட்சி மகிழ்ச்சியடைந்தது. ஒரு புதிய விஞ்ஞானக் கருதுகோள் அதன் தத்துவ அடிப்படையாக இருந்தது அதற்குக் கிடைத்த மாபெரும் சாதகமாகும். அதை விரித்துரைப்பதே அதற்குப் போதுமான வேலையாக இருந்தது. இந்த ஒரு காரணத்துக்காக மட்டுமே நாட்டிலிருந்து வெளியேறிய ''மாபெரும் மனிதர்களைப்'' போல அது ஒரு போதும் சோர்வடையவில்லை.

இங்கே நாம் விமர்சிக்கின்ற புத்தகம் இந்த ஆராய்ச்சிகளின் ஆரம்ப விளைவாகும்.

## 2

*[Das Volk, எண் 16, ஆகஸ்ட் 20, 1859]*

இங்கே விமர்சனம் செய்யப்படுகின்ற புத்தகத்தைப் போன்றதொரு நூலின் நோக்கம் அரசியல் பொருளாதாரத்தின் தனித்தனிப் பகுதிகளைப் பற்றி தொடர்பில்லாத வகையில் விமர்சனம் செய்வது அல்லது ஏதாவதொரு பொருளாதாரப் பிரச்சினையைத் தனிமைப்படுத்தி விவாதிப்பதாக மட்டுமே இருக்க முடியாது. அதற்கு மாறாக, அரசியல் பொருளாதாரம் என்ற மொத்த பல்கூட்டுத் தொகுதியை

யும் முறைப்படியாகத் திரும்ப எடுத்துக் கூறுவதையும் முதலாளித்துவ உற்பத்தியையும் முதலாளித்துவப் பரிவர்த்தனையையும் செயல்படுத்துகின்ற விதிகளைப் புரியக்கூடிய வகையில் விரித்துரைப்பதையும் அது ஆரம்பத்திலிருந்தே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இத்தகைய விரித்துரைத்தல் என்பது அதே சமயத்தில் பொருளாதார இலக்கியத்தைப் பற்றி எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய விமரிசனமாகவும் இருக்கிறது; ஏனென்றால் பொருளியலாளர்கள் என்பவர்கள் இந்த விதிகளை விளக்கிக் கூறுபவர்களாகவும் இவற்றுக்குப் பரிந்து பேசுபவர்களாகவுமே இருக்கிறார்கள்.

ஹெகலின் மரணத்துக்குப் பிறகு விஞ்ஞானத்தின் எந்தத் துறையிலும் அதன் பிரத்யேகமான உள் இசைவை எடுத்துக் காட்டுகின்ற வகையில் எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. அதிகார பூர்வமான ஹெகலிய மரபு தம் ஆசானின் இயக்கவியலின் மிகச் சாதாரணமான உபாயங்களை மட்டும் தன் வயப்படுத்திக் கொண்டது; அவற்றை எல்லாவற்றுக்கும் எதற்கு வேண்டுமென்றாலும் கையாண்டது; மேலும் பிறர் நகைக்கக் கூடிய திறமைக்குறைவோடு அடிக்கடி கையாண்டது. அவர்களைப் பொறுத்தவரை ஹெகலின் மொத்த பாரம்பரியமுமே வெறும் அச்சு மட்டும் தான்; அதைக் கொண்டு எந்தப் பாடத்தையும் முறைப்படுத்திவிட முடியும். மேலும் அது சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்ட ஒரு தொகுப்பு. அவர்கள் எப்பொழுது கருத்து வறட்சியாலும் ஸ்தூலமான அறிவு இல்லாமலும் சிரமப்படுகிறார்களோ அப்பொழுது அவர்களுடைய உதவிக்கு ஓடி வருவது மட்டுமே அதற்கு எஞ்சியிருக்கின்ற ஒரே கடமை. ஆகவே போன் (Bonn) நகரத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் சொன்னதைப் போல இந்த ஹெகலியவாதிகளுக்கு "ஒன்றும்" தெரியாது; ஆனால் அவர்களுக்கு "எல்லாவற்றையும்" பற்றி எழுதத் தெரியும். இதன் விளைவுகளும் இதற்குத் தகுந்தாற் போலவே இருந்தன. எனினும் இந்த கனவான்கள் எவ்வளவுதான் அகந்தை உடையவர்களாக இருந்தாலும்கூட முக்கியமான பிரச்சினைகளை முடிந்தவரை தவிர்க்கும் அளவுக்குத் தங்களுடைய குறைகளைப் போதுமான அளவுக்கு உணர்ந்திருந்தார்கள். புதைபடிவங்களைப் போல இறுகிப் போன வகையைச் சேர்ந்த அறிவு அதன்

மேன்மையான விவர அறிவினால் இன்னும் களத்திலே நின்று கொண்டிருந்தது. ஃபாயர்பாஹ் தொலை ஊக முறையைக் கைவிட்ட பிறகு ஹெகலியவாதம் படிப்படியாக மறைந்து போய் விட்டது; இறுகிய வகைகளைக் கொண்ட காலங் கடந்து போன இயக்க மறுப்பியல் மறுபடியும் விஞ்ஞானத் தின் மீது ஆதிக்கம் செலுத்துவது போலத் தோன்றியது.

இதற்கு முற்றிலும் இயற்கையான காரணங்கள் இருந் தன. ஹெகலிய டயடோஹீகள் (Diadochi)[55] ஆட்சி வீணான சொற்றொடர்களில் முடிவடைந்ததும் அதன் பிறகு இயற் கையாகத் தொடர்ந்த காலகட்டத்தில் விஞ்ஞானத்தின் ஸ்தூலமான அம்சம் அதன் சம்பிரதாயமான வடிவியலான அம்சத்தின் மீது மறுபடியும் மேலாதிக்கம் செலுத்தியது. மேலும், 1848ம் வருடத்துக்குப் பிறகு ஜெர்மனியில் ஏற் பட்ட மகத்தான முதலாளித்துவ வளர்ச்சிக்கு ஏற்ப, அந்த நாடு இயற்கை விஞ்ஞானங்களில் அசாதாரணமான சுறுசுறுப் போடு ஈடுபட்டது. இந்த விஞ்ஞானங்களில் தொலை ஊகப் போக்கு எத்தகைய உண்மையான முக்கியத்துவத்தையும் ஒரு போதும் பெற்றதில்லை; எனவே இந்த விஞ்ஞானங்கள் உயர் வாக மதிக்கப்பட்ட பொழுது, பழைய இயக்க மறுப்பியல் சிந்தனை முறை—வோல்ஃபின் மிகச் சாதாரணமான சிந்தனை உட்பட—வேகமாக செல்வாக்குப் பெற்றது. ஹெகல் மறக் கப்பட்டார்; இயற்கை விஞ்ஞானங்களில் ஒரு புதிய பொருள் முதல்வாதம் தோன்றியது; பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த பொருள்முதல்வாதத்தோடு அது கொள்கையளவில் மிகவும் குறைவான அளவுக்கே வேறுபட்டிருந்தது; இயற்கை விஞ் ஞானங்களில்—குறிப்பாக இரசாயனத்திலும் உடற்கூறு இயலிலும்—அதிகமான விவரங்களைச் சேகரித்தது மட்டுமே அதற்கு முக்கியமான சாதகமாக இருந்தது. கான்ட்டுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்த குறுகிய மனோபாவச் சிந்தனை முறை—அதன் மிகப் பொதுப்படையான சிறப்பற்ற வடி வத்தில்—புஹ்னர், ஃபோக்ட் ஆகியோரிடம் புனருற்பத்தி செய்யப்பட்டது. ஃபாயர்பாஹின் பெயரால் சத்தியம் செய் கின்ற மொலிஷோட் கூட நமக்கு அதிகமான வேடிக்கையைத் தரும் வகையில் மிகச் சாதாரணமான இனங்களினூடே அடிக்கடி தடுமாறுகிறார். சாதாரண முதலாளித்துவ அறி வின் தளர்ந்து போன வண்டிக் குதிரை, பொருளை அதன்

தோற்றத்திலிருந்தும் காரணத்தை அதன் விளைவிலிருந்தும் பிரித்துக் காட்டுகின்ற பள்ளத்துக்கு முன்னால் குழப்பமடைந்து தடுமாறுகிறது; ஆனால் சூக்குமமான வாதம் என்ற மிகக் கரடு முரடான நிலத்தின் மீது வேகமாகப் போக விரும்புபவர்கள் வண்டிக் குதிரைகளின் மீது சவாரி செய்யக் கூடாது.

இந்தக் கட்டத்தில், அரசியல் பொருளாதாரம் என்ற வகையில் அதனோடு தொடர்பில்லாத ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருந்தது. எந்த விஞ்ஞான முறையைப் பயன்படுத்துவது? ஒரு பக்கத்தில் ஹெகலின் இயக்கவியல்—ஹெகல் விட்டுச் சென்ற முற்றிலும் சூக்குமமான, ''தொலை ஊக'' வடிவத்தில்—இருந்தது; மறு பக்கத்தில் சாதாரணமான—பிரதானமாக வோல்ஃபின்—இயக்க மறுப்பியல் முறை இருந்தது. அது மறுபடியும் இப்பொழுது செல்வாக்குப் பெற்றிருந்ததோடு முதலாளித்துவப் பொருளியலாளர்கள் தங்களுடைய கனமான, சுற்றி வளைத்துச் செல்கின்ற புத்தகங்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது முறையைக் கான்ட்டும் குறிப்பாக ஹெகலும் தத்துவ ரீதியில் அழித்துவிட்டனர்; ஆனால் சோம்பலும், அதற்கு பதிலாக உபயோகிப்பதற்கு ஒரு எளிமையான முறை இல்லாததுமே நடைமுறையில் அது இன்னும் கையாளப்படுவதைச் சாத்தியமாக்கியது. மறு பக்கத்தில் ஹெகலின் முறையியல்—அது இருக்கும் வடிவத்தில்—முற்றிலும் பயன்படுத்த முடியாததாகும். அது அடிப்படையில் கருத்துமுதல்வாதத் தன்மை கொண்டிருந்தது; இதற்கு முன்பிருந்த எந்த உலகப் பார்வையையும் காட்டிலும் அதிகமான பொருள் முதல்வாதத் தன்மை கொண்ட பார்வையை விரித்துரைப்பதே இங்கு முக்கியமான விஷயமாக இருந்தது. ஹெகலின் முறையியல் கலப்பற்ற சிந்தனையைத் தன்னுடைய திருப்புமுனையாக எடுத்துக்கொண்டது. ஆனால் இங்கே வளையாத விவரங்கள் ஆரம்ப நிலையாக இருப்பது அவசியமாயிற்று. ''சூனியத்திலிருந்து சூனியத்தின் வழியாக சூனியத்தை நோக்கிச் செல்வதாக''[56] அதனுடைய வார்த்தைகளிலேயே ஒத்துக்கொள்கின்ற முறையியல் இந்த வடிவத்தில் இங்கே ஒரு போதும் ஏற்றதல்ல. எனினும் கிடைத்திருக்கின்ற மொத்த தர்க்கரீதியான விவரங்களிலும் குறைந்த பட்சம்

தொடக்க நிலையாகப் பயன்படக் கூடிய கூறுக அது ஒன்று மட்டுமே இருந்தது. அது விமர்சனத்துக்கு உட்படுத்தப் படவில்லை; அது தூக்கியெறியப்படவில்லை; அந்த மாபெரும் இயக்கவியல் மேதையின் எதிரிகளில் ஒருவராலும் அந்தப் பெருமைக்குரிய கட்டிடத்தில் ஒரு பிளவைக் கூட ஏற்படுத்த முடியவில்லை. ஹெகலிய மரபினருக்கு அதை எப்படிக் கையாளுவதென்று தெரியாததால் அது மறக்கப்பட்டது. எனவே முதலில் ஹெகலின் முறையியலைச் சரிவர விமர்சிப் பது அவசியமாயிற்று.

ஹெகலின் வாத முறை அதன் அசாதாரணமான வரலாற்று உணர்விஞல் மற்ற எல்லாத் தத்துவஞானிகளிடமிருந்தும் தனித்து விளங்குகிறது. அவர் உபயோகித்த வடிவம் எவ்வளவு சூக்குமமானதாகவும் கருத்துமுதல்வாதத் தன்மை கொண்டதாகவும் இருந்த போதிலும் அவருடைய கருத்துக்களின் பரிணமம் உலக வரலாற்றின் பரிணமத்துக்கு எப்போதும் இணையாகவே போய்க் கொண்டிருந்தது; அதிலும் பின்னுல் சொல்லப்பட்டது முன்னதின் ஒரே நிரூபண மாகவும் கருதப்பட்டது. இது நடைமுறையில் உள்ள உறவைத் தலை கீழாக மாற்றி பூமியில் தலையை வைத்துக் கொண்டு நிற்குமாறு செய்தபோதிலும் அதன் உண்மையான உள்ளடக்கம் அவருடைய தத்துவஞானத்தில் தவருமல் சேர்க்கப்பட்டிருந்தது. அதிலும் ஹெகல்—தன்னைப் பின் பற்றியவர்களைப் போலன்றி—அறியாமையை ஆதாரமாகக் கொள்ளவில்லை; அவர் எக்காலத்துக்கும் அறிவாழமிக்க சிந்தனையாளர்களில் ஒருவர். வரலாற்றில் ஒரு பரிணமம், ஒரு உள்ளார்ந்த இசைவுப் பொருத்தம் இருப்பதை எடுத்துக் காட்டுவதற்கு முதலில் முயற்சித்தவர் அவர்தான்; வரலாற்றைப் பற்றிய அவருடைய தத்துவஞானத்தில் சில அம்சங்கள் இன்று நமக்கு எவ்வளவு விசித்திரமாகத் தோன்றிய போதிலும், அவருக்கு முந்தியவர்களோடும், பொதுவான வரலாற்றுக் கருத்துக்களை எடுத்துக்கூறிய அவருக்குப் பிந்தியவர்களோடும் ஒப்பிடும் பொழுது அந்த அடிப்படையான கருதுகோள்களின் மாட்சி இன்று கூட இன்னும் போற்றப் படக் கூடியதாக இருக்கிறது. அவர் எழுதிய *Phänomenologie*, *Ästhetik*, *Geschichte der Philosophie* நூல்களில் வரலாறு பற்றிய இந்தச் சிறப்பு மிக்க கருதுகோள் நிறைந்திருக்கிறது.

இந்தப் பொருள் எல்லா இடங்களிலும் வரலாற்று ரீதியாக, ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில்—சூக்குமமான, உருச் சிதைவான முறையில் என்றபோதிலும்—எடுத்துக் காட்டப் படுகிறது.

வரலாறு பற்றிய சகாப்த முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கருதுகோள் புதிய பொருள்முதல்வாத அணுகுமுறை யின் நேரடியான தத்துவரீதியான முன்நிபந்தனையாக இருந் தது; இது தர்க்க ரீதியான முறையின் ஆரம்ப நிலையாக உருவாகிவிட்டது. ''கலப்பற்ற சிந்தனை'' என்ற கருத்து நிலையிலிருந்தும் கூட இந்த மறந்து போன இயக்கவியல் இத்தகைய விளைவுகளுக்கு வழி வகுத்திருப்பதால், மேலும் முந்திய தர்க்கவியல், இயக்க மறுப்பியல் ஆகிய மொத் தத்தையும் மிகச் சுலபமாக சமாளித்திருப்பதனாலும், என்ன வானாலும் இது சொற்புரட்டையும் நுண்மையான வேறு பாட்டைக் கண்டுபிடிப்பதையும் காட்டிலும் உயர்வான தாகவே இருக்க வேண்டும். ஆனால் அதிகாரபூர்வமான தத்துவ ஞானம் முழுமையுமே இந்த முறையை விமர்சிப்பதி லிருந்து தப்பிச் சென்றுவிட்டது; இன்னும் அப்படியே தப்பி வருகிறது. அத்தகைய விமர்சனமும் அவ்வளவு சாதாரண மான விஷயமல்ல.

ஹெகலின் தர்க்கவியலிலிருந்து இந்தத் துறையில் ஹெக லின் உண்மையான கண்டுபிடிப்புகளைக் கொண்ட கருவைப் பிரித்தெடுப்பதற்கும் இயக்கவியல் முறையின் மீதுள்ள கருத்துமுதல்வாதப் போர்வைகளை நீக்கி அதன் எளிய வடி வமே கருத்தின் பரிணமத்துக்கு ஒரே சரியான முறை என் பதை நிறுவுவதற்கும் மார்க்ஸ் ஒருவர் மட்டுமே இருந்தார்; இன்னும் அவர் ஒருவர்தான் இருக்கிறார். அரசியல் பொருளா தாரத்தைப் பற்றிய மார்க்சின் விமர்சனத்துக்கு ஆதார மான இந்த முறையை உருவாக்கியது அடிப்படையான பொருள்முதல்வாதக் கருதுகோளுக்கு எந்த விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்ததல்ல என்று நாங்கள் கருது கிறோம்.

இந்த முறையை நிர்ணயித்த பிறகும் கூட அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனம் இரண்டு வழி களில்—வரலாற்று ரீதியாக அல்லது தர்க்க ரீதியாக— இன்னும் அமைக்கப்படக் கூடும். வரலாற்றுப் போக்கில்—

அதன் இலக்கிய பிரதிபலிப்பைப் போலவே—மொத்தமாகப் பார்க்கும் பொழுது பரிணாமம் மிக எளிமையான உறவுகளிலிருந்து மிகச் சிக்கலான உறவுகளுக்கு முன்னேறுகின்ற படியால் அரசியல் பொருளாதார நூல்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சி ஒரு இயற்கையான குறிப்பைக் கொடுத்தது, விமர்சனம் அதைத் திருப்பு முனையாக எடுத்துக் கொள்ளலாம்; அவ்வாறுயின் பொருளாதார இனங்கள் மொத்தத்தில் அவற்றின் தர்க்கரீதியான விளக்கவுரையிலிருக்கும் அதே தொடர்வரிசையில் தோன்றும். இந்த வடிவம் மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய சாதகத்தைக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது; ஏனென்றால் அது உண்மையான வளர்ச்சியைத் தேடிக் கண்டு பிடிக்கிறது. ஆனால் அது—மிக உயர்நிலையில்—இம்முறையில் மிகவும் விரும்பப்படுவதாக இருக்கும். வரலாறு அடிக்கடி தாவிக்குதித்தும் குறுக்கு நெடுக்காக வளைந்தும் போகிறது. ஆரம்பத்திலிருந்து கடைசிவரையிலும் இதை இப்படியே பின்பற்ற வேண்டுமென்பதால், அதில் குறைவான முக்கியத்துவத்தைக் கொண்ட ஏராளமான விவரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதோடு சிந்தனை ஓட்டமும் அடிக்கடி நிறுத்தப்பட வேண்டியிருக்கும்; மேலும் முதலாளித்துவ சமூகத்தின் வரலாற்றைச் சொல்லாமல் அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றை எழுத முடியாதென்பதால் —அதைப் பற்றி பூர்வாங்க ஆராய்ச்சிகள் இல்லாதிருப்பதால்—இந்தப் பணி மிகப் பெரிய அளவை அடைந்து விடும். எனவே தர்க்க ரீதியான அணுகுமுறையே இதற்குப் பொருத்தமான ஒரே அணுகுமுறையாகும். ஆனால் இது வரலாற்று முறையைத் தவிர வேறு ஒன்றுமல்ல; வரலாற்று ரீதியான வடிவமும் கவனத்தைத் திருப்பக் கூடிய தற்செயலான சம்பவங்களும் இங்கே நீக்கப்பட்டுவிடுகின்றன. இந்த வரலாறு தொடங்கும் நிலையே சிந்தனை ஓட்டத்தின் ஆரம்ப நிலையாகவும் இருக்க வேண்டும்; அதன் தொடர்ச்சியான முன்னேற்றம் சூக்குமமான, தத்துவரீதியாக முரணில்லாத வடிவத்தில் வரலாற்று நிகழ்வுப் போக்கின் பிரதிபலிப்பாக மட்டும் இருக்கும். இந்தப் பிரதிபலிப்பு திருத்தப்பட்ட போதிலும் அது உண்மையான வரலாற்றுப் போக்கில் ஏற்பட்ட விதிகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தப்படு

கிறது; அதோடு ஒவ்வொரு காரணியையும் நிகழ்வுப் போக்கு தன்னுடைய முழு முதிர்ச்சியை, அதன் மூலச் சிறப்பான வடிவத்தை அடைகின்ற வளர்ச்சிக் கட்டத்தில் ஆராய முடி கின்றது.

வரலாற்று ரீதியான, உண்மையிலேயே இருக்கின்ற முத லாவதும் அதிக எளிமையானதுமான உறவிலிருந்து, ஆகவே இந்தச் சூழ்நிலையில் நமக்குக் கிடைக்கின்ற முதல் பொரு ளாதார உறவிலிருந்து இந்த முறையை நாம் தொடங்கு கின்றோம். இந்த உறவை நாம் ஆராய்கின்றோம். அது ஒரு உறவு என்பதிலிருந்தே ஒன்றோடொன்று உறவு கொண்டிருக் கும் இரண்டு அம்சங்கள் அதிலிருப்பது முன்பே அதிலடங்கி யிருக்கிறது. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றும் தனியே ஆராயப்படுகின்றன; அதன் மூலம் அவற்றின் பரஸ்பர நடத் தையின் தன்மையும், எதிரிடை நடவடிக்கையும் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒரு தீர்வு வேண்டுமென்று வற் புறுத்துகின்ற முரண்பாடுகள் தோன்றும். ஆனால் நம்முடைய மூளையிலே மட்டும் நடைபெறுகின்ற சூக்குமமான சிந் தனைப் போக்கை நாம் ஆராயவில்லை, எப்பொழுதோ ஒரு சமயத்தில் உண்மையாகவே நடைபெற்ற அல்லது இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மெய்யான நிகழ்ச்சியை ஆராய்கின்றோம்; எனவே இந்த முரண்பாடுகள் முன்பே நடைமுறையில் தோன்றியிருக்கும்; ஒரு வேளை அவற்றின் தீர்வும் முடிந்திருக்கும். இந்தத் தீர்வு ஏற்பட்ட முறை யைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடும் பொழுது ஒரு புதிய உறவை ஏற்படுத்துவதன் மூலம் தீர்வு முடிந்திருக்கிறது என்பதைக் காண்போம். அதன் பிறகு அதனுடைய இரண்டு முரண்பாடான அம்சங்களையும் நாம் எடுத்துக் கூற வேண் டும். இது இப்படியே தொடரும்.

அரசியல் பொருளாதாரம் பண்டம் என்பதிலிருந்து, தனிநபர்களாலோ அல்லது பூர்விக சமூகக் குழுக்களாலோ பொருட்கள் பரிவர்த்தனை செய்யப்படுகின்ற கணத்திலிருந்து ஆரம்பமாகிறது. பரிவர்த்தனை செய்யப்படுகின்ற பொருள் பண்டமாகும். இரண்டு நபர்கள் அல்லது சமூகக் குழுக் களுக்கு இடையேயுள்ள உறவினால், உற்பத்தியாளருக்கும் நுகர்பவருக்கும் (இந்தக் கட்டத்தில் அவர்கள் ஒரே நபராக இனியும் இருப்பதில்லை) இடையே உள்ள உறவினால் அந்தப்

பொருள் பண்டமாகிறது. இங்கே அரசியல் பொருளாதாரம் முழுவதிலும் நிறைந்திருக்கின்ற, முதலாளித்துவப் பொருளியலாளர்களிடம் அதிகமான குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்ற பிரத்யேகமான உண்மைக்கு இது உதாரணமாகும். அரசியல் பொருளாதாரம் பொருள்களோடு சம்பந்தப்பட்டதல்ல, அது நபர்களுக்கு இடையே உள்ள உறவுகளோடு, கடைசி நிலையில் வர்க்கங்களுக்கு இடையே உள்ள உறவுகளோடு சம்பந்தப்பட்டது; எனினும் இந்த உறவுகள் எப்போதும் பொருள்களோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன; பொருள்களாகவே தோன்றுகின்றன என்பது அந்த உண்மையாகும். சில பொருளியலாளர்கள் தனித்தனியான எடுத்துக்காட்டுகளில் இதை ஊகித்தார்கள் என்றாலும், அரசியல் பொருளாதாரம் முழுவதுக்குமே இதன் முக்கியத்துவத்தை முதன் முதலாக எடுத்துக் காட்டியவர் மார்க்ஸ். அதன் மூலம் மிகச் சிக்கலான பிரச்சினைகளைக் கூட மிகச் சாதாரணமாகவும் தெளிவாகவும் ஆக்கினார்; இப்பொழுது முதலாளித்துவப் பொருளியலாளர்கள் கூட அவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு பண்டத்தின் (அதாவது முழுமையான பரிணாமத்தை அடைந்த பண்டமே தவிர இரு பூர்விக சமூகக் குழுக்களுக்கிடையே தானாகவே உருவாகும் பண்ட மாற்றில் அது மெதுவாகத் தோன்றுகின்ற ஆரம்ப நிலையில் அல்ல) பல விதமான அம்சங்களை நாம் ஆராய்ந்தால், அது பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்ற இரண்டு கோணங்களில் நமக்கு முன்னிற்கிறது; ஆகவே நாம் உடனடியாகவே பொருளாதார விவாதம் என்ற துறைக்குள் நுழைந்து விடுகிறோம். ஜெர்மானிய இயக்கவியல் முறை அதன் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் பழைய, மேலெழுந்தவாரியான, வெறுஞ் சொல்லோட்டமுள்ள இயக்க மறுப்பியல் முறையோடு ஒப்பிடும் பொழுது மத்திய காலப் போக்குவரத்துச் சாதனத்தோடு ஒப்பிடுகையில் ரயில்வேயைப் போன்று முன்னது உயர்வானது. இந்த உண்மைக்கு யாரேனும் குறிப்பிட்ட எடுத்துக்காட்டைப் பார்க்க விரும்பினால் அவர் ஆடம் ஸ்மித் அல்லது வேறு அதிகார பூர்வமான புகழ் பெற்ற பொருளியலாளர் எவராவது எழுதிய புத்தகத்தை எடுத்துப் படிக்கட்டும்; பரிவர்த்தனை மதிப்பும் பயன் மதிப்பும் இந்த

கனவான்களுக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுத்தன; இந்த இரண்டையும் சரியான முறையில் வேறுபடுத்துவதிலும் அவை ஒவ்வொன்றுக்கும் உரித்தான வரையறுக்கப்பட்ட வடிவத்தை எடுத்துரைப்பதிலும் அவர்கள் எவ்வளவு கஷ்டப் பட்டார்கள் என்பதைப் பார்க்கட்டும். பிறகு மார்க்ஸ் எழுதிய தெளிவான, எளிமையான விளக்கத்தை அவற்ருேடு ஒப்பிடட்டும்.

பயன் மதிப்பையும் பரிவர்த்தனை மதிப்பையும் எடுத்துக் கூறிய பிறகு, இந்த இரண்டின் நேரடியான ஒருமை என்ற வகையில் பண்டம்—அது பரிவர்த்தனை நிகழ்வுப் போக்கில் நுழைகின்ற பொழுது—வர்ணிக்கப்படுகிறது. இந்தக் கட்டத்தில் தோன்றுகின்ற முரண்பாடுகளை இப்புத்தகத்தின் 20, 21ம் பக்கங்களில் காணலாம்.* இந்த முரண்பாடுகளில் ஆர்வங்காட்டுவது தத்துவரீதியான, சூக்குமமான காரணங்களுக்காக மட்டுமல்ல; நேரடியான இடைமாற்றம், அதாவது சாதாரணமான பண்டமாற்றின் தன்மையில் தொடங்குகின்ற நெருக்கடிகளை, பரிவர்த்தனையின் முதல் கரடுமுரடான வடிவமாகிய இதில் தவிர்க்க முடியாத வகையில் எதிரிடுகின்ற பொருத்தமற்ற அம்சங்களை அவை பிரதிபலிக்கின்றன என்பதை மட்டும் நாம் இங்கே குறிப்பிடுகின்ருேம். ஒரு தனிப் பண்டத்துக்கு—பணத்துக்கு—மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற தன்மையைக் கொடுப்பதன் மூலம் இந்தப் பொருத்தமற்ற அம்சங்களுக்குத் தீர்வு கிடைக்கின்றது. இரண்டாவது அத்தியாயத்தில் பணம் அல்லது சாதாரணச் செலாவணி ஆராயப்படுகிறது, அதாவது: 1) பணம் மதிப்பின் அளவுகோல் என்ற முறையிலும், அதே சமயத்தில் பணத்தின் மூலமாக அளக்கப்படுகின்ற மதிப்பு, அதாவது விலை இன்னும் அதிக நுணுக்கமாக வரையறுக்கப்படுகிறது, 2) பணம் செலாவணிச் சாதனம் என்ற வகையிலும், 3) முதலாளித்துவப் பொருளாயதச் செல்வம் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உண்மையான பணம் இந்த இரண்டு அம்சங்களின் ஒருமை என்ற வகையிலும் ஆராயப் படுகிறது. இதோடு முதற் பகுதி முடிவடைகின்றது; பணத்

* இந்த நூல், பக்கங்கள் 44—47 பார்க்கவும்.—ப-ர்.

மூலதனமாக மாற்றமடைவது இரண்டாம் பகுதியில் எடுத்துக் கூறப்படும்.

இந்த முறையைப் பின்பற்றும்பொழுது, தர்க்கரீதியான வளர்ச்சி கலப்பற்ற சூக்குமமான துறையோடு மட்டுமே எப்போதும் நின்றுவிடுவதில்லை. இதற்கு மாறாக, வரலாற்று ரீதியான உதாரணங்களும் யதார்த்தத்தோடு தொடர்ச்சியான தொடர்பும் அதற்கு அவசியமாகும். ஆகவே அத்தகைய வெவ்வேறு விதமான ஆதாரங்கள் மிக அதிகமான அளவுக்கு இங்கே கொடுக்கப்படுகின்றன. இவை சமூக வளர்ச்சியின் உண்மையான வரலாற்று ரீதியான நிகழ்வுப் போக்கில் வெவ்வேறு கட்டங்கள், பொருளாதார நூல்கள் ஆகிய இரண்டையும் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்கின்றன. பொருளாதார நூல்களில் பொருளாதார உறவுகளைப் பற்றிய தெளிவான வரையறுப்புகள் உருவாக்கப்பட்ட விதம் தொடக்கத்திலிருந்து தேடிக் கண்டுபிடிக்கப்படுகிறது. குறிப்பிட்ட, அநேகமாக ஒரு தலைப்பட்சமான அல்லது குழப்பமான பொருள்விளக்கங்களின் விமர்சனம் தர்க்க ரீதியான விளக்கவுரையில் முன்பே விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றபடியால் இவை சுருக்கமாகவே தரப்படுகின்றன.

இந்தப் புத்தகத்தின் பொருளாதார உள்ளடக்கத்தைப் பற்றி மூன்றாவது கட்டுரையில் எழுதுவோம்.

*1859ம் வருடம் ஆகஸ்ட் மாதம்*
*3ந் தேதிக்கும் 15ந்*
*தேதிக்கும் இடையில் எழுதப்பட்டது*

## குறிப்புகள்

1 மார்க்ஸ் எழுதிய அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற புத்தகம் 1858ம் வருடம் ஆகஸ்ட் மாதத்திற்கும் 1859ம் வருடம் ஜனவரி மாதத்துக்கும் இடையில் எழுதப்பட்டது. இதை எழுதுவதற்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்பிருந்தே மார்க்ஸ் பல அம்சங்களைக் கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதற்காக ஏராளமான சமூக, பொருளாதார நூல்களைப் படித்து தன்னுடைய பொருளாதாரக் கொள்கைக்கு அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டார்.

1857ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் மார்க்ஸ் தம்முடைய விரிவான ஆராய்ச்சிகளை முறைப்படுத்தி, ஒரு பெரிய பொருளாதார நூலை எழுதத் தொடங்கினார். 1857ம் வருடம் ஆகஸ்ட்—செப்டெம்பர் மாதங்களில் தன்னுடைய நூலைப் பற்றிய முதல் திட்டத்தை உருவாக்கிக் கொண்டு பிறகு அதன் உட்பகுதிகளைப் பிரித்தார். இந்த நூல் ஆறு புத்தகங்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்தார். முதல் புத்தகத்தில் மூலதனத்தைப் பற்றிய ஆராய்ச்சியும் இரண்டாவது புத்தகத்தில் நிலவுடைமையைப் பற்றிய ஆராய்ச்சியும் மூன்றாவதில் கூலி உழைப்பும் நான்காவதில் அரசைப் பற்றியும் ஐந்தாவதில் சர்வதேச வர்த்தகம் பற்றியும் ஆறாவதில் உலகச் சந்தையைப் பற்றியும் எழுதுவதென்று திட்டமிட்டிருந்தார். மார்க்சின் திட்டத்தின்படி முதல் புத்தகம் நான்கு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்; முதல் பகுதி பொதுவாக மூலதனத்தைப் பற்றி என்ற தலைப்பைக் கொண்டிருக்கும். அதில் (1) மதிப்பு, (2) பணம், (3) மூலதனம் என்ற மூன்று அத்தியாயங்கள் இடம் பெறும்.

1857ம் ஆகஸ்ட் முதல் 1858 ஜூன் முடிய உள்ள காலத்தில் மார்க்ஸ் முதல் புத்தகத்தை எழுதினார். அவருடைய கையெழுத்துப் பிரதியை மாஸ்கோவில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் பொறுப்

பில் உள்ள மார்க்சிஸ-லெனினிஸ ஆராய்ச்சி நிலையம் 1939-41ம் வருடங்களில் அரசியல் பொருளாதார விமர்சனத்தின் முக்கியமான கூறுகள் (திருத்தப்படாத கையேடு), *Grundrisse der Kritik der politischen Ökonomie (Rohent-Wurf)* என்ற தலைப்புடன் ஜெர்மன் மொழியில் வெளியிட்டது. அவை ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இரண்டு பெரிய புத்தகங்களாக வெளியிடப்பட்டன. இவற்றில் மார்க்ஸ் பல வருடங்களாகத் தாம் செய்து வந்திருந்த பொருளாதார ஆராய்ச்சியின் முதல் முடிவுகளை எழுதினார். அது உண்மையில் அவருடைய அடிப்படையான பொருளாதார ஆராய்ச்சியின் முதல் பகுதியின் பூர்த்தி செய்யப்படாத வடிவமாக இருந்தது.

1858ம் வருட ஆரம்பத்தில் மார்க்ஸ் தன்னுடைய நூலைத் தனித்தனிப் பகுதிகளாக வெளியிட விரும்பினார். 1858 ஆகஸ்ட்—1859 ஜனவரி மாதங்களில் பணத்தைப் பற்றிய அத்தியாயத்தை மறுபடியும் எழுதியதோடு, பண்டத்தைப் பற்றி ஒரு அத்தியாயத்தையும் எழுதிச் சேர்த்தார். அதற்கு அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற தலைப்புக் கொடுத்து பெர்லினிலிருந்த பிரசுரகர்த்தருக்கு அனுப்பிவைத்தார். முதலில் திட்டமிட்டதைப் போல அதில் மூன்று அத்தியாயங்கள் இடம் பெறவில்லை; இரண்டு அத்தியாயங்கள் மட்டுமே இருந்தன. 1859 ஜூன் மாதத்தில் அந்தப் புத்தகம் வெளியாயிற்று. அதில் ''முதல் புத்தகம். மூலதனம்''; ''முதல் பகுதி. பொதுவாக மூலதனத்தைப் பற்றி'' என்று துணைத் தலைப்புகள் இடம் பெற்றிருந்தன. அவர் முதலில் எழுதுவதாகத் திட்டமிட்டிருந்த ஆறு புத்தகங்களில் இது முதலாவது புத்தகம் என்று கருதுவதற்கு அது இடமளித்தது.

முதல் புத்தகத்தை வெளியிட்ட பிறகு மூலதனப் பிரச்சினைகளை ஆராய்கின்ற இரண்டாம் பகுதியை வெளியிடுவதென்று மார்க்ஸ் உத்தேசித்திருந்தார். எனினும் அவருடைய தொடர்ந்த ஆராய்ச்சியின் விளைவாக அவருடைய மாபெரும் நூலைப் பற்றிய மூலத் திட்டத்தை அவர் மாற்றிக் கொண்டார். ஆறு புத்தகங்களுக்குப் பதிலாக மூலதனம் என்ற தலைப்பில் நான்கு புத்தகங்கள் எழுதுவதென்று முடிவு செய்தார். எனவே இரண்டாம் பகுதியை வெளியிடுவதற்குப் பதிலாக மார்க்ஸ் மூலதனத்தை எழுதத் தொடங்கினார். அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற புத்தகத்தில் உள்ள பல கருது கோள்களை அவர் அதில் பயன்படுத்திக் கொண்டார்.—7

[2] மார்க்ஸ் தமது பெரிய பொருளாதார நூலுக்காகத் தயாரித்த முன்னுரை இங்கே குறிப்பிடப்படுகிறது. இது பூர்த்தி செய்யப்படவில்லை (இந்த நூலில் பக்கங்கள் 286—332 பார்க்கவும்).—7

[3] அரசியல், வர்த்தகம் மற்றும் தொழில் பற்றிய ரைனிஷ் பத்திரிகை [*Rheinische Zeitung für Politik, Handel und Gewerbe*] 1842 ஜனவரி முதல் தேதியிலிருந்து 1843 மார்ச் 31ந் தேதி முடிய கொலோன் நகரத்திலிருந்து வெளியிடப் பட்ட நாளிதழின் பெயர். ரைன் மாநிலத்தில் பிரஷ்ஷிய சர்வாதிகாரத்தை எதிர்த்த முதலாளிகளின் பிரதிநிதி களால் தொடங்கப்பட்டது. 1842 ஏப்ரல் மாதத்தில் மார்க்ஸ் அதற்குக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார்; அந்த வருடத்திலேயே அக்டோபர் மாதத்தில் இந்தப் பத்திரிக்கையின் ஆசிரியர் குழுவில் மார்க்சும் இடம் பெற்றார். இந்தப் பத்திரிகையில் பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய சில கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. மார்க்ஸ் ஆசிரியராக இருந்த பொழுது, அந்த நாளிதழின் புரட்சி கரமான, ஜனநாயகத் தன்மை மேலும் தீவிரமாக வெளிப்பட்டது. அரசாங்கம் அந்த நாளிதழுக்கு விசேஷ மான வகையில் கண்டிப்பான தணிக்கையை ஏற்படுத்தி யது; பிறகு அதை நிறுத்துமாறும் உத்தரவிட்டது.—8

[4] ''6வது ரைனிஷ் சட்டமன்ற விவாதங்கள் (மூன்றும் கட்டுரை)'', ''விறகு திருடுவதைத் தடுக்கும் சட்டத்தின் மீது விவாதங்கள்'', ''மோஸெல் நிருபருக்கு ஆதரவாக'' என்ற தலைப்புக்களில் மார்க்ஸ் எழுதிய கட்டுரைகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன.—8

[5] பொதுமக்கள் பத்திரிகை [*Allgemeine Zeitung*] பிற்போக்கான கருத்துக்களை வெளியிட்ட ஜெர்மன் நாளிதழ்; 1789ம் வருடத்தில் தொடங்கப்பட்டு 1810 முதல் 1882 முடிய ஆக்ஸ்பர்க் நகரத்திலிருந்து வெளியிடப்பட்டது. 1843ம் வருடத்தில் கற்பனாவாத சோஷலிஸ, கம்யூனிஸக் கருத்துக் களைத் திரித்துக் கூறுகின்ற கட்டுரைகளை வெளியிட் டது.—8

[6] ஜெர்மன் பிரெஞ்சு வருட சஞ்சிகை [*Deutsch-Französische Jahrbücher*] கார்ல் மார்க்சும் அர்னால்டு ருகேயும் வெளி யிட்ட வருட சஞ்சிகை; ஜெர்மன் மொழியில் வெளி, யிடப்பட்டது. இரண்டு இதழ்களை ஒன்று சேர்த்து ஒரே ஒரு வெளியீடு மட்டும் 1844 பிப்ரவரி மாதத்தில் வெளி வந்தது. மார்க்ஸ் எழுதிய யூதர் இனப் பிரச்சினையைப்

பற்றி, ஹெகலின் சட்டம் பற்றிய தத்துவ விமர்சனத்துக்கு ஓர் அறிமுகம் என்ற கட்டுரையும் எங்கெல்ஸ் எழுதிய வேறு சில கட்டுரைகளும் அதில் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றின் ஆசிரியர்கள் பொருள் முதல்வாத, கம்யூனிசக் கருத்துநிலையை உறுதியாகப் பின்பற்றினர்கள் என்பதைக் காட்டுகிறது. முதலாளித்துவத் தீவிர வாதியான அர்னெல்டு ருகேயோடு மார்க்சுக்கு ஏற்பட்ட கொள்கை வேறுபாடுகள் இந்த சஞ்சிகை நின்று போனதற்கு முக்கிய காரணமாகும்.—9

7 அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு உருவரை என்ற தலைப்பில் எங்கெல்ஸ் எழுதிய முதல் பொருளாதாரக் கட்டுரையை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். —11

8 மார்க்சும் எங்கெல்சும் கூட்டாக எழுதிய ஜெர்மன் தத்துவ ஞானம் என்ற புத்தகம் இங்கே குறிப்பிடப்படுகிறது. —12

9 மார்க்ஸ் எழுதிய கூலியுழைப்பும் மூலதனமும் என்ற பிரசுரம் இங்கே குறிப்பிடப்படுகிறது.—13

10 1847ம் வருடத்தின் ஆகஸ்ட் மாதக் கடைசியின் போது மார்க்சும் எங்கெல்சும் இந்த சங்கத்தை நிறுவினர்கள். பெல்ஜியம் நாட்டில் வசிக்கின்ற ஜெர்மன் தொழிலாளர்களுக்கு அரசியல் போதனை செய்வதும் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துக்களைப் பரப்புவதும் இச்சங்கத்தின் நோக்கங்களாகும். 1848ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற முதலாளித்துவப் புரட்சிக்குப் பிறகு பெல்ஜியம் நாட்டுப் போலீசுத் துறையினர் இச்சங்கத்தின் உறுப்பினர்களைக் கைது செய்து நாடு கடத்தியபடியால் இதன் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.—13

11 புதிய ரைனிஷ் பத்திரிகை. ஜனநாயகவாதிகளின் இதழ் [*Neue Rheinische Zeitung. Organ der Demokratie*]—கொலோன் நகரத்திலிருந்து 1848 ஜூன் முதல் தேதியிலிருந்து 1849 மே 19ந் தேதி முடிய வெளிவந்த நாளிதழ்; மார்க்ஸ் அதன் பிரதம ஆசிரியராக இருந்தார்.

இந்த நாளிதழின் போர்க்குணமிக்க தீர்மானமான நிலைகள், அதன் சர்வதேசியவாதம், பிரஷ்ஷிய அரசாங்கத்தையும் ஸ்தல கொலோன் அதிகாரிகளையும் அரசியல் ரீதியில் குற்றம் சாட்டி எழுதப்பட்ட கட்டுரைகள் முதலியவற்றினல் அது வெளிவரத் தொடங்கிய முதல் மாதத்

திலிருந்தே அரசாங்க அடக்குமுறைக்கு இலக்காயிற்று; கடைசியில் நாளிதழ் நிறுத்தப்பட்டது.—13

12 நியுயார்க் டெய்லி டிரிப்யூன் [*New York Daily Tribune*]—1841ம் வருடத்திலிருந்து 1924 முடிய வெளியிடப்பட்ட அமெரிக்க நாளிதழ். 19ம் நூற்றுண்டின் நாற்பது—ஐம்பதுக்களில் அந்தப் பத்திரிகை முற்போக்கான நிலையைக் கடைப்பிடித்தது; அடிமை முறைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது. 1851 ஆகஸ்ட் முதல் 1862 மார்ச் முடிய மார்க்ஸ் இதில் கட்டுரைகள் எழுதினுர். இந்தக் கட்டுரைகளில் பல மார்க்ஸ் கேட்டுக் கொண்டதன் பேரில் எங்கெல்சிஞல் எழுதப்பட்டன.—13

13 வரிகள், பங்களிப்புகளைப் பற்றிய ஆராய்ச்சி [*A Treatise of Taxes and Contributions.* London, 1667] (லண்டன், 1667) என்ற புத்தகத்தை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிருர். பேட்டி என்பவர் எழுதிய இப்புத்தகம் ஆசிரியருடைய பெயர் இல்லாமல் வெளியிடப்பட்டிருந்தது.—31

14 தி ஸ்பெக்டேட்டர் [*The Spectator*]—1711ம் வருடம் முதல் 1714 முடிய லண்டன் நகரத்திலிருந்து வெளிவந்த ஆங்கில இலக்கிய இதழ்.—60

15 ஓவனின் இணைவகங்கள் (parallelograms) ரிக்கார்டோ எழுதிய விவசாயத்துக்குப் பாதுகாப்புத் தருவது குறித்து [*On Protection to Agriculture.* Fourth ed., London, 1822, p. 21] (லண்டன், 1822, நான்காம் பதிப்பு, ப. 21) என்ற புத்தகத்தில் குறிப்பிடப்படுகின்றன. ஓவன் சமூக சீர்திருத்தங்களுக்கான தமது கற்பனுவாதத் திட்டங்களில் இணைவகம் அல்லது சதுரமான வடிவத்தில் குடியேற்றங்களை அமைப்பது வீட்டுக்கும் பொருளாதாரத்துக்கும் மிகவும் பொருத்தமானது என்று நிரூபிப்பதற்குப் பாடுபட்டார்.—74

16 ''பரிவர்த்தனைக் கோட்பாடு'' [*Theory of Exchange*] என்பது அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள் [*The Elements of Political Economy*, London, 1858] என்ற தலைப்பில் ஹெச். டி. மாக்ளியோட் எழுதிய புத்தகத்தின் நான்காவது அத்தியாயமாகும்.—75

17 வங்கி நோட்டுகளைத் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்து கொள்வதில் உள்ள சிரமங்களை அகற்றுவதற்காக, ஆர். பீல் என்பவருடைய முன்முயற்சியின் பேரில் 1844ம் வரு

டத்தில் ஆங்கில அரசாங்கம் வங்கி முறையில் ஒரு சீர்திருத்தத்தைச் செய்தது; அதன்படி வங்கி நோட்டுகளுக்குத் தங்க இருப்பு விகிதத்தை மாருதபடி நிர்ணயித்தது. தங்க இருப்பைக் காட்டிலும் 1.4 கோடி பவுனுக்கு அதிகமாக நோட்டுகளை வெளியிடக் கூடாதென்று கட்டுப்படுத்தப் பட்டது. எனினும், 1844ம் வருடத்திய வங்கிச் சட்டம் எப்படி விதித்திருந்தாலும் கூட செலாவணியிலிருக்கும் வங்கி நோட்டுகளின் அளவு தங்க இருப்பைச் சார்ந்திருக்கவில்லை; செலாவணித் துறையில் அவற்றின் அவசியத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. பொருளாதார நெருக்கடிகளின் போது பணத்தின் அவசியம் மிகத் தீவிரமாக இருந்த நேரத்தில் ஆங்கில அரசாங்கம் 1844ம் வருடச் சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது; தங்க இருப்புக்குக் கூடுதலாக வெளியிடப் படக் கூடிய வங்கி நோட்டுகளின் அளவை உயர்த்தியது.—78

18 1707ம் வருடத்தில் ஏற்பட்ட ஆங்கில-ஸ்காட்லாந்து இணைப்பு இங்கே குறிப்பிடப்படுகிறது. அதன் விளைவாக ஸ்காட்லாந்தின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது; இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்குமிடையே எல்லாவிதமான பொருளாதார எல்லைக் கோடுகளும் ரத்துச் செய்யப் பட்டன; ஸ்காட்லாந்து இங்கிலாந்தோடு முழுமையாக இணைந்தது.—91

19 Leges barbarorum (காட்டுமிராண்டிகளின் சட்டங்கள்) பல்வேறு ஜெர்மானிய இனக் குழுக்களின் மரபுச் சட்டம் அல்லது பொதுச் சட்டத்தைப் பற்றிய பதிவேடுகள். இவை ஐந்தாம் நூற்ருண்டுக்கும் ஒன்பதாம் நூற்ருண்டுக்கும் இடையில் தொகுக்கப்பட்டன.—95

20 ஜே.லோக் எழுதிய வட்டிவிகிதத்தைக் குறைத்தல், பணத்தின் மதிப்பை உயர்த்துதல் ஆகியவற்றின் விளைவுகளைப் பற்றி சில கருத்துக்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதம், 1691 [*Some Considerations of the Consequences of the Lowering of Interest and Raising the Value of Money. In a Letter sent to a Member of Parliament, 1691*] என்ற புத்தகத்தை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிருர். ஜான் லோக்கின் நூல்கள், நான்கு புத்தகங்கள், ஏழாம் பதிப்பு, 1768, ப. 54 [*The Works of John Locke*. In four volumes. The seventh edition. London, 1768, p. 54].—102

21 கிரெடிட் மொபிலியேர் [*Crédit Mobilier*] (முழுப் பெயர்: சொஸெடெ ஜெனெரல் டெ கிரெடிட் மொபிலியேர் [Société

générale de Crédit Mobilier])—1852ம் வருடத்தில் பிரான்சில் ஏற்படுத்தப்பட்ட பெரிய கூட்டுப் பங்குக் கம்பெனி; அதன் வாணிபச் சூதாட்ட நடவடிக்கைகளின் விளைவாக மோசமான பெயரைப் பெற்றது; கடைசியில் 1867ம் வருடத்தில் இந்தக் கம்பெனி முறிந்துவிட்டது.—130

22 வர்த்தகத்தை ஆதரித்து. தேசிய செல்வத்தின் தோற்றுவாய் வர்த்தகம் அல்ல என்று நிரூபிக்க திரு. ஸ்பென்ஸ், திரு. காபெட் இன்னும் மற்றவர்கள் செய்துள்ள வாதங்களுக்கு பதில். லண்டன், 1808 [J. Mill. *Commerce defended. An Answer to the Arguments by which Mr. Spence, Mr. Cobbett, and others, have attempted to prove that Commerce is not a Source of National Wealth.* London, 1808] என்ற தலைப்பில் ஜே. மில் எழுதிய புத்தகம் இங்கே குறிப்பிடப்படுகிறது. —133

23 தி எக்கனமிஸ்ட் [*The Economist*]—ஆங்கில வார இதழ்; 1843ம் வருடத்திலிருந்து லண்டனிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது; பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைப் பற்றிய கட்டுரைகளை வெளியிடுகிறது; பெரிய தொழில் முதலாளிகளின் பத்திரிகை.—148

24 ஷமிஸ்ஸோ எழுதிய பீட்டர் ஷ்லெமிலின் ஆச்சரியத்தைத் தரும் கதை [*Peter Schlemihls wundersame Geschichte*] கதையில் கதாநாயகன் பீட்டர் ஷ்லெமில் ஒரு மந்திரப் பணப்பையை வாங்குவதற்காகத் தன்னுடைய நிழலை விற்பனை செய்கிறார்.—164

25 அமெரிக்காவிலிருந்த ஸ்பெயின் நாட்டுக் காலனிகள் 1810ம் வருடம் முதல் 1826ம் வருடம் முடிய நடத்திய சுதந்திரப் போரை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். இந்தப் போரின் பலனாகப் பெரும்பாலான காலனிகள் ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டன.—197

26 1727ம் வருடம் அக்டோபர் 21ந் தேதியன்று ருஷியாவும் சீனாவும் கையெழுத்திட்ட கியாக்டா ஒப்பந்தம் இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக இரு நாடுகளுக்குமிடையே பண்டமாற்று கணிசமான அளவுக்கு விரிவடைந்தது.—222

27 பிரிட்டனும் பிரான்சும் சீனாவுக்கு எதிராக நடத்திய இரண்டாவது ''அபினி யுத்தம்'' இங்கே குறிப்பிடப்படுகிறது.

*சீனவிடமிருந்து புதிய சலுகைகளைப் பெறுவதற்கும் அதை ஒரு அரைக்-காலனி அரசாக மாற்ற வேண்டும் என்பதற்காகவும் இந்த யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்தின் விளைவாக சீனா தோல்வியடைந்தது; கொள்ளையடிக்கும் ஒப்பந்தமான டீயன்ட்ஸின் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.—222*

28 *டபிள்யு. எச். பிரெஸ்காட் எழுதிய* **மெக்ஸிகோ வெற்றியின் வரலாறு; பண்டைக்கால மெக்ஸிகோ நாகரிகத்தைப் பற்றிய பூர்வாங்கக் கருத்தும் வெற்றியாளர் எர்னன் கார்டேஸின் வாழ்க்கையும் அடங்கியது** [W. H. Prescott. *History of the Conquest of Mexico, with a Preliminary View of the Ancient Mexican Civilisation and the Life of the Conqueror Hernando Cortez*, Vol. I, London, 1858, p. 123] *என்ற நூலின் முதல் புத்தகத்தில் (லண்டன், 1858, ப. 123) பீட்டர் மார்டைர் எழுதியிருக்கும்* **புதிய உலகத்தைப் பற்றி** [*De Orbe Novo*] *என்ற பகுதியை மார்க்ஸ் இங்கே மேற்கோள் காட்டுகிறார்.—229*

29 *யாக்கப் கிரிம் எழுதிய* **ஜெர்மன் மொழியின் வரலாறு**, *லீப்சிக், 1848* [Jacob Grimm. *Geschichte der deutschen Sprache.* Bd. I-II, Leipzig, 1848].—*230*

30 *பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியில் ஜெர்மனியில் வரலாறு, சட்டம் ஆகிய துறைகளில் வளர்ச்சியடைந்த பிற்போக்கான சிந்தனைப் போக்கு இங்கே குறிப்பிடப்படுகிறது.—250*

31 *ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பொருளியலாளரான ஜான் லா என்பவர் எப்படிப்பட்ட காப்பும் இல்லாமல் வங்கி நோட்டுகளை வெளியிடுவதன் மூலம் நாட்டின் செல்வத்தை அரசு அதிகரிப்பது சாத்தியம் என்று கருதினார். முழுவதும் தவறான இந்தக் கருத்தை லா பிரான்சில் அமுலாக்கினார். 1716ம் வருடத்தில் பிரான்சில் அவர் தோற்றுவித்த வங்கி 1718ம் வருடத்தில் தேசிய வங்கியாக மாற்றப்பட்டது. இந்த வங்கி அதிகமான அளவில் நோட்டுகளை அச்சடித்துச் செலாவணிக்கு விட்டது; அதே சமயத்தில் உலோக நாணயத்தைச் செலாவணியிலிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டது. இதன் விளைவாக முன் எப்போதும் நடைபெறாத அளவுக்குப் பங்குச் சந்தைச் சூதாட்டம் நடைபெற்றது. 1720ம் வருடத்தில் இந்த வங்கி முறிந்தது; அதோடு லாவின் அமைப்பும் புதைக்கப்பட்டது.—254*

32 திரெட்நீடில் தெரு—லண்டனில் ஒரு தெருவின் பெயர்; இங்கிலாந்து வங்கியின் தலைமை அலுவலகம் இந்தத் தெருவில் இருக்கிறது.—255

33 ஐரோப்பாக் கண்ட முற்றுகை அல்லது காண்டினென்டல் ஏற்பாடு—முதலாம் நெப்போலியன் 1806ம் வருடத்தில் அறிவித்த முற்றுகைத் திட்டத்தின் பெயர். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகள் இங்கிலாந்துடன் வர்த்தகம் செய்வது தடுக்கப்பட்டது. ஸ்பெயின், நேப்பிள்ஸ், ஹாலந்து, பிரஷ்ஷியா, டென்மார்க், ருஷியா, ஆஸ்திரியா மற்றும் சில நாடுகள் இதில் பங்கெடுத்துக் கொண்டன.—268

34 முதலாம் நெப்போலியன் ஐரோப்பாக் கண்ட முற்றுகையை அறிவித்ததும் 1807ம் வருடத்தில் மந்திரி சபை வெளியிட்ட பல ''அரசாணைகள்'' (orders in Council) இங்கே குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் படி நடுநிலைமை நாடுகள் பிரான்சுடனும் பிரான்சின் காண்டினென்டல் அமைப்பில் உறுப்பினராகவுள்ள நாடுகளுடனும் வர்த்தகம் செய்வது தடை செய்யப்பட்டது.—268

35 ஹாம்ஸ்டெட்—லண்டனில் ஒரு மாவட்டத்தின் பெயர். —275

36 இந்த அறிமுகத்தை மார்க்ஸ் 1857ம் வருடம் ஆகஸ்ட் மாதக் கடைசியில் எழுதினார். அது பூர்த்தியில்லாமலும் திருத்தம் செய்யப்படாத நகலாகவும் இருந்த போதிலும், மிகவும் அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் மார்க்ஸ் அதில் அரசியல் பொருளாதாரத்தின் தலைப்புப் பொருளையும் அதன் முறையையும் பற்றி மிக விரிவாக எழுதியிருப்பதோடு சமூகத்தின் பொருளாயத அடிப்படைக்கும் அதன் சித்தாந்த ரீதியான மேற்கட்டுக் கோப்புக்கும் இடையேயுள்ள இணையுறவைப் பற்றி பல முக்கியமான சிந்தனைகளின் உருவரையையும் குறித்திருக்கிறார். 1903ம் வருடத்தில் புதிய காலம் [*Die Neue Zeit*] இதழில் இந்த அறிமுகம் முதன் முதலாக வெளியிடப்பட்டது.—286

37 ஆடம் ஸ்மித் எழுதிய நாடுகளின் செல்வத்தின் தன்மை மற்றும் காரணங்களைப் பற்றி ஒரு ஆராய்ச்சி, (லண்டன், 1776) [*An Inquiry into the Nature and Causes of the Wealth of Nations*] என்ற நூலின் ''அறிமுகத்தையும்'' டேவிட் ரிக்கார்டோ எழுதிய அரசியல் பொருளாதாரம், வரி

விதிப்புக் கொள்கைகளைப் பற்றி [*On the Principles of Political Economy and Taxation*] (*மூன்றும் பதிப்பு, லண்டன், 1821) என்ற நூலின் மூன்றும் பகுதியின் முதல் அத்தியாயத்தையும் பார்க்கவும்.—286*

38 சமூக ஒப்பந்தம் (contract social)—*ஆரம்பத்தில் ''இயற்கையான நிலையில்'' வாழ்ந்த பூர்விக மனிதர்களுக்கிடையே ஏற்பட்ட நன்ஞேக்கான உடன்பாடு பிற்காலத்தில் அரசு தோன்றுவதற்கு வழி வகுத்தது என்பது பிரெஞ்சுத் தத்துவஞானியான ரூஸ்ஸோவின் கொள்கையாகும். அவர் எழுதிய* சமூக ஒப்பந்தம் அல்லது அரசியல் உரிமைகளின் கோட்பாடுகள் [*Du Contract social; ou, Principes du droit politique*] (*ஆம்ஸ்டர்டாம், 1762) என்ற புத்தகத்தில் இக்கொள்கையை விளக்கி விரிவாக எழுதியிருக்கிருர்.—286*

39 *ஜான் ஸ்டூவர்ட் மில் எழுதிய* அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள்—சமூகத் தத்துவஞானத்துக்கு அவற்றின் சில பிரயோகங்களும் *(இரண்டு தொகுதிகள்). முதல் தொகுதி, லண்டன், 1848. முதல் புத்தகம்: உற்பத்தி. முதல் அத்தியாயம்: உற்பத்திக்கு அவசியமானவைகள்* [J. St. Mill. *Principles of Political Economy with some of their Applications to Social Philosophy*. In two volumes. Vol. I, London, 1848. Book I: Production. Chapter I: Of the Requisites of Production] *என்பதைப் பார்க்கவும்.—291*

40 *ஆடம் ஸ்மித் எழுதிய* நாடுகளின் செல்வத்தின் தன்மை மற்றும் காரணங்களைப் பற்றிய ஒரு ஆராய்ச்சி *என்ற நூலின் முதல் புத்தகத்தின் எட்டாம் அத்தியாயத்திலும் பதினென்றும் அத்தியாயத்தின் பின்னுரையிலும்* முற்போக்கு நிலைச் சமுதாயத்தையும் தேக்க நிலைச் சமுதாயத்தையும் பற்றி *எழுதுகிருர்.—291*

41 *ஜான் ஸ்டூவர்ட் மில் எழுதிய* அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள்—சமூகத் தத்துவஞானத்துக்கு அவற்றின் சில பிரயோகங்களும் *என்ற நூலின் முதல் தொகுதியில் (லண்டன், 1848) பக்கங்கள் 25-26 பார்க்கவும்.—292*

42 *கொச்சையான சோஷலிஸ்டுகளை—குறிப்பாக ஜெர்மனியின் ''உண்மையான சோஷலிஸ்டான'' கார்ல் குருனையும் பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்டான புருதோனையும்—மார்க்ஸ்* சோஷலிஸ்ட் கட்டுரையாளர்கள் *என்று கூறினர்.—303*

43 மார்க்ஸ் ''வர்த்தகருக்கும் வர்த்தகருக்கும் இடையே நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்ற பரிவர்த்தனையைப் பற்றி'' ("zwischen dealers and dealers") எழுதும்ஆடம் ஸ்மித்தை மனதில் கொண்டிருக்கிருர். செலாவணியின் மொத்தத் துறையையும், வர்த்தகர்களுக்கிடையே மட்டுமே நடைபெறுகின்ற செலாவணி வர்த்தகர்களுக்கும் தனிப்பட்ட நுகர்வோருக்கும் இடையே நடைபெறுகின்ற செலாவணி என்ற இரு வெவ்வேறு களங்களாக ஸ்மித் பிரிக்கிருர்.—312

44 ஸ்பானியப் படையெடுப்புக்கு முன்பு பெரு நாட்டின் நிலைமையைப் பற்றிய செய்திகளை பிரெஸ்காட் என்ற அமெரிக்க வரலாற்ருசிரியர் எழுதிய பெரு வெற்றி கொள்ளப்பட்ட வரலாறும் இன்காக்களின் நாகரிகத்தைப் பற்றிய பூர்வாங்கமான கருத்தும் [*History of the Conquest of Peru, with a Preliminary View of the Civilisation of the Incas.* Fourth ed. In three volumes. London, 1850] என்ற நூலிலிருந்து மார்க்ஸ் தெரிந்து கொண்டார். பண்டைக் குடிகளான இன்காக்களுக்குப் பணத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்பது முதல் புத்தகத்தில் (ப. 147) சொல்லப்படுகிறது.—318

45 ரிச்சர்டு ராபர்ட்ஸ் என்ற ஆங்கிலக் கண்டுபிடிப்பாளர் 1843ம் வருடத்திலிருந்து ''ராபர்ட்ஸ் அண்ட் கம்பெனி'' என்ற மாஞ்செஸ்டர் நிறுவனத்தின் தலைவராக இருந்தார். இந்த நிறுவனம் பலவிதமான கருவிகளையும் இயந்திரங்களையும் என்ஜின்களையும் தயாரித்தது. 19ம் நூற்ருண்டில் இயக்கவியல் துறையில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாளர்களில் இராபர்ட்சும் ஒருவராவார்.

பண்டைக்கால ரோமானிய வழக்கில் தீக் கடவுளான வல்கன் [Vulcan] கொல்லன், உலைக்கும் தெய்வமாக இருந்தது; கொல்லர்கள் பலவிதமான உலோகப் பண்டங்களைச் செய்வதற்கு உதவியது.—330

46 ஜுபிட்டர் [Jupiter]—பண்டைக்காலத்திய ரோமானியரின் வான் கடவுள். இக்கடவுள் கிரேக்கர்களின் கடவுளாகிய ஜீயசுக்குச் [Zeus] சமம். இக்கடவுள் வானத்தில் நடக்கும் எல்லா நிகழ்வுகளுக்கும், குறிப்பாக இடிக்கும் மின்னலுக்கும் காரணம் என்பது பண்டைக்கால நம்பிக்கை. எனவே ''இடிக் கடவுள்'' என்றே அழைக்கப்பட்டது.—330

47 கிரெடிட் மொபிளியேர்: இருபத்தொன்ரும் குறிப்பைப் பார்க்கவும்.

கிரேக்கக் கடவுளான ஹெர்மஸ் வணிகர்களைக் காக்கும் கடவுளாக, வர்த்தகம் மற்றும் லாபத்தைப் பெருக்கும் கடவுளாக, சூது நிறைந்த கடவுளாகக் கருதப்பட்டது.—330

48 அச்சு நிலையச் சதுக்கம் [Printing House Square]—லண்டனில் உள்ள ஒரு சிறு சதுக்கம்; இங்கிலாந்தின் சிறந்த தினசரியான 'தி டைம்ஸ்' [*The Times*] பத்திரிகையின் செய்தி மற்றும் அச்சுப் பிரிவு இங்கே அமைந்திருக்கிறது. 19ம் நூற்றுண்டின் நடுப் பகுதியில் அந்தப் பத்திரிகை மிகவும் சிறப்பான வகையில் செய்தியைத் தருவதாகக் கருதப்பட்டது.

பாமா—பண்டைக்கால ரோமானியர்களது கடவுள்; பண்டைக் கால கிரேக்கர்கள் வதந்திக் கடவுளாக ஓஸா என்ற பெண் தெய்வத்தைக் கருதினர்; ஓஸாவுக்கு பாமா சமமானது; வேகமாகப் பரவுகின்ற செய்தியின் வடிவம். —330

49 மார்க்ஸ் எழுதிய 'அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை' என்ற புத்தகத்துக்கு எங்கெல்ஸ் எழுதிய விமர்சனம் மக்கள் (''டாஸ் வோல்க்'') என்ற பத்திரிகையில் 1859ம் வருடம் ஆகஸ்ட் 6, 20ந் தேதிகளில் வெளியிடப்பட்டது. இந்த விமர்சனக் கட்டுரை பூர்த்தி பெறவில்லை.

மக்கள் [*Das Volk*]—லண்டன் நகரத்திலிருந்து 1859ம் வருடம் மே 7ந் தேதியிலிருந்து ஆகஸ்ட் 20 முடிய வெளிவந்த ஜெர்மன் மொழிப் பத்திரிக்கை.—333

50 மதச் சீர்திருத்த இயக்கம்—பதினாறும் நூற்றுண்டில் பல ஐரோப்பிய நாடுகளில் கத்தோலிக்க மதத்துக்கு எதிராகத் தோன்றிய விரிவான சமூக இயக்கம்.

பெரும்பான்மையான நாடுகளில் மதச் சீர்திருத்த இயக்கம் முக்கியமான வர்க்கச் சண்டைகளோடு சேர்ந்து நடைபெற்றது. ஜெர்மனியில் மதச்சீர்திருத்த இயக்கம் என்ற சித்தாந்தப் பதாகையின் கீழ் ஜெர்மன் விவசாயிகளின் போர் (1524-1525) நடைபெற்றது.—333

51 முப்பது வருட யுத்தம் (1618-1648)—கத்தோலிக்க அரசுகளுக்கும் புரொடஸ்டெண்டு அரசுகளுக்கும் இடையே எழுந்த போராட்டத்தின் விளைவாக நடைபெற்ற முதல் அகில ஐரோப்பிய யுத்தம். இந்தப் போரின் முக்கியமான களமாக ஜெர்மனி இருந்தது. அதில் கலந்து கொண்ட நாடுகள் ஜெர்மனியை இராணுவரீதியாகக் கொள்ளை

யடித்தன; அதைச் சூறையாடும் வகையில் கோரிக்கைகளை வைத்தன.—333

52 நெதர்லாந்து 1477ம் வருடத்திலிருந்து 1555ம் வருடம் வரையிலும் புனித ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது; 1555ம் வருடம் அக்டோபர் மாதத்தில், பேரரசு பிரிக்கப்பட்ட பொழுது நெதர்லாந்து ஸ்பெயினுக்குச் சொந்தமாயிற்று. பிற்காலத்தில் அது ஸ்பெயின் ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சுதந்திரமான குடியரசாக மாறியது.

நெதர்லாந்து பிரிக்கப்பட்டதன் விளைவாக ஜெர்மனி முக்கியமான கடற்பாதைகளுக்கு நேரடியான நுழைவுரிமையை இழந்தது; தன்னுடைய வர்த்தகத்துக்கு டச்சுக்காரர்களின் சரக்குக் கப்பல்களை நம்பியிருக்க நேர்ந்தது. இது ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சியைத் தடைப்படுத்தியது.—333

53 சுங்க இணையம் 1834ம் ஆண்டில் பிரஷ்யாவின் மேலாதிக்கத்தில் அமைக்கப்பட்ட சுங்க இணையம் ஆஸ்திரியாவைத் தவிர பெரும்பான்மையான ஜெர்மன் அரசுகளையும் சில சிறு அரசுகளையும் கொண்டிருந்தது. இது பொதுவான சுங்க எல்லையை வகுத்தது. ஒரு பொதுவான ஜெர்மன் சந்தையை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தினால் உருவான சுங்க இணையம் ஜெர்மனி அரசியல் ரீதியாக ஒற்றுமைப்படுவதை மேலும் வளர்த்தது.—334

54 காமெரலிஸ்டிக்ஸ்—மத்திய காலத்திலும் அதற்குப் பின்னரும் பல ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடம். இது நிர்வாகம், நிதி, பொருளாதாரம் ஆகிய பாடங்களைக் கொண்டிருந்தது. இது ''பல செய்திகளைக் கொண்ட கலவை'' என்று மார்க்ஸ் கூறுகிறார்.—335

55 பத்தொன்பதாம் நூற்றாண்டின் முப்பது—நாற்பதுக்களில் வலது ஹெகலியன்வாதிகள் பல ஜெர்மன் பல்கலைக்கழகங்களில் முக்கியமான துறைகளில் தலைமைப் பதவிகளை வகித்தார்கள். இவர்கள் தத்துவஞானத்தில் தீவிரமான போக்கின் பிரதிநிதிகளைத் தாக்குவதற்குத் தங்கள் பதவிகளைப் பயன்படுத்தினார்கள். வலது ஹெகலியவாதிகள் ஹெகலின் கொள்கைகளுக்குப் பிற்போக்கான வகையில் விளக்கம் கொடுத்தார்கள். எங்கெல்ஸ் அவர்களைப் பற்றி இங்கே ஏளனம் செய்கிறார்.

**டயடோஹீகள்** அலெக்ஸாந்தர் மசிடோனியனின் தளபதிகள். அவர் மரணமடைந்தவுடன் இவர்கள் அவருடைய பேரரசைப் பிரித்துக் கொள்வதற்காக ஒருவரோடொருவர் தீவிரமாக யுத்தம் செய்தார்கள்.—*341*

ஹெகல் எழுதிய **தர்க்கவியலின் விஞ்ஞானம்** என்ற புத்தகத்தைப் பார்க்கவும்.—*342*

# பெயர்க் குறிப்பகராதி


அத்தனேயஸ் [Athenaeus] *(கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி முதல் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை)—94.*

அரிவாபனே, ஜான் *(ஜியோவான்னி)* [Arrivabene, Jean (Giovanni)], *கான்ட் டெ (1787-1881)—194.*

அரிஸ்டாட்டில் [Aristotle] *(கி. மு. 384-322)—17, 42, 56, 84, 167, 201, 232.*

அரேட்டினோ, பியெட்ரோ [Aretino, Pietro] *(1492-1556)—252.*

அர்பத்னாட், ஜார்ஜ் [Arbuthnot, George] *(1802-1865)—280.*

ஆட்வுட், தாமஸ் [Attwood, Thomas] *(1783-1856)—108.*

உர்கார்ட், டேவிட் [Urquhart, David] *(1805-1877)—96.*

உஸ்டாரிஸ், ஜெரோனிமோ [Ustáriz, Jeronimo] *(18ம் நூற்றாண்டின் முதற் பாதி)—64.*

எங்கெல்ஸ், பிரெடெரிக் [Engels, Friedrich] *(1820-1895)—11, 333.*

எட்வர்டு III [Edward III] *(1312-1377)—97.*

எலிஸபெத் I [Elizabeth I] *(1533-1603)—212.*

ஒப்டைக், ஜார்ஜ் [Opdyke, George] *(1805-1880)—135.*

ஓவர்ஸ்டோன், ஸாமுவெல் ஜோன்ஸ் லாயிட் [Overstone, Samuel Jones Loyd], *பிரபு (1796-1883)—262, 280, 282.*

ஓவன், ராபர்ட் [Owen, Robert] *(1771-1858)—74.*

ஔரங்கசீப் [Aurangzeb] *(1618-1707)—188.*

ஃபாயர்பாஹ், லுட்விக் [Feuerbach, Ludwig] *(1804-1872)—341.*

ஃபிலிப் II [Philip II] *(1527-1598)—186.*

கதோான், மார்க்கஸ் போர்சியஸ் (மூத்தவர்) [Cato, Marcus Porcius (The Elder)] *(கி. மு. 234-149)—185.*

கர்னியே, ஜெர்மெய்ன் [Garnier, Germain], *கான்ட் டெ (1754-1821)—94, 154.*

கலியானி, பெர்ஞன்டோ [Galiani, Ferdinando] *(1728-1787)—29, 69, 91, 120, 146, 218.*

கஸ்தோடி, பியெட்ரோ [Custodi, Pietro] *(1771-1842)—29, 38, 69, 178, 224.*

காசில்ரி, ராபர்ட் ஸ்டேவர்ட் [Castlereagh, Robert Stewart] *(1769-1822)—1796ல் வைகவுண்ட் காசில்ரி; 1821-1822 மார்க்குவிஸ் ஆப் லண்டன்டெர்ரி—108.*

காட்டன், வில்லியம் [Cotton, William] *(1786-1866)—156.*

காபெட், வில்லியம் [Cobbett, William] *(1762-1835)—133.*

கார்பெட், தாமஸ் [Corbet, Thomas] *(சர்க்கா 1850)—135.*

கார்லி, ஜியோவான்னி ரிஞல்டோ [Carli, Giovanni Rinaldo] *(1720-1795)—224.*

காண்ட், இம்மனுயேல் [Kant, Immanuel] *(1724-1804)—342.*

கான்ஸ்டன்ஸியோ, பிரான்சிஸ்கோ சொலானோ [Constancio, Francisco Solano] *(1772-1846)—75.*

கிரிம், யாக்கப் [Grimm, Jakob] *(1785-1863)—230.*

கிரே, ஜான் [Gray, John] *(1798-1850)—111-115.*

கிளாட்ஸ்தன், வில்லியம் எவார்ட் [Gladstone, William Ewart] *(1809-1898)—78*

கிளே, சர் வில்லியம் [Clay, Sir William] *(1791-1869)—280.*

கிஸோ, ஃபிரான்சுவா பியேர் கிய்யோம் [Guizot, François Pierre Guillaume] *(1787-1874)—9.*

குரோம்வெல், ஆலிவர் [Cromwell, Oliver] *(1599-1658)—62.*

கூப்பர், தாமஸ் [Cooper, Thomas] *(1759-1840)—31.*

கேரி, ஹென்ரி சார்லஸ் [Carey, Henry Charles] *(1793-1879)—228, 290.*

கொலம்பஸ், கிறிஸ்டோபர் [Columbus, Christopher] *(1451-1506)—235.*

கோட்ஷெட், யோஹான் கிறிஸ்டோப் [Gottsched, Johann Christoph] *(1700-1766)—252.*

கோர்னெர், எம். கியோர்க் [Körner, M. Georg] *(18ம் நூற்றாண்டின் மத்திய காலம்)—231.*

சார்லஸ் II [Charles II] *(1630-1685)—62.*

சான்-சிமோன், குளோட் அன்ரீ [Saint-Simon, Claude Henri] *(1760-1825)—130, 234.*

சீனியர், நாஸ்ஸாவ் வில்லியம் [Senior, Nassau William] *(1790-1864)—194, 212.*

செனபோன் [Xenophon] *(கி. மு. சுமார் 430-கி. மு. சுமார் 354)—197, 201, 233, 234.*

டாட், ஜார்ஜ் [Dodd, George] *(1808-1881)—152.*

டாந்தே அலிகியேரி [Dante Alighieri] *(1265-1321)—14.*

டாய்ரே, லூயி பிரான்சுவா எஜேன் [Daire, Louis François Eugène] *(1798-1847)—63.*

டாரிமான், லூயி ஆல்பிரெட் [Darimon, Louis Alfred] *(1819-1902)—116.*

டூக், தாமஸ் [Tooke, Thomas] *(1774-1858)—135, 268, 270, 281-282.*

டோரென்ஸ், ராபர்ட் [Torrens, Robert] *(1780-1864)—280.*

தாம்ப்ஸன், வில்லியம் [Thompson, William] *(சுமார் 1785-1833)—115.*

நார்மன், ஜார்ஜ் வார்ட் [Norman, George Warde] *(1793-1882)—280.*

நியூமார்ச், வில்லியம் [Newmarch, William] *(1820-1882)—282.*

நெப்போலியன் I (போனபார்ட்) [Napoleon I (Bonaparte)] *(1769-1821)—268.*

பார்பான், நிக்கோலஸ் [Barbon, Nicholas] *(1640-1698)—102.*

பாஸ்தியா, பிரெடெரிக் [Bastiat, Frédéric] *(1801-1850)—34, 288.*

பியூக்கனன், டேவிட் [Buchanan, David] *(1779-1848)—160.*

பிராங்க்ளின் பெஞ்ஜமின் [Franklin, Benjamin] *(1706-1790)—66, 67, 168, 245.*

பிரே, ஜான் பிரான்சிஸ் [Bray, John Francis] *(1809-1895)—115.*

பிளாங், ஜான் ஜோஸேப் லுயீ [Blanc, Jean Joseph Louis] *(1811-1882)—250.*

பிளாட்டோ [Plato] *(சர்க்கா கி. மு. 427-347)—168.*

பிளினி (கேயஸ் பிளினியஸ் செகண்டஸ்) மூத்தவர் [Pliny (Gaius Plinius Secundus) The Elder] *(கி.பி. 23-79)—192.*

பிளேக், வில்லியம் [Blake, William] *(பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பாதி)—144, 271.*

பீட்டர் I (மாபெரும்) [Peter I (The Great)] *(1672-1725)—166.*

பீல், சர் ராபர்ட் [Peel, Sir Robert] *(1788-1850)—78, 94, 108-109, 262, 280.*

புராபெர்ட்டியஸ், செக்ஸ்டஸ் [Propertius, Sextus] *(கி. மு. சர்க்கா 49-சர்க்கா 15)—19.*

புரூகாம், ஹென்றி பீட்டர் [Brougham, Henry Peter] *(புரூகாம் மற்றும் வோ பிரபு) (1778-1868)—74.*

புரூதோன், பியேர் ஜோஸேப் [Proudhon, Pierre Joseph] *(1809-1865)—12, 65, 76, 111, 115, 288, 326.*

புர்லே, வில்லியம் செசில் [Burleigh, William Cecil], *பிரபு (1520-1598)—112.*

புல்லர்ட்டன், ஜான் [Fullarton, John] *(1780-1849)—282.*

புவகில்பெர், பியேர் லெ பெசண்ட் [Boisguillebert, Pierre L Pesant], *சியேர் டெ (1646-1714)—59, 63, 64, 74, 131, 144, 179, 180, 182, 217.*

புஷ், யோஹான் இயோர்க் [Büsch, Johann Georg] *(1728-1800)—251.*

புஷ்கின், அலெக்சாந்தர் செர்கேயெவிச் *(1799-1837)—268.*

புஹ்னர், லுத்விக் [Büchner, Ludwig] *(1824-1899)—341.*

பெக்கெர், இம்மனுயேல் [Bekker, Immanuel] *(1785-1871)—17, 84.*

பெட்டி, சர் வில்லியம் [Petty, Sir William] *(1623-1687)—31, 59-64, 78, 179, 188.*

பெட்டி, ஹென்ரி [Petty, Henry]—*லான்ஸ்டௌனைப் பார்க்கவும்*

பெய்லி, ஸாமுவேல் [Bailey, Samuel] *(1791-1870)—91, 211.*

பெரேர், இசாக் [Péreire, Isaac] *(1806-1880)—130.*

பெர்க்லி, ஜார்ஜ் [Berkeley, George] *(1685-1753)—31, 103, 104, 168.*

பெர்ரியே, பிரான்சுவா லுயீ ஒகூஸ்ட் [Ferrier, François Louis Auguste] *(1771-1861)—335.*

பெர்னியே, பிரான்சுவா [Bernier, François] *(1625-1688)—188.*

பொசாங்கே, சார்ல்ஸ் [Bosanquet, Charles] *(1769-1850)—255, 262.*

பொசாங்கே, ஜேம்ஸ் வாட்மன் [Bosanquet, James Whatman] *(1804-1877)—135.*

போர்பொன்னே, பிரான்சுவா வெரோன் துவெர்ஜே டே [Forbonnais, François Véron Duverger de] *(1722-1800)—245.*

மக்லாரென், ஜேம்ஸ் [Maclaren, James] *(சர்க்கா 1850)—88, 251, 252.*

மக்ளியோட், ஹென்ரி டன்னிங் [Macleod, Henry Dunning] *(1821-1902)—75, 211.*

மர்டைர் (அந்கியேரா), பீட்டர் (பெட்ரோ) [Martyr (Anghiera), Peter (Pedro)] *(1457-1526)—229.*

மாக்கூல்லோஹ், ஜான் ராம்ஸே [McCulloch, John Ramsay] *(1789-1864)—31, 60.*

மாண்டெஸ்கியே, ஷார்ல் டே செக்கொண்டாட் [Montesquieu, Charles de Secondat], *பிரபு (1689-1755)—238, 247.*

மார்க்ஸ், கார்ல் [Marx, Karl] *(1818-1883)—286, 333, 344, 347, 348.*

மால்த்யூஸ், தாமஸ் ராபர்ட் [Malthus, Thomas Robert] *(1766-1843)—34, 133.*

மான்டனுரி, ஜெமினியானே [Montanari, Geminiano] *(சர்க்கா 1633-1687)—38, 227.*

மான்டெவில், ஜான் [Mandeville (Maundevile), John] *(சர்க்கா 1300-1372)—168.*

மில், ஜான் ஸ்டுவர்ட் [*Mill*, John Stuart] *(1806-1873)—133, 291, 292.*

மில், ஜேம்ஸ் [Mill, James] *(1773-1836)—133, 134, 271-275.*

மிஸ்ஸெல்டென், எட்வார்ட் [Misselden, Edward] *(1608-1654)—179, 185, 187, 190.*

முல்லர், ஆடம் ஹென்ரிஹ், ரிட்டெர் வொன் நிட்டெர்டோர்ப் [Müller, Adam Heinrich, Ritter von Nitterdorf] *(1779-1829)—91, 92, 93.*

மென்டெல்ஸான், மோஸஸ் [Mendelssohn, Moses] *(1729-1786)—251.*

மொலிஷோட், யாக்கோப் [Moleschott, Jakob] *(1882-1893)—341.*

யங், ஆர்தர் [Young, Arthur] *(1741-1820)—250.*

யூரிப்பிடெஸ் [Euripides] *(சர்க்கா கி. மு. 480-406)—201.*

யூலியஸ், குஸ்தவ் [Julius, Gustav] *(1810-1851)—251.*

ரிக்கார்டோ, டேவிட் [Ricardo, David] *(1772-1823)—59, 73, 74, 75, 134, 147, 236, 251, 254-271, 276-282, 286, 306, 308.*

ரீல், வில்ஹெல்ம் ஹென்ரிஹ் [Riehl, Wilhelm Heinrich] *(1823-1897)—335.*

ரூஸோ, ஜான் ஜாக் [Rousseau, Jean Jacques] *(1712-1778)—286.*

ரௌ, கார்ல் ஹென்ரிஹ் [Rau, Karl Heinrich] *(1792-1870)—335.*

லா, ஜான் [Law, Jahn] *(1671-1729)—245, 250, 254.*

லான்ஸ்டௌன், ஹென்ரி பெட்டி-பிட்ஸ்மாரிஸ், மார்க்விஸ் [Lansdowne, Henry Petty-Fitzmaurice, Marquis of] *(1780-1863)—62.*

லிஸ்ட், பிரெடெரிக் [List, Friedrich] *(1789-1846)—34, 335.*

லூயி XIV [Louis XIV] *(1638-1715)—63, 64.*

லூதர், மார்ட்டின் [Luther, Martin] *(1483-1546)—189, 208, 216.*

லெஸ்ஸிங், கோட்ஹோல்ட் எபிரெய்ம் [Lessing, Gotthold Ephraim] *(1729-1781)—251.*

லோக், ஜான் [Locke, John] *(1632-1704)—98, 101, 102, 172, 218, 238, 245, 252.*

லௌண்ட்ஸ், வில்லியம் [Lowndes, William] *(1652-1724)—100, 102, 108, 109, 172.*

வில்சன், ஜேம்ஸ் [Wilson, James] *(1805-1860)—268, 282.*

வில்லியம் I (வெற்றியாளர்) [William I (the Conqueror)] *(1027-1087)—95.*

வில்லியம் III (ஆரஞ்சைச் சேர்ந்த) [William III of Orange] *(1650-1702)—99, 108.*

வெர்ரி, பியேட்ரோ [Verri, Pietro] *(1728-1797)—223.*

வொல்ஃப், கிரிஸ்டியன் [Wolff, Christian] *(1679-1754)—342.*

வோக்ட், கார்ல் [Vogt, Karl] *(1817-1895)—341.*

ஜார்ஜ் II [George II] *(1683-1760)—93, 97.*

ஜார்ஜ் III [George III] *(1738-1820)—93.*

ஜெனொவேஸி, அன்டோனியோ [Genovesi, Antonio] *(1712-1769)—53, 178.*

ஜேகப், வில்லியம் [Jacob, William] *(சர்க்கா 1762-1851)—153, 198.*

ஜோவெல்லானஸ் இ ராமீரெஸ், கஸ்பார் மெல்ஹோர் டே [Jovellanos y Ramirez, Gaspar Melchor de] *(1744-1811)—64.*

ஷாப்பர், வொன் [Schaper, von]—*8.*

ஷெவலியே, மிஷேல் [Chevalier, Michel] *(1806-1879)—167, 234.*

ஷேக்ஸ்பியர், வில்லியம் [Shakespeare, William] *(1564-1616)—330.*

ஷோனய்ஹ, கிரிஸ்டோப் ஓட்டோ, ப்ரைஹெர் வொன் [Schönaich, Christoph Otto, Freiherr von] *(1725-1807)—252.*

ஷ்டைன், லோரென்ஸ் வொன் [Stein, Lorenz von] *(1815-1890)—19, 31, 335.*

ஷ்டோர்ஹ், ஹென்ரிஹ் பிரெடெரிக் வொன் [Storch, Heinrich Friedrich von] *(1766-1835)—166, 194, 303.*

ஸிஸ்மோன்டி, ஜான் ஷார்ல் லியொனுர்டு சிமோண்ட் டே [Sismondi, Jean Charles Léonard Simonde de] *(1773-1842)—59, 75, 133.*

ஸே, ஜான் பாப்டிஸ்ட் [Say, Jean Baptiste] *(1767-1832)—34, 75, 133, 166, 252, 303.*

ஸ்டுவர்ட், சர் ஜேம்ஸ் [Steuart (Stewart), Sir James] *(1712-1780)—69, 70, 101, 104, 105, 106, 247, 248, 249, 251, 281, 287.*

ஸ்ட்ராபோ [Strabo] *(கி. மு. சர்க்கா 63-கி. பி. சர்க்கா 20)—233.*

ஸ்பார்க்ஸ், ஜாரெட் [Sparks, Jared] *(1789-1866)—65.*

ஸ்பினோஸா, பரூஹ் (பெனெடிக்ட்), [Spinoza, Baruch (Benedict)] *(1632-1677)—251, 298.*

ஸ்பென்ஸ், வில்லியம் [Spence, William] *(1783-1860)—133.*

ஸ்மித், ஆடம் [Smith, Adam] *(1723-1790)—34, 59, 64, 69, 72, 86, 94, 216, 251, 287, 291, 320.*

ஸ்மித், சர் தாமஸ் [Smith, Sir Thomas] *(1513-1577)—212.*

ஹாட்ஸ்கின், தாமஸ் [Hodgskin, Thomas] *(1787-1869)—58.*

ஹாப்ஸ், தாமஸ் [Hobbes, Thomas] *(1588-1679)—60.*

ஹியூம், டேவிட் [Hume, David] *(1711-1776)—238-281.*

ஹியூம், ஜேம்ஸ் டீக்கன் [Hume, James Deacon] *(1774-1842)—270.*

ஹெகல், இயோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக் [Hegel, George Wilhelm Friedrich] *(1770-1831)—9, 315, 335, 340, 341, 342, 343, 344*.

ஹோமர் [Homer]—*194*.

ஹோரஸ், குவின்ட்டஸ் ஹோரேஷியஸ் பிளாக்கஸ் [Horace, Quintus Horatius Flaccus] *(கி. மு. 65-8)—252*.

## கலைச்சொல் அகராதி

அடுக்குதல்—piling up
அடையாளச் சின்னம்—token
அடையாள பூர்வமான பணம்—symbolic money
அடையாளமான காகிதப் பணம்—symbolic paper money
அதிதீவிர—extreme
அந்நியப் படுத்தல்—alienate
அயல் நாட்டு வர்த்தகம்—foreign trade
அலகு—unit
அழியக்கூடிய உள்ளடக்கம்—perishable content
அழிவில்லாத வடிவம்—non-perishable form
அன்னியக் கடன்கள்—foreign loans

ஆதார அளவு—unit of measure

இயங்காத நிலையிலிருக்கும் நாணயம்—suspended coin
இரஸவாதி—alchemist
இருமைவாதம்—dualism
இருத்தல்—existence
இலாப ஈவு—dividend
இனம்—category

உடனடியான சமூக உழைப்பு நேரம்—immediate social labour time
உண்மையான பணம்—real money
உபரி மதிப்பு—surplus value
உரிய கடன்—due
உலகச் சந்தை—world market
உலகப் பணம்—world money
உலகப் பொதுவான—universal
உலோக நாணயம்—metallic currency
உலோக நாணயத்தின் தற்காலிக ஏற்ற இறக்கம்—temporary fluctuation of metallic currency

உழைப்பின் உற்பத்தித் திறன்—productivity of labour
உழைப்புப் பிரிவினை—division of labour
உள்நாட்டுச் செலாவணித் துறை—sphere of home circulation
உள்ளார்ந்த பெறு மதிப்பு—intrisic worth
உற்பத்தி அராஜகம்—anarchy of production
உற்பத்தி உறவுகள்—production relations

எக்காலத்துக்கும் உரிய உழைப்பு நேரம்—universal labour time
எக்காலத்துக்கும் உரிய சமமதிப்பு—universal equivalent
எக்காலத்துக்கும் உரிய சமூக உழைப்பு நேரம்—universal social labour time
எக்காலத்துக்கும் உரிய பண வழங்கீட்டுச் சாதனம்—universal means of payment
எக்காலத்துக்கும் உரிய பண்டம்—universal commodity

ஒப்பந்தங்களின் எக்காலத்துக்கும் உரிய பண்டம்—universal commodity of contracts
ஒப்பந்தம்—contract
ஒருமுகப்படுத்தல்—concentration
ஒருமுனைப்படுத்தல்—concentration
ஒருமைவாதம்—monism

கடன் கொடுப்பவர்—creditor
கடனுகச் செய்யப்படும் கொள்வினை—purchase on credit
கடன் பணம்—credit money
கடன் முறை—credit system
கடன் வசதி—credit
கடன் வாங்கியவர்—debtor
கட்டம்—phase
கணக்கிடப்படும் பணத்தின் பெயர்கள்—names of money of account
கணக்கிடப்படும் பணம்—money of account
கருத்தாக்கம்—abstraction
கலையார்வம்—dilettantism
கற்பனையாக்கம்—nominalisation
கற்பனையான அளவு கோல்—nominal measure
கற்பனையான கணக்கிடப்படும் பணம்—nominal money of account
கற்பனையான பணம்—nominal money
கற்பனையான வாழ்நிலை—nominal existence
காப்பு நிதி—reserve fund
கார்த்தல்—cartel
குத்தகை முறை—piece rent system
குவித்தல்—dumping

குவித்தல்—accumulation
குவிப்பின் வடிவம்—form of accumulation
குவிப்பு—accumulation
குறிப்பிட்ட பயன் மதிப்பு—particular use-value
குறியீடான காகிதப் பணம்—symbolic paper money
கூட்டு உழைப்பு நேரம்—communal labour time
கூலி—wages
கூலி உழைப்பு—wage labour
கெட்டிப்படுத்தப்படுதல்—crystallisation
கொத்தடிமை—bonded slave
கொள்விலை—purchase
கொள்விலைச் சாதனம்—means of purchase
கொள்விலை, விற்பனை விலைகளின் மொத்தத் தொகை—aggregate of prices of purchases and sales

சந்தை விலை—market price
சமநிலை—equilibrum
சமமதிப்பு—equivalent
சமமதிப்பு இல்லாதனவற்றைப் பரிவர்த்தனை செய்தல்—exchange of non-equivalents
சமன்பாடு—equation
சமூக உழைப்பு—social labour
சர்வாம்ச பரிவர்த்தனைச் சாதனம்—universal means of exchange
சர்வாம்சம்—universal
சாதாரண செலாவணித் துறை—sphere of simple circulation
சாதாரண பண்டச் செலாவணி—simple commodity circulation
சாதாரணமான செலாவணி முறை—simple circulation
சார்புநிலை மூலதனம்—relative capital
சில்லறைக் காசு—small coin
சில்லறை வர்த்தகம்—retail trade
சீட்டு—coupon
சுதந்திரமான போட்டி—free competition
சுற்றுவளையத்தின் கட்டம்—phase of circuit
சுற்றுவளையம்—circuit
சூக்குமக் கருத்தாக்கம்—abstraction
சூக்குமமான சமூகச் செல்வம்—abstract social wealth
சூக்குமமான செல்வத்தின் பொருளாயத அம்சம்—material aspect of abstract wealth
செலாவணி—circulation
செலாவணி உள் வட்டம்—internal sphere of circulation
செலாவணி ஊடகம்—medium of circulation
செலாவணித் துறை—sphere of circulation
செலாவணி நிகழ்வுப் போக்கு—process of circulation

செலாவணியாகிற பண்டங்களின் மொத்த விலைகள்—aggregate prices of commodities in circulation
செலாவணியாகும் பணத்தின் அளவு—volume of money in circulation
செலாவணியிலிருக்கும் பணத்தின் மொத்த அளவு—aggregate amount of money in circulation
செலாவணி வட்டம்—sphere of circulation
செலாவணி வேகம்—velocity of circulation
செல்வக் குவிப்பு—accumulation of wealth
செறிவு—concentration

தங்கத்தின் அடையாளச் சின்னம்—token of gold
தந்தைவழி முறை—patriarchy
தர்க்கவியல் முக்கூற்று முடிவு—syllogism
தனித்துவம்—individualism
தனிமுதலான பண்டம்—absolute commodity
தனித்தனி உரிய மதிப்பு—respective value
திரும்புமுனை—point of departure
தேர்ச்சியற்ற உழைப்பு—unskilled labour
தேவைக்கு அதிகமான உற்பத்திப் பொருள்கள்—superfluous products
தொழில் வளர்ச்சி—industrialisation

நடவடிக்கை—operation
நல்லெண்ணம்—paternalism
நாணய அளவு—volume of currency
நாணயங்களின் காப்பு நிதிகள்—reserve funds of coins
நாணயச்சாலை—mint
நாணயச்சாலை விலை—mint price
நாணயத்தின் அளவு—volume of currency
நாணயம்—currency; coin
நாணயம் என்ற முறையில் பணச் செலாவணி—circulation of money as a currency
நிலக் குத்தகை—land rent
நிலவுடைமை—landed property
நீதி இயல்—jurisprudence
நுகர்வுப் பொருட்கள்—consumer goods
நெருக்கடி—crisis
நேரடியாக ஈடுபடுத்தப்பட்ட நபர்களின் உழைப்பு நேரம்—labour time of directly associated individuals
நேரடி மூலதனம்—direct capital

பகைமை நிலை—antagonism
பகைமையுள்ள—antagonistic

பங்கு—share

பங்குதாரர்—shareholder

பணச் செலாவணி—circulation of money

பணத்தின் அளவு—amount of money

பணத்தின் ஆதார அளவு—standard of money

பணத்தின் இலட்சிய ஆதார அளவு—ideal standard of money

பணத்தின் சாதாரணக் குவிப்பு—simple accumulation of money

பண பரிவர்த்தனை—money exchange

பண வழங்கீடு செய்தல்—to make payment

பண வழங்கீட்டின் சாதனம்—means of payment

பணவியல் முறை—monetary system

பண வீக்கம்—inflation

பணியீட்டுவாரம்—quit-rent

பண்ட உடைமையாளர்—commodity owner

பண்டச் செலாவணி—circulation of commodities

பண்டச் செலாவணியின் உள் துறை—internal sphere of circulation of commodities

பண்டங்களின் அந்நியமாதல்—alienation of commodities

பண்டங்களின் அளவு—volume (amount) of commodities

பண்டங்களின் ஆக்க கூடிய மொத்த விலைகள்—aggregate prices of the commodities

பண்டங்களின் உருமாற்றம்—metamorphosis of commodities

பண்டங்களின் ஏற்றுமதி—export of commodities

பண்டங்களின் உலகத்தின் சர்வவியாபகமான செலாவணி—universal circulation of the world commodities

பண்டங்களின் விலைகளின் மொத்தம்—aggregate prices of commodities

பண்டப் பரிவர்த்தனை—commodity exchange

பண்டத்தின் விலை—price of commodity

பண்டம்—commodity

பண்ட விலைகளின் மொத்த அளவு—total ammount of commodity prices

பதில் பொருள்—substitute

பதுக்கலின் உருவாக்கம்—hoarding

பதுக்கல் பணக்குவியல்—hoards

பதுக்கல் வடிவம்—form of hoards

பயன்பாட்டு மதிப்பு—utility value

பயன் மதிப்பு—use-value

பரஸ்பரக் கடன்கள்—mutual obligations

பரவலாக்குதல்—decentralisation

பரிவர்த்தனை—exchange

பரிவர்த்தனை ஊடகம்—medium of exchange

பரிவர்த்தனைச் சாதனம்—means of exchange

பரிவர்த்தனைப் பண்டம்—commodity of exchange
பரிவர்த்தனை மதிப்பு—exchange value
பரிவர்த்தனை மதிப்பின் விதி—law of exchange value
பரிவர்த்தனை விதி—law of exchange
பருப்பொருள்—matter
பிஸியோகிராட்—physiocrat
புத்தார்வவாதி—romantic
பொது நலவாதி—cosmopolitan
பொதுவான சமூக உழைப்பு நேரம்—general social labour time
பொதுவான மனித உழைப்பு—human labour in general
பொதுவான மூலதனம்—capital in general
பொருட் செல்வத்தின் பொருளாயதக் குறியீடு—material symbol of physical wealth
பொருளாதார அடித்தளம்—economic foundation
பொருளாதார இனங்களைப் பற்றிய விமர்சனம்—critique of economic categories
பொருளாதார இனங்கள்—economic categories
பொருளாயத—material
பொருண்மையாக்கப்பட்ட உழைப்பு நேரம்—materialised labour-time
போலிப் பொருளாதாரச் சொல்—pseudo-economic term

மதிப்பின் அடையாளச் சின்னம்—token of value
மதிப்பின் ஆதார அளவு மற்றும் செலாவணி ஊடகம்—standard of value and medium of circulation
மதிப்பு அளவு—measure of value
மதிப்புக் குறைப்பு—devaluation
மாயாவாதம்—mysticism
மிகை உற்பத்திப் பொருள்கள்—excess of products
முதலாளித்துவ ஒன்றிணைப்பு—capitalist integration
முன்-அனுமானம்—presupposition
முன்-அனுமானம் செய்தல்—presuppose
முன்பணம் கொடுத்தல்—advance payment
மூலதன ஏற்றுமதி—export of capital
மெய்யான பயன் மதிப்பு—a real use-value
மேற்கட்டு வரிசை—hierarchy
மேற்போக்கான ஈடுபாடு—dilettantism

ரத்துச் செய்—to cancel (payments)

லாப ஈவு—dividend

வங்கி நோட்டு—bank-note
வங்கிப் பத்திரம்—bank-note

வட்டி விகிதக் குறைப்பு—lowering of the rate of interest
வர்த்தக சுதந்திரம்—freedom of trade
வழங்கீடுகளின் அளவு—amount of payments
வழங்கீடுகளின் எண்ணிக்கை—number of payments
வழங்கீடுகளின் மொத்த அளவு—total amount of payments
வழங்கீடுகளின் மொத்தத் தொகை—aggregate amount of payment
வழங்கீடுகளின் பொதுச் சாதனம்—general means of payment
வழங்கீட்டுச் சாதனங்களின் காப்பு நிதிகள்—reserve funds of payments
வறட்டுச் சூத்திரம்—dogma
வாங்குவதற்காக விற்பது—selling in order to buy
வாடகை—rent
வாணிக மூலதனம்—merchant capital
வாழ்நிலை—existence
வளர்சிதை மாற்றம்—metabolism
விகிதங்களைக் குறித்தல்—marking of proportions
விகிதம்—proportion
விரிவாக்கம்—expansion
விலைகளின் மொத்தம்—aggregate of prices
விலை மட்டம்—price level
விலையின் அடையாளச் சின்னம்—token of price
விலையின் ஆதார அளவு—standard of price
விற்பதற்காக வாங்குவது—buy in order to sell
விற்பனை செய்—to sell
விற்பனையாளர்—seller
வேலைவீதக் கூலி முறை—piece rate system
வைப்பு—deposit

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR", என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட். சென்னை—600098

ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு. சென்னை—600002.

கிளைகள்

80. மேலக் கோபுர வீதி. மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு. கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு. திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு. சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

К. Маркс
К КРИТИКЕ ПОЛИТИЧЕСКОЙ ЭКОНОМИИ

*на тамильском языке*

K. Marx
A CONTRIBUTION TO THE CRITIQUE
OF POLITICAL ECONOMY

*in Tamil*